# தமிழரசு

1-7-1985 75 காசு





மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்களை, 13.6.85 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு சந்துலால் சந்தூர்க்கர் அவர்கள் சந்தித்தார். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு ப. உ. சண்முகம், மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி மற்றும் தலைமைச் செயலர் திரு டி. வி. அந்தோணி, இ.ஆ.ப. ஆகியோரும் உடன் உள்ளனர்.



மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களை, 16-6-85 அன்று அவரது இல்லத்தில் மாண்புமிகு மத்திய இரயில்வே அமைச்சர் திரு [illegible] அவர்கள் சந்தித்தார்.



மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களை, 17-6-85 அன்று அவரது இல்லத்தில் கடலோரக் காவல்படைத் தலைவர் திரு எ.எஸ். ராமா ராவ் அவர்கள் சந்தித்தார்.

முதல் அட்டை சொல்லும் செய்தி:*****************************

# தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனக் கட்டடத் திறப்பு விழா

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் சத்துணவுத் திட்டத்தால் பயன்பெறுகின்ற - முதல் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரையிலான குழந்தைகளுக்கு இலவசப் பாடநூல் வழங்கும் அரியதோர் திட்டம் அண்மையில் தொடக்கி வைக்கப்பட்டது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறுவர் சிறுமியர்க்கு இலவசப் பாடநூல் வழங்கி இதனைத் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்திற்காக ஒரு கோடியே 54 லட்சம் ரூபாயில் கட்டப்பட்ட பத்து மாடிக் கட்டடத்தின் திறப்பு விழாவோடு இவ்விழா இணைத்து நடத்தப்பட்டது.

இக்கட்டடத்திற்கு 'ஈ.வெ.கி. சம்பத் மாளிகை' என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெயர் சூட்டினார். மாண்புமிகு மத்திய கல்வியமைச்சர் திரு கே. சி. பந்த் அவர்கள் இக் கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

13-5-85 அன்று சென்னையிலுள்ள தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனக் கட்டட வளாகத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்கு, மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை தாங்கினார்.

நாட்டின் ஒருமைப்பாட்டை வலியுறுத்தியும் சத்துணவுத் திட்டத்தைப் பாராட்டியும் காந்தி இல்லக் குழந்தைகள் நடத்திய கலை நிகழ்ச்சியோடு விழா தொடங்கியது.



தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்.



தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன மேலாண்மை இயக்குநர் திருமதி ஈ.வெ.கி. சுலோசனா சம்பத் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் பற்றிய சிற்றேட்டை மாண்புமிகு நிதி

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2016
குரோதன - ஆனி 17
மலர் : 16 1-7-1985 இதழ் : 1



யமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வெளியிட - மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

இதன்பின், மாண்புமிகு முதல்வர் அவர்கள் - அடையாறில் *31* லட்சத்து *81* ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்படவிருக்கும் பாட நூல் நிறுவனக் கிடங்கிற்கு அடிக்கல் நாட்டினார்.



தமிழ் அகர முதலி நூலை மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் வெளியிட, முதல் படியை அறிஞர் அண்ணா பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வா. செ. குழந்தைசாமி அவர்கள் பெற்றுக் கொண்டார்.

மாண்புமிகு தொழிலமைச்சர் திரு க. இராசாராம் அவர்கள், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா ஆகியோரின் படங்களைத் திறந்து வைத்து மாண்புமிகு சட்டமன்ற 'மேலவைத் தலைவர் டாக்டர் ம.பொ.சி. அவர்கள் உரை நிகழ்த்தினார்

மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன மேலாண்மை இயக்குநர் அவர்கள் நினைவுப் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தார்.

கல்வித்துறை ஆணையர் மற்றும் செயலர் திரு தி. து. சுந்தர்ராஜ் இ.ஆ.ப. அவர்கள் நன்றி கூறினார்.

—பி.எல்.ஆர்



# வருவாய்த் துறை வழங்கும் சலுகைகள்

**த**மிழ்நாடு *16,549* வருவாய்க் கிராமங்கள், *1,097* உள் வட்டங்கள், *166* வட்டங்கள், *55* கோட்டங்கள் மற்றும் *18* மாவட்டங்களைக் கொண்டுள்ளது.

**கிராம நிருவாகம் :**

புதிய முழுநேர அலுவலர்கள் முறை *14-11-1980* முதல் அமலுக்கு வந்தது. *12,550* முழுநேரக் கிராம நிர்வாக அலுவலர்கள் பதவிகள் தோற்றுவிக்கப்பட்டன. முன்னாள் கிராம அதிகாரிகளுள் தகுதியுடையோர் மாநிலத் தேர்வுகாண் குழு மூலமும் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு மூலமும் நபர்கள் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களுக்கு நில அளவை மற்றும் கிராம நிர்வாகம் ஆகியவற்றுள் பயிற்சி அளித்து அவற்றுள் தேர்ச்சி பெற்றபின் கிராம நிர்வாக அலுவலர்களாக நியமிக்கப்பட்டுவிட்டனர்.

புதிய கிராம நிர்வாக அலுவலர்களை மாவட்டத்திற்குள் ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்கு மாற்றம் செய்ய இயலும். முழுநேர அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்படும் அனைத்து சலுகைகளும், கிராம நிர்வாக அலுவலர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளன. முன்பிருந்த பகுதி நேரக்கிராம அலுவலர்கள் அமைப்பில் தாழ்த்தப்பட்டோருக்கு உரிய விழுக்காடு பணியிடங்கள் ஒதுக்கப்படவில்லை. தற்போது புதிய முறையில் தாழ்த்தப்பட்டோருக்கு உரிய பணியிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. *252* பெண்களும் கிராம நிர்வாக அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

பகுதிநேரக் கிராம ஊழியர்களான, கிராமக் காவலர்கள், கிராமப் பணியாளர்கள் மற்றும் பாசனக் காவலர்கள் தொடர்ந்து பணியில் உள்ளனர். அவர்களுக்கெனத் தனியாக, *1980*-ஆம் ஆண்டு தமிழ்நாடு கிராம ஊழியர்கள் பணி விதிகள் என்ற பணி விதிகள் இயற்றப்பட்டுள்ளன. அவர்களது ஓய்வுபெறும் வயது *60* என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முழுநேர அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்த்தும்போதெல்லாம், ஒவ்வொரு தவணைக்கும் ரூ.*5* வீதம் கிராம ஊழியர்களுக்கும் உயர்த்தப்பட்டு, அவர்களது தற்போதைய ஊதியம் ரூ. *140*லிருந்து ரூ.*270* என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நிர்வாகச் சீர்திருத்தக்குழு தமிழகத்திலுள்ள பெரிய மாவட்டங்களைச் சீரமைத்து பிரித்து புதிய மாவட்டங்கள் ஏற்படுத்த பரிந்துரை செய்துள்ளது. மிகப்பெரிய மாவட்டங்களில் ஒன்றாக இருந்த கோயம்புத்தூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து ஈரோட்டைத் தலைமையிடமாகக் கொண்ட பெரியார் மாவட்டம் *1979-80*-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.

*1984-85*-ஆம் ஆண்டு ஆளுநர் தமது உரையில் புதிதாக உருவாக்கப்படும் என அறிவிக்கப்பட்ட எட்டு புதிய மாவட்டங்களைத் தொடர்ந்து தஞ்சாவூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பதற்குப் பதிலாக மூன்றாகப் பிரித்து நாகப்பட்டினத்தைத் தலைமையிடமாகக் கொண்டகாயிதே மில்லத் மாவட்டம் அமைக்கவும் முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. புதிய மாவட்டங்களில் அடங்கியுள்ள நிலப்பகுதிகள் மற்றும் அதன் தொடர்பான பரிந்துரைகளை அரசுக்கு நல்க ஒரு வல்லுநர் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

வல்லுநர் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இராமநாதபுரம் மாவட்டத்தை மூன்றாகப் பிரித்து இராமநாதபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்ட இராமநாதபுரம் மாவட்டம், சிவகங்கையைத் தலைமையிடமாகக் கொண்ட பசும்பொன் முத்துராமலிங்க மாவட்டம் மற்றும் விருதுநகரைத் தலைமையிடமாகக் கொண்ட காமராசர் மாவட்டம் ஆகியவற்றை உருவாக்கி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. புதிய மாவட்டங்கள் *15-3-1985* இலிருந்து செயல்படத்தொடங்கியுள்ளன.

புயல் வெள்ளம் முதலியவற்றால் பாதிக்கப்படும் அல்லது அச்சுறுத்தப்படும் கடற்கரைப் பகுதிகளிலுள்ள மக்களுக்குப் பாதுகாப்புக்கு வகைசெய்யும் பொருட்டு, அரசு இதுவரை *110* புயல் பாதுகாப்பிடங்களைக் கட்டுவதற்கு அனுமதியளித்துள்ளது. இவற்றில் *78* புயல் பாதுகாப்பிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

வெள்ளம் மற்றும் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத் தொகை உயர்த்தித் தரப்படுவது தீ விபத்தால் பாதிக்கப்படுகின்ற மக்களுக்கும் பொருந்தும்.

ஒரு குடும்பத்தில் வருமானம் ஈட்டி குடும்பத்தைக் காப்பாற்றுபவர் தீ விபத்தால் உயிரிழந்து அதனால் அவருடைய குடும்பம் வறுமைக்குள்ளானால், உயிரிழந்

தவருடைய வாரிசுதாரர்களுக்கு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.2,000 வரை நிதியுதவி அளிக்கப்படுகிறது.

பயிர்த் தொழிலில் நேரடியாக ஈடுபடக்கூடிய நிலமற்ற ஏழைமக்களுக்கு நீண்ட நாள் தரிசாக உள்ள நிலங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. 5 பேர் அல்லது அதற்குக் குறைவாக உள்ள ஒரு குடும்பத் தலைவருக்கு மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய் அல்லது அதற்குக் குறைவாக வருமானமிருப்பின் அவர் 'ஏழை' எனக் கருதப்படுகிறார். அவ்வாறே, ஒரு குடும்பத்தில் 5 பேருக்கு அதிகமாக இருப்பின் அவரது மாத வருமானம் ரூ.250 அல்லது அதற்குக் குறைவாக இருந்தால் 'ஏழை' எனக் கருதப்படுகிறார்.

1984ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1ஆம் நாளிலிருந்து 1985ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாள்வரை 2,12,481 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்ட 93,483 வீட்டுமனைகளும், பழங்குடியினருக்கு வழங்கப்பட்ட 4,818 வீட்டுமனைகளும் இதில் அடங்கும்.



**பொதுமக்கள் தொடர்புத் திட்டம்**

பொதுமக்கள் தொடர்புத் திட்டமான 'மனுநீதித் திட்டம்' குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை. கிராமங்களுக்கு வருகை தரும் அலுவலர்களினால் கிராம மக்களின் பிரச்சினைகளை அவ்விடத்திலேயே தீர்த்து வைக்க வாய்ப்பளிக்கிறது. இத்திட்டம், தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1-1-1984 முதல் 31-12-1984 வரை வரப்பெற்ற 55,435 மனுக்களில் 49,301 மனுக்கள்மீது நடவடிக்கை எடுத்து முடிவு செய்யப்பட்டது. அதாவது, 89 சதவீத மனுக்களின்மீது நடவடிக்கை எடுத்து முடிவு செய்யப்பட்டுள்ளது.

**அரசு அளித்துள்ள சலுகைகள் வருமாறு:**

* அரசுக்குத் தனிப்பட்ட விண்ணப்பத்தின் பேரில் கல்வி, அறசமய சம்பந்தமான நிறுவனங்கள் காலி நிலம் மற்றும் கட்டிடங்கள் உள்ள நிலம், அதன் மூலம் வரும் வருவாய் அந்த நிறுவன சம்பந்தமான காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட்டால் நிலவரியிலிருந்து முழு விலக்குப் பெறலாம்.

* சமுதாய மன மகிழ் மன்றங்கள் மற்றும் நிறுவனங்களுக்குச் சொந்தமான காலி நிலங்கள் மற்றும் கட்டடங்கள் உள்ள நிலங்களுக்கும் 50 விழுக்காடு நிலவரி குறைக்கப்பட்டது.

* திரைப் படப்பிடிப்பு நிலையங்களுக்குச் சொந்தமான காலி நிலங்கள் மற்றும் கட்டடங்கள் உள்ள நிலங்களுக்கும் 50 விழுக்காடு நிலவரி குறைக்கப்பட்டது.

* தமிழ்நாடு குடிசை குடியிருப்பு ஒழிப்புச் சட்டம், 1977, பிரிவு 3 (பி)-ன் கீழ் குடிசை குடியிருப்பாக அறிவிக்கப்பட்ட எல்லா நிலங்களுக்கும் வரிவிதிக்கக்கூடாத இனங்களாகக் கொள்ளப்பட்டது.

* எல்லாத் திரைப்பட அரங்கங்களுக்கும் 10 விழுக்காடு நிலவரியிலிருந்து தள்ளுபடி தரப்பட்டது.

* சங்கீதம், நாடகம் மற்றும் இதர கலை நிகழ்ச்சிகள் நடத்தும் சபாக்களுக்கு 50 விழுக்காடு நிலவரி குறைக்கப்பட்டது.

உபரி நிலங்கள் விநியோக விதிகளின் கீழ் உயரளவு 3 ஏக்கர் புன்செய் நிலத்தையோ அல்லது 1 1/2 ஏக்கர் நன்செய் நிலத்தையோ தகுதி வாய்ந்தவர்களுக்கு ஒப்படை செய்யப்படுகிறது.

நில உச்சவரம்பினைச் செயல்படுத்துவதும், உபரி நிலங்களை வழங்குதலும் இருபது அம்சத் திட்டத்தின் (எண்: 4) ஒரு பகுதியாகும். ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட இலக்கீடான 14,000 ஏக்கர்களுக்கு 31-3-1985 வரை தகுதிவாய்ந்த நபர்களுக்கு 5,000 ஏக்கர்கள் வரை விநியோகிக்கப்பட்டுள்ளன.

**இடைத் தரகர்களை ஒழித்தலும் ரயத்துவாரியாக மாற்றுதலும்:**

அரசுக்கும், நிலத்தை உழுபவருக்கும் இடையிலான ஜமீன் இனாம், கீழ்காணி ஆட்சி, உடைமைகளையும் மற்றும் இதர சிறப்பு உரிமை முறையையும் ஒழிக்கும் பணி அரசால் பல்வேறு சட்டங்களின் கீழ் அமலாக்கம் செய்யப்பட்டு இப்பணியின் பெரும் பகுதி முடிவுற்றுள்ளது. இது 1947-ல் சுதந்திரத்திற்குப் பின் அரசின் ஓர் பெரும் விவசாயச் சீர்திருத்தமாகும்.

இன்று வரை 22,527பேர்கள் உடைமைகள் ஒழிப்புச் சட்டங்களுக்குப் புறம்பாகப் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளால் பயனடைந்து 34,191 எக்டேர் நிலங்களுக்குப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.


மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம்
ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்
கன்னியாகுமரி மாவட்டம்
(இருப்பு) நாகர்கோவில்



எங்கள் மனம் கனிந்த
நல்வாழ்த்துகள்!

ம. கருப்பையா, இ.ஆ.ப.,
பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம்
மற்றும்
மாவட்ட ஆட்சித் தலைவர்.

ADVT.,

அரசுப் பணியாளர் ஒருவர் 25 ஆண்டுகள் தகுதிப் பணி புரிந்திருந்தால், அவர் ஓய்வு பெறும்போது சராசரி ஊதியத்தில் 30/80 என்ற வீதத்தில் ஓய்வூதியம் பெற்றார். 25 ஆண்டுகளுக்கு மேல் அவர் தகுதிப் பணி புரிந்திருந்தால், சில நிபந்தனைகளுக்குட்பட்டு சராசரி ஊதியத்தில் 33/80 வரை அதிக ஓய்வூதியம் வழங்கப்பட்டது.

இருபது ஆண்டுகளே பணி புரிந்திருந்தாலும் ஓய்வுக் கால கூடுதல் நன்மைகளுடன் அரசுப் பணியாளர்கள் தாங்களாகவே ஓய்வு பெற அரசு அனுமதி வழங்கியுள்ளது. உயரளவு 5 ஆண்டுகள் வரையில் ஓய்வூதியக் கணக்கில் கூடுதலாகச் சேர்த்துக் கொள்ளப்படுகிறது. இவ்வாறாக அரசுப் பணியாளர்கள் 20 ஆண்டுகள் பணிபுரிந்து தாமாகவே ஓய்வு பெற்றால், அவர்களும் நிதித் துறையின் (ஓய்வூதியம்) 2-2-1980 நாளிட்ட 57ஆம் எண் அரசாணையில் குறிப்பிடப்பட்ட வீதங்களில் ஓய்வூதியம் பெறுவர். இத்துடன், முடிவு பெற்ற ஒவ்வோர் ஆறு மாதப் பணிக்கும் ஊதியத்தில் ¼ பங்கு என்ற வீதத்தில் சிறப்பு ஓய்வூதியப் பணிக்கொடையும் அனுமதிக்கப்படுகிறது. இது ஊதியத்தில் 16.5 மடங்கு என்ற உயரளவிற்கு உட்பட்டதாகும். உயரளவு பணிக்கொடை 31-3-1985 முதல் ரூ. 36,000-லிருந்து ரூ. 50,000 ஆக மேலும் உயர்த்தப்பட்டுள்ளது.

1-10-1979-க்கு முன்னர் ஓய்வு பெற்ற எல்லா அரசு ஊழியர்களுக்கும் தளர்த்தப்பட்ட ஓய்வூதியத்தின் பயன்கள் நீட்டிக்கப்பட்டுள்ளது.

1-4-1978-க்கு முன்னர், ஓய்வு பெற்ற அரசுப் பணியாளர் ஒருவரின் குறைந்த அளவு ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு 50 ரூபாயாக இருந்தது. தமிழ்நாடு மூன்றாவது சம்பளக் குழு செய்த பரிவுரைகளின் அடிப்படையில் 1-4-1978 முதல் குறைந்த அளவு ஓய்வூதியமும் மாதம் ஒன்றுக்கு 100 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. பின்னர் 1-4-1982 முதல் குறைந்த அளவு ஓய்வூதியம் மாதம் 125 ரூபாயாக உயர்த்தப்பட்டு, இது தமிழ்நாடு நான்காவது சம்பளக் குழுவின் பரிந்துரையின்படி 1-10-1984 முதல் மேலும் ரூ. 235 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

நான்காவது சம்பளக் குழுவின் பரிந்துரையின்படி ஓய்வூதியதாரர்களுக்கு, பணியாளர்களுக்கு வழங்கும் அகவிலைப்படியைப் போலவே வழங்கப்பட உள்ளது.

ஓய்வூதியத் தொகை மாதம் ஒன்றுக்கு 300 ரூபாய்க்கு மேற்படாதிருந்தால், அத்தொகை பண அஞ்சல் மூலமாக அரசுச் செலவில் அனுப்பப்படுகிறது. மேற்படி தொகை 300 ரூபாய்க்கு மேற்பட்டால் அவரவர் விரும்புகிற வங்கி மூலமாக அனுப்பப்படுகிறது.

ஓய்வூதியம் பெறுபவர்கள் சில மருத்துவச் சலுகைகள் பெறவும் தகுதியுடையவர் ஆவர். இது ஆண்டு ஒன்றுக்கு 200 ரூபாய் என்ற உயரளவிற்.குட்பட்டு ஆண்டு ஓய்வூதியத்தில் 10 சதவீதமாகும்.

மாதம் ஒன்றுக்கு 750 ரூபாய் வரை ஓய்வூதியம் பெறுபவர்கள்



# ஓய்வு பெறுவோர்










பண்டிகை முன்பணம் ஒரு மாத ஓய்வூதியம் அல்லது ரூ. 100 இதில் எது குறைவோ அதைப் பெறத் தகுதியுடையவர் ஆவர்.

நான்காவது சம்பளக் குழுவின் பரிந்துரைப்படி இடைக்கால நிவாரணமாக ரூபாய் 20 எல்லா ஓய்வூதியதாரர்களுக்கும் அளிக்கப்படவிருக்கிறது. இத்துடன் 1-10-1984 முதல் அடிப்படை ஓய்வூதியத்தில் (7லிருந்து 30 சதவிகிதம்) வரை உயர்வு அளிக்கப்பட உள்ளது.

## குடும்ப ஓய்வூதியம்

அரசுப் பணியாளர் ஒருவர் பணியாற்றும்போதோ ஓய்வு பெற்ற பின்னரோ இறந்துவிட்டால், அவரது குடும்பம் குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையதாகும். ஆனால், அவர் இறக்கும்போது ஓராண்டுக் காலமாவது பணியாற்றியிருக்க வேண்டும். அலுவலர் இறக்கும்போது அல்லது பணியிலிருந்து ஓய்வுபெறும்போது அவர் பெற்று வந்த சம்பளத்தின் அடிப்படையில் இந்த குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இறந்த அலுவலரின் மனைவிக்கு வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படும், அவர் இறந்த பிறகுகூட உரிய வயதடையாத அவரது குழந்தைகளுக்கு அந்த ஓய்வூதியம் வழங்கப்படும்.

குடும்ப ஓய்வூதியம்,தொடர்ந்து அளிக்கும் சலுகை, அரசுப் பணியாளரின் மகன்கள், திருமணமாகாத மகன்கள் முறையே 18, 21 வயது அடைகின்ற வரையில் என்பதற்குப் பதிலாக, 21, 24 வயது அடைகின்ற வரையில் அவர்களுக்கு அளிக்கப்படலாமென்றும் அரசு ஆணையிட்டுள்ளது.

## ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் :

தனியார் (மான்யம் பெறும், உள்ளாட்சி மன்றம்) பள்ளிகளிலிருந்து 1-6-1970-ல் அல்லது அதற்குப் பின்னர் ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கும் மான்யம் பெறும் பள்ளிகளிலிருந்து 1—4—1972-ல் அல்லது அதற்கு பின்னர் ஓய்வு பெற்ற ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கும், மாநில அரசுப் பணியாளர்களுக்குப் பொருந்துகிற தளர்த்தப்பட்ட ஓய்வூதிய விதிகள் பொருந்தும்.

## நகராட்சிப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம்.

14—1—1970-க்கு முன்னர் ஓய்வுபெற்ற நகராட்சிப் பணியாளர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ. 50 தனி ஓய்வூதியம் பெற்று வந்தனர். இந்த ஓய்வூதியத்தை அரசு 16—4—1980-லிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ. 100 ஆக உயர்த்தியுள்ளது. 1—4—1982 முதல், 125 ரூபாயாக உயர்த்தப்பட்டிருந்தது. நான்காவது சம்பளக் குழுவின் பரிந்துரைப்படி, மறுபடியும் இக் குறைந்த அளவு ஓய்வூதியமானது ரூபாய் 235 ஆக 1—10—1984 முதல் உயர்த்தப்பட்டுள்ளது. ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கு அவ்வப்போது அளிக்கப்பட்டு வரும் அகவிலைப் படியும் வழங்கப்பட உள்ளது.

தந்தி : ''கன்யாஸ்பின்''

தொலைபேசி : 24 & 26

கன்னியாகுமரி மாவட்டக்
கூட்டுறவு நூற்பு ஆலை லிமிடெட்.

எண். ஒய். 238

ஆரல்வாய்மொழி



எங்கள் மனம் கனிந்த
நல்வாழ்த்துகள்

ந. இராமமூர்த்தி
நிர்வாக இயக்குநர்

ம. கருப்பையா இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்/தலைவர்

ADVT.

# தமிழ்த் தாய்க்கு இரத பீடம்!

ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு, மதுரை மாநகரில் 1981ஆம் ஆண்டில் எல்லாரும் வியக்க இனிதே நடத்தப் பெற்றது தமிழக அரசால்.

அந்த மாநாட்டில் அப்போதைய இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் தலைமையில் மாண்பு மிகு தமிழ்நாடு முதல்வர் டாக்டர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழன்னையின் திருவுருவச் சிலையொன்றினைத் திறந்து வைத்தார். பழம் பெருமை மிக்க தமிழகத்தில் முதன் முதலில் தமிழ்த்தாய்க்கு அமைக்கப்படும் சிலையாதலால், அச்சிலை கலை நுணுக்கம் அமைந்த பீடமொன்றிலே மதுரையில் முக்கிய இடத்திலே நிறுவப்பட வேண்டுமென அர்சு கருதியது.

அதன்படி மதுரை தமுக்கம் திடலில் அச்சிலையை அழகு பீடமொன்றில் அமைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டு - அதற்கான பணி மாமல்லபுரம் சிற்பக் கல்லூரி முதல்வர் திரு கணபதி ஸ்தபதி அவர்கள் தலைமையில் இரவு பகலாக மேற்கொள்ளப்பட்டது. திறம் மிக்க சிற்பிகள் பலரும் இப்பணியிலே துவளாது ஈடுபட்டனர்.

முயற்சி திருவினையாக்குமல்லவா?

அன்னைத் தமிழுக்கு அவர்கள் அனைவரின் அரிய முயற்சியால் அருமை பெருமை மிக்க இரத பீடமொன்று உருவாக்கப்பட்டு அண்மையில் (9-6-85) மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

**தமிழன்னை உருவச் சிலை:**

**உருவ அமைதி விளக்கம்:**

இரத பீடத்தைப் பற்றி விளக்குமுன் தமிழன்னையின் உருவச்சிலை பற்றிய சிறப்பினை நினைவுகூர்வது தமிழறிந்தார் கடன். 'இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையவர்தம் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்' என ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் போற்றிய தாயாம் தமிழுக்குத் தமிழ்நாடு அரசு எடுத்;

உருவச்சிலை அமைந்துள்ள விதம் பற்றிக் கொஞ்சம் பார்ப்போம்.

*பார்த்ததைப் பார்த்த வண்ணம் செய்திடல்...

*கண்டதை அனுபவித்து, அவ்வனுபவத்தை—



உள்ள உணர்வை உருவாக்கிக் காட்டுதல்...

*அக உணர்வுகளை அகக்கண்களால் பார்த்து, அவ்வுணர்வுகளுக்கு உருக் கொடுப்பது..

—எனப் பொதுவாகச் சிற்பக்கலை மரபு மூவகைப்பட்டதாக விளங்குகிறது. உலகக் கலை மரபுகளில் அக உணர்வுகளை உருவாக்கிக் காட்டும் அந்த மூன்றாவது மரபே ஈடிணை அற்றதென உலகக்கலை வல்லுநர்களால் போற்றிப் பாராட்டப்படுகின்றது.

அக உணர்வுகளை அகக் கண்களாலே கண்டுகளித்து அந்த உணர்வுதளை உலகறிய உருவாக்கிக் காட்டும் அந்த மூன்றாவது வகையைச் சார்ந்த மரபே தமிழகச் சிற்பக் கலை மரபாகும். அத்தகைய அரிய மரபின் அடிப்படையிலேதான் தமிழன்னை உருவச்சிலை இயற்றப்பட்டுள்ளது.

இன்னும் சொல்லப் போனால்-தமிழின் உணர்வு மயமான சிறப்பியல்புகளைக் கொண்டே தமிழுக்கு வடிவம் தரப்பட்டுள்ளது.

தமிழ், ஓர் இனிய மொழி
தமிழ், பேசும் மொழி

தமிழ், என்றும் உள தென்மொழி
தமிழ், ஐம்பெருங்காப்பியங்களைக் கொண்ட மொழி
தமிழ், அரசோச்சும் மொழி
தமிழ், ஆட்சி மொழி
தமிழ், தொன்மையான மொழி
தமிழ், அறிவூட்டும்மொழி—கல்விமொழி
தமிழ், சேர, சோழ, பாண்டியர்களால் வளர்ந்த மொழி
தமிழ், இலக்கண இலக்கியங்கள் செறிந்த மொழி
தமிழ், என்றும் கன்னிப் பருவத்தினதாய் இருக்கும் தூய மொழி
தமிழ் நமது இதயம் நிறைந்த மொழி

—நமது தாயாம் தமிழின் இவ்வாறான சிறப்பியல்புகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, இந்தப் பண்புகளை உருவத்தாலும், உவமை அணிகளாலும் சிற்ப யாப்பு இலக்கண மரபிற் கிணங்க, கல்லிலே இழைத்த கவிதையாகக் காட்சி தருவதே மதுரை மாநகரில் அமைந்துள்ள தமிழன்னையின் உருவச்சிலை.

தமிழைப் பெண்ணாகவும், கன்னியாகவும் சொல்லுவது இலக்கிய மரபு; எனவே, தமிழானது பெண்ணுருவம் தாங்குவதாகிறது.

தமிழானது, தமிழினத்தார் இதயமெல்லாம் நிறைந்திருப்பதால், இதயத்தைத் தாமரையாக உவமைப்படுத்தி அந்தச் செம்மலர் மீது வீற்றிருப்பதாகத் தமிழ்த்தாய் சிலை சித்திரிக்கப்பட்டுள்ளது.

தமிழ் இனியது, எனவே யாழ் போன்ற இனிமையுடையது என்று உவமை சேர்த்து அக்கருத்து யாழொன்றை வைத்து உணர்த்தப்பட்டிருக்கிறது. இந்த யாழ், தமிழின் தொன்மையை விளக்கிடும் வகையில் நம் தமிழ்நாட்டின் மிகப் பழமையான இசைக் கருவியான மகர யாழாக அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ், அறிவூட்டும் என்பதைக் குறிக்கச் சுடர்



காட்டப்பட்டுள்ளது.

ஐம்பெருங்காப்பியங்களைக் கொண்டு விளங்கும் மொழியே தமிழ் என்பதைக் காலில் அணிந்த சிலம்பும், இடுப்பில் அணிந்த மேகலையும், கைகளில் அணிந்த வளையும் காதில் அணிந்த குண்டலங்களும், கழுத்தில் அணிந்த மணிமாலையும்—முறையே சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, சீவக சிந்தாமணி ஆகிய காப்பியங்களை உணர்த்தும்.

வில், புலி, கயல் ஆகிய மூன்று சின்னங்களின் மூலம் சேர, சோழ, பாண்டிய முடிமன்னர்களாலே சீராட்டிப் பாராட்டி வளர்க்கப்பட்ட மொழி தமிழ் என்பது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

இடது கரத்திலே விரித்துப் பிடிக்கப்பட்டுள்ள ஏடு தமிழானது செயல்மொழி பேச்சு மொழி என்பதை உணர்த்தும்.

தோற்றமும் முடிவும் இல்லாத என்றுமுள தென் தமிழ் என்கிற குறிப்பினை வலது கையிலுள்ள வட்ட வடிவ அட்சமாலை தெரிவிக்கும்.

அரசர்க்கே உரிய கிரீட மகுடமும், இடது காலை மடித்து, வலது காலைத் தொங்கவிட்டு அமர்ந்த ஆண்மை நிலையும் பின்னால் நிறுத்தப்பட்டுள்ள குடையும் தமிழ் ஆட்சிமொழி என்பதை உணர்த்தும்.

ஓம் என்ற முதல் ஒலியிலிருந்து இயல்பாகப் பிறந்த மொழி தமிழ் என்பதை வலது கை ஓம்கார முத்திரை எடுத்துக் காட்டும்.

ஒலியிலிருந்தே வரியாகிய எழுத்து தோன்றியது என்பதை இடது கரத்திலுள்ள ஓலைச் சுவடி தெரிவிக்கும்.

—இவ்வாறான சிறப்பியல்புகளைச் சொல்லால் சொல்லி, மனதிலே தோன்றும் உணர்வுமயமான ஓர் உருவத்தைக் கனபரிமாணத்தோடு உருவகித்துக் காட்டும்போது, அது கல்லோவியமாக, கலை வடிவமாக, கவின்மிகு சிற்பமாக வெளிப்பட்டு தமிழன்னை உருவம் தமிழின் உருவமாக உறுதிபெற்று நிற்கிறது.

பல்லாயிரக் கணக்கான சிற்ப உருவங்கள் தோன்றிய தமிழ்நாட்டில் தமிழுக்கு வடிவம் கண்டது இந்த இருபதாம் நூற்றாண்டிலேதான்—மாண்புமிகு தமிழக முதல்வராக டாக்டர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் ஆட்சி செலுத்தும் காலத்திலேதான் என்பது குறிப்பிடத்தக்கது.

## இரத பீடம் எப்படி அமைந்துள்ளது?

'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்' என்று மகாகவி பாரதியாராலே பாராட்டியுரைக்கப்பட்ட தமிழ்மொழி எப்பொழுதும் இயங்கும் தன்மை உடையதல்லவா? இதை உணர்த்தவே தமிழ்த்தாய்க்கு நான்கு சக்கரங்கள் கொண்ட இரதபீடம் எழில்தேக்கமாய் மதுரை தமுக்கம் திடலில் நிறுவப்பட்டிருக்கும் தமிழன்னை உருவச்சிலைக்காக அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்த இரதபீடம் முற்றிலும் கருங்கல்லாலும், வெள்ளைக் கல்லாலும் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. வான் பறக்கும் கொடியினிலே மீன்பறக்கும் மதுரையிலே அமைகிற பீடமல்லவா? அதன் காரணமாகத் தேரின் நான்கு சக்கரங்களின் ஆரக்கால்களும் மீன்களைப் போலவே உருவாக்கப்பட்டுள்ளன.

தாமரை மலரை நிகர்த்த அடிப்பீடமும், சிற்ப நுட்பங்களோடு கூடிய தூண்கள் மற்றும் போதிகைகளைக் கொண்டும், விரிந்த தாமரையினை ஒத்த சிகரத்தைக் கொண்டும் அமைந்துள்ளது இரத பீடம். இந்தப் பீடத்தின்மீது தமிழன்னை சிலை அமைய, அவ்வுருவத்தின் பின்னணியில் வெள்ளைக் கல்லாலான வெண்குடையும் நிறுத்தப்பட்டிருக்கிறது. கட்டடத்தின் உயரம் மட்டும் 24 அடி 3 அங்குலம், அகலம் 13 அடி 6 அங்குலம், இதற்கான கட்டுமானப் பணியினை மாமல்லபுரம் அரசினர் சிற்பக் கலைக் கல்லூரிக்குச் சொந்தமான காரைக்குடி உற்பத்திப் பிரிவைச் சேர்ந்த 60 சிற்பிகள் இரண்டு ஆண்டுகளாகச் செதுக்கி முடித்திருக்கிறார்கள்.

இரத பீடத்தின் சிகரம், வெண்குடை ஆகியற்றுக்குக் காரைக்குடிக்கு அருகில் உள்ள பூலாங்குறிச்சி மலையிலிருந்து வெள்ளைக் கற்கள் எடுத்து வரப்பட்டன. சக்கரங்கள், இரத பீடம், தூண்கள், உத்திரங்கள் ஆகியவற்றுக்குத் திருச்சி மாவட்டம் பாடாலூர் மலையிலிருந்து கருங்கற்கள் எடுத்தாளப்பட்டன.

தஞ்சாவூரிலிருக்கும் பெருவுடையார் கோயிலை நிர்மாணிக்க இந்தப் பாடாலூர் மலைக் கற்களே பெருமளவில் பயன்படுத்தப்பட்டதாக வரலாறு கூறுகிறது.

தமிழன்னை உருவச்சிலையின் மதிப்பு மட்டும் ரூ. 20 ஆயிரம்.

கல்லால் ஆன இரத பீடத்தின் மதிப்போ ரூ. 3.06 இலட்சம்!

—சோமுராஜன்



# பலனளிக்கும் பல்துறைக் கல்வி

1985-86-ஆம் ஆண்டில் கல்வி மானியத்திற்கான ரூ. 468 கோடியில் பெரும் பகுதியான ரூ. 384 கோடி பள்ளிக் கல்விக்கே (மேல்நிலைப் பள்ளிக் கல்வி உட்பட) ஒதுக்கப்பட்டுள்ளது.

**தொடக்கக் கல்வி:**

வரவு-செலவு மதிப்பீட்டில் நிதி ஒதுக்கத்தில் முதன்மையான இடத்தைத் தொடக்கக் கல்வி பெறுகிறது. 1984-85-ல் புதிதாக 355 தொடக்கப் பள்ளிகள் (தொடக்க நிலைப்பள்ளிகள் 299-ம் நடுநிலைப்பள்ளிகள் 56-ம்) தொடங்கப்பட்டுள்ளன. பள்ளி வயதுச் சிறுவர் அனைவருக்கும் தொடக்கக் கல்வியை விரிவாக்குதல் புதிய 20 அம்ச திட்டத்தில் 16-ஆவது அம்சம் ஆகும்.

**முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் : 1—10 வகுப்புப் பள்ளிக் குழந்தைகளுக்கு உணவு:**

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் தமிழகத்தில் 1—7—1982/15—9—1982 முதல் 1—5 வகுப்புகளிலும், 15—9—1984 முதல் 6—10 வகுப்புகளிலும் அமலாக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் பள்ளிகளில் 1—10 வகுப்புகளில் படிப்பவர்களில் 55 இலட்சம் குழந்தைகள் 37,447 பள்ளிகளிலுள்ள சத்துணவு மையங்கள் மூலம் சத்துணவு பெற்று வருகின்றனர். இம்மையங்களில் பெரும்பாலானவை பள்ளிக்கல்வி இயக்குநரின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழும்; மற்றவை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலத்துறை; பிற்பட்டோர் நலத்துறை; நகராட்சி நிருவாகத்துறை ஆகியவற்றின் இயக்குநர்கள்; மற்றும் சென்னை மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிகளின் ஆணையாளர்கள் ஆகியோரின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழும் செயல்படுகின்றன.

1—5 வகுப்புக் குழந்தைகளுக்கு ஆண்டின் 365 நாட்களும் சத்துணவு வழங்கப்படுகிறது.

1985 செப்டம்பர் 15ஆம் நாளிலிருந்து 1—8 வகுப்புக்களில் பயிலும் தகுதியுள்ள ஏழைக் குழந்தைகளுக்கு இலவசச் சீருடை வழங்கும் திட்டம் செயல்படுத்தப் படவிருக்கிறது.

**இலவசப் புத்தகங்கள் கற்பலகைகள் வழங்குதல் :**

1—3 வகுப்புகளில் பயிலும் ஏழை மாணவர்கள் 13 இலட்சம் பேர்களுக்கு முதல் வகுப்பில் பாடப் புத்தகங்களும் சிலேட்டும் 2—3 வகுப்புகளில் பாடப்புத்தகங்களும் இலவசமாக வழங்கப்பட்டு வந்துள்ளது. 1972-73ஆம் ஆண்டிலிருந்து பாட நூல்கள் வழங்குவதற்கு ஆகும் செலவை தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனமே தனது நிதியிலிருந்து ஏற்று வருகிறது. இதற்காக இந்நிறுவனம் இப்பொழுது ஆண்டுதோறும் ரூ. 1.60 கோடி செலவிடுகிறது. 1—8 வகுப்புகளில் படிக்கும் தகுதியுள்ள ஏழை மாணவ மாணவியர் அனைவருக்கும் விரிவாக்கப்பட்டிருக்கிறது.

**புத்தக வங்கிகள் :**

ஏழை மாணவர்களுக்குப்பாடப் புத்தகங்கள் வாங்கும் செலவினைத் தவிர்ப்பது புத்தக வங்கிகளின் நோக்கமாகும். 1-10-84 நிலவரப்படி 36,553 பள்ளிகளில் இவ்வங்கிகள் ஏற்படுத்தப்பட்டு இருந்தன. பயன்பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 13 இலட்சத்திற்கும் அதிகமாகும்.

ஊராட்சி ஒன்றியத்தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றிவந்த ஆசிரியர்களும், அடிப்படை ஊழியர்களும் 1—6—1931 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டனர். அப்பள்ளிகளின் கட்டடப் பராமரிப்பு தவிர, பள்ளி நிருவாகப் பொறுப்பு முழுவதையும் பள்ளிக் கல்வித் துறை கவனித்து வருகிறது. இப்பள்ளிகளில் பணியாற்றிவரும் ஆசிரியர்கள் எண்ணிக்கை 97,509 ஆகும்.

அறிவியல் ஆய்வுக் கூடங்களை அமைப்பதற்கான திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் சில உயர்நிலைப் பள்ளிகள் பயன் பெறுகின்றன. 1984-85 முடிய 1,123 உயர்நிலைப் பள்ளிகள் பயன் பெற்றுள்ளன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக் குறிக்கோளாகக்கொண்டு அவர்களுக்கு ஆங்கிலம், கணக்கு, அறிவியல் பாடங்கள் ஆகியவற்றில் பள்ளி நேரத்திற்குப் பின்னர் நாள்தோறும் ஆசிரியர்களின் நேரடி மேற்பார்வையில் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் 500 உயர்நிலைப்பள்ளிகளில் 8—10வகுப்புகளிலும், 300 மேல்நிலைப் பள்ளிகளில் 11, 12 வகுப்புகளிலும் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 1984-85-ல் மொத்தம் 12,000 மாணவர்கள் பயன் பெற்றனர்.

**வாழ்க்கைக் கல்விக்கான முதல் அமைச்சர் திட்டம்:**

பள்ளிகளில் தற்பொழுது குழந்தைகளுக்குக் கற்றுத்தரப்படும் பாடங்கள் பெரும்பாலும் ஏட்டறிவு சார்ந்தவையாகவே உள்ளன. அவர்களின் அடிப்படைத் தேவைகளுக்கும் அவர்களின் எதிர் கால வாழ்க்கைக்கும் இக்கல்வி முறை உதவுவதாக இல்லை. தொடர்ந்து படிக்காமல் பல்வேறு கட்டங்களில் பள்ளி வாழ்க்கையை நிறுத்தி விடுபவர்களுடைய தேவைகளை இம்முறை கணக்கிற் கொள்ளுவதேயில்லை.

வாழ்க்கைக் கல்விக்கான முதலமைச்சர் திட்டத்தின் நோக்கம் பள்ளிக் கல்வியானது அனைத்து மட்டங்களிலும் தொழில் மற்றும் வேலைவாய்ப்போடு இணைந்ததாக ஆக வேண்டும் என்பதாகும்.

மாணவ மாணவியருக்குப் பள்ளிகளில் கற்றுத்தரப்படும் திறன்கள்பிற்காலத்தில் அவர்கள் பொருத்தமான வேலையில் சேரவோ, சுயமாகத் தொழில் நடத்தவோ ஆற்றல் வாய்ந்தவர்களாக உருவாக்க உதவ வேண்டும். உழைப்பின் கௌரவத்தைக் குழந்தைகள் உணரும்படியான ஒரு மனநிலையை உருவாக்க வேண்டும்,

கல்விமுறைக்கும் வாழ்க்கைக்கும் இடையேயுள்ள இடைவெளி குறைக்கப்பட்டு வாழ்க்கைப் பிரச்னைகளைச் சமாளிக்க வல்லவர்களாகக் குழந்தைகள் ஆக வேண்டும். இத்திட்டத்திற்கு மிகப்பெரும் முதலீடு தேவை. அண்மைக் காலமாகக் கல்வியைத் தொழில் மயமாக்குவதன் இன்றியமையாமையை மைய அரசும் வலியுறுத்தி வருகிறது.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான முன்னோடி நடவடிக்கைகள் 1984-85லேயே தொடங்கப்பட்டு விட்டன.



**தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்: நோட்டுப் புத்தகங்கள்:**

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிடும் பாட நூல்கள் மாவட்ட மற்றும் 54 வட்ட கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மாநிலம் முழுவதும் 120 விநியோக மையங்களின் வாயிலாக விநியோகிக்கப்படுகின்றன. இக்கூட்டுறவுச் சங்கங்களால் நியமிக்கப்பட்ட சில்லறை விற்பனையாளர்கள் மூலமாக இப்பாடநூல்கள் விற்பனை செய்யப்படுகின்றன. சென்னை நகரில் இந்நிறுவனம் தனது வெளியீடுகளைத் தானே நேரடியாக 101 சில்லறை விற்பனையாளர்கள் மூலமாக விற்பனை செய்கிறது.

தமிழ்நாட்டுக்கு மைய அரசு ஒதுக்கும் மலிவு விலைத் தாளைக் கொண்டு. நோட்டுப்புத்தகங்களைத் தயாரித்து விநியோகிக்கும் பணியையும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனமே செய்துவருகிறது 1979-80 முதல் 1983-84 முடிய இவ்வாறு விற்பனை செய்யப்பட்ட மலிவு விலை நோட்டுப் புத்தகங்களின் மதிப்பு ரூ. 12 கோடிக்கும் அதிகமாகும். 1985-86ஆம் ஆண்டில் தயாரிக்க இருக்கும் நோட்டுப்புத்தகங்களின் மதிப்பு ஏறத்தாழ ரூ. 2 கோடியாகும்.

**மக்கள் தொகைக் கட்டுபாட்டுக் கல்வி**

"மக்கள் தொகைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கான ஐக்கிய நாடுகள் நிதி'' (UNFPA) தரும் சுமார் ரூ. 25 இலட்சம் உதவித்தொகையைக் கொண்டு 1980 நவம்பர் முதல் தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக் கல்வியைச் செயல்படுத்துவதற்கான ஒரு மாபெரும் திட்டத்தை தமிழ்நாடு கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனம் செயல்படுத்தி வருகிறது. தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் சுமார் 1.5 இலட்சம் பேர்களுக்கும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிப் பட்டதாரி ஆசிரியர்கள் 7,000 பேர்களுக்கும் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டு கல்வியில் பயிற்சி தரப்பட்டுள்ளது. மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக் கல்வியின் அடிப்படைத் தன்மை பயிற்று முறைகள் ஆகியவை பற்றிய வெளியீடுகளும் தயாரிக்கப்பட்டுள்ளன.

**ஆசிரியர் நலனுக்கான தேசிய நிதி**

ஆசிரியர்களும், அவர்களது குடும்பத்தினரும், வறுமைமுதலியவற்றால் வாடும்பொழுது நிதியுதவி செய்யவும், அவர்களது குழந்தைகளுக்கு மேற்படிப்புக்கான உதவித் தொகைகளை அதற்கான விதிமுறைக்குட்பட்டு அளிப்பதற்கும் இந்நிதியிலிருந்து உதவித் தொகைகள் வழங்கப்படுகிறது. 1984-85-ல் இந்த படிப்புதவித் தொகைகளை 126 மாணவர்கள் பெற்றனர். நிதியுதவி பெற்ற ஆசிரியர்கள் எண்ணிக்கை 23 ஆகும்.

**மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற் பாடங்கள்**

மேல்நிலைப் பள்ளி நிலையில் தொழிற்பாடங்களைப்பொறுத்த வரையில் தமிழ்நாட்டின்சாதனை அனைத்திந்திய மட்டத்தில் பாராட்டினைப் பெற்றுள்ளது. 1984-85-ல் மொத்தம் 969 மேல்நிலைப்பள்ளிகளில் தொழிற் பாடங்கள் கற்பிக்கப்பட்டன. சில பள்ளிகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட தொழிற்பாடங்கள் கற்பிக்கப்பட்டன. அவ்வாறு கற்பிக்கப்பட்ட தொழிற் பாடங்களின் மொத்த எண்ணிக்கை 1,432 ஆகும். 1984-85-ல் மேல்நிலைப் பள்ளிகளில் பயின்று வந்த 3.32 இலட்சம் மாணவர்களில் 61,502 பேர் (அதாவது சுமார் 19 விழுக்காட்டினர்).

மைய அரசு நாடெங்கும் அமல்படுத்தி வரும் ஒரு திட்டத்தின் கீழ் மின் கணிப்புப் பொறியைப் பற்றிய கல்வியானது 1984-85-ல் தமிழகத்தில் 10 மேல்நிலைப் பள்ளிகளில் தொடங்கப்பட்டுள்ளது. இப்பள்ளிகளில் 16 பள்ளிகள் சென்னையிலும், 6 பள்ளிகள் கோயம்புத்தூரிலும் அதை

யொட்டியும் அமைந்துள்ளன. இப்பள்ளிகளுக்கு மின் கணிப்புப் பொறி வசதிகளை அளிப்பதுடன் வழிகாட்டும் மையங்களாகச்செயல்படுபவை இந்தியத் தொழில் நுட்பவியல் நிலையம், சென்னை, பூ.சா.கோ. தொழில் நுட்பவியல் கல்லூரி, கோயம்புத்தூர் ஆகியவையாகும்.

**மாநில அரசின் வயது வந்தோர் கல்வித் திட்டம்:**

தமிழகத்தில் ஊராட்சி ஒன்றியங்கள் 61-ல் 1980 பிப்ரவரி - மார்ச் மாதங்களில் மொத்தம் 6,100 வயது வந்தோர் கல்வி மையங்களை அரசு தன் நிதியிலிருந்து தொடங்கியது. இம்மையங்கள் ஐந்து தொகுதியினருக்கு எழுத்தறிவிக்கும் பணியை முடித்து, இவற்றின் மூலம் 11.7 இலட்சம் பேர் பயன் பெற்றனர். 1983 அக்டோபர் முதல் மேலும் 45 ஊராட்சி ஒன்றியங்களில் கூடுதலாக 5,400 மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இம்மையங்கள் ஒரு தொகுதியினருக்கு எழுத்தறிவித்துவிட்டு இரண்டாவது தொகுதினருக்கு எழுத்தறிவித்து வருகின்றன. ஊரக (தொழிற் சார்ந்த) எழுத்தறிவுத் திட்ட மையங்களைப் போன்றே இம்மையங்களும் செயல்படுகின்றன. முப்பது மையங்களுக்கு ஒருவர் வீதம் மேற்பார்வையாளர்கள் உள்ளனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 500 சம்பளமும் போக்குவரத்துச் செலவுக்கு ரூ. 60ம் தரப்படுகிறது. இந்த 11,500 மையங்களுக்கும் சேர்த்து 1985-86ல் மொத்தம் ரூ. 2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1984-ஆம் ஆண்டின் இறுதியில் செயல்பட்டு வந்த வயது வந்தோர் கல்வி மையங்களின் மொத்த எண்ணிக்கை 18,365 ஆகும். அம்மையங்களில் பயின்று வந்தோரின் எண்ணிக்கை 5.85 இலட்சம் பேர் ஆகும். இவர்களுள் பெரும்பாலோர் அதாவது 5.02 இலட்சம் பேர் மகளிர் ஆவர். மொத்த எண்ணிக்கையாகிய அந்த 5.85 இலட்சம் பேரில் 2.91 இலட்சம் பேர் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்தவராவர்.

**நகரப் பகுதிகளிலுள்ள வயது வந்தோருக்கான தொழில்சார்ந்த கல்வி:**

நகரப் பகுதிகளிலுள்ள வயது வந்தோருக்காக 1984-85ல் தொழில் சார்ந்த பள்ளி சாராக் கல்வி மையங்கள் 66 துவக்கப்பட்டுள்ளன. ஒவவொரு மையத்திலும் யாதானும் ஒரு தொழில் பற்றிக் கற்பிக்க, பயிற்சியாளர் ஒருவர் மாதம் ரூ. 100 ஊதியத்தில் பணிபுரிகிறார். ஒவ்வொரு மையத்திற்கும் ரூ. 1,000 செலவில் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்கித் தரப்பட்டுள்ளன.

**பள்ளிசாராக்கல்வி:**

பள்ளிக்கே செல்லாதவர்களும் சென்று பின் இடையில் நின்றுவிட்டவர்களுமான 6—14 வயதுச் சிறுவர்களுக்குக் கல்வி புகட்ட பள்ளி சாராக் கல்வி மையங்கள் நடத்தப்படுகின்றன. 1984-85ல் 150 மையங்கள் செயல்பட்டு வந்தன.

மேலும் இராமநாதபுரம் மாவட்டம், சிவகாசிப் பகுதியிலுள்ள தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழில்சாலைகளில் வேலை செய்துவரும் சிறுவர்களுக்குக் கல்வி அளிப்பதற்காக 30 பள்ளி சாராக் கல்வி மையங்கள் 1980-81-ல் தொடங்கப்பட்டன.

பாரதியார் பல்கலைக் கழகத்துக்கு கோயம்புத்தூரில் ஆயிரம் ஏக்கர் வளாகமும், பாரதிதாசன் பல்கலைக் கழகத்துக்குத் திருச்சிராப்பள்ளியில் ஆயிரம் ஏக்கர் வளாகமும் ஒதுக்கப்பட்டுள்ளன. தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின்கீழ் உள்ள சிறப்புக் கட்டடப் பிரிவுகள் இவ்வளாகங்களில் கட்டட வேலைகளை விரைந்து நிறைவேற்றி வருகின்றன.

கொடைக்கானலில் தொடங்கப்பட்டுள்ள அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தின் நோக்கங்களும் குறிக்கோள்களும் தனித்தன்மை வாய்ந்தவை. அதன் பணி மற்றைய பல்கலைக் கழகங்களுடைய பணியிலிருந்து மாறுபட்டது. மகளிர் பல்கலைக் கழகத்தின் முக்கிய பணி மகளிரைப் பற்றியும் மகளிர் நலனைப் பற்றியும் ஆய்வுகளைச் செய்வதும், ஆய்வறிக்கைகளின் அடிப்படையில் அரசு மற்றும் தனியார் துறைகளில் அமைந்துள்ள மகளிர் நல நிறுவனங்களுக்கு அறிவுரைகளையும் பரிந்துரைகளையும் வழங்குவதும் ஆகும்.

**தமிழ்ப் பல்கலைக் கழகம்:**

தமிழ்மொழியின் தொன்மையையும் சிறப்பையும் கண்டறிந்து நிறுவவும், புதுமைக் கருத்துக்களும் பூத்துக் குலுங்கும் வளமிக்க மொழியாக அதனை வளர்க்கவும் உதவும் உயர்நிலை ஆய்வு மையமாக தஞ்சாவூரில் 1981 செப்டம்பரில் தமிழ்ப்



பல்கலைக் கழகம் நிறுவப்பட்டது.

சிறந்த புத்தகங்கள்பலவற்றை வெளியிட்டு வருவதுடன் இப் பல்கலைக்கழகம் ''தமிழ்க்கலை'' மற்றும் Tamil civilization என்னும் இரண்டு முத்திங்கள் ஆராய்ச்சி இதழ்களையும் வெளியிட்டு வருகிறது.

**அஞ்சல் வகுப்புகளும் தொடர் கல்வியும்**

மதுரை காமராசர் அண்ணாமலை மற்றும் சென்னைப் பல்கலைக் கழகங்கள் நடத்தி வரும் அஞ்சல் முறைவகுப்புகளில் 1984 85-ல் பட்ட வகுப்புகளிலும் பட்ட மேற்படிப்பு வகுப்புகளிலும் 1.26இலட்சம் பேர் பயின்று வந்தனர். மேலும் மதுரை காமராசர் பல்கலைக் கழகம் நடத்தி வந்த ''அனைவரும் படிக்கத் தக்க பல்கலைக் கழக'' வகுப்புகளில் ஏறத்தாழ 13,540 பேர் பயின்று வந்தனர். கடந்த மூன்று ஆண்டுகளில் 12 அரசுக் கல்லூரிகளில் பி.காம் மாலை நேர வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களைச் சார்ந்த மாணவமாணவியர்களில் மேல்நிலைப் பள்ளித் தேர்வில் 60 விழுக்காடு அல்லது அதற்கு மேலாக மதிப்பெண் பெறுபவர்களுக்கு அவர்கள் மேற்படிப்பில் சேர உதவுவதற்காக ஆளுக்கு ரூ. 300 உதவிப்பணம் (ஒரு தடவை மட்டும்) தரப்பட்டு வருகிறது.

**கல்லூரிகளில் தமிழ் பயிற்று மொழி**

தமிழ்ப் பயிற்று மொழியை ஊக்குவிக்கும் முறையில் பட்ட வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஊக்க உதவிப்பணமாக ஆண்டுக்கு ரூ. 180 தரப்பட்டு வருகிறது. இவ்வுதவிப்பணம் பெற்ற மாணவர் எண்ணிக்கை 1984-85-ல் 24,317 ஆகும். இத்திட்டத்திற்காக 1985-86-ல் ரூ. 44 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம் தமிழைப் பாட மொழியாகக் கொண்டுள்ள கல்லூரி மாணவர்களுக்காக இதுவரை 900-க்கும் அதிகமான பாடப்புத்தகங்களை வெளியிட்டுள்ளது.

வேலையில் இருப்பவர்களுக்கென்று 1983-84-ஆம் ஆண்டிலிருந்து மூன்றாண்டு மாலை நேர சட்ட வகுப்புகளும் நடத்தப்பெற்று வருகின்றன. இம்மாநிலத்தில் இருக்கின்ற நான்கு சட்டக் கல்லூரிகளிலும் 1984-85-இல் பயில்கின்ற மாணவர்கள் மொத்தம் 3,975 பேர்களில்470 பேர் மாணவியர் ஆவர். கடந்த ஆண்டில் 261 மாணவியரே இருந்தனர். சென்னை மற்றும் மதுரை சட்டக் கல்லூரிகளில் மொத்தம் 141 மாணவர்கள் தமிழில் சட்டம் பயில்கின்றனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்கு ரூ. 180 உதவித் தொகை வழங்கப்படுகிறது. திருச்சி மற்றும் கோவை சட்டக் கல்லூரிகளிலும் தமிழில் பயிற்றுவிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**விளையாட்டும் இளைஞர் நலனும்**

விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறைக்காக 1985-86 இல் மொத்தம் ரூ. 2 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது இத்துறையின் கீழ் 19 மாவட்ட விளையாட்டு மன்றங்கள் உள்ளன (தஞ்சாவூர், திருநெல்வேலி, மதுரை ஆகிய மூன்று பெரிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் 1983-84-இல் அமைக்கப்பட்ட இரண்டாவது மாவட்ட விளையாட்டு மன்றம் உட்பட)மேலும் 1985-86-ல் காமராசர் மாவட்டம் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டங்களில் புதிய மாவட்ட விளையாட்டு மன்றங்கள் அமைக்கப்படும். மாவட்ட விளையாட்டு மன்றங்கள் அனைத்துக்கும் 1985-86-ல் மொத்தம் ரூ. 4.70இலட்சம் செலவில் ''மல்டி டிரெய்னர்' என்னும் உடற்பயிற்சிக்கருவி, பளுதூக்கும் பயிற்சிச் சாதனங்கள் ஜிம்னேஷியக் கருவிகள் ஆகியவை தரப்படவிருக்கின்றன.

தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சிக் கழகம் திருசிவந்தி ஆதித்தன் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. அதன் அங்கீகரிக்கப்பட்ட முதலீடு ரூ. 1 கோடியாகும்.

***சாரண சாரணியர்***

தமிழ்நாட்டில் தற்பொழுது 1.42 இலட்சம் சாரண சாரணியர் உள்ளனர். இவ்வெண்ணிக்கை இந்தியா அனைத்திலும் உள்ள சாரண, சாரணியர் எண்ணிக்கையில் நான்கில் ஒரு பங்காகும். தமிழ்நாடு சாரண, சாரணியர் இயக்கத்திற்கு மாநில அரசு மானியமாக ஆண்டுக்கு ரூ. 3 இலட்சம் வழங்கி வருகிறது. 1985-86-லிருந்து இம் மானியம் ரூ. 5 இலட்சமாக உயர்த்தப்படும்.

**தேசிய மாணவர் படை**

தமிழ்நாடு தேசிய மாணவர் படை இயக்ககத் தலைமையகம் சென்னையில் உள்ளது. அதன் கட்டுப்பாட்டின்கீழ் சென்னையில் இரண்டும், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் ஒவ்வொன்றுமாக வட்டாரத் தலைமை இடங்கள் 5 அமைந்துள்ளன.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் தேசியப் பணித்திட்டம் மேல்நிலைப் பள்ளி நிலையிலும் செயல்பட்டு வருகிறது. தேசியப் பணித் திட்டத்தின்கீழ் ஒரு மாணவனுக்கு ஆண்டுதோறும் பொதுத் திட்டத்தின் கீழ் ரூ.80ம், சிறப்பு முகாம் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு முகாமிற்கும் ஒரு நபருக்கு ரூ.100-ம் செலவிடப்படுகிறது. இவ்விரண்டு இனங்களிலும் ஏற்படும் செலவினை மாநில அரசும், மைய அரசும் 5:7 என்ற விகிதத்தில் பகிர்ந்து ஏற்றுக் கொள்ளுகின்றன. இதற்காக 1985-86 மாநில அரசு நிதிநிலை மதிப்பீட்டில் ரூ. 92 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்னையிலுள்ள கன்னிமாரா பொது நூலகம் மாநிலத்தின் மைய நூலகமாகும். இந்தியாவில் வெளியிடப்படும் அனைத்து நூல்கள் ஒவ்வொன்றிலும் இரு பிரதிகளை இந்நூலகம் இலவசமாகப் பெறுகிறது.

இந்நூலகத்திற்கு 1983-84 மற்றும் 1984-85ல் மொத்தம் ரூ. 22 இலட்சம் தரப்பட்டது.

தற்பொழுது மாவட்டத்திற்கு ஒன்றாக மொத்தம் 16 மாவட்ட நூலக ஆணைக்குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் கீழ் மொத்தம் 16 மாவட்ட மைய நூலகங்களும், 1511கிளை நூலகங்களும் செயல்படுகின்றன. 20 கிளை நூலகங்கள் 1984-85ல் புதியதாகத் தொடங்கியவையாகும். மாவட்ட நூலகஆணைக்



குழுக்களின் பணியாளர்கள் மொத்தம் 3279.

தென் ஆசியாவில் தலைசிறந்த ஆவணத் தொகுப்புகளைக் கொண்ட நிலையமாகத் திகழ்கிறது, சென்னை எழும்பூரில் உள்ள தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பகம். இது ஒரு வரலாற்று ஆராய்ச்சி மையமாகத் திகழ்வதுடன், அரசு நிறுவாகத்திற்கும் பயன்படுகிறது. கடந்த நான்கு நூற்றாண்டுகளுக்கான அரசு மற்றும் துறைத் தலைமையகங்களின் ஆவணங்களும் வேறு சில ஆவணங்களும் இங்கு உள்ளன. அவை வரலாற்றுச் சிறப்பு மிக்கவையும் நிருவாகத்திற்குப் பயன்படுபவையும் ஆகும்.

மிகப் பெரிய நூலகங்களுள் ஒன்றான தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகத்தில் 2½ இலட்சம் புத்தகங்கள் உள்ளன. பெரும்பாலானவை ஆங்கிலத்திலும், தமிழிலும் உள்ளன. பிற மொழிகளிலும் சில புத்தகங்கள் உள்ளன. இந்நூலகத்தில் பொதுவான புத்தகங்களைத் தவிர தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளின் அச்சிடப்பட்ட வெளியீடுகளும் உள்ளன. பழைய அரசிதழ்கள், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, அறிக்கைகள், நாடாளுமன்ற, சட்டமன்ற விவாதப் பதிவுகள், ஆவணப்பட்டியல்கள், பஞ்சாங்கங்கள், தகவல் தொகுதிகள், நீதிமன்றத் தீர்ப்பு அறிக்கைகள், விவரச் சுவடிகள், பழைய தாளிகைகள் முதலிய விலை மதிப்பற்ற நூற்தொகுப்புகள் இந்நூலகத்தில் உள்ளன.

பொறியியல், தொழில் நுட்பவியல் மற்றும் இவை சார்பான அறிவியல் புலங்களின் வளர்ச்சிக்காகவும், அவற்றில் மேற்படிப்பு, ஆராய்ச்சி ஆகியவற்றை ஊக்குவிக்கவும், அண்ணா பல்கலைக் கழகம் 1978 செப்டம்பர் 4-ஆம் நாள் நிறுவப்பட்டது. இப்பல்கலைக் கழகத்தில் பொறியியல், தொழில்நுட்பவியல்; கட்டட அமைப்பும் வட்டார அமைப்புத் திட்டமும், செயல் முறைப் பொறியியல்; அறிவியலும் கலைப் பாடங்களும் ஆகிய புலங்களில் மொத்தம் பட்டப்படிப்புகள் 20ம் பட்ட மேற்படிப்புகள் 29ம் உள்ளன.

**தமிழ் வளர்ச்சித் துறை:**

அரசு அலுவல் நெறிகளிலும் கல்வி நிலையங்களிலும், தமிழ் மொழியின் பயன்பாட்டை மேம்படுத்தும் பணிகளை தமிழ் வளர்ச்சித்துறை மேற்கொண்டுள்ளது.

அகவை முதிர்ந்த தமிழறிஞருக்கு நிதியுதவி வழங்கும் திட்டம் 1978ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் கூடுதலாகத் தமிழறிஞர் முப்பதின்மர் நிதியுதவி பெறுகின்றனர். திங்கள்தோறும் ரூ.250 என்ற நிலையில் உதவித் தொகை வழங்கப்படுகின்றது. இதுவரை இத்திட்டத்தால் 212 தமிழறிஞர்கள் பயன் பெற்றுள்ளனர்.

தமிழில் சிறந்த நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டத்தின்படி 1983-84, 1984-85 ஆகிய ஈராண்டு நிலையில் 25 நூல்கள் வெளியிட நிதியுதவி வழங்கப்பட்டது. 1985-86இல் இத்திட்டத்திற்கு ரூ.60;000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழில் சிறந்த நூல்களை ஊக்குவிப்பதற்காகத் டுமிழ் நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்படி ஆண்டுதோறும் 21 வகைப்பட்ட சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசு வழங்கப்படுகிறது 1983ஆம் ஆண்டில் வெளிவந்த சிறந்த தமிழ் நூல்களுக்குரிய பரிசுகள் 1985 திருவள்ளுவர் திருநாளன்று (சனவரி 15ஆம் நாள்) வழங்கப்பட்டன.

அறிஞர்களையும் கலை இலக்கியப் படைப்பாளர்களையும் கவிஞர்களையும் பாராட்டிப் பெருமைப்படுத்தும் வகையில் பின்வரும் விருதுகள் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன.—

திரு.வி.கலியாணசுந்தரனார் விருது ரூ. 10,000 சிறந்த தமிழ் எழுத்தாளருக்கு.

பாவேந்தர் பாரதிதாசன் விருது ரூ. 10,000 சிறந்த தமிழ்க் கவிஞருக்கு.

(மேலும் 65 வயதைக்கடந்த சிறந்த புலவர் ஒருவருக்குத் திங்கள்தோறும் ரூ.500 காணிக்கை நிதி வழங்கப்பட்டு வருகிறது.)

திருவள்ளுவர் விருது (1986 லிருந்து வழங்கப்படவிருக்கிறது) ரூ. 10,000-திருவள்ளுவர் குறித்துச் சிறந்த ஆய்வு நடத்துபவருக்கு.

அறிஞர் அண்ணா விருது (1985 லிருந்து வழங்கப்படவிருக்கிறது) ரூ.10,000-அறிஞர் அண்ணாவின் கருத்துக்கள் குறித்து சிறந்த ஆய்வு நடத்துபவருக்கு.

செந்தமிழச் சொற்பிறப்பியல் அகர முதலியின் முதன் மடலத்தின் முதற் பகுதி அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது. அகரத்தில் தொடங்கும் சொற்களைக் கொண்ட இப்பகுதி மொழியியல் அறிஞர் மறைந்த திரு. தேவநேயப் பாவாணர் அவர்கள் தொகுத்ததாகும். அவ்வகரமுதலியின் ஏனையப் பகுதிகளையும் வெளியிட இத்துறை விழைகிறது. இப்பணிக்குப் பயன்படும் கருவி நூலாகப் பாவாணர் நூல்களிலிருந்து இரட்டிய "பாவாணர் வேர்ச் சொல் வரிசை" என்னும் தொகுப்பு இத்துறையால் விரைவில் வெளியிடப்படும்.

சென்னை, புதுக்கோட்டை, சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் அருங்காட்சியக இயக்குநரின் கண்காணிப்பில், காட்சியகங்கள் செயற்படுகின்றன. வேலூர், ஈரோடு, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் மாவட்ட அருங்காட்சியகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. வேலூர் அருங்காட்சியகம் அண்மையில் செயற்படத் தொடங்கும். கடலூர், உதகமண்டலம் ஆகிய இடங்களில் மாவட்ட அருங்காட்சியகங்களை அமைக்க அரசு 1985-86இல் அனுமதியளிக்கவிருக்கிறது.



தமிழ்ப் பழங்கலை இயக்ககம் திருக்குறள் கருத்துக்களைப் பரப்பும் அமைப்பாகத் திருக்குறள் நெறிபரப்பு மையம் என்ற பெயரில் வள்ளுவர் கோட்டத்தில் இயங்குகிறது. இம்மையம், மாவட்டக் கல்வி அலுவலர்களின் துணையோடு, திருக்குறள் பரப்பும் பணியை மேற்கொள்ளும். மாணவர்கள் குறட்பாக்களை மனனம் செய்யும் வண்ணம் குறட்பாக்களைத் தேர்ந்தெடுத்து, "திருக்குறள் மனனப் பகுதி" என்னும் சிறு நூலை அச்சிட்டு வெளியிடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொதுமக்கள் போற்றும் வகையில் வெள்ளிதோறும் திருக்குறள் வகுப்பு வள்ளுவர் கோட்டத்தி நடைபெறுகிறது. உலகளாவிய திருக்குறள் ஆர்வலர்களின் மாநில மாநாட்டை நடத்தத் திட்டங்கள் வகுக்கப்பட்டு முதல் நிலைப் பணிகள் நடந்து வருகின்றன.



# வளர்ந்தோங்கும் வனச் செல்வம்

காடுகள், பலதரப்பட்ட இயற்கைச்சூழல் அமைப்பினை உடையதாக, புதுப்பிக்கப் புதுப்பிக்கப் புத்துயிர் பெற்று இயற்கை வளங்களைத் தன்னகதத்தே கொண்டு இயற்கையன்னையின் மாபெரும் அமைப்பான இந்த உலகில் முக்கிய ஒரு அங்கமாகத் திகழ்கிறது. மனித சமுதாயத்தின் உயிர் நாடியும், மேம்பாடும் இந்த ஒரு வாழ்க்கை நலன் தரும் முறையினைப் பின்பற்றியுள்ளது.

**வனப்பரப்பு:**

1983-84ஆம் ஆண்டில் மொத்த வனப்பரப்பு 22,235 சதுர கிலோ மீட்டர். அதில் காப்பு வனம் 18,264.100 சதுர கிலோ மீட்டர். காப்பு நிலங்கள் 3,407 சதுர கிலோ மீட்டர்; பாகுபடுத்தப்படாத காடுகள் 564 சதுர கிலோ மீட்டருமாகும்.

1984-85ஆம் ஆண்டில் காடுகளின் மூலம் 24.40கோடி ரூபாய் வருவாய் கிட்டியது. வருவாயில் மிகுதியான பங்கு சந்தன மரத்திலிருந்தும், வனத்தைச் சார்ந்த தொழிற்சாலைகளுக்கு வழங்கப் பெறும் மரங்கள் மற்றும் மரப் பட்டைகள் ஆகிய மூலப்பொருட்களிலிருந்தும் கிடைக்கிறது.

வனச்செல்வத்ந்த குறிப்பாக சந்தனமரம், வெட்டு மரங்கள் ஆகியவற்றைச் சீரிய முறையில் பாதுகாக்க 1977ஆம் ஆண்டுக்கு முன்னர் 8 வனப்பாதுகாப்புப் படைகள் இயங்கி வந்தன. 1977க்குப் பின்னர் மேலும் ஐந்து வனப்பாதுகாப்புப் படைகள் அரசால் ஏற்படுத்தப்பட்டன.

தற்போது மாநிலத்தில் முக்கியமான இடங்களில் 89 வனச் சோதனைச் சாவடிகள் உள்ளன.

**வனத்தைச் சார்ந்த தொழில் நிறுவனங்களுக்கு மூலப் பொருட்கள் விநியோகம் செய்தல்:**

வன உற்பத்தி வனத்தைச் சார்ந்த தொழில் நிறுவனங்களுக்குச் சீகைப்பட்டை மற்றும் கூழ்மரங்கள் விநியோகம் செய்வதில் ஓர் இன்றியமையாத பங்கை வகிக்கின்றது. வனப் பொருட்களான புளூகம், கிராண்டிஸ், ஹைபிரிட், சீகைப்பட்டை, பட்டை உரிக்கப்பட்ட சீகை மரங்கள், மூங்கில் போன்றவைகள் தொழில் நிறுவனங்களுக்கு தொடர்ச்சியாக அளிக்கப்பட்டு வருகின்றன. 1983-84ஆம் ஆண்டில் 1.05 இலட்சம் டன்கள் மூலப்பொருட்கள் விநியோகம் செய்வதில் இரண்டு கோடியே நாற்பது இலட்சம் ரூபாய் வருவாய் கிட்டியது.

1984-85-ல் மூலப் பொருள்கள் தொடர்ச்சியாக அளிக்கப்பட்டு சுமார் 2.45 இலட்சம் டன்கள் விநியோகம் செய்து நான்கு கோடியேஅறுபத்தைந்துஇலட்சம் ரூபாய் வருவாய் கிட்டியது. அதே போல் வரும் 1985-86-ல் 2.82 இலட்சம் டன்கள் மூலப் பொருள்கள் விநியோகம்செய்து சுமார் 6.44 கோடி ரூபாய் வருவாய் கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

1983-84ஆம் ஆண்டில் 19.08 மெட்ரிக் டன் சந்தன மரங்கள் ஏலத்தில் விற்கப்பட்டதில் ரூ. 7.24 கோடி வருவாய் கிட்டியது. 1984-85-ல் 2,000 மெட்ரிக் டன் எடையுள்ள சந்தன மரங்களை ஏலத்தில் விற்றதன் மூலம் ரூ. 7.92 கோடி வருவாய் கிட்டியது.

வடஆர்க்காடு மாவட்டம், வாணியம்பாடி வட்டம் தெக்குப்பட்டு கிராமத்தில் அரசு சந்தனமரப் பொருட்கள் தொழிற்சாலையை எண்பத்து ஐந்து லட்சம் ரூபாய் செலவில் நிறுவியுள்ளது. இந்தத் தொழிற்சாலைக்கான கட்டுமானப் பணிகள் மற்றும் இயந்திரங்கள் பொருத்துதல் உட்பட அனைத்து வேலைகளும் தமிழ்நாடு சிறு தொழில் கழகத்தார் ( Tansi ) வசம் ஒப்படைக்கப்பட்டது.

1983-84-ல் காடுபடு சிறு பொருட்கள் விற்பனையில் 55.57 இலட்சம் ரூபாய் வருவாய் கிட்டியது. இதில் 17.38இலட்சம் ரூபாய் மதிப்புள்ள காடுபடு சிறு பொருள் குத்தகைகள் பெரும் பலநோக்கு மற்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது.

**முந்திரி:**

தென்னார்க்காடு, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களிலுள்ள பெரும்பான்மையான முந்திரித் தோட்டங்கள் தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தின் பொறுப்பிலுள்ளன. செங்கல்பட்டு, தென்னார்க்காடு, திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்

டங்களிலுள்ள சுமார் 18,000 எக்டேர் பரப்புள்ள முந்திரித் தோட்டங்கள் வனத்துறையின் பராமரிப்பிலுள்ளன. தற்போது 23,948 எக்டேர் பரப்புள்ள முந்திரித் தோட்டங்கள் தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்திடமுள்ளன.

1983-84-ஆம் ஆண்டு வனத்துறைவிலுள்ள முந்திரித் தோட்டங்களிலிருந்து 19.98 இலட்சம் ரூபாய் வருவாய் கிட்டியது. 1984 85ஆம் ஆண்டில் வனத்துறையிலுள்ள முந்திரித் தோட்டங்களிலிருந்து பெற்ற வருவாய் 28.17 இலட்ச ரூபாயாகும். 1985-86ஆம் ஆண்டிலும் 13.50 இலட்சம் ரூபாய் வருவாய் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**ரப்பர் தோட்டங்கள்:**

தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டுமே ரப்பர் தோட்டங்கள் வளர்ப்பதற்குச் சாதகமான தட்பவெட்ப நிலையும், மண் வளமும் அமைந்துள்ளன. வனத் துறை இம்மாவட்டத்தில் சுமார் 4,800 எக்டேர் பரப்பில் ரப்பர் தோட்டங்கள் எழுப்பியுள்ளது. கீரிப்பாறை மற்றும் பெருஞ்சாணி ஆகிய இடங்களில் அரசு ரப்பர் தொழிற்சாலைகளை நிறுவி ரப்பர் பாளங்கள், கிரேப் ரப்பர் மற்றும் அடர்த்தியான ரப்பர் பால் போன்றவை தயாரிக்கப்படுகின்றன.

1983-84ஆம் ஆண்டு முடிய இந்த ரப்பர் தோட்டங்களில் சுமார் 20 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இதே காலத்தில் 18 கோடி ரூபாய் வருவாயும் பெறப்பட்டுள்ளது.

இந்த ரப்பர் தோட்டங்களை வர்த்தக ரீதியாகத் திறம்பட பராமரித்து நடத்திச் செல்ல 1-10-1984 முதல் அரசு ரப்பர் கழகம் என்ற தனி அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

TAMILNADU FOREST PLANTATION CORPORATION LIMITED

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக்கழகம் 1-4-1976 முதல் செயல்படத் தொடங்கியது. வனத்துறையிலிருந்து 945 எக்டேர் தேயிலைத் தோட்டங்களை இக்கழகம் பொறுப்பேற்றுக் கொண்டது. மேலும் தொடர்ந்து 2,400 எக்டேர் பரப்பளவில் தேயிலை தோட்டங்களை இக்கழகம் விரிவுபடுத்தியுள்ளது. இத்துடன் தொடர்ந்து 347.70 எக்டேர் பரப்பளவில் தேயிலை தோட்டங்களைக் கொண்ட கோலப்புள்ளி தேயிலைத் தோட்டம் 1-7-1984-லிருந்து வனத்துறையிலிருந்து கழகத்திற்கு மாற்றப்பட்டது.

இக்கழகம் 34,800 கிலோ ''டைகர் ஹில்'' தேயிலை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து 9.75 இலட்சம் ரூபாய் வருமானம் ஈட்டியுள்ளது. 2,17,290 கிலோ தேயிலை தனியார் விற்பனை மற்றும் உள்ளிட விற்பனை மூலமும் விற்கப்பட்டு 52.94 இலட்சம் ரூபாய் ஈட்டப்பட்டுள்ளது.

தற்சமயம் சேரங்கோடில் இரண்டும், டைகர் ஹில்லில் ஒன்றும் ஆக மூன்று தேயிலைத் தொழிற்சாலைகள் உள்ளன.



1984 டிசம்பர் மாதம் வரை 2,325 இலங்கை நாடு பெயர்ந்தோர் குடும்பத்தினரைச் சேர்ந்த 4,464 பேர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு இக்கழகத்தில் அளிக்கப்பட்டுள்ளது. இதுவரை கட்டப்பட வேண்டிய 2,325 தொழிலாளர் குடியிருப்புகளில் 2,201 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் (1981-82முதல் 1984-85 முடிய) 97,425 எக்டேரில் சமூக நலக் காடுகள் வளர்க்கப்பட்டன.

சமூக வனவியல் முயற்சியை தீவிரப்படுத்துவதன் அவசரத் தேவையை உணர்ந்து 1981-82ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் ஸ்வீடன் சர்வதேச மேம்பாட்டு நிதி உதவியுடன் ஒரு மாபெரும் சமூக வனவியல் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

திட்ட காலத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் 1981-82 முதல் 1983-84 வரை 75,750 எக்டேர் பரப்பில் தொகுதித் தோட்டங்களும், 4836 கி.மீ. தூரத்திற்கு வரிசைத் தோட்டங்களும் ரூபாய் 1,947.44 இலட்சம் செலவில் வளர்க்கப்பட்டுள்ளன. இவை தவிர 121.10 இலட்சம் மரக்கன்றுகள் பொதுமக்களுக்கு அவர்களுடைய நிலங்களில் வளர்ப்பதற்காக இலவசமாகவோ சலுகை விலையிலோ அளிக்கப்பட்டுள்ளன.

இதுவரை 2,591 கிராம சமூக வன ஊழியர்கள் (2,418ஆண்கள், 173 பெண்கள்) நியமிக்கப்பட்டுள்ளனர். இன்னும் 1489 ஊழியர்கள் 1985-86-ஆம் ஆண்டில் நியமிக்கப்பட உள்ளனர். இவர்கள் தங்கள் வேலையை செவ்வனே செய்வதற்கு விரிவாக்கப் பயிற்சியும், தொழில் நுட்பப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

**பழங்குடியினர் மேம்பாடு:**

பழங்குடியினர் வசிக்கும் வேலூர், தர்மபுரி, திருப்பத்தூர், சேலம் ஆகிய வனப்பகுதிகளில் கால் நடைகளை மேய்ச்சல் நிலங்களில் இலவசமாக மேய்ப்பதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

வனத்துறையில் அவர்கள் தொழிலாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். தகுதியுடைய பழங்குடியினர் வனப் பணியாளர் வனக்காப்பாளர், வனக் காவலாளர், யானைப் பாகன், காவடிகள் போன்ற அரசுப்பணிகளில் இத்துறையில் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் இலவசமாகக் குடியிருப்பு இல்லங்கள் வழங்கப்பட்டுள்ளன.



வட ஆர்க்காடு மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் பழங்குடியினருக்காக 15 தொடக்கப்பள்ளிகளையும் 2 உயர்நிலைப் பள்ளிகளையும் வனத்துறை நடத்திவருகிறது. இப்பள்ளிகளில் மொத்தம் 1,984 மாணவர்களும், 45 ஆசிரியர்களும் உள்ளனர்.

பழங்குடியினரின் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு நண்பகல் உணவு, சீருடைகள், புத்தகங்கள், எழுது பலகைகள், முதலியன வனத்துறையினரால் இலவசமாக வழங்கப்படுகின்றன.

பழங்குடியினரின் பிள்ளைகளுக்காக தங்கும் விடுதி வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மற்றும் மருத்துவ வசதிகள் டாப்சிலிப், முதுமலை ஆகிய பகுதிகளில் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. டாப்சிலிப்பில் உள்ள மருத்துவமனை ஒரு உதவி மருத்துவர் தலைமையில் இதர மருத்துவ பணியாளர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. முதுமலையில் உள்ள மருத்துவமனை மருந்தாளுநர், மற்றும் இதரப் பணியாளர்கள் உதவியுடன் செயல்பட்டு வருகிறது.

வனத்துறையால் நடத்தப்படும் எல்லாப் பள்ளிகளிலும் சத்துணவு வழங்கப்படுகிறது.

பழங்குடியினரின் குடிசைத் தொழிலுக்குத்தேவையான மூலப் பொருட்களான மூங்கில், பிரம்பு மற்றும் சிறிய மரங்கள் முதலியவை சலுகை விலையில் வழங்கப்படுகின்றன. மேலும் விவசாயம் செய்வதற்கு தேவையான சிறிய மரம் மற்றும் வனப் பொருட்கள் இலவசமாகப் பழங்குடியினருக்கு வழங்கப்படுகிறது.

வண்டலூரில் நவீனமான உயிரியல்பூங்கா அமைந்துள்ளது, இந்த நவீன பூங்காவினை 140 எக்டேர் பரப்பளவில், மூன்று கோடி ரூபாய் செலவில் அமைப்பதெனத் திட்டமிடப்பட்டிருந்தது. இத்திட்டத்தின் முதல் கட்டத்தினை 105 லட்சம் ரூபாய் திட்டத்தில் 1979-80 ஆம் ஆண்டில் துவக்கி, வேலைகள் செய்து முடிக்கப் பெற்றது. விலங்குகளுக்கு ஏற்ற இயற்கைச் சூழல் கொண்ட பரப்பளவு போதுமானதாக இல்லை. மற்றும் வருங்காலத்தில் பூங்காவினை விரிவுபடுத்துதல்-ஆராய்ச்சிப் பணிகளுக்குத் தேவையான இடங்கள் ஆகியவைகளைக் கருத்தில் கொண்டு 510 எக்டேர் பரப்பளவில், சுமார் 7 கோடி ரூபாய் செலவில் இப் பூங்காவினை அமைப்பதெனமாற்றம் செய்யப்பட்டது. நமது நாட்டிலேயே, ஏன் தென் கிழக்கு ஆசியாவிலேயே, பெரிய விலங்ககமாக அமையக் கூடிய வகையில் இப் பூங்கா உருவாக்கப்பட்டு வருகிறது.

தற்பொழுது 205 மிருகங்கள் (28 வகைகள்), 353 பறவைகள் (61 இனங்கள்), 15 ஊர்வன வகையைச் சேர்ந்த பிராணிகள் இப்பூங்காவில் வைக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது. கடந்த ஓராண்டில் 168 பிராணிகள் புதியதாகச்சேர்க்கப்பட்டுள்ளது.

இவ்விலங்ககத்தினை மறைந்த நம் அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய தலைவர் அறிஞர் அண்ணா அவர்களின் நினைவாக அவருடைய பெயரில் ''அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா'' என அழைப்பதெனத் திட்டமிடப்பட்டுள்ளது.

**புயல் தடுப்பு மரம் வளர்ப்புத் திட்டம்**

தமிழ்நாட்டின் கடற்கரையோரங்கள் நெடுகிலும் புயல் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யும் திட்டம் மத்திய அரசின் இசைவு பெற்ற ஒரு திட்டமாகும். புயல் காற்றைத் தடுக்கும் அரணாக அமைவதற்காகவும் புயலால் விளையும் சேதங்களைக்குறைக்கவும், செங்கல்பட்டு, தென்னார்க்காடு, தஞ்சாவூர் இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி ஆகிய கரையோர மாவட்டங்களில் வருவாய்த்துறை மற்றும் வனத்துறை நிலங்களில் மரங்களை வளர்க்க இத்திட்டம் வகை செய்கிறது.

1984-85ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 1.04 இலட்சம் ரூபாய் செலவில் 19 எக்டேர் பரப்பில் தோட்டம் எழுப்பப்பட்டது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் இத்திட்டத்தின் கீழ் 21.64 இலட்சம் ரூபாய் செலவில் 1,125 எக்டேர் பரப்பில் தோட்டம் எழுப்பப்பட்டது.

வனவிலங்குகள் அதிகமுள்ள காட்டுப்பகுதிகள் எல்லை வரையறை செய்து 6 வன விலங்குகள் புகலிடங்களாகவும், ஒரு தேசிய பூங்காவாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

1985-86-ல் 31.53 இலட்சம் ரூபாய் செலவில் பறவைகள் புகலிடங்கள், 6 நீர்ப் பறவைக் காப்பகங்கள் பராமரிக்கப்படுகின்றன,

அழிந்து வரும் இனமான 'கடல் ஆமை பாதுகாப்புத் திட்டம்' 1982-83ஆம் ஆண்டு முதல் முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1983-84-ல் 8 இடங்களில் இந்த கடல் ஆமை முட்டைகளைச் சேகரம் செய்து குஞ்சு பொறிக்கும் இடங்களாக 3.48 இலட்சம் ரூபாய் செலவில் பராமரிக்கப்பட்டது. 94,000 முட்டைகள் சேகரம் செய்யப்பட்டு குஞ்சு பொறிக்க செய்யப்பட்டதில் 76,042 குஞ்சுகள் கிடைக்கப் பெற்று கடலில் விடப்பட்டுள்ளன. 1984-85-ல் 14 இடங்களில் ரூ. 6.25 இலட்ச ரூபாய் செலவில் கடல் ஆமை முட்டைகள் சேகரம் செய்து குஞ்சு பொறிக்கும் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு, 1,95,000 முட்டைகள் சேகரம் செய்து குஞ்சு பொறித்து அவை கடலில் விடப்பட்டுள்ளன.

திருநெல்வேலி மாவட்டத்தில் இந்திய அரசு உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது.

அழிந்து வரும் இனமான முதலைகளைப் பாதுகாக்க முதலை வளர்ப்பு பண்ணைகளை அமைக்க இந்திய அரசின் உதவி பெறப்பட்டுள்ளது. முதலைகளைப் பாதுகாக்க சாத்தனூர், ஒகேனக்கல் மற்றும் அமராவதி பகுதியில் பாதுகாப்பு இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. முதலை பண்ணைகளிலேயே பிறந்த முதலைகள் பாதுகாக்கப்படுகின்றன. இங்கு சிப்பந்திகள் குடியிருப்பு மற்றும் இதர வளர்ச்சிப் பணிகள் செய்யப்படுகின்றன. கோவை மாவட்டத்தில் தற்போதுள்ள அமராவதி முதலைப் பண்ணையினை ஆராய்ச்சிப் பண்ணையாக மாற்றவும் வர்த்தக ரீதியில் முதலைப் பண்ணைகள் அமைக்கவும் ஆராயப்பட்டு வருகிறது.



# வளம் பெருக்கும் தொழில்கள்





நடுத்தர, பெருந் தொழில்களின் வளர்ச்சியுடன் சிறு தொழில்களையும் குடிசைத் தொழில்களையும் வளர்ப்பதே மாநில அரசின் கொள்கையாகும். இந் நோக்கத்தைக் கருத்திற் கொண்டு, இம் மாநிலம் முழுவதும் பெரும், நடுத்தர தொழில்களின் வளர்ச்சிக்காக டிட்கோ டான்சம், சிப்காட், டிக், எல்காட், டி.என்.பி.எல், தமிழ்நாடு உப்புக் கழகம், டான்சி, டாமின் டான்மாக், சர்க்கரைக் கழகங்கள் ஆகியவை பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டுள்ளன.

### தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம் (டான்செம்)

சிமெண்ட்டை உற்பத்தி செய்து விற்பனை செய்தல், சுண்ணாம்பு, சுண்ணாம்புக்கல், சுட்ட சுண்ணாம்பு, சிமெண்ட் கல்நார் தகடுகள் முதலியனவும், சிமெண்டு தயாரிப்புக்குத் தேவையான ஏனைய தொடர்புடைய பொருட்களையும் உற்பத்தி செய்து விற்பனை செய்தல் இந்த நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

### ஆலங்குளம் சிமெண்டு ஆலை

ஆலங்குளம் சிமெண்டு ஆலையானது 1964 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த ஆலை 1970ஆம் ஆண்டில் வணிக முறையிலான உற்பத்தியில் ஈடுபட்டது. அப்போது இதன் நிறுவுத்திறன் ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும்.

1984— 85 ல் (31— 3— 1985 வரை). உற்பத்தி 3,40,031 (மெட்ரிக் டன்களில்)

### அரியலூர் சிமெண்டு ஆலை

அரியலூர் சிமெண்டு ஆலையானது ஓர் உலர் செய்முறை ஆலையாகும். இதன் ஓராண்டு நிறுவுத்திறனானது 5 இலட்சம் மெட்ரிக் டன்னாகும். டிட்கோ நிறுவனம் இத் திட்டத்தை ரூ. 2,876 இலட்சம் செலவில் முதன் முதலில் தொடங்கியது.

அரியலூர் சிமெண்டு ஆலை சுமார் 900 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும், மூலப் பொருட்கள், பணி நிறைவு பெற்ற பொருட்கள் முதலியவற்றின் போக்குவரத்து வகை அப் பகுதியால் கணிசமான அளவில் மறைமுக வேலை வாய்ப்பும் வழங்கியுள்ளது.

### தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் (தகடு தொழிற்சாலை)

தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம் தொழிலைப் பரவலாக்குவதில் முதற்படியாக அனைத்து இந்திய நிதி நிறுவனங்களின் நிதி உதவியுடன், ஆண்டு ஒன்றுக்கு 36,000 மெட்ரிக் டன் அளவில் உற்பத்தித் திறனுடன் ரூ. 250 இலட்சம் செலவில் சிமெண்டு தகடுகளை உற்பத்தி செய்ய ஆலங்குளத்தில் ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்டு தகடு தொழிற்சாலையை அமைத்துள்ளது.

இத் தொழிற்சாலை சுமார் 250 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும், கச்சாப் பொருட்கள் பணி நிறைவு பெற்ற பொருட்கள் முதலியவற்றின் போக்குவரத்து வகையில் பெருமளவுக்கு மறைமுக வேலை வாய்ப்பும் வழங்கியுள்ளது.

### தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் அழுத்த சிமெண்டு குழாய்த் தயாரிப்புத் தொழிற்சாலை

இத் தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு 36,000 மெட்ரிக் டன் உற்பத்தித் திறனுடன் 80 மி.மீ. முதல் 600 மி.மீ. வரை விட்ட அளவுகள் கொண்ட ஆஸ்பெஸ்டாஸ் அழுத்த சிமெண்டு குழாய்களை உற்பத்தி செய்யும் நோக்குடன் திருச்சி மாவட்டம் மாயனூரில் அமைக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்

தமிழகத்தில் பெரிய மற்றும் நடுத்தர தொழில் வளர்ச்சிக்கான பணியினைத் தனது முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு இந்த நிறுவனம் 'செயல்பட்டு வருகிறது.

1985ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31ஆம் தேதிவரை இந் நிறுவனம் பல்வேறு திட்டங்களின் கீழ் மொத்தம் ரூபாய் 229.90 கோடி உதவித் தொகையாக வழங்க ஒப்புதல் அளித்துள்ளதுடன், இதன் மூலம் 83,000 பேருக்கு மேல் மொத்த நேரடி வேலை வாய்ப்புக்கு வகை செய்துள்ளது.

### சென்னை ஏற்றுமதி தொழில் மண்டலம்

சென்னை ஏற்றுமதி தொழில் மண்டலத்தின் வளர்ச்சிப் பணிகளைச் செயல்படுத்தும் முகமைப் பொறுப்பை சிப்காட்டிடம் தமிழக அரசு ஒப்படைத்தது. தாம்பரம் எலும்புருக்கி நோய் மருத்துவமனையின் பின்புறம் 228 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு இதில் 98 ஏக்கர் நிலம் இக் கேந்திரத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் கூடுதலாக 298.64 ஏக்கர் நிலத்தை இக் கேந்திரத்தின் இரண்டாவது நிலைக்குக் கையகப்படுத்தும் பணி முன்னேற்றமடைந்து வருகிறது.

### வேலை வாய்ப்பு

1985-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31-ஆம் தேதி முடிய சுமார் 83,000 பேர்கள் சிப்காட்டில் நிதியுதவி பெற்ற நிறுவனங்களில் வேலைவாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள் என கணக்கிடப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் (டிக்) மாநில அளவில் நிதியுதவி அளிக்கும் முதன்மையான நிறுவனமாகச் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டிலும் பாண்டிச்சேரி நிர்வாகத்திலும் உள்ள சிறிய நடுத்தரத் தொழில்களின் மேம்பாட்டுக்கும் அவற்றின் விரைவான வளர்ச்சிக்கும் நிதியுதவி அளிப்பதே இந்தக் கழகத்தின் முக்கிய நோக்கமாகும்.

### சுய வேலை வாய்ப்பு மேம்பாடு

சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் சுய வேலை வாய்ப்பினை மேம்படுத்தும் பொருட்டு, இந்த நிறுவனம் பெருமளவு நிதியுதவியை அளிக்கிறது. லாரிகள், டிரக்குகள் சுற்றுலா வாடகை வண்டிகள் டெம்போக்கள், வேன்கள் முதலியன போன்ற போக்குவரத்து வண்டிகளில் ஓட்டுநர்களுக்கு சுய வேலைவாய்ப்பினை அளிக்கும் நோக்குடன், அவ்வண்டிகளை வாங்க அவர்களுக்குக் கடன் அளிக்கப்படுகிறது. 1984-85 ஆம் ஆண்டில் மொத்தம் 10.33 கோடி ரூபாய்க்கு 917 பேருக்குப் போக்குவரத்துக் கடன்களை இந்த நிறுவனம் அளித்துள்ளது.

தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் பொதுத்துறையில் பின்வரும் நான்கு உற்பத்தித் திட்டங்களைத் தொடங்கியுள்ளது. அலுமினியம் மின்னாற்பகுப்பு உலைக்கலன்களை ( capacitors ) உற்பத்தி செய்யும் பிரிவு, ஒசூர், மின் தொடர்பு சாதனங்கள் உற்பத்திப் பிரிவு சென்னை; பயன்படுத்துவோர் தேவைக்குத் தக்கவாறு கருவிகளைத் திட்டமிட்டுத் தயாரிப்பதற்கான ஒப்பந்த வேலைப் பிரிவு ஒன்று (சென்னை அடையாறில்); எண்காட்டும் மின்னணுவியல் கடிகார உற்பத்திப் பிரிவு இன்ஸ்ட்ரானிக்ஸ் வளாகம் அடையாறு ஆகியவையே அந் நான்கு உற்பத்தித் திட்டங்களாகும். இவை போக சிறு தொழிலாளர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை குறிப்பாக குவார்ட்ஸ் சுவர்க் கடிகாரங்கள்; நேரம் காட்டும் பிற கருவிகளை விற்பனை செய்யவும் இந்நிறுவனம் உதவி செய்து வருகிறது.

### காகித நிறுவனம்

தமிழக அரசு தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தைத் துவக்கியது. இந்த நிறுவனம் 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16-ம் தேதி பதிவு செய்யப்பட்டது. மற்றும் பணியை 1979-ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் தேதி துவக்கியது. ஆண்டொன்றுக்கு 50,000 டன்கள் செய்தித்தாள் காகிதமும், 4000 டன்கள் அச்சிடும் மற்றும் எழுதும் காகிதமும் இதன் முக்கிய நோக்கமாகும். இவ்விரண்டு பொருட்களும் முடிவு பெற்ற நிலையில் 75 சதவீதத்துக்குக் குறையாமல் கரும்புச் சக்கையை உள்ளடக்கியிருக்கும். இந்த ஆலை பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டிருக்கும் திருச்சி மாவட்டத்தில் புகலூர் பகுதியில் நிறுவப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முன்னோடியான தனித்தன்மையின் காரணமாகவும், உலகிலேயே முதன்மையாகக் கரும்புச் சக்கையை மூலப்பொருளாகக் கொண்டு இயங்கக் கூடிய இவ்வாலை திட்டத்திற்கு உலக வங்கி 100 மில்லியன் டாலர் பண உதவி அளித்துள்ளது. இந்தியாவின் சரித்திரத்திலேயே முதன் முறையாக ஐ.டி.பி.ஐ. நிறுவனத்தின் மூலமாக உலக வங்கி 22.5 மில்லியன் டாலர்களை பங்கு மூலதனமாக வழங்கி உள்ளது.

### தமிழ்நாடு உப்பு நிறுவனம்

இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம், உப்பு, உப்பைச் சார்ந்த இரசாயனப் பொருட்கள் மற்றும் உப பொருள்கள் தயாரிப்பது ஆகும்.

மாரியூர் வாலிநோக்கம் உப்புத் திட்டம் 1984ஆம் ஆண்டு இரசாயனத் தொழிற்சாலைக்குத் தகுந்த தரமான 31,100 டன் உப்பு உற்பத்தி செய்தது.

கடந்த ஆண்டில் உப்பு விற்பனை செய்யப்பட்ட 12,116 டன்களை ஒப்பிடும் பொழுது 6-12-1984 வரை 40,035 டன் உப்பு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### சர்தார் வேதாத்தினம் உப்புத் திட்டம்

இத்திட்டம் சுமார் 400-500 நபர்களுக்கு பருவகால வேலை வாய்ப்பும், 50 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும் அளிப்பதுடன் சார்பு வேலை வாய்ப்பும் அளிக்கிறது.

### தமிழ்நாடு கனிம நிறுவனம்

தமிழ்நாடு அரசு தொழிற்சாலைகளுக்குத் தேவையான முக்கியமான கனிமப் பொருட்களை வெட்டி எடுப்பதற்கும் கருப்பு மற்றும் சாம்பல் நிறக்



க்கற்களை வெட்டி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின்) அரசு நிறுவனம் ரூபாய் 100 இலட்சங்கள் அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன் 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நிறுவப்பட்டது.

இந்நிறுவனம் 1984-85 ஆம் ஆண்டின் மொத்த விற்பனையின் அளவைக் கடந்துவிட்டது. இந்த ஆண்டின் மொத்த விற்பனையின் அளவு ரூ. 408.20 இலட்சமாகும். இந் நிறுவனம் 1984-85-ல் நடைமுறை இலாபமாக ரூ. 110 இலட்சங்களும், நிகர இலாபமாக (வரிக்குப்பின்) ரூ. 8.14 இலட்சங்களும் ஈட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது 1983-84ன் நடைமுறை இலாபமான ரூ. 100 இலட்சத்திற்கும் நிகர இலாபமான ரூ. 7.88 இலட்சத்திற்கும் அதிகமாக உள்ளது. இந்நிறுவனம் தற்சமயம் 2,500 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து வருகிறது. இது 1985-86-ல் 2,750க்கு உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலகிலேயே சிறந்ததாகக் கருதப்படும் மடகாஸ்கருடன் ஒப்பிடக் கூடிய கிராபைட் தாது பசும் பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்திலுள்ள சிவகெங்கையில் கிடைக்கிறது. வெட்டியெடுக்கப்பட்ட தாதுக்களை சுத்தப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்குத் தேவைப்படும் 1,104 ஏக்கர் நிலத்தில் 600 ஏக்கர் புறம்போக்கு நிலமாகவும் 504 ஏக்கர் பட்டா நிலமாகவும் இருக்கும். அரசு புறம்போக்கு நிலத்தில் தாது எடுப்பதற்கு ஏற்கெனவே அனுமதி வழங்கியுள்ளது. இது வரை 283 ஏக்கர் பட்டா நிலம் கையகப்படுத்தப்பட்டுவிட்டது.

**சர்க்கரைத் தொழில்**

இம் மாநிலத்தில் கூட்டுறவுத் துறையில் 11 சர்க்கரை ஆலைகளும் தனியார் துறையில் 8 சர்க்கரை ஆலைகளும், பொதுத் துறையில் 3 சர்க்கரை ஆலைகளும், மத்திய அரசு நிர்வாகத்தின்கீழ் ஒரு சர்க்கரை ஆலையும் உள்ளன.

**தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம் (டாஸ்கோ)**

இம் மாநிலத்தில் கீழ்க்கண்ட மூன்று சர்க்கரை ஆலைகள் பொதுத்துறையில் இயங்கி வருகின்றன.—

(1) அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை, குருங்குளம், தஞ்சாவூர் மாவட்டம்.

(2) ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலை, எரையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

**1984** மார்ச் 31ஆம் தேதி நிலவரப்படி தமிழ்நாட்டில் 10616 சிறுதொழில்களுக்கு மின் இணைப்பு அளிக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் மொத்தம் 12716 சிறு தொழில்களுக்கு மின் இணைப்பு அளிக்கப்பட்டுள்ளது. இது 119.78 சதவிகிதச் சாதனையாகும்.

(3) மதுரை சர்க்கரை ஆலை, பாண்டியராஜபுரம், மதுரை மாவட்டம்.

அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையும், ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலையும் 1983-84 ஆம் ஆண்டில் தமது நிறுவிய பிழிதிறனில் முறையே 87.28 சதவீதம் மற்றும் 75.66 சதவீதம் அளவுக்கு உற்பத்தித் திறனைப் பயன்படுத்தி உள்ளன.

**வேலை வாய்ப்பு**

சர்க்கரைத் தொழில் பெருமளவில் நேரடி வேலைவாய்ப்பு அளிப்பதோடு சர்க்கரை ஆலைகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பு வழங்கி வருகின்றது. தமிழகத்தில் தற்போது இயங்கி வரும் சர்க்கரை ஆலைகளில் சுமார் 18,500 பேர் நேரடிப் பணியில் ஈடுபட்டுள்ளார்கள்.

**தமிழ்நாடு பீங்கான் நிறுவனம்**

விருத்தாசலத்தில் உள்ள பீங்கான் தொழிற்பேட்டை, பீங்கான் சிறுதொழில் முனைவோர்களுக்குக் குறைந்த வாடகையில் தொழிற் கூடங்கள் அளிக்கிறது. இத்தொழில் முனைவோர்களுக்குப் பதப்படுத்தப்பட்ட மூலப் பொருட்களை வழங்குவது மூலமாகவும் அவர்களது உற்பத்திப் பொருட்களை நவீன சுரங்கச் சூளையில் சுட்டுக்கொடுப்பது மூலமாகவும் அந்தப் பகுதியில் பீங்கான் தொழில் வளர்ச்சி பெற பீங்கான் பணி வசதி நிலையம் பேருதவி புரிகிறது.

டாசல் நிறுவனத்தின் உற்பத்திப் பொருட்கள் நியாயமான விலையுடன் தரத்தில் சிறந்தவையாகவும் இருப்பதால் இம்மாநிலத்திலும் வெளி மாநிலங்களிலும் அங்காடியில் பெரும் மதிப்பைப் பெற்றிருக்கின்றன. இந்நிறுவனம் சுமார் 1,000 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும் மற்றும் 1,000 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் அளிக்கிறது.

**1985-86** சுமார் 26.50 இலட்சம் எக்டேரில் நெல் பயிரிட்டு, 63 இலட்சம் டன் உற்பத்தி செய்யப்படும்.

தமிழ்நாட்டில் பல இடங்களில் எக்டேருக்கு 5 டன் உற்பத்தி எடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் மாவட்டத்திற்கு ஒன்றாக மொத்தம் 15 உழவர் பயிற்சி நிலையங்கள் உள்ளன.

புல்டோசர், டிராக்டர் முதலிய இயந்திரங்கள் குறைந்த வாடகையில் விவசாயிகளுக்கு விடப்படுகின்றன.

1984-85ல் 926 கசிவு நீர்க் குட்டைகள் ரூ 7.13 கோடியில் கட்டப்பட்டுள்ளன.





# சென்னைக் குடிநீர்

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்று வாரியம் 1-8-78ல் சட்டப்படி ஒரு நிறுவனமாக அமைக்கப்பட்டது.

இந்த வாரியம் செயல்படத் தொடங்கிய பிறகு, குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் பிரிவுகளின்கீழ் பல முக்கிய திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு, மாநில அரசு, உலக வங்கி மற்றும் பொதுக் கடன் ஆகியவைகளின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றைத் தவிர இந்த வாரியம், சென்னைப் பெருநகர் பகுதியிலுள்ள தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மற்றும் அரசு நிறுவனங்கள் ஆகியவற்றிற்காகக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் பணிகளை வைப்புநிதிப் பணிகளாக நிறைவேற்றி வருகிறது.

இவற்றைத் தவிர 1981, 1982 1983ம் ஆண்டுகளில் தொடர்ந்து பருவ மழை பொய்த்ததன் விளைவாக ஏற்பட்ட வறட்சி நிலையைச் சமாளிக்க பல்வேறு வறட்சி நிவாரணப் பணிகளை இந்த வாரியம் ஒரு பெரிய அளவில் தமிழ்நாடு அரசு உதவியுடன் நிறைவேற்றியுள்ளது.

சென்னை நகருடன் புதியதாக இணைக்கப்பட்ட 12 ஊராட்சிகளில் சாலிக்கிராமம் பகுதியின் பணி முடிவடையும் நிலையில் உள்ளது. விருகம்பாக்கம், வேளச்சேரி, கொடுங்கையூர், கனகம்—தரமணி மற்றும் எருக்கஞ்சேரிப் பகுதிகளில் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

சென்னை நகரில் தற்போது குடிநீர்க் குழாய்கள் இல்லாத பகுதிகளுக்குப் புதிய குடிநீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு குடிசை மாற்று வாரியப் பணிகளை மேலும் 2 நகராட்சிகள் மற்றும் 23 நகராட்சி மன்றங்களுக்கு விரிவு படுத்தி தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.**

நகரில் துருப்பிடித்த மற்றும் பழைய குடிநீர்க் குழாய்களை மாற்றி புதுப்பிக்கும் பணி இவ்வாண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது.

கீழ்ப்பாக்கம் நீர் நிலையத்தின் அருகில் 60 ஆண்டுகளுக்கு மேல் செயலிலுள்ள 48'' விட்டமுள்ள முதல் எஃகு விசைக் குழாயினை மாற்றியமைப்பதற்காக 60'' விட்டமுள்ள ஒரு எஃகு விசைக் குழாய் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

செங்குன்றத்திலிருந்து கீழ்ப்பாக்கம் நீர் நிலையம் வரை 3-வது புதைநீர் வழிப்பாதை கட்டும் பணி துரிதமாக முன்னேறி வருகிறது. குடிநீர்ப் பிரிவின் கீழ் இவ்வாரியம் 58 கி.மீ. நீளத்திற்குக் குழாய்கள் போட்டுள்ளது.

**கழிவுநீர் அகற்றல் பிரிவு**

நகரில் 40 ஆண்டுகளுக்கு மேல் நடைமுறையில் இருந்து வரும் முக்கியமான 15 கழிவு நீரேற்று நிலையங்களை மாற்றி அமைக்கும் பணி முடிவு பெற்று செயலாக்கப்பட்டுள்ளது.

தற்சமயம் நந்தனம் பகுதியில் கழிவுநீர் வழிந்தோடி அடையாறு ஆற்றில் கலந்து மாசு படுத்துவதைத் தவிர்ப்பதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள பணி முடிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு உள்ளது.



நகரில் கழிவுநீர் அனுப்பும் முறையை வலுப்படுத்துவதற்காகப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 4 கழிவுநீரேற்று நிலையங்களிலிருந்து புதியதாக விசைக் குழாய்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இதுவரை கழிவுநீரகற்று வசதியில்லாத மாம்பலம் ஏரிக்கரைப் பகுதிக்குக் கழிவு நீரகற்று வசதியமைக்கும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

84-85ஆம் ஆண்டு கழிவு நீரகற்றுப் பிரிவின் கீழ் 5கி.மீ. நீளத்திற்குக் கழிவுநீர்க் குழாய்கள் போடப்பட்டுள்ளன.



# உழவே தலை உயர்வே நிலை!



உணவு உற்பத்தியைப்பெருக்கவும் ஊரகப் பொருளாதாரத்தை உயர்த்தவும், தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்துகிறது. அவற்றுள் வேளாண்மை விரிவாக்கப் பணிகளைச் சீரமைக்கும் திட்டம், தரமான விதை, உரம், பூச்சி மருந்து போன்ற இடுபொருட்களைத் தக்க நேரத்தில்—தக்க இடத்தில் கிடைக்க வழி செய்யும் திட்டம், வேளாண்மை தொழில் நுட்பங்களை விரைந்து பரப்பும் திட்டம், தக்க காலத்தே மேற்கொள்ளும் பயிர்ப் பாதுகாப்புத் திட்டம், அதிலும் குறிப்பாக, பெருவாரியான பரப்புகளில் எடுக்கப்படும் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் திட்டம், சீரிய நீர் பராமரிப்பு மற்றும் மானாவாரி சாகுபடி வளர்ச்சி போன்ற சில திட்டங்களையும், செயல் முறைகளையும் முக்கிய குறிக்கோளாகக் கோடிட்டுக் காட்டலாம்.

*1985-86*-ஆம் ஆண்டு சுமார் 26.50 இலட்சம் எக்டேர்களில் நெல் சாகுபடி செய்வதன் மூலம் சுமார் 63 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்ய குறிக்கோள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதே போல் மானாவாரி சாகுபடியில் கவனம் செலுத்தி சிறு தானியங்கள் உற்பத்தியைச் சுமார் 22 இலட்சம் டன்களாக உயர்த்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் பல இடங்களில் எக்டேருக்கு 5 டன் உற்பத்தி எடுக்கப்பட்டுள்ளது. இதே நிலையைச் சம்பா பருவத்திலும் பெற எல்லாவித முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகிறது. இத் திட்டம் 1985-86-ஆம் ஆண்டு தீவிரமாகச் செயல்படுத்தப்படும்.

1984-85-ஆம் ஆண்டு 23.05 இலட்சம் எக்டேரில் நெல்லும், 8.15 இலட்சம் எக்டேரில் சிறு தானியங்களும் உயர் விளைச்சல் இரகங்களின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. 1985-86-ஆம் ஆண்டு சுமார் 24.00 இலட்சம் எக்டேர்களில் நெற் பயிரும் மற்றும் சுமார் 10 இலட்சம் எக்டேர்களில் சிறு தானிய உயர் விளைச்சல் இரகங்களும் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

புதிய 20 அம்சத் திட்டத்தின் கீழ் 1984-85-ஆம் ஆண்டில் 26,823 பலவகையான வேளாண்மைக் கருவிகள் வழங்கப்பட்டன. 1,214 விதை மற்றும் உரமிடும் கருவிகள் வழங்கப் பட்டன. 1985-86ஆம் ஆண்டும் 20,000 விதை மற்றும் உரமிடும் கருவி உட்பட விவசாயக்கருவிகள் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## பருத்தி

கோடை சாகுபடி பருத்தி பரப்பு அதிகமானதன் காரணமாக 1984-85-ஆம் ஆண்டு சுமார் 2.68 இலட்சம் எக்டேரில் பயிரிடப்பட்டு 4.75 இலட்சம் பொதிகள் உற்பத்தி அடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. 1985-86-ஆம் ஆண்டு 3.60 இலட்சம் எக்டேரில் பயிரிட்டு 5.00 இலட்சம் பொதிகள் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

## கரும்பு

தற்போதுள்ள 23 சர்க்கரை ஆலைகள் மற்றும் வெல்லம் தயாரிப்பாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய கரும்பு பெருக்கத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1984-85-ஆம் ஆண்டு 1.83 இலட்சம் எக்டேரில் கரும்பு பயிரிடப்பட்டுள்ளது. இவ்வாண்டு கரும்பு (வெல்லம் அளவில்) உற்பத்தி 20.50 இலட்சம் டன்களாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1985-86-ஆம் ஆண்டு 1.82 இலட்சம் எக்டேரில் பயிரிடப்பட்டு, 22.00 இலட்சம் டன்கள் வெல்லம் என்ற அளவில் கரும்பை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

## பயிறு வகைகள்

பயறு உற்பத்தியை இருமடங்கு ஆக்குவதற்காக 1980-81-ஆம் ஆண்டு ''பயறு உற்பத்தி ஆண்டுத் திட்டம்'' என்ற மாநில அரசுத் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டது. 1984-85-ஆம் ஆண்டில் பயறு வகை சாகுபடி பரப்பு 10.34 இலட்சம் எக்டேர்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 1984-85-ஆம் ஆண்டில் கோடைப் பருவத்தில் தீவிர சாகுபடித் திட்டத்தை மேற்கொண்டு 4.5 இலட்சம் எக்டேரில் பயறு வகைகள் பயிரிடத் தீர்மானிக்கப்



பட்டுள்ளது. 1984-85-ஆம் ஆண்டு பயறு வகைகள் உற்பத்தி சுமார் 3.40 இலட்சம் டன்களாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 1985-86ஆம் ஆண்டில் 10.10 இலட்சம் எக்டேரில் பயறுவகை சாகுபடி செய்து உற்பத்தியை 3.50 இலட்சம் டன்கள் ஆக்க திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் மொத்தம் 44 அரசு விதைப்பண்ணைகள் உள்ளன. அவை குறிப்பாக ஆதார விதை உற்பத்தியையும், ஓரளவு சான்றிதழ் பெற்ற விதைகளையும் உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ளன.

விவசாயிகளிடையே வேளாண் இடுபொருள்களைக் காலத்தே மற்றும் போதிய அளவு பயிருக்கு இடுதல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த ஆண்டுக்கு இரண்டு முறை இரு பருவங்களுக்கு வெகு முன்னதாகவே இடுபொருள் இருவார விழாக்கள் கொண்டாடப்படுகின்றன.

மாவட்டத்திற்கு ஒன்றாக மொத்தம் 15 உழவர் பயிற்சி நிலையங்கள் உள்ளன. கோவை மற்றும் மதுரை மாவட்டங்களில் உள்ள நிலையங்கள் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கட்டுப்பாட்டிலும், உதகையில் உள்ள நிலையம் தருமபுரி தோட்டக்கலை இயக்குநர் கட்டுப்பாட்டிலும் உள்ளன. மீதமுள்ள 12 நிலையங்கள் வேளாண்மைத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன.

## வேளாண்மைப் பயிற்சிப் பள்ளிகள்

தமிழ்நாட்டில் 13 வேளாண்மைப் பள்ளிகள் உள்ளன. அவை கிராமிய இளைஞர்களுக்கு அறிவியல் வேளாண்மை நுணுக்கங்களைப் பற்றி அறிவு போதிக்கின்றன. ஆண்டுக்கு 325 மாணவர்கள் பயிற்சி பெறுகின்றனர். இத்திட்டம் 1985-86ஆம் ஆண்டும் தொடர்ந்து செயல்படும்.

தமிழ்நாட்டில் 15 மண் ஆய்வுக் கூடங்களும், 16 நடமாடும் மண் ஆய்வுக் கூடங்களும் உள்ளன.

1984-85ஆம் ஆண்டு இலக்கான 9.72 இலட்சம் மாதிரிகளில் 8.22 இலட்சம் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. மண் மாதிரிகள் மட்டுமின்றி பாசன நீர் மாதிரிகளும் ஆய்வு செய்யப்படுகின்றன.

## உரக்கட்டுப்பாடு சோதனைக் கூடங்கள்

தமிழகத்தில் 6 உரக்கட்டுப்பாடு சோதனைக் கூடங்கள் உள்ளன. அவை ஆண்டுக்கு 10,800 உர மாதிரிகள் ஆய்வு செய்யும் திறன் கொண்டவை. 1984-85ஆம் ஆண்டு 9,741 உர மாதிரிகள் ஆய்வு செய்யப் பட்டுள்ளன.

## பூச்சிக் கொல்லி சோதனைக் கூடங்கள்

பூச்சி பூஞ்சானக் கொல்லிகள் மற்றும் களைக்கொல்லிகளின் மாதிரிகள் மாநிலத்தில் உள்ள 9 சோதனைக் கூடங்களில் ஆய்வு செய்யப்படுகின்றன. இச் சோதனைக் கூடங்களின் தற்போதைய திறன் ஆண்டிற்கு 18,360 மாதிரிகள் ஆகும்.

## வேளாண்மைப் பொறியியல் துறை

வேளாண் பொறியியல் துறை விவசாயிகளின் விளை நிலங்களை மேம்படுத்தியும், குறித்த காலத்தில் நவீன இயந்திரங்களைக் கொண்டு நிலங்களை உழுது கொடுத்தும், நீர்ப்பாசன வசதிகள் பெருக்கத்திற்கு தக்க ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தும் வருகின்றது. இதோடுமட்டுமின்றி நீர், நிலவளப் பாதுகாப்பு, ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்புத் திட்டங்களை செயல்படுத்துதல், இயற்கை சீற்றங்களால் ஏற்படும் வெள்ளம் மற்றும் வறட்சி நிவாரணப்பணிகளை மேற்கொள்ளுதல் முதலிய பணிகளையும் திறம்படச் செயலாற்றி வருகின்றது.

## நில மேம்பாட்டுத் திட்டம்

தரிசு, மற்றும் மேடுபள்ளங்கள் நிறைந்த பூமியினைத் திருத்தி, நிலமட்டம் செய்து கொடுத்து, மேம்பட்ட நீர்ப்பாசன வசதிகளைச் செய்து கொடுப்பது இத் திட்டத்தின் நோக்கமாகும். இதற்குப் புல்டோசர் மற்றும் டிராக்டர் முதலிய இயந்திரங்களைக் குறைந்த வாடகையில் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இத்துறையின் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது. இதோடு மட்டுமின்றி, நிலம் உழுதல், மண்ணைக் கிளறி விடுதல், சேறாக்குதல் போன்ற பணிகளைச் செய்ய டிராக்டர்களையும் மற்ற கருவிகளையும் கொடுத்து உதவி செய்து வருகின்றது.

1984-85-ஆம் ஆண்டில் 8,600 எக்டேர் பரப்பில் நிலச் சமன் செய்யப்பட்டுள்ளது. 33,000 எக்டேர் நிலப்பரப்பில் டிராக்டர் இயந்திரத்தின் மூலம் ஆழ உழுது கொடுக்கப்பட்டுள்ளது.

நிலத்தடி நீரை வேளாண்மைக்குப் பயன்படுத்த வடிமுனைக் குழாய்கள், மற்றும் ஆழ்குழாய்க் கிணறுகள், அமைக்கப்படுகின்றன. மேலும் பாறைப் பகுதிகளில் அதிக நீரைப் பெறுவதற்குத் திறந்த கிணறுகளில் ஆழப்படுத்துவதும், கிணற்றுக்குள் துளையிடுவதும் முக்கிய பணிகளாகும். இதற்கான தொழில்நுட்ப அறிவுரைகள் இலவசமாகவும் இயந்திரங்கள் குறைந்த வாடகைக்கும்



இத்துறையின் மூலம் வழங்கப்படுகிறது.

இத்துறையின்கீழ், 158 இயந்திரத் துளைக் கருவிகளும், 103 பாறை உடைப்புக் கருவிகளும், 57நீண்ட துளையிடும் இயந்திரக் கருவிகளும், 410 கைத்துளைக் கருவிகளும், 22 காற்றழுத்தக் கருவிகளும் இப்பணிகளுக்காக பயன்படுத்தப்படுகின்றன.

1984-85ஆம் ஆண்டில் 4,880 குழாய்க் கிணறுகள், 3,049 வடிமுனைக் குழாய்க் கிணறுகள், 3,427 கிணறுகளில் துளைகள் இடுதல் ஆகியவை அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இத்துடன் 2,470 திறந்த கிணறுகளில் ஆழப்படுத்தும் பணிகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

## சிறப்புத் திட்டங்கள்

டிசம்பர் 1983ஆம் ஆண்டு ஏற்பட்ட கடுமையான வெள்ளத்தினால் தஞ்சாவூர், தென் ஆர்க்காடு, திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களிலும், 1984 ஆம் ஆண்டு பிப்ரவரி - மார்ச் மாதங்களில் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களிலும் பாதிக்கப்பட்ட விளை நிலங்களை, புல்டோசர் இயந்திரம் மூலம் ரூ. 24.82 இலட்சம் செலவில், சீர்திருத்தப்பட்டது. இதன் பயனாக 1,600.02 எக்டேர் மீண்டும் விளைநிலங்களாக்கப்பட்டன.

## ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம்

கிராமப்புறங்களில் ஏழைகளுக்கு வேலைவாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக ஏற்படுத்தப்பட்ட பல திட்டங்களில் ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டமும் ஒன்றாகும். வேளாண் பொறியியல் துறை, இத்திட்டத்தின் கீழ் கசிவு நீர்க்குட்டைகளைக்கட்டியது. இதன் பயனாக மழைக்காலங்களில் வீணாக ஓடும் மழை நீரினைத் தேக்கி அருகாமையிலுள்ள கிணறுகளில் நீர் மட்டம் உயர வழி செய்கிறது. 1984-85-ஆம் ஆண்டில் 926 கசிவு நீர்க் குட்டைகள் சுமார் 7.13 கோடி ரூபாயில் கட்டப்பட்டுள்ளன. மேலும் 1985-86-ஆம் நிதிஆண்டில் 1,000 நீர்க்கசிவுக் குட்டைகளும், 5000 தடுப்பணைகளும், ரூபாய் 10 கோடி செலவில் கட்டப்படும்.

## எண்ணெய் வித்துக்கள் துறை

தமிழகத்தில் எண்ணெய் வித்துக்கள் மேம்பாட்டுக்கெனவும், எண்ணெய் வித்துக்கள் மற்றும் தென்னை வளர்ச்சியில் சீரிய முன்னேற்றம் கண்டிடவும் ஒரு தனித்துறை. கடந்த ஐந்து ஆண்டுகளாக இயங்கி வருகின்றது.

இத்துறையின் கடமை எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை பெருக்கிடவும், குறிப்பிட்ட பரப்பளவில் உற்பத்தி திறன் மிகுதியாக அடைந்திடவும் எண்ணெய் வித்துக்கள் மற்றும் எண்ணெய் உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவு பெற்றிடவும் வழி செய்திட இத்துறை பணியாற்றுகிறது.

குஜராத் மற்றும் ஆந்திர மாநிலங்களுக்கு ஒப்பாக எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் தமிழகம் தனித்தன்மை பெற்று விளங்குகிறது. இந்திய துணைக்கண்டத்தில் மொத்த உற்பத்தியான 125 இலட்சம் மெட்ரிக் டன்னில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் தமிழகம் 14.60 இலட்சம் மெ. டன்களை ஆண்டொன்றுக்கு உற்பத்தி செய்யும் திறன் கொண்டுள்ளது.



தமிழ்நாடு எண்ணெய் வித் வித்துக்கள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் கடந்த நான்கு ஆண்டுகளாக தமிழகத்தில் செயல்பட்டு வருகின்றது. இவ்விணையம் பல்வேறு சீரிய திட்டங்களைச் செயல்படுத்துகின்றது. இத்திட்டம், உற்பத்தி கொள்முதல் மற்றும் விற்பனை ஆகிய அனைத்துச் செயல்களையும் நிலக்கடலைச் சாகுபடியாளர்களின் நலன் கருதி செயல்படுத்துகின்றது. இவ்விணையம் ஏழு ஆண்டுகளில் 370 உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களைச் செங்கல்பட்டு, தென்னார்க்காடு, வடார்க்காடு ஆகிய மாவட்டங்களில் குறிப்பிட்ட வட்டங்களில் செயல்படுத்தும்.

## ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள்

வேளாண் பெருமக்களின் விளைபொருட்களுக்கு நல்ல விலை பெற்றுத் தரும் நோக்கத்துடன் தமிழகத்தில் 13 விற்பனைக் குழுக்களின் கட்டுப்பாட்டில் இதுவரை 264 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. சென்ற ஆண்டைக் காட்டிலும், மேலும் 7 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் இந்த ஆண்டு நிறுவப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 36 ''அக்மார்க்'' ஆய்வுக்கூடங்கள் செயல்படுகின்றன. மக்கள் அன்றாடம் உபயோகிக்கும் சமையல் எண்ணெய் வகைகள், நெல், தேன், மஞ்சள் தூள், மிளகாய்த்தூள், மசாலாப் பொடிகள் மேற்கூறிய ஆய்வுக் கூடங்களில் பரிசோதனை செய்யப்பட்டு தரமானவற்றிற்கு மட்டும் ''அக்மார்க்'' முத்திரையிட்டு விநியோகிக்கப்படுகின்றன.

தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகம் 1966 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இக்கழகத்தின் முக்கிய நோக்கங்கள்:

(1) வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, மீன்வளம், கோழி வளர்ப்பு போன்றவற்றை நவீன முறையில் வளர்ச்சி பெற உதவும் வகையில் அவை சார்ந்த தொழில்களை ஊக்குவித்தல்.

(2) உணவுப் பொருட்களைப் பதப்படுத்தும் தொழில்களை ஊக்குவித்தல்.

தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம் 1972ஆம் ஆண்டு 220 வட்டார அளவிலான வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு மையங்களும் 12 மாவட்ட அளவிலமைந்த கூட்டுறவு வேளாண்மைப் பணிச் சங்கங்களும் இணைந்த மாநில அளவிலான கூட்டுறவுச் சங்கமாக அமைக்கப்பட்டது.

## தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகம்

1974இல் நிறுவப்பட்ட தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 2 கோடிகள் ஆகும். இது பங்குத் தொகை ஒன்றுக்கு ரூ. 100 வீதம் இரண்டு இலட்சம் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இன்றுவரை இக்கழகத்திற்கு அரசிடமிருந்து வழங்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 27.50 இலட்சங்கள் ஆகும். இக்கழகத்தின் மொத்த நிலங்களின்பரப்பு, 4,051.74 ஏக்கர்கள் ஆகும். 13 மையங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்த நிலங்கள் தஞ்சாவூர்மாவட்டத்தில் உள்ள நீடாமங்கலம், திருத்துறைப்பூண்டி மற்றும் திருவாரூர் வட்டங்களில் அடங்கியுள்ளன.





# இந்திய மருத்துவம்

பண்டைக் காலத்தில் இந்திய முறை மருத்துவம், இந்தியாவில் மிகவும் சிறந்து விளங்கியது. அமைந்துள்ள இடம், காலம், உணவு, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு சிகிச்சை அளித்தால் வேறெந்த முறை மருத்துவத்தையும் விட இம்முறையில் அளிக்கப்பட்ட சிகிச்சையால் நல்ல பயன் கிடைத்துள்ளது என்பதில் ஐயமில்லை.

இந்திய முறை மருத்துவங்களுக்கு ஊக்கமளிப்பதற்காக மாநில அரசு தலைமைச் செயலகத்தில் இந்திய முறை மருத்துவம்-ஹோமியோபதி என்ற தனித் துறையை ஏற்படுத்தியுள்ளது.

இம்முறைகளை ஏற்படுத்தி, மேம்படுத்த அரசு எடுத்துவரும் முயற்சிகள் சுருக்கமாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.—

* மிகக் குறைவான செலவில் கிராம மக்களுக்கு மருத்துவச் சிகிச்சையளிக்க இயலும் வகையில் ஆரம்பச் சுகாதார நிலையங்களில் சித்த மருத்துவப் பிரிவுகளையும், மற்ற இந்திய முறை மருந்தகங்களையும், ஹோமியோபதி மருந்தகங்களையும் விரிவுபடுத்துதல்.

* பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியை மேம்படுத்துவதன் மூலம் சித்த மருத்துவக் கல்வியின் தரத்தை மேம்படுத்துதல்.

* புதிதாக சித்த மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்துதலும், அதன் மூலம் சித்த மருத்துவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தலும்.

* ஆராய்ச்சி வளர்ச்சித் திட்டங்களை ஊக்குவித்தல்.

* மருந்துமூலிகைகள் வளர்ப்பதற்கு ஏற்பாடு செய்தலும், இன்றியமையாத மருந்துப் பொருள்களை உற்பத்தி செய்தலும்.

* உரிய தரத்திற்குக் குறைந்த பயிற்சி நிலையங்களைக் கட்டுப்படுத்துதல்.

* ஆயுர்வேதம், யுனானி, ஹோமியோபதி கல்வித் தரத்தை மேம்படுத்துதல்,

ஐ.ஏ.எஸ். அலுவலர் ஒருவரை இந்திய முறை மருத்துவம் மற்றும் ஹோமியோபதி இயக்குநராக அரசு நியமித்துள்ளது. இந்திய முறை மருத்துவம் மற்றும் ஹோமியோபதியின் விரைவான வளர்ச்சிக்கு அரசு அளித்துள்ள முக்கியத்துவத்தை இது காட்டுகிறது.

## மருத்துவ உதவி

தற்போது பின்வரும் மருத்துவ நிலையங்கள் வாயிலாகச் சித்த முறையில் மருத்துவ உதவியளிக்கப்படுகிறது.

(1) பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியுடன் இணைந்துள்ள 24 படுக்கை வசதிகள் கொண்ட குழந்தைகள் வார்டு உட்பட 232 படுக்கை வசதிகள் கொண்ட சித்த மருத்துவமனை.

(2) சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்துவமனையில் 14 படுக்கை வசதிகள் கொண்ட குழந்தைகள் வார்டு உட்பட 65 படுக்கை வசதிகள் கொண்ட சித்த முறை மருத்துவப் பிரிவு.

(3) 15 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலுள்ள சித்த முறை மருத்துவப்பிரிவுகள்.

(4) வட்ட மருத்துவமனைகளில் 74 சித்த முறைமருத்துவப் பிரிவுகள்.

(5) வட்டத் தலைமையிடமில்லாத இடங்களிலுள்ள 14 சித்தமுறை மருத்துவப் பிரிவுகள்.

(6) ஆரம்பச் சுகாதார நிலையங்களிலுள்ள 220 சித்தமுறை மருத்துவப் பிரிவுகள்.

(7) நெடுந்தொலைவிலுள்ள கிராமங்களில் உள்ள அரசினர் மருந்தகங்கள் 21.

(8) அரசினர் சித்த மருத்துவ மருந்தகங்கள் 8.

ஆரம்பச் சுகாதார நிலையங்களில் அனுமதியளிக்கப்பட்ட 220

## மருத்துவக் கல்வி

பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் பின்வரும் படிப்புகள் நடத்தப்படுகின்றன:—

(1) சித்த மருத்துவத்தில் பி.எஸ்.எம்.எஸ். பட்டப்படிப்பு 5 ஆண்டுகள் — 100 இடங்கள்-(மாணவர்களுக்குத்திங்கள்தோறும் ரூ. 75 உதவித்தொகை 53 மாணவர்களுக்கு அளிக்கப்படுகிறது).

(2) குணபாடம், மருத்துவம் ஆகியவற்றில் எம்.டி. பட்டப்படிப்பு (சித்த மருத்துவம்) —3 ஆண்டுகள் — 21 இடங்கள் - குணபாடத்திற்கு 10 இடங்கள், மருத்துவத்திற்கு 10 இடங்கள்.

இந்திய அரசின் நியமனதாரருக்கு ஒரு இடம் ஒதுக்கப்படுகிறது.

இந்தப் படிப்பிற்குப் பின்வருமாறு உதவித்தொகை அளிக்கப்படுகிறது.

(அ) முறையான பணியிலிருந்து 5 ஆண்டுகள் பணியாற்றியுள்ளவர்களுக்குத் திங்களுக்கு ரூ.650.

(ஆ) முறையான பணியிலிருந்து 5 ஆண்டுகள் பணியாற்றியவர்களுக்குத் திங்களுக்கு ரூ. 500.

(இ) பணியில் இல்லாத மாணவர்களுக்கும், தற்காலிக பணியில் உள்ளவர்களுக்கும்திங்களுக்கு ரூ. 325.

(3) மருந்தாக்கியல் பட்டயப்படிப்பு- 2 ஆண்டுகள். — 50 இடங்கள் (அனைத்து மாணவர்களுக்கும் திங்களுக்கு ரூ. 30 உதவித் தொகை அளிக்கப்படுகிறது).

அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் கல்வியின் தரத்தை மேலும் உயர்த்த வேண்டி குணபாடம், உடல் கூறுகள், உடல் தத்துவம், நோய் நாடல் ஆகிய துறைகளில் 1984-85ஆம் ஆண்டில் 4 பேராசிரியர்களும், 3 இளம் பேராசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சித்த முறை மருத்துவப் பிரிவுகளில் 190 பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. 21 அரசினர் கிராம சித்த மருந்தகங்களில் 8 அரசு கிராம சித்த மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன.



**அறிஞர் அண்ணா இந்தியமுறை மருத்துவமனை:**

இம்மருத்துவமனை மூன்று இந்திய முறை மருத்துவங்களிலும் சிகிச்சையளிக்கிறது. இங்கு சித்த முறை மருத்துவத்திற்காக 65 படுக்கைகளும், ஆயுர்வேத முறை மருத்துவத்திற்காக 55 படுக்கைகளும், யுனானி முறை மருத்துவத்திற்காக 54 படுக்கைகளும் உள்ளன.

ஆயுர்வேதம் மற்றும் சித்த மருத்துவ ஆராய்ச்சி மத்திய மன்றத்தின் ஆதரவில் நிறுவப்பட்ட சித்த மருத்துவச் சிகிச்சை ஆராய்ச்சிப் பிரிவு பாளையங்கோட்டையில் பலவகை நோய்களுக்கான சிகிச்சைகளில் தொடர்ந்து ஆராய்ச்சி செய்து வருகிறது.

அதே மன்றம் பொறுப்பேற்று நடத்தி வரும் மருந்துச் செடிகள் ஆய்வுப் பிரிவு பாளையங்கோட்டையில் செயலாற்றி வருகிறது. பலவகையான மருந்துச் செடிகள் சேகரிக்கப்பட்டு அவை எந்தெந்த வகையைச் சேர்ந்தவை என்று கண்டறியப்படுகின்றன. மரபுவழி மருத்துவத்தில் முறையான ஆராய்ச்சியும் இப்பிரிவில் நடந்து வருகிறது.

அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியிலுள்ள பட்ட மேற்படிப்புத் துறைகள் சித்த மருத்துவத்தில் ஆராய்ச்சி செய்து வருகின்றன. ஆசிரியர்களும், மாணவர்களும் அறிவியல் பத்திரிகைகளில் பல கட்டுரைகளை வெளியிட்டிருக்கின்றனர். சித்த மருத்துவத்தில் ஆராய்ச்சி செய்தமைக்காக பட்ட மேற்படிப்புத்துறை அனைத்திந்திய அளவிலான பல பரிசுகளைப் பெற்றிருக்கிறது.

கல்லூரியில் உள்ள பசுமை ஆராய்ச்சி நிலையத்தில் மிகவும் அரிய மருந்துச் செடிகள் வளர்க்கப்படுகின்றன. மருந்துச் செடிகள் குறித்து ஆராய்ச்சியும் நடந்து வருகிறது.

சென்னையில் சித்த மருத்துவத்திற்காக உள்ள மைய வட்டார ஆராய்ச்சி நிறுவனம் வெவ்வேறு நோய்களுக்கு, குறிப்பாக புற்றுநோய்க்குச் சிகிச்சை அளிப்பதில் ஆராய்ச்சி செய்து வருகிறது.

அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்துவமனையில் நோய்க் குறியியல், உயிர்வேதியல், கதிர்வீச்சியல் துறைகள் சிறந்த முறையில் செயலாற்றி வருகின்றன. இவை, இந்த மருத்துவமனையில் ஆராய்ச்சிப் பணியை விரிவுபடுத்துவதற்கு உறுதுணை புரிகின்றன.

### மருந்துசெய் நிலையம்

சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்துவமனையிலும், பாளையங்கோட்டையிலுள்ள அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியிலும் ஏற்கெனவே இருக்கின்ற மருந்து செய் நிலையங்களில் மருந்துகள் தயாரிப்பு முறையை மேம்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. பாளையங்கோட்டையில் வட்டார மருந்துசெய் நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்துவமனையிலும் பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியிலும் மருந்தாக்கியல் முறையை எந்திரமயமாக்கும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

### மருந்துகள் வழங்குதல்

ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும், மருத்துவமனைகளிலும் உள்ள சித்த மருத்துவப் பிரிகளில் மருந்துகளும், மருந்துப் பொருட்களும் தடையின்றி எப்போதும் கிடைக்கச் செய்ய வேண்டி வழங்குமுறை சீரமைக்கப்பட்டுள்ளது. சாதாரண நோய்களுக்குச்சிகிச்சையளிக்கத்தேவையான பொதுவான மருந்துகள். எல்லா சித்த மருத்துவப் பிரிவுகளுக்கும் வழங்கப்படுகிறது. சிகிச்சை அளிக்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் இந்த மருந்துகள் மொத்தமாக வழங்கப்படுகின்றன. இந்த புதிய நடைமுறை இந்த ஆண்டிலும் தொடரப்படுகிறது.

முத்தமிழ்க் காவலர் டாக்டர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் தலைமையில், தமிழ்நாடு சித்த மருத்துவ வாரியத்தினை அரசு அமைத்துள்ளது.

தமிழ்நாடு சித்த மருத்துவ வாரியத்தில், சித்த மருத்துவக் கல்வி மற்றும் சித்த மருத்துவச் சிகிச்சை முறையின் மேம்பாட்டிற்காக 7 துணைக் குழுக்களை அமைத்துள்ளது. மேற்கண்ட துணைக் குழுக்கள் நிறைவேற்றின தீர்மானங்கள் வாரியத்தின் கூட்டத்தில் வைக்கப்பட்டது. வாரியம் நிறைவேற்றிய தீர்மானங்கள் அரசுக்கும் இந்தியமுறை மருத்துவ ஓமியோபதி இயக்குநருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சில தீர்மானங்கள் மீது அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. சில தீர்மானங்கள் மீது அரசு ஆணை பிறப்பித்துள்ளது. எஞ்சியுள்ள தீர்மானங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

1983-84ஆம் ஆண்டு வரையில் 15 கட்டு ஓலைச்சுவடிகள் எடுத்து எழுதப்பட்டன. 1984-85ல் 13 கட்டு ஓலைச் சுவடிகள் எடுத்து எழுதப்பட்டன.

1983-84ஆம் ஆண்டு வரையில் சித்தமுறை மருததுவப் புத்தகங்கள். பத்து அச்சிடும் பணி ஒப்படைக்கப்பட்டதுடன், 1984-85 சித்த முறை மருத்துவப் புத்தகங்கள் 7 அச்சிடும் பணியும் ஒப்படைக்கப்பட்டது. (மேற்சொன்ன 17 புத்தகங்களில் 2 புத்தகங்கள் அச்சிடப்பட்டன. ஏனைய புத்தகங்களை அச்சிடும் பணி நடந்தேறி வருகிறது)

(1) 1985-86ஆம் ஆண்டில் 5 பாடப்புத்தகங்களும் குறிப்புப் புத்தகங்களும் அச்சிட்டு வெளியிடப்பட்டன.

(2) ஏழு கட்டுகள் கொண்ட ஓலைச் சுவடி நகல் எடுக்கப்பட்டு அச்சிடுவதற்காக ஒப்படைக்கப்படும்.

1979-80ல் இது தொடர்பாக, தமிழ்நாடு அரசானது, தங்களுக்குச் சொந்தமாக மூலிகைகளைப் பயிரிட்டு வளர்க்கவும், காடுபடு பொருள்களிலிருந்து கிடைக்கும் மூலிகைப் பொருள்களைப் பயன்படுத்தவும் மருத்துவமனைகளுக்குத்தேவைப்படும் மருந்துப் பொருள்களைத் தாங்களே தயாரிக்கவும், மூலிகை மருந்துப் பொருள்களின் தரத்தை நிலைப்படுத்தவும், உபரி மருந்துப் பொருள்களின் தரத்தை நிலைப்படுத்தவும் உபரி மருந்துப் பொருள்களை ஏற்றுமதி செய்யவும் வேண்டி, மருந்துச்செடிகள் பண்ணை மற்றும் மூலிகை மருந்துகள் கழகம் ஒன்றை ஏற்படுத்துவதன் அவசியத்தை உணர்ந்தது.

மேற்சொன்னவற்றின் அடிப்படையில், ''தமிழ்நாடு மருந்துச் செடிகள் பண்ணை மற்றும் மூலிகை மருந்துகள் கழகம்'' என்கிற தனி அதிகாரமுள்ள கழகத்தைத் தமிழ்நாடு அரசு 1983 பிப்ரவரி மாதத்தில் உருவாக்கியது. 27.9.1983ஆம் நாளிலிருந்து இது செயல்படத் தொடங்கியது. மேற்சொன்ன கழகத்தின் தலைமையிட அலுவலகமானது முதலில் பாளையங்கோட்டையில் இருந்தது. அது. சென்னைக்கு மாற்றப்பட்டது.

மத்திய அரசு பொறுப்பேற்கும் பின்வரும் இரு திட்டங்கள் 1984-85 ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டுவருகின்றன.

(1) சென்னை அறிஞர் அண்ணா அரசு இந்தியமுறை மருத்துவமனையுடன் இணைக்கப்பட்டுள்ள மருந்து செய்நிலையம் மேம்படுத்தப்படுவதோடு சாதனங்களும், இயந்திரங்களும் வாங்கப்பட்டு வருகின்றன. 5 ஆண்டுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூபாய் 8 இலட்சமாகும். இத்தொகை, நடப்பு நிதியாண்டிற்குள் செலவிடப்படும்.

(2) சித்தமுறை மருத்துவப் பட்ட மேற்படிப்பு, ஆராய்ச்சிக் கல்வி பாளையங்கோட்டை அரசு சித்தமுறை மருத்துவக் கல்லூரியில் பயிற்றுவிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பட்ட மேற்படிப்பு மாணவர் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 200 படிப்பு உதவித் தொகை மத்திய அரசால் வழங்கப்படுகிறது.

சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்துவமனையில் 54 படுக்கை வசதிகள் கொண்ட யுனானிப் பிரிவில் யுனானி முறையில் மருத்துவ உதவி அளிக்கப்படுகிறது.

7½ ஆண்டுக்கால அளவிலான யுனானி மருத்துவப் பட்டப் படிப்பு (2 ஆண்டு புகுமுக யுனானி படிப்பு உட்பட) தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. இப்பட்டப் படிப்பிற்குச் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 16ஆகும்.



யுனானி ஆராய்ச்சி மத்திய கழகம் நடத்தும் மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவு, அறிஞர் அண்ணா அரசினர் இந்தியமுறை மருத்துவமனையில் (சென்னை) இயங்கி வருகிறது.

கீழ்க்காணும் இடங்களில் ஹோமியோபதி மருத்துவச் சிகிச்சை அளிக்கப்படுகிறது:—

(1) திருமங்கலம், அரசினர் ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த 25படுக்கைகள் கொண்ட மருத்துவமனை.

(2) மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில், 15 ஹோமியோபதி மருந்தகங்கள்.

(3) சென்னை மாநகரில் அரசினர் ஹோமியோபதி மருந்தகங்கள்-2.



# போக்குவரத்தில் புதிய சாதனைகள்



தமிழ் நாட்டில் தற்பொழுது நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட பன்னிரண்டு போக்குவரத்துக் கழகங்கள் இயங்கி வருகின்றன.

சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்து புதிய போக்குவரத்துக் கழகம் 'தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம்' என்ற பெயருடன் திருச்சியைத் தலைமையாகக் கொண்டு, திருச்சி மாவட்டத்தில் 1.4.1985 முதல் தனியாக இயங்க ஏற்பாடாகியுள்ளது. 'சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகம்' தஞ்சை மாவட்டத்தில் இயங்கும்.

நமது போக்குவரத்துக் கழகங்களில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம், அகில இந்திய ரீதியில், உற்பத்தித் திறனுக்காக இவ்வாண்டு பரிசு பெற்றுள்ளது. பேருந்துகளை உபயோகிப்பதிலும், மாநகரப் பேருந்துப் பணிகளைச் செம்மையாக இயக்குவதிலும், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகமும், பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகமும் அகில இந்திய ரீதியில் பரிசுகள் பெற்றிருக்கின்றன. மத்திய திட்டக்கமிஷனும் தமிழ்நாடு போக்குவரத்துக் கழகங்கள் இந்தியாவிலுள்ள சிறந்த போக்குவரத்துக் கழகங்களில் ஒன்றாகும் என அறிவித்திருக்கிறது.

1984ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாளன்று உள்ளவாறு நமது பன்னிரண்டு போக்குவரத்துக் கழகங்கள், இந்த மாநிலத்தில் மொத்தம் உள்ள 14,140 பேருந்துகளில், 8,994 பேருந்துகளை இயக்கின. பொதுத் துறையில் 63.6 சதவீதம் பேருந்துகள் இயக்கப்பட்டன. அவை நாள்தோறும் சுமார் 23 இலட்சம் கிலோ மீட்டரில் சுமார் 89 இலட்சம் பயணிகளை ஏற்றிச் செல்கின்றன. இந்த நிதியாண்டில் (1984-85) 1985 சனவரி இறுதி வரை, மொத்தம் சுமார் 35 கோடி ரூபாய் செலவில் 1,159 புதிய பேருந்துகளை வழித் தடங்களில் விட்டுள்ளன. இவற்றில் 712 பேருந்துகள் பழையபேருந்துகளுக்குப் பதிலாக விடப்பட்டுள்ளன.

ஏற்கெனவே உள்ள வழித்தடப் பேருந்துகளுடன், கூடுதலாக 447 பேருந்துகள் புதிய வழித் தடங்களில் விடப்பட்டுள்ளன. சுமார் 11 இலட்சம் மக்கள் வாழும் 1,157 கிராமங்களில் இதுவரை பேருந்து வசதி இல்லாமலிருந்தது. இப் பேருந்துகள் புதிதாக மேற்படி கிராமங்களுக்கு விடப்பட்டன. கிராமப் பகுதிகளில் தொலை தூர இடங்களுக்கு 320 சிறிய பேருந்துகளையும் குறுஞ்சக்கர அடிப்பகுதிகொண்ட பேருந்துகளையும் ( short wheel base buses ) இக்கழகங்கள் இயக்குகின்றன. இப்புதிய வழித் தடங்களில் பேருந்துகள் விடுவதனால் போக்குவரத்துக் கழகங்களுக்கு விரயம் ஏற்பட்ட போதிலும், கிராமப் பகுதிகளில் உள்ள மக்களுக்குச் சேவை செய்யவேண்டும் என்ற பொதுநோக்கத்துடன் அவை இவற்றை நடத்தி வருகின்றன. கிராமமக்கள் காய்கறி, உணவுத் தானியங்கள், பால் போன்ற விற்பனை செய்யத்தக்க பொருட்களை எடுத்துச் செல்ல உதவும் பொருட்டு 11 அங்காடிப் பேருந்துகளை விட்டுள்ளன.

**போக்குவரத்து இனத்திற்கு கடனுதவி :**

போக்குவரத்துக் கழகங்கள் அவைகளுக்குத் தேவையான நிதியில் ஒரு பகுதியைப் பேருந்துகளை திறம்பட இயக்கியும், சிக்கனத்தைக் கடைப் பிடித்தும் ஈடுகட்டுகின்றன. தமிழக அரசு போக்குவரத்துத்துறையின் கீழ் போக்குவரத்து வளர்ச்சி நிறுவனம் அமைக்கப்பட்டிருக்கிறது. இந் நிறுவனம் பொது மக்களிடமிருந்துவைப்பு நிதியாகப்பெற்று அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவையான நிதியை அளித்து வருகிறது. இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டும் தான் இது போன்ற நிறுவனம் போக்குவரத்து பொதுத்துறையில் இயங்கி வருகிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளில், சுமார் 1,500க்கும் மேற்பட்ட பேருந்து நிழற்குடைகள் நடப்பட்டு உள்ளன.

சென்னையிலிருந்து திருவனந்தபுரம், பெங்களூர், கன்னியாகுமரி ஆகிய இடங்களுக்குச் சீர்வளிப் பேருந்துகள் 6 விடப்படுகின்றன. அப் பேருந்துகளில் வீடியோ கேசட் படங்களும் காட்டப்படுகின்றன. இவை தவிர, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் 112 சொகுசுப் பேருந்துகளை (சீர்வளி வசதி அமைக்கப்படாதவை) விட்டுள்ளது. சென்னைக்கும் ஈரோடுக்கும் நடுவே தூங்கும் வசதி கொண்ட இரு சீர்வளிப் பேருந்துகளை ஓடவிட்டுள்ளது.



| | கழகத்தின் பெயர். | செயல்படத் தொடங்கிய நாள். | செயல்படும் முதன்மைப் பகுதி. | பேருந்துகளின் எண்ணிக்கை (31-1-1985 அன்று உள்ளவாறு). |
|---|---|---|---|---|
| 1 | பல்லவன் போக்குவரத்துக் கழகம், சென்னை. | 1-1-1972 | சென்னைப் பெருநகர்ப் பகுதி | 2,080 |
| 2 | பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம், வேலூர் | 1.12.1982 | வட ஆர்க்காடு மாவட்டம், செங்கல்பட்டு மாவட்டத்தின் வடக்குப்பகுதி | 600 |
| 3 | பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகம் மதுரை. | 17-1-1972 | மதுரை, காமராசர் மாவட்டங்கள் | 954 |
| 4 | மருது பாண்டியன் போக்குவரத்துக் கழகம், காரைக்குடி | 1-4-1983 | புதுக்கோட்டை, இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டங்கள். | 425 |
| 5 | சேரன் போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர். | 1-3-1972 | கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்கள் | 962 |
| 6 | ஜீவா போக்குவரத்துக் கழகம், ஈரோடு. | 1-4-1983 | பெரியார் மாவட்டம் | 378 |
| 7 | சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகம், கும்பகோணம். | 1-3-1972 | தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்கள் | 884 |
| 8 | அண்ணா போக்குவரத்துக் கழகம், சேலம். | 15-2-1973 | சேலம், தருமபுரி மாவட்டங்கள் | 730 |
| 9 | கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி. | 1-1-1974 | திருநெல்வேலி மாவட்டம் | 505 |
| 10 | நேசமணி போக்குவரத்துக் கழகம், நாகர்கோவில். | 1-4-1983 | கன்னியாகுமரி மாவட்டம் | 388 |
| 11 | தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம். | 16-1-1975 | தென்னார்க்காடு மாவட்டம், செங்கல்பட்டு மாவட்டத்தின் தெற்குப் பகுதி | 564 |
| 12 | திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம், சென்னை. | 1-4-1980 | தமிழகம் மற்றும் பிறமாநிலங்களுக்கும் விரைவுப் பேருந்துகள். | 556 |
| | | | மொத்தம் ... | 9,026 |



**சமூக நல ஏற்பாடுகள்**

அரசுப் போக்குவரத்து நிறுவனங்களின் பேருந்துகளில், புற்று நோயாளிகள் சிகிச்சை பெறுவதற்காகச் செல்கையில், அவர்கள் சலுகைக் கட்டணத்தில் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். பிற இடங்களில் அவர்கள் மருத்துவமனை, பணிக்களரி, பள்ளிகள் ஆகியவற்றிற்குப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். சென்னை மாநகரில் உடல் ஊனமுற்ற குழந்தைகள் தங்களது இருப்பிடத்திலிருந்து பள்ளி, மருத்துவமனை ஆகியவற்றிற்குப் பேருந்துகளில் இலவசமாகச் சென்று திரும்ப பேருந்து அனுமதிச் சீட்டுக்கள் அளிக்கப்படுகின்றன.

பள்ளி, கல்லூரி மாணவர்கள் கழகப் பேருந்துகளில் சலுகைக் கட்டண வீதங்களில் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். நெரிசல் நேரங்களில் பள்ளி செல்லும் குழந்தைகள், பள்ளிக்குச் செல்லும் மகளிர் ஆகியோரின் தேவைகளை நிறைவு செய்யும் நோக்கத்துடன் மாநகரங்களில் ''மகளிர், குழந்தைகள் மட்டும்'' பேருந்துகள் கணிசமான அளவிற்கு விடப்பட்டுள்ளன.

கழகப் பேருந்துகளில் பத்திரிகை நிருபர்கள் சில நிபந்தனைகளின் பேரில் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர். தற்போது அவர்களது கணவர்-மனைவிக்கு இச் சலுகை (அவர்களிருவரும் சேர்ந்து பயணம் செய்யும் போது) நீடிக்கப் பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் போக்குவரத்துக் கழகங்கள் மூலம் நெடுஞ்சாலை ஓரத்தில் சுமார் 60 இடங்களில் சாலையோர விடுதிகள் கட்டுவதற்கு ஏற்பாடாகி வருகின்றது. இச் சாலையோர விடுதிகளில் நெடுஞ்சாலையில் பயணம் செய்யும் அனைவருக்கும் அவர்களது வாகனங்களை நிறுத்தி வைக்கவும், சிறிது இளைப்பாறவும் வசதிகள் செய்து தரப்படும்.

நாட்டிற்குத் தேவையான, போக்குவரத்துப் பொறியியல் துறையில் தேர்ச்சிபெற்றவர்கள் கிடைக்குமாறு செய்வதற்கு அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களும் ஒன்று சேர்ந்து 'சாலை மற்றும் போக்குவரத்துப் பொறியியல் நிறுவனம், தமிழ்நாடு' என்ற ஒரு அமைப்பை ஈரோடில் அமைத்திருக்கின்றன. இந்தியாவிலேயே முதன் முதலாகத் துவக்கப்பட்ட இத் தனித்தன்மை



வாய்ந்த கல்லூரி நாட்டில் இதர பொறியியல் கல்லூரிகளில் இல்லாத துறைகளில் பட்டம் வாங்குவதற்குக் கல்வி புகட்டும். இதற்காக ஆகும் மொத்த மூலதனச் செலவான ரூபாய் 5 கோடியையும் போக்குவரத்துக் கழகங்கள் தங்களின் உபரி நிதியிலிருந்தே ஈடுகட்டும். சுமார் 60,000க்கும் மேற்பட்ட போக்குவரத்துத் தொழிலாளர்கள் தாங்களாகவே முன் வந்து திருப்தியளிக்கக் கூடிய வைப்பு நிதியிலிருந்து கிடைக்கப் பெறும் வட்டியின் மூலம் இந் நிறுவனத்தை இயக்குவதற்காக ஆகும் அன்றாடச் செலவில் ஒரு பகுதியை ஈடுகட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**தொழிலாளர் நல நடவடிக்கைகள்:**

தங்கள் பணியாளர்களின் நலத்தில் போக்குவரத்துக் கழகங்கள் தொடர்ந்து நாட்டம் செலுத்தி வருகின்றன.

அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் உள்ள அனைத்துப் பிரிவு பணியாளர்களையும் உள்ளிட்டசெயலூக்கத் திட்டங்கள் தொடர்ந்து நடைமுறையில் உள்ளன. இத் திட்டங்களினால் போக்குவரத்துக் கழகங்களில் கூடுதல் உற்பத்தித் திறனால் வருவாய் அதிகரிக்கும் பொழுது, அதில் பணியாளர்களும் பங்கு பெற்று வருகின்றனர்.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் அறுவைச் சிகிச்சை செய்துகொள்வதற்கு ஊழியருக்குத் தனித் தற்செயல் விடுப்பு அளிக்கப்பட்டு வருகிறது. ஊழியரின் மனைவியோ, கணவரோ சிகிச்சை பெற்றாலும் இவ்விடுப்பு அளிக்கப்பட்டு வருகிறது. ஊக்கத் தொகையும் ரூ.200 லிருந்து ரூ.400 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது.

பணியிலிருக்கும் தொழிலாளர் ஒருவர் இறந்து விட்டால் அவருடைய ஈமக் கடன்களுக்காக ரூ.150 உடனடியாக மானியம் அளிக்கப்பட்டு வருகிறது. அவருடைய குடும்பத்திற்கு உதவி அளிக்கும் பொருட்டு இறந்தவருடைய ஆதரவில் இருக்கும் ஒருவருக்கு, வேலை வாய்ப்பு அலுவலகத்தைக் கேட்காமலேயே போக்குவரத்துக் கழகத்தில் அவரது தகுதியைப் பொறுத்து வேலை வாய்ப்பு அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது. ஊழியர் பணி செய்து கொண்டிருக்கும் பொழுது பிறரின் வன்முறைச் செயலால் இறந்து விட்டால், அவரது வாரிசுக்கு ரூ. 5,000 உதவித் தொகை அளிக்கப்பட்டு வருகிறது. பணிக்காலத்தில் ஏலாமையுற்ற பணியாளர்கள் பொருத்தமானதொரு பணியில், புதிதாக நியமனம் செய்யப்படுவது போலவே தொடர்ந்து பணிபுரிய அனுமதிக்கப்படுகிறார்கள். முச்சக்கர வண்டி வாங்குவதற்காக, 50 சதவீதம் உதவித் தொகையும், 50 சதவீதம் குறைந்த வட்டிக்கு நீண்ட காலத் தவணையில் கடனாக உடல் ஊனமுற்ற பணியாளர்களுக்கு வழங்கப்படுகிறது. பணியாளர்களது ஊனமுற்ற குழந்தைகளுக்கும் மூன்று சக்கர வண்டிகள் அளிக்க ஏற்பாடாகியிருக்கிறது.

**படிப்புக்குப் பரிசு**

கழகங்கள் தொழிலாளர்களின் குழந்தைகளுக்குத் தேவையான புத்தகங்கள், குறிப்பேடுகள் எழுது பலகைகள் முதலியன வாங்க நிதியுதவி அளித்து வருகின்றன. தொழிலாளரின் பிள்ளைகள் பள்ளி இறுதித் தேர்வில் மாவட்டத்தில் முதலாவதாகத் தேறியிருப்பார்களாயின் அவர்களுடைய உயர் கல்விக்காகும் செலவில் ஒரு பகுதியை அனைத்துக் கழகங்களும் ஏற்று வருகிறது. பத்து, பன்னிரண்டாவது வகுப்பு இறுதித் தேர்வில் ஒவ்வொரு கழகத்திலுள்ள ஊழியர் குழந்தைகளில் முதல் மூவருக்கு ரூ.500 முதல் ரூ.1,500 வரை ரொக்கப் பரிசு அளிக்கப்பட்டு வருகிறது. எழுபது சதவீத மதிப்பெண்களுக்கு மேல் வாங்கிய குழந்தைகளுக்கு ஆறுதல் பரிசுகளும் அளிக்கப்பட்டு வருகின்றன.

நமது போக்குவரத்துக் கழகங்கள் ஊழியர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தைத் தொடங்கியிருக்கின்றன. ஹட்கோ நிறுவனத்திடமிருந்தோ அல்லது தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதிக்கழகத்திடமிருந்தோ அவர்கள் கடன் வாங்குவதற்கு உதவி செய்து, வீடுகளையும் அவர்கள் சார்பில் கட்டி முடிப்பதற்குக் கழகங்கள் உதவி செய்கின்றன.



# தமிழகத்தில் வேகமான தொழில் வளர்ச்சி



**த**மிழ்நாடு தொழில் வளர்ச்சியில் பின் தங்கி, இந்திய மாநிலங்களில் 13 அல்லது 14வது இடத்துக்குப் போய்விட்டது என்று சிலர் கூறும் குற்றச்சாட்டு சரியா? புள்ளி விவரங்களின்படி அது உண்மையா?

1978-79 ஆம் ஆண்டு தொழில் சர்வே படி, தொழில் உற்பத்தியில் இந்தியாவில் கூடுதலாக ஏற்பட்ட மொத்த மதிப்பில் 82.5 சதவிகிதத்தை 9 பெரிய மாநிலங்கள் சாதித்திருந்தன. இதில் தமிழ்நாடும் ஒன்று. தமிழ்நாடு 10 சதவிகிதம் பங்கினைப் பெற்று 3வது இடத்தைப் பெற்றிருந்தது. அதற்கு முந்திய ஆண்டிலும் (1977-78) தமிழ்நாடு 3வது இடத்தைப் பெற்றிருந்தது.

தொழிலாளர்களில் 10 சதவிகிதமும், மொத்த இடுபொருளில் 10.8 சதவிகிதமும், மொத்த உற்பத்தியில் 10.6 சதவிகிதமும், உற்பத்தி மூலம் கூடுதலாக உருவாக்கப்பட்ட மதிப்பில் 10 சதவிகிதமும் பெற்று 1978-79லும் 3வது இடம் பெற்றிருந்தது தமிழ்நாடு.



1970ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகவும் 100 புள்ளிகளை அடிப்படைப் புள்ளிகளாகவும் கொண்டு தொழில் உற்பத்திக் குறியீட்டு எண்களை அதிகாரபூர்வமாக வெளியிட்டுள்ளார்கள். அதன்படி 1977ல் தொழில் உற்பத்திக் குறியீட்டு எண் அகில இந்தியாவிற்கும் 138.3 புள்ளிகளாகும். தமிழ்நாட்டிற்கு 143.1 புள்ளிகளாகும். 1982ல் இது அகில இந்தியாவிற்கும் 172 புள்ளிகளாகவும், தமிழ்நாட்டிற்கு 213.3 புள்ளிகளாகவும் உயர்ந்தது. அகில இந்தியாவைவிட தமிழ்நாடு தொடர்ச்சியாக அதிகத் தொழில் வளர்ச்சி விகிதத்தைப் பெற்று, தொழில் துறையில் அகில இந்திய சராசரியையும், இந்தியாவிலுள்ள பெரும்பாலான மாநிலங்களையும் விட. மிக வேகமாக முன்னேறி வருகிறது என்பதையே இந்தப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

தமிழ்நாட்டில் மத்திய அரசு செய்யும் தொழில் முதலீடு மட்டும் குறைவாக இல்லாமல் இருந்திருந்தால், தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி வேகம் இன்னும் அதிகமாக இருந்திருக்கும் என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். கடந்த 10ஆண்டுகளைப் பின் நோக்கிப் பார்க்கின்ற பொழுது, தமிழ்நாட்டில் மத்திய முதலீடு குறைவே. இந்தப் பிராந்திய ஏற்றத்தாழ்வைச் சீக்கிரமே சரி செய்யுமாறு மாநில அரசு இப்பொழுது மத்திய அரசை அக்கறையுடன் வற்புறுத்தி வருகிறது.

தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்படும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை தமிழ்நாட்டில் அதிகரித்து வருகிறது. 1970ல் 6,215 ஆக இருந்தது. 1976-77ல் 8,570 ஆகவும், 1979-80ல் 9,743 ஆகவும் 1983- டிசம்பர் 31ல் 11,920 ஆகவும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது.



தொழிற்சாலைகளுக்குப் பயன்படுத்தப்படும் மின்சார உபயோகம் 1976-77ல் 305.1 கோடி யூனிட் ஆக இருந்தது, 1981-82ல் 450.1 கோடி யூனிட் ஆக உயர்ந்துள்ளது.

ஏற்கெனவே உள்ள தொழிற்பிரிவுகளை விரிவாக்குவதற்கும், புதிய தொழிற்பிரிவுகளை உருவாக்குவதற்கும் மத்திய அரசு முதலீட்டுக்காக வழங்குகின்ற மானியத்தொகையைப் பெற்றுக்கொள்ளுவதில் இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களிலும் தமிழ்நாடே முதல் இடம் வகித்து வருகிறது.

1977-84க்கும் இடையில் 600 பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்கள் தமிழ்நாட்டில் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சிறு ரகத் தொழிற் பிரிவுகளைப் பொறுத்த அளவில் 1978ல் 18,789 ஆக இருந்த எண்ணிக்கை 1984 மார்ச் இறுதியில் 49,920 ஆகவும், 1985 மார்ச் இறுதியில் 60,259 ஆகவும் உயர்ந்தது. 1978க்கும் 1985க்கும் இடைப்பட்ட இந்த 7 ஆண்டுக் காலத்தில் 300 சதவிகிதத்திற்கும் அதிகமான வளர்ச்சியை இது காட்டுகிறது.

1977க்கு முன்னால் மாநிலத் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் (சிப்காட்) சார்பில் தொழில் தொகுதிகள் இரண்டுதான் இருந்தன. இப்பொழுது கும்மிடிப்பூண்டி, தூத்துக்குடி, கடலூர், புதுக்கோட்டை, மானாமதுரை ஆகிய இடங்களில் தலா ஒன்று வீதம் ஐந்து தொழில் தொகுதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

தொழிற்சாலைகள் இல்லாத மாவட்டமே தமிழ்நாட்டில் இல்லை. மற்ற மாநிலங்கள் சிறு மாவட்டங்களைக் கொண்டிருக்க பெரிய மாவட்டங்களைக் கொண்ட தமிழ்நாடு இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு அரசு இதனை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து ''தொழிற்சாலை இல்லாத பகுதி'' என்று ஒரு பகுதியை அறிவிப்பதற்கு மாவட்டத்தை அடிப்படையாகக் கொள்வதை விட ஒரு வட்டத்தையோ அல்லது ஒரு வட்டாரத்தையோ அடிப்படையாகக் கொள்வது நாடு முழுவதுக்கும் சீராக இருக்குமென்று யோசனை கூறி இவ்வாறு அறிவிக்கும்படி தமிழ்நாடு அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. சிறு ரகத் தொழில்களுக்குக் கொண்டுவரப்பட்ட ''ஒற்றைப் பரிசீலனைப் பகுப்பு முறை'' (Single window concept) அண்மையில் நடுத்தர மற்றும் பெரு ரகத் தொழில்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது.



அதிகார வர்க்கத்தால் உண்டாக்கப்படும் நிர்வாக நடைமுறைத் தாமதங்களால் தொழில்கள் விரைவாக உண்டாக்கப்படுவதில் குந்தகங்கள் ஏற்படுகின்றன என்று இன்னமும் குறை சொல்லப்படுகிறது. ஒற்றைப் பரிசீலனைப் பகுப்பு முறையை மேலும் வேகப்படுத்த இப்பொழுது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**நன்றி : ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' (13-6-85).**

# சென்னைப் பால்வளம்!



தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் சார்பில், சென்னை மாநகரின் பல்வேறு பகுதிகளில் அண்மையில் (17-6-85) ஒரே நாளில் ஒன்பது தானியங்கிப் பால் நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டன.

அன்று மாலை 4 மணியளவில் தொடங்கி, 7 மணி வரை மாண்புமிகு தொழிலாளர் நலம் மற்றும் பால்வளத் துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில் இந்தத் திறப்பு விழாக்கள் வரிசையுறத் தொடர்ந்தன.

சேத்துப்பட்டு ஸ்பர்டாங்க் சாலையில் தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத் தலைவர் திருமதி கே. ஆர். ஆர். கல்யாணி ராமசாமி அவர்களும்- புரசைவாக்கம் லெட்டாங்ஸ் சாலையில் குடிசைப்பகுதி மாற்று வாரியத் தலைவர் திரு என்.வி. என். செல்வம் அவர்களும்-வேப்பேரி ஈ.வெ.கி. சம்பத் சாலையில் தமிழ்நாடுப் பாடநூல் நிறுவன மேலாண்மை இயக்குநர் திருமதி ஈ.வெ.கி, சுலோசனா சம்பத் அவர்களும்- மேற்கு அண்ணா நகரில் உள்ள டி. எஸ்.கிருஷ்ணா நகரில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு. திருப்பூர் வி. ஆர். மணிமாறன் அவர்களும் - அண்ணா நகர் ஆறாவது செக்டாரில் தமிழ்நாடு குழாய்க் கிணறு வாரியத் தலைவர் திரு ஜே. சி. டி. பிரபாகரன் அவர்களும் - தியாகராய நகர் முத்துரங்கம் சாலையில் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கே. சௌரிராஜன் அவர்களும்- தியாகராய நகர் பாண்டிபஜாரில் சட்டமேலவை உறுப்பினர் திரு பா. அங்கமுத்து அவர்களும் - சாஸ்திரிநகர் மாநகராட்சி விளையாட்டுத் திடலருகே சட்டப்பேரவை உறுப்பினர் திருமதி பா. வளர்மதி அவர்களும் — கோட்டூர்புரம் வீட்டு வசதி வாரியக் குடியிருப்பில், தொகுதிச் சட்டப்பேரவை உறுப்பினர் திரு சைதை சா. துரைசாமி அவர்களும் புதிய தானியங்கிப் பால் நிலையங்களைத் திறந்து வைத்தார்கள்.



இறுதியாக - கோட்டூர்புரம் வீட்டு வசதி வாரியக் குடியிருப்பில் இது தொடர்பான விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஜி.கே.எஸ். குழுவினரின் இன்னிசைக் கச்சேரியோடு தொடங்கிய இவ்விழாவிற்கு மாண்புமிகு தொழிலாளர் நலம் மற்றும் பால் வளத்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமை தாங்கினார்.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணைய நிர்வாக இயக்குநர் திரு வே. சங்கர சுப்பையன் இ.ஆ.ப. வரவேற்புரையாற்றினார்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு எச். வி. ஹண்டே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சு.முத்துசாமி, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத் தலைவர் திரு க. கலைமணி, சென்னை செங்கற்பட்டு மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத் தலைவர் திரு காஞ்சி பன்னீர்செல்வம் மற்றும் புதிய தானியங்கி பால் நிலையத் திறப்பாளர்களும் இவ்விழாவில் உரையாற்றிச் சிறப்பித்தார்கள்.

விழா முடிவில், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையப் பொது மேலாளர் திரு எம். எச். ஜலால் இ.ஆ.ப. நன்றி கூறினார்.

இந்தப் புதிய தானியங்கிப் பால் நிலையங்கள் ஒன்பதோடு- சென்னை மாநகரில் மொத்தம் உள்ளவை நாற்பதாகும்.

—'ராஜு'



LINTAS-L75-7317 TM
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு



# உணவில் உன்னத நிலை!

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் நியாய விலைக் கடைகளைக் கூட்டுறவுச் சங்கங்களும் அரசுக்குச்சொந்தமான தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகமும்தான் நடத்தி வருகின்றன என்பதையும், தனியார் வியாபாரிகளிடம் பொது விநியோகத் திட்டம் ஒப்படைக்கப்படவில்லை என்பதையும் நாமறிவோம்.

மொத்தத்தில் 64 நியாய விலைக்கடைகளைத்தான் மலைத் தோட்டங்கள், தொழிற்சாலைகள் போன்ற அமைப்புகள் நடத்தி வருகின்றன. இந்த ஆண்டின் தொடக்கத்தில் தமிழ்நாட்டில் மொத்தம் 18,009 நியாயவிலைக் கடைகள் இருந்தன. அவற்றில் 12,905 கடைகளைக் கூட்டுறவுச் சங்கங்களும், 5,036 கடைகளை தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகமும், 68 கடைகளை மலைத்தோட்டங்களும், தொழிற்சாலைகளும் மற்ற அமைப்புகளும் நடத்தி வந்தன. மாநிலம் முழுவதும் 118.88 இலட்சம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு இவற்றின் மூலம் அத்தியாவசியப் பண்டங்கள் நுகர்வோருக்கு வழங்கப்பட்டு வந்தன.

தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் மொத்த வியாபாரத்தைக் கவனித்துக் கொள்வதுடன் தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், திருநெல்வேலி மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் சில்லறை வியாபாரத்தையும் கவனித்துக் கொள்கிறது.

1984ஆம் ஆண்டு பொது விநியோக முறையினை விரிவுபடுத்தவும், அதன் உள்ளமைப்பினை வலுவாக்கவும், ஆயிரம் குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ள நியாயவிலைக் கடைகள் அனைத்தையும் இரண்டாகப் பிரிக்கலாம் என்ற மற்றொரு முக்கிய திட்டத்தினை அரசு செயல்படுத்தியது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த தினமான 15-9-1984 அன்று இக்கடைகள் பிரிக்கப்படும் என அறிவித்தார். இந்த அறிவிப்பிற்கிணங்க கூட்டுறவுச் சங்கங்கள் 2,714 புதிய நியாய விலைக் கடைகளைத் திறந்தன. இதனால் அத்தியாவசியப் பண்டங்களைப் பெற நியாய விலைக் கடைகளின் முன் காத்திருந்த மக்களின் கூட்டம் பெருமளவில் குறைந்துள்ளது. தற்போது தமிழ்நாட்டில் 20,723 நியாய விலைக் கடைகள் உள்ளன.

நியாய விலைக் கடைகள் முன் பெருமளவில் கூட்டம் சேர்வதைத் தடுப்பதற்காகவும், நுகர்வோர் சிரமமின்றி பண்டங்களை வாங்குவதற்காகவும் சென்னை நகரத்தில் குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட குடும்ப அட்டைகளுக்கு இன்றியமையாப் பொருட்களை வழங்கும் திட்டத்தை அரசு 1983ல் செயல்படுத்தியது.

இந்த ஆண்டு அரசு கொணர்ந்த மற்றொரு முக்கிய திட்டம் பொது விநியோக முறையில் வழங்கப்படும் அரிசியின் அளவினை அதிகப்படுத்தியது ஆகும். சென்ற இரண்டு ஆண்டுகளாக அரிசி பற்றாக்குறை நிலை இருந்து வந்ததால் ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் 12 கிலோ அரிசி தான் உச்ச அளவாக வழங்கப்பட்டு வந்தது. ஆனால் 1984ஆம் ஆண்டு அரிசி உற்பத்தி கூடியுள்ளதால், இந்த உச்ச அளவு 20 கிலோவாக உயர்த்தப்பட்டுள்ளது.

பொது விநியோக முறையினையே நம்பியுள்ள ஏராளமான பாமர ஏழை மக்கள் இத்திட்டத்தால் பயன் அடைந்துள்ளனர். எனினும், பொது விநியோக முறையில் அரிசி குறைந்த விலையில் விற்கப்படுவதால், மாத வருமானம் 1,000 ரூபாய்க்கு குறைவாக உள்ளவர்களே அரிசி பெறத் தகுதியானவர்கள் என்று நிர்ணயித்துள்ளது.

தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 118.88 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களில் 113.40 இலட்சம் குடும்ப அட்டைதாரர்கள் மாதமொன்றுக்கு 1,000 ரூபாய்க்கு குறைவான வருமானம் பெறுபவர்களாக உள்ளனர். இந்த வருமான அடிப்படையிலான திட்டம் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்கள் பெருமளவில் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் செயல்படுத்தப்பட்டுள்ளதாகும்.

ஏப்ரல் 1984 முதல் மார்ச் 1985 வரையிலான காலத்தில், தமிழ்நாட்டில் பொது விநியோக முறையின் கீழ் 7,32,391 டன்கள் அரிசி விநியோகம் செய்யப்பட்டது.

மாதமொன்றுக்கு உச்ச அளவான 20 கிலோ அரிசியினைப் பெறுவோருக்கு 1 கிலோ அரிசி இலவசமாக வழங்கும் திட்டமொன்றையும் அரசு நடைமுறைப்படுத்தியுள்ளது. இத்திட்டம் பொது விநியோகம்

ஒன்றையே நம்பியுள்ள நலிந்த பிரிவினரின் பொருளாதாரப் பிரச்சினையைத் தணிப்பதற்காக நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

பொது விநியோக முறையின் கீழ் சாதாரண ரக அரிசி கிலோ 1.75 ரூபாய் என்ற குறைந்த விலையிலும் சன்ன ரகம் கிலோ 2.00 ரூபாய் என்ற குறைந்த விலையிலும், மிகச் சன்ன ரகம் கிலோ 2.15 ரூபாய் என்ற குறைந்த விலையிலும் விற்கப்படுகிறது. இவ்வாறு குறைந்த விலையில் அரிசி விற்பதால் அரசுக்கு சாதாரண ரகத்தில் கிலோ ஒன்றுக்கு 1.35 ரூபாயும் சன்ன ரகத்தில் கிலோ ஒன்றுக்கு 1.09 ரூபாயும் மிகச் சன்ன ரகத்தில் கிலோ ஒன்றுக்கு 60 பைசாவும் நஷ்டம் ஏற்படுகிறது.

மலைப் பிரதேசங்களைத் தவிர மற்றப் பகுதிகளில் குடும்ப அட்டைகளுக்கு மாதமொன்றுக்கு 20 கிலோ வரை கோதுமை வழங்கப்படுகிறது. மலைப்பிரதேசங்களில் குடும்ப அட ! க்கு மாதமொன்றுக்கு 30 க.லோ வரை வழங்கப்படுகிறது. நியாய விலைக் கடைகளில் கோதுமை கிலோ ரூ. 1.87 என்ற விலையிலேயே தொடர்ந்து வழங்கப்படுகிறது. 1983ஆம் ஆண்டில் 2,04,811 டன்கள் கோதுமை குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்பட்டது. ஆனால் 1984ஆம் ஆண்டில், 1,00,075 டன்கள் கோதுமைதான் குடும்ப அட்டைதாரர்களால் வாங்கப்பட்டுள்ளது.

நாம் அரிசியை மட்டும் நம்பி இருக்க முடியாது என்பதால், தமிழ் மக்கள், அதிக அளவில் கோதுமையை உட்கொள்ளுவதை மக்களிடையே பரவச் செய்வதில் அரசு இப்போது ஆர்வம் காட்டுகிறது. இந்த முடிவைக் கருத்தில் கொண்டு, கோதுமை உருளை மாவு ஆலைகளுடனும், ரொட்டி தயாரிப்போருடனும் சேர்ந்து, 1984 ஆகஸ்டு மாதத்தில், சென்னை இராஜாஜி மண்டபத்தில் கோதுமைப் பொருட்கள் பற்றிய கருத்தரங்கு மற்றும் கண்காட்சியை அரசு நடத்தியது.

லெவி சர்க்கரை, குடும்ப அட்டைகளுக்கு நியாயவிலைக் கடைகள் மூலம் நபர் ஒருவருக்கு, மாதமொன்றுக்கு 450 கிராம் வீதம் வழங்கப்படுகிறது. லெவி சர்க்கரை நாடு முழுவதிலும் ஒரே விலையில் விற்கப்படுகிறது. 31.3.1985 வரை, லெவி சர்க்கரையின் விற்பனை விலை கிலோ ரூ.4.00ஆக இருந்தது. 1.4.1985 முதல், இது இந்திய அரசால் கிலோ ரூ. 4.40க்கு உயர்த்தப்பட்டது. 1984ஆம் ஆண்டில் 2,47,494 டன்கள் லெவி சர்க்கரை நியாய விலைக் கடைகள் மூலமாகக் குடும்ப அட்டைகளுக்கும், அரசு மருத்துவமனைகள், கல்வி நிலையங்களுடன் இணைந்த உணவு விடுதிகள், அனாதை இல்லங்கள் போன்ற மொத்த நுகர்வோருக்கும் வழங்கப்பட்டது. தீபாவளி, கிறிஸ்துமஸ், பொங்கல் ஆகிய பண்டிகைக் காலங்களில் கூடுதலாகவும் லெவிசர்க்கரை வழங்கப்பட்டது.

இந்திய அரசு, 1985 ஜூன் மாதத்திற்கு கூடுதலாக 3,042 டன்கள் லெவி சர்க்கரையும் 4,993 டன்கள் வெளிச்சந்தை விற்பனைச் சர்க்கரையும் ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த ஒதுக்கீடுகள், சர்க்கரையின் வெளிச் சந்தை விலையைப் பெருமளவு கட்டுப்படுத்த நமக்கு உதவும்.

தமிழ்நாட்டில், மண்ணெண்ணெய், நியாய விலைக் கடைகள் மூலமும், கைவண்டி உரிமதாரர்கள் மூலமும், மண்ணெண்ணெய் வியாபாரத்தை மட்டுமே நம்பியிருக்கும் சில்லறை வர்த்தகர்கள் மூலமும் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாதமும் மத்திய அரசு இம்மாநிலத்திற்கு மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்கிறது. இம்மாநிலத்திற்கு மாதம் ஒன்றுக்கு 66,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் தேவைப்படுகிறது. ஆனால் மத்திய அரசு ஏறக்குறைய 47,000 கிலோ லிட்டர் தான் வழங்குகிறது. மழை, வெள்ளம் வரும் காலங்களில் அவற்றால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு வழங்குவதற்காக மத்திய அரசு கூடுதலாக மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்கிறது.

தமிழ்நாட்டில் மொத்தம் 2,776 மண்ணெண்ணெய் கைவண்டி உரிமதாரர்கள் உள்ளனர். அவர்கள் மாதம் ஒன்றுக்குச் சுமார் 4,700 கிலோ லிட்டர்கள் மண்ணெண்ணெய் கையாளுகின்றனர். குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கியது போக மீதமிருந்தால், கைவண்டிதாரர்களின் ஒதுக்கீட்டை 50 லிட்டரிலிருந்து 100 லிட்டராக அதிகரிக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

கைவண்டிதாரர்களைத் தவிர மண்ணெண்ணெய்வியாபாரத்தை மட்டும் நம்பியிருக்கும் சில்லறை

'தமிழரசு'

சந்தா விவரம்

'தமிழரசு' (தமிழ்)

ஆண்டுச் சந்தா: ரூ 18

அரையாண்டுச் சந்தா: ரூ 9.

'தமிழரசு' (ஆங்கிலம்)

ஆண்டுச் சந்தா: ரூ 9

விவரங்கட்கு:

உதவி இயக்குநர்,
தமிழரசு அலுவலகம்,
செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
அரசினர் தோட்டம்,
சென்னை-600 002.





பதிவுச் சான்றிதழ் பெற்றுள்ளவர்கள் 2,547 பேர் உள்ளனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் 500 குடும்ப அட்டைகளுக்கு மிகைப்படாமல் மண்ணெண்ணெய் வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியிலும், மாவட்ட தலைமையகத்திலுள்ள நகராட்சிப் பகுதிகளிலும், மாதம் ஒன்றுக்கு ஒரு குடும்ப அட்டைக்கு 10 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. இதர நகராட்சி மற்றும் நகரியப் பகுதிகளில், மாதம் ஒன்றுக்கு ஒவ்வொரு குடும்ப அட்டைக்கு 6 லிட்டர் வீதமும், நகரப் பஞ்சாயத்துக்களில், மாதமொன்றுக்கு 5 லிட்டர் வீதமும், கிராமப் புறங்களில், மாதமொன்றுக்கு 3 லிட்டர் வீதமும், மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. மாவட்டங்களுக்கு வழங்கப்படும் மண்ணெண்ணெயில், குடும்ப அட்டைக்கு வழங்கியது போக மீதமிருந்தால் மற்ற நகராட்சிப் பகுதிகளிலும் நகரியங்களிலும் குடும்ப அட்டைக்கு வழங்கப்படும் மண்ணெண்ணெயின் அளவை 10 லிட்டர் வரையில் உயர்த்தி வழங்க, மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

குடும்ப அட்டைதாரர்களுக்குப் பொது விநியோக முறையின்கீழ் வழங்கும் பொருட்டு, மத்திய அரசு இறக்குமதி செய்யப்பட்ட பாமோலின் எண்ணெய்யை மாநிலங்களுக்கு வழங்குகிறது. 1984ஆம் ஆண்டு ஜனவரி மாதம், மத்திய அரசு இம்மாநிலத்திற்கு 7,000 டன்கள் பாமோலின் ஒதுக்கீடு செய்தது. பிப்ரவரி மாதம் 4,000 டன்கள் பாமோலினும், 3,500 டன்கள் சோயாபீன்எண்ணெய்யும் ஒதுக்கீடு செய்தது. மார்ச் மாதமும், ஏப்ரல் மாதமும் மாதமொன்றுக்கு 1,000 டன்கள் பாமோலினும், 6,500 டன் கள் சோயாபீன் எண்ணெய்யும் வழங்கப்பட்டது.

தமிழ்நாட்டில் 118.88 இலட்சம் குடும்ப அட்டைகள் உள்ளன.

சென்னை நகரத்தில், குடும்ப அட்டைதாரர்களுக்கு டின்களில் அடைக்கப்பட்ட பாமோலின் எண்ணெய்யும் நியாய விலைக் கடைகள் மூலம் விற்கப்படுகிறது. இந்த டின்களில் அடைக்கப்பட்ட எண்ணெய், மத்திய அரசின் நிறுவனமான இந்துஸ்தான் தாவர எண்ணெய்க் கழகம் மூலமாக வழங்கப்படுகிறது.

கிராமப்புறம், நகர்ப்புறம் என்ற பாகுபாடின்றி ஒரு குடும்ப அட்டைக்கு மாதம் ஒன்றுக்கு 1 கிலோ சமையல் எண்ணெய் பொது விநியோக முறையின் கீழ் வழங்கப்படுகிறது. போதுமான அளவு எண்ணெய் கையிருப்பில் இருந்தால் மாதத்திற்கு 2 கிலோ எண்ணெய் வழங்கப்படுகிறது. உதிரி பாமோலின் எண்ணெய்யின் விலை கிலோவிற்கு 10.55ரூபாய் என்றும், 2 கிலோ டின்னின் விலை 28.35 ரூபாய் என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவற்றைத்தவிர இந்துஸ்தான் தாவர எணணெய்க் கழகம் ஒரு கிலோ பாலிதீன் பைகளையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் விலை ஒரு கிலோவிற்கு 12.30 ரூபாய் ஆகும்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மாவட்டங்களில் 13 கொள்கலன்களைக் கட்டியுள்ளது. சென்னை துறைமுகத்தில் 3,000 டன்கள் கொள்திறன் கொண்ட கொள்கலன் ஒன்று கட்டி முடியும் தறுவாயில் உள்ளது. தமிழ்நாட்டு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை துறைமுகத்திலிருந்து மாவட்டங்களுக்குச் சமையல் எண்ணெய் எடுத்துச் செல்ல கொள்கலன்கள் கொண்ட 5 லாரிகளை அதன் சொந்தச் செலவில் வாங்கிக் கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் 3000 டன் கொள்திறன் கொண்ட ஒரு கொள்கலனை தூத்துக்குடி துறைமுகத்தில் ரூபாய் 15 இலட்சம் செலவில் கட்ட அரசு தீர்மானித்துள்ளது.

தமிழகத்தில் கட்டுப்பாட்டுத் துணி ( controlled cloth ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுத்துறை ஆகிய அரசு நிறுவனங்களால் நடத்தப்படும் நியாய விலைக் கடைகள் மூலமாக மட்டுமே விநியோகிக்கப்படுகிறது. 1985-86 ஆம் ஆண்டுக்கு 18 மில்லியன் சதுர மீட்டர் கட்டுப்பாட்டுத் துணி தமிழ்நாட்டிற்கு ஒக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அரிசி, கோதுமை, சர்க்கரை, மைதா, ரவை, பாமோலின், மண்ணெண்ணெய் மற்றும் கட்டுப்பாட்டு துணி போன்ற கட்டுப்பாட்டுக்கடங்கிய பொருட்களைத் தவிர தினமும் உபயோகிக்கப்படும் புளி, உப்பு, துணி, சோப்பு, பல்புகள், வலி நிவாரணிகள், சைக்கிள் ட்யூபுகள், டயர்கள், நிரோத் போன்றவையும் நியாய விலைக் கடைகளில் விற்கப்படுகின்றன. குளியல் சோப்பு பிளேடுகள், பேட்டரிகள் மற்றும் தீப்பெட்டிகள் தயாரிப்பாளர்களை அவர்கள் தயாரிக்கும் பொருட்களில் ஒரு பகுதியை நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் கடைகளின் மூலம் கட்டுப்பாட்டு விலையில் விற்க வேண்டும் என மைய அரசு கட்டாயப்படுத்தியதன் பேரில் இப்பொருட்களும் தற்போது தயாரிப்பாளர்களிடமிருந்து பெறப்பட்டு நியாய விலைக்கடைகள் மூலம் விற்கப்படுகின்றன.

நியாய விலைக்கடைகள் சீராக நடைபெற அரசால் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சென்னை நகரத்தில் நியாயவிலைக் கடைகளை ஆய்வு செய்ய உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளரின் தலைமையில் ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

நியாய விலைக் கடைகள் சரியான முறையில் இயங்குகின்றனவா, அவற்றில் குடும்ப அட்டைகளுக்கு உணவுப்பொருள்கள் வழங்கப்படுகின்றனவா அல்லது போலி பில்கள் தயாரித்து அப்பொருட்களைக் குடும்ப அட்டைகளுக்கு வழங்காமல் தவறான வழியில் எடுத்துச் செல்லப்படுகிறதா என்பதைத் தீவிரமாகக் கண்காணிப்பதற்கு விழிப்புப் பணிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**புதிய குடும்ப அட்டைகள் வழங்கல்:**

பொதுமக்கள் சிரமமின்றி புதிய குடும்ப அட்டைகள் பெறும் பொருட்டு அரசு பல அறிவுரைகள் வழங்கியுள்ளது. புதிதாக மணமானவர்கள், பெயர்நீக்கல் சான்றிதழை ஒப்படைப்பதின் மூலமாகவும், வேறு மாநிலங்களிலிருந்து குடி பெயர்ந்தவர்கள் ஒப்புவிப்பு சான்றிதழை ஒப்படைப்பதின் மூலமாகவும், புதிய குடும்ப அட்டை பெறலாம். குடும்ப அட்டைகளை தொலைத்தவர்களுக்கும், கறை படிந்த அட்டைகளை வைத்திருப்பவர்களுக்கும், ஐந்து ரூபாய் கட்டணம் செலுத்தியவுடன் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படும். விலாச மாற்றத்திற்கு, புதிய விலாசம் எங்குள்ளதோ அங்குள்ள உதவி ஆணையாளரை அணுகினால் போதும். புதிய குடும்ப அட்டைக்கு விண்ணப்பிக்கும்போது உறுதி வாக்குமூலம் வழங்கும் முறையினை அரசு நீக்கியுள்ளது.



# சுற்றுப்புறச் சூழ்நிலைப் பாதுகாப்பு

சுற்றுப்புறத் தூய்மையைப் பாதுகாக்க, பள்ளிக் குழந்தைகளுக்கு இயற்கையைப் பற்றிய பாடம் கற்பிப்பதிலிருந்து சுற்றுப்புறச்சூழல் தரக்குறைவைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுப்பது வரையிலான பல்வேறு பணிகளை மேற்கொள்வது அவசியம்.

சுற்றுப்புறப் பாதுகாப்பு நடவடிக்கைகள் தற்கால மற்றும் வருங்காலச் சந்ததியினரின் நலனைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளன. நீர் மற்றும் காற்றின் தன்மையைப் பாதுகாப்பதும், நீர் மற்றும் காற்றின் தன்மை குறைவாக உள்ள இடத்தில் அதை உயர்த்துவதும், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பின் ஒரு அம்சமாகும்.

1983ஆம் ஆண்டு ஜூலை திங்களில் ஏற்படுத்தப்பட்டு சுற்றுப்புறத் தூய்மைக் கட்டுப்பாட்டுத் துறை நீர் நிலம் மற்றும் காற்று மாசு படுதலைக் கட்டுப்படுத்துவதன் மூலம் சுற்றுப்புறத் தூய்மையைப் பாதுகாப்பது தனது குறிக்கோளாக ஏற்றுள்ளது.

இம் மாநிலத்தில், 1981ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்திலிருந்து மத்திய நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1974 (1974ஆம் ஆண்டு மத்திய சட்டம் 6) அமல்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்படிச் சட்டத்தின்கீழ் நீரின் மாசினைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் தன்னிச்சையாகச் செயல்படும் வகையில் 1982ஆம் ஆண்டு பிப்ரவரி 27 முதல் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அமைக்கப்பட்டுள்ளது.

1981ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் நாள் முதல் மத்திய காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981 (1981ஆம் ஆண்டு மத்திய சட்டம் 14) இயற்றப்பட்டு செயற்படுத்தப்படுகிறது. இச்சட்டத்தின்படி தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இச்சட்டத்தினைச் செயல்படுத்தும் பொறுப்பினையும் மேற்கொண்டுள்ளது.

மாநிலத்திலுள்ள நீரோடைகள், கிணறுகள், நீர் நிலைகள் மாசடைவதைத் தடுக்கவும் மற்றும் காற்று மண்டலம் மாசுபடுவதைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் விரிவான திட்டத்தை உருவாக்குதல்.

நீர், காற்று மாசுபடுவதால் ஏற்படும் பிரச்சினைகள் பற்றிய ஆய்வு மற்றும் ஆராய்ச்சி நடத்த ஒத்துழைப்புத் தருவது மற்றும் நீர், காற்று மாசு படுதலை குறைக்கவும், தடுக்கவும் மற்ற நிறுவனங்களையும் பொதுமக்களையும் ஊக்குவித்தல் மற்றும் ஈடுபடச் செய்தல்.

தொழிற்சாலைக் கழிவுநீர் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை ஆய்வு செய்தல் மற்றும் கழிவுநீரைச் சுத்திகரிப்பு மேற்கொள்ளும் திட்டங்கள், விவரக் குறிப்பீடுகள் மற்றும் இதர அடிப்படை விவரங்களை ஆய்வு செய்தல்.

தொழிற்சாலைகள் வெளியேற்றும் கழிவுநீர் மற்றும் வெளியேற்றப்பட்ட கழிவுநீர் கலந்த நீரின் தன்மைக்கான தரங்களை அவ்வப்போது நிர்ணயித்தல், மாநிலத்தின் நீர் நிலைகள் வகைப்படுத்தல், தொழிற்சாலை மற்றும் தானியங்கி ஊர்திகள் ஆகியவற்றால் வெளியிடப்படும் பொருள்களின் தரத்தை நிர்ணயித்தல்.

1978ஆம் ஆண்டு மத்திய நீர் (மாசுதடுப்பு மற்றும்கட்டுப்பாடு) திருத்தச் சட்டம் தமிழ்நாட்டில் 1984ஆம் ஆண்டு முதல் அமுல் படுத்தப்படுகிறது.

மாநிலம் முழுவதும் நீர் மற்றும் காற்றின் தன்மையைப் பராமரிக்க தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்குத் தேவையான கருவிகளடங்கிய ஆய்வுக்கூடம் இருப்பது அவசியமாகும். திருவான்மியூரில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்காக நிறுவ இருக்கும் ஆய்வுக்கூடம் முடியும் தறுவாயில் உள்ளது.

தமிழ்நாடு மாநில சுற்றுப்புறச் சூழல் நலக்குழு இம்மாநிலத்தின் சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதுகாப்பதற்கு அறிவுரை வழங்கும் உயர்மட்டக் குழுவாக இயங்கி வருகிறது. ரூ. 50 இலட்சத்திற்கு மேல் மதிப்புள்ள வளர்ச்சித் திட்டங்களும், தொழிற்சாலைகளும், சுற்றுப்புறச் சூழல் சம்பந்தமாக இக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் இக்குழுவின் தலைவரும், சுற்றுப்புறத்தூய்மைக் கட்டுப்பாட்டுப்பொறுப்பை வகிக்கும் அமைச்சர் இக்குழுவின் துணைத் தலைவரும் ஆவார்கள். தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் உறுப்பினர்- செயலாளர், தமிழ்நாடு மாநில சுற்றுப்புறச் சூழல் நலக்குழுவின் உறுப்பினர்-செயலாளரும் ஆவார். சென்னைக் குடிநீர் விரிவாக்கத் திட்டத்திற்குப் பெரும் உதவியாக அமையும் கிருஷ்ணா நீர்த் திட்டத்திற்கு 1984-85ஆம் ஆண்டு இக்குழு ஒப்புதல் அளித்து இருக்கிறது.

பறவைகளினால் விமானத்திற்கு ஏற்படும் அபாயத்தைத் தடுக்க அரசால் அமைக்கப்பட்ட விமான நிலைய சுற்றுப்புறப்பாதுகாப்புக் குழு விமான நிலையத்திற்கு அருகாமையில் பறவைகளை ஈர்க்கும் காரணங்களை ஆய்ந்து பறவைகளால் விமானங்களுக்கு ஏற்படும்விபத்துக்களைக் குறைப்பதற்கு தக்க வழி வகைகளைச் செய்கிறது.

கடலோரப் பகுதிகளின் கடலேற்ற எல்லையிலிருந்து 500 மீட்டர் தூரத்திற்கு உட்பட்ட பகுதிகளில் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை ஒருங்கிணைக்கவும், ஒழுங்குபடுத்தவும் தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் ஓர் உயர்மட்டக் குழுஅமைக்கப்பட்டுள்ளது.

சமுதாயத்தின் வெவ்வேறு மட்டங்களிலும் சுற்றுப்புறச் சூழல் சம்பந்தமான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவது சுற்றுப்புறச் சூழல் தன்மையைக் காப்பதன் ஒரு முக்கியப் பணியாகும். கருத்தரங்குகள் மற்றும் கலந்துரையாடல்கள் சுற்றுப்புறச் சூழல் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் முக்கிய கருவிகளாகும். சுற்றுப்புறத் தூய்மைக் கட்டுப்பாட்டுத் துறையும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமும் இது போன்ற கருத்தரங்குகளை நடத்துவதில் முக்கிய பங்கு ஏற்றன.





# புரட்சிக் கவிஞர் விருது!

பாவேந்தர் பாரதிதாசனாரின் 85-வது பிறந்தநாள் விழா, மதுரையில்-விக்டோரியா எட்வர்டு மன்றத்தில் (9-6-85) சிறப்புற நடைபெற்றது.

அன்று காலை 9 மணியளவில், மதுரை எம். ஜி. ரத்தினம்மாள் குழுவினரின் நாதசுர இசையோடு தொடங்கிய அவ்விழாவில், மதுரை இசைக் கல்லூரி முதல்வர் திருப்பாம்புரம் சிவசுப்பிரமணியம் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடினார். செய்தி - மக்கள் தொடர்புத் துறைத் துணை இயக்குநர் திரு வி. டி. வீரப்பன் வரவேற்புரையாற்றினார்.

தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறைச் செயலாளர் டாக்டர் ஔவை. நடராசன் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் விழாத் தொடக்கவுரையாற்றினார்.

அதைத் தொடர்ந்து-'அறிஞர்கள் வழியில் பாவேந்தர்'..பாரதியார் என்ற தலைப்பில் டாக்டர் சொல்விளங்கும் பெருமாளும், சாத்தனார் எனுந் தலைப்பில் தமிழ்வளர்ச்சி உதவி இயக்குநர் திரு பெரியாண்டவனும், இளங்கோ என்ற தலைப்பில் பேராசிரியர் டாக்டர் சு. பாலச்சந்திரனும் உரையாற்றினர்.

பிற்பகல் 12 மணியளவில் கவிஞர் திரு வலம்புரிஜான் எம். பி. அவர்கள் தலைமையில் 'பாவேந்தர் பார்வையில்....' என்கிற பொதுத் தலைப்பில் பல்வேறு பொருளில் கவியரங்கம் தொடங்கியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் அவர்கள் தொடக்கவுரையாற்றினார்.

கவிஞர் பெருமக்கள் - திருமதி குருவம்மாள் (சமுதாயம்), திரு சாமி பழனியப்பன் (தொழிலாளர்), திரு சொ. சோ. மீ. சுந்தரம் (காதல்), கடந்த ஆண்டுக்கான பாவேந்தர் பாரதிதாசன் விருது பெறும் கவிஞர் திரு உலகநாதன் (தமிழ்), திரு இளந்தேவன்(வீரம்) ஆகியோர் கவிதை பாடினர்.

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்த இவ்விழாவின் முடிவில்-மதுரை மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு ப. சாமிநாதன் நன்றியுரையாற்றினார்.

தந்தி 'கன்னியாமில்க்' தொலைபேசி: 3356

கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவுப் பால்
உற்பத்தியாளர்கள் ஒன்றியம்
(வரையறுக்கப்பட்டது)
எண். 2946
நாகர்கோவில்



எங்கள் மனம் கனிந்த நல்வாழ்த்துகள்

எங்கள் ஒன்றியம் மற்றும் கன்னியாமில்க் பார்களில் சுத்தமான-கலப்படமற்ற

- பதப்படுத்திய பால்
- நெய்
- பால்வெண்ணெய்
- நறுமணப் பால்
- பால்பேடா

ஆகியவைகளைக் குறைந்த விலையில் விற்பனை செய்கிறோம்.

வாங்கிப் பயன் அடைவீர்!

அ. பொன்னய்யா ரெங்கநாதன்,
நிர்வாக இயக்குநர்
நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும்
உறுப்பினர்கள்.

ம. கருப்பையா, இ.ஆ.ப.,
பெருந்தலைவர்-கன்னியாகுமரி மாவட்டப்
பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்-
மாவட்ட ஆட்சித் தலைவர்.

ADVT.




# பொருட்காட்சி நிறைவும் புரட்சிக் கவிஞர் விருதும் !

ஐந்தாவது முறையாக 28-4-85 அன்று மதுரை மாநகரில் தொடங்கி வைக்கப்பட்ட அரசு சித்திரைப் பொருட்காட்சி 43 நாட்கள் சீரும் சிறப்புமாக நடைபெற்று 9-6-85 அன்று நிறைவு விழா கண்டது. தமிழ்நாடு அரசு நடத்தும் இந்த 26வது பொருட்காட்சிக்கு மொத்தத்தில் ஏழு லட்சம் பேருக்கு மேல் வருகை தந்திருக்கிறார்கள்.

நிறைவு விழாவிற்கு மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு யா. சை. மு. யூசுப் அவர்கள் தலைமை தாங்கினார். மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா. வரதராஜுலு இ.ஆ.ப. வரவேற்புரையாற்றினார்.

தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறைச் செயலாளர் டாக்டர் ஔவை நடராசன், வேளாண்மை விளைபொருள் வாரியத் தலைவர் திரு எஸ். பாண்டியன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

அன்று காலையில் நடைபெற்ற பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாள் விழாதொடர்ச்சியாக இவ்விழாவில் மாண்புமிகு செய்தி-



அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் பாவேந்தரின் திருவுருவப் படத்தைத திறந்துவைத்தார்.

இதற்குமுன்-விழா தொடங்கு முன்பாகத் தமிழன்னைக்காக நிர்மாணிக்கப்பட்ட இரத பீடம் மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப் பட்டது.

ஆண்டுதோறும், அரசு வழங்கிவரும் பாவேந்தர் பாரதிதாசன் விருது இந்த ஆண்டு மலேசியக் கவிஞர் திரு உலகநாதன் அவர்களுக்கு-அந்த வரிசையில் ஒன்பதாம் நபராக இந்தப் பொருட்காட்சி நிறைவு விழாவில் அளிக்கப்பட்டது. இதற்கான 4 பவுன் பொற் பதக்கத்தைக் கவிஞருக்கு அணிவித்து பத்தாயிரம் ரூபாய் ரொக்கப்பரிசையும் மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் வழங்கினார்.

விருதுபெற்ற கவிஞரின் ஏற்புரைக்குப் பின் - பொருட்காட்சி நிறைவு விழாச் சிறப்புரையாற்றிய மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள்-''தமிழறிஞர்களுக்கு விருது வழங்கியும் ஓய்வூதியம் அளித்தும் இந்த அரசு சிறப்பித்து வருகிறது. 60 வயதைத் தாண்டிய தமிழறிஞர்களுக்கு மாதந்தோறும் அரசு வழங்கி வரும் உதவித்தொகை, அவர்கள் மறைந்துவிட்டால் அவர்களுடைய மனைவிமார்களுக்கு இறுதி வரை வழங்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த ஆண்டு ஆணை பிறப்பித்திருக்கிறார்'' என்று பெருமையோடு குறிப்பிட்டார். இந்தப் பொருட்காட்சி மூலம் செலவெல்லாம் போக அரசுக்குக் கிடைத்த நிகரலாபம் ரூ. 2.75 இலட்சம் என்றும் அவர் தமது உரையின்போது தெரிவித்தார்.

இப்பொருட்காட்சியில் சிறப்புற அரங்கு அமைத்திருந்தவர்களுக்கும், நன்முறையில் குழந்தை வளர்த்திருந்த தாய்மார்களுக்கும் இவ்விழாவில் பரிசுகள் வழங்கப்பட்டன.

விழா முடிவில் (பொருட்காட்சிப் பொறுப்பு) இணை இயக்குநர் திரு ஆர். கே. கிருஷ்ணமூர்த்தி நன்றி கூறினார்.

—இந்திரன்



# கே. ஜி. குரூப் கம்பெனிகள்

## ஒன்று சேர்ந்ததன் வலிமையையும் தத்தம் தனித்தன்மைகளையும் ஒருங்கே கொண்டவை.

**ஸ்ரீ கண்ணபிரான் மில்ஸ் லிட்**

**தி கதிரி மில்ஸ் (கோவை) லிட்**

பருத்தி மற்றும் பிளன்டெட் நூல் உற்பத்தியாளர்கள்.

**கே. ஜி. ஆர்ட்ஸ் சென்டர் (பி) லிட்**

நான்கு ஏர்கண்டிஷன்ட சினிமா தியேட்டர்களைக் கொண்ட காம்ப்ளக்ஸ்

**கே. கோவிந்தசாமி நாயுடு & சன்ஸ் அன்னூர்**

பஞ்சு வியாபாரிகள்

**கோயமுத்தூர் பிரிமியர் கார்ப்பரேசன் (பி) லிட்**

'சிபிசி பிரிமியர்' மோட்டார் மற்றும் பம்புசெட் தயாரிப்பாளர்கள்.

**கதிரி ஃபேப்ஸ்**

துணி தயாரிப்பாளர்கள்

**KG கே. ஜி. குரூப் கம்பெனிகள்**

86, ஆர்ட்ஸ் காலேஜ் ரோடு, கோயமுத்தூர்-641018.

OBM/8195.TM


சின்கோனாத்துறை கடந்த 124 ஆண்டுகளாக, குனைன் சல்பேட், மற்றும் குனைன் ஹைட்ரோ குளோரைடு போன்ற கொய்னாப் பொருட்கள் குனிடின் சல்பேட், மருந்து மற்றும் நறுமணத் தைலங்கள் முதலியவற்றை உற்பத்தி செய்து வருகிறது.

இது வணிக அடிப்படையில் தமிழக அரசின்கீழ் ஒரு துறையாக இயங்கி வருகிறது. 2,166 நிரந்தரத் தொழிலாளர்களும், 786 தற்காலிகத் தொழிலாளர்களும் ஆக மொத்தம் 2,952 தொழிலாளர்கள் இத்துறையில் பணியாற்றி வருகின்றனர். இத்துறை தயாரிக்கும் பொருட்களுக்குத் தேவையான மூலப் பொருட்கள், நீலகிரி, கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள ஆனைமலை, மதுரை மாவட்டத்திலுள்ள கொடைக்கானல் தாலுக்காவில் மேல் பழனிமலை ஆகிய இடங்களில் உள்ள இத்துறையின் தோட்டங்களிலேயே பயிடரிப் படுகின்றன.

கோயம்புத்தூர் மாவட்டம் ஆனைமலையிலுள்ள தொழிற்சாலைகளிலும், நீலகிரி மாவட்டம் நடுவட்டத்திலுள்ள தொழிற்சாலையிலும் அவ்வகை மூலப் பொருட்கள் யாவும் பதனிடப் படுகின்றன.

துறையின் தொழிலாளர்களில் பெரும்பான்மையோர் ஆதிதிராவிடர்கள் (60 சதவீதம்) (Adi-Dravidars Scheduled casts) பின்தங்கிய வகுப்பினர் (30 சதவீதம்) Backward classes ஆவர் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

சின்கோனாத் துறையின் நடவடிக்கைகள் இரு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன. ஒரு பிரிவு மலேரியா நோயை ஒழிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் குனைன் சல்பேட் மருந்தையும், இதய நோய்களைக் குணப்படுத்தப்படும் குனிடின் சல்பேட் போன்ற உயிர் காக்கும் மருந்துகள் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. மற்றொரு பிரிவு, மருந்து மற்றும் நறுமணத்தைலங்களைத் தயாரிக்கிறது.

பற்பொடி வழங்கும் திட்டத்தின்கீழ் பற்பொடி தயாரித்து கிராமப்புறக் குழந்தைகளுக்கு வழங்கும் பணியை மேற்கொண்டுள்ளது. பற்பொடி, 30 கிராம் எடையுள்ள பைகளில், நீலகிரி கோயம்புத்தூர், பெரியார், சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களிலுள்ள கிராமப்புறக் குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.

1985 ஏப்ரல் மாதம் 2.1 மெட்ரிக் டன் எடையுள்ள குனைன் ஹைடிரோ குளோரைடு 1 கிலோ ரூ. 910 என்ற விலையில் ரூ. 19.11 லட்சத்திற்கு ஆர்டர் பெறப்பட்டது. ரூ. 9.1 லட்சம் பெறப்பட்டு 1 மெட்ரிக் டன் குனைன் ஹைடிரோ குளோரைடு விற்கப்பட்டது.

மருந்து மற்றும் நறுமணத் தைலங்கள் ஆகியவற்றின் வாயிலாகக்கிடைக்கும் வருவாய் சீராக அதிகரித்து வருகிறது.




பொது மக்கள் விரும்புகின்ற சின்பிரஸ், சினோமாஸ் போன்ற வீட்டு உபயோகப் பொருட்களின் தேவை அதிகரித்துக்கொண்டே வருகிறது. இத்துறையில் விற்பனை செய்யப்படும் மிக சுத்தமான யூகலிப்டஸ் தைலத்திற்கான அதிகப்படி தேவை குறிப்பிடத் தக்கதாகும்.

மருந்து மற்றும் நறுமணத் தைலங்களின் தேவை மக்களிடையே ஒரே சீராக இருந்து வருகிறது. அதன் விளைவாக ரூ. 30,245 மதிப்புள்ள துறையின் பொருட்கள் தமிழகமெங்குமுள்ள காதி கிராப்ட் விற்பனை நிலையங்களில் 1983-84ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்டுள்ளது. 1984-85ஆம் ஆண்டு ரூ.4,316.70 மதிப்புள்ள பொருட்கள் விற்பனை செய்யப்பட்டது. 1985-86ஆம் ஆண்டும் காதி கிராப்டு மூலமாக விற்பனை செய்யப்படும்.

1983-84ஆம்ஆண்டில்ரூ.64,160 மதிப்புள்ள பொருட்கள், மதுரை, வேலூர், சேலம், கோயம்புத்தூர் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் நடைபெற்ற சுற்றுலா மற்றும் தொழில் கண்காட்சிகளில் விற்பனை செய்யப்பட்டது. 1984-85ஆம்ஆண்டில்ரூ. 66,972 மதிப்புள்ள பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன. தமிழகத்தின் வெவ்வேறு மாவட்டங்களில் ஆங்காங்கு இனிமேல் நடைபெறும் கண்காட்சிகளில் இத்துறை பங்கேற்று துறையில் தயாரிக்கப்படும் பொருட்களை விளம்பரம் செய்தும், விற்பனை செய்தும் வருவாய் ஈட்டப்படும்.

சின்கோனாத் துறையின் பல்திறத் திட்டத்தின் ஒரு பகுதியாக நீலகிரி மாவட்டம் நடுவட்டம் என்னுமிடத்திலுள்ள மருந்து மற்றும் நறுமணத் தைலங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையில் கற்பூரத்தைலம் மற்றும் கற்பூர வில்லைகள் தயாரிக்கப்பட்டுகின்றன. இவைகளின் உற்பத்தி நிறைவளிக்கும் வகையில் உள்ளது.

பல்வேறு உற்பத்தி பொருட்களைத் தயாரிக்கத் தேவையான மூலப் பொருட்களைப் பெற இத்துறையின் மலைத் தோட்டங்களில் அப்பயிர்களைப் பயிரிடுவதற்கு பல்வேறு பணிகளை இத்துறையே மேற்கொண்டுள்ளது. 31.3.1985ஆம் நாளன்றின்படி 2,141.83 எக்டேர் பரப்புள்ள சின்கோனா நிலங்களையும் மற்றும் 1,389.22 எக்டேர் பரப்புள்ள மருந்து மற்றும் நறுமணத் தைல வகைப் பயிர்கள் கொண்ட நிலங்களையும் இத்துறை தனது நேரிடை மேற்பார்வையில்கொண்டுள்ளது. 1983-84ஆம் ஆண்டில் 163.40 எக்டேர் நிலப்பரப்பில் மருந்து மற்றும் நறுமணத் தைலப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டன. அது 1984-85ஆம் ஆண்டில் 124.10 எக்டேர் நிலப்பரப்பிலும், 1985-86ஆம் ஆண்டில் 106 எக்டேர் நிலப் பரப்பிலும் சாகுபடி செய்யப் படும்.

சின்கோனாப் பெப்ரியிலிருந்து குனைன் சல்பேட், குனிடின் சல்பேட் ஆகியவற்றைத் தயாரித்தல், தேயிலைக் கழிவிலிருந்து 'கபீன்' (Caffeine) தயாரித்தல்போன்ற பணிகள் இத்துறையின் அண்மைக்கால முக்கிய சாதனைகளாகும். குடும்ப நலத் திட்டத்திற்காகத் தயாரிக்கப்படும் கருத்தடை மாத்திரைகளில் உள்ள கார்சிடிசான் ஸ்டிராய்டு ஹார்மோன் போன்றவற்றைத் தயாரிக்கத் தேவைப்படும் மூலப்பொருளான ''டயஸ்ஜெனின்'' என்ற பொருளைத் தயாரித்தல், கொசுக்களை விரட்டும் ''சினோமாஸ்'' என்ற களிம்பையும் ''சின்ஸ்ப்ரே'' என்ற தெளிப்பான் மருந்தையும் தரையைத் தூய்மையாக்கப் பயன்படும் கிருமிநாசினி 'சின்பிரஷ்' என்ற தெளிப்பான் மருந்தையும் தயாரித்து விற்பனை செய்தல் ''சினிவோரமா'' ''தொட்டபெட்டா மிஸ்ட்'' ஆகிய வாசனைத் திரவியங்களைத் தயாரித்தல் போன்றவை உற்பத்தியைப் பலதிறப்படுத்தும் இத்துறையின் பணிகளாகும்.




## நீங்கள் உங்கள் குழந்தைகளை இரண்டுடன் நிறுத்திக் கொள்ளாவிட்டால்

மற்றவர்களை மிதித்துக்கொண்டும், இடித்துக் கொண்டும் நடப்பதும், சுவாசிக்கும் காற்றைப் பகிர்ந்து கொண்டும் வாழும் நாளைக் கற்பனை செய்து பாருங்கள். ஆம்! அந்த நாள் வெகு தொலைவில் இல்லை.

இதனைத் தவிர்க்க ஒரே வழி—உங்கள் குழந்தைகளை இரண்டுடன் நிறுத்திக் கொள்வதே. இதனால் இந்த பூமியில் நீடித்த வாழ்வுக்கு வழி வகுத்தவராவீர்!

ஆதலால் விவேகத்தோடு, இரண்டு குழந்தைகளுடன் நிறுத்திக்கொள்ளுங்கள். உங்கள் குழந்தைகளின் நீடித்த வாழ்வுக்கும் அதுவே வழிகோலும்.

சிறு குடும்பமே
மகிழ்ச்சியான
குடும்பம்



மதராஸ் அட்வர்டைசிங் கம்பெனியால் உருவாக்கப்பட்டது.




# பயிற்சி + முயற்சி = வேலை வாய்ப்பு

தொழில் நுட்பம் அறிந்தவர்களுக்கும், உடல் ஊனமுற்றவர்களுக்கும், தொழில் ரீதியில் தகுதி பெற்றவர்களுக்கும் உரிய தனி வேலை வாய்ப்பு அலுவலகங்கள் ஐந்து உட்பட, தமிழ் நாட்டில் நாற்பது வேலை வாய்ப்பு அலுவலகங்கள் உள்ளன.

தொழில் நுட்பத் தகுதி பெற்றவர்களுக்கு விரைவில் வேலை தேடித்தரும்நோக்கத்துடன் இவர்களுக்கென்றே சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில்மூன்று வேலைவாய்ப்பகங்கள் ஏற்கெனவே செயல்படுகின்றன. தொழில்நுட்பத் தகுதி பெற்றவர்களுக்காக மேலும் ஒரு வேலை வாய்ப்பகத்தை 1985-86இல் கோயம்புத்தூரில் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

உடல் ஊனமுற்றோரின் தனிப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் பொருட்டு, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு பிரிவாக ஐந்து பிரிவுகளைக் கொண்ட தனி வேலை வாய்ப்பு அலுவலகம் சென்னையில் செயல்பட்டு வருகிறது. நாகர்கோயிலில் மேலும் ஒரு பிரிவை விரைவில் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மாவட்டவேலை வாய்ப்பு அலுவலகங்களில் உள்ள வாழ்க்கைத் தொழிலுக்கு வழிகாட்டும் பிரிவுகள், பள்ளிகளில் திட்டங்களுக்கு ஏற்பாடு செய்து, மாணவர்கள் தங்களுக்கு ஏற்ற வாழ்க்கைத் தொழிலைத் தெரிந்தெடுக்க இயலும் வகையில் தகவல்களை அளிக்கின்றன. ஓராண்டில் இப் பிரிவுகள் இத்திட்டத்தைப் பல பள்ளிகளில் நடத்த வேண்டியிருப்பதால், பள்ளி ஆசிரியர்களைக் கொண்ட உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு வாழ்க்கைத் தொழிலுக்கு வழிகாட்டுவதற்கான தகவல்கள் அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிக்காக, 370 பள்ளி ஆசிரியர்களைத் தெரிந்தெடுத்து, வழிகாட்டுதல் குறித்து பயிற்றுவிப்பதில் பயிற்சியளிக்கத்திட்டமிடப்பட்டுள்ளது. பயிற்சி பெற்ற இந்த ஆசிரியர்கள் பிற பள்ளிகளில் பணியாற்றும் 630 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பர். இதனால் 1,000 பள்ளிகள் இத் திட்டத்தினால் பயனடையும்.



ஐந்தாண்டுகளுக்கு மேலாக வேலை வாய்ப்பு அலுவலகப் பதிவேடுகளில் பெயரைப் பதிவு செய்துள்ளவர்களும், பெற்றோரின் மாத வருமானம் ரூ.2,000க்கும் குறைவாக உள்ளவர்களுமான படித்து வேலை வாய்ப்பற்றவர்களுக்கு, உதவித் தொகை வழங்கும் அரசின் திட்டம் 1-7-1980இல் இருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டம் எஸ்.எஸ்.எல்.சி., பிளஸ் 2, பி.யூ.சி. படித்து முடித்த மாணவர்களுக்கும் 15-9-1984 லிருந்து நீட்டிக்கப்பட்டுள்ளது.

வேலை வாய்ப்பற்ற பட்டதாரிகளுக்குத் திங்கள் ஒன்றுக்கு உதவித் தொகையாக வழங்கப்பட்ட ரூ.50 தற்போது ரூ.100 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்ற மாணவர்கள் திங்கள் ஒன்றுக்கு ரூ.50 பெறுகின்றனர். பிளஸ்.2 மற்றும் பி.யு.சி. படித்த மாணவர்கள் திங்கள் ஒன்றுக்கு ரூ.75 பெறுகின்றனர்.

## அடுத்த இதழில்...

இந்த இதழில் இடம் பெறாத தமிழக அரசின் இதர துறைகளின் ஐந்தாண்டுப் பணிகள் தொகுப்புக் கட்டுரைகள் அடுத்த இதழில் இடம் பெறும்.

ஆசிரியர்.

சுய வேலை வாய்ப்பை மேம்படுத்துவதற்காக இந்தியா முழுவதிலும் 30 வாழ்க்கைத் தொழில் வழிகாட்டித் தனிப்பிரிவுகளை ஏற்படுத்த மத்திய அரசு அனுமதித்தது. இப்பிரிவுகளில் ஒன்று 1983 செப்டம்பரில் வட ஆர்க்காடு மாவட்டம் வேலூரில் அமைக்கப்பட்டது. இப்பிரிவு, வேலை இல்லாமலிருந்த 647 பேருக்குச் சுய வேலை வாய்ப்பிற்கு ஏற்பாடு செய்துள்ளது. அவர்கள் ரூ.34 இலட்சம் வரை தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன் பெற அவர்களுக்கு உதவியுள்ளது. இப்பிரிவு போற்றத்தக்க வகையில் சாதனையை நிகழ்த்தியுள்ளதால், 1985-86 இல் கோயம்புத்தூரில் மற்றுமொரு பிரிவை நிறுவ மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

தமிழ்நாடு கிராம இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றுள்ளவர்களுக்குச் சுய வேலை வாய்ப்பினை உருவாக்குவதற்கான ஒரு திட்டத்தைச் சென்னையைத் தவிர ஏனைய மாவட்டங்கள் அனைத்திலும் அரசு கொண்டு வந்துள்ளது.

கிராம இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் தொழில் பயிற்சி நிலையங்களிலும், இதைப் போன்ற ஏனைய நிலையங்களிலும் பயிற்சி பெற்றவர்களுக்கு ஓரளவு பொறியியல் சார்ந்த தொழில்களில் சுய வேலை வாய்ப்பு பெற ஊக்குவிக்கப்படுகின்றனர். வணிக வங்கிகள் ரூ. 3,000 லிருந்து ரூ. 10,000 வரையில் நிதி உதவி வழங்குகின்றன. 31-12-1984 ஆம் நாள் நிலவரப்படி, சுமார் 3,326 பேருக்கு 1.35 கோடி ரூபாய் வரையில், நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம், கூடப்பாக்கம் கிராமத்தில் ரூ.30 இலட்சம் முதலீட்டுடன் கிராம வேலை வாய்ப்புத் திட்டச் சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இக் கிராமத்திலிருந்து 200 பேர் தெரிந்தெடுக்கப்பட்டு பல்வேறு தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகின்றனர். இவர்கள், அங்கு தொடங்கப்படவிருக்கும் தச்சு, பற்றவைப்பு, செங்கல் தயாரிப்பு, கையுறை தயாரிப்பு போன்ற பல்வேறு பிரிவுகளில் எடுத்துக் கொள்ளப்படுவர்.

பெரியார் மாவட்டத்தில், தேர்ச்சி பெற்றவர்களைக் கண்டறிய பகுதி வாரியான ஆய்வு ரூ. 1.10 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வருங்காலத்தில் வேலை வாய்ப்புத் திட்டத்தினைப் பெருமளவில் செயல்படுத்த இந்த ஆய்வு உதவும்.

ஆதரவற்ற திக்கற்ற மகளிருக்குத் தாங்கள் ஒரு பணி வாய்ப்பு பெறும்பொருட்டு நவீன முறையில் வீட்டைப் பராமரிப்பதில் பயிற்சி அளிக்கப்படும்.

குடும்பத்தில் ஒருவருக்கு வேலைவாய்ப்பு என்ற திட்டத்தின்கீழ் சுய வேலை வாய்ப்பினை உருவாக்குவதற்காக அமைக்கப்பட்ட அதிகாரக்குழு சென்னை மாநகரிலும் அதன் புறநகர்களிலும் வீட்டு வசதிப் பணி நிலையங்களை அமைத்தல், முட்டை மற்றும் கோழிக்கறி போன்ற பதார்த்தங்களை விற்கும் வண்டி திட்டம், ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றிற்கும் இரண்டு அல்லது மூன்று பிரிவு என்ற வீதத்தில் வேளாண்மைப் பணிக்கான நீர் விசையேற்றங்களைப் பழுது பார்ப்பதற்கான பணிப் பிரிவுகளை அமைத்தல் போன்ற பல திட்டங்களுக்கும் வீடு கட்டுமானப் பயிற்சித் திட்டத்திற்கும் அனுமதி அளித்துள்ளது.

தமிழகத்தில் மொத்தம் 38 தொழில் பயிற்சி நிலையங்கள் உள்ளன. அவற்றுள் 3 தொழில் பயிற்சி நிலையங்கள் பெண்களுக்கேயுரியன. இவற்றில் உள்ள இடங்களின் எண்ணிக்கை 14,728 ஆகும். பெண்களுக்கென்றே உள்ள 3 தொழில் பயிற்சி நிலையங்களில் உள்ள இடங்களின் எண்ணிக்கை 480 ஆகும். தொழில் பயிற்சி நிலையங்களில் சேருபவர்களின் எண்ணிக்கையும் பெருகி வருவதைச் சமாளிப்பதற்காக கோயம்புத்தூர், மதுரை, வடசென்னை ஆகிய இடங்களில் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் 1983-84 ஆம் ஆண்டில் அரசு, மூன்றாவது முறை மாற்றுப் பணியைக் (ஷிப்டு) கொண்டுவந்தது. மேலும் சேலத்தில் உள்ள தொழிற்பயிற்சி நிலையத்தில் அரசு, மூன்றாவது முறை மாற்றுப் பணியை 1984-85 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியுள்ளது. தொழிற்பயிற்சி நிலையங்கள் நான்கில், கொண்டுவந்த மூன்றாம் முறை மாற்றுப்பணியால் 788 இடங்கள் அதிகரித்துள்ளன. மேலும், அம்பத்தூர், கிண்டி ஆகிய இடங்களில் உள்ள தொழில் பயிற்சி நிலையங்களிலும் அடையாற்றில் உள்ள தொழிற்பயிற்சிப் பிரிவிலும், மாநிலத்தில் உள்ள மகளிர் பயிற்சியாளர்களுக்கு மேலும் அதிக வாய்ப்பளிக்கும் வகையில், தெரிந்தெடுக்கப்பட்ட ஆறு தொழில்களில் 96 பெண்களுக்குப் பயிற்சியளிக்க தனிப் பிரிவுகளை 1-9-84 முதல் தொடங்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

தமிழ்நாடு கிராமப்பகுதி இளைஞர் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கிராமப்பகுதி இளைஞர்களுக்கு 28 தொழில் பயிற்சி நிலையங்களில் பொறியியல் தொழில்களிலும் ஓரளவு பொறியியல் சார்ந்த தொழில்களிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம்**

தற்போது பணியாளர்களுக்கு அயல்நாடுகளில் வேலை வாங்கித் தரும் பணியை இந்நிறுவனம் தீவிரமாகக் கவனித்து வருகிறது. அயல்நாடுகளில் வேலை பெற விரும்பும் பணியாளர்களை இந்நிறுவனம் பதிவு செய்து கொள்கிறது. 31-12-1984 ஆம் நாளன்றுள்ளபடி, இந்நிறுவனத்தில் பதிவு செய்து கொண்டுள்ளவர்களின் எண்ணிக்கை 19,500 பேர் ஆகும். இந்நிறுவனம் ஐக்கிய அரபு எமிரட்ஸ், ஈராக், லிபியா, தெற்கு ஏமன், சவூதி அரேபியா ஆகிய நாடுகளுக்கு இதுவரையில் 1,130 பேரை அனுப்பியுள்ளது. அவர்கள் மூலமாக இந்தியாவிற்கு அந்நியச் செலவாணி வகையில் ஒவ்வோர் ஆண்டும் ரூ. 1.75 கோடி கிடைப்பதாக மதிப்பிடப்படுகிறது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழக அச்சகத்தில் ...



Licence No. TN/MS(C)/PP-23
பதிவு எண். M. 8676







சென்னையில் 24.6.85ல் நடைபெற்ற ஈத்முபாரக் விழாவில் மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா, மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன, மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு ஒய்.எஸ்.எம். யூசுப் ஆகியோர் கலந்து கொண்டனர்.



மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் திரு எஸ். பி. சவான் அவர்கள் மாண்புமிகு முதலவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களை அவரது இல்லத்தில 28.6.85 அன்று சந்தித்தார்.



மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு க. இராசாராம் அவர்கள், சிப்காட் திட்டடத்தில் நடைபெற்ற 'கேட்லாக் கண்காட்சி'யை 27.6.85 அன்று திறந்து வைத்தார்,

# கடமை தவறாத காவல் துறை

பொதுமக்களின் உயிர், உரிமை மற்றும் உடைமை ஆகியவற்றிற்குப் பாதுகாப்பு அளிப்பது அரசினுடைய அடிப்படைக் கடமையாகும். இந்தக் கடமையைத் திறம்பட ஆற்றுவதை அஸ்திவாரமாகக் கொண்டுதான் பொது மக்களின் நலனை மேம்படுத்துவதற்காகப் பல திட்டங்களை அரசு செயல்படுத்த வேண்டியுள்ளது. இது பற்றிய தெய்வப் புலவர் திருவள்ளுவரின் வாக்கை இங்கே சுட்டிக் காட்டுவது சாலப் பொருந்தும்.

''குடிபுறங்காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்''

சட்டம், ஒழுங்கைப் பேணிக்காப்பதும் குற்றங்களைக் கட்டுப்படுத்தி அகற்றுவதும் காவல் துறையினுடைய மிக முக்கியமான இரு பொறுப்புகளாகும்.

## தமிழ்நாடு அரசின் ஐந்தாண்டுப்பணிகள் தொகுப்பு மலர்

சட்டத்தின் பாதுகாவலர்களாகச் செயலாற்ற வேண்டிய காவல் துறையினர் சமுதாயம், பொருளாதாரம் குறித்த பல்வேறு வகையான சட்டங்களைச் செயல்படுத்த உதவி வருகின்றனர். அப்பொழுதுதான் சமூகநீதியை நிலை நிறுத்தி, விரும்பிய நன்மைகளைப் பெற்று அரசின் கொள்கைகளைத் திறம்படச் செயல்படுத்தமுடியும்.

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2016
குரோதன - ஆடி 1

மலர் : 16 இதழ் : 2

16-7-1985



**அக்கறை கொண்ட அரசு**

**விரைவான நற்பலன்களைக் கொடுக்கக் கூடிய திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்பதில் தமிழக அரசு நெருங்கிய அக்கறை கொண்டுள்ளது.**

**—பேரறிஞர் அண்ணா**

மக்களாட்சி நெறிகளின் அடிப்படையில் சமத்துவ சமுதாயத்தை உருவாக்க அரசு எடுத்துக் கொள்ளும் முயற்சிகளில் காவல் துறை ஓர் அரிய கருவியாய் அமைந்து உறுதுணை புரிகிறது. சட்டம் மற்றும் ஒழுங்கு சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் தமிழகக் காவல்துறை விழிப்புடனிருந்து நிலைமைகளைத் தெளிவாகக் கண்டறிந்து அரும்பணியாற்றுகிறது. மேலும் சூழ்நிலைகளின் பலவிதமான கூறுபாடுகளையும் நன்கு ஆராய்ந்தறிந்து ஏற்ற வழிமுறைகளைப் பின்பற்றுகின்றனர்.

குற்றங்களுக்கான பல அடிப்படைக் காரணங்களை ஆராய்ந்தறிவதற்கு ஏற்ற பயிற்சி பெற்றிருப்பதுடன் காவல்துறையினர் குற்றப் புலனாய்வு செய்வதில் அறிவியல் கருவிகளைப் பயன்படுத்தும் வாய்ப்பையும் பெற்றிருக்கின்றனர். நாடெங்கிலும் குற்றம் புரிந்து வந்த கொள்ளைக் கூட்டத்தினரின் செயல் முறையினைத் தமிழகக் காவல் துறையினர் கண்டறிந்து வெளிப்படுத்தியதுடன் பல குற்றவாளிகளை தங்களுடைய உயிருக்கு நேர்ந்த ஆபத்தையும் பொருட்படுத்தாது கைது செய்துள்ளனர். மேலும் பொதுமக்களுக்குப் பாதுகாப்பளிக்கவும் அவர்கள் உள்ளத்தில் பாதுகாப்புணர்வை வளர்க்கவும் காவல் துறையினர் அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகின்றனர்.

பொதுமக்களுக்கும், காவலர்களுக்கும் இடையே நல்லெண்ணம், கனிந்த நோக்கு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட சுமுகமான நல்லுறவு நிலவ வேண்டியது மிகவும் இன்றியமையாத் தேவையாகும். இன ஒற்றுமை, அமைதி ஆகியவற்றை நிலைநிறுத்தி செவ்வனே காவல்துறை பணியாற்ற வேண்டுமென்றால் இத்தகைய நல்லுறவு அனைத்து முயற்சிகளுக்கும். அடித்தளமாய் அமைந்துள்ளது.

1985ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1ம் தேதி நிலவரப்படி, தமிழ்நாடு காவல்துறையில் உள்ள காவல் பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 57,096. இவ்வாண்டில் மொத்



**காவல் துறையில் பணிபுரியும் அலுவலர்களுக்குச் சென்னை புதுப்பேட்டையில் கட்டப்பட்ட 604 குடியிருப்புகள், மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் 1.5.1984-ல் திறந்துவைக்கப் பெற்றன.**

தம் 1,210 காவல் நிர்வாகப் பணியிடங்களும 221 அமைச்சுப் பணியிடங்களும் மற்றும் 71 தொழில் நுட்பப் பணியிடங்களும் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் ஏழு அணிகளும் சேமப்படையின் 180 அணிகளும் சட்டம் ஒழுங்கைத் திறம்படப் பேணிக் காத்திட உள்ளூர் காவல் அதிகாரிகளுக்கு உதவி வருகின்றன.

தமிழ்நாடு காவல் துறையில் பெண் காவல்படைப் பிரிவு ஒரு முக்கிய பங்கு பெற்றுள்ளது. சாலைப் போக்குவரத்தினை ஒழுங்குபடுத்துதல் மற்றும் பொதுமக்களுக்கு உதவுதல் ஆகிய பணிகளை இந்தப் பிரிவு ஆற்றி வருகிறது. பெண்களைச் சோதனை யிடுதல், கைது செய்தல், அவர்களை நீதிமன்றங்களுக்குக் கொண்டு செல்லுதல் மற்றும் இளம் குற்றவாளிகளைக் கவனித்துக் கொள்ளுதல் ஆகியவற்றில் பெண் காவலர்களின் பணி, இன்றியமையாததாக உள்ளது.

தற்போது இம் மாநிலத்தில் பெண் காவலர் பிரிவில் 82 பெண் சார்பு ஆய்வாளர்களும் 73 பெண் தலைமைக் காவலர்களும் மற்றும் 666 பெண் காவலர்களும் உள்ளனர்.

தமிழகக் காவல் துறையின் தகவல் தொடர்புப் பிரிவில் அண்மைக் காலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள குறிப்பிடத்தக்க முன்னேற்றமானது, காவல் துறையின் பணிப் பளுவை கணிசமான அளவிற்குக் குறைத்ததோடு மட்டுமன்றி பொதுமக்களுக்குச் சிறப்பான பணிகளை ஆற்றக்கூடிய பெரியதொரு வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள 965 காவல் நிலையங்களில் 903 காவல் நிலையங்களும் 98 உட்கோட்டங்களில் 56 உட்கோட்டங்களும் மீவுயர் அலைபிணைப்புக் கருவிகள் (V.H.F.) மூலம் இணைக்கப்பட்டுள்ளன. இதனால் மாநிலத் தலைமையிடத்தில் இருந்து பெரும்பாலான காவல் நிலையங்களுடன் நேரடியாக தொடர்பு கொள்ள முடிகிறது.

இதுவும் தவிர 861 காவல் நிலையங்களிலும் 162 புறக் காவல் நிலையங்களிலும் தொலைபேசி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கம்ப்யூட்டர்களும், மின்னணுவியல் சாதனங்களும் கடுமையான உடலுழைப்பைத் தவிர்க்க வழிவகை செய்துள்ளன. காவல் துறையில் புள்ளி விவரங்களைச் சேகரித்து வைத்திருக்கவும், தொலைதூரத்திலுள்ள காவல் துறை அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளவும், கைரேகைகளைத் தெரிந்து கொள்ளவும் மற்றும் தரம் பிரிக்கவும், காவல் துறையினருக்கும் ஆராய்ச்சியாளருக்கும் தேவையான புள்ளி விவரங்களைச் சேகரித்து வைக்கவும் கம்ப்யூட்டர்கள் காவல் துறையில் பயன்படுத்தப்படுகின்றன.

மத்திய அரசின் காவல் துறையினை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் 1971ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட தமிழகக் காவல் துறை கம்ப்யூட்டர் பிரிவு, குற்றங்களைத் தடுத்திடவும், கண்டுபிடித்திடவும் புள்ளியியல் சேகரிப்புக்கும் பெரிதும் பயன்பட்டுவருகிறது.

சென்னை விரல் ரேகைப் பதிவுக்கூடத்தில் 2,22,900 குற்றவாளிகளின் விரல் ரேகைகள் கொண்ட கம்ப்யூட்டர் புள்ளி விவரங்கள், பெருந்தொகுப்பு தயாரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ளன. கம்ப்யூட்டரில் வைக்கப்பட்டுள்ள குற்றவாளிகளின் விரல் ரேகையுடன் சந்தேகப்பட்ட நபரின் விரல் ரேகையை ஒப்பிட்டுப் பார்த்து அதுபற்றிய விவரங்கள் மாவட்ட காவல்துறையினருக்கு உடனுக்குடன் அனுப்பப்பட்டு வருகின்றன.

**இந்தியாவிலேயே முதன்முறையாக ஆன் லைன் கம்ப்யூட்டர் இயக்கமுறை தமிழகத்தில் தான் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பது பெருமை மிகுந்த சாதனையாக எடுத்துக் கூறத் தக்கது.**

இம்முறையின்படி சென்னையிலுள்ள கம்ப்யூட்டரிடமிருந்து நேரடியாகத் தேவையான தகவல்களை மாவட்டத் தலைமையிடங்களிலிருந்து கொண்டே பெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இதுவரை சென்னையிலுள்ள கம்ப்யூட்டர் 18 காவல் மாவட்டத் தலைமையிடங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. இம்முறையினால் குற்றங்கள் பற்றியும், குற்றவாளிகள் விரல் ரேகைகள் போன்ற விவரங்களையும் உடனுக்குடன் மாவட்டத் தலைமையிடங்களிலேயே பெற்றிட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

**இந்தியாவிலேயே தமிழகத்திலுள்ள விரல் ரேகைப் பதிவுக்கூடம்தான் மிக நவீன முறையில் அமைக்கப்பட்டதொன்றாகும்.** தமிழ்நாட்டிலுள்ள எல்லாக் காவல் நிலையங்களிலும் கைது ஆகும் குற்றவாளிகளையும் சந்தேகக் குற்றவாளிகளையும் பற்றிய முன் தகவல்களை அறிந்து புலன் விசாரணை செய்யும் அதிகாரிகளுக்கு இப்பிரிவு உதவி அளித்து வருகிறது. மாநிலத்தின் தலைநகரிலும், எல்லா காவல் மாவட்ட தலைமையிடங்களிலும் விரல்ரேகைப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன.

இந்தப் பிரிவில் பல்வேறு குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்ட சற்றேறக்குறைய 5.89 இலட்சம் குற்றவாளிகளின் விரல் ரேகைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஒவ்வொரு காவல் மாவட்டத்திற்கும் ஒரு நடமாடும் தடய அறிவியல் ஆய்வகம் அமைக்கப்பட்டு, மொத்தம் 21 ஆய்வகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்துறை தடய அறிவியலில் இரண்டாண்டு முழுநேரப் பட்ட மேற்படிப்பு வகுப்புகள் நடத்தி வருகிறது. இவ்வகுப்பில் மொத்தம் 12 இடங்கள் உள்ளன. சென்னைப் பல்கலைக் கழகம் தடய அறிவியல் பண்டாரகர் (Ph.D.) பட்டம்வழங்குவதற்கு தமிழக தடய அறிவியல் துறையை ஆராய்ச்சி நிலையம் ஆக இயங்க அனுமதி அளித்துள்ளது.

1979-80 முதல் 1983-84 வரை காவல் துறை மேல்நிலைப் பணியாளர்களுக்கு 524 குடியிருப்புக்கள், கீழ்நிலைப் பணியாளர்களுக்கு 830 குடியிருப்புகள் மற்றும் 5,097 படைவீடுகள் (Barracks) கட்டுவதற்கு ஏழாவது நிதிக்குழு ரூபாய் 6.75 கோடி ஒதுக்கியுள்ளது. இதனைப் பயன்படுத்தி, தமிழ்நாடு அரசு முதுநிலைப் பணியாளர்களுக்கு 523 குடியிருப்புகள் கட்டவும் காவல்துறை சார்நிலைப் பணியாளர்களுக்கு 3,487 குடியிருப்புகளும் 2,445 படைவீடுகளும் கட்டுவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. ஒதுக்கியுள்ள மானியத்தைக் காட்டிலும் அதிகமாக ஏற்படும் கூடுதல் செலவாகிய ரூ. 13.30 கோடியை மாநில அரசே ஏற்றுக் கொள்ளும். இந்த 6,455 வீடுகளும் விரைவில் கட்டிமுடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக்கழகம் திருச்சிராப்பள்ளி மாவட்டம் நாவல்பட்டில் ரூ. 164 லட்சத்தில் 670 வீடுகளைக் கட்டியுள்ளது. இவ்வீடுகள் ,பணியாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

1984ஆம் ஆண்டில், 22 காவல் துறை அலுவலர்களுக்கும் காவலர்களுக்கும் குடியரசுத் தலைவரின் காவலர் பதக்கமும், காவல்துறைப் பதக்கமும் வழங்கப்பட்டன. 1984ஆம் ஆண்டு குடியரசுத் தலைவரின் ஊர்க்காவல் படைப்பதக்கம், இரண்டு ஊர்க் காவல் படையினருக்கு வழங்கப்பட்டன. 1984ஆம் ஆண்டு விடுதலை நாளன்று இரண்டு ஊர்க்காவல் படையினருக்குப் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

வீரச் செயலுக்கான தமிழ்நாடு முதலமைச்சரின் காவலர் பதக்கம் நான்கு காவல் துறை அலுவலர்களுக்கும், காவலர்களுக்கும் 1984ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது. சிறப்புமிகு பணிக்காக 48 காவல் துறை அலுவலர்களும் காவலர்களும் முதலமைச்சரின் காவல் பதக்கத்தைப் பெற்றனர். 1984ல் முதலமைச்சரின் ஊர்க்காவல் படை பதக்கத்தை நான்கு ஊர்க்காவல் படையினர் பெற்றனர்.

பத்தாண்டு பணிமுடித்தவர்களும் எவ்விதக் குறையுமின்றி சிறப்புமிக்க பணிசெய்த தலைமைக் காவலர்களும், காவலர்களும் மற்றும் இவர்களுக்குச் சமமாக பதவி வகிப்பவர்களும், இத்திட்டத்தில் பதக்கம் பெறத்தகுதியுடையவராகிறார்கள். 1982ஆம் ஆண்டு பொங்கல் தினத்தன்று அரசு முதல் தடவையாக இத்திட்டத்தை அறிவித்தது. 1984ஆம் ஆண்டில், 1,378 பேருக்கு இப்பதக்கம் வழங்கப்பட்டது. 1985இல் 1,263 பேர் இப் பதக்கம் பெற்றார்கள். இவ் விருதை அரசு ஆண்டு தோறும் பொங்கல் தினத்தன்று அறிவிக்கிறது.

காவல்துறையைச் சேர்ந்த அரசிதழ் பதிவு பெறா அனைத்து ஊழியர்களின் நலத்திற்காக தமிழ்நாடு காவலர் நலநிதி தொடங்கப்பட்டது.

மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தவும், அதில் காவலர்பங்கினைப்பற்றி அறிந்து அதற்கேற்றாற்போல் நடந்துகொள்ள வேண்டியதன் அவசியம் பற்றியும் காவலர்களுக்கு பயிற்சிக் காலத்திலேயே கற்றுத் தரப்படுகிறது. குற்றங்கள் நிகழாவண்ணம் தடுத்திடவும், குற்றவாளிகளைக் கண்டுபிடித்திடவும் அமைக்கப்பட்டுள்ள கிராமக் கண்காணிப்புக் குழுக்கள் பொது மக்கள்-காவல் துறையினரிடையே ஏற்பட்டுள்ள நல்லுறவை விளக்கும் சாதனையாக அமைந்துள்ளது.

# தமிழ்நாடு என்று சொல்லடா!
# தலைநிமிர்ந்து நில்லடா!



நான் சமீபத்தில் தமிழ்நாடு, பாண்டிச்சேரி, மாநிலங்களில் என் குடும்பத்தோடு விரிவாகச் சுற்றுப் பயணம் செய்துதிரும்பியிருக்கிறேன். இதற்கு முன்னால், தமிழ்நாட்டைப் பார்த்து வந்த எனது உறவினர்களிடமிருந்து, முக்கியமாக இராமேஸ்வரம், மீனாட்சி கோயில், கன்னியாகுமரியில் விவேகானந்தர் நினைவு இல்லம் ஆகியவற்றுக்குப் புண்ணிய யாத்திரை செய்து வந்த பெரியவர்களிடமிருந்து பல விஷயங்களை நான் கேட்டறிந்து இருக்கிறேன். ஆனால், இம்முறை இவற்றையெல்லாம், நானே என் கண்ணால் பார்த்தேன். இந்த இடங்களுக்கு மட்டுமல்லாமல் மலைகளின் ராணி உதகமண்டலம், மாமல்லபுரம், சுசீந்திரம், கன்னியாகுமரியில் சூரிய அஸ்தமனம் ஆகியவற்றையும் நான் பார்த்தேன்.

இந்த இடங்களைப் பார்த்ததில் எனக்குத்தோன்றுவது என்னவென்றால் இந்துசமயம், தர்மம், புராதன இந்துக் கலாச்சாரம், மரபு, தத்துவம், பழக்க வழக்கங்கள் முதலிய பல அம்சங்களில் தமிழ்நாடு முன்னணியில் இருக்கின்றது. அதற்காக நான் புனித உணர்வுடன் தலை வணங்குகிறேன்.

எனக்குத் தமிழ்மொழி புரியாத பிரச்சனை இருந்தபோதும், உள்ளூர் மக்கள் என்பால் காட்டிய அன்பும், அரவணைப்பும் என்னை மிகவும் கவர்ந்துவிட்டன.







தமிழர்கள் அனைவருமே, சுயநலக்காரர்கள் என்ற ஒரு குற்றச்சாட்டைச் சுமத்த நான் விரும்புகிறேன். நீங்கள் எல்லாம் எவ்வளவு அமைதியான ஒரு வாழ்க்கையை வாழ்கிறீர்கள். உங்களிடையே எந்த விதமான வகுப்பு, சமய, அரசியல், மொழி, தகராறுகளே இல்லை. உங்களுடைய சமூக வாழ்க்கை மிக உன்னத நிலையில் இருக்கிறது. இந்த வகையில் உங்களுடைய தலைவர்கள் முன் முயற்சி எடுப்பார்களேயானால், இந்தியாவின் இதர மாநிலங்களும் அதைப் பின்பற்றக் கூடிய நிலை ஏற்படக்கூடும். நீங்கள் எல்லோருடனும் எந்த விதமான வகுப்பு, சமய, அல்லது ஏழை பணக்காரன் என்ற வேறுபாடு இன்றி, மற்றவர்களோடு கலந்து உணவு அருந்துகிறீர்கள். உங்களுடைய கல்வித்தரம் தலைசிறந்து விளங்குகிறது. நீங்கள் ஏன் நாட்டின் மற்றப் பகுதிகளுக்கு முக்கியமாக வடபகுதிக்கு ஒரு பாரதியை, ஒரு பெரியாரை, ஒரு அண்ணாவை, ஒரு டாக்டர் எம்.ஜி.ஆரைக்கொடுக்கக்கூடாது அந்த இடங்களில் இத்தகைய தலைவர்கள் மிகவும் தேவைப்படுகிறார்களே!



இறுதியாகத் தமிழ்ப் பெரு மக்களாகிய உங்கள் அனைவருக்கும், உங்களது மிகச் சிறந்த எழுத்தோவியங்களுக்காக எனது பணிவார்ந்த வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் ஒரு சிறு வியாபாரி. அடிக்கடி தமிழ்நாட்டிற்கு வர முடியாது. ஆனால் ஒன்றுமட்டும் உறுதி. நான் உயிரோடு வாழும் வரை ஆண்டுக்கு ஒரு முறை தமிழகம் வந்து தமிழர்களோடு பழகி, எனது அறிவைப் பெருக்கிக் கொள்வேன் என்பது உறுதி.

—ஜி.பி.சர்மா,
பிலாய்.

[நன்றி: ''இந்து'' 5.7.1985 ஆசிரியருக்குக் கடிதம் பகுதி.]











# அச்சுத் துறை ஆற்றும் பணிகள்

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை துவக்கப்பட்டு 153 ஆண்டுகளாகின்றன. 1831-ஆம் ஆண்டு அச்சக பிரிவிற்காக 10 பணியாட்களைக்கொண்டு தலைமைச் செயலக அரசிதழ்களை அச்சிடுவதற்காக மட்டுமே நிறுவப்பட்ட இந்த அச்சகம், பணியாளர்களின் எண்ணிக்கையிலும், அளவிலும் கடந்த ஆண்டுகளில் படிப்படியாக வளர்ந்துள்ளது.

மூன்று அச்சகங்கள் சென்னை நகரிலும், ஐந்து வட்டார மற்றும் கிளை அச்சகங்கள் வெளியூர்களிலும் செயற்பட்டு வருகின்றன. தவிர சென்னை இராஜாஜி சாலையில் எழுதுபொருள்கிடங்கு அலுவலகமும், இரண்டு அரசு வெளியீடுகள் விற்பனை நிலையமும் இயங்கி வருகின்றன. இத்துறையில் மொத்தம் 6,056 பணியாளர்கள் பணி புரிகின்றார்கள்.

**அச்சிடும் பிரிவு:**

எழுதுபொருள்-அச்சுத் துறைக் கட்டுப்பாட்டின்கீழ் பின்வரும் அச்சுப் பிரிவுகள் உள்ளன:—

1. அரசு மைய அச்சகம், வள்ளலார் நகர், சென்னை.

2. அரசு கிளை அச்சகம் (உயர்நீதி மன்ற வளாகம்), சென்னை.

3. அரசு கிளை அச்சகம் (ஆனைக்காரன் தோட்டம்). குனை, சென்னை.

4. அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை.

5. அரசு வட்டார அச்சகம், சேலம்.

6. அரசு வட்டார அச்சகம், திருச்சிராப்பள்ளி.

7. அரசு வட்டார அச்சகம், விருத்தாசலம்.

8. அரசு வட்டார அச்சகம், மதுரை.

மைய அச்சகத்தில் அச்சிடும் பணிகளில் பெரும் பகுதி அச்சிட்டு வழங்கப்படுகிறது. தலைமைச் செயலகம், துறைத் தலைவர்கள் மாநில கணக்காய்வுத் தலைவர் (தமிழ்நாடு) பொதுத் துறைக்கழகங்கள்ஆகிய துறைகள் மூலம் பெறும் அச்சிடும் பணிகளையும் மற்றும் வரவுசெலவுத் திட்ட ஆவணங்கள், தமிழ்நாடு அரசிதழ்கள், மந்தன ஆவணங்கள், வினாத்தாள்கள் போன்ற கடும் மந்தன இனங்கள், நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள் ஆகியவை அச்சடிக்கப்படுகின்றன. மைய அச்சகம் 1984-ல் செய்து முடித்துள்ள சில முக்கிய பணிகள் வருமாறு:

1. நாடாளுமன்றம், சட்டப் பேரவை வாக்காளர் சீட்டுகள்.

2. தமிழ்நாடு சட்டமன்ற மேலவை, பேரவை உறுப்பினர்களின் விவாதங்கள்.

3. முதலமைச்சரின் மதிய உணவுத் திட்ட விளக்கங்களின் கையேடுகள், நெறிமுறைக் குறிப்புகள், சிறு வெளியீடுகள், விரிவான உத்தரவுகள்.

4. இடைநிலைப்பள்ளி தேர்வுகள், மேல் நிலைப்பள்ளித் தேர்வுகளுக்குரிய விண்ணப்பப் படிவங்கள், நெறிமுறைக் குறிப்புகள், சிறப்புக் கூடுதல் விடைத்தாள்கள்.

5. பல்லவன் போக்குவரத்துக் கழக மாதாந்தரப் பயணச் சீட்டுகள். எல்லாவழித் தட அடையாள வில்லைகள்.

6. பரிசுச் சீட்டுகள்.

7. அட்டவணை நாட்குறிப்பேடுகள், சிறப்பு நாட்குறிப்பேடுகள், அமைச்சர்களின் நாட்குறிப்பேடுகள்.

8. சுவர் நாட்காட்டிகள், மூன்று மாத நாட்காட்டிகள்

**அரசு வெளியீடு விற்பனை நிலையம், சென்னை.**

சென்னை அண்ணா சாலையில் உள்ள அரசு வெளியீடுகள் விற்பனை நிலையமும், சென்னை உயர் நீதிமன்றக் கட்டட வளாகத்திலுள்ள கிளை விற்பனை நிலையமும், உதவி இயக்குநரின் கட்டுப்பாட்டில் 58 பணியாளர்களுடன் செயற்பட்டுவருகின்றன.

இந்த வெளியீடுகள் விற்பனை நிலையம், சட்டங்கள், விதிகள். விதிக்கோவை, நடைமுறை நூல்கள், அரசிதழ்கள், செய்தி அறிவிப்பு வெளியீடுகள் மற்றும் பணிப் பதிவேடுகள் போன்ற அரசு வெளியீடுகளை விற்பனை செய்து வருகிறது. இந்திய அரசு வெளியீடுகளுக்கும் இது முகவரமைப்பாகச் செயற்படுகிறது.

**குடியிருப்புகள்:**

சென்னையிலுள்ள தண்டையார்ப்பேட்டையில் பணியாளர்களுக்கென 300வீடுகள் உள்ளன. இந்த வீடுகளில் மின்விசிறி. கம்பிவலை, பாதுகாக்கப்பட்ட குடிநீர் தெரு விளக்குகள் ஆகிய வசதிகளும் உள்ளன. இத்துறைப் பணியாளர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக ரூ. 127 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் மேலும் 232 குடியிருப்புகள் கட்டக் கருதப்பட்டுள்ளது.

**பன், தேநீர், பால் இலவசமாக வழங்குதல்:**

அரசு மைய அச்சகம், அதன் கிளை அச்சகங்கள் ஆகிய அனைத்திலும் பணிபுரியும் எல்லாப் பணியாளர்களுக்கும், பன், தேநீர் ஆகியவற்றிற்குப் பதிலாக ஒரு நபருக்கு மாதம் ரூ. 10 வீதம், படி வழங்கப்படுகிறது. மேலும், உலோகப் புகையினால் உடல் நல இன்னல்களுக்கு ஆட்படக் கூடிய பணியாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் 250 மில்லி லிட்டர் பாலுக்குப் பதிலாக நாளொன்றுக்கு ஒவ்வொரு பணியாளருக்கும் 0.60 காசுகள் வழங்கப்படுகிறது. இத்துடன் பலவகை ஊட்டச்சத்து மாத்திரைகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

# நலம் தரும் நகராட்சித் திட்டங்கள்



தமிழ்நாட்டில் தற்போது 98 நகராட்சிகளும், 8 நகரியங்களும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன.

**குறைந்த செலவிலான துப்புரவுத் திட்டம்.**

கழிப்பிடங்களைப் பராமரிப்பது நகராட்சிகளின் கடமைகளில் ஒன்றாகும். உலர் கழிப்பிடங்களை நல்ல முறையில் பராமரிக்கவில்லை எனில், நகரத்தில் தூய்மையைக் கெடுப்பதோடல்லாமல், சுகாதாரக் கேட்டையும் விளைவிக்கும். பெருமளவில் நகராட்சிகளின் மக்கள் தொகை மீள்திறனற்ற வளவாய்ப்பு ஆகியவற்றை கருத்திற் கொண்டு பார்த்தால் நகர்ப் பகுதிகளில் துப்புரவுப் பணிகளை முறையாக மேற்கொள்வது அறைகூவலான பிரச்சினையாகும். எனவே நகர்ப்புறப் பகுதிகளில் அவசரத் தேவையான முறையான துப்புரவுப் பராமரிப்புப் பணி தவிர்க்க முடியாத தேவையாக கருதப்பட்டது. எல்லா வகையைச் சேர்ந்த மக்களுக்கும் உதவி செய்யும் நோக்குடன் "குறைந்த செலவிலான துப்புரவுத் திட்டம்" என்னும் புதிய திட்டம் நகர்ப் பகுதிகளிலும் கிராமப் பகுதிகளிலும் கொண்டு வரப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் குறைந்த செலவிலான ஆராய்ச்சி மற்றும் செயல் திட்டத்தில் கழிப்பிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

**பொதுக்கழிப்பிடங்கள்.**

சென்னை மாநகரிலுள்ள 894 பொதுக்கழிப்பிடங்களை மாநகராட்சி பராமரித்து வருகிறது. இவற்றில் 99 கழிப்பிடங்கள் கட்டணக் கழிப்பிடங்கள் ஆகும். எஞ்சியுள்ள 795-ம் பொதுக் கழிப்பிடங்களாகும். இவற்றைச்சுத்தம் செய்ய 1,112 ஊழியர் ஈடுபடுத்தப்பட்டு வருகிறார்கள். கட்டணக்கழிப்பிடங்களின் மூலம் ஆண்டிற்கு ரூ. 4.96 இலட்சம் வருமானம் வருகிறது. பொதுக் கழிப்பிடங்கள் யாவற்றிற்கும் தண்ணீர் வசதி செய்யப் பட்டுள்ளது. தண்ணீர் வசதி இல்லாத கழிப்பிடங்களுக்கு 'இந்தியா மார்க்-2' பம்புடன் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப் பட்டுள்ளன. பொதுக்கழிப்பிடங்களைப் பராமரிக்க 1985—86 ஆண்டில் ரூ. 22 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு கட்டடங்கள் கட்டுதல் :**

106 நகராட்சிகள்/நகரியக் குழுக்களில் 100 நகராட்சிகள் நகரியக் குழுக்கள் 1040 ஆரம்பப் பள்ளிகளையும் நடுநிலைப் பள்ளிகளையும் பராமரித்து வருகின்றன. இப்பள்ளிகளில் சுமார் 3,43,820 மாணவ, மாணவிகள் படிக்கின்றனர். இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டுவரும் 1040 ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 254 பள்ளிகள் வாடகைக் கட்டடங்களிலும் 126 பள்ளிக்கூடங்கள் கூரை வேய்ந்த கொட்டகைகளிலும் அமைந்துள்ளன. நகராட்சிகள் நகரியக் குழுக்கள் வாடகை கட்டிடங்களில் ஆரம்ப நடுநிலைப் பள்ளிகளை நடத்தி வருவதற்காக ஆண்டொன்றுக்கு வாடகையாக ரூ. 7.85 இலட்சம் செலுத்த வேண்டியுள்ளது. எஞ்சிய 786 பள்ளிகளில் பெரும்பான்மையான பள்ளிகளில் போதுமான இட வசதியில்லை. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தைச் செயல்படுத்துவதால் மாணவ, மாணவிகள் எண்ணிக்கை அதிகரித்ததைபொட்டி இப் பள்ளிகளில் கூடுதலான இடவசதியை விரைவில் ஏற்படுத்துவது அவசியமாகியுள்ளது. நகராட்சி குழுக்கள் தங்கள் சொந்த நிதி வாயில்களிலிருந்து இத்திட்டத்தை மேற்கொள்ளுவதற்கு அவற்றிடம் போதுமான நிதி வசதியில்லை. எனவே ஒவ்வொரு வகை நகராட்சிகளையொட்டி விகிதாச்சார அடிப்படையில் வழங்கப்படும் மானிய வடிவில் நிதியுதவி அளிப்பதன் மூலம் நகராட்சிகளுக்கு நகரியக் குழுக்களுக்கு நிதி உதவி மானியமாக அளிக்க அரசு முன்வந்துள்ளது. 1984-85 ஆம் வருடத்தில் 22 நகராட்சிகளுக்கு பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ. 15 இலட்சம் வழங்கப்பட்டு உள்ளது. வகை நான்கு மற்றும் மூன்றின் கீழ் வரும் நகராட்சிகள் 1980-81 முதல் 1984-85 வரையுள்ள ஆண்டுகளில் தேர்ந்தெடுக்கப்பட்டு 197 பள்ளிக் கட்டடங்கள் ரூ. 114.320 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு நகராட்சி பள்ளிகளில் இடவசதி பெருக்கப்பட்டுள்ளது. தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ரூ. 197.48 இலட்சம் செலவில் 224 பள்ளிக் கட்டுமானப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது கட்டப்பட்ட பள்ளிக் கட்டடங்கள் சுமார் 18,898 மாணவ மாணவியர்களுக்கு இடவசதி அளித்துள்ளன.

**முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் :**

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு திட்டம் 2 வயது முதல் 4 வயது முடிய உள்ள குழந்தைகளுக்காக 106 நகராட்சிகளிலும் நகரியக் குழுக்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை 3,95,741 ஆகும். இத்திட்டத்தின் கீழ் 2,12,397 குழந்தைகள் சத்துணவு பெறுகிறார்கள். இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக தற்போது செயல்பட்டு வரும் சத்துணவு மையங்களின் மொத்த எண்ணிக்கை 2965 ஆகும். இவற்றில் 176 மையங்கள் வாடகையின்றி பெற்ற கட்டிடங்களிலும் 210 மையங்கள் வாடகைக் கட்டடங்களிலும் 2579 மையங்கள் இத்திட்டத்தின் கீழ் புதியதாக கட்டப்பட்ட கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. சத்துணவு பெறும் 2,12,397 குழந்தைகளில் 1,05,155 பேர் சிறுவர்களும் 1,07,242 பேர் சிறுமிகளும் ஆவர். இவர்களில் 65,825 பேர் ஆதி திராவிடர், பழங்குடியினரைச் சேர்ந்தவர்களாவர்.

சென்னை மாநகராட்சி 25 உயர்நிலை, 10 மேல்நிலைப்பள்ளிக் கூடங்களை நிர்வகித்து வருகிறது. எல்லாப்பள்ளிக் கூடங்களும் மாநகராட்சியின் சொந்தக்கட்டடங்களில் உள்ளன. இவற்றில் பயிலும் மாணவ மாணவிகளின் எண்ணிக்கை 32,650. ஆசிரியர் மற்றும் இதர ஊழியர்களின் எண்ணிக்கை 1,529 ஆகும்.

மேற்கண்ட பள்ளிக்கூடக் கட்டடங்களைப் பராமரிக்க 1985—86 ஆம் ஆண்டிற்கு ரூ. 8.25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. உயர் நிலை, மேல்நிலைக் கல்விக்கு 1985—86 ஆம் ஆண்டில் ரூ. 254.15 இலட்சம் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1985—86 ஆம் கல்வி ஆண்டில் நுங்கம்பாக்கம் பெண்கள் மேல் நிலைப்பள்ளியில் 'கம்ப்யூட்டர் கல்வி' மேற்கொள்ளப்படும். இதற்காக மூன்று முதுநிலைப்பட்டதாரி ஆசிரியர்கள் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளார்கள். தேசியக்கல்வி ஆராய்ச்சிப்பயிற்சி நிறுவனத்தினரால் நன்கொடையாக வழங்கப்பட்ட கம்ப்யூட்டர் மேற்குறித்த பள்ளிக்கூடத்தில் நிறுவப்பெற்றுள்ளது.



# தஞ்சாவூர் விற்பனைக்குழு, தஞ்சாவூர்



தஞ்சாவூர் விற்பனைக்குழுவில் கீழ்க்கண்ட 37 இடங்களில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் இயங்கி வருகின்றன. இங்கு விவசாயிகள் கொண்டுவந்து விற்கும் விளைபொருள்களுக்குத் தரகோ, கமிஷனோ எதுவும் கொடுக்க வேண்டியதில்லை. விளை பொருள்களை சரியான எடைவிட்டு, ஏலத்தில் வைத்து, போட்டியின் மூலமாக நியாயமான உயர்ந்த விலையும், உடனடிப் பணமும் கிடைக்கச் செய்கிறது. மற்றும் விவசாயிகள் விளை பொருள்களைத் தற்காலிக இருப்பு வைக்க மற்றும் இதர அனைத்துச் சௌகரியங்களும் செய்யப்படுகின்றன.

எனவே, தஞ்சாவூர் மாவட்ட விவசாயப் பெருமக்கள் அனைவரும் தங்கள் விளை பொருள்களைக் கீழ்க்கண்ட ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்குக் கொண்டுவந்து செலவின்றி விற்பனை செய்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

1) தஞ்சாவூர், 2) வல்லம், 3) பூதலூர், 4) பாபநாசம், 5) அம்மாப்பேட்டை, 6) கும்பகோணம், 7) குத்தாலம், 8) சீர்காழி, 9) செம்பனார்கோவில், 10) பூந்தோட்டம், 11) திருவாரூர், 12) கொரடாச்சேரி, 13) மன்னார்குடி, 14) மதுக்கூர், 15) அதிராம் பட்டினம், 16) பட்டுக்கோட்டை, 17) பேராவூரணி 18) முத்துப்பேட்டை 19) ஒரத்தநாடு 20) திருத்துறைப்பூண்டி, 21) கீவளூர், 22) வேதாரண்யம், 23) நாகபபட்டினம், 24) வடுவூர், 25) கோட்டூர், 26) நீடாமங்கலம், 27) திருப்பனந்தாள், 28) மயிலாடுதுறை, 29) திருவையாறு, 30) குடவாசல், 31) வலங்கைமான், 32) பாப்பாநாடு, 33) திருமருகல், 34) திருப்பூண்டி, 35) தகட்டூர், 36) திருக்கடையூர், 37) திருவோணம்.

ப. இராமசாமி, பி.ஏ.,
*செயலாளர்*

என். கிருஷ்ணமூர்த்தி,
பி.எஸ்ஸி.,(விவ)
*தனி அலுவலர்*





# தமிழ்ப் பண்பாட்டு நிலையம்

புதுடெல்லியில் சுமார் ஒரு இலட்சம் தமிழ்க் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இவர்கள் தவிர ஆயிரக்கணக்கான தமிழர்கள் டெல்லி வருகிறார்கள்.

தமிழர்களும் வேறு இனத்தவர்களும், மேலை நாட்டவர்களும் தமிழகப் பண்பாட்டைத் தெரிந்து கொள்ளும் வகையில் தமிழ்ப் பண்பாட்டு நிலையம் புதுடெல்லியில் தனியாக அமைந்து செயல்படவிருக்கிறது. அமையவிருக்கும் நிலையத்தில் ஒரு நூலகமும், கலைப் பொருட்கள் கொண்ட பொருட் காட்சியும் அமையவிருக்கின்றன. கலை விழாக்கள் நடத்துவதற்கும், இசை நாடகங்கள் போட்டு கேட்பதற்கும் அந்த நிலையத்தில் வாய்ப்பு ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக நிரந்தரக் கட்டடம் ஒன்றைக் கட்டுவதற்கும் அரசு ஆலோசனை செய்து வருகிறது.

தற்போது பண்பாட்டு நிலையம் ஒன்று புதுடெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் சிறிய அளவில் இயங்கி வருகிறது.

புதுடெல்லியில் உள்ள நேரு வாழ்ந்த இல்லம் - தீன்மூர்த்தி பவனம் இப்போது நினைவு மண்டபத்தில் பிற மாநிலங்கள் பற்றிய விவரங்கள் அங்கே வைக்கப் பட்டுள்ளன. அது போல் தமிழக வரலாற்று நூல்கள் அங்கே இடம் பெறுவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும். மத்திய அரசையும் வற்புறுத்தும்.

தமிழகத்தில் 108 தொழில் நுட்பப் பயிலகங்கள் நடைபெற்று வருகின்றன. இவற்றில் தொழில் நுட்பப் பயிற்சி நிலையங்கள் 23, அரசு மானியம் பெறுபவை 35, சுயநிதி ஆதாரத்துடன் 50 தொழில் நுட்பப் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் அனைத்திலும் ஆய்வகங்கள் மற்றும் தொழிற் பயிற்சிக் கூடங்கள் அமைந்துள்ளன.

அண்மையில் துவக்கப்பட்ட பயிற்சிப் பள்ளிகளில் வசதி இல்லாமல் இருந்தால் அருகிலுள்ள வசதியுள்ள பள்ளிகளில் உள்ள ஏற்பாடுகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

அரசு விதிமுறைகளைப் பின்பற்றி 50 சதவிகித இடங்கள் சாதி அடிப்படையிலும் மீதி 50 சதவிகித இடங்கள் தங்கள் விருப் பம்போல் ஒதுக்கீடுகள் செய்து கொள்ளலாம். பாலிடெக்னிக்குகள், பள்ளிகள் நன்கொடை வாங்கக் கூடாது என்று அரசு உத்தர விட்டுள்ளது. அந்தப் பயிற்சிப் பள்ளிகளைக் கண்காணிக்கவும் தனி ஆய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றன.



உலகப் புகழ் பெற்றது!

ஒவ்வொருவரும் உபயோகிப்பது!!

# சென்டெக்ஸ்

## கைத்தறித் துணிகள்

எங்களது தயாரிப்புகள்:

படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள், மேஜை விரிப்புகள்,
அலங்காரத் திரைத்துணிகள், துண்டுகள், டர்க்கித்துண்டுகள்
சீர்சக்கர் ரகங்கள், பாலியஸ்டர் சூட்டிங்குகள், சர்ட்டிங்குகள்

தந்தி: 'சென்டெக்ஸ்' போன்: 32

தயாரிப்பாளர்கள்:

**சென்னிமலை நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிட். நெ. கே. 885.**

M.P. நாச்சிமுத்து மாளிகை,
தபால் பெட்டி எண்: 32,
சென்னிமலை-638051,
தமிழ்நாடு.

தலைவர்: பத்மஸ்ரீ M. P. நாச்சிமுத்து, பி.ஏ.பி.எல்.,

**சென்டெக்ஸ் ஷோ ரூம்**

1) 811, அண்ணாசாலை, சென்னை-600002.
2) நீல்கிரீஸ் பில்டிங்ஸ், 11, பிரிகேட் ரோடு, பெங்களூர்-560001.
3) எம்.ஜி.ஸி மார்க்கட் எதிர்ப்புறம், ராஜாராம் மோகன்ராய் ரோடு, சிராளா-523155.
4) 13, மேலச்சித்திரை வீதி, மதுரை-625001.
5) 73:225 பிரகாசம் பந்துலு ரோடு, இந்துப்பூர்-515201.
6) 489, பெரிய கடைவீதி, திருச்சி-620008.



# அறம் நிலைக்கிறது

இந்துசமய அறநிலைய நிர்வாகத்துறையின் பொறுப்பில் 34,236 சமய நிறுவனங்கள் உள்ளன. இவற்றுள் திருக்கோயில்கள் 32,199, திருமடங்கள் 55, திருமடங்களுடன் இணைக்கப்பட்டுள்ள திருக்கோயில்கள் 55, குறிப்பிட்ட அறக்கட்டளைகள் 1,721, சமண சமய நிறுவனங்கள் 17, மற்றும் அறக் கட்டளைகள் 189. இந்நிறுவனங்களில் 25,936 நிறுவனங்கள் உதவித் தொகை விதிக்கத்தக்க வருமானமுடையனவாகும்.

தற்போது தமிழ்நாட்டில் 1787 திருக்கோயில்கள், செயல் அலுவலர்கள் பொறுப்பில் உள்ளன. இக்கோயில்களை 492 செயல் அலுவலர்கள் நிர்வகித்து வருகிறார்கள்.

இத்துறையின் ஆளுகைக்குட்பட்ட திருக்கோயில்களில் அர்ச்சகர்கள் மற்றும் பூசாரிகள் உட்பட சுமார் ஒரு இலட்சம் பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

1-4-1981 முதல் இவர்களுடைய சம்பளம் மற்றும் படிகள் திருக்கோயில் வருவாயில் உயர்ந்த பட்சம் 30 சதவிகிதத்திலிருந்து உயர்த்தி 40 சதவிகிதம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் பணியாளர்களுக்கு, அநேகமாக அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளங்களும், படிகளும் வழங்கப்படுகின்றன. இதர திருக்கோயில்களில் 40 சதவிகிதத்திற்குட்படுத்தி பணியாளர்களின் சம்பள விகிதம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

திருக்கோயில் பணியாளர்களுக்கு ஆயுள் காப்பீட்டுக் கழகம் மூலம் (எல்.ஐ.சி) 1-7-1982 முதல்,க்ரூப் இன்சூரன்ஸ் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டப்படி ரூ.100க்கு மேல் சம்பளம் பெறும் திருக்கோயில் பணியாளர்கள் குறைந்த பட்சம் பிரிமியமாக ஆண்டொன்றுக்கு ரூ. 25 செலுத்த வேண்டும். ரூ. 100க்கு கீழ் சம்பளம் பெறும் பணியாளர்கள் எவ்வித பிரிமியமும் செலுத்த வேண்டியதில்லை. இத்திட்டம் அமல்படுத்தப்பட்ட பின்பு மரணமடைந்துள்ள 50 திருக்கோயில் பணியாளர்களின் குடும்பங்களுக்குத் தலா ரூ.5000 வீதம் இன்சூரன்ஸ் தொகை பெற்று வழங்கப்பட்டு உள்ளது.

ஏதேனும் ஒரு திருக்கோயில் பணியாளர் பணியிலிருக்கும் போது மரணம் அடைந்தால், அப்பணியாளர்களின் சேமநலநிதிக் கணக்கிலிருந்து ஈமச்சடங்கிற்காக ரூ.250 அளிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் உலோகத் திருமேனிகள் மிகவும் அதிகமாக உள்ள மாவட்டம் தஞ்சாவூர். அங்கு பாதுகாக்கப்பட வேண்டிய திருமேனிகள் சுமார் 1955 ஆகும்.

இதில் விலைமதிக்க முடியாத திருமேனிகளும் உள்ளன. திருமேனிகளைப் பாதுகாக்கவேண்டி தமிழக அரசு ரூ.10,00,000 நிதி ஒதுக்கீடு செய்து, திருவாரூரில் அருள்மிகு தியாகராச சுவாமி ஆலயத்தினுள் ஒரு சிலைக்காப்புக் கூடம் அமைக்க அரசு அனுமதி அளித்துள்ளது. இதற்கான மதிப்பீடு ரூ.7,88,000 ஆகும்.

இந்த மதிப்பீட்டின்படி எளிதில் உடைக்க முடியாத கான்கிரீட் கூரைகளும் உறுதியான தளமும் உள்ள பலமான கட்டடம் கட்டப்படும். திருமேனிகளை சிறந்த முறையில் வரிசைப்படுத்தி அமர்த்த தகுந்த இருக்கைகள் கட்டடத்தினுள்ளே அமைக்கப்படும். கட்டடத்தைச் சுற்றி காவலர்கள் கண்காணிப்பதற்காகப் பாதுகாப்பான சுற்றறை அமைக்கப்படும். வங்கிகளிலுள்ளது போன்ற பாதுகாப்பான



# பெரியார் மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட், ஈரோடு.

டெலக்ஸ் எண் : ED 201
தந்தி : Pcc Bank
தொலைபேசி : 77677, 77244, 74506

பொற்குவியல் டிபாசிட் திட்டத்தில் ரூ. 5000/-
முதலீடு செய்து 10 ஆண்டுகளில் ரூ. 15,534.50 பெறலாம்.

''தாய்'' சேமிப்புத் திட்டத்தில் மாதம் ரூ. 30/- வீதம்
7 வருடங்களுக்கு ரூ. 2520 - செலுத்தி பின்னர்
10 வருட முடிவில் ரூ. 11,495.53 அல்லது
20 வருட முடிவில் ரூ. 35,716.84 அல்லது
30 வருட முடிவில் 1,10,973.36 பெறலாம்.
ஷை தொகையுடன் விபத்துக் காலங்களில் ரூ. 6000 - வரை
இழப்பு ஈடு பெறலாம்.

அனைத்து டிபாசிட்டுகளுக்கும் 1/2% கூடுதல் வட்டி அளிக்கிறோம்.

கே. கே. பழனிசாமி, B.Sc. HDC
செயலாளர்

ஆர். ரங்கசாமி, Ex. M.L.A.
சேர்மன்




கதவுகள் பொருத்தப்படும். கட்டடம், கோயில் மதிற்சுவருக்குள் இருப்பதால், திருக்கோயில் கட்டடம் அமைப்பும் இருக்கும். இந்தக் கட்டடம் புதுமையாகவும் நுணுக்கமாகவும் அமைக்கப்பட இருப்பதால் இதைக் கட்டும் பணியைத் தமிழக அரசு நிறுவனமான 'கட்டுமானக் கழகம்' ஏற்று நடத்துகிறது.

தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையங்களுக்குச் சொந்தமான சுமார் 5.25 இலட்சம் ஏக்கர் நிலங்கள் உள்ளன.

1984ஆம் ஆண்டில் 2999.45 ஏக்கர் நிலங்களுக்கான ஆண்டு குத்தகை வருமானம் 2,21,642.75 அளவிற்கு அதிகப்படுத்தப்பட்டுள்ளது.

274.76 ஏக்கர் தரிசு நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டு அதன் மூலம் கூடுதல் வருமானம் அறநிலையங்களுக்குக் கிடைக்கிறது.

திருமுறை கண்ட மாமன்னன் இராசஇராச சோழனின் ஆயிரமாவது முடிசூட்டுவிழா நினைவைப் போற்றும் வகையில் பழமையான சிறப்பு வாய்ந்த குறைந்தது 60திருக்கோயில்களில் சுமார் ரூ. 70 லட்சம் உத்தேச மதிப்பீட்டில் 1985ஆம் ஆண்டில் திருப்பணி செய்து குடமுழுக்கு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திருப்பணிகள் முழுவதும் புரவலர்கள் மற்றும் உபயதாரர்கள் உதவி கொண்டே செய்து முடிக்கப்படும்.

1982-83ஆம் ஆண்டிற்குத் திருக்கோயில் திருப்பணிகளுக்காக அனுமதி வழங்கப்பட்ட அரசு மானியத்தொகை ரூ.20 லட்சத்தில் ரூ. 5 லட்சம் திருக்கோயில்களைச் சார்ந்த திருக்குளங்கள் மராமத்து மற்றும் சீரமைப்புப் பணிகளுக்காக, ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகை ரூ. 5 இலட்சம், 11 திருக்கோயில்களைச்சார்ந்த திருக்குளங்களின் மராமத்து மற்றும் சீரமைப்புப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தற்பொழுது ரூ.81.66 இலட்சம் மதிப்பீட்டில் 32 திருமண மண்டபங்கள் கட்டுமான வேலை நடைபெற்று வருகின்றது.

நமது ஆலயங்கள் வெறும் வழிபாட்டுக் கூடங்களாக மட்டுமல்லாமல் மக்களின் சமூக, பொருளாதார,கலை, கல்வி, கலாச்சாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் மையங்களாக மாமன்னன் இராசராசன் காலந்தொட்டு செயல்பட்டுந்த வரலாறு நமக்குத் தெரிவிக்கிறது. அந்த வகையில் சத்துணவுக் கூடங்களை அமைப்பதற்காகத் திருக்கோயில்கள் உபரி நிதியிலிருந்து ரூ. 59,20,000- 1982ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது. இத்தகைய சத்துணவுக் கூடங்கள் நிர்மாணிக்க ஆலய உபரிநிதியிலிருந்து நிதி மாற்றம் செய்ய இந்து சமய அறநிலையச் சட்டம் இடமளித்தாலும், இதனை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு,வழக்கு நிலுவையில் உள்ளதால் மேற்படி தொகை நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கியில் வைப்புநிதியாக வைக்கப்பட்டுள்ளது.

இந்து ஆதி திராவிடர், பிற்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த ஏழை இந்துக்கள் ஆகியோரின் திருமணம் ஒவ்வொன்றிற்கும், அரசின் கொள்கைக்கிணங்க, நிதி வசதி படைத்த கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ. 750 லிருந்து ரூ.1000வரை செலவிடப்படுகிறது. 15.8.81லிருந்து சுமார் ரூ. 8,40,899.70 செலவில் இதுவரை 1,092 திருமணங்கள் நடத்தப்பட்டன. இதில் 754 திருமணங்கள் ஆதிதிராவிட மக்களுக்கு நடத்தி வைக்கப்பட்ட திருமணங்களாகும். இத்தகைய திருமணங்கள் திருக்கோயில்களின் நிதியைக் கொண்டு தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

1984ஆம் ஆண்டு, ஆகஸ்டு 15, சுதந்திரநாள் அன்று நடந்த சிறப்பு வழிபாடும், பொது விருந்தும்.

தமிழகத்தில் இந்துக்கள் அனைவரும் சாதி வேறுபாடின்றி திருக்கோயிலில் வழிபாடு செய்வதற்கு எந்த இடையூறும் இல்லை. இந்த நிலைமையை எடுத்துக்காட்டும் வகையிலும், ஆதிதிராவிட மக்கள் இந்துசமய நிகழ்ச்சியில் அதிக அளவில் பங்கு கொள்வதற்கான வழிவகைகளை உயர்த்தும் பொருட்டும், சிறப்பு வழிபாடு மற்றும் பொதுவிருந்தும் தமிழகம் முழுவதும், 2,700க்கும் அதிகமான திருக்கோயில்களில் ரூ.13 இலட்சம் செலவில் 15.8.1984 சுதந்திர நாளன்று நடத்தப்பட்டன. இத்தகைய சிறப்பு வழிபாடுகளையும், பொது விருந்துகளையும் ஆண்டுதோறும் சுதந்திர தினத்தன்று நடத்துவதற்கு உரிய நெறிமுறைகள் வகுக்கப்பட்டு, திருக்கோயில்களில் தொடர்ந்து நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்து சமய அற நிலையத் துறை அரிய சமயக் கட்டுரையைக் கொண்ட 'திருக்கோயில்' என்ற மாத இதழை 1958ஆம் ஆண்டு முதல் நடத்தி வருகிறது.

கல்வி, மருத்துவம், கலாச்சாரம், சமூக நலம் ஆகியவை பற்றிய கல்வி நிலையங்கள் பல சமய நிறுவனங்களால் நிர்வகிக்கப்படுகின்றன. தமிழகத்தில்

உள்ள திருக்கோயில்களில் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அதிக வருமானம் பெறும் திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் நிதியிலிருந்து 1979ஆம் ஆண்டு முதல் கீழ்க்காணும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

1. திருக்கோயில் மருத்துவமனை, 7-7-1979 முதல் திருக்கோயிலுக்குச் சொந்தமான காரமடைத் தோட்டத்தில் 7 இலட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது.

2. பழனி அடிவாரத்திலிருந்து மலைக்கோயிலுக்குப் பக்தர்கள் எளிதாகச் செல்வதற்காக 14.3.81முதல் இரண்டாவது மின்னிழுவை ரயில்பாதை ரூ.18.15 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

3. பழனி ஆண்டவர் மகளிர் கலைக் கல்லூரிக்கு ரூ. 27 இலட்சம் செலவில் புதிய வசதிகளுடன் கூடிய கட்டடம் கட்டப்பட்டு அதில் 1981 மே முதல் அது இயங்கி வருகிறது.

4. மகளிர்களுக்கென அருள்மிகு பழனி ஆண்டவர் பாலிடெக்னிக் (மகளிர்) 1.10.1981 முதல் ஆரம்பிக்கப்பட்டு, மூன்று பொறியியல் பிரிவுகளைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

5. ஆண்களுக்கென, பழனி ஆண்டவர் பாலிடெக்னிக் 10-10-1982 முதல் மூன்று பொறியியல் பிரிவுகளைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. 1982-83 கல்வி ஆண்டிலிருந்து மூன்று ஆண்டுகளாக திருக்கோயில் நிதியில் இயங்கி வந்த பாலிடெக்னிக் 1985-86 நிதி ஆண்டிலிருந்து அரசு மானியத்தில் இயங்கவுள்ளது.

6. மலைக் கோயிலின் தெற்கு வெளிப்பிரகாரம் ரூ. 75 இலட்சம் செலவில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

கோயில்களின் ஆதரவில் 1,292 சிறார்களைக் கொண்ட (1,129 சிறுவர்கள், 163 சிறுமிகள்) 29 அன்பு இல்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த இல்லங்களை நடத்துவதற்காகும் தொடர் இனச் செலவில் 75 சதவீதத்தைக் கோயில்கள் ஏற்றுக் கொள்கின்றன. எஞ்சிய 25 சதவீதத்தை அரசு ஏற்கிறது. இப்பணிக்காக 1983-84 ஆண்டில் 10.85 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. இந்த இல்லங்கள் தொடர்ந்து சீரிய முறையில் நடைபெற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், தேரழுந்தூர் கிராமத்தில் கவிச்சக்கரவர்த்தி கம்பருக்கு ரூ. 20 இலட்சம் மதிப்பீட்டில் நினைவாலயம் அமைக்க 17.3.84 அன்று கால்கோள் விழா செய்யப்பட்டது. இக்கட்டுமானப் பணிக்காக இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆளுகையின் கீழ் உள்ள 10 திருக்கோயில்களிலிருந்து ரூ. 12 இலட்சம் திரட்டப்பட்டும், தமிழக அரசு சுற்றுலாத்துறையிலிருந்து ரூ. 8 இலட்சம் மானியமாகப் பெறப்பட்டும், இப்பணி தமிழ்நாடு கட்டுமானப் பணிக் கழகத்தாரால் செய்து முடிக்கப்பட்டு 10.12.84 அன்று கம்பர் கோட்டம் திறப்பு விழா செய்யப்பட்டது.

சுமார் 800 ஆண்டுகளுக்கு முன்பு (கி.பி.1133 முதல் 1150 வரை) தொண்டை மண்டலத்தில் குன்றத்தூரில் சேக்கிழார் மரபில் தோன்றிய இராமதேவர் மற்றும் அருண்மொழித் தேவர் என்று வழங்கப்பட்ட தமிழ்ச் சமயச் சான்றோர் அநபாயச் சோழன் என்கிற' இரண்டாம் குலோத்துங்க சோழனால், அவரது புலமை மற்றும் தகுதிகாரணமாகத் தமது முதலமைச்சராக நியமிக்கப்பட்டார். இவர் ஆன்மீக நாட்டம் கொண்டு ஒரு 500 ஆண்டுக் காலத்தில் வாழ்ந்த பலதரப்பட்ட சாதி மற்றும் இனங்களைச் சார்ந்த பாமரத்தொண்டர்களை மையமாக வைத்து சாதி பாகுபாடற்ற வகையில் திருத்தொண்டத்தொகை என்ற தமிழர் வரலாற்றுக்காப்பியத்தை இயற்றியுள்ளார். தெய்வப் புலவர் என்ற அடைமொழி தமிழில் திருக்குறளை ஈன்ற திருவள்ளுவருக்கும் திருத்தொண்டத்தொகை இயற்றிய சேக்கிழாருக்கும் மட்டுமே உரித்தாக்கப்பட்டுள்ளது. தமிழ், தமிழ்நாடு மற்றும் தமிழ்ச் சமுதாயத்திற்காகத் தனது வாழ்நாளையே அர்ப்பணித்த சேக்கிழார் பெருமானுக்கு இந்து சமய அறநிலையத் துறை 1985ஆம் ஆண்டு மே திங்களில் அவரது பெருமைக்கேற்ற வகையில் ஒரு விழா மிகச்சிறப்பாக நடத்தியதுடன் சென்ற 62 ஆண்டுகளாகக் குடந்தை திருநாகேஸ்வரர் திருக்கோயில் அமைப்பைஒட்டி அவரது பிறந்த மண்ணில் அவரால் நிருமாணிக்கப்பட்ட திருநாகேஸ்வரர் திருக்கோயிலுக்குள், அவரது உலோகத் திருமேனி போக முடியாது தடுக்கப்பட்டு, திருநாகேஸ்வரம் தேர்நிலை வரை மட்டுமே கொண்டு செல்லப்பட்டு திரும்ப எடுத்துவரும் அவல நிலை இருந்ததை மாற்றி, குன்றத்தூர் பகுதி மக்களுக்கும் [illegible] சான்றோர்கள் எல்லோருக்குமே மகிழ்வளிக்கும் வகையில், 18.5.85ல் சேக்கிழாரின் உலோகத்திருமேனி திருநாகேஸ்வரர் திருக்கோவிலுக்குள் சென்று இறைவனை வழிபட அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் வகை செய்யப்பட்டது. வருங்காலத்திலும் இந்த நிகழ்ச்சி உரிய சிறப்புகளுடன் நடைபெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இது தவிரவும் சேக்கிழார் போன்ற தமிழ்ச்சான்றோர்களின் நினைவைப் போற்றும் வகையில் உரிய இடங்களில் நினைவுக் கோட்டங்கள் தமிழ் அறிஞர்களின் பரிந்துரைக்கேற்ப, நிதிநிலைக்கேற்ப இந்துசமய அறநிலையத்துறையால் அமைக்கப்படவுள்ளன.

1. **அண்ணாமலைப் பல்கலைக் கழகம்**—சமரச சன்மார்க்க நெறியைப்பரப்பிய அருட்பெருங் கவிஞர் திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க அடிகளாரால் இயற்றப்பட்ட திருவருட்பாவின் ஆறு திருமுறைகளையும் வரலாற்று முறையுடன் கூடிய உரை விளக்கமாக பத்துதொகுதிகளில் அடங்கிய நூலை, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வெளியிட, திருக்கோயில்கள் உபரிநிதியிலிருந்து இதுவரை ரூ. 2.25 லட்சம் வழங்கப்பட்டு நான்கு தொகுதிகள் வெளிவந்துள்ளன. ஐந்தாவது தொகுதி பதிப்பில் இருந்து வருகிறது.

2. **தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகம்**— 1. சைவ சித்தாந்தம் (2) வைஷ்ணவ சித்தாந்தம் (3) வேத இந்துமதம் (4) பௌத்த தர்க்கப் படிப்பு மற்றும் (5) ஜைனமத வரலாறு என்ற ஐந்து உட்துறைகள் கொண்ட தத்துவ நிறுவனம் ஒன்று அமைக்க ஒன்பது திருக்கோயில்களின் உபரிநிதியிலிருந்து ரூ. 10.5 இலட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

3. **சென்னை பல்கலைக் கழகம்** சைவசித்தாந்தஆராய்ச்சிப்பேராசிரியர் பதவிக்கான அறக் கட்டளை ஏற்படுத்த மாங்காடு அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில் மற்றும் இதர திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ. 600 லட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே வெளியான இது போன்ற சமய தத்துவ நூல்களை தற்கால இளைஞர்களுக்குப்பயன்படும் வகையில் தமிழ் அறிஞர்கள் பரிந்துரைப்படி மறுபதிப்புகளாக இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை மூலம் வெளியிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.





# கிராமங்களுக்கும் குடிநீர்

இருபது அம்சத் திட்டத்தின் முக்கிய அம்சம் ஊரகக் குடிநீர்த் திட்டம் ஆகும். இது அரசின் தனிக் கவனத்தால் சிறப்பான முன்னேற்றம் அடைந்துள்ளது.

நகர்ப்புறக் குடிநீர்த் திட்டங்களுக்கும் முக்கியத்துவம் அளித்து பல்வேறு திட்டங்கள் இதுவரை நிறைவேற்றப்பட்டு மேலும் பல செயலாக்கத்தில் உள்ளன. சென்னைப் பெருநகர் தவிர, தமிழ்நாடு முழுவதும் குடிநீர் வசதித் திட்டங்களைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயலாக்குகின்றது. சென்னை நகரைப் பொறுத்தமட்டில் இவ்வசதிகளைச் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றும் வாரியம் நிறைவேற்றுகிறது.

தமிழக அரசு ஊரகப் பகுதிகளிலுள்ள அனைத்துக்குடியிருப்புகளுக்கும் குறித்த கால வரையறைக்குள்குடிநீர்வழங்குவதற்கான ஒரு மாபெரும் திட்டத்தைச் செயலாக்கி வருகிறது. எனவே இதற்கான வகையில் ஒரு விஞ்ஞான ரீதியான கணக்கெடுப்பு மேற்கொண்டு, அதனடிப்படையில் அனைத்துக் குடியிருப்புகளும் கீழ்க் கண்ட ஆறு வகைகளாகப் பிரிக்கப்பட்டன.

(1) குடியிருப்புகள் நீர் மூலங்களே இல்லாத குடியிருப்புகள் 3,567 (2) குடிக்கத் தகுதியற்ற நீர் மூலங்கள் உடைய குடியிருப்புகள் 2,961, (3) குடிக்கத் தகுதியுள்ள நீர் மூலங்கள் கொண்ட ஆனால், அனைத்துப் பருவத்திலும் நீர் கிடைக்காத குடியிருப்புகள் 6,487, (4) குடிப்பதற்கு மற்றும் அனைத்துப் பருவங்களிலும் நீர் கிடைக்கும் குடியிருப்புகள் ஆனால், நீர் நிலைகள் தனியாருக்குச்சொந்தமான அல்லதுபாதுகாக்கப்படாத நீர் மூலங்கள்கொண்டது 4,955, (5) குடியிருப்புக்குள்ளே நல்ல நீர் நிலைகள் இல்லாத ஆனால், ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் மாற்று நீர் நிலைகள் கொண்ட குடியிருப்புகள் 1,107. ஆக மொத்தம் 18,167. நல்ல நீர் நிலைகள் கொண்ட குடியிருப்புகள் 28,908. ஆக மொத்தம் 47,075.

இக்கணக்கெடுப்பின்படி வகை ஒன்று முதல் ஐந்து வரை அடங்கியுள்ள 18,167 குடியிருப்புகள் போதுமான குடிநீர் வசதியற்றதாக உள்ளன. 270.69 இலட்சம் மக்கள் தொகை கொண்ட இந்த 47,075 குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்க ரூ.500 கோடியாகும் என மதிப்பிடப்பெற்றது. குடிநீர்ப் பிரச்சினையுள்ள குடியிருப்புகளுக்கு முன்னுரிமை அளித்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பணியை மாநில அரசு மேற்கொண்டு, வகை ஒன்று, இரண்டிலும் அடங்கும் குடியிருப்புகளுக்கு முதலில் குடிநீர் வழங்கத் திட்டமிட்டது. முதல் மற்றும் இரண்டாம் வகையில் அடங்கும் 5,618 குடியிருப்புகளில் 31-3-80 வரை 14.19 இலட்சம் மக்கள் பயனடையும் வகையில் ரூ.25.97 கோடி செலவில் குடிநீர் வழங்கும் பணி முடிந்துள்ளது.

**தன்னிறைவுத் திட்டம்:**

கிராமங்களில் சமுதாயப் பொருளாதார முன்னேற்றத்திற்காக அவற்றின் அடிப்படைத் தேவைகளைக் குறுகிய காலத்துக்குள் அளிப்பதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தன்னிறைவுத் திட்டத்தை உருவாக்கி நாட்டுக்கு அளித்தார். இத்தன்னிறைவுத் திட்டம் 1980-81 ஆம் ஆண்டு தொடங்கப் பெற்றது. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல், இத்திட்டத்தின் முக்கிய அம்சம் ஆகும். எல்லா வட்டாரங்களிலும் தன்னிறைவுத் திட்டம் 31-3-1983ல் நிறைவு பெற்ற போதிலும் கிராமங்களில் உள்ள குடிநீர்ப் பிரச்சினை மற்றும் எல்லா கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டிய தேவை ஆகியவற்றைக் கருதி தன்னிறைவுத் திட்டத்தின் குடிநீர் வழங்கும் அம்சம் மட்டும் 1982-83ஆம் ஆண்டிற்குப் பின்பும் ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலம் வரையில் தொடரப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் வரவு செலவுத் திட்டத்தில் கணிசமான நிதி ஒதுக்கீடு செய்யப் பெற்றது. தொடர்ந்து ஏற்பட்ட வறட்சி நிலையின் காரணமாக மாநிலத்தில் சில இடங்களில் பிரச்சினையற்ற குடியிருப்புகள் பிரச்சினைக் குடியிருப்புகளாக வகை மாற்றம் செய்யப்பட்டன. இப்படி வகை மாற்றம் செய்யப்பட்ட குடியிருப்புகளுக்குத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் அரசு குடிநீர் வழங்கியது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் ரூ.89.84 கோடி செலவில் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப் பெற்றன.

இல்லங்களை அழகு செய்து வாங்குவோர்
உள்ளங்களை மகிழ்விப்பது
ஈரோடெக்ஸ் கைத்தறி ஆடைகள்

★ கை வண்ணங்களின் வடிவமைப்பு
★ வண்ணக் கலவையின் உருவெடுப்பு
★ அதுவே ஈரோடெக்ஸ் தயாரிப்புகள்

உள்ளங்கவரும் டிசைன்களில் பெட்சீட்டுகள், டவல்கள், தலையணை உறைகள், இல்லங்களை அழகுபடுத்தும் அலங்காரத் துணிகள், உடுக்கத்தூண்டும் லுங்கிகள், நேப்கின்கள் மற்றும் பாலியஸ்டர் ரகங்கள்

Erotex
FABRICS

தந்தி : "ஈரோடெக்ஸ்" போன் : 74170 & 75568

**ஈரோடு நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்.,**

'ஜெகநாத நிலையம்' 218, நேதாஜி ரோடு, ஈரோடு-638 001.

ஷோரூம்கள் :

1. 23, வடக்குமாட வீதி, மைலாப்பூர், சென்னை-600004.
2. 110, கச்சேரி வீதி, லஸ், மைலாப்பூர், சென்னை-600004
3. 231, நாயக்கர் புது வீதி, மதுரை-1
4. 77-ஏ, கிழக்குரத வீதி, திருநெல்வேலி.
5. 23, பஞ்சவர்ணசுவாமி கோயில் தெரு, உறையூர்-திருச்சி-3.
6. 2-ஏ, காமராசர்தெரு, சேலம் டவுன், சேலம்-2.
7. 14-ஏ, சமஸ்பிரான் வீதி, (பெரியகடை வீதி) திருச்சி-8.
8. 10, பி.வி.கே. ஐயங்கார் ரோடு, பெங்களூர்-560053. (கர்நாடகா)
9. 34, நஞ்சுண்டேஸ்வரர் பில்டிங்ஸ், ஹிந்துப்பூர் (ஆந்திரம்)
10. 186, எம்.ஜி. கிளாத் மார்கெட், சிராளா (ஆந்திரம்)
11. காலேஸ்வரராவ் ரோடு, கவர்னர்பேட், விஜயவாடா (ஆந்திரம்)
12. 2-2-35, முதல்தளம், பான் பஜார், செகந்தராபாத் (ஆந்திரம்)
13. 240, மகாத்மா காந்தி ரோடு, விழுப்புரம்.
14. சிந்தாமணி கூட்டுறவுச் சிறப்பங்காடி, திருச்சி-8.

ஜெ. சுத்தானந்தன்,
தலைவர்.


இத்துடன் ரூ.24.79 கோடி ரூபாய் செலவில் வறட்சி நிவாரணப் பணியின் கீழ் 21,992 ஆழ்துளைக் கிணறுகள் தோண்டப் பெற்றன.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் 7,226 பிரச்சினை (மக்கள் தொகை) கிராமங்களுக்கு (ஒரு சில பகுதியளவில்) ரூ. 108.1 கோடி செலவில் குடிநீர் வழங்கப் பெற்றது. இதில் மாநில அரசின் செலவு ரூ.63 கோடியும், மத்திய அரசின் மானியம் ரூ.45.19 கோடியும் அடங்கும்.

ஆக திட்டத்தில் கண்டுள்ள ரூ.76.67 கோடிக்கு எதிராக மொத்தம் ரூ.222.82 கோடி ரூபாய்கள் ஊரகக் குடிநீர்த் திட்டத்திற்கு செலவிடப்பட்டுள்ளன. இதில் மத்திய அரசு ஊரக குடிநீர்த் திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ.45.19 கோடி வழங்கியுள்ளது.

ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ.250 கோடி ஊரகக் குடிநீர்த் திட்டத்திற்கு ஒதுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது தவிர ஐரோப்பிய பொருளாதாரக் குழுமம் மற்றும் உலக வங்கி ஆகியவைகளும் ஊரகக் குடிநீர்த் திட்டத்திற்கு நிதியுதவி அளிக்க உள்ளன.

புதிய இருபது அம்சத் திட்டத்தின் கீழ் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 7,226 பிரச்சினைக் கிராமங்களுக்கும் குறைந்த அளவு ஒரு பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆதாரமாவது வழங்கப்பட்டுள்ளது.

1985-86 ஆம் ஆண்டிலும் சராசரியாக 250-300 மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு குடியிருப்புகளுக்கும் ஒரு கையிறைப்பான் பொருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பெறும். மக்கள் தொகை 750-க்கும் மேற்படும் குடியிருப்புகள் அல்லது குடிநீருக்கான சுய ஆதாரத்தின் மூலம் குடிநீர் வழங்க இயலாத இடங்களில் விசையிறைப்பானுடன் கூடிய மேல்நிலைத் தொட்டி கட்டும் திட்டம் தொடரப்படும்.

1985-86ஆம் ஆண்டில் அடிப்படைத் தேவைத் திட்டத்தின் கீழ் ரூ.24 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் ஊரகக் குடிநீர் விரைவுத் திட்டத்தின்கீழ் குறைந்தபட்சம் ரூ.18 கோடி மத்திய அரசு வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

1985-86ல் இருபத்து ஐந்து இலட்சம் மக்கள் பயனடையும் வகையில் 2,000 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கப்பெறும்.



டேனிடா நிறுவனம் 2,500 கையிறைப்பான்களை தென்னார்க்காடு மற்றும் சேலம் மாவட்டங்களில் உள்ள பழையனவற்றைப் புதுப்பிப்பதற்காக தந்துள்ளது. தென்னார்க்காடு, சேலம் ஆகிய மாவட்டங்களிலுள்ள எல்லாக்கையிறைப்பான்களையும் புதுப்பிக்கும் பணி நிறைவு பெற்றுள்ளது. எஞ்சியுள்ள 249 கையிறைப்பான்களைச் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள கையிறைப்பான்களைப் புதுப்பிக்கும்பணிக்குப் பயன்படுத்தப் பெறும்.

உப்புக்கரிக்கும் அல்லது உவர் நீராக உள்ள இடங்களில் நல்ல குடிநீர் வழங்க வேண்டும் என்ற கருத்துடன் இந்திய அரசு இலவசமாகச் சுத்திகரிப்புக் கருவிகளைச் சோதனை முறையில் நிறுவ ஏற்றுக் கொண்டுள்ளனர். அவை, இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மேலக் கொடுமலூர் மற்றும் நெர்ச்சிவாயில் என்னும் கிராமங்களில் நிறுவப்பெற்றுள்ளன. மேலும் மத்திய அரசால் இலவசமாக வழங்கப்பெறும் மற்றொரு சுத்திகரிப்புக் கருவி செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள புத்தகரம் என்னும் கிராமத்தில் நிறுவப் பெறும்.

மாநிலத்திலுள்ள 728 நகரங்களில் 340 நகரங்கள் குடிநீர் வசதி பெற்றுள்ளன. மீதியுள்ள 388 நகரங்களில் 201 நகரங்களில் உலக வங்கி மற்றும் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் கடனுதவியுடன் குடிநீர் வசதிக்கான ஆய்வு வேலைகள் நடைபெற்று வருகின்றன. மீதியுள்ள 187 நகரங்களுக்கான குடிநீர் வசதிக்கான ஆய்வு வேலைகள் எடுத்துக் கொள்ளப் பெற உள்ளன. 58 நகரங்களில் குடிநீர்த் திட்டங்கள் செயற்பாட்டில் உள்ளன.

1984-85ல் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மூன்றாம் கட்டத்தில் முப்பது நகராட்சிகளுக்கு நகராட்சிப் பணிகளுக்கு ரூ.5 கோடி அரசு அளித்துள்ளது. 1985-86ஆம் ஆண்டுக்குக் குடிநீர்த் திட்டங்கள் உட்பட நகராட்சிப் பணிகளுக்கு ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவுநீரகற்று வாரியம் 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றச் சட்டம் மூலமாக அமைக்கப்பட்டது.

இந்த வாரியம் அமைக்கப்பட்ட பின் சென்னை நகரின் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் அமைப்பின் வளர்ச்சிக்கான பல பணிகள் விரைவுபடுத்தப்பட்டன..

1991 ஆம் ஆண்டு எதிர்பர்ாக்கப்படும் மக்கட் தொகையின் தேவைக்காக கோடம்பாக்கம்மற்றும்வடபழனிப்பகுதிகளில் 30 கி.மீ. நீளத்திற்குக் குடிநீர்க் குழாய்கள் பதிக்கப்பட்டன.

அடையாற்றுப் பகுதியின் குடிநீர் வசதியை மேம்படுத்துவதற்காக ஒரு முக்கிய குடிநீர்க் குழாய் போடப்பட்டது.

மாம்பலம், சைதாப்பேட்டை பகுதிகளிலிருந்து எதிர்பார்க்கப்படும் நாளொன்றுக்கு 22மில்லியன் லிட்டர் கழிவுநீரைத் தூய்மை செய்வதற்கான கழிவுநீர் தூய்மை செய்யும் நிலையம் ஒன்று நேசப்பாக்கத்தில் கட்டப்பட்டது.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவுநீரகற்று வாரியம், ரூ.3,553 இலட்சங்கள் மதிப்புள்ள பணிகளைச் செயல்படுத்தியுள்ளது. இது ரூ.1,542 இலட்சங்கள் மதிப்புள்ள குடிநீர்ப் பணிகளையும் ரூ. 2,011

இலட்சங்கள் மதிப்புள்ள கழிவு நீரகற்றுப் பணிகளையும் கொண்டதாகும்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இவ்வாரியம் சாதித்துள்ள முக்கியமான பணிகள் வருமாறு:

**குடிநீர் வழங்கல்**

1. சென்னை நகரில் பரவலாக உள்ள 73 குடிசைப் பகுதிகளில் வாழும் ஒரு இலட்சம் மக்களுக்குக் குடிநீர் வசதியளிப்பதற்காக குடிநீர்க் குழாய்களும், பொதுக் குழாய்களும் போடப்பட்டன.

2. செங்குன்றம் ஏரியிலிருந்து நகருக்குக் கிடைக்கும் நீர் போதுமானதாக இல்லாததால், வட சென்னையில் குடிநீர் வசதி மேம்பாடு செய்வதற்காக தாமரைப்பாக்கம் பகுதிகளிலிருந்து நாளொன்றுக்கு 36 மில்லியன் லிட்டர்வரை நிலத்தடி நீரைக் கொணர்வதற்காக 8 கி.மீ நீளத்திற்கு 750 மி.மீ. அளவுள்ள வார்ப்பிரும்புக் குழாய்கள் போடப்பட்டுள்ளன. இதனால் 4 இலட்சம் மக்கள் பயனடைந்துள்ளனர்.

(3) அதிகப்படியான குடிநீர் வழங்கலைச் சமாளிப்பதற்காக 14 மில்லியன் லிட்டர் கொள்ளளவுள்ள நிலமட்ட நீர்த்தேக்கம் கட்டப்பட்டு, தேவையானவிசை இயந்திரங்கள் பொருத்தப்பட்டதின் மூலம் இராயபுரத்தில் அண்ணா பூங்காவிலுள்ள தலைமை நீர் வழங்கு நிலையத்தின் திறன் இரண்டு மடங்குக்கு மேல் உயர்த்தப்பட்டுள்ளது.

1978ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட சுமார் 3 இலட்சம் மக்கட்தொகை கொண்ட 12 பஞ்சாயத்துப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கு குழாய்கள் அமைக்கும் பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது. திருவான்மியூர் பகுதிக்கான திட்டம் செயலாக்கப்பட்டுள்ளது. மற்ற பகுதிகளுக்கான பணிகள்முன்னேற்றத்திலுள்ளன.

நகரில்துருப்பிடித்த மற்றும் பழைய குடிநீர்க் குழாய்களை மாற்றிப் புதுப்பிக்கும் பணி ஆண்டுதோறும் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 30 கி.மீ. நீளத்திற்குக் குழாய்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது குடிநீர்க் குழாய்கள் இல்லாத பகுதிகளுக்குப் புதிய குடிநீர்க் குழாய்கள் போடப்படுகின்றன.இதே மாதிரி குறைந்த அழுத்தம் காரணமாகக் குடிநீர் வழங்கலில் திருப்திகரமாக இல்லாத சில பகுதிகளில் இருக்கும் குழாய்கள் பெரிய அளவில் மாற்றப்பட்டு குடிநீர் வழங்கும் அமைப்புவலுப்படுத்தப்படுகிறது.

இந்த வறட்சி நிவாரணப் பணிகளில் செய்யப்பட்ட பல முக்கியப் பணிகளின் விவரம் கீழ்வருமாறு:—

1. பூண்டிநீர்த்தேக்கத்திலுள்ள மேட்டுப்பகுதிகளின் குறுக்கே கால்வாய் வெட்டப்பட்டது.

2. தாமரைப்பாக்கத்திலிருந்து புழலேரிக்கும்நகருக்கு வரும் மூடு கால்வாய் வரை தண்ணீர் கொணர்வதற்காக வார்ப்பிரும்புக் குழாய்கள் போடப்பட்டது.

3. நிலத்தடி நீர்ப்பகுதிகளில் 15புதிய ஆழ் துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு அதற்குத்தேவையான மின் விசை இயந்திரங்களும், மாற்று டீசல் இயந்திரங்களும் பொருத்தப்பட்டன.

> **'தமிழரசு'**
>
> **சந்தா விவரம்**
>
> **'தமிழரசு' (தமிழ்)**
>
> **ஆண்டுச் சந்தா: ரு 18**
>
> **அரையாண்டுச் சந்தா: ரு 9.**
>
> **'தமிழரசு' (ஆங்கிலம்)**
> **ஆண்டுச் சந்தா: ரு 9**
>
> **விவரங்கட்கு:**
>
> **உதவி இயக்குநர்,**
> **தமிழரசு அலுவலகம்,**
> **செய்தி-மக்கள் தொடர்புத்துறை,**
> **அரசினர் தோட்டம்,**
> **சென்னை-600 002.**

4. சென்னை நகரில் 8,700க்கு மேல் குழாய்க் கிணறுகள் மற்றும் 1,204 இந்தியா மார்க் II கைப் பம்புகளும் இறக்கப்பட்டு, நிலத்தடி நீரினை எந்த அளவு எடுக்க முடியுமோ அந்தளவு எடுக்கப்பட்டது.

5. 1,600 மேல் உருக்குத் தொட்டிகள் நகரின் பல பகுதிகளில் வைக்கப்பட்டன.

6. 280 லாரிகளும், 101 டிராக்டர்களும் ஏற்பாடு செய்யப்பட்டு இந்த வறட்சியின் உச்ச காலத்தில் மிகவும் நீர்த்தட்டுப்பாடு உள்ள இடங்களுக்குக் குடிநீர் விநியோகிக்கப்பட்டது.

தற்போது சென்னை நகருக்கு நாளொன்றுக்கு 240 மில்லியன் லிட்டர் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. இதில் நிலத்தடிக் கிணறுப் பகுதிகளிலிருந்து நாளொன்றுக்குக் கிடைக்கும் 25 மில்லியன் லிட்டர் நீரும் அடங்கும்.

**கிருஷ்ணா நீர் வழங்கு திட்டம்:**

அரசு, கிருஷ்ணா நீர்வழங்கு திட்டத்தை, சென்னை நகரின் குடிநீர்த் தேவையின் ஒரு நீண்டகாலத் தீர்வாகச் செயல்படுத்த ஏற்கெனவே மேற்கொண்டுள்ளது. இந்தத் திட்டம், பூண்டி, புழலேரி மற்றும் செம்பரம்பாக்கம் நீர்த்தேக்கங்களுக்கு 12 ஆயிரம் மில்லியன் கன அடி நீரினைக் கொணரும். ஆந்திர மாநிலத்திற்குட்பட்ட பணிகளை ஆந்திர மாநிலப் பொதுப்பணித்துறை செய்து வருகிறது. தமிழ்நாடு எல்லையிலிருந்து கடைநிலை நீர்த்தேக்கத்திற்கு ஒரு கால்வாய் கட்டும் பணியினை நம் மாநிலப் பொதுப்பணித்துறை செய்து வருகிறது. இந்த அதிகப் படியான நீரினைக் கொணர்ந்து, சுத்திகரித்து, குழாய்கள் மூலம் அனுப்பி விநியோகிப்பது சென்னைக் குடிநீர் வாரியத்தின் பொறுப்பாகும்.

**மேகங்களில் விதை தூவும் பணிகள்:**

1983ஆம் ஆண்டு ஏற்பட்ட இதுவரை இல்லாத கடுமையான வறட்சியின் காரணமாக சென்னை நகரில் கடினமான குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டது. அரசு, போர்க்கால முறையில் எடுக்கப்பட்ட பல நடவடிக்கைகளில் ஒன்றாக, ஏற்கெனவே தமிழ்நாட்டில் 1975ஆம் ஆண்டு இதுமாதிரியான பணிகளை மேற்கொண்ட பருவ கால மாற்றப் பணிகளை முக்கியமாகக் கொண்ட, அமெரிக்க ஐக்கிய நாட்டைச் சார்ந்த நிறுவனமான திருவாளர்கள் அட்மாஸ்பெரிக்ஸ் இன்கார்ப்ரேடட் நிறுவனத்தை நகரின் நீர்த்தேக்கங்களில் நீர் வாங்கு பகுதியிலும் அதனருகிலும் மேகங்களில்மழைக்காக விதை தூவும் பணியை செய்யுமாறு கேட்டுக்கொண்டது.

1983ஆம் ஆண்டில் இப்பணி மிகவும் ஊக்கமளிப்பதாக இருந்ததன் விளைவாக, நகரின் குடிநீர் வழங்குநிலையை மேம்படுத்துவதற்காக, பருவமழைக் காலங்களில் ஒருதொடர்ச்சியான முறையில் மேகங்களில் மழைக்காக விதை தூவும் பணிகளைச் செய்வதற்காக ஒரு நிரந்தரமான மேகங்களில் விதை தூவும் அமைப்பை ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.



# தோல் ஏற்றுமதியில் தனி இடம்

**தோ**ல் ஏற்றுமதிக் குழுவின் சார்பில் இந்தியாவில் 1984-ல் அதிக அளவில் தோல் பொருட்களை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்த உற்பத்தியாளர்களுக்குப் பரிசளிக்கும் விழா 3-7-'85 அன்று சென்னையில் நடைபெற்றது.

விழாவிற்கு மாண்புமிகு மத்திய வணிகத்துறைத் துணை அமைச்சர் திரு பி.ஏ. சங்மா தலைமை தாங்கிப் பேசுகையில் ''தோல் ஏற்றுமதியைப் பொறுத்தவரையில் நல்ல நிலைமையில் உள்ளது. இதனை மேலும் சிறப்படையச் செய்ய மத்திய அரசும் மாநில அரசும் அவசியமான உதவிகளைச் செய்யும்.

''அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் இந்தத் தொழில் மேலும் மேலும் வளர வேண்டும் என்று தமிழக முதல்வர் விரும்புகிறார். அதனை நிறைவேற்றும் வகையில் தோல் ஏற்றுமதிக் குழு செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்'' என்றார்.

விழாவிற்கு வந்திருந்தோரைத் தோல்பொருள் ஏற்றுமதிக் குழுவின் தலைவர் திரு எம். எம். காசிம் வரவேற்றார்.

தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் தலைவர் திரு என். குலசேகரப்பாண்டியன் பேசுகையில், ''தோல் தொழிற்சாலைகளில் இருந்து கழிவு நீரைச் சுத்தப்படுத்தி வெளியேற்ற, மத்திய அரசு தோல் தொழில் ஏற்றுமதி மூலம் கிடைக்கும் ஏற்றுமதி செஸ் வரியில் குறிப்பிட்ட அளவு தொகையை ஒதுக்க வேண்டும்'' என்றார்.



**த**மிழ்நாடு அரசின் சிறு தொழில் நிறுவனமான டான்சியின் பொறுப்பில் உள்ள 5 தோல் தொழில் நிறுவனங்களும் தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்துடன் இணைக்கப்படும் என்பதற்கான உத்தரவை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் 3.7.85 அன்று பிறப்பித்தார்கள்.

விழாவிற்கு வந்திருந்தவர்கள், அதை வரவேற்றுக் கைதட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.



மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு க. இராசாராம் அவர்கள் பேசுகையில், ''1984-ஆம் ஆண்டில் இந்தியாவில் இருந்து ரூ. 538 கோடி அளவில் தோல் சம்பந்தப்பட்ட பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இதில் 60 சதவிகிதம் தமிழ்நாட்டில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்டதாகும்.

''அமெரிக்கா, மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகளுக்குத் தோல் மற்றும்தோல் பொருட்கள் அதிக அளவில் ஏற்றுமதி செய்ய வாய்ப்பு உள்ளது.

''மாண்புமிகு முதல்வர் அவர்களின் விருப்பப்படி சென்னை மீனம்பாக்கம் அருகே 100 சதவிகிதம் வெளிநாட்டுக்குப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் தொழிற்பேட்டை அமைக்கப்பட்டு வருகிறது. 5 ஆண்டுகள் வரி செலுத்தத் தேவையில்லை. அந்தத் தொழிற்பேட்டைக்காக இயந்திரங்களைச் சுங்கவரி இல்லாமல் இறக்குமதி செய்ய மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. அதில் இதுவரை 43 பேர்தொழில் தொடங்க அனுமதி பெற்றுள்ளனர். மேலும் இளைஞர் பலர் இத்தொழிலில் ஈடுபட வேண்டும் என்று விரும்புகிறேன்'' என்றார்.

விழா முடிவில், சிறந்த தோல் பொருள் ஏற்றுமதியாளர்கள் ஒன்பது பேருக்குக் கேடயங்களை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் வழங்கினார்.

**வட ஆர்க்காடு மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம்**
**ஊரகப் பகுதிகளில் வறுமை அகல - வளம் பெற**
**செயல்படுத்திய திட்டங்களின்**
**சாதனைகளைக் காண்பீர்!**

# ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் 1984-85

| | |
|---|---|
| மொத்தம் பயனடைந்த குடும்பங்கள் | 32224 |
| மகளிர் | 8203 |
| ஆதிதிராவிட மற்றும் மலைவாழ் குடும்பங்கள் | 16197 |
| மொத்த மானிய ஒதுக்கீடு | ரூ 288.00 இலட்சம் |
| மொத்தம் செலவு செய்த மானியத் தொகை | ரூ 375.93 ,, |

*தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்*

| | |
|---|---|
| 1984-85ல் மொத்தம் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் | 5465 |
| மொத்தம் செலவு செய்யப்பட்ட தொகை | ரூ 520.33 இலட்சம் |
| ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் மக்களுக்குக் கட்டித்தரப்பட்ட வீடுகள் | 860 |
| ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மக்கள் பயனடைந்த தொகை | 151.98 இலட்சம் |
| மனித உழைப்பு நாட்கள் உருவாக்கியது | 44.35 ,, |

*ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு — உறுதியளிப்புத் திட்டம்*

| | |
|---|---|
| 1984-85ல் மொத்தம் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் | 1689 |
| மொத்தம் செலவு செய்யப்பட்ட தொகை | ரூ 429.87 இலட்சம் |
| மொத்தம் உருவாக்கப்பட்ட மனித உழைப்பு நாட்கள் | 30.56 இலட்சம் |
| ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மக்களிடையே உருவாக்கப்பட்ட மனித உழைப்பு நாட்கள் | 15.31 இலட்சம் |
| ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மக்களுக்குக் கட்டித் தரப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை | 1600 |
| செலவிடப்பட்டவை | ரூ 98.49 இலட்சம் |

*விவசாய மேம்பாட்டுப் பெருக்குத் திட்டம்*

| | |
|---|---|
| கொடுக்கப்பட்ட உதவித் தொகை | ரூ 104.91 இலட்சம் |
| பயன்பெற்ற சிறு/குறு விவசாயிகள் | 5341 |
| பயனடைந்த நிலப்பரப்பு | 3596 ஹெக்டேர் |
| அனைத்து திட்டங்களின் மொத்தச்செலவு | ரூ 14.31 கோடி |
| உருவாக்கப்பட்ட கட்டடங்கள், இதர சமுதாயச் சொத்துக்களின் மதிப்பு | ரூ 8.82 கோடி |
| ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மக்களுக்குக் கட்டித் தரப்பட்ட வீடுகள் | 2460 |

**திட்ட அலுவலர்,**
*மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம்,*
*வேலூர்.*

**மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்**
**பெருந்தலைவர்,**
*மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம்,*
*வேலூர்.*



# சீரான சாலைகளின் சிறப்பான முன்னேற்றம்

சாலைகள் நாட்டின் சமூக-பொருளாதார வளர்ச்சிகளில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. சாலைப் பணிகளைப் பொருத்த மட்டில் தமிழ்நாட்டில் அடைந்துள்ள முன்னேற்றம் அனைவராலும் பெரிதும் பாராட்டப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறை பரிமரித்துவரும் நான்கு வகைச் சாலைகளின் மொத்த நீளம் 1-4-1984 நிலவரப்படி 37,177 கிலோ மீட்டராகும்.

**கிராமச் சாலைகள் திட்டம்:**

இத்திட்டத்தின் கீழ் 1,500 அதற்கு மேலும் மக்கள் தொகையைக் கொண்ட கிராமங்களுக்கு அவற்றிற்கு வெகு அருகாமையிலிருக்கும் வாகனப் போக்குவரத்துச் சாலைகளுடன் இணைப்பினை ஏற்படுத்தும் வகையில் எல்லாக் காலங்களுக்கும் ஏற்ற சீர் பருவச் சாலைகள் அமைக்கப்படுகின்றன.

இதுவரை, இத்திட்டத்தின் கீழ் ஆறு கட்டங்களாக ரூ. 7,567.19 இலட்சம் செலவில் 6,363,66 கிலோ மீட்டர் நீளத்திற்குச் சாலை அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2,248 முதன்மைக் கிராமங்களுக்கும், 1,977 இடைப்பட்ட கிராமங்களுக்கும் பயன்பெறும் வகையில் ரூ.5,162.00 இலட்சம் செலவில் 5,536 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள், 31.3.1984 வரை முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் முதல் ஐந்து கட்டப் பணிகளும் பெரும்பாலும் முடிக்கப்பட்டுவிட்டன. சனவரி 1982இல் ரூ.4,388 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில், 1,030 கிராமங்கள் பயன் பெறும் வகையில் ஆறாம் கட்டமாக ஒப்புதல் அளிக்கப்பட்ட 1,750 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

1984-85ஆம் ஆண்டில் 170 முதன்மைக் கிராமங்களும், 70 இடைப்பட்ட கிராமங்களும் பயன்பெறும் வகையில்ரூ.855.64 இலட்சம் செலவில் 350 கிலோ மீட்டர் நீளமுள்ள கிராமச் சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

1983-84ஆம் ஆண்டு இறுதி வரை, 10,694 கிலோ மீட்டர் நீளமுள்ள பேருந்து வழித் தடங்கள் எதிர்காலப் பராமரிப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இந்த வகையில் உள்ளாட்சி மன்றங்களுக்காகும் செலவு குறைகின்றது. இவற்றுள் 1984-85ஆம் ஆண்டு முடிக்கப்பட்ட 500 கி.மீ. நீளமுள்ள சாலைகளும் சேர்ந்து மொத்தம் சுமார் 7500 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் இதுவரை மேம்படுத்தப்பட்டுள்ளன.

**ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம்:**

இந்தத திட்டம் 100 விழுக்காடு மத்திய அரசு நிதியுதவியுடன் தமிழகத்தில் 1984ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் முதல் நடைபெற்றுவருகிறது. நிலமற்ற தொழிலாளர் குடும்பம் ஒவ்வொன்றிலும் குறைந்தது ஒருவருக்காவது ஓராண்டில் 100 நாட்கள்வரை வேலை உத்தரவாதம் அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 20 அம்சத் திட்டம் தொடர்பான திட்டங்களும்கிராம இணைப்புச் சாலைகளை அமைக்கும் பணிகளும், குறைந்த அளவு தேவைத் திட்டப்பணிகளும் இத்திட்டத்தில் உள்ளடக்கப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்படும் அனைத்துச் சாலைப்பணிகளும் நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறையால் நிறைவேற்றப்படுகின்றன. சுமார் 2,265 கிலோ மீட்டர் நீள்முள்ள 605 சாலைப் பணிகளை எடுத்துச் செய்வதற்காக இரண்டு கட்டங்களில் (கட்டங்கள் 1 மற்றும் 2) மொத்தம் ரூ.2,418.20 இலட்சத்திற்கும் மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

கிராம மக்கள் பயன் பெறும் வகையில் 1984-85 ஆம் ஆண்டில் மொத்தம் 111.11 இலட்சம் மனித வேலை நாட்கள் உருவாகின. 272 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 2,693 கிலோமீட்டர் நீளமுள்ள 750 கிராமச் சாலைகளை மேம்படுத்துவதற்காக 1985-86ஆம் ஆண்

டிற்காக ரூ.38 கோடி மதிப்பீட்டிலான பணிகளுக்கு மத்திய அரசின் ஒப்புதல் கோரப்பட்டுள்ளது. இதன்மூலம் நிலமற்ற கிராம வாழ் ஏழைகளுக்கு 161.40 இலட்சம் மனித வேலை நாட்கள் உருவாகும்.

வேலையாட்களின் ஊதியத்தின் ஒருபகுதி (நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு ஒரு கிலோ கிராம் என்னும் வீதத்தில்) உணவு தானியமாக வழங்கப்படுகிறது. பணிகளுக்காகும் மொத்தச் செலவில் 50 விழுக்காட்டிற்குச் சமமாகவோ அல்லது அதற்கு மேற்பட்டோ தொழிலாளர்களுக்குப் பயன்தரும் வகையில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

1984-85ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட உணவுதானியங்களின் விலையையும் சேர்த்து ரூ. 20 கோடி செலவிடப்பட்டது.

**இதர சாலைகள் திட்டம்:**

ஊராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் 50,000 ரூபாய்க்கு மேல் செலவாகக் கூடிய பெரிய, சிறிய மற்றும் சாலை மேம்பாட்டுப் பணிகள் போன்ற மூலப்பணிகள் இத் திட்டத்தின் கீழ் நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்படுகின்றன. சாலைகளையும், பாலங்களையும் பராமரிப்பதில் ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் நிவாரணம் அளிக்கும் பொருட்டு உள்ளாட்சி மன்றங்களிடம் நல்லெண்ணம் காட்டும் வகையில் ரூ.50,000மும் அதற்கு மேற்பட்டும் செலவாகக்கூடிய சாலை, பாலம் அமைக்கும் பணிகள் நிறைவேற்றி மேம்படுத்தப்பட்ட பிறகு நெடுஞ்சாலை, ஊரகப் பணித்துறையால் அரசின் நிதியைக் கொண்டு பராமரிக்கப்படவேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது.

1984-85 ஆம் ஆண்டில் ரூ.110.50 இலட்சம் மதிப்பீட்டில் ஆறு பணிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

புகளூரில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித உற்பத்தி நிறுவனத்தை நிறுவுவதற்காக தேசிய நெடுஞ்சாலை 7-லிருந்து மூளிமங்கலம் செல்லும் சாலையில் கி.மீ. 00 முதல் 4/0 வரை ரூ.28 இலட்சம் செலவில் அகலப்படுத்தவும் வலுப்படுத்தவும் 1983 ஜூலைத் திங்களில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இப்பணி நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

இயற்கையோடியைந்த சூழ்நிலையைக் காக்கவும், சாலைப் பயணிகள் தங்கி இளைப்பாறவும் சாலை ஓரங்களில் நிழல்தரும் மரங்கள் பரந்த அளவில் வளர்க்கப்படுகின்றன.

நிழல் தரும் மரங்கள் நடுவதற்காக 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 17.18 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1984-85-ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் பனைமரங்களும், அறுபது ஆயிரம் நிழல்தரும் மரங்களும் நடப்பட்டுள்ளன.

**வெள்ளச்சேத சீரமைப்புப் பணிகள்:**

தமிழ்நாட்டில் சூறாவளிக் காற்று, மழையினால் அடிக்கடி சேதங்கள் ஏற்படுகின்றன. 1984-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் சூறாவளிக்காற்று, மழை சென்னை நகரிலும், செங்கல்பட்டு மாவட்டத்திலும் பெருஞ் சேதங்களை ஏற் த்தியது. குறிப்பாக கடற்கரைப்பகுதி வெகுவாகப் பாதிக்கப்பட்டது.

மத்திய அரசின் உதவியுடன் இவ்வரசால் ரூ.359.56 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அரசுச் சாலைகள், நகரப் பஞ்சாயத்துச் சாலைகள், கட்டடங்கள், ஊராட்சி ஒன்றியச் சாலைகள் கட்டடங்கள், தேசிய நெடுஞ்சாலைகள் ஆகியவற்றைப் பழுது பார்க்கும் பணிகளும் மணலை அகற்றி குடியிருப்புப் பகுதிகளைச் சரி செய்யும் பணிகளும், மேற்கொள்ளப்பட்டன. மீண்டும் டிசம்பர் 1984-இல் சேதமுற்ற அரசுச் சாலைகள், ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மற்றும் மீன்வளச் சாலைகள் போன்றவற்றைப் பழுதுபார்க்க ரூ.36.73 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகள் யாவும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறையில் வேலை நிதியில் ஊதியம் பெறும் பணியாளர்கள் தொகுதியின் கீழ் பணியாற்றிய சுமார் 20,600 பேர் அரசுப் பணிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

**மீனவர் குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலைகள் அமைத்தல்**

கடற்கரையோரப் பகுதியில், அநேக மீனவக் குடியிருப்புகள் போதிய இணைப்புச் சாலைகள் வசதியின்றி உள்ளன. மீனவர்களின் சமூக-பொருளாதார வளர்ச்சியை மனத்தில் கொண்டு தரமான சாலைகளை அமைத்துக் கொடுத்தால், மீன்களை எளிதில் அங்காடிகளுக்குக் கொண்டு சென்று விற்பனை செய்து பொருளாதார முன்னேற்றம் அடைவார்கள் என்பதால் 1979-80ஆம் ஆண்டில் இவ்விணைப்புச் சாலை அமைக்கும் திட்டம் தொடங்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் செங்கல்பட்டு, தென்னார்க்காடு, தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய கடலோர மாவட்டங்களில் 1983-84 ஆம் ஆண்டு வரை 76 பணிகள் ரூ.182.25 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டன. இதில், இதுகாறும் 57 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் யாவும் முடிவடையும் நிலையில் உள்ளன.

உலக வங்கியின் நிதியுதவியுடன் சென்னைப் பெருநகர்ப் பகுதியில் நகர மேம்பாட்டுப் பணிகள் 1977-78ல் துவங்கப்பட்டன. இப்பணிகள் இரு





கட்டங்களில் மேற்கொள்ளப்பட்டன. முதல் கட்ட முதலீடு ரூ. 7.18 கோடியாகும். (இதில் பெருவழிச்சாலைகளுக்கான ரூ.4கோடியும், மாநகராட்சிப் பகுதிகளிலுள்ள இதர சாலைகளுக்கான ரூ.3.18 கோடியும் அடங்கும்.)

பிரதமரின் 20 அம்சத் திட்டத்தில் பின்தங்கிய மக்களின் குறிப்பாக மலை வாழ் மக்களின் மேம்பாட்டிற்குத் தனிக் கவனம் செலுத்தப்பட வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளது. அதிலும் முக்கியமாக பழங்குடி மக்களின் மேம்பாட்டினைச் செறிவுத் திட்டங்களின் மூலமாகத் துரிதப்படுத்தி, பல குடும்பங்கள் வறுமைக்கோட்டினைக் கடக்க முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

இத்திட்டங்களுள் தலையாயது முற்றிலும் அணுக முடியாத இடத்தில் உள்ள இப்பழங்குடியினர் வாழும் பகுதிகளுக்குப் போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுத்து இப்பகுதிகளுக்கு வழி ஏற்படுத்துவதாகும். எனவே, சாலை அமைக்கும் பணி முக்கியப் பங்கேற்கிறது.

1983-84 முடிய ரூ.1,162.76 இலட்சம் மதிப்பிலான இருபத்தோரு பணிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டு, அவற்றுள் ரூ325.05 இலட்சம் மதிப்பிலான 11 பணிகள் முழுவதுமாக முடிக்கப்பட்டுவிட்டன. ரூ. 781.50 இலட்சம் மதிப்பிலான 171.40 கி.மீ. நீளமுள்ள ஒன்பது பணிகள் நடந்தேறி வருகின்றன.

தமிழ்நாட்டில் இராமேசுவரம் தீவுக்கருகில் 49 ஆம் எண் தேசிய நெடுஞ்சாலையில் பாக் ஜலசந்திக்குக் குறுக்கே உயர் மட்டச் சாலைப்பாலம் ஒன்றை ரூ.5.33 கோடி செலவில் கட்ட மத்திய அரசு அனுமதிவழங்கியது. இந்தப் பாலத்திற்கு இரு பக்கங்களிலும் அணுகுச்சாலைகள் அமைப்பதற்காகும் செலவு ரூ.51.01 இலட்சமும் இதில் அடங்கும். இப்பாலம் தேசிய நெடுஞ்சாலையில் அமைவதால் மத்திய அரசு இப்பணிக்காகும் செலவு முழுவதையும் தனது பொறுப்பில் ஏற்றுக்கொள்கிறது. மத்திய அரசின் சார்பில் மாநில அரசு இப்பணியை நிறைவேற்றி வருகிறது. இயற்கைச் சீற்றங்களை எதிர்த்தும் உவர் மண் அதிகமாகப் படிந்து அரிப்பேற்படுத்தும் நிலையை எதிர்த்தும் கடலின் குறுக்கே இப்பாலம் கட்டப்படுவதால் இந்தியாவில் இவ்வகைப் பாலம் அமைப்பது இதுவே முதலாவதாகும்.

இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூ.16.65 கோடிக்கு மத்திய அரசு 1983 டிசம்பரில் தொழில் நுட்ப அனுமதியும், நிதி அனுமதியும் வழங்கியது.

தமிழ்நாடு அரசு, நெடுஞ்சாலை ஊரகப்பணித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் இயங்கி வருகிறது. 27 ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கப்பட்ட இந்த நிறுவனம் இம்மாநிலத்தின் சாலைகள், பாலங்கள் அமைத்தல் மற்றும்பராமரிப்புச் செலவினைச் சிக்கனப்படுத்தும் வகையில் செயல்முறை ஆராய்ச்சியினை நடத்திவருகிறது.

தமிழ்நாடு மாநிலக்கட்டுமானக் கழகம், 1956-ஆம்ஆண்டுகம்பெனிகளின் சட்டத்தின்படி 1980 ஆம் ஆண்டு பிப்ரவரியில் அமைக்கப்பட்டது.

ஆலோசனைப் பணிகள்: —இக் கழகம் ஆலோசனைகள் கூறும் பணிகளையும் ஏற்றுள்ளது. வாடிக்கையாளர்களின் திட்டத்தினை மாற்றி அமைத்துக்கொள்ளவும் செலவினைக் குறைக்கவும் இந்தப்பணி வகை செய்கிறது.

மனிதச் சக்தி:—கழகத்தின் தற்போதைய பணியாளர்கள் எண்ணிக்கை 159. இதுதவிர 45 பேர்களுக்குக் கழகம் பயிற்சி அளிக்கிறது.



## கிராமிய அபிவிருத்தி இயக்கம்

### குன்னூர், நீலகிரி மாவட்டம்

உதகை, குன்னூர் வட்டாரங்களில் உள்ள 55,000 மக்கள் தொகையைக் கொண்ட 92 கிராமங்களை இயக்கம் தத்து எடுத்து, ஒருங்கிணைந்த கிராமிய வளர்ச்சியில் ஈடுபட்டுள்ளது. ஆதிவாசிகள், ஆதிதிராவிடர்கள், பின்தங்கிய வகுப்பினரைக் கொண்டு கிராமங்கள் தோறும் சங்கங்கள் அமைத்து, அச்சங்கங்கள் மூலமாகவே கிராமிய வளர்ச்சிப் பணிகள் தொடர்கின்றன.

தமிழரசு வெளியிடும் 5 ஆண்டுச் சாதனைச் சிறப்பு மலர் வெளியீட்டுக்கு இயக்கத்தின் வாழ்த்துக்கள்.

என் 50 பாலக்ளாவா,
காட்டேஜ்,
குன்னூர்-

என். கே. பெருமாள்,
இயக்குநர்

50, Balaclava Cottage,
Coonoor.





# வளரும் தொழிலாளர் வாழ்வு



சமூகத்தில் பொருளாதார வகையில் நலிந்த பிரிவினரின் நலனைப் பாதுகாக்கவும், பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தவும் தொழில் உறவுகளை முறைப்படுத்துவதில் அரசு முக்கியப் பங்கு வகிக்கிறது.

தொழில் நிறுவனங்களில் நிருவாகத்தினருக்கும், அவர்களால் நியமிக்கப்பட்ட தொழிலாளர்களுக்குமிடையே சுமுகமான தொழிலுறவு தொடர்ந்து நிலவ ஊக்குவிக்கும் பொருட்டு, அரசு ''சுமுகமான தொழிலுறவுக்குப் பரிசு வழங்கும் திட்டம்'' என்றழைக்கப்படும் திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வோராண்டும் பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்கத் தொழிலதிபர், தொழிலாளர் பிரதிநிதிகளுடன், ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் தலைமையின்கீழ் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

1984ஆம் ஆண்டுத் தொடக்கத்தில், 1948ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் 11,920 தொழிற்சாலைகள் இருந்தன. 1984ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதியில் 617 தொழிற்சாலைகள் நீக்கம் செய்யப்பட்டு, 1,259 தொழிற்சாலைகள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டதுடன் சேர்த்து தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 12.562 ஆக உயர்ந்தது. 31.12.1984 அன்றுள்ளவாறு, இச்சட்டத்தின்கீழ் வரும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 7,93,769 ஆகும்.

1983, 1984ஆம் ஆண்டுகளில் விபத்துக்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளது. தொழில் பாதுகாப்பு மேம்படுத்துகிற மும்முர நடவடிக்கைகளான ஒழுங்கான பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகள், பாதுகாப்புச் சுற்றாய்வு முதலியவற்றை நடத்தியதாலும், தொழிற்சாலைகள் சட்டத்தின் பாதுகாப்பு விதித்துறைகளை அடிக்கடி சிறந்த முறையில் ஆய்வு செய்து செயற்படுத்தியதாலும், இது சாத்தியமாயிற்று.

மதுரை, கோயம்புத்தூர், ஆகிய இடங்களில் பாதுகாப்புப் பிரிவுகள் இரண்டு செயல்பட்டு வருகின்றன 1984ல் சென்னையில் கூடுதலாகப் பாதுகாப்புப் பிரிவு ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது. 7-7-1984 முதற்கொண்டு அது செயல்பட்டு வருகிறது. பெருவாரியாக விபத்துக்கள் ஏற்படுகின்ற தொழிற்சாலைகளில் பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகளைப் பாதுகாப்புப் பிரிவு நடத்துகிறது.

தொழிற்சாலை ஆய்வாளர் ஒருவரின் தலைமையில் சென்னை மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் பாதுகாப்புப் பிரிவுகள் மூன்று செயல்பட்டு வருகின்றன.

2,094 பணியாளர்கள் பயன் பெறும் வகையில், 1984-ல் பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகள் 75 நடத்தப்பட்டன. 1984ல் நடத்தப்பட்ட பயிற்சி வகுப்புகளின் எண்ணிக்கை, முந்தைய ஆண்டில் நடத்தப்பட்ட பயிற்சி வகுப்புகளின் எண்ணிக்கையைவிட, இரு மடங்காகும். அதன் மூலம் பயனடைந்த பணியாளர்களின் எண்ணிக்கையும், முந்தைய ஆண்டில் பயனடைந்த பணியாளர்களின் எண்ணிக்கையைவிட 2½ மடங்கு அதிகமாகும்.

மதுரையில் இயங்கும் மருத்துவப் பிரிவு, தொழிலாளர்கள் செறிந்துள்ள பகுதிகளான பசுமலையில் ஒன்றும், செல்லூரில் ஒன்றும் என இரு மருந்தகப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. இவை அமைப்பு ரீதியின் கீழ் வராத தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதிகள் அளித்து வருகின்றன. மதுரை முதன்மை மருத்துவ நிலையத்தின் 1984ஆம் ஆண்டில் 1,632 தொழிலாளர்களுக்கு மருத்துவச் சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனால், கடந்த ஆண்டு இந்நிலையத்தில் 439 தொழிலாளர்களுக்கு மட்டுமே மருத்துவச் சிகிச்சை அளிக்கப்பட்டது. செல்லூர் துணை மருத்துவ நிலையத்தில் 1983ஆம் ஆண்டில் 1983 பேருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. இவ்வாண்டில் 2,212 பேருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. 1983ஆம் ஆண்டில் பசுமலை துணை மருத்துவ நிலையத்தில் 466 பேருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. இவ்வாண்டில் 429 பேருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

படிப்புதவித் தொகைகள் வழங்குவதற்காக, வரையறுக்கப்பட்டுள்ள மாதவருவாய் எல்லை ரூ.600 என்பது ரூ.1,250 ஆக இந்த ஆண்டிலிருந்து உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில், தமிழ்நாடு முழுவதிலுமுள்ள மாணவர்களுக்கும் படிப்புதவித் தொகை வழங்குவதற்காக ரூ.3,47,455.20 செலவிடப்பட்டுள்ளது.

112 வெளியீடுகளை வெளியிடுகின்ற 39 செய்தித்தாள் நிறுவனங்கள் (செய்தித்தாள்கள்-பத்திரிகைகள்) 'பலேகர்' நடுவர் மன்றத்தின் பரிந்துரைகளைச் செயல்படுத்தியுள்ளன.

1,000 ரூபாய்க்குக் குறைவாக ஊதியம் பெறும் ஊழியர்கள் தொழிலாளர் நலக்காப்புறுதிச் சட்டத்தின் கீழ் பயன்பெறுவர். இந்த ஊதிய அளவு 27.1.1985 முதல் ரூ. 1,600க்கு உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டம், தமிழ்நாடு மாநிலத்தில் அனைத்து மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் நலக்காப்புறுதித் திட்டத்தின்கீழ் அயன்புரம் (சென்னை), கே. கே. நகர் (சென்னை), மதுரை, கோயம்புத்தூர், வேலூர் (வட ஆர்க்காடு மாவட்டம்), ஆகிய இடங்களுக்கு ஐந்து மருத்துவமனைகளும், 119 நிலையான மருந்தகங்களும், 9 நடமாடும் மருந்தகங்களும், 2 பயன்பாட்டு மருந்தகங்களும், 2 பகுதி நேர மருந்தகங்களும் செயல்பட்டு வருகின்றன.

உழவுத் தொழிலாளர்கள், சிறு உழவர்கள், ஓரளவு நிலம் வைத்திருப்போர் கிராமக் கைவினைஞர்கள் பெரும்பாலோரின் வாழ்க்கைத் தரம் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளது. அவர்கள் விபத்தில் இறந்தால் அல்லது ஏலாமையுற்றால் அவர்களுடைய குடும்பங்களுக்குக் கிடைத்து வந்த சொற்ப வருமானமும் கிடைக்காமல் போவதுடன், சொல்லொணாத் துயரத்தில் ஆழ்கின்றனர். எனவே, அவர்களுடைய துயரைப் போக்குவதற்கு ஏதாவது செய்ய வேண்டுமென்று தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக அரசு உழவுத் தொழிலாளர்கள் 2.5 ஏக்கருக்குக் குறைவாக நன்செய் அல்லது புன்செய் நிலம் வைத்துள்ள உழவர்கள், கிராமக் கைவினைஞர்கள், கட்டிடத்தொழிலாளர்கள், ஆகியோருக்கான விபத்து இடருதவித் திட்டத்தை வகுத்தது. இத்திட்டத்தின் கீழ் ரூ.3,500க்குக் குறைவான ஆண்டு வருமானமுடையவர், தொழிலை மேற்கொள்கையில் விபத்து ஏற்பட்டு இறக்க நேரிடின் அரசு அவருடைய குடும்பத்துக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.5,000 வழங்கும். வேலையிலிருக்கும்போது விபத்து ஏற்பட்டுக் காயமுற்றால், அவருக்கு ஏற்பட்ட காயத்தைப் பொறுத்து அரசு ரூ.3,000 முதல் ரூ. 5,000 வரை தொகை வழங்கும்.

விபத்து இடருதவித் திட்டம் இதுவரையில் அரசு, முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 13 குடும்பங்களுக்கு இடருதவி அளித்துள்ளது.

உழவுத் தொழிலாளர்கள் சிறு உழவர்கள் ஓரளவு நிலம் வைத்திருப்போர், கிராமக் கைவினைஞர்கள், கட்டிடத் தொழிலாளர்கள் ஆகியோர் வேலை செய்கிறபோது அவர்கள் இறக்க நேரிடின் அவர்களுக்கு விபத்து இடருதவித் திட்டத்தின் கீழ் (1984 செப்டம்பரில் கொண்டுவரப்பட்டது) வழங்கப்படும். இழப்பீட்டுத் தொகை ரூ. 5,000 லிருந்து ரூ. 10,000 ஆக உயர்த்தப்படும் என்று 8.3.1985 அன்று நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டுத் தொடரில் மேதகு தமிழ்நாடு ஆளுநர் அறிவித்துள்ளார்.

மாண்புமிகு முதலமைச்சர் 15.8.1984ஆம் நாளன்று அறிவித்த திட்டங்களுள் இதுவும் ஒன்று. உழவுத் தொழிலாளர்கள் சிறு உழவர்கள், ஓரளவு நிலம் வைத்திருப்போர், கிராமக் கைவினைஞர்கள், சரக்குகளை ஏற்றி இறக்கும் தொழிலாளர்கள், வண்டி இழுப்போர், சலவைத் தொழிலாளர், முடிதிருத்துவோர் முதலானோர் தங்களுடைய வறுமையின் காரணமாக ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் தங்களுடைய குடும்பங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க முடிவதில்லை. இதனால் அவர்கள் எதிர்பாராமல் இறக்க நேரிடும்போது அவர்களுடைய குடும்பங்கள் பெரும் இன்னலுக்குள்ளாகின்றன, அல்லது அவர்கள் முதுமையடைந்து தொழிலைத் தொடர இயலாதபோது அவர்களுக்கு வாழ வேறு வழி ஏற்படுவதில்லை. அவர்களுக்கு இடருதவி அளிக்கும் நோக்குடன் ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் அவர்களைக் கொண்டு வருவதற்கும் அவர்கள் 58 வயதடையும் போது ஒரு மொத்தத் தொகை பெறுவதற்கு வகை செய்யும் தனித்திட்டம் ஒன்றைத் தமிழ்நாடு அரசு இப்போது வகுத்துள்ளது.

மேற்கூறிய தொழிலாளர்கள் சிறுதொகையைச் சேமிக்கத் தூண்டும் வகையில் அவர்களிடமிருந்து சொற்பப் பங்குதொகை பெறுவதன்மூலம் அவர்களை இத்திட்டத்தில் உறுப்பினர்களாகச் சேர்க்க அரசு கருதியுள்ளது. இதனைக் கொண்டு அவர்களுக்கு ஆயுள் காப்புறுதிக் கழகத்தின் மூலம் காப்புறுதியும் ஒய்வு காலப் பயனாக ஒரு மொத்தத்தொகையும் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 18—58 வயது தொகுதியிலுள்ள உழவுத் தொழிலாளர்கள், சிறு உழவர்கள் ஓரளவு நிலம் வைத்திருப்போர், கிராமக்கைவினைஞர்கள், சரக்குகளை ஏற்றி இறக்கும் தொழிலாளர்கள், வண்டி இழுப்போர், சலவைத் தொழிலாளர், முடிதிருத்துவோர் முதலானோர் பயனடைவர். இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்புவோர் திங்கள் ஒன்றுக்கு அரசுக்கு ரூ.10 செலுத்தி உறுப்பினராக வேண்டும்.

உறுப்பினர் ஒருவர் இறக்க நேர்ந்தால், அவருடைய நியமனதாரருக்கு ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் ரூ.5,000 வழங்கும். இத்துடன் அவர் பங்குத் தொகை செலுத்திய கால அளவைப் பொறுத்து அரசும் தொகை வழங்கும்.

ஏனைய இனங்களில் 58 வயது முடிவடைந்ததும் உறுப்பினருக்கு அவர் பங்குத் தொகை செலுத்தியகால அளவைப் பொறுத்து ஓய்வுகாலப் பயன் தொகை மொத்தமாக வழங்கப்படும். இவ்வாறாக, 10 ஆண்டுகள் பங்குத்தொகைசெலுத்திய உறுப்பினர் ரூ.1,200 பெறுவார். 20 ஆண்டுகள் பங்குத்தொகை செலுத்தியிருந்தால் ரூ. 4,300ம் 25 ஆண்டுகள் தொகை செலுத்தியிருந்தால் ரூ. 7,400ம், 30 ஆண்டுகள் தொகை செலுத்தியிருந்தால் ரூ. 12,400ம், 35 ஆண்டுகள் தொகை செலுத்தியிருந்தால் ரூ. 20,400ம், 40 ஆண்டுகள் தொகை செலுத்தியிருந்தால் ரூ. 33,500ம் பெறுவர்.



தொழிற்சாலைத் தொழிலாளர்கள் அவர்களுடைய குடும்பத்தினர் ஆகியோரின் பயனுக்காக, குறைந்த வாடகைக்கு விடுமுறை இல்லம் (Holiday Home) ஒன்று ரூ. 15 இலட்சம் செலவில் திருநெல்வேலி மாவட்டம் குற்றாலத்தில் கட்டப்பட்டுள்ளது. இது 1983ல் திறந்து வைக்கப்பட்டது. ஒரே சமயத்தில் 58 பேர் இதில் தங்கலாம். இதுவரை 2,275 பேர் இவ்வசதிகளைப் பயன்படுத்திக் கொண்டனர். மாமல்லபுரத்தில் மற்றொரு விடுமுறை இல்லம் கட்டப்பட்டு வருகிறது.

தொழிற் சங்கத் தலைவர்கள் தங்குவதற்காக - சென்னை-6 தேனாம்பேட்டையில் ரூ. 10 இலட்சம் செலவில் ஓய்வு இல்லம் (ஜீவா இல்லம்) ஒன்றை வாரியம் கட்டியுள்ளது. மிகச் சொற்ப வாடகையைச் செலுத்துவதன் பேரில் ஒரு சமயத்தில் இவ்வில்லத்தில் 45 பேர் தங்கலாம்.

1978ஆம் ஆண்டு முதல் நீதித்துறையின் முடிவுகள் தொழிலாளர் நலச் சட்டங்கள், திருத்தங்கள், அறிவிக்கைகள், முதலியன குறித்து - தொழில் உறவுகள் குறித்து சம்பந்தப்பட்ட மக்களுக்கு அறிவுறுத்தும் பொருட்டு ''உழைப்பவர் உலகம்'' என்ற மாதாந்திர தமிழ்ப் பத்திரிகை வெளியிடப்படுகிறது.

தொலைபேசி எண்: 442

## கருந்திட்டாம்குடி திராவிட கூட்டுறவு நகர வங்கி

(வ.து) E. 197/3523.

கருந்திட்டாம்குடி (அஞ்சல்), தஞ்சாவூர்-613 002.

(துவக்கம் : 1919)

மற்ற எல்லா வங்கிகளையும் விட 1% வட்டி அதிகமாக அளிக்கிறது.

ரூ. 30,000/- வரை டெப்பாசிட் இன்சூரன்ஸ் திட்டத்தின் கீழ் டெப்பாசிட்டர்களுக்கு கூடுதல் பாதுகாப்பு.

வட்டி விகிதா…

குறித்தகால வைப்… தொகை

| | |
|---|---|
| 91 நாட்கள் முதல் 6 மாதங்களுக்குட்பட்டு | 7½% |
| 6 மாதங்கள் முதல் 12 மாதங்களுக்குட்பட்டு | 9% |
| 12 மாதங்கள் முதல் 24 மாதங்களுக்குட்பட்டு | 9½% |
| 24 மாதங்கள் முதல் 36 மாதங்களுக்குட்பட்டு | 10% |
| 36 மாதங்கள் முதல் 60 மாதங்களுக்குட்பட்டு | 11% |
| 60 மாதங்களும் அதற்கு மேலும் | 12% |
| சேமிப்புக் கணக்கு | 6% |
| நடப்புக் கணக்கு | ½% |
| தினசரி சேமிப்புக்கணக்கு (மினி டெப்பாசிட்) | 5% முதல் 6% வரை |
| ரெக்கரிங் டெப்பாசிட் | 12% வரை |

1981-'82 மற்றும் 1982-'83 ஆண்டுகளில் 12% டிவிடென்ட் வழங்கியதற்காக அகில இந்திய கூட்டுறவு வார விழாவில் பாராட்டுப் பெற்ற வங்கி.

T.C. சுவாமிநாதன்
கூட்டுறவு சார்பதிவாளர்/செயலர்

S. சுந்தரம், B.A.,B.L.
தலைவர்.

தொலைபேசி எண்: 86

## பட்டுக்கோட்டை கூட்டுறவு நகர வங்கி லிட். எண். 2344

பட்டுக்கோட்டை

டெபாசிட்களுக்கு 12% வட்டி அளிக்கிறது.

சேமிப்புக் கணக்கிற்கு 6% வட்டி அளிக்கிறது. ரூ. 5,300 முதலீடு செய்து 300 மாதங்களில் லட்சாதிபதி ஆகலாம்.

உங்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு எங்கள் வங்கியின் "கற்பகம்" டெபாசிட் திட்டத்தில் முதலீடு செய்யுங்கள். இத்திட்டத்தின் கீழ் ரூ. 10,000 முதலீடு செய்தால் 120 மாத கெடுவுக்குள் எங்கள் வங்கியில் ரூ. 32,620-50 பெறலாம். ஆனால் மற்ற வங்கிகளில் ரூ. 29,599/-தான் பெற இயலும். எனவே, எங்களிடம் வட்டி ரூ. 3021-50 அதிகம் பெறலாம்.

உங்கள் அன்புக் குழந்தைகளின் உயர் கல்விக்கும், திருமணச்செலவிற்கும், பொருள் சேர்த்திட எங்கள் "கற்பகம்" டெபாசிட் திட்டத்தில் முதலீடு செய்யுங்கள்.

பட்டுக்கோட்டையிலுள்ள தேசியமயமாக்கப்பட்ட மற்றும் இதர வங்கிகளின் வட்டி விகிதத்தைவிட எங்கள் வங்கியின் வட்டி விகிதம் 1% அதிகம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். எனவே, பொதுமக்கள் தங்கள் டெபாசிட்டுகளை எங்கள் வங்கியில் முதலீடு செய்து, கூடுதல் பயனைப் பெற வேண்டுகிறோம்.

உங்களுடைய வைப்புநிதிகளுக்கு ரூ. 30,000/- வரை காப்பீடு (Insurance) செய்யப்படுகிறது. மற்றும் எல்லாவிதமான டெபாசிட்டுகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

தமிழ்நாடு முழுதும் "டிராப்ட்" வழங்கப்படுகிறது. எங்கள் வங்கியில் போடும் நிரந்தர வைப்புநிதிக்கு (Fixed Deposit) 27-5-1985 முதல் 12% வரை வட்டி வழங்கப்படுகிறது.

ஆர். கோவிந்தசாமி
கூட்டுறவு சார் பதிவாளர்/தனி அதிகாரி





# சிறப்பிடம் பெறும் சித்திரக் கைத்தறி

தமிழ்நாட்டில் வேளாண்மைக்கு அடுத்த நிலையில் கைத்தறித் தொழில் சிறப்பிடம் பெறுகிறது.

திருச்சி மாவட்டம் ஜெயங்கொண்டம் பகுதியில் தேங்கியிருந்த ரூபாய் 1 கோடியே 92 இலட்சம் மதிப்புள்ள கைத்தறித் துணிகளில் கோ ஆப்டெக்ஸ் நிறுவனம் முதல் தடவையாக 25 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள துணிகளைக் கொள்முதல் செய்துள்ளது. மீண்டும் 40 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள துணிகள் கொள்முதல் செய்ய ஆர்டர் கொடுத்துள்ளது. மேலும் ரூபாய் 3 கோடியே 91 இலட்சம் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் கொள்முதல் செய்ய ஏற்பாடாகியுள்ளது.

கடந்த 84-ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் இந்த ஆண்டு பிப்ரவரி வரையில் சுமார் 4 கோடி ரூபாய் மதிப்புள்ள துணிகளை இந்தப் பகுதியில் உள்ள கூட்டுறவுக் கைத்தறிச் சங்கங்கள் விற்பனை செய்துள்ளன.

கடந்த 12 மாதங்களில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் இந்தச்சங்கங்களிலிருந்து கொள்முதல் செய்த மொத்த துணிகளின் மதிப்பு 5 கோடியே பத்து இலட்சம் ரூபாயாகும். இதனால் தேங்கியுள்ள துணிகள் கணிசமான அளவுக்குக் குறைந்துள்ளது.

ஆதி திராவிடர்களுக்கு என்று பத்து தொழிலியல் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட இருக்கின்றன. சேலம் மாவட்டத்தில்





எம். சத்திரப்பட்டி, ஏலூர், மல்லசமுத்திரம், கன்னியாகுமரி மாவட்டத்தில் தேரூர், பெரியார் மாவட்டத்தில் ஆப்பக்கூடல், நெல்லை மாவட்டத்தில் வேப்பலோடை, பரமன் குறிச்சி, திருச்சி மாவட்டத்தில் வழியனூர் மணமங்கலம், தர்மபுரி மாவட்டத்தில் பாப்பாரப்பட்டி ஆகிய இடங்களில் அமைக்கப்பட உள்ளன.

ஒவ்வொரு சங்கத்திற்கும் 4 இலட்சம் ரூபாய் வீதம் செலவாகும். இந்தப் பத்து சங்கங்களின் மூலம் சுமார் ஆயிரம் ஆதி திராவிடர் பயன் அடைவர். ஏற்கனவே 16 சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதற்காக அரசு 78 இலட்சம் ரூபாய் செலவிட்டிருக்கிறது.



# சத்துணவு தரும் வளர்ச்சி

கோவை அவிநாசிலிங்கம் மகளிர் கல்லூரியில் இயக்குநர் மேற்பார்வையில் அவ்வப்போது முதலமைச்சர் சத்துணவுக் கூடங்களில் உணவு அருந்தும் குழந்தைகளின் வளர்ச்சி பற்றி ஆய்வு செய்யப்படுகிறது.

அவர்களது ஆராய்ச்சிப்படி சத்துணவு சாப்பிடும் குழந்தைகள் நல்ல வளர்ச்சியும், எடைக்கூடுதலும் பெற்றிருக்கிறார்கள் என்று அறிய வருகிறது.

*1983-84* வரை ஓராண்டுக் காலத்தில் ஆய்வு செய்திருக்கிறார்கள். மூவாயிரத்து இருநூற்று ஐம்பத்தியேழு குழந்தைகளிடம் ஆய்வு நடத்தினார்கள். அதன்படி 4 செண்டிமீட்டர் முதல் 6 சென்டி மீட்டர் வரை குழந்தைகள் கூடுதலாக உயரம் பெற்றிருக்கிறார்கள். $1\frac{1}{2}$ கிலோ முதல் $2\frac{1}{2}$ கிலோ வரை குழந்தைகளின் எடை கூடியிருக்கிறது.

இந்திய மருத்துவ நிபுணர் குழு நிர்ணயித்த அளவை இந்தத் திட்டத்தின் மூலம் குழந்தைகள் பெற்றிருக்கின்றன.

ஆரம்பச் சுகாதார நிலையப் பள்ளியிலுள்ள டாக்டர்கள் மாதந்தோறும் ஒவ்வொரு குழந்தையையும் பரிசோதனை செய்து அந்தக் குழந்தைகளின் வளர்ச்சி பற்றி 'கார்டு'களில் பதிவு செய்து வைத்திருக்கிறார்கள்.

ஏழைக் குழந்தைகள் பலன் பெறும் சத்துணவுத் திட்டத்தை மேலும் சீரோடும் சிறப்போடும் செயல்படுத்தவும், அதனைத் தனித் துறையாகப் பிரிக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டார்.

தனித் துறையாகச் சத்துணவுத் துறை ஆனதும், சத்துணவுத் திட்ட அமைப்பாளர்களின் கோரிக்கைகள் உடனுக்குடன் தானாக தீர்வுபெறுவதற்கு வகை ஏற்படும்.



# வரி விதிப்பில் சலுகைகள்



வணிகவரித்துறை அதிகாரிகள் திறமையாகப் பணியாற்றி வருவதால் வருவாய் அதிகரித்திருக்கிறது.

பொருட்களை வாங்கிச் சாப்பிடுபவர்கள் பாதிக்கப்படாமல் இருக்கின்றனர். பொருளாதார வளர்ச்சி, தொழில் வளர்ச்சி பாதிக்காத வகையில் வரிவிதிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால் வணிகம் பெருகி இருக்கிறது. தொழில் பெருகியிருக்கிறது.

பல்வேறு ஆக்கப்பணிகள், மக்கள் நலப்பணிகள் நிறைவேற்றப்பட வேண்டி இருக்கிறது. ஆகவே, அரசுக்கு அதிக வருவாய் தேவைப்படுகிறது. தொழில் நடத்துபவர்கள் பாதிக்காத வகையில், வாங்கி உண்பவர்கள் பாதிக்காத வகையில் வரி விதிக்கப்படுகிறது.

அரசு வேண்டும் என்று கூடுதல் விற்பனை வரியை விதிக்கவில்லை. நுழைவு வரியை நாம் கொண்டு வந்தோம். அந்தச் சட்டம் மத்திய அரசின் அனுமதிக்காகக் காத்திருக்கிறது. தமிழக வணிகர்கள் இந்த நுழைவு வரி கூடாது என்று கூறினார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் இதுபற்றி முறையிட்டனர். அரசின் வருவாய்க்கு வேறு மாற்று யோசனை சொல்லுங்கள் என்று முதல்வர் அவர்கள் கூறினார். வணிகர்களது ஆலோசனையின் பேரில்தான் இந்தக் கூடுதல் விற்பனை வரிவிதிக்கப் பட்டுள்ளது.

வரி விதிப்பில் வியாபாரிகளுக்குப் பல சலுகைகளை வழங்கி இருக்கிறது அரசு,



இந்த அரசு எப்படியும் வருவாய் குறையாமல் வியாபாரிகளுக்கு நன்மைகளைச் செய்யும். நுகர்வோர் நலன் பாதிக்காத வகையில் இந்த அரசு வரிவிதிப்பு முறைகளை மேற்கொள்ளும்.

157 பொருட்களுக்கு ஒருமுனை வரியும், 66 பொருட்களுக்குப் பலமுனை வரியும் விதிக்கப் பட்டிருக்கின்றன. ஒன்றன்பின் ஒன்றாக வருவாய் இழப்பு இல்லாத வகையில் ஒருமுனை வரியாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த ஆண்டு 19 தமிழ்ப் படங்களுக்கும், 4 ஆங்கிலப் படங்களும் வரி விலக்கு அளிக்கப் பட்டிருக்கிறது.

குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதுதான் அரசின் கொள்கை. குதிரைப்பந்தயத்தில் முறைகேடுகள்-தவறுகள் நடைபெறுகின்றன. அவற்றை ஒழிக்க பிரிட்டிஷ் பேட்டன் முறையில் சட்டம் கொண்டு வரப்பட இருக்கிறது.

சோதனைச் சாவடி உள்ள இடங்களில் லாரிகள் சாலைகளில் நிற்கின்றன. இவைகளைச் சாலைகளுக்கு உட்புறமாக நிற்கும் வகையில் சோதனைச் சாவடிகளுக்குப் புதிய கட்டடம் கட்டப்படும்.



# செழித்து வரும் சிறு தொழில்கள்

கிராமப் பகுதிகளில் தொழில்களை உருவாக்குவதன் மூலம் அங்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துவதே தமிழ்நாடு அரசின் கொள்கையாகும்.

1977-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் இறுதியில் 18,789 நிரந்தரமாக பதிவு செய்யப்பட்ட தொழில் பிரிவுகள் இருந்தன. இவை 1984ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களுக்குள் 49,920 ஆக உயர்ந்துள்ளன. 1985ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் 60,259 ஆக மேலும் உயர்ந்துள்ளன. எட்டு ஆண்டுகளுக்குக் குறைவாக உள்ள காலத்தில் பதிவு செய்யப்பட்ட சிறு தொழில் பிரிவுகளின் எண்ணிக்கை 200 சதவீதத்திற்கும் மேலாக உயர்ந்துள்ளன என்பதை இது காட்டுகிறது. 1984-85 ஆம் ஆண்டில்பதிவுசெய்யப்பட்ட தொழில் பிரிவுகளின்எண்ணிக்கை 1985ஆம்ஆண்டு மார்ச்சுத் திங்கள் இறுதிக்குள் 10,958 ஆக உயர்ந்துள்ளது. இது சென்ற ஆண்டைவிட இரு மடங்குச் சாதனையாகும். இந்த ஆண்டில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்.

நடப்பு ஆண்டில் மாவட்டத் தொழில் மையங்கள் மூலமாக மத்திய அரசு பொறுப்பேற்கும் இத்திட்டம் செயல்படுத்தப் பட்டது. 1983-84ஆம் ஆண்டு இலக்கைவிட சாதனை அதிகரித்த ஒரு சில மாநிலங்களில் நமது மாநிலமும் ஒன்றாகும். மாவட்டத் தொழில் மையங்களும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளும் தீவிரமாகச் செயல்நோக்கிலும் உதவிபுரிந்துள்ளதால் இத்திட்டத்தின் கீழ் இவ்வாண்டிலும், இலக்கு மீறப்பட்டுள்ளது. அதாவது 1984-85ல் 21,700 நபர்களுக்கு உதவியளிக்க வேண்டுமென்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால் மார்ச் இறுதிக்குள் 22,500 நபர்களுக்கு ரூ. 42.49 கோடி ஒப்பளிப்பு செய்து சாதனை புரியப்பட்டுள்ளது. மாவட்டத் தொழில் மையங்களால் அமைக்கப்பட்ட பணிக்குழு 1985-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் மத்தியில் ரூபாய் 57.46 கோடி தொகைக்கான 28,602 விண்ணப்பங்களும் இதுவரையில் வங்கிகளுக்குப் பரிந்துரைத்துள்ளது. 1983-84ல் இத்திட்டத்தின் கீழ் வணிக நடவடிக்கைகளுக்கு நிதியுதவி அளித்திருக்க சொத்துக்களை ஏற்படுத்தும் வகையில் அதிக அளவில் வேலை வாய்ப்பினை உருவாக்கும் வகையிலும் இவ்வாண்டு தொழில்களுக்கு மட்டும் அதிக அளவு நிதி ஒதுக்கப்படுவது ஈண்டு குறிப்பிடுவது பொருத்தமாகும். கடந்த ஆண்டில் கடன் அனுமதிக்கப்பட்ட தொழில் பிரிவுகளில் 11,899 தொழில் பிரிவுகள் ஏற்கெனவே செயல்படத் தொடங்கியுள்ளன.

ஏற்கெனவே உள்ள தொழில் பிரிவுகள் சுமுகமாகச் செயல்படுவதானது புதிய தொழில் பிரிவுகளை உருவாக்குவதைப் போல் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். இச்சூழ்நிலையில் நலிந்த சிறு தொழில் பிரிவுகளை மீண்டும் தொடங்கி அவற்றிற்குப் புத்துயிர் அளிக்கும் திட்டத்தை மாநில அரசு உருவாக்கியுள்ளது.

இதுவரை 45 தொழில் பிரிவுகளுக்கு 71.92 இலட்சம் ரூபாய் வரையில் முன்வரம்புத் தொகை உதவியாக அளிக்கப்பட்டுள்ளது.

தொழில் முனைவர், தொழிற்சாலை ஒன்று அமைக்கப்படுவதற்கு முன்பு, அவருக்குத் தேவைப்படும் அனுமதிகளுக்கு வெவ்வேறு துறைகளிடமிருந்து விரைவில் இசைவு பெறும் பொருட்டு மாநில மாவட்ட அளவுகளில். 'ஒரே கூரையின் கீழ் தடைகளை நீக்கி அனுமதியளிக்கும் முறை' குறித்த குழு ஒன்றை அமைக்க வேண்டி கடந்தாண்டு முக்கியமான நடவடிக்கை ஒன்றை அரசு மேற்கொண்டது.

சிறு தொழில்களுக்காக அமைக்கப்பட்ட ''ஒரே கூரையின் கீழ் தடை நீக்கி இசைவளிக்கும் முறை'' பற்றிய குழு வெற்றிகரமாகச் செயல்படுவதைக் கருத்தில் கொண்டு நடத்தர, பெரிய தொழில் பிரிவுகளுக்கும் இது போன்ற பயன்களை அளிக்கும் பொருட்டு தொழில் துறை ஆணையர் - அரசுச் செயலாளர் தலைமையில் உயர் அதிகாரிகள் குழு ஒன்றை அரசு தற்போது நியமித்துள்ளது.

இரண்டு ஆண்டுகளாக நிலவி வந்த கடும் வறட்சியின் காரணமாக தேங்காய் மட்டைகள் உற்பத்தி மிகவும் பாதிக்கப்பட்ட போதும் தென்னைநார்த்தொழில் சங்கங்களின் உற்பத்தியானது 1982-83-ல் 33.48 இலட்சம் ரூபாயிலிருந்து 1985 மார்ச் வரையில் 65.84 இலட்சம் ரூபாயாக உயர்ந்துள்ளது.

சிறப்புத் திட்டங்கள் மூலமாக சுய வேலை வாய்ப்பு வசதிகளைப் பெருக்க தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (டிக்) தாராளமாக நிதி வசதி வழங்குகிறது. அவர்களுக்குச் சுயவேலைவாய்ப்பு வசதியை அளிக்கும் பொருட்டு, லாரிகள், டிரக்குகள், சுற்றுலா டாக்சிகள், டெம்போக்கள், வேன்கள் போன்றபோக்குவரத்து வண்டிகளை வாங்கக் கடன்கள் வழங்கப்படுகின்றன. 1984-85ல் 1985 மார்ச் வரை கடன் கேட்டு விண்ணப்பித்த 1092 பேர்களுக்கு மொத்தத்தில் சுமார் ரூ.13.09 கோடி தொகையை இக்கழகம் வழங்கியுள்ளது.





# இலங்கை அகதிகளுக்கு இன்முகத்துடன் உதவிகள்

இலங்கையில் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமை, வன்செயல், இனப்படுகொலையின் காரணமாக, சிங்களர்களின் அடக்குமுறைக்கு அஞ்சி, உயிர்ப்பிச்சைகேட்டு வந்துள்ள இலங்கைத் தமிழர்களுக்கு மாநிலத்தின் பல பகுதிகளில் முகாம்கள் அமைத்து அவர்கள் வாழ்வதற்கு வழிவகை செய்து வருகிறது தமிழக அரசு.

மதுரை மாவட்டத்தில் மட்டும் 402 குடும்பங்கள் 16 முகாம்களில் மொத்தம் 2012 பேர்கள் வாழ்ந்து வருகிறார்கள். தமிழகத்தில் மொத்தம் 22 ஆயிரம் பேர்கள் அகதிகளாக இனக் கலவரத்தினால் தாயகம் திரும்பியுள்ளார்கள்.

வசதியாக வாழ்ந்த குடும்பத்தில் உள்ளவர்கள் இன்று அகதிகளாக நம்மிடையே உள்ளனர். நாம் கொடுக்கின்ற உதவித் தொகை மற்றும் அரசின் பல சலுகைகள் அவர்களுக்குப் பெரிதும் உதவியாக இருக்கின்ற காரணத்தினால் அவர்கள் இன்று மகிழ்ச்சியாக உள்ளனர்.

தமிழக அரசு மைய அரசுடன் கேட்டுக் கொண்டதின் பேரில் மொத்தம் 600 வீடுகள் கட்டுவதற்கு ரூ. 80 இலட்சம் செலவிட அனுமதி வழங்கியுள்ளது. 500 வீடுகள் மண்டபத்திலும், 100 வீடுகள் தூத்துக்குடியிலும் கட்டுவதற்குரிய வேலைகள் நடைபெற்றுக் கொண்டுள்ளன.

எனவே இலங்கைத் தமிழர் பிரச்சினையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அரசியல் ரீதியாகவும் அணுகி வருகிறார், அரசு ரீதியாகவும் இலங்கைத் தமிழர்களுக்குப் பலவித நன்மைகளைச் செய்து வருகிறார்.

இந்த விழாவில் மேலூர் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நான்கு ஆதிதிராவிடர்களுக்கு ரூ. 20 ஆயிரம் மதிப்புள்ள வண்டிகள் மற்றும் மாடுகளும் வழங்கப்பட்டன.



# பிற்படுத்தப்பட்டோர் நலம் பேணும் அரசு

பிற்படுத்தப்பட்டோருக்கு எந்த வகையிலும் எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

பிற்படுத்தப்பட்டோர் நல இரண்டாவது குழுவின் (அம்பா சங்கர் குழு) பரிந்துரைகளை ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்க சுப்ரீம்கோர்ட் 31.5.1985 வரை முதலில் அவகாசம் தந்திருந்தது. அதற்குள் இப்பரிந்துரைகளை ஆராய்ந்து முடிவெடுக்க இயலாததால், சுப்ரீம் கோர்ட்டில் மனுச் செய்து இக்காலத்தை நீடித்துத் தருமாறும், இப்போதுள்ள இட ஒதுக்கீடு ஆணைகளை நீட்டிக்கும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான விடுதிகள் 13 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகின்றன.

பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை வழங்க நடப்பு ஆண்டில் 3 கோடியே 69 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. இதனால் 4 லட்சத்து 57 ஆயிரத்து 392 மாணவர்கள் பயன் பெறுவார்கள்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினரில் மிகவும் நலிவுற்ற நிலையில் உள்ள மக்களுக்காக குறிப்பாக முடிதிருத்துவோர், சலவையாளர், நரிக்குறவர் போன்றவர்களுக்கு வீட்டுமனைகள் வழங்க நிலங்களைக் கையகப்படுத்தும் திட்டப்பணிக்கு நடப்பாண்டில் 10லட்ச ரூபாய்ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஜே.ஏ. அம்பாசங்கர் தலைமையிலான பிற்படுத்தப்பட்டோர் நலக் குழுவின் அறிக்கையை தமிழ்க அரசு பரிசீலித்து வருகிறது.





# வீடற்றவர்களுக்கு வீட்டு வசதி

மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் உயர்த்துவதற்கும் வீடற்றவர்களுக்கு வீட்டு வசதியளிப்பது மிக இன்றியமையாததாகும்.

ஐந்தாண்டுத் திட்டங்களின்கீழ் செயல்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டங்களில் வீட்டு வசதிப் பிரிவுக்கு தமிழக அரசு எப்பொழுதும் உரிய முக்கியத்துவத்தை அளித்து வந்துள்ளது. உணவுக்கு அடுத்தபடியாக வீட்டு வசதியானது மிக முக்கியத் தேவையாக உருவாகியுள்ளது. அரசு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் மற்றும் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களின் வாயிலாகப் பல்வேறுபட்ட திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

புதிய இருபது அம்சத் திட்டம் கிராமப்புற மக்களுக்கு வீட்டு மனையும், வீடு கட்ட நிதி வசதியும், பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கு வீட்டு வசதியும், குடிசைப் பகுதியின் சுற்றுப்புறத்தை மேம்படுத்துதலும் கட்டாயத் தேவை என்பதை வலியுறுத்துகிறது. இந்த இருபது அம்சத் திட்டத்தின் கீழ் நமது சாதனைகள் இலக்குகளைக் காட்டிலும் அதிகமாக அமைந்துள்ளது.

1. வீட்டு மனை ஒதுக்கீடு1984-85-க்கான இலக்குகள் 1,75,000. மார்ச்,1985 வரையிலுள்ள சாதனைகள் 2,05,108, இதே போல 2. வீடுகட்ட நிதியுதவி வழங்குதல் 41,484 42,476
3. பயன் பெறும் குடிசை வாழ் மக்கள் 2,45,000 2,62,927
4. பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு வீட்டு வசதி வழங்குதல் 33,700 36.081.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் முதல் உயர் வருவாய்த் தொகுதியினர் வரை உள்ள பல தரப்பட்ட மக்களுக்காகப் பல் வேறுபட்ட சமூக வீட்டு வசதித் திட்டங்களை நிறைவேற்றி, தமிழ்நாட்டில் வீட்டு வசதி இருப்பினைப் பெருக்குகிறது. 1985-86ஆம் ஆண்டில் 15,273 வீடுகளைக் கட்டுவதற்காக வீட்டு வசதி வாரியம் தனது திட்டங்களை நிறைவேற்ற ஆகும் செலவினை ரூ. 5,250 இலட்சத்துக்கு உயர்த்தியுள்ளது.

தமிழ்நாட்டில் வீட்டு வசதி வாரியம், மாத வருமானம் ரூ. 351-க்கும் ரூ. 600-க்கும் இடைப்பட்ட வருவாயினர் நலனுக்காக இத்திட்டத்தினை உருவாக்கியுள்ளது. வாரியம் 1984-





85ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முடிய 23,858 வீடுகளைக் கட்டி முடித்துள்ளது. 1985-86ஆம் ஆண்டில் 2,488 வீடுகளைக் கட்டி முடிக்கதீர்மானிக்கப்பட்டுள்ளது.

1984ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதி வரை வாரியம் 20,082 வீடுகளை நடுத்தர மற்றும் உயர் வருவாய்த் தொகுதியினருக்கான திட்டங்களின்கீழ் கட்டியுள்ளது. 1985-86 ஆம் ஆண்டில் வாரியம், 5,746 வீடுகளைக் கட்ட தீர்மானித்துள்ளது.

மாத வருமானம் ரூ. 350-க்கும் குறைவாக உள்ள தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்குக் குடியிருப்புகளைக் கட்டி வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்கிறது. இத்திட்டத்தின் கீழ் 1985ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை வீட்டு வசதி வாரியம் 3,130 குடியிருப்புகளைக் கட்டியுள்ளது.

**தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கான வாடகை வீட்டு வசதித் திட்டம்:**

இத்திட்டம், சென்னை நகரம் மாவட்டம் மற்றும் வட்டத் தலைமையகங்களில் பணிபுரியும் அரசு ஊழியர்களுக்குச் சலுகை வாடகை அடிப்படையில் வீட்டு வசதி வழங்குவதற்கு உருவாக்கப்பட்டுள்ளது. 1985 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை வீட்டு வசதி வாரியம் 15,364 வீடுகளைக் கட்டியுள்ளது.

**முதலாம் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம்:**

இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நிறைவேற்றும் தன்னிறைவு வீட்டு மனைகள் திட்டம், அரும்பாக்கம், வில்லிவாக்கம் மற்றும் கொடுங்கையூர்ப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது வரை ரூ. 643.64 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**இரண்டாம் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் (மொகப்பேர் திட்டம்):**

1981ஆம் ஆண்டு மார்ச் மாதம் துவக்கிய இத்திட்டத்தின் கீழ் 153 ஏக்கர் நிலத்தில் 3,759 வசதிகளடங்கிய வீட்டு மனைகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் குடிசைப்பகுதி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மாவட்டத் தலைநகர்களான கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் 1985 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையில் 19,532 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

குடிசைப்பகுதி மாற்று வாரியம் 1983-84 ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தின்கீழ் சென்னை நகரில் ரூ. 46,61.69 இலட்சம் செலவில் 43,980 குடியிருப்புகளைக் கட்டியுள்ளது. சமீப ஆண்டுகளில் குடியிருப்பு கட்டும் திட்டத்திற்கு அரசு மானியம் மற்றும் ஹட்கோக் கடன் உதவி பெறப்படுகிறது.

1984-85ஆம் ஆண்டில் அரசு வழங்கும் மானியம் மற்றும் ஹட்கோக் கடன் ஆகியவற்றைக் கொண்டு 2,000 குடியிருப்புகளை வாரியம் கட்டியுள்ளது. இதற்காக 1984-85ஆம் ஆண்டில் செலவிட்ட தொகை ரூ. 200.70 இலட்சம் ஆகும்.

முதலாம் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் குடிசைப்பகுதி மாற்று வாரியமும் சென்னை மாநகராட்சியும் இணைந்து செயலாற்றி ரூ. 443.65 இலட்சம் செலவில் 24,862 குடும்பத்தினர் பயனடைந்தனர். 1983-84ஆம் ஆண்டு வரை ரூ. 657 இலட்சம் செலவில் 35,000 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. 1984-85ஆம் ஆண்டில் ரூ. 384,62 இலட்சம் செலவிடப்பட்டு, 13,501 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

1984-85ஆம் ஆண்டு வீடு கட்டுவதற்காக ரூ. 237 இலட்சம் கடன் வழங்கப்பட்டு 8,099 குடும்பங்கள் பயனடைந்தன.

அரசு அலுவலர்கள் வீடு கட்டுவதற்கு அதிகப்பட்சக் கடனாக ரூ. 1,75,000 தற்பொழுது வழங்கப்படுகிறது. அலுவலர்கள் தங்களுக்குச் சொந்தமான வீடுகளை விரிவாக்கிக்கொள்ள அதிகப்பட்சக் கடன் தொகைக்கு உட்பட்டு ரூ. 75,000 கடனாகப் பெறலாம்.

இத்திட்டத்திற்காக 1984-85ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அவ்வொதுக்கீட்டில் நகராட்சி அலுவலர்களுக்கு வீடுகட்ட கடன் வழங்க, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறைக்கு ரூ. 50 இலட்சமும், பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு வீடுகட்ட கடன் வழங்க ரூ. 50 இலட்சமும் ஒதுக்கப்பட்டது.



வீடுகட்டுவதற்காக முன்பணம் வழங்கும் திட்டத்தின்கீழ் இவ்வாண்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள சலுகைகள் தரப்பட்டுள்ளன:—

* அரசு அலுவலர்கள் தங்களது வீட்டை விரிவுபடுத்தவும், மேம்பாடு செய்யவும் இரண்டாவது முறையாக முன்பணம் வழங்கப்படும். அவ்வாறு முன்பணம் வழங்கப்படும் விண்ணப்பதாரர்கள் திருப்பிச் செலுத்தும் திறன் தற்பொழுதுள்ள அதிகபட்ச, வரம்பு ரூ. 75,000 மற்றும் முன்பணம் வழங்குவதில் மற்ற பிரிவுகளுக்கும் இதற்குமிடையே 10:1 என்ற விகிதத்தின் அடிப்படையில் முன்பணம் வழங்கப்படும்.

* வீடுகட்டுவதற்கான முன்பணம் வழங்கும் திட்டத்தின்கீழ் விண்ணப்பிப்பதற்குஆறாண்டுகள் தொடர்ச்சியாகப் பணிபுரிந்திருக்க வேண்டும். அவ்விதி முறையினை மாற்றி அரசு அலுவலர்கள் மற்றும் அனைத்திந்திய பணி அதிகாரிகள் முன் பணத்திற்கான விண்ணப்பத்தினைத் தருகின்றபொழுது ஆறாண்டு தொடர்ச்சியாகப் பணியிலோ அல்லது தங்களது பணியில் உறுதி செய்யப்பட்டிருந்தாலோ இவைகளில் எது முந்தியதோ அதன் அடிப்படையில் முன்பணம் வழங்கப்படும்.

* 1985-86ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் அரசு அலுவலர்களுக்கு ரூ. 900 இலட்சமும், பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ரூ. 50 இலட்சமும், அனைத்திந்திய பணி அதிகாரிகளுக்கு ரூ. 30 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நகரத்தின் மத்திய பகுதியிலிருந்து 18 கி.மீ. தொலைவில் உள்ள கோயம்பேடு என்னும் இடத்தில் மொத்த விற்பனை அங்காடி அமைப்பதன் நோக்கம்-நகரத்தின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும், பொது வியாபார இடமாக அமைத்து அதில் திட்டமிட்ட நவீன கட்டடங்களைக் கட்டி அவற்றில் துணிமணி, உணவுப் பொருள் மற்றும் அழுகக் கூடிய பொருள்கள் கொண்ட அங்காடியை அமைக்கத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. 230 ஏக்கர் நிலப்பரப்பில் 3,000 கடைகள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 204 ஏக்கர் தனியார் நிலத்தில் 150 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது,

**மறை மலை புதுநகர்**

இதுவரை 152 ஏக்கர் நிலப்பரப்பில் 483 மனைகள், 20 குளியல் மற்றும் கழிவறைகள் கூடிய மனைகளும் மற்றும் 1,186 வீடுகளும் கட்டி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 456 ஏக்கர் நிலப்பரப்பளவில் தொழிற்சாலைகளுக்கான மனைகள் மேம்பாடு செய்யப்பட்டு 87 தொழிற்சாலைகளுக்கு மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இதில் 60 தொழிற்சாலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

# Introducing TEL –

## the first manufacturer of commercial & industrial explosives and accessories in Tamilnadu



## Blowing up obstacles to industrial progress – Tamilnadu Industrial Explosives Limited

Situated in the industrially developing town of Katpadi/Vellore, Tamilnadu Industrial Explosives Ltd., a State Government Undertaking, will shortly go on stream. Its major product line will be Nitroglycerine-based commercial explosives, marketed under the brand name "Sun".

Nitroglycerine - based explosives, produced using latest technology from Sweden & Norway, have several distinct advantages over slurry explosives – the important ones being that they have much longer - keeping qualities and are far safer and can be used in underwater operations like oil-well spudding as well as in water bound or wet mines. These explosives will contribute substantially to the mining, civil engineering and construction activities.

TEL has also entered into a collaboration agreement with leading and reputed companies in West Germany for the production of detonators, detonating fuses, Ammonium Nitrate & Nitric Acid – with the full encouragement of the Tamil Nadu State Government- through TIDCO.

**Tamil Nadu Industrial Explosives Ltd.**
(A Government of Tamil Nadu Undertaking)
18, 2nd East Main Road
Gandhi Nagar, Vellore 632 006




# முத்துக்காடு சர்வதேச சுற்றுலா மையம்

தமிழ்நாட்டில், மாமல்லபுரம் ஒரு முக்கிய சர்வதேச சுற்றுலா மையமாக விளங்குகிறது. இந்தியாவில் பல பகுதிகளிலிருந்து மட்டுமில்லாமல் உலகின் பல நாடுகளிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். வரலாற்று சிறப்பு மிக்க இக்கடற்கரைச் சுற்றுலா மையத்திற்கு அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை ஈர்த்திடவும், இங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகளை அளித்திடவும், தமிழ்நாடு அரசு தேவையான முயற்சிகளை எடுத்து வருகின்றது. சீரான திட்டமிட்ட முன்னேற்றத்தை அடைய தமிழ்நாடு அரசு 6 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் பெருந்திட்ட வரைவு ஒன்றைத் தயாரித்துள்ளது. இத்திட்டத்தில் கீழ்க்காணும் பணிகள் அடங்கும்.

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| தங்குமிட வசதிகள் | 171.75 |
| போக்குவரத்து வசதிகள் | 111.30 |
| குடிதண்ணீர் மற்றும் வடிகால் வசதிகள் | 41.50 |
| நிலம் அழகுபடுத்துதல் | 68.85 |
| மின்வசதிகள் அதிகரித்தல் | 50.50 |
| நிலம் கையகப்படுத்துதல் | 6.92 |
| பொழுதுபோக்கு வசதிகள் | 104.50 |
| பிற திட்டங்கள் | 27.24 |

இதுவரை ரூ. 125 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும் ரூ. 30 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புதிய பணிகளுக்கான திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன.

சுற்றுலா மையங்கள் தற்போது கடற்கரையை ஒட்டி வளர்கிறபுதுத் திருப்பம் காணப்படுகிறது. குறிப்பாக, புனல் விளையாட்டுக்கள் சுற்றுலா வளர்ச்சியில் சிறப்பான இடத்தைப் பெற்று வருகின்றன. நீண்ட நெடிய கடற்கரையைக் கொண்ட தமிழ்நாட்டிலுள்ள ஏரிகளிலும், காயல்களிலும் புனல் விளையாட்டுக்களை நடத்துவதை ஊக்கப்படுத்தவும், கடற்கரைச் சுற்றுலா வளாகங்களை உருவாக்கவும், இங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் மகிழ்ந்து விளையாடவும் வசதிகளை ஏற்படுத்தித் தர தமிழ்நாடு அரசு கருதியுள்ளது.

ஐக்கிய நாடு வளர்ச்சிப் பணியைச் சார்ந்த வல்லுநர் குழு (UNDP) சென்னை-மாமல்லபுரம் கிழக்குக்கடற்கரைச் சாலையை பார்வையிட்டபின், இயற்கை எழில்மிக்க இக்கிழக்குக் கடற்கரைப் பகுதியினை பாதுகாத்து, இயற்கை எழில் பாதிக்காத வண்ணம் அழகுபடுத்த வேண்டும் எனப் பரிந்துரை செய்துள்ளது.



முத்துக்காடு காயல் பகுதி, சென்னை-மாமல்லபுரம் சாலையில் எழிலார்ந்த ஒரு சுற்றுலா இடமாக அமைந்துள்ளது. எனவே, இப்பகுதி புனல்விளையாட்டுகளுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மாமல்லபுரம் வரும் சுற்றுலாப் பயணிகள் இங்கு தங்கி விளையாடி மகிழ்ந்து செல்ல இதனால் வாய்ப்பு ஏற்படுகிறது. தமிழ்நாடு அரசு வழங்கிய ரூ. 5 இலட்சத்திலும், மத்திய அரசு வழங்கிய ரூ.6.39 இலட்சத்திலும், நிலச்சிரமைப்பு, புதிய மரங்கள் நடுதல், தோட்டங்கள் அமைத்தல், புதிய படகுகள் வாங்குதல், படகுத்துறை முதலிய சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இங்கு அகில இந்தியப் படகுப் போட்டியை நடத்துவதற்கு வாய்ப்பாகச் சுமார் ரூ. ஒரு இலட்சம் செலவில் இந்த காயல் பகுதியைத் தூர் எடுத்து அழகு படுத்தப்பட்டுள்ளது. எண்ணெய் வித்துத் துறை இயக்குநர் அவர்களின் கூட்டு முயற்சியுடன் முத்துக்காடு பகுதி நிலச்சீரமைத்து அழகுபடுத்தப்பட்டு வருகின்றது.

8-1-1984 அன்று முத்துக்காடு படகு துறை தொடங்கப்பட்டது. 16 துடுப்புப் படகுகள், 1 விசைப்படகு, 2 பாய்மர படகுகள் (Wind Surfers) ஆகியவை இங்கு உள்ளன.

இதுவரை சுமார் ஒரு இலட்சம் பயணிகள் இங்கு வந்து உல்லாசப் படகுகளில் பொழுதை உல்லாசமாகக் கழித்துள்ளனர். அதன் மூலம் ரூ. 1.50 இலட்சம் வருவாய் கிடைத்துள்ளது.

9-வது தேசிய படகுப் போட்டி இங்கு நடைபெறுவதன் மூலமாகவும், 1986-ல்நடைபெறவுள்ள ஆசிய படகுப் போட்டி மூலமாகவும், அதனையடுத்து 1987-ல் நடைபெறவுள்ள உலகப் படகுப் போட்டி மூலமாகவும் இந்த முத்துக்காடு காயல் பகுதி சர்வதேச சுற்றுலா இடங்களில் ஒரு தனிச்சிறப்புப் பெறும் என்பதில் ஐயமில்லை.

# முத்துக்காட்டில் படகுப் போட்டி



சென்னை-மாமல்லபுரம் கடற்கரைச் சாலையை அடுத்துள்ள முத்துக்காடு படகுத்துறையில் 2000மீட்டர் அகில உலகப்படகுப் பாதையில், ஒன்பதாவது அனைத்திந்தியப் படகுப் போட்டி 2.7.85 அன்று தொடங்கியது. இப்போட்டியில் தமிழ்நாடு, ஒரிசா, மகாராஷ்டிரா, மத்தியப்பிரதேசம் முதலிய மாநிலங்களைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு அமெச்சூர் படகு சங்கத்தலைவர் திரு ரமேஷ்ராவ் வரவேற்புரையாற்றினார்.

தமிழ்நாடு சுற்றுலாத்துறைச் செயலர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக நிர்வாக இயக்குநர் திரு ஆர்.கிருபாகரன் இ.ஆ.ப. படகுப்போட்டி பற்றிய விளக்க உரையாற்றினார்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் திரு கே. பாலசுப்பிரமணியன் எம்.எல்.ஏ. தேசியக்கொடியை ஏற்றி வைத்து உரையாற்றினார்.

திருப்போரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு மயிலை வே.தமிழ்மணி, முத்துக்காடு பகுதிக்கு அரசு ஆற்றிவரும் சிறப்பான பணிகள் பற்றி எடுத்துரைத்தார்.

முன்னாள் தலைமைச் செயலர் திரு.கு. சொக்கலிங்கம் இ.ஆ.ப. அவர்கள் முத்துக்காடு பெறப் போகும் பெருமை பற்றிப் பேசினார்.

மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம வீரப்பன் அவர்கள் படகுப் போட்டியினைத் தொடங்கி வைத்தும், போட்டி வீரர்கட்குரிய உறுதி மொழியினைச் செய்வித்தும் உரையாற்றுகையில் கூறியதாவது:

"இப்படகுப் போட்டி இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் நடைபெற உள்ளது. தமிழகத்தில் சென்னை அடையாறு ஆற்றில் இரண்டு முறை நடைபெற்றுள்ளது. இன்று தொடங்குவது ஒன்பதாவது போட்டியாகும். இப்போட்டியைத் தொடங்கி வைப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

"கடந்த ஓராண்டாகச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் சுற்றுலாப் பயணிகள் உல்லாசமாக இருக்க படகு விடும் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இந்நிகழ்ச்சி மூலம் ஏறத்தாழ ஒரு இலட்சம் ரூபாய் லாபம் கிடைத்துள்ளது.

"இன்றைய இளைஞர்களின் பார்வை, படகுப் போட்டியின் மீது விழுந்துள்ளது. பிற மாநிலங்களிலிருந்து வந்துள்ள விளையாட்டு வீரர்களைத் தமிழ்மக்கள் சார்பிலும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் சார்பிலும் வரவேற்கிறேன்.

"1987 ஆம் ஆண்டில் இந்தியாவில் நடைபெற உள்ள ஆசிய விளையாட்டுப் போட்டிகளை இங்கு நடத்த அரசு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்யும். அதற்கான அடிப்படை வசதிகளை விளையாட்டுத்துறை, சுற்றுலாத்துறை, பொதுப்பணித்துறை சேர்ந்து செய்யும்.

"இங்கு அமைந்துள்ள எழில்மிகு கால்வாய்ப்பகுதியை ஆழப்படுத்தும் பணியைப் பொதுப் பணித்துறை, படகுச் சங்கம், சுற்றுலாத்துறை ஆகியவை மேற்கொண்டன. கால்வாய் ஓரங்களில் அழகிய பூக்கள் நிறைந்த மரங்கள் நடப்படவேண்டும். இந்தப் பணியினை என்.எஸ்.எஸ். மாணவர்கள் ஆற்றினால் சிறப்பாக இருக்கும்.

"படகுப் போட்டிக்குப் பல்வேறு மாநிலங்களிலிருந்து வந்துள்ள விளையாட்டு வீரர்கட்கு ஒதுக்கியுள்ள தினசரிச் செலவுத் தொகையில் பாதியை 'விருந்தோம்பல்' அடிப்படையில் தமிழகச் சுற்றுலாத்துறை மேற்கொள்ளும்" என்றார்.

விழா இறுதியில் சுற்றுலா வாரியப்பொது நிர்வாகமேலாளர் திரு பி. என். சுப்பராமன் நன்றி கூறினார்.

—அ. மருது





# பயிற்று மொழித் தமிழால் முதன்மை பெற்ற மாணவி

"தமிழ்நாட்டில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் முதலாவதாகத் தேர்ச்சி பெற்றுள்ள மாணவி விஜய சாரதா தமிழ்மொழி வாயிலாகப் பயின்றார்"

1984-85-ல் தமிழ்நாட்டிலேயே எஸ்.எஸ்.எல்.சி. (பத்தாம் வகுப்பு) தேர்வில் முதல் மாணவியாகத் தேர்ச்சி பெற்றுள்ள விஜய சாரதா கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலைச் சார்ந்தவர்.

இவர் எஸ்.எம்.ஆர்.வி. மேல்நிலைப்பள்ளி வடசேரியில் பயின்று முதல் மாணவியாகத் தேர்ச்சி பெற்றுள்ளார். இவருக்கு வயது 15. இவர் முதல் வகுப்பிலிருந்து இதுவரை முதல் மாணவியாகத் தேர்ச்சி பெற்றுப் பல்வேறு பரிசுகளைப் பெற்றுள்ளார். இவர் தனது பள்ளிப்படிப்பினைத் தமிழ்மொழி வாயிலாகப் (Tamil Medium) பயின்று தேர்ச்சி பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் இசைப்போட்டி, பேச்சுப்போட்டி, நடனம் ஆகிய கலைகளில் மிகுந்த ஆர்வம் கொண்டு பரிசுகள் பல பெற்றுள்ளார்.

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் மாநிலத்திலேயே 1984-85-ஆம் ஆண்டில் முதல் மாணவியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தனது பெற்றோரும் ஆசிரியரும் கொடுத்த ஊக்கமே காரணம் என்று கூறுகிறார்.

எம்.பி.பி.எஸ். பயின்று மக்களுக்குச் சிறந்த சேவை செய்வது தனது குறிக்கோள் என்று கூறுகிறார்.

இவரது தந்தை திரு கேசவபெருமாள், எம்.காம்., நாகர்கோவில் பயோனியர் குமாரசாமி கல்லூரியில் வணிகவியல் துறையில் பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார். இவரது தாயார் திருமதி காமாட்சி எம்.எஸ்.சி. நாகர்கோவில் புனித சிலுவைக் கல்லூரியில் இரசாயனத்துறையில் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார்.

மாணவர்கள் ஆங்கில மொழியில் பயில்வது-பேசுவது என்பதில் மோகம் கொண்டுள்ள இந்தச் சூழ்நிலையில் தனது மகள் தமிழ்மொழி வாயிலாகப் பயின்று, முதல் மாணவியாக எஸ்.எஸ்.எல்.சி. யில் தேர்ச்சி பெற்றிருப்பது தமக்கு மிகுந்த மகிழ்ச்சியினைத் தருவதாகப் பெருமிதத்தோடு இவரது தந்தையார் திரு கேசவபெருமாள் கூறுகின்றார்.

இரா. பா. கார்மேகம்,
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

## முத்துக்காடு படகுப் போட்டி — சில தகவல்கள்

ஒருவர் செல்லும் துடுப்புப் படகு, இருவர் செல்லும் துடுப்புப் படகு, நான்கு பேர் செல்லும் துடுப்புப் படகு போன்ற மூன்று விதத்தில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

* மொத்தம் 160 விளையாட்டு வீரர்கள், போட்டியில் கலந்து கொண்டனர்.

* தமிழ் நாடு படகுச் சங்கம், தேசிய புனல் விளையாட்டுக் குழாம் (சென்னை) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஆகியவை இணைந்து படகுப் போட்டியை நடத்தின.

* படகு விளையாட்டுப் போட்டிகளுக்குப் படகுகள் கட்டித்தருவதில் சிக்கல்கள் இருந்தால், படகுச் சங்கம் படகு கட்டும் பணியைத் தொடங்குமானால், அதற்குத் தமிழக அரசு உதவி செய்யும்.

* படகுப் போட்டி (7.7.85) இறுதி நாளன்று, தமிழக வீரர்கள் ஐந்து தங்கப்பதக்கங்களை வென்று முதலிடம் பெற்றனர்.

## வளமான வாழ்வுக்கு மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் அளிக்கும்

# விஜய் உரங்கள்

உங்கள் நிலத்தில் அமோக விளைச்சலைப் பெற, தழை-மணி-சாம்பல் மூன்று சத்துக்களையும் கொண்ட விஜய் உரங்கள் தேவை.
மண் பரிசோதனை செய்து, அதன் சிபாரிசுப்படி விஜய் உரமிட்டு விளைச்சலைப் பெருக்குங்கள்.
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸில் உள்ள நவீன மண் பரிசோதனை நிலையம் இலவசமாக அளிக்கும் 'துரித மண் பரிசோதனை' சேவையைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். இல்லையென்றால், கீழ்க்கண்ட பொது சிபாரிசுப்படி உரமிடுங்கள்.





நெல் — ஏக்கருக்கு/கிலோ

| ரகங்கள் | அடியுரம் | மேலுரம் | அடியுரம் | | | மேலுரம் |
|---|---|---|---|---|---|---|
| | விஜய் 17-17-17 | விஜய் யூரியா | விஜய் 14-28-14 | விஜய் யூரியா | பொட்டாஷ் | விஜய் யூரியா |
| உயர்விளைச்சல் ரகங்கள் | | | | | | |
| - குறுகிய கால ரகம் | 90 | 35 | 55 | 15 | 10 | 30 |
| - நடுத்தர/நீண்ட கால ரகம் | 120 | 45 | 70 | 20 | 15 | 40 |
| சாதாரண ரகங்கள் | 80 | 15 | 50 | — | — | 15 |

வாழை — ஏக்கருக்கு/கிலோ

| காலம் | விஜய் 17-17-17 | விஜய் யூரியா | பொட்டாஷ் | விஜய் 14-28-14 | விஜய் யூரியா | பொட்டாஷ் |
|---|---|---|---|---|---|---|
| நட்ட 90-வது நாள் | 200 | 45 | 220 | 125 | 80 | 250 |
| நட்ட 150-வது நாள் | — | 120 | 275 | — | 120 | 275 |

மேலும் விவரங்களுக்கு :
வட்டார அலுவலகம்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
10 வில்லியம்ஸ் ரோடு
திருச்சி 620 001




சமச்சீர் உரமிட
விஜய்



VIJAY
MADRAS FERTILIZERS
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
மணலி
சென்னை 600 068

MFL-1672




# நியாயம் வழங்கும் நீதி மன்றங்கள்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள கோட்பாடுகளுக்கிணங்க, அனைத்துக் குடிமக்களுக்கும் நீதி வழங்குவது தமிழக அரசின் கொள்கையாகும். நீதியை நிருவகிப்பது நீதிமன்றங்களின் பொறுப்பாகும்.

உரிமை வழக்குகளில் அசல் தரப்பு வழக்குகளையும் 'ரிட்' வழக்குகளையும் உயர்நீதிமன்றம் விசாரணை செய்யும் அதிகாரம் பெற்றதாகும். உரிமை வழக்குகளிலும், குற்றவியல் வழக்குகளிலும் மேல் முறையீடுகளை விசாரிக்கும் அதிகாரம் இதற்கு உண்டு. சென்னை மாநகருக்குள் சொத்தின் மதிப்பு ரூ.1,00,000க்கு மேற்பட்டுள்ள அசல் தரப்பு வழக்குகளைச் சென்னை உயர் நீதிமன்றம் விசாரணை செய்கிறது.

சென்னை மாநகரில் பெருநகர் தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றப் பெருநகர் தலைமைக் கூடுதல் மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் உட்பட, 25 பெருநகர் மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இரு மாநகர மாஜிஸ்டிரேட்டுகள் இரண்டு நடமாடும் நீதிமன்றங்களின் மாஜிஸ்டிரேட்டுகளாகப் பணியாற்றுகின்றனர்.

தமிழகத்தில் மொத்தம் 17 மாவட்ட நீதிமன்றங்கள் உள்ளன. கோயம்புத்தூர், தென்ஆர்க்காடு, இராமநாதபுரம், வடஆர்க்காடு, மதுரை(தெற்கு), பெரியார், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் கூடுதல் மாவட்ட செசன்ஸ் நீதிமன்றங்கள் அமைந்துள்ளன. சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் கூடுதல் மாவட்ட நீதிபதி நீதிமன்றங்கள் இரண்டு உள்ளன. அந்தந்தக் கோட்டங்களைச் சேர்ந்த மாவட்ட நீதிபதிகளே செசன்ஸ் நீதிபதிகளாகச் செயல்படுகின்றனர்.

தமிழகத்தில் 65 சார்நிலை நீதிமன்றங்கள் (Sub-Court) உள்ளன. இவற்றில் கோயம்புத்தூர், மதுரை ஆகிய இரு இடங்களிலுள்ள விற்பனைவரி மேல் முறையீட்டு நடுவர் மன்றக் கூடுதல் ஆயங்களைச் சேர்ந்த நீதிபதி பதவிகள் இரண்டும் அடங்கும்.

இம்மாநிலத்தில் மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள் 132 உள்ளன. அத்துடன், மாவட்ட முன்சீப் மற்றும் உட்கோட்ட நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் 6ம், மாவட்ட முன்சீப் மற்றும் நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் 2ம் உள்ளன.

சென்னையில் நான்கு தொழிலாளர் நல நீதிமன்றங்களும், மதுரையில் இரண்டும், கோயம்புத்தூரில் ஒன்றும் உள்ளன. மாநிலம் முழுவதிலும் அதிகார வரம்பைச் செலுத்தும் தொழிற்சாலைகள் நடுவர் மன்றம் ஒன்றும் சென்னையில் உள்ளது.

தொழிலாளர் நல நீதிமன்றங்கள், தொழில் நடுவர் மன்றம் ஆகியவற்றின் நீதிபதிகள் அனைவரும், முகாம் நீதிமன்றங்களை அமைத்து, அவரவரது அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகளில் எழும் தொழிலாளர் தகராறுகளையும், கோரிக்கை மனுக்களையும் தீர்த்துவைக்கின்றனர்.

தமிழகத்தில் நீதித் துறை தலைமை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் 14 உள்ளன. இவற்றுடன் பொருளாதாரக் குற்றங்களை விசாரணை செய்ய கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒன்றும், திருநெல்வேலி மாவட்டத்தில் ஒன்றும், கும்பகோணத்தில் ஒன்றும், மதுரையில் ஒன்றுமாக நீதித்துறை கூடுதல் தலைமை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்களும், வனம் தொடர்பான குற்றங்களை விசாரணை செய்ய சார்நிலை நீதிபதி பதவித் தரத்தில் தருமபுரி மாவட்டத்தில் கூடுதல் தனி நீதிபதி நீதிமன்றம் ஒன்றும் செயல்பட்டு வருகின்றன.

நீதித்துறை உட்கோட்ட மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் 20 உள்ளன.

மதுவிலக்கு வழக்குகளை விசாரணை செய்வதற்காகக் கூடுதல் நீதிமன்றங்கள் 21, குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்காகக் கூடுதல் நீதிமன்றங்கள் 4, வணிகக் குற்றங்களை விசாரணை செய்வதற்காகக் கூடுதல் நீதிமன்றங்கள் 3 ஆகியவை உட்பட மொத்தம் 57 நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் உள்ளன,

நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் 145 உள்ளன.

இவை தவிர, பயணச் சீட்டு இன்றிப் பயணம் செய்வது போன்ற குற்றங்களை இந்திய

இரயில்வே சட்டத்தின்கீழ் விசாரணை செய்ய, வட ஆர்க்காடு, தென்ஆர்க்காடு, கோயம்புத்தூர், மதுரை, சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, ஆகிய மாவட்டங்களில் இரயில்வே மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் உள்ளன.

''தீர்ப்புத் திரட்டு'' என்னும் தமிழ்ச் சட்டத் திங்கள் இதழ் ஒன்றை உயர்நீதிமன்றம் வெளியிட்டு வருகிறது.

ஏழை எளியவர்களுக்குச் சட்ட ஆலோசனை அளிக்க வேண்டியது சட்டப்படி அரசின் கடமையாகும். ஏழை எளியவர்களுக்குச் சட்ட ஆலோசனை நல்கும் பொருட்டு1977ஆம் ஆண்டில் அரசு அமைத்த தமிழ்நாடு மாநில சட்ட உதவி ஆலோசனைக்குழு, உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதிகளின்கீழ் செயல்பட்டு வருகிறது. மாவட்டங்களிலும் வட்டங்களிலும், சட்ட உதவிக்குழுக்கள் இருப்பதுடன், மாநகரிலும், மாவட்டங்களிலும் சட்ட ஆலோசனைப் பிரிவுகளும் அமைக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் 18 மாவட்டக் குழுக்களும், 84 சட்டக் குழுக்களும், 314 சட்ட ஆலோசனை நிலையங்களும் உள்ளன. இக்குழுவின் செலவிற்கு அரசு மானியம் அளிக்கிறது.

இக்குழு, ஏழை எளியவர்களுக்கும், சட்ட ஆலோசனை பெறத் தகுதியுடையோருக்கும், சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கும் சட்ட ஆலோசனை வழங்கி வருகிறது. மோட்டார் விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வாங்கித்தர இக்குழு சட்ட உதவி செய்கிறது. மாவட்ட நீதி மன்றங்கள்,நடுவர் மன்றங்கள் ஆகியவற்றிலுள்ள அதிகாரிகள் மூலமாக நிவாரணம் வாங்கித்தர உதவி செய்வதும், மகளிருக்கும் குழந்தைகளுக்கும் வாழ்க்கைச் செலவுப் படியைப் பெற்றுத்தர உதவி செய்வதும் இக்குழுவின் பணித் திட்டங்களில் அடங்கும்.

# சிறைகளில் சீர்திருத்தங்கள்

தமிழ்நாட்டில் உள்ள எட்டு மத்திய சிறைகள், புதுக்கோட்டையில் உள்ள சிறுவர் சீர்திருத்தப்பள்ளி, சென்னை அருகிலுள்ள புழலில் உள்ள ஆடவர் பிற்காப்பு இல்லம், வேலூரிலுள்ள மகளிர் சிறை, சேலம் (ஆடவர்), திருச்சிராப்பள்ளி, கொக்கிரகுளம்ஆகிய மூன்று இடங்களில் உள்ள தனிக் கிளைச் சிறைகள், சிங்காநல்லூரில் உள்ள திறந்த வெளிச்சிறை, சேலம் மத்திய சிறையோடு இணைக்கப்பட்டுள்ள பண்ணைச் சிறை, தமிழகத்திலுள்ள 119 கிளைச் சிறைகள் ஆகியவற்றின் அமைப்பு, கட்டுப்பாடு, நிருவாகம் முதலியவற்றைச் சிறைத் துறை கவனிக்கிறது.

குற்றவாளிகள் நன்னடத்தைக் கண்காணிப்புப் பிரிவும் இத்துறையின் பொறுப்பில் இயங்குகிறது. குற்றவாளிகள் மீண்டும் குற்றம் செய்யும் நிலைக்குத் திரும்புவதைத் தடுத்து நிறுத்தவும், அவர்கள் விடுதலையான பின்னர் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நன் மக்களாக வாழவும், மீண்டும் சமூகத்துடன் இணைந்து நன்கு செயற்படவும் உரிய பயிற்சிகளை நல்கி சீர்திருத்தி அவர்களுக்குப் புது வாழ்வு அளிப்பதே இத்துறையின் முக்கிய நோக்கமாகும்.

கிளைச் சிறைகள் மற்றும் மத்தியச் சிறைகளில் மொத்தம் 15,741 பேருக்கு இடவசதியளிக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அரசு மறுவாழ்வு இல்லங்களில் 4,250 பேருக்கு (4,000 பெரியவர்கள்: 250 சிறுவர்கள் ஆகும்) இட வசதியளிக்க அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது. மேல்பாக்கத்திலுள்ள அரசு காப்பு முகாமில் 950 பேருக்கு (ஆண்கள் 770: பெண்கள் 180) இடவசதியளிக்க அனுமதி வழங்கப்பட்டது.

சிறைக் காவலர்கள் பயிற்சிப் பள்ளி ஒன்று வேலூரில் உள்ளது. இதில் பல்வேறு சிறைகளிலுள்ள 48 இரண்டாம் நிலைச் சிறைக் காவலர்களுக்குச் சீர்திருத்த முறைகள், சிறை நிருவாகம், உடற் பயிற்சி, ஒழுங்கு போன்ற பல்வேறு துறைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக்கால அளவு 6 திங்களாகும். மேலும், 6 முதல் நிலை சிறைக் காவலர்களுக்கும், 6 முதன்மைத் தலைமைக் காவலர்களுக்கும் முறையே 30, 15 நாட்களுக்கு நினைவூட்டுப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

தென் மாநிலங்களைச் சேர்ந்த (ஆந்திரப் பிரதேசம்,கர்நாடகம், கேரளம், தமிழ்நாடு,) குற்றவாளிகள் சீர்திருத்த அலுவலர்களுக்கான வட்டாரப் பயிற்சிப்பள்ளி, வேலூரில் 1-10-1979 முதல் செயல்பட்டு வருகிறது. சிறைகள் நன்னடத்தைக் கண்காணிப்புப் பிரிவு, சான்றளிக்கப்பட்ட பள்ளிகள், சீர்திருத்தப்பள்ளிகள், இத்துடன் இணைந்த மற்ற சீர்திருத்தப் பள்ளிகளிலுள்ள அலுவலர்களுக்குக் குற்றங்களைத் தடுக்கவும், குற்றவாளிகளைச் சீர்திருத்தவும், குற்றவாளிகளை சிறந்த முறையில் நடத்தி, காலத்திற்கேற்ற மறுவாழ்வு அளிக்கவும், தக்க நடைமுறை நுணுக்கங்கள், வழி முறைகள் ஆகியவற்றில்பயிற்சிஅளிப்பதே இப்பயிற்சிப் பள்ளியின் நோக்கமாகும்.

## புற்றுநோய்ச் சிகிச்சைக்குப் புதிய பிரிவு

சென்னை இராயப்பேட்டை அரசினர் பொது மருத்துவமனையில் பன்னிரண்டு இலட்ச ரூபாய் செலவில் புற்றுநோய்ச் சிகிச்சைப் பிரிவு கட்டப்பட்டுள்ளது.

இந்தப் பிரிவு புற்றுநோய்ச் சிகிச்சைக்கான எல்லா வசதிகளும் கொண்டதாக அமைந்துள்ளது.

ரேடியம், அறுவைச் சிகிச்சை உள்பட, புற்றுநோய்ச் சிகிச்சைக்கான அனைத்து வசதிகளும் கொண்டது இந்தப் பிரிவு. மத்திய அரசு 8 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கருவிகளைத் தந்துள்ளது.



மாநிலங்களைச் சேர்ந்த தமிழகத்திலுள்ள ஒரே ஒரு திறந்த வெளிச்சிறை, தற்போது கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள சிங்காநல்லூரில் உள்ளது. இதில் 100 கைதிகள் தங்குவதற்கான இட வசதி உள்ளது. இதைத் தவிர, சேலம் மத்திய சிறையுடன் பண்ணைச் சிறை ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது.

அனைத்து மத்தியச் சிறைகள், வேலூரிலுள்ள மகளிருக்கான மாநிலச் சிறை, தனிக் கிளைச் சிறைகள், சிங்காநல்லூரிலுள்ள திறந்த வெளிச்சிறை ஆகியவற்றில் வைக்கப்பட்டுள்ள 'பி' வகுப்புக் கைதிகளுக்கும், புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப் பள்ளியில் உள்ளவர்களுக்கும், உறையுடன் கூடிய ஒரு தலையணை வழங்க 1980ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் அரசு அனுமதித்துள்ளது.

எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்காக ஒவ்வொரு கைதிக்கும் திங்களுக்கொருமுறை 30 கிராம் எண்ணெய் வழங்கப்படுகிறது. மேலும், அவர்களுக்குச் சிகைக்காய்த்தூளும் சலவைச் சோப்பும் வழங்கப்படுகிறது. கோயம்புத்தூர் மத்தியச் சிறையிலுள்ள நூற்பாலையில் வேலை செய்யும் கைதிகளுக்குக் கூடுதல் எண்ணெய் வழங்கப்படுகிறது.

ஞாயிற்றுக்கிழமைகள், சிறை விடுமுறை நாட்களில் மத்தியச் சிறைகளிலுள்ள எல்லாக் கைதிகளும், கைப்பந்து, கபடி, பூப்பந்து ஆகிய விளையாட்டுகளை விளையாடவும், வேலூரிலுள்ள மாநில மகளிர் சிறையின் பெண் சிறைவாசிகள் வளைபந்து விளையாடவும், அனுமதிக்கப்படுகின்றனர். ஆழ்நிலை தியான முறை, அனைத்து மத்திய சிறைச்சாலைகளிலும், வேலூர் மாநில மகளிர் சிறையிலும்,புதுக்கோட்டை சீர்திருத்தப்பள்ளியிலும், மகரிஷி நிறுவனம் மூலம் விரும்பும் கைதிகளுக்குக்கற்பிக்கப்படுகிறது. சென்னையிலுள்ள மத்திய சிறைக் கைதிகளுக்குச் சென்னை யோகாசன ஆலயம் மூலம் யோகாசன வகுப்புகள் நடத்தவும், அரசு ஆணை பிறப்பித்துள்ளது.



சிறைகளில் போதுமான மருத்துவ, துப்புரவு வசதிகள் உள்ளன. ஒவ்வொரு மத்திய சிறையிலும், வேலூர் மாநில மகளிர் சிறையிலும்,புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும் மருத்துவமனை உள்ளது. அதில் பகுதி நேர மருத்துவ அலுவலர் ஒருவரும் (அம்மாவட்டத்தின் மாவட்ட மருத்துவ அதிகாரி அல்லது மாவட்ட மருத்துவ அலுவலர் வேறு ஊரில் இருந்தால் உள்ளூரிலுள்ள அரசு மருத்துவமனை அல்லது மருத்துவக் கல்லூரியிலுள்ள சிவில் மருத்துவரின் பதவி நிலையிலுள்ள மருத்துவ அலுவலர்) ஒரு செவிலியரும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உதவிமருத்துவரும், ஒன்று அல்லது இரண்டு மருந்தாக்குநரும், 2 அல்லது 3 செவிலியர் உதவியாளர்களும் உள்ளனர்.

கல்வியின் மூலம் பயனடையக் கூடிய, தகுதியுள்ள கைதிகளுக்குச் சிறையில் கல்வி [illegible]தி அளிக்கப்படுகிறது. ஒவ[illegible]ரு மத்திய சிறையிலும் தகுதி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டே தொடக்கப்பள்ளி உள்ளது. முதியோர் கல்வி கற்பிக்க சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு சிறைகளில் புதிய முறையில் முதியோருக்குக் கல்வி புகட்டப்படுகின்றது. சிறைக் கல்வியின் தரத்தைமேம்படுத்தும்பொருட்டு சிறைக் கண்காணிப்பாளர்கள், சிறந்த கல்வி நிறுவனங்களிலிருந்து ஆசிரியர்களையும், விரிவுரையாளர்களையும்,வரவழைத்துச் சிறைவிடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் விரிவுரையாற்ற ஏற்பாடு செய்கிறார்கள்.

கைதிகள் அஞ்சல் வழிக் கல்வி மூலம் முதுகலைப் பட்டப் படிப்புத் தேர்வும், பி.ஜி.எல்., பி.எல்., பி.எட்.,எம்.எட்., முதலிய தொழிற்கல்வித் தேர்வுகளையும் எழுத அனுமதிக்கப்படுகிறார்கள். இது தொடர்பாக புத்தகங்களை வாங்கும் செலவு, தேர்வுக் கட்டணம் குறித்த செலவு, இதர செலவு ஆகிய செலவுகளை அரசு ஏற்றுக்கொள்கிறது. கைதிகள் தேர்வில் தேர்ச்சி பெறாவிட்டால், மறுமுறையும் அரசுச் செலவில் தேர்வு எழுதலாம். இதுபோல், மொத்தம் மூன்று தடவைதேர்வுக்குச்செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள்.

கைதிகள் தேர்வு எழுதச் செல்லும்போது, அவர்களது சொந்த உடையிலேயே தேர்வு எழுத அனுமதிக்கப்படுகிறார்கள். அதேபோல் அவர்களைக் காவல்காத்து அழைத்துச் செல்லும் காவலர்களும், சாதாரண உடையணிந்து செல்கின்றனர். நீதி அல்லது சமயம் சம்பந்தமான உரைகள் என்ற பெயரால் மதமாற்றம் செய்தல் கூடாது என்பதோடு, விரிவுரையாற்றுவோர் எம்மதத்தைச் சார்ந்தவராக உள்ளாரோ, அம்மதத்தைச் சார்ந்தசிறைவாசிகளிடம் மட்டுமே உரையாற்ற வேண்டுமென்ற நிபந்தனையுடன் சிறையில், சமயம்,நீதி நெறிவகையான விரிவுரைகளும், போதனைகளும் அனுமதிக்கப்படுகின்றன.

சிறைவாசிகளின் நன்னடத்தை, வேலை செய்யும் ஆர்வம் ஆகியவற்றை வளர்க்கவும், ஊக்கமளிக்கவும் பலவிதமான தண்டனைக் குறைப்புகள் சிறைவாசிகளுக்கு அனுமதிக்கப்படுகின்றன. சிறைவாசிகளின் நன்னடத்தைக்காக, ஒரு மாதத்திற்கு இரண்டுநாட்கள் தண்டனைக் குறைப்பும், அவர்கள் செய்யும் சிறந்த பணிக்காக ஒரு மாதத்திற்கு இரண்டு நாட்கள் தண்டனைக் குறைப்பும் சாதாரண வகைத் தண்டனைக் குறைப்புகளாக அளிக்கப்படுகின்றன.

பெண் சிறைக் கைதிகளின் குழந்தைகள் 6 வயதுக்குள் இருந்தால், அக்குழந்தைகள் தாயோடு சிறையில் வைக்கப்படுகின்றனர். அக் குழந்தைகளுக்காக ஒரு குழந்தைக்காப்பிடமும், வேலூர் மாநில மகளிர் சிறையில் அமைக்கப்பட்டுள்ளது. அவர்களைச் சரியான முறையில் வைத்துப் பராமரிக்க ஒருவரும் முன்வராவிட்டால், அக்குழந்தைகள் 6 வயது அடைந்தவுடன், சென்னை மாநகரைச் சேர்ந்தவர்களாயிருந்தால் சென்னையிலுள்ள பாலமந்திர் மருத்துவமனைக்கும், மாநிலத்திலுள்ள இதர இடங்களைச் சேர்ந்தவர்களாயிருந்தால், மதுரை காந்தி கிராமத்திலுள்ள குழந்தைகள் இல்லத்திற்கும் அனுப்பப்படுகின்றனர்.

சிறைக் கைதிகளின் பயனுக்காக ஒவ்வொரு மத்தியச் சிறையிலும் கலாச்சாரக்குழுஅமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கலாச்சாரக் குழு, சிறைக் கைதிகளின் நன்மைக்காகக் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை திரைப்படம் காட்டுதல் போன்ற பல கலை நிகழ்ச்சிகளை வெளியில் உள்ளவர்களைக் கொண்டு சிறைக்குள் நடத்துகிறது.

*With best compliments from:*

Grams: REXOOL

Phone: 2064

**REX HIGHER SECONDARY SCHOOL**

POST BOX NO. 45

**OOTACAMUND - 643 001**

**A Residential School under the Management of the Bishop of Ootacamund.**

**Affiliated to the Central Board of Secondary Education, New Delhi, with Medium of Instruction in English.**

**Tamil, Hindi, Kannada, Telugu, French, Sanskrit and Persian as the Second and Third Languages.**

**Always secures cent percent Results in the All India Secondary School Examinations conducted by the Central Board of Secondary Education, New Delhi.**

**OOTACAMUND.**

**FR. ABRAHAM JOSEPH**
Principal



# பிணி தீர்க்கும் பணி

குடும்பநலத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு எப்போதும் முன்னணியில் இருந்து வருகிறது. இத்திட்டம் மக்களைக் கட்டாயப்படுத்தாமல் அவர்களாகவே முன் வந்து அறுவைச்சிகிச்சை செய்துகொள்ளும் வகையில், தொண்டு நிறுவனங்களின் துணையுடன் ஒரு மக்கள் இயக்கமாகச் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

கிராம மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில், கல்வி, நாடகம், பொதுத் தகவலறிவிப்புச் சாதனங்கள் ஆகியவற்றின் மூலமாகக் குடும்பநல-தாய்-சேய்-நலத் திட்டங்களைச் செயல்படுத்தி இயன்ற அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மருத்துவக் கல்வி மேம்பாட்டில் தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்றும் இம்மாநிலத்தில் உள்ள மருத்துவக் கல்வி நிலையங்களை நன்கு மேற்பார்வையிட வேண்டுமென்றும் தான் மருத்துவக் கல்வி இயக்ககம் அமைக்கப்பட்டது. சென்னை மருத்துவப்பள்ளி 1834ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதைத் தொடர்ந்து மருத்துவக் கல்வி 150 ஆண்டுகள் பூர்த்தி அடைந்துள்ளது. 1985 பிப்ரவரியில் சென்னை மருத்துவக் கல்லூரியின் நூற்றாண்டு தங்க விழா கொண்டாடப்பட்டது. தற்போது இம் மாநிலத்தில் 8 மருத்துவக் கல்லூரிகளும், பல் மருத்துவக் கல்லூரி ஒன்றும் 22போதனை மருத்துவமனைகளும் உள்ளன. இவற்றுள் மூன்று மருத்துவக் கல்லூரிகளும் ஒரு பல் மருத்துவக் கல்லூரியும் சென்னை மாநகரில் உள்ளன. எஞ்சியுள்ள ஐந்து கல்லூரிகள் மாவட்டங்களில் உள்ளன. இக்கல்லூரிகள் ஆண்டுதோறும் ஆயிரத்திற்கு மேற்பட்ட மருத்துவப் பட்டதாரிகளையும், 900க்கும் மேற்பட்ட மருத்துவ முதுநிலைப் பட்டதாரிகளையும், மருத்துவ பட்ட மேற்படிப்பு, மருத்துவ பட்டய மேற்படிப்பு, உயர் சிறப்புப் படிப்புகளையும் உருவாக்குகின்றன. இத்துடன் துணை மருத்துவப் பணியாளர்களுக்கான பயிற்சியும் அளித்து வருகின்றன.

**ஏனைய பயிற்சிப் படிப்புகள்:**

*செவிலியர் பயிற்சி:*

செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் மொத்தம் எட்டு உள்ளன. இவற்றில் ஆண்டுதோறும் மொத்தம் 740 பேர் (690 பயிற்சி உதவித் தொகை பெறுபவர்கள், 50 பயிற்சி உதவித் தொகை பெறாதவர்கள்) சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். இப்படிப்பு ஓராண்டில் இரண்டு பருவங்களில் நடத்தப்படுகிறது. இதில் பயிற்சி உதவித்தொகை பெறுவோர் 345 பேரும், பயிற்சி உதவித்தொகை பெறாதவர்கள் 25பேரும் உள்ளனர். செவிலியர் பயிற்சிப் படிப்பின் கால அளவு 3½ஆண்டுகள் ஆகும். இதில் பொதுச் செவிலியர் பயிற்சி மூன்றாண்டுகளும், மருத்துவப்பேறு பயிற்சி ஆறுமாதமும் அடங்கும். இதில் பயிற்சி பெற்றவர்களுக்குச் செவிலியர் பயிற்சியியல் பட்டயமும் மருத்துவப்பேறு பயிற்சியில் நற்சான்றிதழும் வழங்கப்படுகிறது.

குழந்தைகளுக்கான முதலமைச்சர் சத்துணவுத்திட்டத்தின் கீழ் சத்துணவு வழங்கும் பல்வேறு மையங்கள் மூலம் கிராமப் பகுதியில் உள்ள குழந்தைகளுக்கு இலவசமாகப் பற்பொடி வழங்கும் திட்டத்திற்கு அரசு 1982 ஆகஸ்ட்டில் அனுமதி அளித்தது. குழந்தைகளுக்கான முதலமைச்சரின் சத்துணவுத்திட்டத்தின் கீழ் உணவு பெறும் சுமார் 60 இலட்சம் குழந்தைகளுக்கு மாதந்தோறும் இலவசமாக 30 கிராம் பற்பொடி வழங்கப்படுகிறது. 1985-86ம் ஆண்டில் இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த ரூ.2,42,52,000 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பார்வையற்ற மக்களுக்கு மருத்துவ உதவியும், பார்வை இழப்பை அகற்றவும் இலவசக் கண் சிகிச்சை முகாம் 1972ஆம் ஆண்டு ஜூலை மாதம் தொடங்கப்பட்டது. இத்திட்டம் 1984 - 85ஆம் ஆண்டிலும் தொடர்ந்து அமல் செய்யப்பட்டது.

1. கண் சிகிச்சை ஊர்தி முகாம் 7 அல்லது 10 நாட்கள் நடத்தப்படுகிறது. இதில் பயன்பெறும் நோயாளிகளைப் பொறுத்து இம்மாநிலம் முழுவதும் நடத்தப்படுகிறது.

2. ஒவ்வொரு முகாமிலும் 400 கண் சிகிச்சை அறுவைகள் நடைபெறுகின்றன.

எல்லா கண் அறுவைச் சிகிச்சை பெற்ற நோயாளிகளுக்கும் ஒரு ரூபாய்செலவில் ஆண்டிபயோடிக் ஆயின்மெண்ட் வழங்கப்படுகிறது.

4. நோயாளிகள் கண் சிகிச்சை முகாமிலிருந்து செல்லும்போது தற்காலிகமான மூக்குக் கண்ணாடி வழங்கப்படுகிறது. பிறகு ஆறு வாரங்கள் கழித்து அவர்கள் பார்வையினை சோதனை செய்த பிறகு நிரந்தரமான மூக்குக் கண்ணாடி கொடுக்கப்படுகிறது.

கிண்டி கிங் நிறுவனம் நோய்த் தடுப்பு மருந்துகள் நிணநீர் போன்றவற்றைத் தயாரிக்கும் ஒரு பெரிய பொதுச் சுகாதார ஆய்வுக் கூடமாக மட்டுமின்றி கல்வி ஆராய்ச்சி நிலையமாக வும் திகழ்கிறது. இந்நிறுவனம் இம் மாநிலத்தின் தேவைகளை நிறைவு செய்ய

துடன் பல்வேறு மாநிலங்களுக்கும் காலரா நோய்த்தடுப்புஏனைய நோய்த்தடுப்புமருந்துப் பொருட்களை வழங்கி வருகிறது.

இம்மாநிலத்தில் 1983-84 வரை 15 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் செயல்பட்டன. தற்போது புதியதாக மாவட்டங்கள் பிரிக்கப்பட்டதன் விளைவாக காமராசர் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டங்களில் 2 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

1984-85ல் மாவட்ட மருத்துவ மனைகளில் கீழ்க்கண்ட மேம்பாட்டுப் பணிகள் செய்யப்பட்டுள்ளன.

1. கடலூர் அரசினர் மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் உள்ள அறுவைச் சிகிச்சைக் கூடத்திற்கு ரூ.600 இலட்சம் செலவில் குளுமை வசதி,

2. தூத்துக்குடி, நாகர்கோவில், திருப்பூர், காஞ்சிபுரம் ஆகிய இடங்களிலுள்ள அரசினர் மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளின் தீவிர மருத்துவக் கவனிப்புப் பிரிவுகளுக்கு ரூ 4.80 லட்சத்தில் குளுமை வசதிகள்.

3. உதகமண்டலம் சேட் மருத்துவ மனைக்கும், புதுக்கோட்டை மாவட்டம் ராணிஸ் மருத்துவமனைக்கும் மின் உற்பத்தி இயந்திரங்களும் ரூ. 8.58 லட்சம் செலவில் வழங்குதல்.

மேலும் தர்மபுரியிலுள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் புதியதாக 6 படுக்கைவசதிகள் அதிகரிக்கப்பட்டது.

விபத்து அவசர காலச் சிகிச்சை.—தற்பொழுது சாலை விபத்துகள் அதிக எண்ணிக்கையில் ஏற்பட்டு வருகின்றன. விபத்துக்குள்ளானவர்களுக்குப் போக்குவரத்து வசதி அவசர மருத்துவ வசதிகள் கிடைக்கச் செய்வதற்கு 1979ஆம் ஆண்டில் அரசு விபத்து மற்றும் அவசர காலச்சிகிச்சைத் திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளது. இத்திட்டம் 1983-84ஆம் ஆண்டு வரை 12 மாவட்டங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

1984—85ஆம் ஆண்டில் வட ஆர்க்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலை மருத்துவ மனையில் இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது.

மத்திய அரசின் தேசிய தொழுநோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் தமிழ்நாட்டில் தொழுநோய் தடுப்புத்திட்டம் அதாவது தொழுநோயாளிகளைக் கண்டுபிடித்தல், சிகிச்சை அளித்தல், மற்றும் இதனால் ஏற்படும் விளைவுகளைப் பற்றிச் சுகாதாரக் கல்வி மூலம் விளக்குதல் ஆகிய வகைகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொழுநோயாளிகளில் விடுவிக்கப்படும் நிலையில் உள்ள தொழுநோயாளிகளை முதலில் கண்டுபிடித்து அவர்களை விடுவிக்கத் தீவிர நடவடிக்கள் எடுக்கப்பட்டுள்ளன.

ஆண்டுதோறும் 100 இலட்சத்திற்கும் மேலான மக்கள், தொழுநோய் உள்ளதா என அறியும் பொருட்டு, பரிசீலிக்கப்படுகிறார்கள்.

தொழுநோய் கண்ட நோயாளிகளை அந்த நோய் பரவுவதற்கு முன்பேமேற்கண்ட பரிசோதனையினால் கண்டுபிடிக்க முடிகிறது.

தடுப்புத் தன்மை குறைவாக நலிவடைந்த சமுதாயத்தில் உள்ள பள்ளிச் சிறுவர்களிடையே தங்களுடைய வளர்ச்சி காரணமாகத் தொழுநோய் அறிகுறிகள் காணப்படுகின்றன. எனவே ஒவ்வொரு ஆண்டும் நகர மற்றும் கிராமப்புறப் பள்ளிச் சிறுவர்கள் பரிசோதனை செய்யப்படுகின்றனர்.

1980 முதல் 5 ஆண்டுகளாக இப்பரிசோதனை மிகப் பெருமளவில் செய்யப்பட்டன.



ஒவ்வொரு மாதமும் ஒரு மருத்துவ அலுவலரின் தலைமையில் இயங்கும் நடமாடும் மருத்துவக் குழு கிராமப்புற மக்களுக்கு ஏறக்குறைய அவர்களின் இல்லங்களுக்கு அருகிலேயே சென்று சிகிச்சை அளித்து வருகிறது. இதனால் எந்த ஒரு நேயாளியும் அதிக தூரம் நடந்து சென்று சிகிச்சை பெறுவது தடுக்கப்படுகிறது. சிகிச்சை தினத்திற்கு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்னதாகவே சென்று நோயாளிகளை நினைவூட்டும் நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பிட்ட சிகிச்சை தினத்தன்று வராத நோயாளியை அவர் வரமுடியாத காரணத்தை நேரில் சென்று அறிந்து அவர் வீட்டிலேயே சிகிச்சையும் அளிக்கப்படுகிறது. இதனால் அவர் பெறும் சிகிச்சையின் தொடர்பு விட்டுப் போகாமல் இருக்கும்படி செய்யமுடிகிறது. மேலும் நோயாளிகளின் வசதிகளைப் பொறுத்து சாலை ஓர சிகிச்சை நிலையங்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் உள்ள எல்லா மருத்துவ மனைகள், மருந்தகங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலமாகக் காசநோயாளிகளைக் கண்டு பிடித்துச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் இத்திட்டத்தினால் 1963 முதல் 1984 இறுதி வரை 13 இலட்சம் நோயாளிகள் காசநோய் உள்ளவர்களாகக் கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர். 1984ஆம் ஆண்டில் மட்டும் இம்மாநிலத்தில் 90,000 காசநோய் நோயாளிகள் உள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. காசநோயால் தீவிரமாகப் பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமே உள்நோயாளிகளாகச் சிகிச்சை அளிக்கப்படுகின்றனர். தமிழ்நாட்டில் மொத்தம் எட்டு அரசு காசநோய் மருத்துவமனைகளும் இரண்டு தனியார் நிறுவனங்களும் உள்ளன. மொத்தத்தில் 3,559 படுக்கைகள் காசநோயாளிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

பி.சி.ஜி. ஊசிபோடும் திட்டம் காசநோய்த் தடுப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாகும். தமிழ்நாட்டில் 23 பி.சி.ஜி. குழுக்கள் உள்ளன. இக்குழுக்கள் வீடு வீடாகச் சென்று குழந்தைகளுக்கு ஊசி போடுகின்றனர். புதிதாகப்பிறக்கின்ற குழந்தைகளுக்குத் தாய்சேய் நல விடுதிகளிலும், மருத்துவமனை மகப்பேறு பகுதிகளிலும் பி.சி.ஜி. ஊசி போடப்படுகிறது. தமிழ்நாட்டில் இத்திட்டத்தினால் 1963.ஆம்ஆண்டுமுதல்1984 வரை சுமார் 217 இலட்சம் பேர்களுக்கு பி.சி.ஜி. ஊசி போடப்பட்டுள்ளது. 1984 ஆம் ஆண்டு மட்டும் 11.5 இலட்சம் பேர்களுக்கு மேல் பி.சி.ஜி. ஊசி போடப்பட்டுள்ளது.

கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள், பீடித் தொழிலாளர் ஆகியோரின் பயனுக்கென்று சுகாதார அடங்கல் திட்டத்தைச் செயலாக்க தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சிறிய சதிரியக்கியியல் பிரிவின் உதவியுடன் இயலூர்தி சேலம், ஈரோடு ,திண்டுக்கல், தூத்துக்குடி, வேலூர் ஆகிய இடங்களில் தொடங்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் 166ம், தென்னார்க்காடு மாவட்டத்தில் 514ம் ஆக அனுமதியளிக்கப்பட்ட 680 சுகாதாரத் துணை நிலையங்களும் நிறுவப்பட்டுள்ளன. கூடுதலாக 587 பலநோக்குச் சுகாதாரப் பெண் பணியாளர்களும், 147 சுகாதாரப் பெண் மேற்பார்வையாளர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேற்கண்ட சுகாதாரத் துணை நிலையங்களுக்கும் தேவையான மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன.

மலைஜாதியினர் வாழும் பகுதியில் தகுதி பெற்ற சுகாதாரப்பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள் என்பதைக் கருத்திற்கொண்டு மல்ல ஜாதிப் பெண்களுக்கு இத்திட்டம் பயிற்சியளிக்கிறது. 11 ம்லைஜாதிப் பெண்களுக்குத் திருக்கோயிலூர் டேனிஷ் மிஷன் மருத்துவமனையில் 18 மாதப் பயிற்சியளித்து மலை ஜாதியினர் வாழும் பகுதிகளில் அவர்கள் உதவி சுகாதாரப் பணியாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். மேலும் இரண்டாம் கட்டமாகத் தற்போது 12 மலைஜாதிப் பெண்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

பிறப்பு, இறப்பு, இளஞ்சிறார் இறப்பு விகிதம் தமிழ்நாட்டில் மேற்குறிப்பிட்ட 1977 முதல் 1982 முடிய ஆறு ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க அளவிற்குக் குறைந்து வந்திருப்பதை அறியலாம். 31.3.1984 முடிய குடும்பநலத் திட்டத்தால் பாதுகாக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டுத் தம்பதியர் 34.2 சதவிகிதத்தினராவர்.

இப்போதுள்ள பிறப்பு இறப்பு விகிதத்தை கி.பி. 2,000 ஆம் ஆண்டுவாக்கில் 1000க்கு முறையே 21 ஆகவும் 9 ஆகவும் குறைக்க வேண்டும் என்ற இந்தியக் குறியிலக்கினை நம் மாநிலத்தில் 1991-92ஆம் ஆண்டிலேயே அடைந்துவிட வேண்டும் என்ற நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறோம். நிரந்தர அல்லது தற்காலிகக் குடும்பநலத் திட்டமுறைகளைப் பின்பற்றிச் சிறுகுடும்ப நெறி ஏற்கச் செய்வதற்குரிய தகவல்கள். கல்வி ஆகியவற்றை அளித்துத் தூண்டுதல் செய்து அந்தக் குறியிலக்கை எய்தப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் தாய்மார்களுக்குக் குடும்ப நல நிரந்தர சிகிச்சைகள் 'டியூபெக்டமி' முறையில் செய்யப்பட்டு வருகின்றன. இது தவிர தாய்மார்களுக்கு 'லேப்ராஸ்கோப்' எனும் நூதன முறையில் குடும்பநல நிரந்தரச் சிகிச்சையும், ஆண்களுக்கு 'வாசக்டமி' அறுவைச் சிகிச்சைகளும் செய்யப்பட்டு வருகின்றன. 28.2.1985 வரை 1,81,531 தாய்மார்களுக்குக் குடும்பநல நிரந்தரச் சிகிச்சைகள் ''லேப்ராஸ்கோப்பிக்'' முறையில் செய்யப்பட்டுள்ளன. அதே 28.2.1985 வரையில் 2,10,222 தாய்மார்களுக்கு ''டியூபெக்டமி'' முறையில் குடும்பநல நிரந்தரச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. 28.2.1985 வரை 24,392 தாய்மார்களுக்கும் குடும்பநல நிரந்தரச் சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன.

தற்போது மாநிலத்தில் 246 நகர்ப்புற குடும்பநலத்திட்ட நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் 165 அரசினாலும், 66 உள்ளாட்சி மன்றங்களாலும், 15 உதவி நிறுவனங்களாலும் நடத்தப்படுகின்றன.

1984—85ஆம் ஆண்டில் இம்மாநிலத்தில் 2,000 மருத்துவச்சிகளுக்குப் பயிற்சியளிக்க வேண்டுமென்பது மைய அரசினால் விதிக்கப்பட்ட இலக்கு, 28.2.1985 வரை 4,359 மருத்துவச்சிகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

தற்போது 166 அரசு மருத்துவ நிலையங்களிலும் 35 தனியார் மருத்துவ நிலையங்களிலும் மருத்துவ முறையில் கருச்சிதைவு செய்துகொள்வதற்காக வசதிகள் உள்ளன.

சங்கர் பிரிண்டிங் பிரஸ்

ஆப்செட் அச்சகம்

271, குட்செட் தெரு, மதுரை.

போன்: 26564

மதுரை நகரில் முதல் ஆப்செட் அச்சகம்

தயாரிப்பாளர்கள்:

காலண்டர், டைரி, வால் போஸ்டர்கள்



போன்: 22451

நல்வாழ்த்துக்கள்

ஸ்ரீ ஆரிய பவன்

சைவ உணவகம்

(குளிர் சாதனம் வசதி உள்ளது)

நெ. 1, ஆபிஸர்ஸ் லைன்,

வேலூர்-1. வ.ஆ.




# ஆதி திராவிடர் அடையும் நன்மைகள்

ஆதி திராவிடர்களின் சமூக பொருளாதார முன்னேற்றம் கல்வியைச் சார்ந்து உள்ளதால், அரசு இதற்கு முன்னுரிமை தருகிறது. தமிழ்நாட்டில் 12 வது வகுப்பு வரை எல்லோருக்கும் இலவச கல்வி அளிக்கப்படுகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங் குடியினர் மாணவர்களுக்கு முதுநிலை பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. அதிக அளவில் ஆதி திராவிடர் மற்றும் பழங் குடியினர் குழந்தைகளுக்கு ஆரம்ப கல்வி அளிக்க எல்லா முயற்சிகளும் எடுக்கப்படுகின்றன. பள்ளிக்குச் செல்லும் வயதுடைய 25 இலட்சம் ஆதிதிராவிடர் குழந்தைகளில் 19.56 இலட்சம் பேர் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர். அதாவது, 78.3 விழுக்காடு பள்ளி செல்லும் வயது வந்த ஆதி திராவிடர் மாணவர்கள் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஏழாவது ஐந்தாண்டுக் காலத் திட்டத்தில் மேலும் 4 இலட்சம் ஆதி திராவிடர் குழந்தைகள் கல்வி அறிவு பெற வகை செய்யப்படும். எல்லா ஆதி திராவிடர் குடியிருப்புகளின் அருகாமையில் ஆரம்பக் கல்வி பெற, பள்ளி வசதி செய்து கொடுக்கப்பட்டுளது.

மெட்ரிக் படிப்புக்கு மேற்படிப்பு வரை எல்லா ஆதி திராவிடர் பழங்குடியினர் மாணவர்களுக்கும் இலவச கல்வி அளிக்கப்படுகிறது.

தமிழ்நாடு தேர்வாணைக் குழுவால் நடத்தப்படும் தொகுதி-4 பணிக்குரிய போட்டித் தேர்வினை எழுத ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்க்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியின் காலம் இரண்டு மாதங்களாகும்.

ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் ஆதிதிராவிடர்களுக்காக சுமார் 1.54 இலட்சம் வீடுகள் கிராமப்புற வீட்டு வசதி திட்டத்தின் கீழ் கட்டப்பட்டிருக்கின்றன. இவை தவிர தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு காப்புறுதி திட்டங்களின் கீழ் ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டப்படுகின்றன.

சாதி சமயமற்ற ஒரு சமுதாயத்தினை உருவாக்கும் நோக்குடன் கலப்புமணம் புரிந்த தம்பதியருக்கு தங்க பதக்கங்களும் பாராட்டு சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. இவை தவிர இத்தகைய தம்பதியரின் ஆண்டு வருமானம் ரூ. 6,000 அல்லது அதற்கு குறைவாக இருந்தால் அவர்கள் பெயரில் ரூ. 4,000 தேசீய சேமிப்புப் பத்திரத்தில் முதலீடு செய்யப்படுகிறது. மேலும் திருமண செலவிற்கென ரூ. 300-ம் வழங்கப்படுகிறது. கலப்புத் திருமண தம்பதிகளின் குழந்தைகளுக்கென்று, ஒருங்கிணைந்த எம்.பி.பி.எஸ்., முதலாம் ஆண்டு பட்டப் படிப்பிற்காக 6 இடங்களும், முதலாம் ஆண்டு பொறியியல் பட்டப் படிப்பிற்காக 5 இடங்களும் சித்த மருத்துவக் கல்லூரியில் 2 இடங்களும் நாட்டு முறை மருந்தாக்கப்பட்டய பார்மஸி வகுப்பில் 1 இடமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

சமுதாயப் பணிப் பிரிவில் போதிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அனைத்து 26,000 காலனிகளுக்கு குடிநீர் வசதி வழங்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 3,000 ஆதி திராவிடர்களின் காலனிகளில் (புதிய காலனிகள் உட்பட) அவர்கள் வசிக்கும் இடத்தின் அருகில் குடிநீர் வசதி தேவைப்படுகிறது. 1985–86-ல் 745 ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி செய்து தரப்படும்.

1984–85 இல் இருபது அம்சத் திட்டத்தின் கீழ், 5,850 பழங்குடியினர் குடும்பங்கள் பயனடைய குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் இவ் வருடத்தில் 11,235 குடும்பங்கள் பயன் அடைந்துள்ளன.

பாரதப் பிரதமர் அவர்களின் இருபது அம்சத் திட்டமானது தீவிரமாகச் செயல்படுத்தப் படுகிறது. இருபது அம்சத் திட்டத்தின் ஏழாவது அம்சம் ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினரின் முன்னேற்றத்தை விரைவு படுத்துவதற்கு வழிவகை செய்கிறது. 1980–85 ஆம் ஆண்டுகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடான 9 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்களில் 8.90 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்கள் பொருளாதார முன்னேற்றத் திட்டங்களினால் பயன் பெற்றுள்ளனர். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், 19,000 பழங்குடியினர் குடும்பங்கள் பயன் பெறுவர் என்று குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டிருந்தும், இத்திட்ட காலத்தில் 27,254 பழங்குடியினர் குடும்பங்கள் பொருளாதார திட்டங்களின் மூலம் பயன் பெற்றுள்ளனர். ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பல்வகை பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் மூலமாக 10 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்களும், 46,979 பழங்குடியினர் குடும்பங்களும் பயன் பெற வகை செய்யப்படும்.



# பெண்கள் முன்னேற பெருகிடும் வாய்ப்புகள்

தமிழர் நாகரிகம் தொன்மை வாய்ந்ததும், போற்றுதற்குரியதும் ஆகும். மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் பேணுதலில் உள்ள கடமையைத் தமிழக அரசு நன்றாக உணர்ந்துள்ளது.

மளிர்க்கென்றே பதிவு செய்யப்பட்ட தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் உற்பத்தி நிலையங்கள் ஆகியவை அமைத்து, அதன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகளில் அவர்களுக்குப் பயிற்சியளித்து வேலை வாய்பினை நல்கி, வருமானத்திற்கான வாய்ப்பினையும் கொடுத்து, அன்னாரது பொளாதார முன்னேற்றத்திற்கு அரசு உதவி வருகிறது.

இதுவரையில் 5,345 மகளிர் பல்வேறு தரப்பட்ட தொழில்களில் பயிற்சி அளிக்கப்பட்டார்கள். அவர்களில் 3,976 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1985-86 நிதி ஆண்டிற்காக ரூபாய் 20 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**எழுது பொருள் உற்பத்தி :**

15 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 750 மகளிர்க்கு வேலை வாய்ப்பளிப்பதற்காக நிறுவப்பட்டுள்ளன. 15 சங்கங்களும் உற்பத்தியைத் தொடங்கிவிட்டன.

**பனைப் பொருள் தொழில்கள் :**

பனைப் பொருள் தயாரிக்கும் தொழிலை அடிப்படையாகக் கொண்டு பனைநார் பனைப்பாய் ஆகியவைகளை உற்பத்தி செய்யும் 10 தொழில் கூட்டுறவு சங்கங்கள் தர்மபுரி மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டு, 250 மகளிர்க்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வரப்படுகின்றது. இந்த 10 கூட்டுறவு சங்கங்களும் உற்பத்தியை ஆரம்பித்து விட்டன.

தீப்பெட்டித் தொழிலில் இதுவரை 4,016 பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு மகளிர் தீப்பெட்டிச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன.

தஞ்சாவூர் மாவட்டம், நல்லூர் கிராமத்தில் ரூபாய் 6.61 லட்சம் செலவில் கயிறு தயாரிக்கும் பயிற்சி நிலையம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. இதுவரை 100 மகளிர்க்கு, கயிறு தயாரித்தலில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**மகளிர்க்கான மற்ற தொழிலியல் பயிற்சிகள்:**

தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் கணக்கியல் துறைகளில் மகளிர்க்கு சுமார் 120 தனியார் நிறுவனங்கள் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஆண்டுக்கு ரூபாய் 3,000-க்குக் குறைவாக வருவாய் பெறும் குடும்பத்தில் உள்ள 26 முதல் 30 வயதிற்கு உட்பட்ட மகளிா பயனடைகிறார்கள்.

தட்டச்சு. — இத்திட்டத்தில் பயன் பெறும் மகளிர்க்கு மொத்தம் ரூ. 150 உதவித் தொகையாக பத்து மாதங்களுக்கு அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் ரூ.1.56 இலட்சம் செலவில் 1,000 ஏழைப் பெண்கள் பயன் பெறுகிறார்கள். இதுவரை இத்திட்டத்தின்கீழ் 6,975 பெண்கள் பயனடைந்துள்ளார்கள்.

கணக்குப் பதிவு மற்றம் கணக்குத் துறையில் பயிற்சி அளித்தல்—இத்திட்டத்தின்கீழ் பயிற்சி பெறும் மகளிர்க்கு மொத்தம் ரூ. 165 உதவித்தொகையாக வழங்கப்பட்டு 6 மாதங்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது: இத்திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் ரூ. 1.46 இலட்சம் செலவில் சுமார் 1,00஀ பெண்கள் பயனடைகிறார்கள். இதுவரை இத்திட்டத்தின் கீழ் 2,553 பெண்கள் பயடைந்துள்ளார்கள்.

சுருக்கெழுத்து: இத்திட்டத்தின்படி பயிற்சி பெறும் மகளிர்க்கு மொத்தம் ரூ. 22 உதவித் தொகையாக ஓராண்டிற்கு அளிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் ரூ.1.01 இலட்சம் செலவில் சுமார் 507 மகளிர் பயனடைகிறார்கள். இதுவரை 1416 மகளிர் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர்.

சமூக நலத் துறையின் கீழ் தாம்பரம், கடலூர், சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி மற்றும் திருப்பத்தூர் ஆகிய ஆறு இடங்களில் சேவை இல்லங்கள் இயங்கி வருகின்றன. ஏழை விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் ஆதரவற்ற பெண்கள் முறையே 18 முதல் 40 வரை வயதுள்ள பெண்களுக்கு எட்டாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலைத் தேர்வுகள் எழுதுவதற்குக் கல்வி கற்பிப்பது இதன் நோக்கமாகும்.

சமுதாய மற்றும் பொருளாதார இடர்ப்பாடுகளைக் களைந்து எறியும் பொருட்டு கிராமப்புறப் பெண்களைக் கொண்ட ஒரு அமைப்பாக மகளிர் மன்றங்கள் உருவாக்கப்பட்டன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 30 மகளிர் மன்றங்கள் வீதம் 11,250 மன்றங்கள் இருக்கின்றன. மகளிர் மன்றத்தில் அமைப்பாளர்களுக்கு ஒவ்வொரு மூன்று மாதத்திற்கும் ரூ. 15 வீதம் மதிப்பூதியம் வழங்கப்படுகிறது.

ஆண்டு ஒன்றுக்கு ரூ.3000 க்கும் கீழ் வருமானம் உள்ள விதவைப் பெண்களில் குழந்தைகள் பயன் பெற இலவசமாக பாடப்புத்தகம் மற்றும் நோட்டுப் புத்தகம் வழங்கும் திட்டத்தின் கீழ் இது வரை 20,583 குழந்தைகள் பயன் பெற்றுள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் 300 குழந்தைகள் பயன் பெறும் வகையில் செயல்படும் இத்திட்டத்திற்கு 1985—86ஆம் ஆண்டில் ரூ. 1.17 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேல்நிலைக் கல்வி பயிலும் 1000 குழந்தைகளுக்கு, குழந்தை ஒன்றுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 100 மதிப்புள்ள புத்தகம் மற்றும் நோட்டுப் புத்தகம் இலவசமாக வழங்குவதற்கு 1981-82 முதல் இத்திட்டம் விரிவாக்கப்பட்டுள்ளது. இதுவரை 3,616 குழந்தைகள் இந்தத் திட்டத்தின் கீழ் பயன்பெற்றுள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் ரூ. 1 லட்சம் செலவில் 1000 குழந்தைகள் பயன் பெறும் வகையில் இந்தத் திட்டம் தொடர்ந்து செயல்பட்டுவருகிறது.

**இலவச இயந்திரம் வழங்கும் திட்டம்**

20 முதல் 40 வரை வயதுள்ள ஆதரவற்ற ஏழை விதவைப் பெண்டிர் மற்றும் சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்ட பெண்டிர் மற்றும் உடல் ஊனமுற்ற பெண்டிர் மற்றும் ஆண்கள் ஆகியோர் தமது பிழைப்புக்கு வழி தேடும் வகையில் அவர்களுக்கு இலவசமாகத் தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தை அரசு ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுபவர்கள் தையல் கலை தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். இத்திட்டம் 1974—1975 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 1984—85 ஆம் ஆண்டு முடிய 10,289 தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

விதவை மறுமணத் திட்டம் 1975—76 ஆம் ஆண்டிம் துவக்கப்பட்டது. விதவை மறுமணம் செய்து கொள்ளும் மணமக்கள் இருவர் பெயரிலும் கூட்டாக ரூபாய் 5,000-க்கு ஏழாண்டிற்குரிய தேசிய சேமிப்புப் பத்திரம் வழங்கி ஊக்குவிப்பதன் மூலம் கைம் பெண்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். 18 முதல் 20 வயது வரையுள்ள ஆதரவற்ற விதவைப் பெண்கள் மட்டுமே இத்திட்டத்தின் கீழ் பயன் பெறத் தகுதி பெற்றவர்களாவர் 1983—1984 முடிய 1.094 தம்பதியர் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர். 1984-85 ஆம் ஆண்டில் 95 தம்பதியர் பயனடைந்துள்ளனர்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் 1983 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் பதிவு செய்யப்பட்டது. இதற்கு அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 1 கோடியாகும். கல்வி, உடல்நலம், வேலை வாய்ப்பு போன்ற எல்லாத் துறைகளிலும் மகளிர் முன்னேறச் செய்தலே இக்கழகத்தின் முக்கிய நோக்கம் ஆகும்.

குழந்தைகளுக்குப் பயன் அளிப்பதுடன் ஆயிரக்கணக்கான வேலையற்ற ஏழை மகளிர் பலர் மாண்புமிகு முதலமைச்சரின் குழந்தைகள் சத்துணவுத்திட்டத்தின் மூலமாக வேலை பெற்றதனால் இத்திட்டம் அவர்களுக்கோர் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. குழந்தைகள் நல அமைப்பாளர்களாகப்பணியமர்த்தப் பெற்றுள்ள 28,106 மகளிரில் தாழ்த்தப்பட்டோர்-மலை ஜாதியினர் 5,383 பேரும், விதவைகள் 1,033 பேரும், ஆதரவற்ற மகளிர் 1,173 பேரும் உள்ளனர். அது போல குழந்தைகள் நல உதவியாளர்களாக அமர்த்தப் பெற்ற 56,210 மகளிர் தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலை ஜாதியினர் 11,463 பேரும், விதவைகள் 7,448 பேரும், ஆதரவற்றோர் 5,603 பேரும் அடங்குவர். ஆக இத்திட்டத்தில் 84,315 மகளிர் குழந்தைகள் நல அமைப்பாளர்களாகவும் குழந்தைகள் நல உதவியாளர்களாகவும் பணியமர்த்தப் பெற்றுள்ளனர்.



## ஆர்.எச். 153, இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை லிட்.,

**அச்சங்குளம்-623 601,**

**கமுதி தாலுகா.**

தந்தி: "RAMNADSPIN"

தொலைபேசி எண்: அலுவலகம்: 39; நிர்வாக இயக்குநர்: 37 அபிராமம்

நிர்வாக இயக்குனர் இல்லம்: 386. பரமக்குடி

| | |
|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் | : ரூ 150 லட்சம் |
| செலுத்தப்பட்ட மூலதனம் | : ரூ 127.05 லட்சம் |
| தமிழக அரசின் பங்கு | : ரூ 125 லட்சம் |
| அங்கீகரிக்கப்பட்ட கதிர்கள் | : ரூ 12,320. |
| நிறுவப்பட்ட கதிர்கள் | : ரூ 12,320. |

**தயாராகும் நூல் ரகங்கள்**

எங்களது ஆலையில் தரமான வார்ப்பு 40 நீர், 60 நீர் மற்றும் 42 நீர் கார்டட் கோன் மற்றும் சிட்டநூல் ரகங்கள் தயாரிக்கப்படுகின்றன.

திரு கே.என். வெங்கட்ரமணன், எம்.ஏ.,
நிர்வாக இயக்குநர்

திரு ராஜீவ் வாலியா, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்/தலைவர்




# பல இலட்சம் பேருக்கு பயனுள்ள வேலைகள்

கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவினால் கிராமத் தொழில்கள் என வகைப்படுத்தப்பட்ட 26 தொழில்களில், 15 கிராமத் தொழில்களையும், கதர் தொழிலையும், கதர் வாரியம் செயல்படுத்தி வருகிறது.

இது தவிர தமிழ்நாடு அரசின் கிராமத் தொழில்கள் என அறிவிக்கப்பட்ட ஊதுபத்தி, நீலகிரித் தைலம், எலுமிச்சைப் பழத் தைலம் ஆகிய தொழில்களுக்கு அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

கதர்த் துறை வாரியத்தின் கீழ் 2 மஸ்லின் நூல் உற்பத்தி நிலையங்கள் செயல்பட்டுவருகின்றன. மேலும் 4 மஸ்லின் நூல் உற்பத்தி நிலையங்கள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது,

கதர் வளர்ச்சிப் பணிகள் தற்போது கோவை, ஈரோடு, சேலம், மதுரை, நெல்லை, குமரி மாவட்டங்களில் முன்னேற்றம் அடைந்துள்ளன. இதனைத் தற்போது புதுக்கோட்டை, வட ஆர்க்காடு. தென்னார்க்காடு, செங்கல்பட்டு, தஞ்சை, காமராஜர், இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம் ஆகிய மாவட்டங்களிலும் விரிவுபடுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் ஏற்கெனவே 375 ஊராட்சி ஒன்றியங்களில் 304 ஒன்றியங்களில் கதர்ப் பணித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள ஊராட்சி ஒன்றியங்களிலும் கதர்ப் பணித்திட்டங்களைச் செயல்படுத்த வாரியம் முடிவு செய்துள்ளது.

நெல்லை மாவட்டம், அந்தோணியாபுரத்திலும், இராமநாதபுரம் மாவட்டம், மாரியூரிலும், திருச்சி மர்வட்டம் கே. பரமத்தியிலும் பனைப் பொருட்கள் செய்யும் நிலையங்கள் நிறுவ ஆலோசனைகள் இருக்கின்றது.

திருப்பூர், மதுரை, தஞ்சை ஆகிய இடங்களில் குளியல் சோப்புத் தொழிற்சாலை ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அருப்புக்கோட்டையில் கைமுறைக் காகித நிலையம் ஒன்று தொடங்கப்படும். மலைவாழ் மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும்நோக்கத்துடன் கொல்லி மலை, கல்ராயன் மலை, ஜவ்வாது மலைப் பகுதிகளில் கதர் கிராமத் திட்டங்களை நிறைவேற்ற 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள 13,206 கைவினைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டத்திற்கென அரசு 137 லட்சத்து 34 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியுள்ளது

கதர் கிராமக் கைத் தொழில் மூலம் 6.13 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு தரப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அமல்படுத்த இருக்கும் பள்ளிக் குழந்தைகள் சீருடைத் திட்டத்திற்கு 110 இலட்சம் மீட்டர் துணியைக் கதர் கிராமத் தொழில் வாரியம் தர இருக்கிறது. தமிழக அரசின் இந்தமுயற்சியால்,இப்படிப்பட்ட வாய்ப்பு ஏற்பட்டு இருக்கிறது.

1985-86-ஆம் ஆண்டில் 70 ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும் - 70 ஆயிரம் பேர் கிராமத் தொழில் தொடங்கும் நிலை உருவாகும்- 70 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்க ரூபாய் 22 கோடி செலவாகும். 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூபாய் 690 கோடித் திட்டம் வகுக்கப்பட்டு இருக்கிறது.

கதர் கிராமத் துறையில் பணியாற்றுகிறவர்களுக்குக் கூலி உயர்வு தரப்பட்டு இருக்கிறது.

ஒரு ஆண்டில் 90 நாட்களுக்குத் தள்ளுபடி விற்பனை தரப்படுகிறது.



M/s. ராமச்சந்திரா பெஸ்டிசைட்ஸ் பி. லிட்.,
M/s. ராமச்சந்திரா ரெக்ஸின்ஸ் பி. லிட்.,

தலைமை அலுவலகம்
23, 4-வது மெயின் ரோடு,
புது தரகுப்பேட்,
பெங்களூர்-560002.
போன்: 608390 & 603476.

கிளை அலுவலகம்
37, வடக்குமாசி வீதி,
மதுரை-625001.
போன்: 27123

ரெக்ஸின் விற்பனையாளர்கள்

M/s. பாரத் டிரேடர்ஸ்
இ-19, கார்ப்பரேசன் சாப்பிங் காம்ப்ளெக்ஸ்
டி.பி.கே. ரோடு,
மதுரை-625001.



STAY COMFORTABLY WHILE AT VELLORE

Hotel SUSIL
*Air Conditioned Boarding & Lodging*
Opposite to C.M.C. Hospital

67-A, ARCOT ROAD,
VELLORE-632004.

Phone 20604
20904
22453 Restaurant






# பெருகிடும் பாசன வசதி

தமிழகத்தின் வளர்ச்சியில் நீர்ப்பாசனம் ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது.

நடப்பு ஆண்டில் பெரிய மற்றும் நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்கு ரூ. 38.37 கோடி செலவு ஆகும்:

நடப்பு ஆண்டில் (1985-86)ல் கூடுதல் பாசன வசதி இலக்கு 50 ஆயிரம் ஏக்கர் (20 ஆயிரம் எக்டேர்) என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பெரியாறு, வைகைப் பாசனமேம்பாட்டுத் திட்டத்தின் முதல் கட்டப் பணிகள் மூலம் 25 ஆயிரம் ஏக்கர் நிலங்களும், 2ஆம் கட்டப் பணிகள் மூலம் 17 ஆயிரம் ஏக்கர் நிலங்களும் கூடுதலாகப் பாசன வசதி பெறும்.

இத்திட்டத்தின் முதல் கட்டப் பணிகளை நிறைவேற்ற ரூ. 44.50 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் உலக வங்கி உதவியுடன் செயல்பட்டு வருகிறது.

இரண்டாம் கட்டப் பணிகளுக்கு ரூபாய் 56 கோடியே 86 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 1988ல் திட்டங்கள் முடிவடையும். பரம்பிக்குளம்-ஆளியாறு பாசனப் பகுதி விரிவாக்கத் திட்டம் ரூபாய் 18 கோடியில் செயல்படுத்தப்படும்.







# கூடி உழைப்பதால் கோடி நன்மை

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள், உழவர், தொழிலாளர். கைவினைஞர், நுகர்வோர் ஆகியோரை ஆதரிப்பதில் முக்கியப் பங்கு வகித்து வருகின்றன.

கடன்களையும் வேளாண்மை இடு பொருள்களையும் வழங்குவதிலும், வேளாண்மை விளை பொருள்களை விற்பனை செய்வதிலும், நுகர்பொருள்களை விநியோகம் செய்வதிலும் கூட்டுறவுச் சங்கங்கள் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நிலையான முன்னேற்றத்தைக் கண்டுள்ளன.

முந்தைய ஆண்டில் மொத்த விவசாயக் கடன்கள் 103.98 கோடி ரூபாய் அளவிற்கு மட்டுமே வழங்கப்பட்டிருக்க, 1984-85 ஆம் ஆண்டில் அவ்வகைக் கடன்கள் 148.52 கோடி ரூபாய் அளவிற்கு அதிகமாக வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டில் உள்ள விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் 1984-85 ஆம் ஆண்டில் நலிந்த பிரிவினருக்குக் குறுகியகாலக் கடன்களை 58.23 கோடி ரூபாய் அளவிற்கு, அதாவது வழங்கப்பட்ட மொத்தக் கடன்களில் சுமார் 53 சதவீத அளவிற்கு வழங்கியுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது. மத்தியகாலக் கடன்கள் 16.17 கோடி ரூபாய், அதாவது மொத்தக் கடன்களில் 93 சதவீதம், நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட்டன. நீண்ட காலக் கடன்களில் 13.46 கோடி ரூபாய் - அதாவது மொத்தக் கடன்களில் 66 சதவீதம் ஆண்டு ஒன்றுக்கு 4,300 ரூபாய்க்கு மேற்படாமல் நிகர வருமானம் உள்ள சிறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

பாசனக் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக, பிரதமக் கூட்டுறவு நிலவள வங்கிகள் மாநில அரசு உதவியுடன் 1983-84 ஆம் ஆண்டில்,. ஒரு வறட்சி நிவாரண நடவடிக்கையாக, 3.63 கோடி ரூபாய் அளவிற்குக் கடன்களை வழங்கின. இக்கடன்கள் 8,807 விவசாயிகளுக்கு, ஒவ்வொருவருக்கும் 5,000 ரூபாய்க்கு மேற்படாமல் வழங்கப்பட்டன.

நில அடமானத்தை வற்புறுத்தாமல் நிலவள வங்கிகள் நிலமற்றவர்களுக்குத் திட்ட ரீதியாகப் பல்வகை காரணங்களுக்காகக் கடன்கள் வழங்கும் பொருட்டு, அரசு 5 கோடி ரூபாய் அளவிற்கு உத்திரவாதம் அளித்துள்ளதையொட்டி, நிலமற்றவர்களுக்குக் கடன்கள் மார்ச் மாதம் 31 ஆம் தேதி வரையில் 3.99 கோடி ரூபாய் அளவிற்கு வழங்கப்பட்டுள்ளன.

கூட்டுறவுச் சங்கங்கள் 1983-1984 ஆம் ஆண்டில் 10.24 இலட்சம் பேர்களுக்கு 193.74 கோடி ரூபாய் அளவிற்கும் 1984-85 ஆம் ஆண்டில் 11.35 இலட்சம் பேர்களுக்கு 218.82 கோடி ரூபாய் அளவிற்கும் நகைக் கடன்களை வழங்கியுள்ளன. இவற்றில், விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் மட்டும் ஊரகப் பகுதிகளில் வழங்கிய கடன்கள் 1983-84ல் 57.25 கோடி ரூபாயும் 1984-85ல் 65.95 கோடி ரூபாயும் ஆகும்.

தமிழ்நாட்டில் 133 கூட்டுறவு நகர வங்கிகள் உள்ளன. இவ்வங்கிகள் வங்கி வசதிகளை அளிப்பதுடன், நகர்ப்புற மக்களுக்கும், ஓரளவு நகர்ப்புறத்தையொட்டியுள்ள மக்களுக்கும் குறுகிய காலக் கடன்களையும், மத்திய காலக் கடன்களையும் 1983-84 ஆம் கூட்டுறவு ஆண்டில் 171.55 கோடி ரூபாய் அளவிற்கு வழங்கியுள்ளன.

மாநிலத்தில் 3,013 கல்லூரி மற்றும் உயர்நிலைப் பள்ளி மாணவர் கூட்டுறவுப் பண்டக சாலைகள், 302 தொழிற்சாலை மற்றும் தோட்டத் தொழிலாளர் பண்டக சாலைகள் மற்றும் 15 மகளிர் கூட்டுறவுப் பண்டக சாலைகள் உட்பட 3,839 பிரதமக் கூட்டுறவுப் பண்டக சாலைகளும், அவற்றின் 449 கிளைகளும், 29 கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலைகளும், அவற்றின் 1,134 கிளைகளும், மேலும் மாநில நுகர்வோர் கூட்டுறவு இணையமும் நுகர்பொருட்களை விநியோகம் செய்கின்றன. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் செய்த சில்லறை விற்பனையின் மதிப்பு, முந்தைய ஆண்டின் 22 கோடி ரூபாயிலிருந்து, 1984-85 ஆம் ஆண்டில் 285 கோடி ரூபாய்க்கும், உயர்ந்தது.

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்ட பாட நூல்களையும் குறிப்பேடுகளையும் 1983-84 ஆம் கல்வி ஆண்டில் முறையே 7.27 கோடி ரூபாய்க்கும் 1.50 கோடி ரூபாய்க்கும் விநியோகித்ததின் வாயிலாக, மாணவர் சமுதாயத்திற்குத் தொடர்ந்து சேவை செய்து வருகின்றன. 1984-85 ஆம் கல்வி ஆண்டில் பாட நூல்கள் 9.86 கோடி ரூபாய்க்கும், குறிப்பேடுகள் 1.79 கோடி ரூபாய்க்கும் விற்கப்பட்டன.

மாநிலத்தில் 13 பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் 42,186 உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வருகின்றன.



## முதல்வர் சிகிச்சைச் செலவு:

# மக்கள் தந்த நிதியை அரசுக்கு அளித்தார் முதல்வர்

முதல் அட்டை சொல்லும் செய்தி:

அமரர் அண்ணா பிறந்தநாள் பவள விழா, சென்னையிலுள்ள கலைவாணர் அரங்கில் சீரும் சிறப்புமாக (30.6.85) நடைபெற்றது.

இவ் விழாவில்-முன்பு, உடல் நலிவுற்றிருந்தபோது தனக்குத் தமிழக அரசு செலவிட்ட 96 இலட்சத்து 90 ஆயிரத்து 376 ரூபாயை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் பொதுமக்களிடமிருந்து திரட்டி அரசுக்குத் திருப்பி அளித்தார். அனைத்திந்திய அண்ணா தி.மு.கழகம் சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கிய இதற்கான காசோலையை, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தமிழ்நாடு அரசின் சார்பில் பெற்றுக்கொண்டார்.

கலைவாணர் அரங்கின் உள்ளேயும் வெளியேயும் இலட்சக்கணக்கானோர் பங்கேற்க நடைபெற்ற இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அனைவரும் பங்கேற்றார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் துணைவியார் திருமதி இராணிஅம்மையாரும் பங்கேற்றார். அனைத்திந்திய அண்ணா தி.மு. கழகப் பொதுச் செயலாளர் திரு.எஸ்.இராகவானந்தம் அவர்கள் விழாத்தலைமையேற்க பொருளாளர் திரு.எஸ்.மாதவன் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

இந்த விழாவில்-மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ்.இராமச்சந்திரன் அவர்கள் வெளியிட்ட அறிஞர் அண்ணா பவள விழா மலரின் முதல் படியை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெற்றுக்கொண்டார். மலரின் சிறப்பை விளக்கி மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் சொற்பொழிவாற்றினார். கடந்த ஆண்டு அக்டோபர் 5ஆம் நாளன்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடல் நலம் குன்றி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, அமெரிக்காவினின்று பிப்ரவரி 4ல் நலம் பெற்றுத் தமிழகம் திரும்பும் வரை உயிருக்குயிரான தங்கள் தலைவன் உடல் நலிவுற்ற செய்தி தாளாமல் தங்களைத் தாங்களே மாய்த்துக்கொண்ட கழகத் தோழர்கள் 22 பேர்களின் குடும்பத்தார்க்கு, இவ்விழாவில் தலா 20 ஆயிரம் ரூபாயும்-உயிர் பிழைத்தோர் 20 பேர்களின் குடும்பங்களுக்குத் தலா 15 ஆயிரம் ரூபாயும் இந்த விழாவில் அளிக்கப்பட்டது. கொலை செய்யப்பட்ட அனைத்திந்திய அண்ணா தி.மு.கழகத் தோழர் திருவொற்றியூர் தங்கசாமியின் குடும்பத்திற்கும் ரூ. 75 ஆயிரம் ரூபாய் நிதியளிக்கப்பட்டது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் இத் தொகைகளை வழங்கி உரையாற்றினார்.





அனைத்திந்திய அண்ணா தி.மு.க. சார்பில், பொதுச் செயலாளர் திரு. எஸ். இராகவானந்தம் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்.

அழகுற அறிஞர் அண்ணா பவள்விழா மலரை உருவாக்கியமைக்காக பெரியவர் திரு அ.சங்கரய்யா, திரு.கவிஞர் மணிமொழி, திரு நாகை தருமன் ஆகியோருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொன்னாடை அணிவித்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் உடல் நலம் காத்தமைக்கென-அவரது தனி மருத்துவர் திரு.பி.ஆர்.சுப்பிரமணியன், அப்பல்லோ மருத்துவமனை தலைமை மருத்துவர் திரு பி.சி.ரெட்டி, அரசு மருத்துவர்கள் திரு.கே.வி. திருவேங்கடம், திரு.நரேந்திரன், திரு.ஜெகந் நாதன், திரு.சேஷய்யா, திரு.தாயுமானவர், ரயில்வேயைச் சேர்ந்த டாக்டர் கல்யாணசிங், விமானத்தில் பக்குவமாகக் கொண்டுசெல்ல மருத்துவக் கூடம் அமைத்த கேப்டன் கபூர், பணிப்பெண்கள் வயலட் டேவிட், வனஜா ஆகியோருக்கு வேலைப்பாடு மிக்க வெள்ளித் தட்டுகள் பரிசளிக்கப்பட்டன.



இந்த அரசின் ஒன்பதாம் ஆண்டுத் துவக்க விழாவுமான இவ்விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிகிச்சைபெற்றபோது உடனிருந்து உதவிய தனிச் செயலாளர் திரு மு.பரமசிவம், திரு. பிச்சாண்டி, பாதுகாப்பு அதிகாரிகள் திரு.ஆறுமுகம், திரு.சங்கரசுப்பு, உதவியாளர் திரு.மாணிக்கம் ஆகியோரும் வெள்ளித் தட்டுகள் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டனர்.

ஜி.கே.எஸ். குழுவினரின் இசை நிகழ்ச்சியோடு துவங்கிய இந்த மாபெரும் கூட்டத்தில் —மாண்புமிகு முதல்வர் அவர்கள், தனது உடல்நிலை கருதி உயிர்த்தியாகம் செய்த திரு மாதையன் என்பாரின் ஆண்குழந்தைக்கு 'இளங்கோ' எனப் பெயர் சூட்டினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் துணைவியார் திருமதி ஜானகி அம்மாள், மற்றும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன மேலாண்மை இயக்குநர் திருமதி சுலோசனாசம்பத், வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு.திருப்பூர் மணிமாறன், குடிசைப்பகுதி மாற்றுவாரியத்தலைவர் திரு.என்.வி.என்.செல்வம் நாடாளுமன்றத் துணைச் சபாநாயகர் திரு தம்பித்துரை, நாடாளுமன்ற, சட்டமன்ற, சட்டமேலவை உறுப்பினர்கள் உட்பட லட்சோப லட்சம் பேர் வருகைதந்த இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் உரையாற்றினார்கள்.

விழா முடிவில் அனைத்திந்திய அண்ணா தி.மு.கழகத் துணைப் பொதுச்செயலாளர் திரு. எஸ்.ஆர்.இராதா நன்றி கூறினார்.

—'இந்திரன்'





**பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாள் விழாவை (ஜூலை 15-ஆம் நாள்), யொட்டி, அவரோடு நெருங்கிப் பழகிய அரசியல் தலைவர் அன்னாரது அருமை பெருமைகளை நினைவுகூர்கிறார்.**

எளிமையே உருவான இனிய தலைவர் காமராசர் அவர்களை நான் முதன் முதல் சந்தித்தது 1938ல். ஆம்; அன்று கண்ட அந்த எளிமைதான் என்னை அவர்பால் ஈர்த்தது.

தோற்றத்திலே மட்டுமல்ல; எதிலுமே அவருக்கு வீணான ஆடம்பரங்கள் கட்டோடு பிடிக்காது. 'படிக்காத மேதை' என்று அவரைப் பலரும் கூறுவதுண்டு. அதற்காக அவர் யார் மேலும் கோபப்பட்டு நான் கண்டதில்லை. ஆனால் ஒன்று. ஆங்கிலத் தினசரிகளை, வார ஏடுகளை வரி விடாமல் அவர் படித்து முக்கிய இடங்களில் அடிக்கோடு இடுவதை எத்தனையோ முறை கண்டு, 'இவரா படிக்காதவர்' என்று எனக்கு நானே வியந்து போயிருக்கிறேன்! பட்டம் பெறுவது தான் படித்தவரென்பதற்கு அடையாளமா என்ன? எவ்வளவோ பேரை-அப்படிப் படித்தும் பண்படாதவர்களாக இருப்பதை நாம் பார்க்கிறோமே!



மற்றவர்களைப் பேச்சால் கவருவது என்பது அவருக்குத் தெரியாத ஒன்று. ஆனால், கர்மவீரர் என்றால் கர்மவீரர்தான். செயலில் அவ்வளவு தீவிரமாக இருப்பார். இதன் காரணமாகத்தான்-1940 ஆக இருக்கக்கூடும்-தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராக நமது காம்ராசர் அவர்களைச் சிபாரிசு செய்தார் திரு சத்தியமூர்த்தி. ஆரம்பத்தில், அதற்குச் சம்மதிக்க இவர் சிறிது தயங்கியதும், சத்தியமூர்த்தி கொடுத்த தைரியத்தில் தான் முதன்முதலில் கட்சித் தேர்தலில் நின்றார், வென்றார்.

1942ல் அமராவதிச்சிறையிலே அடைபட்டிருந்த காலத்தில், நிறையப் புத்தகங்கள் படிப்பது அவருடைய பழக்கமாக இருந்தது. அவர் கேட்டெழுதும் அரசியல் தொடர்பான புத்தகங்களையெல்லாம் தேடிப்படித்து வாங்கியனுப்புவார் என்னுடைய தந்தையார் திரு உடையப்பா அவர்கள். அமராவதிச் சிறை வாழ்வு, பெரிய தலைவர்களின் தொடர்பு அவரது அரசியல் அறிவை இப்படிச் சுடர்விடச் செய்ததென்றால் தவறில்லை.

இப்படியெல்லாம் தன்னிலும் மூத்த தலைவர்களோடு பழகியும் தரமான புத்தகங்களைப் படித்தும் பெற்ற அவருடைய அரசியல் அனுபவம் தான் 1954ல் ராஜாஜி அவர்களுக்கும் தனக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடு

**மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர்**

## திரு உ. சுப்பிரமணியம்



போது தனது தனித்தன்மையை நிலை நாட்ட காமராசர் அவர்களுக்கு உதவியது.

வளர்ச்சியின், ஆரம்ப காலங்களில் காமராசர் அவர்கள் மேடையிலே பேசியது குறைவு; ஆனாலும், கட்சி வேலைகளுக்காக ஊர் ஊராகப் போய்க் கொண்டிருப்பார். அப்படிப் போகிற நேரத்தில் வழியிலே வயலில் வேலை செய்பவர்களானாலும் சாலைகளில் வேறு எந்த வேலை செய்து கொண்டிருக்கும் கூட்டமானாலும் சரி; அங்கே காரை நிறுத்தச் சொல்வார். அவர்களின் வேலை நிலை, கூலி பற்றி யெல்லாம் மிக அக்கறையோடு விசாரிப்பார். இந்தத் தன்மையினால்தான் பாட்டாளிகளின் கூட்டாளி என்று பிற்காலத்தில் பலராலும் அவர் போற்றப் பட்டார்.

மக்கள் கோரிக்கை நியாயம் என்று தனக்குப்படுகிறபோது அதை நிறைவேற்றச் சட்ட திட்டங்கள்-அதிகாரிகள் குறுக்கே நின்றால் அவர் விட்டுக்கொடுக்க மாட்டார்.

ஒரு முறை குற்றாலத்தில் தங்கியிருந்தோம்; அப்போது


"கோ-ஆப்டெக்ஸ் ஆடைகள்" என
பார்த்தாலே தெரிகிறது
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி



அங்கிருக்கும் 'இலஞ்சி' என்கிற ஊர்மக்கள் குடிதண்ணீரின்றி அவதிப்படுவதாக இவரிடம் வந்து முறையிட்டார்கள். அதிகாரி களை அழைத்துப் பேசினார் காமராசர். குற்றால அருவி நீரையே அங்கு திருப்பி விடலாம் என்று திட்டம் போட்டார்கள் அவர்கள். ''குற்றாலத்துக்குப் பெருமையே இந்த அருவியால் தானேங்கிறேன்! இதை அங்கே திருப்புனா எப்பிடி? வேற என்ன பண்ணுவீங்களோ தெரியாது, வேற எதுனா திட்டம் போட்டு இலஞ்சி மக்களுக்குச் சீக்கிரமே தண்ணீர் கொடுத்தாகணும்'' என்று கூறிவிட்டார்.

இதற்கடுத்த ஐந்தாண்டுக்குள் ளேயே, அருவிக்குப் பழுதில்லா மல் அந்தப் பகுதி மக்களுக்குத் தண்ணீர் கொடுக்கப்பட அரிய தோர் திட்டம் நிறைவேற்றப் பட்டு விட்டது.

மக்களுக்குப்பாதகமானஎந்தத் திட்டத்தை நிறைவேற்ற அதி காரிகள் முனைந்தாலும் ''வேற யோசிங்கய்யா; இப்பிடித் திட் டம் போட நீங்க ஒரு அதிகாரி, அதுக்குச் சரிப்போட நான் ஒரு முதலமைச்சரா?'' என்றுநேருக்கு நேர் கேட்டே விடுவார்.

தொண்டர்களாகிய நாங்க ளெல்லாம் காமராசர் அவர் களைக் குடும்பத் தலைவராகவே கருதிச் செயல்பட்டு வந்தோம்.

அவருக்கிருந்த இயற்கைச் சுறுசுறுப்பு, தன்னம்பிக்கை, அர சியல் விவேகம் ஆகியவையே அவரை யாராலும் எளிதில் வெல்ல முடியாத நிலைமைக்கு உயர்த்தின. 1969ல் இந்திரா காந்தி அம்மையாரோடு மாறு பட்டு ஸ்தாபனக் காங்கிரசை நிறுவியபோது இந்திராகாந்தி அவர்களால் இந்தியாவின் மற்ற மாநிலங்களிலெல்லாம் ஸ்தாபன காங்கிரசைப் பலவீனப்படுத்த முடிந்தது; ஆனால் தமிழகத்தில் அது முடியவில்லையென்றால் காமராசர் அவர்களின் உறுதி மிக்க தலைமையும் அவரை உறுதியாகப் பின்பற்றிய தொண் டர் கூட்டமுமே அதற்குக் காரணம்.

ஆனாலும் - கடைசி வரை இருவரும் ஒருவர் மேல் ஒருவர் குறையாத மதிப்பும் மரியாதை யும் கொண்டிருந்தார்கள்.

காமராசர் அவர்கள் இறப்ப தற்கு இரண்டு மணி நேரத்திற்கு முன்சுமார் ஒரு மணி நேரம் அவ ரும் நானும் பேசிக்கொண்டிருந் தோம். அப்போது கூட இந்திரா காந்தி அம்மையார் பற்றி மிக உயர்வாக - மனந்திறந்து பேசி னார் அவர்.

காமராஜர் முக்குலத்தோரின் விரோதி என்று தவறாக செய்தி பரப்பப்பட்டது. பூண்டி வாண் டையார், முன்னாள் சட்ட மன்றத் தலைவர் செல்லப் பாண்டியன் ஆர்.வி. சாமிநாதன் என் போன்றோர் ஆகிய முக்குலத்தைச் சேர்ந்தவர் கள் பலரும் எப்படி காமராசர் அவர்களைத் தலைவராக ஏற்றுக் கொண்டு மனப்பூர்வமாகச் செயல்பட்டிருக்க முடியும்?

நேரு பெருமகனார் காமராசர் அவர்கள் மீது பெரு மரியாதை கொண்டிருந்தார். நம்பிக்கை வைத்திருந்தார். ஒரு முறை- இந்தியாவெங்கும் நடக்கவிருக் கும் இடைத் தேர்தலில் வேட் பாளர்களை நிறுத்துவது பற்றி ஆலோசிக்க டில்லியில் பார்லி மெண்டரி போர்டு கூடியது. அன்றைக்கு உத்தரப் பிரதேசம் பற்றிப் பேசி முடி வெடுப்பதாக இருந்தது. காம ராசர் வரச் சிறிது தாமதம் ஆகி விட்டது. நேரு அவர்கள் அது தனது சொந்த மாநிலமானா லும் கூட - காமராசர் அவர்கள் இல்லாமல் முடிவெடுக்கக்கூடாது என்ற கருத்தில் ''அவர் வரும் வரை வேறு ஏதாவது பற்றிப் பேசுவோம்'' என்று கூறிவிட் டார். அந்த அளவுக்குக் காம ராசர்மீது நேருவுக்கு மதிப்பும் மரியாதையும் இருந்தது.

இருந்த இடத்திலிருந்தபடி - அத்தனை தொகுதியிலும் மற்ற கட்சிக்காரர்கள் யாரை வேட்பா ளராக அறிவிப்பார்கள். நாம் யாரை நிறுத்தினால் வெல்ல முடியும் என்று முன்கூட்டியே கணிக்கும் அரசியல் முதிர்ச்சி காமராசர் அவர்களிடம் இருந் தது.

ஏழை எளிய மக்கள் ஏற்றம் பெறத் தமிழக மெங்கும் தொழில் மயமாக்கப் பாடுபட் டார் அவர்.

இந்தச் சமயத்தில் குறிப்பாக நான் ஒன்றைச் சொல்லியாக வேண்டும்.

1912-ல் இராமநாதபுரம் மாவட்டம் பிரிக்கப்பட்ட காலம் முதலே நிர்வாகச் சங்கடம் இருப் பதால் அதன் தலை நகரை மாவட்டத்துக்குள் அமைக்க வேண்டும் என்றபேச்சு இருந்து வந்தது. இராமநாதபுரம் ராஜா, குமாரசாமி ராஜா காமராசர் எல்லாம்அந்த மாவட் டத்தைச் சேர்ந்த அமைச்சர் களாக இருந்தும் அவர்கள் காலத்தில் அது சாத்தியப்படா மல் போய்விட்டது. மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் தான் அந்த மாவட் டத்தைப் பிரித்து, காமராசர் அவர்கள் பெயரிலும் ஒரு மாவட்டம் கண்டு பெருமை கொண்டிருக்கிறார். இதற்காக அந்த மாவட்ட மக்கள் சார்பில் நாங்களெல்லாம் இன்றைய முதல்வருக்குப் பெரிதும் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

Licence No. TN/MS(C)/PP-23
பதிவு எண். M. 8676






Licence No. TN/MS(C)/PP-23



தமிழ்நாடு மாநில சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் குழுவின் கூட்டம் மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள் தலைமையில் 29.6.1985 அன்று கிண்டி ராஜ்பவனில் நடைபெற்றது. மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் நிகழ்ச்சியில் பங்குபெற்றார்.



நெல்லை மாவட்டம் சாத்தான் குளத்தில் குடிநீர் விநியோகத் திட்டத்திற்கு மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு பி. எச். பாண்டியன் அவர்கள் 18.5.85 அன்று அடிக்கல் நாட்டினார்.

சேலம் மாவட்டத்திலும் அதன் சுற்றுப்புறத்திலும் பற்கள் சுகாதார ஆய்வுக்காக மத்திய அரசு அளித்துள்ள ரூ 3. லட்சத்து 16 ஆயிரத்து 500 ரூபாய்க்குரிய காசோலையை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச் வி. ஹண்டே அவர்கள், சென்னை பல்மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் பி.பி. ராஜனிடம் வழங்கினார்.



# முதல்வரின் ஜப்பான் பயணம்

தமிழக அரசின் 'பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் நிலக்கரி இறக்குமதி செய்வதற்கென ஜப்பான் நாட்டிலுள்ள 'ஹிடாச்சி' நிறுவனத்திலிருந்து ரூ. 24.5 கோடிக்குக் கப்பல் ஒன்றை வாங்கவிருக்கிறது.

இதற்கென மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் (26-7-85) ஜப்பான் நாட்டுக்குப் பயணமானார்.

ஆகஸ்டு மாதம் 2-ஆம் நாளன்று, தமிழ்நாடு அரசு வாங்கவிருக்கும் கப்பல் ஒப்படைப்பு நிகழ்ச்சி ஜப்பானில் உள்ள ஒசாகா துறைமுகம் அருகே நடைபெறவிருக்கிறது. அந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அக்கப்பலைப் பெற்றுக் கொள்வார்.

சென்னையிலிருந்து டில்லி வழியே ஜப்பான் செல்லும் மாண்புமிகு முதல்வர் அவர்களுடன், அவரது துணைவியார் திருமதி ஜானகி அம்மையார், மாண்புமிகு மின்துறை அமைச்சர். திரு எஸ். இராமச்சந்திரன், அவரது துணைவியார் திருமதி சாந்தி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு க. முத்துசாமி அவரது துணைவியார் திருமதி ஜெயலட்சுமி மாண்புமிகு முதல்வர் அவர்களின் தனி மருத்துவர் திரு பி.ஆர். சுப்பிரமணியம், நரம்பியல் மருத்துவ நிபுணர் டாக்டர் நரேந்திரன், மாண்புமிகு முதல்வர் அவர்களின் துணைச் செயலாளர் திரு பிச்சாண்டி ஆகியோர் உட்பட பதின்மூன்று பேர் உடன் சென்றனர்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், பல்லாயிரக்கணக்கான தொண்டர்களும், தாய்மார்களும் அதிகாலை 3 மணி முதலே விமான நிலையத்தில் கூடியிருந்தனர். கதிர்வரும் நேரத்தில்- அதாவது சரியாக 5-30-க்கெல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் விமான நிலையத்திற்கு வந்து சேர்ந்தார்.



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2016
குரோதன - ஆடி 17
மலர் : 16 இதழ் : 3
1-8-1985

அவரை வரவேற்கவும் வழியனுப்பி வைக்கவுமெனச் சர்வதேச விமானங்கள் வந்து செல்லும் பழைய விமான நிலையத்தின் கிழக்குப் பகுதியில் மிகச் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இல்லத்திலிருந்து மாண்புமிகு முதல்வர் அவர்களும் அவர்தம் துணைவியாரும் காரில் அங்கு வந்து இறங்கியதுமே - 'பொன்மனச் செம்மல் வாழ்க''—''புரட்சித் தலைவர் வாழ்க'' ''முப்பிறவி கண்ட முதல்வர் வாழ்க''''மக்கள் திலகம் வாழ்க'' என்றெல்லாம் பலவாறான வாழ்த்து முழக்கங்கள் கூடியிருந்தோரால் மண்ணதிர எழுப்பப்பட்டன.

அவர்களை நோக்கிச் சென்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவர்களது வாழ்த்துக்கு நன்றி தெரிவித்து விட்டு விமான நிலையத்தினுள் அடி வைத்தார்.

இலவசச் சத்துணவு உண்ணும் குழந்தைகள் சிலர் முதன்முதல் முத்துநகை பொங்க, சித்தம் களித்து மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மாலை அணிவித்து வணங்கினர்.

பின்னர் - அரசு தலைமைச் செயலாளர் திரு. டி. வி. அந்தோணி இ.ஆ.ப., அவர்கள் மாலையணிவித்தார்.

அதைத் தொடர்ந்து வரிசையுற நின்றிருந்த மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு பி.எச். பாண்டியன், துணைத் தலைவர் திரு வி.பி. பாலசுப்பிரமணியம், மாண்புமிகு மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி. துணைத் தலைவர் திரு ஜி. சுவாமிநாதன், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் நாடாளுமன்ற—சட்டப் பேரவை-மேலவை உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மாத்யூ, அனைத்திந்திய அண்ணா தி.மு. கழகப் பொதுச் செயலாளர் திரு எஸ். இராகவானந்தம், துணைப் பொதுச் செயலாளர் திரு எஸ். ஆர். இராதா, பொருளாளர் திரு செ.மாதவன் ஆகியோரும்—தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. பழனியாண்டி, திரு. எம்.பி. சுப்பிரமணியம், மற்றும் அக்கட்சி மேலவை உறுப்பினர் திரு ஏ. ஜே. தாஸ், திரு டி.பி. ஏழுமலை ஆகியோரும், அரசு உயர் அதிகாரிகளும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு ஏராளமான மாலைகளும், சால்வைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவித்தார்கள்.

மேதகு தமிழக ஆளுநர் சார்பில் அவரது பாதுகாப்பு அதிகாரி கேப்டன் திரு எம். எம். ஷா, மலர்ச்செண்டு ஒன்றினை வழங்கினார்.

எல்லோரிடமும் விடைபெற்றுக்கொண்டு 5-50க்கு விமான நிலையத்தினுள் நிறுத்தப்பட்டிருந்த தமது டி.எம்.க்யு 4777 'ஆப்பிள் கிரீன் வண்ணக் காரில் தமது துணைவியாருடன் அமர்ந்தார் மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

'தொட்டி நீலத்தில் சுண்ணாம்பு கலந்த கலப்பென இருள் தன் கட்டுக் குலையும் அந்த வேளையில் 'Follow me' என்று பின்னால் விளக்கொளியால் எழுதப்பட்ட விமான நிலைய 'வேன்' ஒன்று, புதிதாய் அமைக்கப்பட்ட உள்நாட்டு விமான நிலையத்திற்கு இந்தக் காரை வழிகாட்டி அழைத்துச் சென்றது.

டில்லி செல்லும் விமானத்தில் மற்றவர்களெல்லாம் முன்



கூட்டியே ஏறி அமர்ந்திருக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏறி நின்று கையசைத்து எல்லோரிடமும் இளநகை பூக்க விடை பெற்றார்.



## டில்லியில்....

சென்னையை விட்டு காலை 6.10க்குப் புறப்பட்ட அந்த விமானம் - 9-55க்கு டில்லி போய்ச் சேர்ந்தது.

தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டில் பங்கேற்க அங்கு சென்றிருந்த மாண்புமிகு தொழிலாளர் நலத்துறைஅமைச்சர் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி, நாடாளுமன்றத் துணைச் சபாநாயகர் திரு தம்பிதுரை, நாடாளுமன்ற அனைத்திந்திய அண்ணா தி.மு.க. குழுத் தலைவர் திரு இரா. மோகனரங்கம், மற்றும் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் - தொண்டர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களையும் மற்றவர்களையும் விமான நிலையத்தில் மகிழ்ந்து வரவேற்றார்கள்.

அங்கிருந்து மாண்புமிகு முதல்வர் அவர்களும் மற்றோரும் 'தமிழ்நாடு இல்லம்' சென்று தங்கினர்.

அகில இந்திய காங்கிரஸ் கட்சிப் பொதுச் செயலாளர் திரு ஜி.கருப்பையா மூப்பனார் அவர்கள், அங்குவந்து மாண்புமிகு முதல்வர் அவர்களின் பயணம் எல்லா வகையிலும் வெற்றிகரமாக அமைய வாழ்த்துத் தெரிவித்தார்.

அன்று (26-7-85) மாலை—டில்லியில் மாண்புமிகு இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன், மத்திய அரசின் கொள்கை வகுப்புக் குழுத் தலைவர் திரு. ஜி. பாாத்தசாரதி ஆகியோரையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சந்தித்துப் பேசினார்.

வெள்ளிக்கிழமை இரவு ஒன்பது மணியளவில் டில்லி விமான நிலையத்திலிருந்து மாண்புமிகு முதல்வர் அவர்களும் மற்றோரும் ஜப்பான், நாட்டின் தலைநகரான டோக்கியோவுக்குப் பயணம் ஆயினர்.

## ஜப்பானில் :

இந்திய நேரப்படி அவர்கள் சனிக்கிழமை பகல் ஒரு மணியளவில் டோக்கியோவைச் சென்றடைந்தார்கள். ஜப்பான் வாழ் தமிழர்களும் இந்தியத் தூதரக அதிகாரிகளும், ஜப்பானிய அதிகாரிகளும் விமான நிலையத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களையும் மற்றவர்களையும் அன்போடு வரவேற்றார்கள்.

டோக்கியோவில் உள்ள ஒட்டோவா ஓட்டலில் மாண்புமிகு முதல்வர் முதலானோர் சென்று தங்கினர்.

ஜப்பான் நாட்டில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் 10நாட்கள் தங்கியிருப்பார். அப்போது, அங்குள்ள நரம்பியல் நிபுணர் டாக்டர் கானூ அவரது உடல் நலத்தைப் பரிசோதிப்பார்.

ஜப்பான் பல்கலைக் கழக மருத்துவமனைத் தலைமைப் பேராசிரியரான டாக்டர் கானூ, மத்திய ஜப்பானில் உள்ள நகோயா நகர் அருகே—புஜிதாக்குயென் என்ற ஊரில் வசித்து வருகிறார் - மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்அங்கு சென்றே டாக்டர் கானூவைச் சந்திக்கவிருக்கிறார்.

## முதல்வர் பொறுப்புகள்..

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகம் திரும்பும்வரை-அவர் வகித்து வந்த பல்வேறு துறை பொறுப்புகளை மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி, மாண்புமிகு செய்தி - அறநிலைத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் ஆகியோர் ஏற்றுப் பணியாற்றுவார்கள்.

பொது நிர்வாகம், ஐ.ஏ.எஸ். மற்றும் அனைத்திந்திய சர்வீஸ்கள் ஆகிய துறைகளின் பொறுப்பை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கூடுதலாக வகிப்பார்.

மதுவிலக்கு, எக்சைஸ், பாஸ்போர்ட் வழங்கல், மொலாசஸ் விநியோகம், தோல் பொருள் ஆய்வு ஆகிய துறைகளின் பொறுப்பை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கூடுதலாக வகிப்பார்.

காவல் துறை, லஞ்ச ஒழிப்பு, மாவட்டவருவாய் அலுவலர்கள், மாவட்டத் துணை ஆட்சியர், திட்டம் ஆகிய துறைகளின் பொறுப்பைக் கூடுதலாக மாண்புமிகு செய்தி-அறநிலைத் துறை அமைச்சர் அவர்கள் வகிப்பார்.

மாண்புமிகு மின் துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்களின் துறைப் பொறுப்புகள், மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு சி.பொன்னையன் அவர்களிடமும் - மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி அவர்களின் துறை பொறுப்புகள் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்களிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இச்செய்திகளை அரசு தலைமைச் செயலாளர் திரு டி.வி. அந்தோணி இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்தார்.

—இல. இராசேந்திரன்

# வண்டலூரில் உயிரியல் பூங்கா




முதன் முதலில் 140 ஏக்கர் பரப்பளவில் மூன்று கோடி ரூபாய் செலவில் அமைப்பதெனக் கருதப் பட்டு-பின்னர், பல்வேறு தனிச் சிறப்புகளோடு உருவாக்கக் கருதி 510 எக்டேர் பரப்பளவில் சுமார் 7 கோடி ரூபாய் செலவில் வண்டலூரில் அமையும் 'அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா' மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களால் (24-7-85) திறந்து வைக்கப் பட்டது.

இவ்விழாவிற்கு மாண்புமிகு செய்தி அறநிலையம் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் தலைமை தாங்கினார்.

சிங்கம், புலி, கரடி, குரங்கினம், நீர்யானை போன்ற 28 வகை மிருகங்கள் 205-ம், 61 வகைப் பறவைகள் 353ம், 8 வகை ஊர்வன வகைப் பிராணிகள் 32ம் இப்பூங்காவில் உள்ளன. கடந்த ஆண்டில் மட்டும் 168 வகைப் பிராணிகள் புதிதாகச் சேர்க்கப்பட்டன. உலகிலேயே மிகவும் அரிதானதாகவும் அழியக்கூடிய நிலையில் உள்ளதெனக் கருதப்படுபவைகளுமான - காண்டாமிருகம், மணிப்பூர் தாமின் மான், காட்டெருமை, சிங்கவால் குரங்கு, காட்டுநாய், ஆஸ்திரேலியப் பறவைகளான கருப்பு அன்னப் பறவை-வெள்ளைக்கிளி, ஐரோப்பிய கருப்புக் கழுகு, ஆப்பிரிக்கக் கொண்டைக் கொக்கு, பஞ்சவர்ணக் கிளி போன்ற மிருகங்களும் பறவைகளும்கூட இங்குள்ளன.

மலைச்சரிவில் இயற்கைத் தாய் எழில் பரப்பியிருக்கும் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா வனவளம் மிக்கதாயினும் புதிதாக-நிழல்தரும், மரங்களும், தீவன மரங்களும் பழமரங்களும் 51,776 நடப்பட்டுள்ளன. வேலிச் செடிகளும் பூங்காச் செடிகளும் ஒரு லட்சத்திற்குமேல் நடப்பட்டுள்ளன. தீவனப் புல் வகைகள் மட்டும் 9 எக்டேர் பரப்பளவில் நடப்பட்டுள்ளன.



இத்தனை சிறப்புடைய இந்த ஏற்றமிகு பூங்கா திறப்பு விழாவோடு புதிய வழித்தடங்களில் செல்லவிருக்கும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்துகள், புதுப்பிக்கப்பட்ட பல்லவன் போக்குவரத்துக்கழகப் பேருந்துகள் வெள்ளோட்ட விழாவும் இணைத்து நடத்தப் பட்டது.

இந்தப் பேருந்துகளையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இயக்கி வைத்தார்.

இவ்விழாவில் மாண்புமிகு முதல்வர், மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் ஆகியோருடன் மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. ஆனூர் ஜி.ஜெகதீசன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி மற்றும் அமைச்சர் பெருமக்களும் சட்டப் பேரவை மேலவை - நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

பேரறிஞர் அண்ணா படம் அலங்கரித்த-வண்ண விளக்குகள் ஒளிசிந்திய மேடைக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் வரும் போது மாணவ மாணவிகள் மலர் தூவி வரவேற்றனர். வேட்டு முழக்கம் விண்ணைப் பிளக்க, லட்சக்கணக்கில் திரண்டிருந்த மக்கள் வெள்ளத்தின் வாழ்த்து முழக்கம் அதையும் மிஞ்சுவதாயிருந்தது.





வனத்துறைத் தலைமை கன்சர்வேட்டர் திரு எஸ். கொண்டாஸ் வரவேற்புரையாற்றினார். அப்போது அவர், ''இந்த உயிரியல் பூங்கா அமைப்புப் பணி இவ்வளவு சிறப்பாக முழுமை பெற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆர்வமும் அக்கறையும்-மாண்புமிகு செய்தி அறநிலையம் மற்றும் வனத்துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலுமே காரணம்'' என்றார்.

செங்கை மாவட்ட அனைத்திந்திய அண்ணா தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் சார்பில் திரு. இரா. மோகனரங்கம், திரு. ஜெகத்ரட்சகன் ஆகியோர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு உலக உருண்டை நினைவுச் சின்னம் பரிசளித்தனர். அண்ணா உயிரியல் பூங்கா அமைந்துள்ள திருப்போரூர் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு வே. தமிழ்மணி வெள்ளி மயில் நினைவுச் சின்னம் வழங்கினார்.

அ.இ.அ.தி.மு.க. செயலாளர் திரு. முனிரத்தினம் மற்றும் செங்கற்பட்டு மாவட்ட சட்ட மன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பொது மக்களும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மற்றும் அமைச்சர்களுக்கும் ஏராளமான கைத்தறி ஆடைகளும் சால்வைகளும் மாலைகளும் அணிவித்து மகிழ்ந்தனர்.

அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவைத் திறந்து வைத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் சீருடை அணிந்த ஐந்து சிறுவர் சிறுமிகளுக்குப் பூங்கா நுழைவுச் சீட்டுகளை வழங்கி, விற்பனையைத் துவக்கி வைத்தார்.

அதைத் தொடர்ந்து - புதிய 95 பேருந்துகளின் இயக்கத்தையும் தொடங்கி வைத்தார். இப்பேருந்துகளில் சில, 'வீடியோ' கருவி உடையதாக இருந்தன.

இதன்பின், விழா நிகழ்ச்சிகள் தொடங்கின.

திரு. ஜெகத்ரட்சகன் எம்.பி., நாடாளுமன்ற அ.இ.அ.தி.மு. கழகக் குழுத் தலைவர் திரு. இரா. மோகனரங்கம் எம்.பி., சட்ட மன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திருமதி டி. யசோதா, குறளரசு திரு ஜெயபாரதி எம்.எல்.ஏ., ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு ஆனூர் ஜி. ஜெகதீசன் அவர்கள் தமது உரையில் செங்கற்பட்டு மாவட்ட மக்கள் சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுவதாகவும், மிகக் குறுகிய காலத்திலேயே செய்யப்பட்டதானாலும் விழா ஏற்பாடு செய்யக் காரணமான அனைவரையும் வாழ்த்துவதாகவும் தெரிவித்தார்.





மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி அவர்கள் பேசுகையில்— ''இந்தியாவிலேயே முதன்முறையாக 44 சொகுசு இருக்கைகள் கொண்ட ஏர்கண்டிஷன் பஸ் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் சார்பில் செயல்பட உள்ளது. நாம் முதன் முதலாக வாங்குவதால் எட்டரை இலட்சம் ரூபாய் பஸ்சை நமக்கு ஐந்து இலட்சம் ரூபாய்க்குத் தந்திருக்கிறார்கள். நடப்பு ஆண்டில் பழைய பஸ்களுக்குப் பதில் 350 புதிய பஸ்கள் விடப்படும்'' என்றார்.

விழாவிற்குத் தலைமை தாங்கிய மாண்புமிகு செய்தி — அற

நிலையத் துறை மற்றும் வனத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :

வரலாற்றிலேயே இடம்பெறத் தக்க சிறப்புமிகு நிகழ்ச்சியை இங்கே மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் நிகழ்த்தியிருக்கிறார்கள்.

1972-73-ல் இந்த உயிரியல் பூங்கா அமைக்கத் திட்'-மிடப் பட்ட போதிலும் நமது புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு தான் இதற்கு இறுதி வடிவம் தரப்பட்டது. கிழக்காசியா விலேயே சிறந்ததாக இதுஅமைய வேண்டும் என்று எண்ணி இதற் கென ஏழு கோடி ரூபாய் நிதி ஒதுக்கினார்கள். இதுவரை 4 கோடி ரூபாய் செலவிடப்பட் டுள்ளது. இன்னும் 3 கோடி ரூபாய் இதன் சிறப்புக்கெனச் செலவிடப்பட்டு, இப்பூங்காவின் முதற்கட்டப்பணிகள் இன்னும் இரண்டாண்டில் முடிவடையும்.

இப்போது கிழக்காசியா விலேயே சிறந்ததாக விளங்கும் இப்பூங்கா—விரைவில் ஆசியா விலேயே சிறந்ததாகத் திகழும்.

மாண்புமிகு முதல்வர்அவர்கள் நலமாக இருந்தால் எனக்கு மட்டுமல்ல தமிழ்நாட்டுக்கு, தென்னிந்தியாவுக்கு, இந்தியா வுக்கு வலிவாக இருக்கும் என்று இந்திராகாந்தி அம்மையார் அவர்நள் இங்கே நம் முதல்வர் அவர்களைக் காண வந்தபோது கூறிச் சென்றார். அம்மையாரின் அந்த வாழ்த்து இன்று பலித் திருக்கிறது விளங்கிக்கொண் டிருக்கிறது.

இந்த அரசு நல்வாழ்வுத் திட்டங்களையும் நிறைவேற்று கிறதே தவிர வளர்ச்சித் திட் 'டங்கள் எங்கே என்கிறார்கள் சிலர். இந்த அரசு நல்வாழ்வுத் திட்டங்களையும் நிறைவேற்றும்; இப்படிப்பட்ட வளர்ச்சித் திட் டங்களையும் நிறைவேற்றும்.

—இவ்வாறு செய்தி அறநிலை யம் மற்றும் வனத்துறைஅமைச் சர் அவர்கள் உரையாற்றினார்.

இவ்விழாவை முன்னிட்டு, மாண்புமிகு முதல்வர் அவர் களின் இல்லம் உள்ள இராமா வரத்திலிருந்து வண்டலூர் வரை சாலையின் இருமருங்கும் கொடிகள்,தோரணங்கள் கட்டப் பட்டு ஒலிபெருக்கிகள் இசையை முழக்கிக் கொண்டிருந்தன.

தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகம் மூலம் இப்பூங்காவில் 1985 மார்ச் முடிய ரூ. 71 இலட்சம் மதிப்புள்ள 24 பணிகள் முழுமையாகச் செய்து முடிக்கப் பட்டுள்ளன. நடப்பு ஆண்டில், ரூ. 57 இலட்சம் மதிப்பீட்டில் நுழைவு வாயில் அமைக்கும் பணி உட்பட 8 பணிகள் முறைப்படுத் தப்பட்டுள்ளன.

நாதசுர இசை நிகழ்ச்சியோடு ஆரம்பமான விழாத் தொடக்கத் தில், மாண்புமிகு முதல்வர் அவர் களுக்கும் மற்றும் அமைச்சர், பெருமக்களுக்கும் - வனத்துறை தலைமை கன்சர்வேட்டர் திரு எஸ். கொண்டாஸ், செங்கற் பட்டு மாவட்ட ஆட்சித் தலை வர் திரு மாத்யூ இ.ஆ.ப., ஆகி யோர் மாலையணிவித்தார்கள்.

இவ்விழாவில் மாண்புமிகு முதல்வர்அவர்கள் ஆண்குழந்தை ஒன்றுக்கு 'சேரன் செங்குட்டுவன் என்றும் பெண் குழந்தையொன் றுக்கு 'சத்யா' என்றும் பெயர் சூட்டினார்.

விழா முடிவில் - அறிஞர் அண்ணா உயிரியல் பூங்க இயக்கு நர் திரு எஸ். சுப்பராயலு நன்றி கூறினார்.

அதன் பின் கங்கை அமரன் குழுவினர் இசை நிகழ்ச்சி நடை பெற்றது.

—இந்திரன்



இரண்டாவது கட்டப் பணி களைச் செயல்படுத்துவதென 2,500 எக்டர் நிலம் அரசால் கையகப் படுத்தப்பட்டுள்ளது. இங்கே விலங்குகள் சுதந்திரமாகச் சுற்றித் திரியவும், அவற்றைக் கூண்டுக்குள்ளேயிருந்து மக்கள் வேடிக்கை பார்க்கவுமான புதிய நிலைமை அந்த இரண்டாவது கட்டப் பணியிலே நிறைவேற்றப் படும். இப்போது ஆப்பிரிக்கா வில்தான் இத்தகைய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உயிர்களிடத்திலே அளவற்ற அன்பு கொண்டிருந்தவர் அறிஞர் அண்ணா அவர்கள் என்பதால், அவர்களுடைய பெயரே நமது புரட்சித் தலைவர் அவர்களின் ஆணைப்படி இப்பூங்காவுக்கு இடப்பட்டுள்ளது.

## முதல் அட்டை

சென்னைக்கு 5-7-85ல் வருகை புரிந்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் தம்பதியருடன் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். தம்பதியர்.

## நான்காம் அட்டை

பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளான 5-7-85ல் சென்னை அண்ணா சாலையில் உள்ள காமராஜர் திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.





இலங்கைச் சிறையில் மரணமடைந்த விடுதலைப் போராட்ட வீரர்களான குட்டிமணி, தங்கதுரை ஆகியோரின் இரண்டாம் ஆண்டு நினைவு நாளன்று சென்னையில் அவர்களது குடும்பங்கள் வசித்துவரும் இல்லங்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களும் மற்றும் அமைச்சர் களும் (25-7-85) சென்று, அவ்விடுதலை வீரர்களின் திருவுருவப் படங்களுக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.



# மக்கள் தலைவர்

**மேதகு குடியரசுத் துணைத் தலைவர்**

## திரு. ஆர். வெங்கட்ராமன்

நேருவுக்குப் பின்னர் இந்தியாவில் குழப்பம் மிகுந்து, ஜனநாயகம் அழிந்துவிடும் என்ற ஒரு கருத்து, உலகின் பல பாகங்களிலும் பரவியிருந்தது. இந்தியாவின் நெருங்கிய நண்பர்கள் எனக் கருதப்படும் தலைவர்களிடம் கூட இந்தச் சந்தேகம் இருந்தது. அந்தச் சந்தேகத்தையெல்லாம் போக்கி, நெருக்கடி நேரத்திலும் சிதறாமல், தளராமல் எழுந்து நிற்கும் சக்தி வாய்ந்த நாடு பாரதம் என்பதை, அமைதியான முறையில், ஏகமனதாக ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்துக் காட்டினோம். அப்படி ஓர் அதிசயத்தை நிகழ்த்திக் காட்டியவர் தலைவர் காமராஜ் அவர்கள் தான் என்பது உலகறிந்த உண்மை. இந்த நாட்டில் ஜனநாயகம் தடை பெறாமல் தொடர்ந்து நடைபெறும் என்பதை உலகத்துக்கு எடுத்துக் காட்டினார் காமராஜ்.

ரஷ்யப் பிரதமர் கோஸிஜின் அவர்கள், டெல்லியில் காமராஜ் அவர்களைச் சந்தித்துத் தம் நாட்டுக்கு வருமாறு அழைத்தபோது காமராஜ் அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டார்.

மாஸ்கோ செல்வதற்கு முதல் நாள் டெல்லியில் ஒரு விருந்து ஏற்பாடாகி இருந்தது. விருந்தளித்தவர் ரஷ்ய நாட்டின் இந்தியப் பிரதிநிதி. அதற்கு, யூகோஸ்லேவியா, பல்கேரியா, ஹங்கேரி, செக்கோஸ்லேவேகியா, கிழக்கு ஜெர்மனி ஆகிய நாட்டுப் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டிருந்தார்கள்.

அந்த விருந்தில், ரஷ்யப் பிரதிநிதி என்னிடம், ''காமராஜ் அவர்களுக்கு விசேஷ விருப்பம் ஏதாவது உண்டா? குறிப்பிட்ட ''பொழுது போக்கு'' ஏதாவதில் அவர் அக்கறை கொண்டுள்ளாரா? ரஷ்யாவில் நாங்கள் ஏற்பாடு செய்துள்ளதைத் தவிர, அவர் ஏதாவது காண விரும்புகிறாரா'' என்று கேட்டார்.

நான் யோசித்துப் பார்த்தேன். காமராஜ் அவர்களுக்கு என்ன ஹாபி? என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. ''அவர் பொழுதெல்லாம் மக்களைப் பற்றிய சிந்தனையில்தான் போகிறது. எனவே மக்களின் நல் வாழ்வு தான் அவரது பொழுதுபோக்கு'' என்றேன். ரஷ்யப் பிரதிநிதி என் பதிலைக் கேட்டு வியப்படைந்தார்.



துஷான்பேயில் உள்ள ஒரு கூட்டுப் பண்ணைக்கு விஜயம் செய்தார் காமராஜ்.

பண்ணையைப் பார்வையிட்ட பிறகு விவசாயிகள் குடியிருப்புக்குச் சென்றார். விவசாயிகளைக் கண்டவுடன் காமராஜ் அவர்களுக்கு உற்சாகம் பிறந்து விட்டது. அவர்களுக்கும் இவரைக் கண்டதில் பெருமகிழ்ச்சி. அந்த மக்களுடன் அமர்ந்து வெகு நேரம் பல விஷயங்களைப் பற்றிப் பேசினார், காமராஜ். அவர்களுடைய க்ஷேம லாபங்களைப்பற்றியெல்லாம் விசாரித்தார்.

விவசாயிகளின் குழந்தைகள் காமராஜைச் சுற்றி நின்றனர். தங்கள் வீட்டில் தயார் செய்திருந்த உணவுப் பண்டங்களை அவருக்குக் கொடுத்துச் சாப்பிடும்படி உபசரித்தனர். காமராஜ் மகிழ்ச்சியுடன் அந்தச் சிற்றுண்டியைச் சாப்பிட்டார். அவர்களுடன் அமர்ந்து கொண்டு ஏதோ அந்தக் குடும்பத்தையே சேர்ந்தவர் போல் உரையாடினார். அவர்கள் வாழ்க்கை நிலை, சம்பளம், வயோதிகப் பென்ஷன் முதலியவை பற்றிக் கேள்விமேல் கேள்வி போட்டுக்கொண்டிருந்தார்.

**'சோஷலிச நாடுகளில் மக்கள் தலைவர்' என்னும் நூலிலிருந்து.**

அங்கிருந்த சில தாய்மார்களைப் பார்த்து, நம் ஊர்ப் பெண்மணிகளை விசாரிப்பது போல் ''என்னம்மா சௌக்கியமா?'' என்று வினவினார் காமராஜ். குழந்தைகளையெல்லாம் கன்னத்தில் தட்டி, ''வா, வா'' என்று அழைத்துத் தன்னுடன் அணைத்துக்கொண்டார்.

அந்தப் பண்ணைவாசிகளுக்கு, இந்திய நாட்டிலிருந்து வந்திருக்கும் பெரும் தலைவர் என்ற எண்ணம் மறந்து, நம் பண்ணையைச் சேர்ந்த ஒரு பெரியவரிடம் தான் நாம் பேசிக்கொண்டிருக்கிறோம் என்ற உணர்வை ஏற்படுத்தி விட்டார் காமராஜ்.

**மேதகு குடியரசுத் துணைத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள், அருள்மிகு பட்டுக்கோட்டை நாடியம்மன் ஆலயத் திருப்பணியைத் தொடங்கி வைத்தார். இவ்விழாவுக்கு மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் தலைமை தாங்கினார் (20.7.85).**




# பெருகிவரும் பால் வளம்

பால் உற்பத்தி தமிழகத்திலுள்ள விவசாயப் பெரு மக்களுக்கு மரபு வழியாகவே ஒரு துணைமை வாழ்க்கைத் தொழிலாக இருந்து வந்துள்ளது.

பால்பண்ணை வளர்ச்சித் துறை இம்மாநிலத்தில் கிராம அளவிலும் மாவட்ட அளவிலும் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து நிர்வகித்து வருவதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தில் கூறப்பட்டுள்ள சட்டரீதியான நடவடிக்கைகளையும் இத்துறை கவனித்து வருகிறது.

பால்பண்ணை வளர்ச்சித் துறை கூட்டுறவு சங்கங்களை அமைத்து, பதிவு செய்து, அவைகளை மேற்பார்வை செய்து வருகிறது. பால்பெருக்குத் திட்டத்தில் சேராத தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய ஆறு மாவட்டங்களில் இத்துறை செயல்பட்டு வருகிறது. பால் பெருக்குத் திட்டத்தில் சேர்ந்த செங்கல்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர், பெரியார், நீலகிரி மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் பால் விரிவாக்கப்பணிகளை தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் கவனித்து வருகிறது.

தமிழ்நாட்டில் 5,356 ஆரம்பப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் நிறுவப்பட்டு செயலாற்றி வருகின்றன. இவற்றில் 1984-85ஆம் ஆண்டில் புதிதாக அமைக்கப்பட்ட 584 சங்கங்களும் இதில் அடங்கும். 1985-86ம் ஆண்டில் புதிதாக 400 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**பால்சேகரிப்புக் குழு:** பால் பெருக்குத் திட்டத்தில்'' சேராத தஞ்சை, திருச்சிராப்பள்ளி புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி, மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் பால் உற்பத்தியினைப் பெருக்குவதற்கு, 'பால்சேகரிப்புக் குழுக்கள்' அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. எஞ்சியுள்ள ஒன்பது மாவட்டங்களில் பால் பெருக்குத் திட்டம் 2-ன் கீழ் உள்ள நிதியினைப் பயன்படுத்தி, பால்பெருக்கு நடவடிக்கைகள் கவனிக்கப்பட்டு வருகின்றன. பால்பெருக்குத் திட்டத்தில் சேராத ஆறு மாவட்டங்களில் திருச்சி, தஞ்சாவூர், மற்றும் புதுக்கோட்டை ஆகியவை 1-4-1985 முதல் பால்பெருக்குத் திட்டம் 2ன் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், பால் பெருக்குத் திட்ட மாவட்டங்களுக்கு 11 பால் சேகரிப்புக் குழுக்கள் அமைப்பதற்கு இசைவு அளிக்கப்பட்டுள்ளது. இக்குழுக்கள் இது வரை 656 பால் உற்பத்தியாளர்கள், கூட்டுறவுச் சங்கங்களை 'ஆனந்த் முறையில்' அமைத்துள்ளனர். மேலும் 144 சங்கங்களை 1984-85 ஆண்டு இறுதிக்குள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**(அ) கூட்டுறவு சங்கங்களுக்கான பால் பரிசோதிக்கும் கருவிகள், இரசாயனப் பொருட்கள், பதிவேடுகள் முதலியவைகளை சங்கங்களுக்கு இலவசமாக வழங்க ஒவ்வொரு சங்கத்திற்கும் ரூ. 1,500 மானியமாக வழங்கப்பட்**டுள்ளது. 1983-84 ஆம் ஆண்டில் இதற்காக ரூ.5.25 இலட்சம் 350 சங்கங்களுக்கு வழங்க அரசு அனுமதியளித்துள்ளது. 1984-85 ஆம் ஆண்டில் இந்தப்பணியினை முன்னிட்டு 200 சங்கங்களுக்கு ரூ.3 இலட்சம் வழங்க அரசு அனுமதியளித்துள்ளது.

1983-84 ஆம் ஆண்டில் பால் கூட்டுறவு சங்கங்களுக்கு பால் குவளைகள், பால் கருவிகள், குளிர்பதனங்கள் மற்றும் போக்குவரத்து வாகனங்கள் வாங்கவும், ஆய்வுக்கூடம் மற்றும் கிடங்குகள் கட்டவும் ரூ.4.80 இலட்சம் கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது. 1984-85 ஆம் ஆண்டில் இதே போன்று கடனுதவியளிக்க ரூ.5 இலட்சம் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

**மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்:**

மலைப்பகுதிகளில் பால் பண்ணை தொழில்வளம் பெருக அரசு கடன் உதவி மற்றும் பங்கு மூலதன உதவி முதலியன வழங்கிவருகிறது. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், நாள் ஒன்றுக்கு 50,000 லிட்டர் பால் கொள்ளவு கொண்ட ஒரு நவீன பாலாடைக்கட்டி தொழிற்சாலை (Cheese cum Diary Complex) உதகமண்டலத்தில் ரூ. 300 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டு வருகிறது. இதற்கான கட்டுமானப்பணிகளில் 80 சதவிகிதம் முடிவடைந்துள்ளது. இயந்திரத்தளவாடங்கள் நிறுவுவதற்கான பணிகள் முன்னேறி வருகின்றன.

**வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்:** இத்திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள காரைக்குடியில்



ரூ.150இலட்சம் திட்ட மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 50,000 லிட்டர் பால் கையாளும் திறனுடைய பால்பண்ணை ஒன்று நிறுவப்பட்டு வருகிறது. கட்டடம் கட்டும் பணி, இயந்திரங்களை நிறுவும் பணி அனைத்தும் தேசிய பால்பண்ணை வளர்ச்சி வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம். தஞ்சாவூர் மாவட்டம் மயிலாடுதுறையில் நாளொன்றுக்கு 10,000 லிட்டர் பால் கையாளும் திறனுடைய ஒரு குளிரூட்டும் நிலையம் ரூ. 19 இலட்சம் மதிப்பீட்டில் தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தினரால் நிறுவுவதற்கு அரசு இசைவளித்துள்ளது. மேலும் இப்பணியின் பொருட்டு 50 சதவிகித மானியமாக ரூ. 9.5 இலட்சம் வழங்குவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

மாவட்டங்களில் பால் பெருக்குத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் திருச்சி, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை போன்ற மூன்று மாவட்டங்களில் பால் பெருக்குத் திட்டம் விரிவுபடுத்துவதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது. தேசிய பால்பெருக்கு வாரியம், பால் பெருக்குத் திட்டம்- சென்னை, திருச்சி, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் முறையே ரூ.620 இலட்சம், ரூ. 684 இலட்சம், ரூ. 105 இலட்சம் செலவில் விரிவு படுத்த இசைவளித்துள்ளனர். இத்திட்டம் 1-4-1985 முதல் செயல்படுத்தப்படுகிறது.

கேற்ப ஒரு புதிய கால்நடை தீவன ஆலை ஒரு நாளைக்கு 100 டன் தீவன உற்பத்தி செய்கின்ற வகையில் மதுரையில் துவங்கப்படும்.

பால் பெருக்குத் திட்டம்:

1981ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் தேதியோடு முடிவு பெற்றது. இத்திட்டம் சுமார் ரூ. 15.48 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. 1978ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஆரம்பித்த பால் பெருக்குத் திட்டம்-1-ன் கீழ், அம்பத்தூரில் நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட ஒரு பால் பண்ணை நிறுவப்பட்டுள்ளது. ஈரோட்டில் உற்பத்தியை சமப்படுத்தும் பால் பண்ணை (Feeder balancing diary) ஒன்றும், சங்கரான்டன் பாளையத்திலும் மற்றும் சத்தியமங்கலத்திலும் 2 குளிர்பதன நிலையங்களும் ,1 கால்நடை தீவன நிலையமும் அமைக்கப்பட்டுள்ளன. வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஆம்பூரிலும்,தென் ஆர்க்காடு மாவட்டத்தில் விழுப்புரம் மற்றும் சின்ன சேலத்திலும் குளிர்பதன நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. மதுரை பால் பண்ணையில் நாளொன்றுக்கு 10 டன் உற்பத்தித் திறனுள்ள பால் பொடி உற்பத்தி செய்யும் ஆலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகமண்டலத்தில் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கால்நடைகளைக் கொண்டு தரமான விந்துகளை வழங்க ஒரு நியுக்லியஸ் ஜெர்ஸி பண்ணை நிறுவப்பட்டுள்ளது.

சென்னை நகரில் 1984-ல் வாடிக்கையாளர்களுக்கு நாளொன்றுக்கு சராசரியாக4.25 இலட்சம் லிட்டர் பால் விநியோகிக்கப்பட்டது. இதனை 1985-ல் நாளொன்றுக்கு 4.75 இலட்சம் லிட்டர் அளவிற்கு உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. 491 பால் சாவடிகள், 27 தானியங்கி விற்பனை இயந்திரங்கள் மற்றும் 15 பைபர் பிளாஸ்டிக் தொட்டிகள் மூலமாக சென்னை மாநகரில் நுகர்வோர்கள் பால் பெறுகின்றனர். தானியங்கி விற்பனை இயந்திரங்களின் எண்ணிக்கை 3 ஆண்டுகளில் 100 ஆக அதிகரிக்கப்படும். இதில் 23 விரைவில் நிறுவப்படும். நுகர்வோரினை, பால் விற்பனையில் ஈடுபடுத்தும் பொருட்டும், பால் விநியோகிக்கும் முறையினைச் செயல்படுத்தும் பொருட்டும் 31 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.



1983-84ஆம் ஆண்டில் பால் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள ஆதி திராவிடர் அங்கத்தினர்களுக்கு மானியமாக வழங்க ஆதி திராவிடர் நல வரவு-செலவு திட்டத்தின் கீழ் ரூ. 30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும் 1984-85ஆம் ஆண்டில் பால் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள 3600 ஆதி திராவிடர் அங்கத்தினர்களுக்கு. கறவை மாடுகளின் விலையில் 33 சதவிகிதம் மானியமாக வழங்க ரூ. 30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 16 சதவிகிதத் தொகையான ரூ. 15 இலட்சம், தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழக நிதியிலிருந்து அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள ...பதினைந்து மாவட்டங்களில் ஒன்பது

மாதவரம் பால் பண்ணை மற்றும் ஆம்பூரிலுள்ள கால்நடை தீவன ஆலைகள் ஒவ்வொன்றும் தற்போது மாதமொன்றுக்கு சராசரி 1,490 டன் கால்நடை தீவனம் உற்பத்தி செய்கின்றன.

ஈரோட்டில் ஒரு கால்நடைத் தீவன ஆலை,பெரியார் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் கீழ் இயங்கி வருகிறது. இந்த ஆலையில் தயாராகும் தீவனம் சேலம், பெரியார், கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் வழங்கப்படுகிறது. இதைத்தவிர தென் மாவட்டங்களின் தேவைக்





# பிற உயிர் காத்த பெருந்தலைவர்

மு. நமசிவாயம்

காமராஜ்! நினைத்தாலே நெஞ்சமெல்லாம் சிலிர்க்கிறது. இதயம் நிறைகிறது.

அதிகம் படிக்காத காமராஜ், அனைவரையும் படிக்கச் செய்தார். அனுபவ அறிவும் சமய சஞ்சீவியாகச்செயல்படும்பண்பும் பாங்கும் நிரம்பப் பெற்றவர் அவர்.

தருணத்திற்கு ஏற்ற தலைமைப் பண்பு அவரிடம் இயல்பாகவே குடிகொண்டு இருந்தது.

இதோ ஒரு காட்சி! அவரது வாழ்க்கையில் ஓர் நிகழ்ச்சி!

என்ன பயங்கரம்?

ஆண்டு 1936, மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த கள்ளிக்குடி! காங்கிரஸ் அரசியல் மாநாடு நடக்கிறது.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் (1936) எஸ். சத்தியமூர்த்தி,செயலாளர் கே.காமராஜ் மற்றும் தலைவர்கள் பலரும் அரசியல் மாநாட்டில் கலந்து கொள்ள கள்ளிக்குடிக்குப் பிற்பகலிலேயே வந்து விட்டனர்.

இரவு ஏழு மணிக்குத்தான் மாநாடு ஆரம்பம். மாலையில் ஊரைச் சுற்றிப் பார்த்துவிட்டு, ஊர்ப்புறத்தே, வயல்வெளிப் பக்கம் உலவி வருகின்றனர், தலைவர்கள்!

வயல் வெளிகளில், பெண்கள் களை பறித்துக் கொண்டே, பாடிய தெம்மாங்குப் பாட்டின் இன்பநாதம், காற்றில் மிதக்கிறது. காதுகளில் வந்து மோதிக் களிப்பூட்டுகின்றது.

ஒற்றையடிப்பாதை வழியே, சத்தியமூர்த்தி முன் செல்ல, மற்றவர்கள் பின் தொடருகின்றனர்.

பாதையோரத்தில், மரக்கிளையொன்றில் தொங்கும் தூளியை (தொட்டில்) காற்று மெல்ல அசைத்துத் தாலாட்டுகிறது. அதனுள் படுத்திருக்கும், சின்னப் பாப்பாவுக்கு நிம்மதியான தூக்கம்.

முன்னே சென்ற தலைவர் சத்தியமூர்த்தியின் நடை தடைப் படுகிறதே? கைத்தடியை உயர்த்தி ஓங்குகிறாரே?

ஏன், எதற்காக?

என்ன பயங்கரம்!

தூளிக்கயிற்றில், பாம்பு ஒன்று கீழே இறங்கி வருகிறதே! ஐயோ! குழந்தையின் கதி?

பாம்பை அடிக்க ஓங்கிய கைத்தடியை வீசாமல், தலைவர் சத்தியமூர்த்தி தயங்குவது ஏன்?

பாம்பை அடித்தால்...! தூளிக்குள்ளேயே, அது தவறி விழுந்து விட்டால்.....?

விநாடிகள் பறந்தோடுகின்றன. பாம்பு, கீழே இறங்கும் வேகம்..! படு பயங்கரச் சூழ்நிலை, சித்தம் குழம்புகிறது. சிலையென வாயடைத்துச் செயலிழந்து நிற்கின்றனர் எல்லோரும்!

தலைவருக்குப் பின்னால் வந்து கொண்டு இருக்கும் செயலாளர் காமராஜ், முன்னால் வருகிறார். கைத்தடியைக் கைப்பற்றுகிறார்.

தூளியைக் கட்டியிருக்கும் கயிற்றுக்கும், கயிற்றின் வழியே கீழே இறங்கி ஓடிவரும் பாம்புக்கும் இடையில், கயிற்றின் மீது, மெல்லப் பொருத்துகிறார், கைத்தடியை!

பாதை மாறுகிறது. பாம்பு, கைத்தடியில் ஊர்ந்து ஏறிச் சுருட்டிக் கொள்கிறது! அடுத்த கணம்! கைத்தடி எங்கோ போய்க் கீழே விழுகிறது! தூக்கி எறிகிறார் காமராஜ்.

பாம்பு விடுபட்டு ஓட்டம் எடுத்து, ஓடிப்பதுங்கி விடுகின்றது!

''அபாரம்! அபாரம்! அபாரம் காமராஜ்! அபாரம்!''

கட்டித் தழுவுகிறார். காமராஜின் செயல் திறனை மெச்சுகிறார். மகிழ்ச்சிக் குரல் எழுப்பிப் பாராட்டுகிறார், தலைவர் சத்தியமூர்த்தி!

இந்த மகிழ்ச்சி ஆரவாரத்தில் குழந்தையின் நிம்மதி குலைகிறது. தூக்கம் கலைகிறது. அழுகைக்குரல் ஓங்குகிறது.

கொல்லையில் களையெடுத்துக் கொண்டு இருப்பவர்கள் ஓடோடி வருகின்றனர்.

அழுகின்ற குழந்தையினை அள்ளியெடுத்து, அணைத்து, உச்சி மோந்து முத்தமிடும் தாயின் அதிர்ச்சி பெரியதா? மகிழ்ச்சி பெரியதா? மழலைக் குழந்தையின் பொக்கை வாய்ச் சிரிப்பு மகத்தானதா?

''ஐயா! நீங்க நல்ல இருக்கணும்'' என்று அகம் நிறைந்து முகம் மலர்ந்து வாழ்த்துகிறார் அந்த அன்னை!

பாம்பென்றால் படையும் நடுங்கும்;இது பழமொழி! ஆனால் பாம்பையும், தனது சமயோசித புத்தியால் ஆட்டிப் படைத்திடும் வல்லமை, காமராஜிடம் இயல்பாகவே அமைந்து விட்டது!

பாரவண்டி சாய்கிறது!

இராமநாதபுரம் மாவட்டம் அருப்புக்கோட்டைப் பகுதியில் முதலமைச்சர் காமராஜ் சுற்றுப் பயணம் செய்கிறார்.

ஒருநாள் ஒரு நிகழ்ச்சி முடிகிறது. அடுத்த நிகழ்ச்சிக்குக் காரில் சென்று கொண்டிருக்கிறார். ரயில்வே லெவல் கிராசிங் கேட் மூடப்பட்டு இருப்பதால், இடையில் சிறிது தாமதிக்க நேரிடுகிறது.

செங்குத்தான இடத்தில், லெவல்கிராசிங் அமைந்திருக்கிறது. கேட்டின் அருகில் சில கார்கள், அவற்றின் பின் இரட்டை மாட்டுப் பார வண்டி, அதற்குச் சற்று தூரத்தில், பின்னால் முதலமைச்சர் காமராஜ் பயணம் செய்த கார் நின்றுகொண்டு இருக்கின்றன.



ரயில் ஓடிவிட்டது. 'கேட்' கதவுகள் திறக்கப்படுகின்றன. தாமதித்த வாகனங்கள் முன்னால் நகருகின்றன.

'பாரவண்டி கொஞ்சம் போகட்டும்'' — முன்னால் மெல்ல நகரத் தொடங்கிய இரட்டை மாட்டு வண்டியைச் சுட்டிக் காட்டிக் கூறுகிறார், காமராஜ். முதல்வரது குறிப்பை உணர்ந்த காரோட்டி, சிறிது நேரம் பொறுத்தே, காரை ஓட்டத் தொடங்குகிறார்.

''லெவல்கிராசிங்'கை மாட்டு வண்டி எட்டித் தொடுகின்றது. காமராஜ் பயணம் செய்த காரும் அதனை நெருங்குகின்றது. மெல்ல ஊர்ந்து செல்கின்றது.

''தட! தட! ஓசை! வண்டி சாய்கிறதே!

சக்கரங்கள் பின்னால் உருளுகின்றனவே! பாரவண்டி சாய்கிறதே!

கண்ணிமைக்கும் நேரந்தான், சட்டென்று, காரைத் திறந்து, விரைந்தோடுகிறார் முதலமைச்சர் காமராஜ்!

சாயும் மாட்டு வண்டியைத் தோள் கொடுத்துத் தூக்கி நிமிர்த்துகிறார், முன்னால் உந்தித்தள்ளுகிறார். காரை நிறுத்தும்படி சைகை காட்டுகிறது ஒரு கை! விபத்து விலகுகிறது.

''வாங்கப்பா, ஓடி வாங்க! வண்டியை முன்னே தள்ளுங்க'' கூறுகிறார் காமராஜ்.

காரோட்டி, உடன் வந்திருக்கும் மெய்க்காப்பாளர், பின் தொடரும் பாதுகாப்புப் போலீசார் முதலிய பலரும் கை கொடுக்கின்றனர்.

பின்னால், சரிந்த வண்டி முன் னோக்கிப் பறக்கிறது.

''உம்...! செங்குத்தான பாதைல் முன்பாரம், பின்பாரம் பார்த்து, வண்டியை ஓட்டக் கூடாதா? என்ன ஆகியிருக்கும்? ஆளுங்க குதிச்சித் தப்பிச்சுக்கிடலாம். சரிவிலே வண்டி வேகமா உருண்டிருந்தா...? காளைங்களோட கதி என்னா ஆகியிருக்கும்! நல்லவேளை தப்பிச்சுதுங்க! சமயத்திலே கவனிச்சுட்டேன்! பார்த்து ஓட்டப்பா, வண்டியை!'' — முதல்வர் காமராஜின் அன்புக் கண்டிப்பு.

மாட்டுவண்டிக்கு நேரிட இருந்த விபத்து குறித்து திகைப்பு, இமைப்பொழுதில் அதனைத் தவிர்த்த முதலமைச்சரின் துடிப்பு-தீரம்-செயல்திறன் சுற்றிச் சூழ்ந்திருந்த எங்களிடம் ஒரே பிரமிப்பு!

இது மட்டுமா?

அகில இந்தியப்பெருந்தலைவராக விளங்கிய நேரம்!

அன்று, 7-7-1965. சென்னையில் இருந்து டெல்லிக்குப் புறப்படுகிறார் பெருந்தலைவர், காமராஜ்.

அன்று இரவு 7.30 மணி விமானத்தில் ஏறி, முன்சீட்டில் அமருகிறார்.

பாண்டிச்சேரி கவர்னர் சீலம், பாண்டி முதலமைச்சர் வெங்கடசுப்பா ரெட்டியார் உள்பட மொத்தம் 69 பயணிகள். விமானம் புறப்படத் தயாராகிறது.

அப்போது.....

விமான என்ஜினில் தீப்பொறி மின்னிச் சிதறிப் பறக்கின்றது.

தக்க சமயத்தில் தீப்பொறியைக் கவனிக்கிறார்; விமான ஓட்டியை எச்சரிக்கிறார்.

இதற்குள் விமானத்தின் முன் பகுதியில் பெரும்புகை கிளம்புகின்றது. பயணிகள் பதட்டமடைகின்றனர். பதைப்பதைக்கின்றனர். ஆனால், காமராஜ், பதறவில்லை. எல்லோரையும் விமானத்தின் பின்பக்க வாசல் வழியாகக் கீழே இறங்கும்படிச் செய்கிறார். அவர் மட்டும் தீப்பற்றிய இடத்திற்கு வெகு அருகிலேயே நின்று கொண்டு இருக்கிறார்.

பயணிகள் மற்றும் விமானப் பணிப் பெண்கள் உள்பட அனைவரும் பத்திரமாக இறங்கிவிட்டனர். ஆனால் காமராஜ் எங்கே? வெளியில் இருப்பவர்கள் துடித்துத் தவிக்கின்றனர்.

அதோ, காமராஜ், எல்லோரும் இறங்கிய பிறகு, கடைசியாக இறங்கி வருகிறாரே,

''தீப்பிடிச்சதும் உடனே, நீங்கள் விமானத்தின் முன் வாசல் வழியாக, முன்னதாகவே வெளியே குதித்து இருக்கலாமே?''

பதட்டத்தோடு, கேட்கிறார் ஒருவர்.

''குதிச்சிருக்கலாம். ஆனால் நான் மட்டும்தானா விமானத்தில் இருந்தேன்! குழந்தையும் குட்டியும் வைச்சிகிட்டு அத்தனைப் பேர் இருந்தாங்களே அவங்க எல்லாரும் பத்திரமா, இறங்க வேண்டாமா என்ன?'' அமைதியாகத் திருப்பிக் கேட்கிறார், பெருந்தலைவர் காமராஜ்!



''நல்லகாலம்! எங்களையெல்லாம் தெய்வமாகக் காப்பாத்திட்டீங்க!'' காமராஜ் கைகளைப் பிடித்தபடி நெஞ்சம் நெகிழ நன்றி கூறுகின்றனர், பலரும்.

மற்றவங்களைக் காப்பாற்றுவதற்காகக் கடைசிவரை, அபாயத்தின் விளிம்பிலேயே நின்று கொண்டிருந்த அவரது அஞ்சாத நெஞ்சமும், பேராண்மைப் பண்பும் நமக்கெல்லாம் நல்ல வழிகாட்டி!

நமது முதல்வர் புரட்சித் தலைவரது ஆட்சியில், பெருந்தலைவரது பெயரும் புகழும் மணக்கிறது! அதோடு அவரது எண்ணங்களும் செயல் வடிவம் பெறுகின்றன.



# கப்பலைத் தூக்கும் விமானம்!

விமானந்தாங்கிக் கப்பலைப் பார்த்திருக்கிறோம். ஆனால் கப்பலையே தூக்கும் விமானத்தைப் பார்த்திருக்கிறோமா?

அண்மையில் பாரிஸ் அருகே நடைபெற்ற விமானக் கண்காட்சியில் பங்கு கொண்ட சோவியத் சரக்கு விமானம் எண்.124 பெரும் பரபரப்பை எற்படுத்தியது. ரஷ்ய இதிகாச வீரனின் பெயரான 'ருஸ்லான்' என்றழைக்கப்படும் இவ்விமானம் 150 டன் எடையுள்ள பொருள்களைக் கொண்டு செல்ல முடியும். அறுபது கார்களை அதன் பயணிகளுடனும் லக்கேஜுடனும் ஏற்றிச் செல்லும் திறன் படைத்தது இவ்விமானம். பெரிய கட்டடச் சாமான்களை மட்டும் அல்ல. நதிகளில் செல்லும் தப்பலைக்கூட இதில் ஏற்றி அனுப்பலாம். மிகவும் அளவில் பெரிய பொருள்களை ஏற்றுவதற்கு வசதியாக விமானம் தன் வயிற்றுப் பகுதியைக் கொண்டுள்ளது. சரக்குகள் வைக்கும் பகுதியின் நீளம் 30 மீட்டர். அகலம் 6.5 மீட்டர். உயரம் 4.5 மீட்டர்.

மணிக்கு 850 கிலோ மீட்டர் வேகத்துடன் பறந்து செல்லும் இவ்விமானம் 16,500 கிலோ மீட்டர் இறங்காமல் பறக்க முடியும். சாதாரண விமானங்களைப் போலல்லாமல் புல் தரையில் இறங்கவும், அதிலிருந்து புறப்படவும் இதனால் முடியும். பெரிய மாடி வீடு போல காட்சி அளிக்கும் இவ்விமானத்தில் நான்கு அறைகள் கொண்ட விமானிகள் தங்க இடம் உள்ளது. ஒரு சமையலறை, குளியலறை, கழிவறை, மூன்று பேர்கள் படுக்கும் வசதி கொண்ட இரண்டு படுக்கை அறைகள் உள்ளன. ஆறு பேர்கள் கொண்ட விமானிகள் குழு விமானத்தை ஓட்டிச் செல்லும்போது மற்றொரு விமானிகள் குழு ஓய்வெடுக்கிறது. பெரும்பாலும் இயந்திரத்தைத் தம்புடனே நடத்துகிறது.




# வாய் நலம் பேணுவோம்!

பல் மருத்துவத் துறை தமிழ் நாட்டில் பெருமையுறத்தக்க விதத்தில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. அதற்கு எடுத்துக் காட்டாகக் கருத்தரங்கு ஒன்று ஜூலை 8,9தேதிகளில் சென்னையில் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசு பல் மருத்துவமனை - மருத்துவக் கல்லூரி சார்பில் நடத்தப் பெற்ற இந்தக் கருத்தரங்கை - அரசு தலைமைச் செயலாளர் திரு டி. வி. அந்தோணி இ. ஆ. ப. அவர்கள் தலைமையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு எச்.வி. ஹண்டே அவர்கள் துவக்கி வைத்தார்.

பல் மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் பி.பி. ராஜன் வரவேற்புரையோடு தொடங்கிய முதல்நாள் கருத்தரங்கில் - மக்கள் நல்வாழ்வுத் துறை ஆணையர் மற்றும் செயலர் திரு ஆர். சண்முகம் இ.ஆ.ப., மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் திருமதி லலிதா காமேஸ்வரன் ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கிய அரசு தலைமைச் செயலாளர் திரு டி.வி. அந்தோணி இ.ஆ.ப., அவர்கள் பேசுகையில், ''மேல்நாட்டுப் பழக்க வழக்கங்களையெல்லாம் கடைப்பிடித்து வருவதால் வாய்ச் சுகாதாரம் பாதிக்கப்படுகிறது என்றும், நட்சத்திர ஓட்டல்களில், சாப்பிட்ட பின் வாய் கொப்பளிக்கச் சரியான இடம் இல்லாததால் வாயில் உணவுப் பொருட்கள் தங்கி, பற்களைச் சேதப்படுத்திக் கொண்டிருக்கின்றன என்றும் நமது தமிழ்நாட்டுப் பழக்கத்தின் படி ஆகார வகைகளில் உள்ள காய்கறிகளையும் அவைகளை உண்ணும் முறைகளையும் மேற்கொள்ள வேண்டுமென்றும், உணவுக்குப் பின் வெற்றிலை போடும் பழக்கம் பல் சுகாதாரத்திற்கு மிகவும் உதவி வந்தது என்றும் த்ற்போது நமது ஆகாரப் பழக்கங்களை மாற்றிக் கொள்ளும்போது பல் சிதைவு அதிகம் ஆகிறது என்றும் குறிப்பிட்டார்.

மேலும், அவர் பேசுகையில் தமிழ்நாட்டில் 30.4 சதவித மக்கள் மட்டுமே பற்பசை, -பல் பொடி உபயோகிக்கிறார்கள். மற்ற சதவித மக்கள் மணல், களிமண், செங்கல் பொடி, கரித்தூள், எரித்த உமி போன்றவைகளை உபயோகிக்கிறார்கள், ஒரு பல் மருத்துவரை உருவாக்க அரசாங்கம் ரூபாய் 1,50,000 செலவழிப்பது இப்படிப்பட்ட நிலையை மாற்றத்தான்'' என்றும் குறிப்பிட்டார்.



கருத்தரங்கைத் துவக்கி வைத்துப் பேசிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், இந்தக் கருத்தரங்கில், கலந்து கொள்ளும் பல் மருத்துவர்கள் வாய்ச் சுகாதாரம் பேணுவதில் முக்கியப் பங்கு ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். பற்களில் ஏற்படும் நோய்களின் புள்ளி விவரங்களை ஆராய்ந்து அதற்கேற்ப மக்களுக்குத் தடுப்பு முறைகளை எடுத்துரைக்கும்படியும் அறிவுறுத்தினார். தொழிலாளர்களின் பல் நலனையும் குறிப்பாகக் கவனிக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார். சமுதாயப் பல் பாதுகாப்புத் திட்டத்தைப் பிற அமைப்புகளின் உதவியைக் கொண்டு தீவிரமாகச் செயல்படுத்தும்படி கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குழந்தைகளுக்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் குறிப்பாக ஏழை மக்களுக்கும் பல் சுகாதாரம் பற்றி விரிவாக எடுத்துரைக்க வேண்டுமென்று பல் மருத்துவர்களைக் கேட்டுக் கொண்டார்.



திரு ஆர். சண்முகம் இ.ஆ.ப., (ஆணையர் மற்றும் செயலர், மக்கள் நல்வாழ்வுத் துறை) அவர்கள் பேசுகையில், கிராம மக்களுக்கு வாய்ச் சுகாதார விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதற்குச் சுகாதார அமைப்பாளர்களுக்கு நாம் முதலில் தகுந்த பயிற்சி அளித்து அதை அவர்கள் கிராம மக்களுக்கு ஏற்ற எளிய செயல் முறையில் கடைப்பிடிக்க எடுத்துச் சொல்லும்படி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கருத்தரங்கின் அமைப்பாளர்களைக் கேட்டுக் கொண்டார்.



மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் திருமதி லலிதா காமேஸ்வரன் அவர்கள் பேசுகையில் - 'பல் சுகாதாரத்திற்கு ஆகார வகைகளில் மிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று அறிவுறுத்தினார்.

இரண்டாம் நாள் (9-7-85) நடைபெற்ற கருத்தரங்கில் - இலக்கியச் செல்வர் திரு குமரி அனந்தன் எம்.எல்.ஏ., தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறைச் செயலர் டாக்டர் அவ்வை நடராசன், பாலமந்திர் பள்ளித் தலைமையாசிரியை திருமதி என். வசந்தா, அரண்வாயில் மேதினைப் பள்ளித் தலைமையாசிரியர் திரு.எம்.பாலகிருஷ்ணன், மாநகராட்சி கூடுதல் சுகாதார அலுவலர் டாக்டர் ராஜ்மோகன், சமூக நலத்துறை உடல் ஊனமுற்றோர் பிரிவு அலுவலர் திரு. பிச்சைமௌனி விளம்பரத்துறை இயக்குநர் திரு ஆர். சந்திரமவுலி, 'தமிழரசு' இல. இராசேந்திரன் போன்றாரும் மற்றும் பலரும் உரை நிகழ்த்தினர்.



இரண்டு நாள் கருத்தரங்கிலும் பல்வேறு மருத்துவத்துறை வல்லுநர்களும், வெவ்வேறு அமைப்புகளைச் சேர்ந்தோரும், பல்மருத்துவக்கல்லூரிப் பேராசிரியர்களும் - மாணவ மாணவிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



இரண்டு நாள் கருத்தரங்கிற்கும் மிகச் சிறந்த ஏற்பாடுகளைச் செய்திருந்தார் பேராசிரியர் டாக்டர் என். ஞானசுந்தரம்.

கருத்தரங்கின் முடிவில் நன்றியுரையாற்றினார் பேராசிரியர் டாக்டர் சி. எஸ். பிரசாத்.

—ராஜு

# முன்னாள் படைவீரர் நலம் காப்போம்

முன்னாள் இராணுவத்தார் நல இயக்ககத்திற்கென்று சென்னை சைடன்ஹாம்ஸ் சாலையில் ரூ. 45 இலட்சம் செலவில் புதிய கட்டட வளாகம் உருவாக்கப் பட்டுள்ளது. இதன் திறப்பு விழாவில் (10-7-85) மேதகு ஆளுநர் திரு எஸ்.எல். குரானா, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் இக் கட்டடத்தை மேதகு ஆளுநர் அவர்கள் திறந்து வைத்தார்.

''முன்னாள் இராணுவத்தினர் பொருளாதார மேம்பாடு அடையத் தொழில் நடத்துவதற்கெனத் தனி கார்பொரேஷன் அமைப்பது பற்றித் தமிழக அரசு பரிசிலித்து வருகிறது. இராணுவத் தளவாடங்கள், உதிரி பாகங்களெல்லாம் இப்போது தனியார் நிறுவனங்களாலேயே தயாரிக்கப்படுகின்றன. அவற்றை முன்னாள் இராணுவத்தினரைக் கொண்டே தயாரிக்க அரசு எண்ணியுள்ளது. மத்திய அரசு போதுமான நிதியுதவி அளிக்குமெனில், மாநில அரசு இத்திட்டத்தை விரைந்து நிறைவேற்றும்'' என்று தனது தலைமையுரையில் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டார்.

''முன்னாள் இராணுவத்தினர் தொழில்துறையிலே ஈடுபட்டால் மிகச் சிறந்த கட்டுப்பாடு இருக்கும். ஆகவே, இன்றுள்ள தொழிலதிபர்கள், முன்னாள் இராணுவத்தினருக்கு வேலைவாய்ப்பு தந்து, அவர்களுடைய உழைப்பை நல்ல முறையிலே பயன்படுத்திக் கொள்ள வேண்டும்'' என்று மேதகு ஆளுநர் திரு எஸ்.எல்.குரானா, அவர்கள் தமது உரையிடையே கேட்டுக் கொண்டார்.

முன்னாள் இராணுவத்தார் நல இயக்கக இயக்குநர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன் இ.ஆ.ப. அவர்கள் தனது வரவேற்புரையின்போது, முன்னாள் இராணுவத்தினருக்கான நிதி வசூலில் தமிழ்நாடு முதலாவதாக இருப்பதைப் பெருமையோடு குறிப்பிட்டார்.

இந்த விழாவில் முன்னாள் இராணுவத்தாரின் குடும்பங்களுக்குக் கருவிகள், நிதி ஆகியவை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன.

முன்னாள்படைவீரர் சின்னப்பன் என்பாருக்கு இந்த வளாகத்திலேயே வைக்க ஒரு பெட்டிக்கடை அளிக்கப்பட்டது. முன்னாள் இராணுவ அதிகாரிகள் திரு. எஸ். பி. மகாதேவன், திரு. கே. எஸ். ராஜா ஆகியோருக்கும் வட்டார இராணுவத் தலைமை அதிகாரிகளுக்கும் மேதகு ஆளுநர் அவர்களால் நினைவுப் பரிசுகள் அளிக்கப்பட்டன.

அரசு தலைமைச் செயலாளர் திரு டி.வி. அந்தோணி இ.ஆ.ப., இராணுவ அதிகாரி பிரிகேடியர் வீரேந்தர் சிங். பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளர் திரு என். பாலசுப்பிரமணியன் ஆகியோரும் உரையாற்றிய இந்த விழாவில் முடிவில்-இவ்வியக்ககத்தின் துணை இயக்குநர் திரு. காந்திமோகன் பாரதி நன்றி கூறினார்.





## தம்பியா ? தோசையா ?

"நான் தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தேன். இளம் வயதினரான என் இரண்டு மகன்களும் அடிக்கடி சண்டை போட்டுக் கொள்ளுவார்கள்; பெரியவன், சின்னவனை அடித்துவிடுவான்.

"நமக்கு ஒரு தம்பி இருந்தால் நாமும் அடிக்கலாமே என்ற நினைப்பு சின்னவனுக்கு. என்னிடம் அவன் ஒருநாள், "அப்பா, எனக்கு ஒரு தம்பி வேண்டும்" என்று கேட்டான்.

"அவன் எதற்காகக் கேட்கிறான் என்பதை நான் புரிந்துகொண்டேன். அப்போதெல்லாம் குடும்பக்கட்டுப்பாடு பிரச்சாரம் அவ்வளவு தீவிரமாக இல்லையாதலால், அதுபற்றியெல்லாம் குழந்தைகளிடம் பேச இயலாது.

"சிறிது யோசித்துவிட்டு நான் என் சின்ன மகனோடு பேசலானேன்: "தினமும் அம்மா உனக்கு எத்தனை தோசை கொடுக்கிறார்?"

''மூன்று தோசை அப்பா'' என்றான் அவன்.

''உன் அண்ணனுக்கு?''

''அவனுக்கும் மூன்றுதான்!''

''ஆக, இப்போது உனக்கும் உன் அண்ணனுக்கும் மொத்தத்தில் ஆறு தோசை கிடைக்கிறதல்லவா? உனக்கு ஒரு தம்பி வந்தால் இந்த ஆறு தோசையைப் பங்கிட வேண்டும். அப்படிச் செய்தால் ஆளுக்கு இரண்டு தோசைதான் வரும். இப்போது சொல்; உனக்குத் தம்பி வேண்டுமா? அல்லது தோசை வேண்டுமா?''

"நான் இப்படிக் கேட்டதும் அவன் சிறிதும் தாமதிக்காமல — "எனக்குத் தோசையே போதும் அப்பா" என்றானே பார்க்கலாம்!



சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்களுக்கு விருந்தளிக்கப்பட்ட நிகழ்ச்சியில் மாண்டலின் இசை வழங்கிய மாஸ்டர் யு. சீனிவாசுக்கு, நடராஜர் சிலையைப் பரிசளித்தார் மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

"இப்படி நாம் அவரவருக்குப் புரியும்படி குடும்பக் கட்டுப்பாடு பிரச்சாரத்தைச் செய்தாக வேண்டும், அதிலும் குறிப்பாகச சட்டப்பேரவை-மேலவை உறுப்பினர்கள் குடும்பநலத் திட்டப் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்!"

[மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், சட்டமன்ற வரவு செலவு திட்டக் கூட்டத்தொடர் முடிந்ததையொட்டி, சட்டப் பேரவை-மேலவை உறுப்பினர்களுக்கு (19.7.85) அளித்த விருந்தில் அரசு தலைமைச் செயலாளர் திரு டி வி. அந்தோணி இ.ஆ.ப., அவர்கள் ஆற்றிய வரவேற்புரையில் குறிப்பிட்டது.]



# குடி குடியைக் கெடுக்கும்

குடியினால் வரும் தீமைகள், அதனால் சமுதாயத்துக்கு உண்டாகும் கேடுகள் முதலானவை குறித்து ஒரு பட்டறை நடந்தது. இதை நடத்தியது தமிழ்நாடு மகளிர் தொண்டு நிறுவனம்.

4.7.85, 5.7.85 ஆகிய இரண்டு நாட்கள் நடந்த இந்தப் பட்டறையில் ஏராளமான பெண் ஊக்குநர்கள் கலந்துகொண்டார்கள்.

'மதுவினால்-போதைப் பொருளினால் விளையும் தீமைகள்' என்பதே பட்டறையின் பொருள். இரண்டு நாட்களும் பல்துறை அறிஞர் பெருமக்கள் கலந்து கொண்டார்கள்.

தேசிய வயதுவந்தோர் கல்வித் திட்டத் தலைவி திருமதி பத்மினி சிவசுப்பிரமணியம் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், மகளிர் தொண்டு நிறுவனத்தின் பல்வேறு அலுவல்களையும், வயது வந்தோர் கல்வித்திட்டத்தின் வாயிலாகச் செயல்படுத்தக்கூடிய சாதனைகளையும். விளக்கினார்.

மகளிர் தொண்டு நிறுவனத்தின் உதவி இயக்குநர் திருமதி சரோஜினி வரதப்பன், பட்டறையைத் தொடங்கி வைத்துப் பேசுகையில், இந்தியா முழுவதும் மது விலக்கை அமல்படுத்த வேண்டும் என்னும், காந்தியடிகளின் கொள்கையை நினைவுகூர்ந்தார். குடிப் பழக்கம் குடி கெடுக்கும்; சமுதாய நற்பணிகளை வேருடன் அறுத்துவிடும்; மனித வர்க்க முன்னேற்றத்திற்கு அது முட்டுக்கட்டை, இதனால் குடும்பம் பாதிக்கப்படுகிறது என்றும் எடுத்துக் கூறினார்.

மனநல மருத்துவர் திரு ராமச் சந்திரன், பேசுகையில், "மதுவினால் உடல் நலத்திற்கு எவ்வாறு கேடுகள் ஏற்படுகின்றன?" என்ற தலைப்பில் விரிவுரை ஆற்றினார். வாழ்க்கையின் அடித்தளத்தில் இருப்பவர்கள் எங்ஙனம் மதுவிற்கு அடிமையாகின்றனர் என்பதை "மகிழ்ச்சி அடைந்த போதும் மது அருந்துகிறோம், துன்பத்திலும் மது அருந்துகிறோம். மகிழ்ச்சியின்முதல் எழுத்து 'ம', துன்பத்தின் முதல் எழுத்து 'து'. இதுவே "மது" என்று வேடிக்கையாகக் குறிப்பிட்டார். 'மது அருந்துவதனால் ஏற்படும் பாதிப்புகள் அதிகம், தொடர்ந்து குடிப்பதன் மூலம் ஒருவர் குடிக்கே அடிமையாகிறார். அவர்களை Bad Alcohoic sad Alcoholic and mad Alcoholic என்று பிரிக்கலாம். தமிழ்நாட்டு மக்கள் தொகையில் 2½ கோடி ஆண்மக்கள்-இதில் 25% விட்டுவிட்டோ அல்லது தொடர்ந்தோ மது அருந்துகிறார்கள். 50 ஆயிரம் ஆண்கள் மது அடிமைகளாக உள்ளனர். இவர்களைத் திருத்துவதற்கு மனநல மருத்துவம் அவசியம். தனிமனிதனின் உடல்நிலை. மனநிலை, சமூக நிலை ஆகியவற்றைப் பாதிக்கும் இம்மதி தேவைதானா? இன்றைய மாணவ சமுதாயம் மதுவினாலும், போதைப் பழக்கத்தினாலும் பாதிக்கப்படுகின்றனர் என்று கூறினார்.




பேராசிரியை திருமதி ராஜலட்சுமி "மாணவ சமுதாயத்தில் மது போதைப் பழக்கங்கள் ஏற்படுத்தும் தீமைகள்" என்ற தலைப்பில், மாணவர்கள் மேலை நாட்டுப் பழக்கங்களைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதாலும் கெட்ட சகவாசங்களினாலும், சுற்றுப்புறச் சூழ்நிலைகளினாலும், பெற்றோர்களின் பொறுப்பற்ற தன்மைகளினாலும் இக்கொடிய பழக்கங்களுக்கு ஆளாகி, அதனால் உடல்நலிவுற்று, மனநலம் பாதிக்கப்பட்டு, இவ்வுலகில் வாழ அருகதையற்றவர்களாகிறார்கள். பழக்கத்திற்கு ஆளாகிப் பொறுப்பற்றவர்களாக இருக்கின்றனர். இதைத் தவிர்க்க முடியுமா? சமூகசேவை செய்வதன் மூலம்-இக்கொடிய பழக்கத்தின் தீமைகளை மக்களிடையே பிரசாரம் செய்வதன் மூலம் இதைத் தவிர்க்கலாம்' என்று கூறினார்.




திருமதி பத்மினி சிவசுப்பிரமணியம், குடியின் கொடுமைகளால் பெண்கள் படும் அவலங்களை எடுத்துக் கூறினார்.

திருமதி வத்சலா நாராயணசாமி, மது பழக்கத்தினால் மனிதனின் வாழ்க்கைத்தரம், உடல் நலம், வேலைத்திறமை, மூளை வளர்ச்சி, குடும்ப ஒழுங்குக் கட்டுப்பாடு, சமுதாய ஒழுங்கு ஆகியன கெடுகின்றன. இதனால் குற்றத்தன்மை பெருகி வறுமையின் வளர்ச்சி அதிகமாகி, தேசிய செல்வம் வீணாகிறது என்று கூறினார்.

இரண்டாம் நாள் (5.7.85) அன்று நடந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட டாக்டர் பீட்டர் ஃபெர்னாண்டஸ், இக்கொடிய பழக்க வழக்கங்களினால் குடல், கல்லீரல், நரம்பு ஆகியனப் பயனற்றுப் போகின்றன என்றும், திறமை குறைதல், கண்பார்வை மங்குதல், உறக்கமின்மை, மூளை பாதிப்பு, தன்னம்பிக்கை இழத்தல், சந்தேகத்திற்காளாகுதல், ஞாபகமற்று விடுதல், மனச் சோர்வுக்கு ஆளாகுதல் போன்ற உடல், மனம், சமுதாயப் பொருளாதார விளைவுகளையெடுத்துக் கூறி, அவர்களுக்குச் சிகிச்சையளித்து மறுவாழ்வு பெறும்படிச் செய்தல் அவசியம் என்று வலியுறுத்தினார்.

டாக்டர் சாந்தா ரங்கநாதன், குடியே ஒரு நோயென்றும், குடியினால் ஏற்படும் பல விளைவுகளையும், குடிகாரர்களுக்கு ஏற்படும் மறதி நோய், அதனால் விளையும் குழப்பங்களையும், உடலுக்கும் மனத்திற்கும் ஏற்படும் அசௌகரியங்கள் பற்றியும் கட்டுப்பாட்டை இழக்கின்ற அளவுக்குக் குடிப்பவர்களின் பொறுப்புகளைக்குடும்பத்திலிருப்பவர்கள் ஏற்றுக் கொள்வதனால் மறைமுகமாக நாமே அவர்களுக்கு மேலும் குடிப்பதற்குத் தூண்டுகோலாய் இருக்கக்கூடாது


**'தமிழரசு' சந்தா விவரம்**

'தமிழரசு' (தமிழ்)

ஆண்டுச் சந்தா: ரு 18

அரையாண்டுச் சந்தா: ரு 9.

விவரங்கட்கு:

உதவி இயக்குநர்,
தமிழரசு அலுவலகம்,
செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
அரசினர் தோட்டம்,
சென்னை-600 002.


பட்டறை நிறைவு விழாவிற்கு வருகை தந்த பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்குநர் திரு.வா. அ. சிவஞானம் பேசுகையில், ஊக்குநர்களுக்குப் பயிற்சி அளிப்பதில் இம்மாதிரியான மதுவின் தீமைகள் பற்றி புது விதத்தில் பயிற்சி அமைத்தது குறித்து பாராட்டிய தென் ஆர்க்காடு கிராமத்தில் ஆண்கள் முதியோர் கல்வி மையத்தில்; எப்போதும் மது அருந்தும் பலரில் நான்கு பேர் அங்குள்ள ஊக்குநரின் அறிவுரையினால். மது அருந்தவில்லை என்பதை நேரில் கண்டு மகிழ்ந்தேன் என்றும் கூறினார்.

மகளிர் தொண்டு நிறுவனம், சென்னை மாநகரில் உள்ள குடிசைப்பகுதிகளில் பல மையங்களை ஏற்படுத்தி, பெண் மேலாளர்கள், ஊக்குநர்களை நியமித்து அந்தந்தப் பகுதி மக்களின் அறியாமையைப் போக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றது. அத்துடன் சிறு சேமிப்பு, குடும்ப நலம், தீண்டாமை ஒழிப்பு, வரதட்சிணை போன்ற திட்டங்களையும் செயல்படுத்தி வருகின்றது.

சமுதாயத்தின் கொடிய நோயாகக் கருதப்படும் குடிப் பழக்கத்தை ஒழிக்கும் பணியில் மகளிர் ஈடுபாடு கொண்டு ஒரு கருத்தரங்குக்கே ஏற்பாடு செய்ததை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

— பீ.வி. கிரி



"சிவகங்கையில் சிறந்தவகை கிராஃபைட்"

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் சிவகங்கைக்கு அருகில் உள்ள புதுப்பட்டி, குமாரபட்டி, சேந்திஉடையநாதபுரம் ஆகிய கிராமங்களில் சுமார் 1,000 ஏக்கர் பரப்பளவில் கிராபைட் கிடைக்கிறது. இந்த கிராபைட் கனிமம் உலகத்திலேயே மிகச் சிறந்ததாகக் கருதப்படும் 'மடகாஸ்கர்' வகை கிராபைட்டுடன் ஒப்பிடத்தக்க தரத்தில் இருப்பதாகக் கருதப்படுகிறது. கிராபைட் கனிமம் மூசைகள் எனப்படும் வெப்பக் கலன்கள் செய்யவும், உராய்வுக் குறைப்புப் பொருள்கள், மின் முனைகள், சாயங்கள், சில ஆகாயவிமானத்தின் பாகங்கள் ஆகியவை செய்யவும் மூலப்பொருளாகப் பயன்படுகிறது.

அரசு நிறுவனமான தமிழ்நாடு கனிம நிறுவனம் மேற்கண்ட கிராபைட் கனிமத்தை வெட்டியெடுக்கத் திட்டமிட்டுஅத்திட்டத்தை (1) கனிமத்தை வெட்டியெடுத்தல் (2) சுத்திகரித்தல் (3) கிராபைட்டைப் பயனபடுத்தி பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் அமைத்தல் ஆகிய மூன்று கட்டங்களாகச் செயலாக்கவிருக்கிறது. சுரங்கப் பணிகளைத் திட்டமிட நெய்வேலி லிக்னைட் நிறுவனமும் சுத்திகரிப்பாலை அமைக்க ''நேஷனல் மெட்டலர்ஜிகல் லேபரட்டரியும்'' தொழில் நுட்ப உதவி அளித்துள்ளன. இப்பணிகளுக்கு அரசு ஒப்புதலை அளித்துள்ளது.

கிராபைட் கனிமம் கிடைக்கும் நிலப் பரப்பில் சுமார் 477 ஏக்கர் தனியாருக்குச் சொந்தமானவையாகும். மீதி 563 ஏக்கர் அரசுப் புறம்போக்கு நிலமாகும். தனியாரின் நிலங்கள் நில எடுப்பு செய்து மேற்கொள்வதற்கான பணிகள் தீவிரமாக அரசு ஒப்புதல் பெற்று நடைபெற்று வருகின்றன. அரசுப் புறம்போக்கு நிலங்களைத் தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்குச் சொந்தமாக்க மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

சுரங்கப் பணிகளுக்கும் சுத்திகரிப்பாலை அமைப்பதற்கும் ரூ. 340 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் அரசு ரூ. 55 இலட்சம் தொழிற்சாலை அமைப்போரின் மூலதனப் பங்காக அளிக்கிறது. தமிழ்நாடு கனிம நிறுவனம் தனது ஆதாயத்திலிருந்து ரூ. 30 இலட்சம் ஒதுக்கவிருக்கிறது. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி ரூ. 240 இலட்சம் கடனுதவி அளிக்க முன்வந்துள்ளது. மீதி ரூ. 15 இலட்சம் மத்திய அரசிடமிருந்து மான்யமாகப் பெறப்படும்.

சுத்திகரிப்பாலை 100 டன் கிராபைட் மூலக்கனிமத்திலிருந்து 14 டன் சுத்திகரிக்கப்பட்ட 85 விழுக்காடு கரிச்சத்துள்ள கிராபைட் உற்பத்தி செய்யும் திறன் கொண்டதாக இருக்கும். தொழிற்சாலைக்கான கட்டடங்கள் கட்டும் பணிகளுக்காக டெண்டர்கள் கோரப்படுகின்றன. தொழிற்சாலையில் பொருத்தப்பட உள்ள இயந்திரங்களுக்கு இயந்திரங்கள் தயாரிக்கும் நிறுவனங்களிடமிருந்து டெண்டர்கள் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து நிதியுதவி கிடைக்கப் பெற்றவுடன் தொழிற்சாலைக் கட்டடங்கள் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட உள்ளன.

தொழிற்சாலைக்கான மின்சாரம் பெறுவதற்காக தமிழ்நாடு மின்சார வாரியத்திடம்முறையாக மனு செய்து கொள்ளப்பட்டுள்ளது. தொழிற்சாலைக்குத் தேவையான தண்ணீருக்கு நிலத்தடி நீரையே பயன்படுத்தலாம் என ஆராய்ந்தறியப்பட்டு ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மூசைகள் எனப்படும் வெப்பக்கலன்களைத் தயாரிக்கும் தொழில்நுட்பத்தை உலகில் ஒரு சில நிறுவனங்களே அறிந்து வைத்துள்ளன. அந்த வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து தொழில்நுட்பத்தைப் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் தொடர்பாக அந்நிறுவனங்கள் சிலவற்றுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் அமெரிக்க நாட்டிற்குக் கடந்த டிசம்பர், ஜனவரி மாதங்களில் சென்று வந்துள்ளார். கிராபைட்டைப் பயன்படுத்தி ஆகாய விமானத்தின் பாகங்கள் செய்யும் தொழிற்சாலை ஒன்றை வெளிநாட்டு நிறுவனத்தின் தொழில் நுட்பக் கூட்டுறவுடன் அமைப்பது பற்றியும் சில நிறுவனங்களுடன் அவர் பேச்சுவார்த்தை நடத்தி வந்துள்ளார். இது பற்றித் தகுந்த நடவடிக்கைகளைத் தமிழ்நாடு கனிம நிறுவனம் மேற்கொண்டுள்ளது. மேலும் சிவகங்கை கிராபைட் இருப்பைப் பற்றி முழுமையாக ஆய்ந்தறியத் தொழில் நுட்பவல்லுநரின் உதவியை ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ்ப் பெறுவதற்கும் தமிழ்நாடு கனிம நிறுவனம் முயன்று வருகிறது.

தற்போது கனிமத்தை வெட்டியெடுக்கும் பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன. அதன் மூலம், சுத்திகரிப்பாலையும் இதர தொழிற்சாலைகளும்அமைக்கப்பட்டால் இம்மாவட்டத்தில் சுமார் 600 பேருக்கு வேலைவாய்ப்பினை உருவாக்க இயலும்.

**வை. புண்ணியமூர்த்தி**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்.

# பார்த்தோம் படித்தோம்



ஐந்தாண்டுப் பணிகள் தொகுப்பு இதழ் டாக்டர் புரட்சித்தலைவர் அரசின் பொற்காலத்தை நன்கு விளக்கியது.

பி.ஆர்.நெல்லையப்பன்
நெல்லை.

மாணவர் பக்கத்தில் கேள்வி பதில் பகுதியை எதிர்பார்க்கிறோம்.

எஸ்.எஸ்.வாசன்,
தென்எலப்பாக்கம்.

தமிழக அரசு பரிசுச் சீட்டுமுடிவுகள் மற்றும் வாசகர்கள் கட்டுரைகளுக்கு 'தமிழரசு' வாய்ப்பளிக்குமா?

ஜி.டி.ராஜா, ஜி.டி.பிரபு, ஜி.டி. சத்யா, கீழ்ப்பழுவூர்.

'படமும்-செய்தியும்' பகுதி பார்ப்பதோடு மட்டுமல்லாமல், பத்திரமாகப் பாதுகாக்கப்பட வேண்டிய குறிப்பாகவே அமைந்துள்ளது.

புதூர் குமரன்,
ஒரத்தநாடு.

தமிழரசில் வரும் அரிய கட்டுரைகள் மூலம் பற்பல செய்திகளைத் தெரிந்து கொள்ள முடிகிறது. மாணவர் பக்கம், மாணவர்களின் அறிவாற்றலை வளர்ப்பதோடு, அவர்களைப் பெருமையடையவும் செய்கிறது.

ஹேமதாசன்,
உடையார்கோவில்.

மூர் ஆங்காடி தீ விபத்து பற்றிய கட்டுரை படித்தேன். அதில் குறிப்பிட்டிருந்த அரிய புத்தகக் கருவூலங்களையெல்லாம் தீப் பிழம்பு விழுங்கிவிட்டது என்ற செய்தியை அறிந்து கலங்கிவிட்டேன்.

என்.ஜி. தஸ்தகீர் சாயுபு,
நாகூர்.

16.6.85ல் வெளியான 'சென்னையில் சேக்கிழார் விழா' செய்தித் தொகுப்பு மிகவும் பாராட்டத்தக்க வகையில் அமைந்திருந்தது. தொகுப்பாசிரியர்கள் தமிழ்ப்பித்தன், சோழராசன் அவர்களுக்கு எங்கள் பாராட்டுகள்.

ரெ.சுப்பாராஜு,
கன்னித்தேவன்பட்டியில்,

மூர் அங்காடியில் தீ விபத்து குறித்து முதல்வர் எடுத்த துரித நடவடிக்கையைப் படித்தேன். படமும்-செய்தியும் பகுதியில் முதல்வரின் முத்தான முகத்தை கண்டு மகிழ்ந்தேன்.

எஸ். சுந்தரராஜன்,
மன்னார்கோவில்.

தமிழ்நாடு அரசு பல்வேறு துறைகள் பற்றி வெளியிடுகின்ற வெளியீடுகளின் விவரங்களைத் தமிழரசில் வெளியிடலாமே!

சு. ஆறுமுகம்,
வேலூர்.

அறிவியல் சாளரம் பகுதியில் ''மனிதர்கள் படைத்த மனிதர்கள்'' பற்றிய செய்திகளைப் படித்தேன். இந்த ரோபடிக்ஸ் மிக நுணுக்கமான செயல்களைச் செய்யப் பயன்படுத்தப்படுகிறது என்றால் அது அறிவியல் முன்னேற்றத்தை எடுத்துக்காட்டுகிறது.

எஸ்.பி.சந்தானராஜகோபால்,
களப்பாள்.

'மாணவர் பக்கம்' மிகுந்த பயனளிப்பதாய் இருக்கிறது. துணுக்குகளும், கவிதைகளும் மிகுந்த சிறப்புடனும், சிந்தனைக்கு உகந்ததாகவும் உள்ளன.

எஸ்.கே.விஜயகுமார்,
குழிவிளை.

தமிழ்நாட்டுக் கல்வி பற்றிய சிறப்புக் கட்டுரை படித்தேன். இன்றைய தமிழகத்தின் கல்வி வளர்ச்சியையும், சாதனைகளையும் புள்ளி விவரங்களுடன் வாசகர்களுக்குப் புரிய வைத்தமைக்கு நன்றி.

செந்தூர் மணியன்,
திருச்செந்தூர்.

"புகை பிடிப்பதைத் தடுப்பதற்கான நீண்ட கால இயக்கம் செயல்படுத்தப்படுமானால், நிகழ் காலத்திலும் எதிர் காலத்திலும் மக்கள் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதற்கான சக்தி வாய்ந்த நடவடிக்கையாக அது அமையும்" என்று, பிரபல சோவியத் புற்றுநோய் மருத்துவ நிபுணர் கருத்துத்தெரிவித்துள்ளார்.

"புகை பிடிப்பதால் தங்களுக்கு ஏற்படும் தீமையை மக்கள் உணர்வது இல்லை. புற்றுநோய், இரத்த மண்டல நோய்கள் முதலியவற்றினால் ஏற்படும் மரணத்திற்கும் உடல் ...



**உடலைக் கெடுக்கும் சிகரெட் புகை**

புகை பிடிப்பதுதான், முதியோரிடையே இரத்த ஓட்டத் தடையினால் ஏற்படும் மரணங்களில் மூன்றில் ஒரு பங்குக்குக் காரணம் புகை குடிப்பதுதான்" என்று அவர் மேலும் கூறினார்.

இந்த நூற்றாண்டின் முடிவுக்குள் புகை குடிப்பதால் நுரையீரலில் புற்றுநோய் ஏற்பட்டு இறப்போர் தொகை 10 இலட்சமாக உயரக்கூடும் என்று எதிர்பார்க்கலாம் என விஞ்ஞானிகள் நம்புகின்றனர். புகையிலையினால் ஏற்படும் மற்ற நோய்களால் இறப்போர் தொகையையும் இதோடு சேர்த்துக் கொள்ள வேண்டும்.



# நெசவாளர் வாழ்வில் ஒரு மறுமலர்ச்சி !

மா வட்ட ஊரக வேலைவாய்ப்பு அமைப்
ம் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளும்,
நசவாளர் பொருளாதார சுதந்திரம் பெறும்
கையில் உதவி அளிப்பதால், மாஸ்டர் வீவர்
ன் மறைந்து வருகிறார்கள்.

திருச்சி மாவட்டம் வத்தலைக் கிராமத்
தைச் சேர்ந்த சரோஜா, ஜெகதாம்பாள், மகா
ட்சுமி, மருதை ஆகியோர் பாய் நெய்யும்
தொழிலாளர்கள். 2 ரூபாய் முதல் 5 ரூபாய்
வரை கூலி பெற நாள் முழுவதும் வேர்வை
சிந்த பாய் நெய்வார்கள்.

இங்கு நெய்யப்படும் பாய்களுக்கு நகரங்களில் நல்ல கிராக்கி உள்ளது. திருமணக் காலங்களில் கலைவேலைப்பாட்டுடன் கூடிய பாய்களை அவர்கள் நெய்வார்கள்.

அவர்கள் நிலையை அறிந்த மாவட்ட ஊரக வேலை வாய்ப்பு அமைப்பு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் தலா ரூபாய் 1000 கடனும் 250 ரூபாய் மானியமும் அளித்தது.

பாய் நெய்ய நாணல், வர்ணம் மற்றும் இரசாயனப் பொருள்களை அவர்கள் இந்தத் தொகை மூலம் வாங்கினார்கள். அவர்கள் நெய்யும் ஒவ்வொரு பாயிலும் 6 ரூபாய் முதல் 8 ரூபாய் வரை இலாபம் கிடைக்கிறது. திறமைமிக்க அந்தத் தொழிலாளர்கள் ஒரு நாளைக்கு 3 பாய்கள் நெய்வார்கள்.

சரோஜாவும் அவருடைய பக்கத்து வீட்டினரும் வங்கி அளித்த உதவியால் வளமான வாழ்வைப் பெற்று இருக்கிறார்கள். அவர்கள் பெற்ற கடனைச் சுலபமாகத் தவணையில் கட்டலாம். 4 சதவீத வட்டிதான் அவர்களிடம் வசூலிக்கப்படுகிறது.



# வளமான வாழ்விற்கு படி அமைக்கும் செங்கல்

திருச்சியைச் சேர்ந்த கந்தசாமி அவரு
டைய சகோதரர் பொன்னுசாமி ஆகிய இரு
வரும் செங்கல் ஆலையை அமைக்க ஆர்வம்
கொண்டிருந்தனர். ஆனால் வண்டிகளை
வாடகைக்கு அமர்த்தி, களிமண்ணைக்
கொண்டுவருவதற்கும், சூளை அமைக்கவும்,
விறகுகளை வாங்குவதற்கும் போதிய பணம்
இல்லாதிருப்பது அவர்களுக்குத் தலைவலியை ஏற்
படுத்தியது.

பணத்திற்கு உள்ளூரில் உள்ள லேவா
தேவிக்காரர்களையே அவர்கள் நம்ப வேண்டி
இருந்தது. அதிலும் பெருந்தொகையை வட்டியாகப் பிடித்துக் கொண்டு மீதியைத்தான் லேவாதேவிக்காரர்கள் கொடுத்தார்கள்.

அவர்கள் நிலைமையை மாவட்ட ஊரக வளர்ச்சி அமைப்பைச் சேர்ந்தவர்கள் பரிசீலித்து, அவர்களுக்குத் தலா 5000 ரூபாய் கடனுதவி அளித்தனர். அவர்கள் தொழிலை லாபகரமாகத் தொடர உதவி அளித்தது. அவர்களிடம் 10 சதவீத வட்டிதான் வசூலிக்கப்படுகிறது.

இப்போது கந்தசாமியும், பொன்னுசாமியும் மகிழ்ச்சி புன்னகையுடன் இருக்கிறார்கள். காரணம் ஆண்டு ஒன்றுக்கு 3 முறை சூளை போட்டு செங்கல்லைத் தயாரிக்கிறார்கள். தடவைக்கு 70,000 செங்கற்கள் கிடைக்கின்றன. அவர்களின் மொத்த ஆண்டு வருமானம் 12 ஆயிரம் ரூபாய். காலாண்டிற்கு 1,150 ரூபாய் வீதம் அவர்கள் சிரமமின்றிக் கடனைத் திருப்பிச் செலுத்தி வருகின்றனர்.

முன்பு தன் பிள்ளைகளைப் படிக்க வைக்க முடியாத பொன்னுசாமி, தங்களைப்போல பிள்ளைகளும் இன்னல்களுக்கு ஆளாகக் கூடாது என்பதற்காகத் தன் பிள்ளைகளை நன்கு படிக்கவைக்கத் திட்டமிட்டுள்ளார்.



# தஞ்சாவூர் மாவட்ட ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் சாண எரிவாயு அடுப்புகள்

நகரங்களில் கூட பெரும்பாலான மக்கள் எரிவாயு (கேஸ்) அடுப்புகளைக் காணாத நிலையில், தஞ்சை மாவட்ட ஆதி திராவிடர் குடியிருப்புகளில் நூற்றுக்கணக்கான எரிவாயுத் திட்டக் கலன்கள் அமைக்கப்பட்டு சாண எரிவாயு அடுப்புகள் பயன்படுத்தப்படுகின்றன.

மாநில அலுவலர் இதனைப் பார்த்து மக்களின் ஆர்வத்தைப் பாராட்டினார். பிற மாவட்ட அலுவலர்களும், மக்கள் தலைவர்களும், பொது நிறுவன நிர்வாகிகளும் பார்த்துச் செல்கின்றனர்.

5.6.85 அன்று ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் திருமதி. சந்திரலேகா, இ.ஆ.ப., வருகை தந்து அம்மாப்பேட்டை ஒன்றிய அருந்தவபுரம் காந்தி கிராம மக்களுடன் உரையாடினார். குறிப்பாக இவ்வித அடுப்பைப் பயன்படுத்தும் பெண்கள் கூட்டத்தில் கலந்துரையாடி விளக்கம் கொடுத்தார்

''நீங்களெல்லாம் சாண எரிவாயு அடுப்பு போட்டிருக்கிறீர்களா?''

''3 க.மீ. காதி கமிஷன் கலன் அடுப்புதான் போட்டுள்ளோம். ஒரு கூடை சாணம் போடுகிறோம்.''

''அது எப்படிப்போதும்''?.

''நாங்கள் இருமுறை சமைக்கிறோம். இரண்டு மணி நேரம் கேஸ் போதுமானது. மூன்று மணி நேரத்திற்குமேல் கேஸ் கிடைக்கிறது. இதனால், தண்ணீர் உபயோகிக்கவும் முடிகிறது. வீட்டில் புகையில்லை. பாத்திரத்தில் புகை பிடிக்கவில்லை.''



''கூடுதல் எவ்வளவு நேரம் எரியுது?''

''5 மணி நேரத்திற்குமேல் கூட எரியுது. அதற்குச் சாணமும் கூடுதலாகப் போடுகிறார்கள்.''

''முன்பு விறகு வாங்கினீர்களே, இப்போது அதனால் லாபம் உண்டா''?

''விறகு தினமும் ஒன்றிரண்டு ரூபாய்க்கு வாங்கினோம். பல நாள் பல மணி நேரம் விறகுக்காக அலைந்து காய்ந்த சுள்ளிகளையும் பொறுக்கி வந்திருக்கிறோம். வேலி முள் திருடி விட்டதாக சண்டை சச்சரவுகள் கூட தினமும் இருந்தது. அதெல்லாம் இப்போது பெருமளவு குறைந்துவிட்டது. முன்பு மாதம் இருபத்தைந்து ரூபாய் செலவானது. இப்போது மாதம் பத்து ரூபாய்க்கும் குறைவாக 5 வருடத்திற்கு கடன் செலுத்துகிறோம்.''

அருந்தவபுரம் கிராமத்தில் 125 வீடுகள் உள்ளன. இவற்றில் 50 பேர் வீடுகளில் சாணஎரிவாயு அடுப்புகள் உள்ளன.

வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களுக்கு மாடுகள் மானிய விலையில் கொடுக்கப்படுகிறது. மேலும், மாடு இல்லாதவர்கள் புகையில்லாச் சூளை அடுப்பு போடலாம். இதற்கு ஒரு அடுப்புக்கு ஐம்பது ரூபாய் வரை மானியம் கொடுக்கப்படுகிறது. இதிலும் விறகுச்செலவு மிச்சம். வீட்டுக்குள் புகையுமிருக்காது.

தஞ்சை மாவட்டத்தில் சாண எரிவாயு அடுப்புகள் பிரபலமாகி

1984-85 ஆம் ஆண்டில் 2274 கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் காதி கமிஷன் மாடல் 1741ம், பல்கலைக்கழக மாதிரி 533ம் அடங்கும்.

2500 பேர்களுக்குமேல் 50க்கு மேற்பட்ட பயனடைவோர் பயிற்சி முகாம்களில் தீவிரப் பயிற்சி கொடுத்தது, இந்த அளவு சாதனைக்குப் பேருதவியாயிருந்தது. அத்துடன் நாகப்பட்டினம் ஒன்றியத்தில் நடத்தப்பட்ட அலுவலர் பயிற்சி முகாம்களும், கலன்களை நேரில் பார்த்துத் தெரிந்துகொண்ட செயல்முறை விளக்கப் பயிற்சிகளும் கலன்கள் அமைக்க உதவின.

'கிராம அளவிலுள்ள அலுவலர்களுடன் தொடர்ந்து நடத்திய விளக்கங்கள், விவாதங்கள், விரிவுரைகள், செய்முறை விளக்கங்கள், நேரடிப்பார்வைகள் மூலம் பல்கலைக்கழக மாதிரி அமைப்பதில் அலுவலர்களுக்கும் மக்களுக்கும் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இதனை எல்லா ஒன்றியங்களிலும் அமைத்துள்ளார்கள் மன்னார்குடி ஒன்றியத்தில் மாத்திரம் 135 பல்கலைக் கழக மாதிரிகள் அமைக்கப்பட்டுள்ளன.

''அதிக அளவில் பிரபலமாவதற்குக் காரணமாயிருந்தது 3 க.மீ காதி கமிஷன் மாடல் ஆகும். இதை முதன்முதலில் எளிய முறையில் தயாரித்தது தஞ்சாவூர் கணேஷ் பயாகேஸ் இம்பிளிமெண்ட்ஸ் நிறுவனத்தாராவர். பின்பு பலரும் இம்மாதிரி செய்ய துவக்கியுள்ளார்கள். இதனு

டைய உத்தேச மதிப்பு ரூ. 4,500- ஆகும். பயன்படுத்துவோரை அழைத்து ''ஆறு நபர்கள் வரை சமையல் செய்யத்தக்க 3.க.மீ. சாண எரிவாயு கலன் அமையுங்கள். அதற்கு அரசு மானியம் ரூ. 2,860 - உண்டு. மீதி ரூ.1,640-ல் குழி வெட்டுதல் மற்றும் இலவச கூலியாக செங்கல், மணல், சுமந்து உதவுதல், சிமெண்ட் காங்கிரிட் பைப்புக்கு 25 நாட்கள் தண்ணீர் ஊற்றுவது மற்றும் கொத்து வேலைக்கு கையாளாய் இருங்கள். உங்கள் உழைப்பு போக மீதி கட்ட வேண்டியது ரூ.500 -க்கு குறைவாகவே இருக்கும். ரூ.500 - தேவை இருந்தாலும், அதை வங்கி மூலம் கடனாக அளிக்கிறோம். கடனை 84 மாத தவணைகளில் கூட திரும்பக் கட்டலாம். ஆக மொத்தம் ரூ.10 -க்கு குறைவாகத் திரும்பக் கட்டினால் போதும்'' என்று சொல்லுகிறோம். அது மட்டுமல்ல. இரண்டு ஆண்டு உத்தரவாதமும் உண்டு. கேஸ் வந்தபிறகு பணம் கட்டலாம்'' என்று கூடக்கூறுகிறோம். அப்படி இருந்தும் ஓரிருவர்தான் முன் வந்தனர்.

முதன்முதல் திருவையாறு ஒன்றியத்தைச் சேர்ந்த அம்மன் பேட்டை கிராமத்தில் ஆதி திராவிடர் குடிசையின் பின்புறம் ஒருவர் வீட்டில் அமைக்கப்பட்டது. அமைக்கப்பட்ட அன்றே கேஸ் வந்தது. சமையல் செய்வது கண்டு ஆச்சரியமுற்றனர் மக்கள். மக்களிடையே பெரும் ஆர்வம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து நாஞ்சிக்கோட்டை கிராமத்தில்

மாடுகள் உள்ள வீடுகள் அத்தனையும் தேர்வு செய்து 52 கலன்கள் அமைக்கப்பட்டன. இதற்கு பாரத வங்கி கடன் வழங்கியதால் இத்தனையும் விரைவில் அமைக்க ஏதுவாயிருந்தது.

இதை அறிந்த அம்மாப்பேட்டை ஒன்றிய மக்கள் அம்மாப்பேட்டையிலும் மற்றும் பல கிராமங்களிலும் இதனை அமைக்க முன்வந்தனர். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் முயற்சியின் பேரில் இந்தியன் ஓவர்சீயர்ஸ் வங்கி, தஞ்சாவூர் கிளை, அம்மாப்பேட்டை ஒன்றியப்பகுதி அருந்தவபுரம் காந்தி கிராமத்தை தேர்வு செய்தது. அங்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் பால் மாடுகள் வாங்கி பயனடைவோர் அத்தனை பேருடைய வீட்டிலும் 3 க.மீ. கொள்ளளவுள்ள சாண எரிவாயுக் கலன்கள் அமைக்கப்பட்டன. இங்கு 50 குடும்பங்களும் இதை தெய்வீக சன்மானமாகப் போற்றி வருகின்றனர். இவர்கள் எல்லாம் வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள ஆதி திராவிட மக்கள் தான்.

அருந்தவபுரம், சாலியமங்கலம் கொக்கேரி போன்ற கிராமங்களிலும் மக்கள் முன்வந்தனர். இவ்வாறு அம்மாப்பேட்டை ஒன்றியத்தில் பிரபலம் அடைந்து கடந்த ஆண்டு 631 கலன்கள் போடப்பட்டன. சிமெண்ட், உருக்கு போன்றவைகளும்



கட்டுப்பாட்டு விலையில் கொடுக்கப்படுகின்றன.

ஒவ்வொரு ஒன்றியத்திலும் தொழில் நுணுக்க உதவியாளர் உண்டு. அவர்களுக்கு ஒரு கலன் அமைக்க ரூ.300 வரை கொடுக்கப்படுகிறது.

சாலியமங்கலம் கிராமத்தில் மட்டும் 130 கலன்கள் அமைக்கும் வேலை துரிதமாக நடைபெறுகிறது.

சாலியமங்கலம், கொக்கேரி, திருத்துறைப்பூண்டி, திருவையாறு, பாபநாசம் போன்ற இடங்களில் அமைக்கப்பட்டுள்ள 6 க.மீ. கலன்கள் மக்களை மிகவும் கவர்ந்துள்ளன. பன்னிரெண்டு பேருக்கு மேல் சமையல் செய்யக் கூடிய திறன் கொண்டதாயும், குறையாத எரிவாயு உள்ளதாகவும் அமைந்துள்ளது. இதனால் 3 க.மீ.க்கு அதிகமாக தேவை உள்ளவர்கள் 6 க.மீ. கலன்களையே விரும்பிப் போடுகிறார்கள். மன்னார்குடி, நாகப்பட்டினம், செம்பனார்கோவில், சீர்காழி ஒன்றியப் பகுதிகளில் பல்கலைக்கழக மாதிரிக் கலன்களையே விரும்புகிறார்கள்.

சாண எரிவாயு பயன்படுத்தி 5 குதிரைச் சக்தி வேக தண்ணீர் பம்புகளும், மற்றும் ஒரு குதிரை வேகச் சக்தியுள்ள மின் சக்தி மோட்டார்களை ஓட்டவும் பயன்படுத்த ஏற்பாடாகியுள்ளது.

வேதாரண்யம் குருகுலம் போன்ற தனியார் நிறுவனங்களில் பெரிய அளவில் இக்கலன் அமைக்க 75% மானியம் அளிக்கப்படுகிறது. மேலும், சமுதாய சாண எரிவாயுத்திட்ட கலன் வடபாதி, நரியனூர் (அம்மாப்பேட்டை ஒன்றியம்) ஆகிய கிராமங்களில் அமைக்கவும் ஏற்பாடாகியுள்ளது.

காற்றையும் சூரிய வெப்பத்தையும் பயன்படுத்தி அடுப்புகள் அமைக்கவும், நீர் இறைக்கும் இயந்திரங்கள் அமைக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

இருபது அம்சத் திட்டத்தில் ஒன்றாகவும், மத்திய அரசின் தேசிய ஊரக விசைத் திட்டத்தில் முதன்மையாகவும் இருக்கும் இத்திட்டம் தேசிய வருமானத்தை அதிகரிப்பதோடு மக்களுக்கு மிகவும் பயனளிப்பதாகும்.

மு. லஜபதி,
மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர்,
தஞ்சாவூர்.

85355.



# தீயணைப்பு வீரர்கள் வாழ்வில் ஒரு திருப்புமுனை

எந்த இடத்தில் எந்த நேரத்தில் தீவிபத்து ஏற்பட்டாலும் உடனே விரைந்து சென்று உதவிடும் தீயணைப்பு வீரர்கள்...

வெள்ளப்பெருக் கென்றாலும் பதிக்கப்பட்ட மக்களுக்கு இராணுவ வீரர்களை போல் சென்று உதவிடும் பாங்கு... உயிருக்குப் போராடும் இடம் ஆபத்தை விளைவிக்கும் என்றாலும் துணிந்து சென்று சாகசங்களை நிகழ்த்திக் காட்டும் தீரர்கள்...

இரவு, பகல் எந்த நேரத்திலும் கண் துஞ்சாது கடமையைச் செய்யும் தியாகச் செம்மல்களுக்குத் தாங்கள் நிம்மதியாய் வாழ்ந்திட அவர்களுக்கென்று தனிக் குடியிருப்புகள் இல்லை.. இந்த நிலை தொடர்ந்து நீடித்தது.

மற்ற அரசு அலுவலர்கள் பெற்றுள்ளதைப் போன்ற குடியிருப்புகள் அவர்கள் ஒன்றாக வாழும் அந்தப் பகுதியில் தொலைக்காட்சிப் பெட்டி, வானொலிப் பெட்டி ஆகியவைகளை இவர்களுக்கும் வழங்கிட வேண்டும் என்ற அன்பு ஆணை பிறப்பித்தார். இதன் அடிப்படையில் தமிழகத்தில் உடுமலைப் பேட்டை, ராணிப்பேட்டை ஆகிய இடங்களில் குடியிருப்புகள் ஏற்கெனவே கட்டப்பட்டுத் திறக்கப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாகத் தியாகச் செம்மல் பெருந்தலைவர் காமராஜர் பெயரால் அமைந்துள்ள காமராஜர் மாவட்டத்தில் இவர்களுக்கென 40 வீடுகளைக் கொண்ட குடியிருப்புகள் ரூபாய் 14 இலட்சம் செலவில் கட்டப்பட்டது. அதன் திறப்பு விழா 11.7.85 அன்று சிவகாசியில் நடைபெற்றது.

சிவகாசியில் வாழும் தீயணைப்பு வீரர்கள் குடும்பத்தார், குழந்தைச் செல்வங்களிடையே குதூகலம்! பூரிப்பு! தாங்களும் வசதியுள்ள குடியிருப்புகளில் குடியிருக்கச் செல்லுகிறோம் என்பதில்!

இந்தக் குடியிருப்புகளின் திறப்பு விழா குறித்த நேரத்தில் துவங்கியது. மாண்புமிகு அமைச்சர்களை தீயணைப்புத் துறையினர் இன்னிசை முழங்க வரவேற்று, காவல் துறை மரியாதை அளித்தனர். விழாவிற்கு வந்திருந்தவர்களை வரவேற்றுப் பேசிய தீயணைப்புத் துறை இயக்குநர் திரு சீதாராமன், ஐ.பி.எஸ். அவர்கள் "தமிழக முதல்வர் அவர்களின் விருப்பப்படி இத்துறை கூடிய விரைவில் நவீன மயமாக்கப்படும். அனைத்து நிலையங்களுக்கும் புதுப்பிக்கப்பட்ட நல்ல நிலையில் உள்ள வாகனங்கள் அளிக்கப்படும். இதில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வாழ்க்கை வசதிகள் அனைத்தும் செய்து தரப்படும்." என்றார்.

விழாவிற்குத் தலைமை தாங்கிய கூட்டுறவு அமைச்சர் மாண்புமிகு திரு கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் பேசும்போது—

"பட்டாசுத் தொழில், தீப்பெட்டித் தொழில் நிறைந்த சிவகாசியில் தங்கள் உயிரையும் பணயம் வைத்து விபத்துக்களைத் தடுக்கும் இந்தத்துறை வீரர்களுக்குத் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழகத்திலேயே மூன்றாவது இடமாக சிவகாசியைத் தேர்ந்தெடுத்து இந்த 40 குடியிருப்புகளை ரூபாய் 14 இலட்சம் செலவில் கட்டித் தந்துள்ளார்கள். இங்குள்ளவர்கள் மகிழ்ச்சியுடன் வாழ அவர்களுக்குத் தொலைக்காட்சிப் பெட்டி, வானொலிப்பெட்டி, மின்விசிறிகள் போன்றவை இக் குடியிருப்போருக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும் இது போன்ற நன்மைகள் தமிழக முதல்வர் புரட்சித்தலைவர் மூலம் தொடர்ந்து கிடைக்கும்" என்றார்.



விழாவில் கலந்து கொண்டு புதிய குடியிருப்பு மனைகளைத் திறந்து வைத்து மாண்புமிகு அகதிகள் மறுவாழ்வுத் துறை அமைச்சர் திரு டி.இராமசாமி அவர்கள் பேசும்போது, "தமிழகத்தில் தற்போது 131 தீயணைப்பு நிலையங்கள் உள்ளன. விரைவில் மேலும் 34 நிலையங்கள் திறக்கப் படவுள்ளன. தற்சமயம் இத்துறையில் 4750 வீரர்கள் பணி புரிகிறார்கள். இத்துறையில் உள்ள குறைகள் எல்லாம் நீக்கப்பட்டு, நவீனமயமாக்கப்பட வேண்டும் என்று தமிழக முதல்வர் அவர்கள் விரும்புகிறார்கள். புரட்சித்தலைவர் ஆட்சி வந்த பிறகுதான் இத்தகைய குடியிருப்பு மனைகள் கட்டித்தரப் படுகின்றன. நிதி ஆதாரத்திற்குத் தக்கவாறு மேலும் பல இடங்களில் இத்திட்டம் இனி விஸ்தரிக்கப்படும். இவர்களது பணியினைப் பாராட்டிடும் வகையில் நமது முதல்வர் அவர்கள் சுதந்திர தினம், குடியரசு தினம் போன்ற நாட்களில் இவர்களுக்கு விருது வழங்கிச் சிறப்பிக்கிறார்கள். நல்ல நிலையில் உள்ள வாகனங்கள், விரைவில் வழங்கப்படும். ராமேஸ்வரம் போன்ற தீவுக்கெல்லாம் கூட புரட்சித் தலைவர் ஆட்சியில்தான் இத்துறை அலுவலகம் திறக்கப்பட்டது. இதையெல்லாம் எண்ணி, நன்மைகள் நாள்தோறும் செய்து வரும் புரட்சித்தலைவர் அரசுக்கு நாம் அனைவரும் நல் ஆதரவு தருவோம்" என்றார்.

விழாவில் சிவகாசி தீயணைப்பு நிலையத்திற்குத் தொலைக்காட்சிப் பெட்டியும், விருதுநகர், ராஜபாளையம், சிவகாசி, ஸ்ரீவில்லிப்புத்தூர், சாத்தூர், காரைக்குடி தீயணைப்பு நிலையங்களுக்கு வானொலிப் பெட்டிகளும் ஸ்ரீவில்லிப்புத்தூர், இராமநாதபுரம், காரைக்குடி, பரமக்குடி, சிவகங்கை, தேவகோட்டை, அருப்புக்கோட்டை ஆகிய நிலையங்களுக்கு மின் விசிறிகளும் வழங்கப்பட்டன.

விழாவில் கலந்து கொண்டு சிவகாசி நாடாளுமன்ற உறுப்பினர் திரு சவுந்திரராஜன், மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளர் திரு இரத்தினசபாபதி, சட்டமன்ற மேலவை உறுப்பினர் திருமதி ஜெயலட்சுமி, சட்டமன்ற உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் ஆகியோரும் இவ்விழாவில் கலந்துகொண்டு பேசினார்கள். விழா முடிவில் திரு ப.அனந்தசேகர் நன்றி கூறினார்.

—நிகழ்ச்சித் தொகுப்பு:

ரெ. இராவணன்,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) காமராஜர் மாவட்டம்.

## தமிழ்நாடு பத்திரிகையாளர்கள் ஓய்வூதியத் திட்டம்

சமுதாயத்தில் சமூக, பண்பாட்டு, அரசியல் விழிப்புணர்ச்சியினை மக்களிடையே ஏற்படுத்தி மக்களாட்சி மரபுகளையும், நிறுவனங்களையும் வளர்ப்பதில் பத்திரிகையாளர்களின் பணி மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. இப்பணியினை ஆற்றிவரும் பத்திரிகையாளர்கள் ஓய்வு பெற்ற பின்னர், வயதான காலத்தில் தங்கள் வாழ்க்கையினைச் சீராக நடத்த இயலாமல் பெரும் அவதிக்கு உள்ளாகின்றனர். எனவே அவர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்தில் தமிழக அரசு, "தமிழ்நாடு பத்திரிகையாளர்கள் ஓய்வூதியத் திட்டம்" ஒன்றினைக் கொண்டுவர முடிவெடுத்துள்ளது.

தமிழ்நாட்டில் சுமார் 1200 பத்திரிகைகள், சஞ்சிகைகள், செய்தி நிறுவனங்கள் உள்ளன. இம்மாநிலத்தில் ஏறத்தாழ 6000 பத்திரிகையாளர்கள் பணியாற்றி வருகின்றனர். அவர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்தில் இத்திட்டம் கொண்டுவரப்படுகிறது.

# நளபாகத்திற்கோர் நவீன அடுப்பு

விறகு இல்லாமல், தீயில்லாமல் தேநீர் தயாரிக்க முடியுமா?

தேநீர் மட்டுமல்ல, கடலை வறுக்கலாம், பால் பாயசம் செய்யலாம்; ஏன்? அறுசுவை உணவும் அழகாய்ச் சமைக்கலாம் எப்படி?

சூரிய ஒளியில்! ஆம். சூரிய அடுப்பில்!

இந்த அடுப்பை எப்படித் தயாரிக்கிறார்கள்? அதில் எப்படி சுவையான உணவு சமைக்கிறார்கள்?

அதை நேரில் காண 15-6-85 அன்று செய்தியாளர்கள் சென்னை ஆவடியிலுள்ள முருகப்பா தொழில்நுட்பக் கல்லூரிக்குச் சென்றிருந்தோம்.

அங்குச் சூரிய அடுப்புகளைத் தயாரிக்கின்ற காட்சியைக் கண்டோம். அதுமட்டுமல்ல சூரிய அடுப்பில் தயாரிக்கப்பட்ட தேநீரையும் சுவைத்துக் குடித்தோம்; உணவு வகைகள் சமைப்பதையும் பார்த்து வியந்தோம்.

இதுபற்றிக் கல்லூரி முதல்வர் திரு ஜி. வைத்தியலிங்கம் கூறினார்—

''தமிழ்நாட்டில் இதுவரை 900 சூரிய அடுப்புகள் தயாரிக்கப்பட்டு, விற்பனை செய்யப்பட்டுள்ளன. சாதாரணமாக சூரிய வெளிச்சமுள்ள நாட்களில் சுமார் 1½ மணி முதல் 2 மணி நேரத்தில் இந்த அடுப்பைப் பயன்படுத்தி உணவு தயாரித்து விடலாம். 5 பேர் கொண்ட குடும்பத்துக்குப் பயன்படக்கூடிய அளவுக்குச் சிறிய பெட்டி போன்று இந்த அடுப்புகள் தயாரிக்கப்படுகின்றன. காபி, டீ போன்ற பானங்களைக் கூட 20 நிமிட நேரத்தில் தயாரித்து விடலாம். இறைச்சி போன்றவற்றைக்கூட இந்தஅடுப்பில் சமைத்து விட முடியும்.

''பல மாடிக் குடியிருப்புகளில் வசிப்பவர்கள் கூட இதைப் பயன்படுத்த முடியும். எந்த விதச் சத்து இழப்பும் ஏற்படாமல் சத்துள்ள உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்ய முடியும். அடி பிடிப்பது, பொங்கி வழிவது போன்ற பிரச்னைகளும் ஏற்பட வழி இல்லை. இரவுக்கான சமையலை மாலை 4 மணி அளவுக்கே முடித்துவிட்டாலும், அப்படியே அடுப்பில் வைத்து இருந்தால் இரவு வரை சூடாகவே இருக்கும். நிலக்கடலை போன்றபொருட்கள் கூட இதில் வறுக்க முடியும்.

''சமையல் எரிவாயு, மண்ணெண்ணெய் போன்றவற்றைப் பயன்படுத்துவதைக் கணிசமாகக் குறைக்க முடியும் என்பதுடன், கிராமப் புறங்களில் விறகு போன்ற எரிபொருளுக்காகக் காட்டுப் பகுதிகளில் மரங்கள் வெட்டப்படுவதைத் தவிர்க்க முடியும்.''

சூரிய வெப்ப அடுப்பை விற்பனை செய்துவரும் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தின் தனி அலுவலர் திரு பி. கன்னியப்பன் கூறுகையில்—

''நடப்பு ஆண்டில் 5 ஆயிரம் சூரிய வெப்ப அடுப்புகளை விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

''அடுப்பெரிக்க மரங்களை வெட்டுவது, அதிக அளவில் கிராமங்களில் நடைபெற்று வருவதை இந்த அடுப்புகளை கிராமப் புறங்களில் பிரபலப்படுத்துவதன் மூலம் தடுத்து நிறுத்த முடியும் என்பதால், கிராமப் பகுதிகளில் இந்த அடுப்புகள் பற்றிப் பிரசாரம் செய்யப் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

''வானொலி, தொலைக்காட்சி, திரைப்படங்கள் விளம்பரங்கள் மூலம் இந்த அடுப்பு பற்றி விளம்பரப்படுத்தத் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த அடுப்பை வாங்க பாரத ஸ்டேட் வங்கி மூலம் கடன் வழங்கப்படுவதுடன், அரசு ஊழியர்களுக்கு வட்டியில்லாக் கடன் வழங்குவது பற்றியும் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. இணையத்தின் மாவட்டத் தலைமை விற்பனையகங்களில் இந்த அடுப்புகளை விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.''

அலுமினியத் தகடு கண்ணாடி இவைகளைக் கொண்டு எளிமையாக எல்லோரும் உபயோகிக்கக் கூடிய வகையில் இது உருவாக்கப்பட்டுள்ளது. ஆண்டில் 300 நாட்கள் வரை சூரிய ஒளியில் சமைக்கலாம்.

சமைப்பது எப்படி?

1. வாசலில் வெட்ட வெளியில் சூரியனைப் பார்த்தபடி, வைக்க வேண்டும்.

2. அதிலுள்ள எதிரொளிக்கும் பகுதியிலிருந்து எதிரொளிக்கும் சூரியக் கதிர்கள் அடுப்புக்குள் விழுமாறு கொடுக்கப்பட்டுள்ள தாங்கியில் பொருத்த வேண்டும்.

3. ஒளிக்கதிர்கள், எதிரொளிக்கும் ஆடியில் பட்டு கீழுள்ள இரட்டைக் கண்ணாடி வழியே கறுப்பு வண்ணம் அடித்த பெட்டிக்குள் செல்லும். சூரிய அடுப்பின் மேல் எந்த நிழலும் படாதவாறு பார்த்துக் கொள்ளவேண்டும்.

4. கொடுக்கப்பட்டுள்ள பாத்திரத்தில் சமைக்க வேண்டிய பொருளை வைத்து, கண்ணாடியைத் தூக்கி அதனுள் இதை வைக்க வேண்டும்.

5. கறுப்பு வண்ணம் பூசப் பெற்ற பாத்திரத்தில் மட்டுமே சூரிய அடுப்பில் சமைக்க வேண்




டும். கண்ணாடிக் கதவைக் குறிப்பிட்ட நேரம் மூடி வைக்க வேண்டும்.

கவனிக்க வேண்டியவை:

1. சூரிய அடுப்பு கல்லில், சுவரில் மோதக்கூடாது.

2. அடுப்பு மழையில் நனையாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

3. உபயோகிக்கும் முன் பெட்டியையும் கண்ணாடியையும் நன்கு துடைக்க வேண்டும்.

4. ஆண்டுக்கொரு முறை கறுப்பு வண்ணம் பூசவேண்டும்.

ஐந்து பேர் உள்ள குடும்பத்திற்கு வேண்டிய சமையல் இந்த அடுப்பில் செய்யலாம். பிரஷர் குக்கரில் வைப்பது போல் அரிசி, காய்கறி, பருப்பு வகைகளையும் ஆட்டுக்கறி, கோழிக்கறிபோன்ற பொருள்களையும் வேண்டுமளவு நீர் சேர்த்து, பாத்திரத்தில் வைத்துஇவ்வடுப்பில்வைத்து கண்ணாடிக் கதவை மூடிவிட்டு, சூரிய ஒளி இதன் மீது விழச் செய்ய வேண்டும். இவ்வடுப்பின் மேல் மூடியில் உள்ள நிலைக் கண்ணாடி மேலும் சூரியஒளியை இவ்வடுப்பில் விழச் செய்கிறாற் போல் அமைக்க வேண்டும். சுமார் மூக்கால் மணியிலிருந்து ஒன்றேகால் மணி நேரத்தில் சமையல் முடிந்து விடும்.

காலை 9 மணியிலிருந்து மாலை 4 மணி வரை சமையல் செய்யலாம். இரவுக்கான சமையலைச் செய்து, அப்படியே மூடியை அடைத்து விட்டால், இரவு எந்நேரம் வேண்டுமானாலும் சூடான உணவு கிடைக்கும்.

கடலையை உடைக்காமல் உள்ளே பரப்பி வைத்தால் சுமார் முக்கால் மணியில் வறுக்கப்பட்ட கடலை கிடைக்கும். (அவ்வாறு வறுக்கப்பட்ட கடலையை எல்லோரும் சுவைத்துப் பார்த்தோம்)

வெப்பம் ஒரே சீராக உணவின் எல்லாப் பக்கங்களுக்கும் கொடுக்கப்படுவதால், உணவுப் பொருட்கள் மிக நன்றாக வேக வைக்கப்படுகின்றன.

140 டிகிரி வெப்பத்திற்கு மேல் சூடுபடுத்தப்படாது இருப்பதால், எல்லாவிதமான வைட்டமின்களும் உணவில் தக்கவைக்கப்படுகின்றன. சில முக்கிய வைட்டமின்கள் மற்ற அடுப்புகளில் சூடுபடுத்தப்படும் பொருட்களிலிருந்து ஆவியாக வெளியேறி வீணாகி விடுகின்றன.

புது வீடு கட்டுபவர்கள் சமையல் அறையைத் தென்புறம்கட்டி ஒரு சமையல் அறை மேடை வெளிப்புறமும் வைத்து, உள் மேடைக்கும் வெளிமேடைக்கும் இடையில் ஒரு கதவு பொருத்த வேண்டும். சூரிய அடுப்பை மேல் மூடியை நீக்கி விட்டு, மேசை இழுப்பறை போன்று வெளியே தள்ளியும், சமையல் முடிந்தவுடன் உள்ளேயும் இழுத்துக் கொள்ளலாம். இந்த இடங்களில் நிலைக் கண்ணாடியை வெளிப்புறம் ஒரு நிலையான இடத்தில் பொருத்திவிட வேண்டும். இந்த அமைப்பினால் பெண்கள் வெய்யிலில் நிற்காமல் சமையலை முடித்துக் கொள்ளலாம்.

சூரிய அடுப்பினால் என்ன நன்மை?

நெருப்போ, எரிபொருளோ தேவையில்லை. உணவு காய்ந்து தீய்ந்து போகாது. எந்தவித அபாயமும் இதில் இல்லை. அடுப்பு நீண்டகாலம் உழைக்கவல்லது. எரிபொருள் செலவில்லாத சமையல். புகை, தூசியற்ற உணவு நமக்குக் கிடைக்கும். வேகாதிருத்தல், அதிகம் குழைந்து கஞ்சி போலாதல் ஆகியவை சூரிய அடுப்புச் சமையலில் இராது. பண்டங்கள் ஊசிப்போகாது.

இவ்வாறு எல்லா வகையிலும் சூரிய அடுப்பானது சுவையான சமையலுக்கு மட்டுமல்லாது, கறுகறுப்பான, சூடான சமையலுக்கும் ஏற்றது என்பதை மகிழ்ச்சியோடு குறிப்பிடவேண்டும்.

பி.வி. கிரி



## விளையும் பயிர்

சேலம் மாவட்டம், திருச்செங்கோடு அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 10ஆம் வகுப்பு பயிலும் மாணவர் டி. தட்சிணாமூர்த்தி இவர் படிப்பில் மட்டுமல்ல, கதை, கட்டுரை, கவிதை எழுதுவதிலும் ஆர்வங் காட்டுகிறார். அத்துடன் விளையாட்டுகளிலும் பரிசுகள் பெற்றுப் பலரின் பாராட்டுதல்களைப் பெற்றுள்ளார்.

## மாணவர் பக்கம்

## சூரிய ஒளி மூலம் சிகிச்சை

சோவியத் நாட்டில், சூரிய ஒளியைக் கொண்டு நோய்களுக்குச் சிகிச்சை செய்யும் இரு நிலையங்கள் அமைக்கப் பட்டுள்ளன. கண்ணாடிகள் மூலம் சூரிய ஒளியைப் பிரதி பலிக்கச் செய்து நோயைக் குணப்படுத்தும் முறையை அடிப்படையாகக் கொண்டவை இந்த நிலையங்கள்.

குழந்தை மருத்துவர்கள் இந்த முறையைப் பெரிதும் வரவேற்கின்றனர். சூரிய ஒளியைப் பிரதிபலிக்கும் சாதனத்தில் 200 சிறு கண்ணாடிகள் பொருத்தப்பட்டுள்ளன. அவை ஒளிக் கதிர்களை ஓரிடத்தில் குவிய வைத்து, குழந்தையின் உடல் முழுவதும் அது கசிந்து செல்லும்படி செய்கிறது. இதனால் நோயாளியின் உடல் வெப்பப்படுத்தப்பட்டு, நோய் குணமாகிறது. இது போல் உடலின் ஆழத்தை வெப்பப் படுத்துவதற்கு வேறு முறைகளால் முடியாது. ஆஸ்துமா, மூச்சுக் குழாய் அழற்சிபோன்ற வேறு சில நோய்களைச் சூரிய ஒளியால் குணப்படுத்த முடிகிறது.

## என்ன பொருள் ?

ஈழத்தில் மட்டகளப்புப் பகுதியில் வாழும் தமிழ் மக்களிடையே வழங்கும் சில வட்டார வழக்குச் சொற்களைப் பாருங்கள்:

| | | |
|---|---|---|
| வாசிக்காலன் | — | மாடுகள் |
| வெள்ளோடன் | — | தேங்காய் |
| கூரைக்கோடு | — | வீடு |
| கனக்கன் | — | மரக்கால் |
| குஞ்சுவாயன் | — | கைப்பெட்டி |
| செடு முழவன் | — | கயிறு |

ஆதாரம்: திரு மு. சதாசிவத்தின் "தமிழில் அழகுகள்"

தகவல்: த. சீ. பாலு, பி.ஏ., சென்னைப் பல்கலைக் கழகம் (அஞ்சல்)



## மிகப்பெரிய நூல்நிலையம்

சோவியத் நாட்டில் 4 இலட்சம் நூல் நிலையங்கள் உள்ளன. மாஸ்கோவில் உள்ள வி.ஐ. லெனின் நூல் நிலையம்தான் மிகப் பெரியது.

இந்த நூல் நிலையத்தின் பரப்பளவு 1,12 000 சதுர மீட்டர்கள். இங்கு உள்ள புத்தகங்கள் அனைத்தும் ஒரு வரிசையாக வைக்கப்படுமானால் அதன் நீளம் 500 கிலோ மீட்டர் இருக்கும்.

100 ஆண்டுகளுக்கு முன் இந்த நூல் நிலையத்தில் ஒரு இலட்சம் புத்தகங்கள் இருந்தன. அதன் ஒரே படிப்பு-அறையில் 20 பேர் மட்டுமே உட்கார்ந்து படிக்க முடியும். இப்போது இந்த நூல் நிலையத்தில் 3.4 கோடிப் புத்தகங்களும், பத்திரிகைகள் மற்றும் இதழ்களின் ஆண்டுக் கோப்புகளும் கையெழுத்துப் பிரதிகளும் உள்ளன.

உலகத்தின் பல்வேறு மொழிகளிலுள்ள லெனின் நூல்கள் மிக அதிகமான அளவில் இங்கு சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. இவற்றின் எண்ணிக்கை மொத்தம் 50,000 பிரதிகளாகும். லெனின் சொந்தமாகச் சேமித்து வைத்திருந்த புத்தகங்களையும் இந்த நூல் நிலையத்திற்கு அன்பளிப்பாகக் கொடுத்து விட்டார். அன்றாடம் சுமார் 6000 வாசகர்கள் இந்த நூல் நிலையத்திற்கு வருகை தருகின்றனர்.



## "3-டி" புத்தகம்

ஐதராபாத், ஜூன் 24-ஆந்திராவில் ஐதராபாத், செகந்திராபாத் ஆகிய இரட்டை நகரங்களில் குழந்தைகளிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது முப்பரிமாண (3 டி) புத்தகங்கள்.

ஆறு ரூபாய் விலையுள்ள இந்த அதிசயப் புத்தகங்களோடு இலவசமாக காகிதக்கண்ணாடிகள் வழங்கப்படுகின்றன.

ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ள இந்த முப்பரிமாண "காமிக்ஸ்" புத்தகங்கள் ஒரே வாரத்தில் வெளியிடப்பட்ட 10 ஆயிரம் பிரதிகளும் விற்று விட்டன.

கண்ணாடியை அணிந்து கொண்டு புத்தகத்தைப் படித்தால் தான் எழுத்துக்களும், படங்களும் தெரிகின்றன.

புத்தகத்தில் அச்சிடப் பட்டுள்ள படங்கள் நிஜமான உருவங்கள் போல தோற்றமளிக்கின்றன.

முப்பரிமாண புத்தகங்களை சிறுவர்கள் விரும்பி வாங்குவதால் தெலுங்கிலும் முப்பரிமாண 'காமிக்ஸ்' புத்தகங்கள் விரைவில் வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தெரிந்து கொள்ளுவோம்!

நம்நாட்டின் தேசிய சின்னம் "சிங்கமுள்ள ஸ்தூபி" என்பது நமக்குத் தெரியும். இதே போல வேறு நாடுகளுக்கும் தேசிய சின்னங்கள் உண்டு. அவையாவன:

| | | |
|---|---|---|
| ஆஸ்திரேலியா | — | கங்காரு |
| கனடா | — | வெள்ளை லில்லி மலர் |
| டென்மார்க் | — | கடற்கரை |
| பிரான்ஸ் | — | லில்லி மலர் |
| ஜெர்மனி | — | கார்ன் மலர் |
| ஈரான் | — | ரோஜா |
| அயர்லாந்து | — | ஷாம்ராக் மலர் |
| பாகிஸ்தான் | — | பிறை நிலா |
| ஸ்பெயின் | — | கழுகு |
| அமெரிக்கா | — | தங்கக் கம்பி |

தொகுப்பு : கே. நரசிம்மன், 12-ஆம் வகுப்பு, இராம் பிரகாஷ் விஜயலட்சுமி அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, ஒசூர்.

## அன்னை



—பூங்கோவன்

வஞ்சகம் அற்றவள் அன்னை—அன்பை
வாரி வழங்குவதில் தென்னை
கொஞ்சும் தமிழில சொல்லும்—இன்பக்
காவியம் ஆயிரம் வெல்லும்

மலரும் அன்பின் அணைப்பு—மழை
மேகக் குளிரின் இணைப்பு
நிலவும் வாழும் தோற்கும்— அன்னை
நெஞ்சம் நம்மை ஈர்க்கும்.

கன்னல் சுவைதரும் மொழியாம்—கற்கும்
கல்வியில் துணைவரும் விழியாம்
இன்னல்விலக்கிடுங் கடராம்— அன்னை
இரக்க மிகுதல் வடிவாம்.



# உறுதி வேண்டும்

- நாகி -

ஷாஜி என்ற வீரர் மகா பலாக்கிரமசாலியாக விளங்கினார். அவரை பிஜப்பூர் சுல்தான் வேலைக்கு வைத்திருந்தார். ஏதோ கவனப் பிசகினால் தவறு செய்து விட்டார். இது சுல்தானுக்கு எட்டியது. மன்னித்து விடக் கூடிய சுபாவமில்லாதசுல்தான் அவரைச் சிறையில் அடைத்துவிட்டான்.

ஷாஜிக்கு ஜிஜாபாய் என்ற மனைவியும், சிவாஜி என்ற மகனும் இருந்தார்கள். சிவாஜி சிறுவனாக இருந்தாலும் தன்னுடைய தந்தையைப் போல வீரத்தில் சிறந்து விளங்கினார். தன் தந்தையைச் சிறையில் அடைத்து வைத்திருக்கிறான் சுல்தான் என்று தெரிந்து கொண்ட சிவாஜி தன்னுடைய நண்பர்களுடன் இரவோடு இரவாகச் சிறைச் சாலைக்குச் சென்று சிறையின் சுவர்களைக் கன்னம் வைத்துப் பெயர்த்துத் தன் தந்தையை விடுவித்தார். இப்படியே அவருடைய புகழ் நாளுக்கு நாள் உயர்ந்தோங்கியது. வீரத்தின் பலனாக ராய்கட் கோட்டையையும், சிம்ஹகட் என்ற கோட்டையும் பிடித்தார்.

அக்கிரமங்கள் செய்பவர்கள் அவருக்கு அடியோடு பிடிக்காது. அவர்களையெல்லாம் நாட்டை விட்டு ஓடுமாறு செய்துவிட்டார். எல்லாப் பெண்களையும் தன்னுடைய தாயைப்போல நினைத்து மரியாதை செலுத்துவார். அவனுடைய வீர தீரங்களைக் கண்ட அப்சல்கான் வஞ்சகமாகக்கொல்ல வந்தான். வஞ்சகனைச் சும்மா விடலாகாது என்று எண்ணிய சிவாஜி புலிநகத்தால் அவனுடைய வயிற்றைக்கீறி கொன்றுவிட்டார். அப்படி அஞ்சா நெஞ்சம் படைத்தவர்.

இப்படி பல வகையில் அவர் சிறந்துவிளங்கியதற்குக் காரணம் தாயார், சிவாஜிக்குச் சிறு வயதிலிருந்தே பல வீரர்களின்கதையை மனத்தில் வேரூன்றச் செய்தது தான்.

சிவாஜி மாமன்னனாக முடிசூட்டிக் கொண்ட பின்னர், நல்ல பல காரியங்கள் செய்துள்ளார். நேர்மைக்கும் நாணயத்துக்கும், கண்ணியத்திற்கும், கட்டுப்பாட்டிற்கும், சூரத்தனத்திற்கும் திலகமாகத் திகழ்ந்தார். தவறு செய்த தன் சேனாபதி தலையை வெட்டி வீழ்த்தியிருக்கிறார்.

தாயினுடைய வார்த்தையைத் தெய்வமாக நினைப்பவர். தன் தாயின் சொல்லைக் காப்பாற்ற நாட்டையே மீட்டுத் தந்தார். இத்தனை நற்குணங்களையும் பெற்ற அவர் ஒரு சாம்ராஜ்யத்திற்குச் சக்ரவர்த்தியாக இருக்கப்பெற்றும் அவர் தாய் புகட்டிய பாடங்களை நினைவில் வைத்துக் கொண்டு அடக்கமே உருவாகத் திகழ்ந்தார்.

ஒருமுறை சிவாஜியை டில்லி சக்ரவர்த்தி ஔரங்கசீப் ஆக்ராவிற்கு வரவழைத்து அவமரியாதை செய்து அவனை வஞ்சகமாகச் சிறையில் அடைத்து விட்டான். இதையறிந்த சிவாஜியின் மந்திரி வேலைக்காரன் போல் வேடம் தரித்து ஒரு மிட்டாய்க் கூடைக்குள் சிவாஜியை உட்கார வைத்து மேலே மிட்டாயைப் பரப்பி யாரும் அறியாதவாறு யமுனை நதிக் கரைக்குக் கொண்டு வந்து அங்கிருந்து குதிரை மீதில் ஏற்றி பூனா கொண்டு வந்து சேர்த்து விட்டான். சிவாஜி தன்னைச் சேர்ந்தவர்கள் அத்தனை பேரும் தன்னைப் போல் திறமை வாய்ந்தவர்களாகவும், புத்திசாலியாகவும் இருக்க ஆசைப்பட்டார். அப்படிப்பட்டவர்கள்தான் அவருடன் பழகினார்கள்.

ஒரு சமயம் மொகலாயப்படை பூனாவைத் திடீரென்று தாக்கியது. அப்போழுது நள்ளிரவு. சிவாஜியின் படைகள் வேறு இடத்தில் போர் செய்து கொண்டிருந்தமையால் கொஞ்சமாக இருந்தன. எதிரியை விரட்ட சிவாஜி தன்னுடைய புத்திக் கூர்மையால் ஒரு உபாயம் செய்தார். அன்று அமாவாசை கும்மிருட்டு.

நல்ல கருத்த பத்தாயிரம் எருமைமாடுகளைப் பிடித்து அவைகளின் கொம்புகளிலே, எண்நெய் தோய்த்து எரிந்து கொண்டிருந்த தீவட்டிகளைத் கட்டி மொகலாயப் படை இருக்கும் இடத்திற்கு விரட்டி விட்டான். எரிந்து கொண்டு வருகின்ற அத்தனை தீவட்டிகளையும் பார்த்து அத்தனைப் பேரும் போர் வீரர்கள், தீவட்டி பிடித்து வருகிறார்கள் என்று நினைத்துக் கொண்ட மொகலாயப்படை வீரர்கள்அடேயப்பா இவ்வளவு பேரையும் எப்படி சமாளிப்பது என்று நினைத்து தன் இடத்தை நோக்கி ஓட்டம் பிடித்தார்கள்.

காலையில் கறுப்பு கறுப்பாக நின்று கொண்டிருந்த எருமை மாடுகளின் கொம்புளிலிருந்தும் எரிந்து போன தீவட்டிகளை சிவாஜியின் வீரர்கள் சிரித்துக் கொண்டே கழற்றினார்கள். தன்னுடைய மதி நுட்பத்தாலும், புத்திக் கூர்மையாலும், தந்திர ஜாலத்தாலும் நாட்டைக் காப்பாற்றினார் சிவாஜி. வீரம் மட்டும் இருந்து பயனில்லை. மதி நுட்பத்தால் எதையும் சாதிக்கலாம் என்பதை இங்கு சிவாஜி உணர்த்தினார்.

அஞ்சா நெஞ்சம் படைத்த வீரர்களையும், நாட்டுக்கே தொண்டு புரிந்த தீரர்களையும், இன்னல் மலைகளை எதிர்த்துப் போராடி வெற்றி கொண்ட தியாகச் செம்மல்களையும் ஈன்றெடுத்த பாரதத் தாய்க்கு சிவாஜியும் ஒரு வரப்பிரசாதம் ஆவான்.

இந்த மாதிரி ஒவ்வொரு சிறுவர்களும் தங்களுடைய அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும். பெரிய பெரிய தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகளை நூல் நிலையங்களில் சென்று படித்துத் தெரிந்துகொள்ள வேண்டும். படிக்க பொறுமையில்லாதவர்கள் யாராவது நல்ல விஷயங்கள் சொன்னால்அவற்றைக்காதில் போட்டுக் கொள்ள வேண்டும். அது காதில் மட்டுமே இருக்க விடாமல், செயலிலும் இறங்க வேண்டும். நாமும் வாழ்க்கையில் நல்ல சாதனைகள் புரிய வேண்டுமென்ற எண்ணம் வளர வேண்டும். நம்முடைய வாழ்நாளை வீணாக கழிக்காமல் நாட்டுக்கு எந்த வகையிலாவது உபயோகம் இருக்க வேண்டும் என்ற உறுதி வைக்க வேண்டும்.



# வேலூரில் காயிதே மில்லத் விழா

காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் அவர்களின் 90வது பிறந்த நாள் விழா, தமிழ்நாடு அரசு செய்தித்துறை சார்பில் வேலூரில் உள்ள அண்ணா கலையரங்கில் சிறப்புறக் கொண்டாடப்பட்டது.

மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் கலந்து கொண்ட இவ்விழாவை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு ப.உ. சண்முகம் அவர்கள் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு ஒய்.எஸ். எம். யூசுப் அவர்களும் பங்கேற்ற இவ்விழாத் தொடக்கத்தில் வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு டேனியல் குணாநிதி இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

தமிழ்நாடு இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் திரு. அ.க.அ. அப்துல்சமது எம்.எல்.ஏ., திரு.ஏ.சி. சண்முகம் எம்.பி. தவத்திரு [illegible]ஹாரனடிகள், திரு. ரூபஸ் ஜெயகரன் ஆகியோர் உரையாற்றினர்.

காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துப் பேசிய மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள், "காயிதே மில்லத் அவர்கள் ஒரு சமயத்திற்கோ, சமுதாயத்திற்கோ, அரசியல் கட்சிக்கோ மட்டும் சொந்தமானவர் அல்ல; நாட்டு மக்கள் அனைவருக்கும் உரியவர், வழிகாட்டியவர் என்பதால்தான் புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு, விழா எடுக்கிறது. அத்தகைய காரணங்களாலே



தமிழுக்காக, தமிழ் இனத்திற்காக பாடுபட்டு [illegible] செய்த நல்லவர்களை நான் என்றும் மறக்க மாட்டேன். விட்டுவிட மாட்டேன்.



காயிதேமில்லத் முகமது இஸ்மாயிலின் பிறந்த நாள் விழாவை யொட்டி வேலூரில் நடந்த நிகழ்ச்சியில் பள்ளிச் சிறுவர், சிறுமிகளுக்கு மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் இலவசப்பாடநூல் வழங்கினார்.

தான் இங்கே கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்தோரும், இந்து சமயத்தைச் சேர்ந்தவர்களும் கூட இந்த மேடையில் இருப்பதைப் பார்க்கிறீர்கள், என்று குறிப்பிட்டார். மேலும் அவர் பேசுகையில்—''தமிழகத்தின் தளநாயகர், டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களது ஆட்சியில், காயிதேமில்லத் அவர்கள் கண்ட கனவெல்லாம் நிறைவேறும்'' என்றும் தெரிவித்தார்.

விழாத் தொடக்கத்தில் திரு. வி. கே. பழனிவேல் குழுவினரின் கிளாரினட் இசைநிகழ்ச்சி கச்சேரி நடைபெற்றது. விழா முடிவில் திரு எம்.எம்.யூசுப் இசைநிகழ்ச்சி நடைபெற்றது.

## 1586-ல் அச்சடிக்கப் பட்ட தமிழ் நூல்

இந்தியாவில் அச்சுக்கலையை முதலில் கொண்டு வந்த போர்த்துக்கீசியர்கள், 1578-இல் தமிழ் மொழியில் அச்சிட்ட முதல் நூல் "டாக்ட்ரினா கிறிஸ்டம்". அந்நூலை அச்சிடப்பயன்படுத்தப்பட்ட எழுத்துக் கட்டைகளையே பயன்படுத்தி 1586-இல் என்ரிக் என்ரிக்ஸ் எழுதிய "தி ஃப்ளாஸ் சாங்-டோரம்" என்ற தமிழ் நூல் அச்சிடப்பட்டது. அந்நூலின் ஒரு படி இத்தாலி நாட்டின் வாடிகன்நூலகத்தில் இருப்பதைத் தனிநாயகம் அடிகள் அவர்கள் 1954-இல் கண்டறிந்தார்.

அந்த அரிய தமிழ் நூலின் ஒரு படியினை (மின் படிகள்) தமிழ்ப் பல்கலைக் கழக நூலகம் அண்மையில் பெற்றிருக்கிறது.

—நூலகம்

## ஊசி போட்டு நோய் நீக்கும்

உயிர்களுக்கு நோய் நீக்கும் வகை மூன்று. அவை மணி, மருந்து, ஊசி என்பன. மணியும் மருந்தும் எல்லோர்க்கும் நன்கு தெரியும். ஆனால், ஊசியைப் பற்றி நமக்குத் தெரியாது. ஊசியினாலும் நோயை நீக்குகிறார்கள் என்று சுமார் கி.பி. 1680-இல் வாழ்ந்த ஒரு சிவஞானி பாடுவது வெளிப்படையாகத் தெரிகிறது.

ஊசிபோட்டு மருந்தைச் செலுத்தி நோய்நீக்கம் செய்வது இந்த 20-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தோன்றிய ஓர் ஒப்பற்ற சிகிச்சை முறை. ஊசி சம்பந்தமான மற்றொரு முறை 'அகுபங்ச்சர்' என்பது. இது சீனாவில் இருந்தது என்றும், இந்தியாவில்தான் தோன்றிற்று என்றும் பலவகையாகச் சொல்வார்கள். ஆனால், திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் ஊசியைக் குறிப்பிடுகிறார் 'பிணி குண மாற்றங்களை நன்கு அறிவோன் தயவொடு நன்மணி மருந்து ஊசியினால் நீக்கிடுமால்' என்று குறிப்பிடுகிறார். இது மேற்சொன்ன இருவகை ஊசிவகையுள் எந்த ஊசி வகையோ தெரியவில்லை. எப்படியிருந்தாலும் சரியாக 300 ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டில் ஊசிபோடும் முறை இருந்தது என்பது இந்தச் சிவஞானியின் வாக்கால் இன்று தெரியவருவது ஓர் அரிய மருத்துவச்செய்தி.

— தமிழ்ப்பல்கலைக் கழக செய்திமலர்

## சமுக மறுமலர்ச்சியில் பெண்கள்

ஆசிரியர் : எஸ். குலசேகரன்,
வெளியீடு: அமிழ்தம் பதிப்பகம், நார்த்தாம்பூண்டி, திருவண்ணாமலைவட்டம் (வ. ஆ.) 606 809.
விலை: ரூ. 9 பக்: 120.

பெண்ணின் பெருமையை எடுத்துரைக்கும் நூல் இது. பெண்கள் எல்லாத் துறையிலும் இடம் பெற்றிருக்கிறார்கள் என்பதையும் பெண்களின் இயல்புகளையும் கடமைகளையும் பல்வேறு சான்றுகளின் வாயிலாக நூல் ஆசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பெண்கள் எந்தெந்தத் துறைகளில் முன்னேறியுள்ளனர், என்னென்ன தொழில் செய்கின்றனர் என்பதையும் இல்லற வாழ்க்கையிலிருந்து நீதிமன்றங்கள் வரை பெண் இனம் பணியாற்றும் செய்தியையும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

குழந்தைகளை அறிவுள்ளவர்களாக வளர்ப்பதும் பெண்ணின் கடமை என்று நிறுவியுள்ள ஆசிரியர் நமது இலக்கியங்களில் பெண்கள் பாராட்டப்பட்டுள்ளதையும் பக்தி மார்க்கத்தில் பெண்கள் உச்சம் பெற்ற செய்தியையும் சுவையுறத் தெரிவித்திருக்கிறார். சுருங்கச் சொன்னால், பெண் இனத்துக்குத் தன்னம்பிக்கை ஊட்டுவதற்கு உதவும் நூல் இது எனக் குறிப்பிடலாம்.

## பொதுமக்களுக்கான முக்கிய சட்ட விளக்கங்கள்

ஆசிரியர் : சோ. சேசாசலம்,
வெளியீடு: நர்மதா பதிப்பகம், 10, சோமசுந்தரம் தெரு, தியாகராயநகர், சென்னை-600 017.
விலை ரூ. 9. பக்: 126.

நமது வாழ்க்கையில் நம்மைச் சூழும் சில சட்டப் பிரச்சினைகளை சான்றுகளுடன் தெளிவாக இந்நூலில் தந்திருக்கிறார் ஆசிரியர்.

நிலத்தகராறு, அத்துமீறல், திருடுதல் ஆகியவற்றிற்குக் கிடைக்கும் தண்டனைகள் குறித்தும், மிருகவதைக் குற்றங்கள் யாவை, ரயில்வே வழக்குகள் எவை, ஒருவரின் சொத்து எந்தச் சூழ்நிலையில் ஏலத்துக்குக் கொண்டு வரப்படுகிறது போன்ற பல்வேறு பிரச்சினைகள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளமை பாராட்டுக்குரியது.

திங்கியல் சட்டங்களின் முக்கிய கோட்பாடுகளும் விவரமாக எழுதப்பட்டுள்ளன. இந்து திருமணச் சட்டம், ஸ்ரீதனச் சொத்து பிரிக்கப்படும் விதம் மூதாதையர் சொத்து பிரிக்கப்படும் விதம் ஆகியவையும் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இந்துகளுக்கு மட்டுமல்ல - கிறிஸ்துவர்கள், முகமதியர்கள் ஆகியோர்களுக்குரிய சட்டப் பிரச்சினைகள் பற்றியும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

எளிய நடையில் அமைந்துள்ள இந்நூல் - சட்டக் கல்வியைத் தமிழில் பயிற்றுவிக்கும் அருந்தொண்டிற்கு உதவியாக இருக்கும் என்று சொல்லலாம்.

## அறிமுகம்

ஆசிரியர் : இரா. ஆனந்தி,
வெளியீடு: வளர்மதி பதிப்பகம் 8-2, இராணிஅண்ணா நகர், கே.கே. நகர், சென்னை - 600 078
விலை ரூ. 7. பக். 96.

ஐம்பதுக்கு மேற்பட்ட புதுக்கவிதைகளின் தொகுப்பான இந்நூலில், சமுதாயச் சிந்தனைகளையும், அகப்பொருள் உணர்வையும், ஏழ்மையின் ஏக்கத்தையும் நெஞ்சில் தைக்கும் வகையில் எடுத்துரைத்திருக்கிறார் நூலாசிரியர்.

சுதந்தரம், இசைவு, வரதட்சணை, இலக்கு, துவளாதே ஆகிய கவிதைகள் பொருள் பொதிந்தவை. எளிய சொற்களால் இனிய கவிதை மாளிகையை உருவாக்கியிருக்கிறார் நூலாசிரியர். இந்த மாளிகையை அணி செய்வதற்கு இன்னும் சற்று வளமான சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்திருக்கலாம்.

—சுந்தர்




## இலக்கிய இயக்கங்களும் திறனாய்வும்

ஆசிரியர் : டாக்டர் சு. பாலச்சந்திரன்,
வெளியீடு: கோமதி நூலகம், மனை எண். 474 முதல் முக்கிய சாலை, திருவான்மியூர் அண்மை வீட்டுவசதித்திட்டம், சென்னை-600 041.
விலை ரூ. 8. பக். 116

கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் ஐரோப்பா - அமெரிக்கா ஆகிய நாடுகளில் ஏற்பட்ட இலக்கிய இயக்கங்கள் குறித்தே இந்நூலை ஆசிரியர் எழுதத் தொடங்கியிருக்கிறார் என்றாலும், தமிழ் இலக்கியப் பரப்பிலிருந்தும் பல்வேறு செய்திகளை எடுத்துக்காட்டித் தமது கருத்துக்கு அரண் தேடிக்கொண்டிருக்கிறார். குறிப்பாக குறியீட்டியல் பற்றி எழுதும்போது, சித்தர் பாடல்கள், மனோன்மணீயம், அருட்பா, கவிமணியின் உமர் கயாம் பாடல்கள் ஆகிய தமிழ்

இலக்கியங்களைச் சான்றுகளாக்கி விளக்கம் செய்திருப்பது மன நிறைவைத் தருகிறது.

இலக்கிய அணுகுமுறைகளை ஐந்து வகையாகப் பகுத்து. அவற்றின் கீழ் பல விவரங்களை யும் விளக்கங்களையும் வழங்கி யிருக்கிறார். மேற்கோள்கள், சான்றுகள், தகவல்கள் எனப் பல்வேறு சிறப்பம்சங்கள் இந் நூலில் உண்டு. பல நூல்களைப் படித்த நிறைவு, இந்த ஒரு நூலைப் படிக்கும்போது ஏற் பட்டு விடுகிறது.

—தமிழ்ப்பித்தன்

## உயர்ந்த உள்ளம்

ஆசிரியர்: தாமரைக் கண்ணன்,
வெளியீடு: பராசக்தி பதிப்பகம்;
31, சீனிவாசப்பெருமாள்
கோயில் தெரு,
சென்னை-600014.
விலை: ரூ. 9 பக்கம்:112.

குழந்தைகளுக்குக் குதூகல மூட்டவும் அதே சமயத்தில் அவர்களுக்கு நல்லறிவு புகட்டவு மான நீதிக் கதைகள் நிறைய வெளியிடுதல் வேண்டும். அந்த வகையில், திரு தாமரைக்கண் ணன் எழுதிய இந்நூல் வரவேற் கக்கூடியதாகும்.

இந்நூலில் ஏழு சிறு கதைகள் உள்ளன. எல்லாம் மணியான கதைகள். மனத்துக்கு மகிழ்வளிப் பவை. பிறர்பொருளை விரும் பாமை, தவறு செய்பவனைத் திருத்துதல் , தீ நட்பை வெறுத் தல், தீவினை செய்வதற்கு அஞ்சு தல், நாட்டுக்குத் தொண்டாற்று தல், பிறர்க்கு உதவி செய்தல் போன்ற பண்புகள் கதைகளில் இழைந்தோடிச் செல்கின்றன. 'இன்ப மாளிகை' க் கதை, புத்த ரின் வரலாற்றைக் கூறும் உண் மைக் கதையாகும்.

ஒவ்வொரு கதையின் முடிவி லும் கதைக்குப் பொருத்தமான திருக்குறளைக் குறிப்பிட்டிருப் பதுபொருத்தமாக அமைந்திருக் கிறது.

## இயற்கைச் சிகிச்சை

ஆசிரியர்: வித்வான்
வீ. ஞானவான்,
வெளியீடு: தமிழ்நாடு இயற்கை
மருத்துவச் சங்கம்,
மதுரை-625 020.
விலை: ரூ. 3.25 பக்கம்: 62

நோயற்ற வாழ்வு வாழவும், நோய் வருமுன் காக்கவும் நாம் பழகிக்கொண்டால் நல்வாழ்வு வாழலாம் என்பதைச் சொல்லா மல் சொல்கிறது இந்நூல்.

இயற்கை வாழ்வு, இயற்கைச் சிகிச்சை இரண்டும் இரு கண்கள் போன்றவை. இயற்கைச் சிகிச்சையின் இன்றியமையாத தன்மையை மகாத்மா காந்தி யடிகளே போற்றியுள்ளார்.

இந்நூலில் இயற்கைச் சிகிச்சை பற்றிய தத்துவங்களும், உடலியல், உபவாசம், இயற்கைச் சிகிச்சை முறைகள், இயற்கை உணவு, நோயும்—சிகிச்சையும், உடல் — உள்ளப் பயிற்சிகள் ஆகிய ஏழு பிரிவுகளில் ஆசிரியர் விளக்கமாகவும் தெளிவாகவும் சிகிச்சை முறைகளைக் கூறியுள் ளார். ஒவ்வொரு இல்லத்திலும் இருக்கவேண்டிய நூல்.

## விசார சாகர சுருக்கம்

ஆசிரியர்: சி.யூ. நஞ்சப்பா,
வெளியீடு: முருகானந்த நிலையம், சிங்காரம்பாளையம்,
(அஞ்சல்), காரமடை (வழி),
641 104, கோவை மாவட்டம்.
விலை: ரூ 4. பக்கம்: 72

சாது நிச்சலதாஸ் என்னும் பெரியோரால் இந்தி மொழியில் எழுதப்பட்டு, குத்தாலம் அ. சிவராயரால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டதிலிருந்து தொகுக்கப்பெற்ற நூல் இது.

பல்வேறு தத்துவங்களை உள் ளடக்கிய இந்நூலில், பிரம்மம், கர்மம் விளக்கப்படுகிறது. குரு பக்தி, மாயையின் விளக்கம், ஆத்ம விவேகம், யோக சாஸ் திரம் போன்றவை கூறப்பட் டுள்ளன.

எல்லாருக்கும் புரியும் வண்ணம் இன்னும் கொஞ்சம் நல்ல தமிழில் தந்திருக்கலாம்.

—பி.வி. கிரி

## போது அறிவுத் துணுக்குகள்

உடலுக்கும் உள்ளத்துக்கும் சக்தி தரும் யோகா ஐந்து வகைப்படும். பக்தி யோகா, ஞான யோகா, கர்ம யோகா, ராஜ யோகா, லய யோகா ஆகியன அவை. யோகாவின் மூலம் குண்டலினி சக்தியைப் பெறலாம். குண்டலினி சக்தி என்பது உலகின் அபூர்வ சக்தி. சுவாமி விவேகானந்தர் இந்த அபூர்வ சக்தியை பல்வேறு கடின யோகங்களுக் கிடையே பெற்றார்.

• • •

சோவியத் நாட்டிலுள்ள கிர்கியா என்ற இடத்தில் மொத்தம் பதினைந்தே டாக்டர்கள் தான் இடம் பெற்றிருந்தார்கள். அந்த நாட்டின் மக்கள்தொகை ஒரு இலட்சம். இதனில் பதினைந்தே ஆண்டில் அந்நாட்டின் மக்கள் தொகை ஐம்பதாயிரமானது. சோவியத் நாட்டின் மொத்த மலேரியா நோயும் இங்குதான் உருவானதாம். இந்த நாடு இப்போது அரசின் தீவிர கவனத்தில் உள்ளது.

• • •

இருதயத்திற்குள் இரத்த ஓட்டத்தின் திசை 'V' வடிவமானது. முதலில் ஆரிக்களின் வழியே கீழாகவும், பின்னர் மேல் புறமும் பாய்கிறது.

• • •

குழந்தை பிறந்தவுடன் முதன்முதலில் கத்தத் தொடங்கும்போது சுயமாகச் சுவாசிக்கத் தொடங்குகிறது.

• • •

உடலின் பெரிய எலும்பு, தொடை எலும்பு. அதன் நீளம் பதினெட்டு அங்குலம்.

தொகுத்தவர்:

ச. சிவப் பிரபாகரன்
இரண்டாமாண்டு எம்.பி.பி.எஸ்
தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி




அறுவைச் சிகிச்சையிலே லேசர் ஒளிக்கற்றையை மருத் துவர்கள் இன்னும் திறம்படப் பயன்படுத்துவதற்கு உதவும் வகையில் புதிய 'கம்ப்யூட்டர் கட்டளை' ஒன்று கணிக்கப்பட் டுள்ளது. மனிதத் தோலின் திசுக் களின் மீது லேஸர் ஒளிக்கற்றை உண்டு பண்ணிய விளைவுகளைக் கம்ப்யூட்டர் காட்டிவிடுகிறது.

குருதி வடியும் புண்ணைச் சுற் றியிருக்கும் ஆரோக்கிய நிலை யில் உள்ள திசுக்களுக்கு அளவுக்கு அதிகமான லேஸர் வெப்பம் தீங்கு உண்டு பண்ணும். அதே போல் கண்ணில் அறுந்து போன இரத்த நாளத்தைச் சுற்றியுள்ள திசுக்களுக்குத் தீங்கு ஏற்படும். லேஸர் வெப்பம் தேவையான அளவுக்குக் குறைவாக இருந் தாலோ நாளங்களை இணைக்கும் வேலையைச் செய்யாமல் விட்டு விடும்.

முன் காலத்தில் அறுவைச் சிகிச்சையின்போது வெவ்வேறு சூழ்நிலைகளில் லேஸரின் குண்டூசி போன்றிருக்கும் ஒளிக்கற்றையின் வெப்பத் திறனை எவ்வளவு பயன்படுத்தவேண்டும். என்பதை மருத்துவர்கள் ஊகித்தே அறிய வேண்டியிருந்தது. அந்த ஊகங்கள் இனி தேவை இல்லை. மிகத் துல்லியமாகக் கணித்துவிட முடியும்

இந்தக் கட்டளையை உருவாக் குகையில் ஒரு சிக்கலைத் தீர்க்க வேண்டியதாயிற்று. முன்ஆராய்ச் சியாளர்கள் தீர்க்கத் தவறிய சிக் கல் இது. லேஸர் ஒளிச் சிதறுதல் வெப்பம் உட்கொள்ளுதல், வெப் பம் பரவுதல் உடலின் திசுக் களின் பல்வேறு நிலைமைகள் ஆகியவற்றை அனைத்தும் ஒரு கணித நியதிக்குள் திணிக்க வேண் டும். அறுவை நடந்து கொண்டி ருக்கையில் கண் இமைக்கும் நேரத்தில் முடிவெடுத்துப் பயன் படுத்தக் கூடியதாக அதுஅமைய வேண்டும்!

கம்ப்யூட்டர் பொறி ஒன்று தான் இவ்வளவு குறுகிய நேரத் தில் இதனைச் செய்யவல்லது. எனவே பெரிய மருத்துவமனை களில் சாதாரணமாகக் காணப் படும் மைக்ரோ கம்ப்யூட்டர் ஏற் கக் கூடியதாக ஒரு கட்டளை கணிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கணிப்பினைப் பயன் படுத்தி , ''டிஃபரன்ஸ் இக்வே ஷன்ஸ்'' என கூறப்படுவதிலி ருந்து ஒரு எண்ணை எடுத்து, லேஸரின் ஆற்றல் அளவு ஒளிக் கற்றை வீச வேண்டிய நேரம், அதன் விட்டம் அதாவது அதன் ஒளி பாயும் இடத்தின் அளவு போன்ற லேஸரின் பல்வேறு மாறு பாடுகளைக் கட்டுப்பாடு செய்யும் கம்ப்யூட்டர் கட்டளைத் தயா ரிக்கப்பட்டது பல்வேறுமாறுபாடு கள் குறிப்பிடப்பட்டு விட்டால் கம்ப்யூட்டர் திரையில், உடல் திசுக்களில் லேஸரின் விளைவு அப்படியே படம்போட்டுக் காட் டப்படுகிறது.

மருத்துவர்கள் அறுவை செய் கையிலேயே திரையில் இதனைப் பார்க்க முடிகிறது. திசுக்களின் மேலேயும் அடியிலும், ஆழமாக வும் என்னென்ன விளைவுகள் ஏற் பட்டுள்ளன என்பதை அவர்கள் உடனே உணர முடிகிறது.

மருத்துவத் தொழிலில் கம்ப் யூட்டர் சர்வசாதாரணமான கரு வியாக விளங்கப்போகும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

லேஸர் அறுவைச் சிகிச்சையின் வெற்றி மருத்துவரின் திறமையில் தான் இருக்கிறது. உங்களுக்குப் பதிலாக அது செயல்படாது!

கலிஃபோர்னியா மருத்துவரான லாரிமோர் கம்மின்ஸ், கலிஃபோர் னியா பல்கலைக்கழகப் பேராசிரி யரான மைக்கேல் நாயென்பெர்க் ஆகிய இருவரின் முயற்சியால் கம்ப்யூட்டர் கட்டளை உருவாகி யுள்ளது.

## சோழவரத்தில் பள்ளிக் கட்டடங்கள் திறப்பு விழா.

செங்கல்பட்டு மாவட்டம் பொன்னேரித் தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் புதிய சமூகக்கூடம், பள்ளிக் கட்டடங்கள் திறப்பு விழா 16-7-85 அன்று நடந்தது.

செம்பிலிவரத்தில் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள சமூகக் கூடத்தையும், ஜெகந்நாதபுரம் மற்றும் காரனோடையில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள பள்ளிக்கட்டடங்களையும் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன் அவர்கள் திறந்து வைத்தார். அப்போது அவர் பேசுகையில்—

''வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்'' என்று இராமலிங்க அடிகளார் சொன்னது போல, புரட்சித் தலைவர் அவர்கள் மக்கள் பசிப்பிணி போக்கும் வகையில் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார். அது எல்லாரும் போற்றக் கூடிய வகையிலே சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டு வருகிறது.

''குழந்தைகளை மழை, வெய்யில் பாதிக்கக்கூடாது என்பதற்காக கிராமங்கள்தோறும் பள்ளிக் கட்டடங்கள், சமுதாயக் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இவை மட்டுமல்ல, கிராம மக்கள், நலவாழ்வு வாழ்ந்திட குடிநீர், மருத்துவமனை, சாலை, மின்வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன'' என்று குறிப்பிட்டார்.

காரனோடையில் நடந்த விழாவில், நலிந்த நெசவாளர்கள் 120 பேர்களுக்கு, பாரத ஸ்டேட் வங்கி வழங்கிய கடன் தொகைகளை மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்த விழாவில் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு கே.பி. குலசேகரன், சைதை கோட்ட வளர்ச்சி அலுவலர் திரு ஆர். சௌந்தரபாண்டியன், காஞ்சிபுரம் திட்ட அலுவலர் திரு எஸ். டி. சாமுவேல், பொன்னேரி சைதை கோட்டாட்சித் தலைவர் திரு வை. மூர்த்தி, சோழவரம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் திரு என்.குப்புசாமி ஆகியோர் கிராம வளர்ச்சிப் பணிகள் பற்றிப் பேசினர்.

●

## எ.சீத்தப்பட்டி சமுதாய மன்றக் கட்டடம் திறப்பு விழா

திருச்சி மாவட்டம், வையம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் எ. சீத்தப்பட்டி சமுதாய மன்றக் கட்டடத் திறப்பு விழா 6-7-85 அன்று நடந்தது.

கரூர் கோட்ட வளர்ச்சி அலுவலர் திரு ஜி. ராமநாதன் வரவேற்புரை ஆற்றினார், மருங்காபுரித்தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு கே. சோலைராஜ் தலைமை தாங்கினார்.

மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர்திரு சிவசூரியன், திருச்சி (தாட்கோ) மாவட்ட வளர்ச்சி அலுவலர் திரு வி. கனகசபை, முன்னாள் பெருந்தலைவர் திரு வி. ரெங்கசாமி, மணப்பாறை வட்டக் குழுத் தலைவர் திரு. வி. கோபால்சாமி, முன்னாள் உதவிப் பெருந்தலைவர் திரு. வி. சுவாமிநாதன், ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. சுப்புரெத்தினம் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. அ. அருணாசலம் அவர்கள் சமுதாய மன்றக் கட்டடத்தைத் திறந்து வைத்து, எ. சீத்தப்பட்டி காலனிக்கு வானொலிப் பெட்டி வழங்கியும், நல்லாம்பிள்ளை புதூர் ஆதிதிராவிடர்களுக்கு 41 மனைப்பட்டாக்களை வழங்கியும் சிறப்புரை ஆற்றினார்.

ஆணையர் திரு ஆர். பாலகிருஷ்ணன் நன்றியுரை கூறினார்.

●



பெரம்பலூர் வட்டம், அத்தியூர் கிராமத்தில் தீயினால் பாதிக்கப்பட்ட ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு அ. அருணாசலம் அவர்கள் மனைப்பட்டா வழங்கினார்.



# பால் பற்றாக்குறை போக்க

முதன்முறையாக சென்னை அண்ணாநகரில் 'ஆவின்' நுகர்வோர் சந்திப்புக் கூட்டம் 14-7-85 அன்று சிறப்பாக நடந்தது. இக்கூட்டத்தில் நகரின் பல்வேறு பகுதிகளிலிருந்து நுகர்வோர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் தலைவர் திரு. க. கலைமணி அவர்கள் நுகர்வோர்களை நேரிடையாகச் சந்தித்துக் கருத்துக்களைக் கேட்டறிந்தார்.

பாலின் தரம், அளவு குறித்தும், பால் குறித்த நேரத்தில் கிடைக்காதது குறித்தும் பலர் தங்கள் கருத்துக்களைக் கூறினார்கள். பால் விநியோகம் பால் பொருட்களின் தரம் பற்றிப் பலர் மன நிறைவு தெரிவித்தார்கள். எல்லாக் கருத்துக்களுக்கும் பதில் அளித்து சம்பந்தப்பட்ட அலுவலர்கள் பேசினார்கள்.

'ஆவின்' பொது மேலாளர் திரு ஜலால் பேசும்போது 'ஆவின்' பாலின் தரத்தையும், கவர்மாகக் கிடைப்பதையும் போக்க தக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்'' என்றார்.

பால் விநியோக அலுவலர்கள் திரு அலி, திரு கோபால் ஆகியோர் பேசும்போது ''அரும்பாக்கம், டி.பி.ஐ. வளாகம் போன்ற இடங்களில் புதிய பார்லர்கள் திறக்கப்படும். அண்ணா நகர், அண்ணாசாலை, அடையாறு அல்லது பெசண்ட் நகர், மயிலாப்பூர் ஆகிய இடங்களில் எந்த நேரத்திலும் பால் கிடைக்கும்படியாகப் புதிய ஆவின் பார்லர்கள் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது'' என்றனர்.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் தலைவர் திரு க. கலைமணி அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்து நிறைவுரையாற்றிப் பேசுகையில் குறிப்பிட்டார்:

''நடப்பு ஆண்டில் பால் விநியோகம், பால் பொருட்கள் மூலம் 60 கோடி ரூபாய் விற்பனை நடைபெறும். மக்களுக்கு ஆவின் மூலம் கிடைக்கும் பாலும் கிடைக்கத் தருந்த ஏற்பாடுகள் செய்யப்படும்.

''சென்னையில் தற்போது 23 சதவீத அளவு பால் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. இது மேலும் விரிவாக்கப்படும். இதில் வரும் மார்ச்சு மாதத்திற்குள் 125 தானியங்கிப் பால் வழங்கும் நிலையம் ஏற்படுத்தப்படும்.

''சென்னையில் பால் பற்றாக்குறையைப் போக்க ரூ. 6 கோடிச் செலவில் தென் சென்னையில் மூன்றாவது பால் பண்ணை ஏற்படுத்தப்பட உள்ளது. அதன் மூலம் 4 லட்சம் லிட்டர் பால் மக்களுக்குவிநியோகிக்கப்படும்.''

விழாவில் ஆவின் துணைப் பொதுமேலாளர் திரு தனராஜ், திரு சூரியநாராயணா, மக்கள் தொடர்பு அலுவலர் திரு சிவகாமிநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அன்றைய கருத்தரங்கு, வளமான வெண்மைப் புரட்சிக்கு வழிவகுக்கும் என்பதைச் சொல்லாமல் சொல்லியது.

# கல்லூரிக் கல்வித் துறை

சென்னை-6

## அறிக்கை

ஆரம்ப மற்றும் இடைநிலைப் பள்ளியாசிரியர்கட்கான மாநிலப் படிப்புதவித் திட்டம் 1985-86.

பொது அறிவிப்பாக தமிழ்நாடு அரசு அறிவிப்பதாவது. அங்கீகரிக்கப்பட்ட (1) ஆரம்ப, ஆரம்ப முன்னிலை, இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள், (2) உடல் ஊனமுற்றோருக்கான கல்வி நிலையங்கள் மற்றும் பயிற்சிப் பள்ளிகள், (3) பாதுகாப்பு அமைச்சகத்தால் நடத்தப் பெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர் குழந்தைகளுக்கான மாநிலப் படிப்புதவித் திட்டத்தினை இவ்வாண்டும் தொடர்வதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**தகுதிகள்:—இப் படிப்புதவிக்கான முக்கிய தகுதிகளாவன :—**

(1) விண்ணப்பதாரர் மார்ச்/ஏப்ரல் 1985-ல் நடைபெற்ற புதிய பத்தாம் வகுப்பு/மெட்ரிகுலேஷன்/ஆங்கிலோ இண்டியன் உயர்நிலைத் தேர்வு/தொழில் நுட்பவியல் உயர்நிலைப் பள்ளி சான்றிதழ் தேர்வு ஏதேனும் ஒன்றில் 60 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றுத் தேறியிருக்க வேண்டும்.

(2) மார்ச்/ஏப்ரல் 1985-ல் நடைபெற்ற மேல்நிலைத் தேர்வில் (+2) முதல் தரம் அல்லது சராசரியாக 60 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

(3) ஏப்ரல்/மே 1985-ல் நடைபெற்ற இளநிலைப் பட்ட வகுப்புத் தேர்வில் முதல்தரம் அல்லது சராசரியாக 60 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

(4) ஏப்ரல்/மே 1985-ல் நடைபெற்ற நிறைநிலை பட்ட வகுப்புத் தேர்வில் முதல் தரம் அல்லது சராசரியாக 60 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

(5) நடைமுறை விதிகளின்படி மாலை நேரக் கல்லூரிகளிலும் அஞ்சல்வழிக் கல்வி நிலையங்களிலும் தங்கள் படிப்பினை தொடரும் மாணவர்களுக்கு இந்தப் படிப்புதவி பெற அருகதை இல்லை. எனினும் இது தொடர்பாக அரசுக்கு எழுதப்பட்டுள்ளது. எனவே மாலை நேரக் கல்லூரிகளில்/அஞ்சல்வழி கல்வி நிலையங்களில் பயிலும் மேற்குறிப்பிட்ட தகுதியுடைய மாணவர்களும் தங்களது விண்ணப்பங்களை தாங்கள் கல்விபயிலும் நிலையத் தலைவர் வாயிலாக குறிப்பிடப்பட்ட தேதிக்குள் இவ்வலுவலகத்தில் விண்ணப்பங்கள் கிடைக்கும்படி அனுப்பி வைக்கலாம். ஆனால், அரசிடமிருந்து இது தொடர்பான ஆணைகள் கிடைத்த பின்னரே தேவையாயின் அவர்கள் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

(6) மேற்குறிப்பிட்ட தேர்வுகளில் தமிழ்நாட்டிலிருந்து தேர்ச்சி பெற்ற மாணவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க தகுதியுடையவராவர்.

(7) இப்படிப்புதவி பெற விழையும் மாணவர்கள் உரிய காலத்திற்குள் தம் படிப்பினைத் தொடர கல்வி நியைலங்களில் சேர்க்கை கிடைக்கப் பெறாவிடினும், தேவையான சான்றுகளுடன் விண்ணப்பத்தை நிறைவு செய்து குறிப்பிடப்பட்ட தேதிக்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும். சேர்க்கை கிடைத்த பிறகு அது பற்றிய அறிக்கையினை பிறகு தனியே அனுப்ப வேண்டும்.

(8) 1985-ஆம் ஆண்டிற்கு முன்பு நடந்த தேர்வுகளில் தேர்ச்சி பெற்றோர் இவ்வாண்டில் விண்ணப்பிக்கத் தகுதியில்லாதவராவர்.

(9) 'இந்தியன் ஸ்கூல் சர்ட்டிபிகேட்' டிசம்பர் 1984-ல் நடைபெற்ற தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களும் இந்த படிப்புதவியைப் பெற விண்ணப்பிக்க தகுதியுடையவர்களாவர்.

(10) கல்வித் தொடர்பான நிர்வாகப் பதவிகள் மற்றும் ஆய்வு அலுவலர்களின் குழந்தைகள் இப்படிப்புதவி பெறத் தகுதி பெற்றவரல்லர்.

(3) விண்ணப்பப் படிவங்கள் அதற்கென குறிக்கப்பட்ட படிவத்தில் முழு, வெள்ளைத்தாளில் ஒழுங்கான கையெழுத்திலோ அல்லது தட்டச்சு செய்யப்பட்டோ சரியான முழுமையான தகவல்களுடன் பணிந்தனுப்பப்பட வேண்டும். மாதிரிப் படிவங்களை மாணவர்கள் தாம் இறுதியாகப் பயின்ற கல்வி நிலையத்திலிருந்தோ அல்லது கல்லூரிக் கல்வி இயக்ககம் சென்னை-6 இலிருந்தோ பெறலாம்.

(4) மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் தொழில் நுட்பப் பள்ளிகளில் சேரும் மாணவர்களிடமிருந்து, நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் இவ்வலுவலகத்திற்கு வந்து சேரக் கடைசித்தேதி 16-9-1985 ஆகும். இளநிலைப் பட்ட வகுப்பு/நிறைநிலைப்பட்ட வகுப்பு/தொழில் கல்விகள் (சான்றாக கலை, அறிவியல், மருத்துவம், பொறியியல், வேளாண்மை மற்றும் இதர தொழிற் கல்லூரிகள்) கல்லூரிகளில் சேரும் மாணவர்களிடமிருந்து நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேரக் கடைசித் தேதி 30-9-1985 ஆகும்.

DIPR/27652/85-14/ASPCO. கல்லூரிக் கல்வி இயக்குநர்.

அளவான குடும்பம் வளமான வாழ்வு




# சிந்தனை வளர்க்கும் செய்தித் தொடர்பு

மக்களாட்சி முறை செவ்வனே செயல்பட்டு வரும் நமது நாட்டில் செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் பணி மிகவும் இன்றியமையாததாகும்.

அரசின் ஆக்கப்பணிகளைப் பொதுமக்கள் செவ்வனே புரிந்து கொள்ள அரசின் திட்டங்களை நிறைவேற்றுவதில் அவர்களின் ஒத்துழைப்பை நல்கச் செய்யும் மக்கள் தொடர்புச் சாதனங்களை இத்துறை சிரிய வகையில் திறம்படச் செயலாற்றி வருகிறது.

அரசின் கொள்கைகளையும் திட்டங்களையும் மக்கள் வெகுவாக உணர்ந்தறியும் நோக்கத்தில் மாநில அரசின் சார்பில் இத்துறை விளம்பரங்களைத் தயாரித்து வெளியிடுகின்றது.

**கள விளம்பரம்**

அரசின் வளர்ச்சிப் பணிகள் பற்றிய செய்திகளையும், மக்கள் அத் திட்டங்களில் எவ்வாறு தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்பதைப் பற்றியும் களவிளம்பரப் பணிகள் மூலம் செய்தியினை மக்களுக்கு இத்துறை எடுத்துரைக்கிறது.

மாவட்டங்களில் செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர்களின் கட்டுப்பாட்டின் கீழ் 63 திரைப்படக் கருவிகள் உள்ளன. அரசின் கொள்கைகளையும், திட்டங்களையும், மக்களுக்குத் தேவையான செய்திகளையும் மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் திரைப்படக் காட்சிகள் கிராமப் பகுதிகளில் நாள்தோறும் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

பொதுமக்களின் நலனில் அக்கறை கொண்ட இவ்வரசு சிறு சேமிப்பு, தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, குடும்ப நலம் ஆகிய திட்டங்களை பொதுமக்கள் அறிந்து கொள்வதற்கேற்ப வில்லுப்பாட்டு, நாடகங்கள், பொதுக்கூட்டங்கள், சிறு அளவிலான பொருட்காட்சிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் மூலம் விளக்கி வருகிறது.

**பத்திரிகைத் தொடர்பு:**

இத்துறை பொது முக்கியத்துவம் வாய்ந்த பத்திரிகைச் செய்திகளைப் பத்திரிகைகளுக்கு அளித்து வருகிறது. மேலும் செய்தி நிருபர்கள் கூட்டங்கள் அவ்வப்போது ஏற்பாடு செய்து நடத்தப்பட்டு வருகின்றன.

தலைமைச் செயலரும், மற்றும் பிற துறைச் செயலர்களும் அரசின் பல்வேறு ஆக்கப் பணிகளையும், திட்டங்களின் முன்னேற்றங்களையும் வாரம் ஒருமுறை நடத்தப்படுகின்ற செய்தியாளர்கள் கூட்டத்தில் தெரிவிக்கின்றனர்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், மற்றும் முக்கிய பிரமுகர்களும் கலந்துகொள்ளும் செய்தியாளர்கள் கூட்டங்களை இத்துறை ஏற்பாடு செய்து வருகிறது.

மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் பத்திரிகைத் தொடர்பு அலுவலராகவும் பணி புரிகின்றனர். மாவட்டங்களில் உள்ள பத்திரிகையாளர்கள், அந்தந்த மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வளர்ச்சி வட்டாரங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மாவட்டங்களில் உள்ள செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் இப்பணியினை மேற்கொண்டார்கள்.

வெளிநாட்டிலிருந்து வரும் பத்திரிகையாளர்களும், தொலைக்காட்சியினரும், வானொலி நிலையத்தினரும், பிற மாநிலங்களிலிருந்து வரும் பத்திரிகையாளர்களும் இம்மாநிலத்தின் பல பகுதிகளைப் பார்வையிடவும் அரசின் திட்டங்களை ஆராயவும் இத்துறை அனைத்து உதவிகளையும் செய்கிறது.

**தொலைக்காட்சி நிலையங்கள்:**

1984-85ஆம் ஆண்டில் குறைந்த சக்தி தொலைக் காட்சி ஒளிபரப்பு நிலையங்கள் வேலூர், ஏர்க்காடு, கோயம்புத்தூர், கும்பகோணம், திருச்சிராப்பள்ளி போன்ற இடங்களிலும், சமீபத்தில் நெய்வேலியிலும் மத்திய அரசால் ஆரம்பிக்கப்பட்டன. ஒரு கிலோ வாட் சக்தி கொண்ட தொலைக்காட்சி ஒளி பரப்பு நிலையம் கொடைக்கானலில் அமைக்கப்பட்டது.

**பொருட்காட்சி:**

பொருட்காட்சிகள் பொழுதுபோக்கு அம்சங்களைப் பெற்றிருப்பதோடு மட்டுமல்லாமல் மக்களுக்குக் கல்வி அறிவூட்டும் சாதனமாகவும் பயன்படுகின்றன. 1978 முதல் இதுவரையில் இத்துறை 26 பொருட்காட்சிகளை நடத்தியுள்ளது. நுழைவுக் கட்டணம், அரங்கு வாடகை, உரிமைக் கட்டணங்கள், மின் கட்டணம் முதலிய வகையில் நிகர வசூல் ரூ.367 இலட்சம் இத்துறைக்கு வருமானமாக வந்துள்ளது. கட்டுமானப் பணிகள், மின் இணைப்பு, கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றுக்கான செலவு ரூ. 177 இலட்சம், பொருட்காட்சியில் பங்கு கொள்ளும் அரசுத்துறைகளும், நிறுவனங்களும், ரூ. 88 இலட்சம் செலவுசெய்துள்ளன. நிகர இலாபம் அரசுக்குச் சுமார் ரூ. 102 இலட்சம் என்ற அளவில் கிடைத்துள்ளது. நாட்டிலேயே அரசுக்கு இவ்வகையில் வருமானத்தை ஈட்டித் தருகின்ற தனிப் பெருமையுடன் தமிழ்நாடு செய்தித் துறை செயல்பட்டு வருகிறது.

**நினைவகங்கள்:**

சென்னையிலுள்ள வள்ளுவர் கோட்டம், அண்ணா சதுக்கம், காமராஜ் இல்லம், இராஜாஜி நினைவகம், காமராஜ் நினைவகம் ஆகியவையும், காஞ்சிபுரத்திலுள்ள அண்ணா இல்லம், ஈரோட்டிலுள்ள பெரியார் -அண்ணா நினைவகம், தர்மபுரி மாவட்டத்திலுள்ள தொரப்பள்ளியில் அமைந்துள்ள இராஜாஜி நினைவகம், தில்லையாடியிலுள்ள வள்ளியம்மை நினைவு மண்டபம், விருதுநகரிலுள்ள காமராஜ் நினைவகம், எட்டயபுரத்திலுள்ள பாரதியார் மண்டபம், ஒட்டப்பிடாரத்திலுள்ள வ.உ.சி. இல்லம், கன்னியாகுமரியிலுள்ள காந்தி மண்டபம் ஆகியவையும் செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அரசின் நினைவகங்களாகும்.

**தமிழரசு**

தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளியாகும் 'தமிழரசு' இதழ்கள் மூலம் அரசின் நோக்கங்களும் கொள்கைகளும் மக்களுக்காகத் தெரிவிக்கப்படுகின்றன. மாதம் இருமுறை வெளிவரும் தமிழ் இதழ்கள் சராசரி 45,000 பிரதிகளும், ஆங்கில இதழ்கள் 4,000 பிரதிகளும் விற்பனை செய்யப்படுகின்றன. தனியார், முகவர்கள், சந்தாதாரர்கள் மூலமும், மாவட்டங்களிலுள்ள செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் மூலமும் இந்த இதழ்கள் விற்பனை செய்யப்படுகின்றன. அரசின் பல்வேறு துறைகளின் வளர்ச்சிப் பணிகள், சாதனைகள் அடங்கிய சிறப்பு மலர்களும் வெளியிடப்படுகின்றன. 'தமிழரசு' இதழ்களுடன் அவ்வப்போது இலவச இணைப்புகளும் அச்சிட்டு அவற்றுடன் வழங்கப்படுகின்றன.

'தமிழரசு' அலுவலகத்திலுள்ள வெளியீட்டுப் பிரிவு, புத்தகங்கள், துண்டு வெளியீடுகள், சுவரொட்டிகள் ஆகியவற்றை வெளியிட்டு வருகிறது. 1984ஆம் ஆண்டில், இந்த அரசு இருபது அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதில் எய்திய சாதனைகள் பற்றிப் புத்தகங்களை வெளியிட்டுள்ளது. முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் குறித்து ஆங்கிலத்திலும் தமிழிலும் பல கையேடுகளை வெளியிட்டதுடன் வண்ணச் சுவரொட்டிகளையும் வெளியிட்டது. 'தமிழ்நாடு ஒரு பார்வையில்' என்ற தலைப்பிலுள்ள அழகிய வெளியீடு ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டு மாவட்டங்களிலுள்ள செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் மூலம் பொது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. தனியார் நிறுவனங்கள் தமிழரசில் தங்களுடைய விளம்பரங்களை வெளியிட்டுப் பயன் பெறுகின்றன.




1984ஆம் ஆண்டு தமிழரசு அச்சகத்தை விரிவுபடுத்துவதற்கு ரூ.6.5 இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

'தமிழரசு' தமிழ்-ஆங்கில இதழ்கள் இங்கு அச்சிடப்படுகின்றன.

**திரைப்படங்களுக்கு உதவித்தொகையளித்தலும், சிறந்த திரைப்படங்களுக்கும், கலைஞர்களுக்கும் பரிசுகள் வழங்குதலும்:**

மதுவிலக்கு, சாதிமுறையைப் போக்குதல், தீண்டாமை ஒழிப்பு, தேசிய ஒருமைப்பாட்டை ஊக்குவித்தல் முதலிய சிறப்பான கொள்கைகளைப் பரப்பிடும் வகையில் சமூக-பொருளாதாரக் கோட்பாட்டு அடிப்படையில் தயாரிக்கப்படும் சிறந்த தமிழ்ப் படங்களின் தன்மையினை ஊக்குவிக்கும் நோக்கத்தில், சிறந்த தமிழ்ப் படங்களுக்கு 1978ஆம் ஆண்டு பிப்ரவரியில் திரைப்பட உதவித் தொகைத் திட்டம் செயலாக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி தரமான திரைப்படங்களிலிருந்து மிகக் கவனத்துடன் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து தரமான திரைப்படங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு இலட்சம் ரூபாய் விதம் நிதி உதவியினை அரசு அளிக்கிறது. 1978-79ஆம் நிதி ஆண்டு முதல் மிகச் சிறந்த கலை நுட்பமும் உயர்ந்த தொழில் நுட்பத் திறனும் கொண்ட தமிழ்த் திரைப்படங்களைத் தயாரிப்பதற்கு ஊக்கமும் ஆக்கமும் நல்கிடும் வகையில் ஆண்டுதோறும் அரசு விருதுகள் வழங்கும் திட்டம் செயலாக்கப்பட்டது. சிறந்த திரைப்படக் கலைஞர்களுக்கும், தொழில்நுட்பக் கலைஞர்களுக்கும் பரிசுகளும், விருதுகளும் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றன.

ஜவகர்லால் நேருவின் நினைவாக, சிறந்த குழந்தைகள் திரைப்படங்கள் மூன்றுக்கு, மூன்று பரிசுகள் வழங்கப்படுகின்றன. ரூ. 5 ஆயிரம் மதிப்புள்ள தங்கப் பதக்கமும், ரூ. 10 ஆயிரம் ரொக்கப் பணமும் முதல் பரிசாகவும் மற்ற இரண்டு படங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 5 ஆயிரம் மதிப்புள்ள தங்கப்பதக்கமும் வழங்கப்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு திரைப்பட, தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்:**

திரைப்படத் தயாரிப்பு தொலைக்காட்சி மற்றும் இவை தொடர்பான படங்கள் ஆகிய எல்லாப் பிரிவுகளிலும் பயிற்சி அளித்து





தேர்வுகள் நடத்தி தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு டிப்ளமாக்கள் வழங்கப்படுகின்றன. திரைப்படத் தொழிலில் காணும் சீரிய சிறப்பு அம்சங்களை அறிந்து பாராட்டும் வகையில் மக்களுக்கு அறிவுறுத்தலும் திரைப்படங்கள் குறித்து ஆய்வுகள் நடத்திட வாய்ப்பளித்தலும் இப்பயிற்சி நிறுவனத்தின் நோக்கமாகும்.

மொத்தம் 163 மாணவர்கள் பல்வேறு பிரிவுகளில் பயில்கின்றனர்.

மாணவர்கள் தயாரித்த ('Rhetoric of Continuity') என்ற கருத்து விளக்கப்படம் இந்த ஆண்டு புதுடெல்லியில் நடந்த பத்தாவது உலகத் திரைப்பட விழாவில் பார்வையாளர்களுக்குக் காட்டுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

இந்தியாவிலேயே இந்தப் பயிற்சி நிறுவனத்தில்தான் படச்சுருள்கள் கழுவுதல் பயிற்சியும், நடிப்புப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

**தமிழ்நாடு திரைப்படப் பிரிவு**

பொதுமக்களுககு அரசின் ஆக்கப்பணிகளைத் திரைப்படங்கள் மூலம் தெரியப்படுத்துவது திரைப்படப் பிரிவின் நோக்கமாகும்.

இம்மாநிலத்தில் நடைபெறும் அரசின் ஆக்கப் பணியையும் குடும்பநலம் மற்றும் சிறப்புமிக்க விழாக்களையும் திரைப்படம் எடுத்து மாதம் இருமுறை செய்திப் படங்களாகத் தயாரிக்கிறது இப்பிரிவு. இந்த அரசின் பல்வேறு துறைகளின் சார்பிலும் செய்திப் படங்களை இப்பிரிவு தயாரிக்கிறது. 35 மி.மீ. பிரதிகள் எடுக்கப்பட்டு இந்திய அரசின் திரைப்படப் பிரிவு மூலம் விநியோகிக்கப்படுகின்றன. செய்திப் படங்களும், கருத்து விளக்கப் படங்களும் 16 மி.மீ. பிரதிகள் எடுக்கப்பட்டு கிராமப் புறங்களில் மக்களுக்குத் திரையிடும் பொருட்டு மாவட்ட விளம்பரப்பிரிவுகளுக்கு அனுப்பப்படுகின்றன.



# தாகம் தணிகிறது

தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சிகள் (சென்னை மாநகர் நீங்கலாக) நகராட்சிகள் பேருராட்சிகள் மற்றும் ஊராட்சிகளுக்கான குடிநீர் மற்றும் வடிகால் திட்டங்களை ஆய்வு செய்யவும், திட்டங்களைச்செயற்படுத்தவும், தமிழக அரசால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 14.4.71ல் ஏற்படுத்தப்பட்டது. பொதுச் சுகாதாரப் பொறியியல்துறை நிறைவேற்றி வந்த குடிநீர் மற்றும் வடிகால் திட்டங்களையும் தற்போது இந்த வாரியம் செயல்படுத்தி வருகிறது.

### ஊரக குடிநீர் பற்றிய ஆய்வும் செயலும்

தமிழ்நாட்டில் உள்ள எல்லாக் குடியிருப்புகளையும் ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் பார்வையிட்டு குடியிருப்புகளின் குடிநீர்த் தன்மை பற்றி ஆய்வொன்றினை 1976-77 ஆம் ஆண்டில் மேற்கொண்டதன் விளைவாகத் தமிழ்நாட்டில் குடியிருப்புஎல்லைக்குள் 1கிலோமீட்டர் தொலைவிற்குள் நீர் ஆதாரமே இல்லாத குடியிருப்புகள், நீர் இருந்தும் குடிக்கத் தகுந்த நிலையில் இல்லாத குடியிருப்புகள் நல்ல நீருடைய ஆனால் ஆண்டு முழுவதும் போதிய குடிநீர் இல்லாத குடியிருப்புகள், நல்ல நீராதாரம் அமைந்த ஆனால் நீராதாரம் தனியாருக்குச் சொந்தமானது அல்லது பாதுகாக்கப்படாத குடியிருப்புகள், குடியிருப்பு எல்லையிலிருந்து 1 கி.மீ. தொலைவிற்குள் நல்ல குடிநீராதாரங்கள் அமைந்த குடியிருப்புகள் என்று கணக்கிடப்பட்டதில் தமிழகத்தில் 18167 குடியிருப்புகள் குடிநீர்ப் பற்றாக்குறை குடியிருப்புகளாய் இருப்பது தெரியவந்தது.

இத்தகைய குடியிருப்புகளின் குடிநீர்த் தன்மை பற்றிய ஆய்வு மேற்கொண்டதில் இந்தியாவிலேயே தமிழகம்தான் முதன்மை இடம் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் குடிநீர்ப் பற்றாக்குறையுள்ள குடியிருப்புகளுக்குக் குடிநீர்த் திட்டங்களைச்செயல்படுத்துவதில் முன்னுரிமை தரப்பட வேண்டும் என்று தமிழக அரசால் அறிவுறுத்தப்பட்டு 1977-78 லிருந்து 1979-80ம் ஆண்டு வரை 3,465 கிராமக் குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

எஞ்சியுள்ள 14,702 பற்றாக்குறை குடியிருப்புகளுக்கு ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் குடிநீர்த் திட்டங்களைச் செயல்படுத்த தமிழக அரசால் முடிவெடுக்கப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### தன்னிறைவுத் திட்டம்

கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, சாலை வசதி. கல்விக்கூடங்கள், மருத்துவவசதி போன்ற தேவைகளை நிறைவு செய்திடும் வண்ணம் தமிழக அரசால் தன்னிறைவுத் திட்டம் என்னும் சீரிய திட்டம் அனைத்து மாநிலங்களுக்கும் வழிகாட்டும் திட்டமாக 1980ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. தன்னிறைவுத் திட்டத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு முதல் இடம் அளிக்கப்பட்டு எஞ்சியுள்ள 14,702 பற்றாக்குறைகுடியிருப்புகளுக்கும், முதற்கட்டமாக 1980-81ஆம் ஆண்டு 69 ஒன்றியங்களிலும் இரண்டாம் கட்டமாக 1981-82ஆம் ஆண்டு 150 ஒன்றியங்களிலும் மூன்றாம் கட்டமாக 159 ஒன்றியங்களிலும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும் பருவமழை பொய்த்தாலும், நிலத்தடி நீர்மட்டம் குறைந்ததாலும் சுமார் 14,826 கிராமக் குடியிருப்புகள் பற்றாக்குறை குடியிருப்புகளின் கீழ் கொண்டு வரப்பட்டது தமிழக அரசு அனைத்துப் பிரச்சினை குடியிருப்புகளுக்கும் மற்றும் 7,600 இனமாற்றம் செய்யப்பட்ட குடியிருப்புகளுக்கும் 6-வது ஐந்தாண்டு திட்டத்தின் கடைசி மூன்றாண்டுகளில் முடிக்க ரூ. 17 கோடியை 1982 - 83ம் ஆண்டு தொடங்கி மூன்றாண்டு காலத்திற்கு ஒதுக்கீடு செய்யவும் ஒப்புதல் அளித்தது.

மார்ச் திங்கள் 1983ஆம் ஆண்டு வரை 10,157 பற்றாக்குறை குடியிருப்புகளுக்கும் 3,726 இனமாற்றம் செய்யப்பட்ட குடியிருப்புகளுக்கும் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. 1984-85ம் ஆண்டில், திருத்திய நிதி ஒதுக்கீடான ரூபாய் 50-27கோடி செலவில் (ரூபாய் 6-30 கோடி ஆயுள்காப்பீட்டுக்கழக கடன் உட்பட) 3,574 குடியிருப்புகளுக்கான குடிநீர்த் திட்டங்களைச் செயல்படுத்தத் திட்டம் இடப்பட்டது.





"பறக்கும்" தொலைநோக்கி

45 அடி நீளமான இந்த ராட்சத டெலஸ்கோப்பை பூமியில் இருந்து 590 கி.மீ. உயரே விண்ணில் நிரந்தரமாக மிதக்கவிட அமெரிக்க விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளனர். நமது சூரியமண்டலத்துக்கு அப்பால் உள்ள கிரகங்களையும் நட்சத்திரங்களையும் கண்காணித்து தகவல் அனுப்பக் கூடிய இதற்கு எட்வின் ஹபிள் ஸ்பேஸ் டெலஸ்கோப் என பெயரிட்டுள்ளனர்.

### வறட்சி நிவாரணப் பணிகள்

பருவமழை தொடர்ந்து பொய்த்தாலும், நிலத்தடி நீர்மட்டம் குறைந்தாலும் தமிழகத்தில் உள்ள எல்லா மாவட்டங்களிலும் கடந்த இரண்டாண்டுகளாக வறட்சி நிலவியது. வறட்சியின்போது குடிநீர்த் தட்டுப்பாட்டைப்போக்க தமிழக அரசு 20,000 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணியைக்குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைத்தது. போர்க்கால அடிப்படையில் பணிகள் எடுக்கப்பட்டு செயலாக்கப்பட்டது.



இப்பணிகள் 1982ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் எடுத்துக் கொள்ளப்பட்டு மார்ச்சு 1983 வரை 9,688 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு கைபிறைப்பான்கள் பொருத்தப்பட்டது. எஞ்சியுள்ள பணிகள் தொடர்ந்து எடுத்துக்கொள்ளப்பட்டு மேலும் 11,850கைபிறைப்பான்களுடன் அமைந்த ஆழ்குழாய்க்கிணறுகள் அமைக்கப்பட்டது ஆக கடுமையான வறட்சியின் போது 21,538 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து மக்களின் தாகம் தீர்த்திடும் பணியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சிறப்புறச் செயற்பட்டது. இதற்காக இதுவரை சுமார் ரூபாய் 45.79 கோடி செலவிடப்பட்டுள்ளது.

மேற்கூறிய பணிகள் முடிக்கப்பட்ட நிலையிலும் இராமநாதபுரம் திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் வறட்சி நிலை தொடர்ந்து நீடித்தது. தமிழக அரசு இம்மாவட்டங்களில் வறட்சி நிவாரணப் பணிகளை தொடரும்படி ஆணை வழங்கியதால் மேலும் 454 ஆழ்குழாய்க்கிணறுகள் ரூபாய் 91.80 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

# வளரும் தொழில்கள்



தமிழ்நாடு கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் இணையத்தின் விண்ணப்பத்திற்கு மத்திய அரசு அனுமதி அளிக்க இருக்கிறது. மத்திய அரசு அனுமதி அளித்ததும், புதுக்கோட்டை மாவட்டத்தில் சுமார் 12 கோடி ரூபாயில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ஒன்று அமைக்கப்படும். இந்த ஆலை இயங்க 8,000 ஏக்கர் நிலப்பரப்பில் கரும்புச் சாகுபடி செய்ய வேண்டும். நாளொன்றுக்கு அந்த ஆலை 1,250 டன் கரும்பை அரைக்கும்.

ஒரு சர்க்கரை ஆலை நிறுவுவதற்குக் குறைந்தது சுமார் 8 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் கரும்புச் சாகுபடி செய்யவேண்டும். 7வது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழகத்தில் 10 சர்க்கரை ஆலைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சிறிய சர்க்கரை ஆலைகள் ஏற்கெனவே தமிழகத்தில் தனியார் துறையில் தொடங்கப்பட்டு இயக்கப்பட்டன. ஆனால் அவற்றில் ஒரு சில இலாபகரமாகவும், சில நஷ்டமாகவும் இயங்கி வந்தன. முறையாகத் தனியார் துறையில் நடத்தப்பட்ட சிறிய சர்க்கரை ஆலைகள் இலாபகரமாக இயங்காத நிலை ஏற்பட்டதால் மூடப்பட்டன.

புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைய இருக்கும் புதிய சர்க்கரை ஆலை கூட்டுறவுஆலையாக இயங்கும்.

ஒமலூரில் உள்ள சர்க்கரை ஆலையின். திறனை உயர்த்திடும் வகையில் ஆலையை விரிவாக்கம் செய்திட அரசு பரிசீலனை செய்யும்.

அரூரில் சர்க்கரை ஆலை அமைத்திடவும் அரசு பரிசீலிக்கும்.

சென்னை துறைமுகம் அருகே கரும் பாறைகளை மெருகு ஏற்றும் ஆலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. கடும் புயலில் கூரைகள் தாக்குதல் அடையாத வகையில் அந்த ஆலையின் கூரை காங்கிரீட் பலகைகளால் அமைக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் தொழில்கள் வளர்ந்து கொண்டு வருகின்றன.

கொடுத்த கடனைத் திருப்பிக் கட்டுவதில் இந்தியாவிலேயே இன்று முதலிடத்தில் இருக்கிறது தமிழ்நாடு - 1977-84ல் 600 புதிய பெரிய மத்திய தர தொழில்கள் உருவாகியுள்ளன. சிறுதொழில்கள் 18,789 ஆக இருந்து, 1978ல் 49,920 ஆக வளர்ந்தது. 1985ல் 60,250 ஆக உயரும்.

தொழில் துறையில் தமிழகம் பத்தாவது இடம்- பதிமூன்றாம் இடம் என்று ஏதோ புள்ளி விவரங்களை பொத்தாம் பொதுவில் பேசுகின்றனர். தொழில் உரிமம் பெறுவதில் மகாராஷ்டிரம் 334 உரிமங்கள் பெற்று முதலிடத்தில் உள்ளது. அடுத்து உத்திரப்பிரதேசம் 218 உரிமங்கள் பெற்று இரண்டாம் இடத்தில் உள்ளது. குஜராத் 176 உரிமங்கள்பெற்று 3 ம் இடத்தில் உள்ளது. 169 உரிமங்களைப் பெற்று தமிழ்நாடு 4வது இடத்தை வகிக்கிறது. மேலும் பல உரிமங்கள் பெற முயற்சித்து வருகிறது.

தொழில் தொடங்குபவர்கட்கு உதவ அரசு தயாராக இருக்கிறது. அகில இந்திய அடிப்படையில் 1970ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திக் கணக்கு விகிதத்தில் தமிழகம் 38 சதவிகிதமாக இருந்தது. 1977ல் 143 சதவிகிதமாக உயர்ந்தது. 1982ல் 213.3 சதவிகிதமாக உயர்ந்தது.

தமிழ்நாட்டில் உற்பத்தி பெருக்கம் தொடர்ச்சியாக இருக்கிறது. அகில இந்திய அளவில் பெரும்பங்கை வகிக்கிறது. இந்தியாவில் உற்பத்தியாகும் மோட்டார் பாகங்களில் நாலில் ஒரு பங்கு தமிழ்நாட்டில் உற்பத்தியாகிறது. இந்தியாவில் உற்பத்தியாகும் சிமெண்டில் 5ல் ஒரு பங்கு தமிழகத்தில் உற்பத்தியாகிறது.

புகளூரில் துவக்கப்பட்டுள்ள காகித ஆலையில் வெளிநாட்டுக் காகிதக் கூழில் இருந்து, காகிதம் தயாரித்துப் பார்க்கப்படுகிறது. ஒரு லட்சம் டன் கரும்புச் சக்கைகள் சேமித்துவைக்கப்பட்டு இருக்கிறது. ஜூலை மாதத்திலிருந்து அங்குக் காகிதம்உற்பத்தியாகும்.

மின்சாரத்தைப் பொறுத்தவரை சுய தேவைத் திட்ட அடிப்படையில் ஒரு திட்டத்தைச் செயல்படுத்த இருக்கிறோம். இதன் முதல் கட்டமாக சிப்காட்டில் பவர் ஜெனரேட்டர் பொருத்தப்படும். 15 மெகா வாட் திறன் கொண்டதாக இது இருக்கும்.

வரியற்ற வர்த்தக மண்டலத்தில் 43 தொழில்களுக்கு உரிமம் தரப்பட்டுள்ளது.

தமிழக அரசின் இந்தத் திட்டத்தை மத்திய அரசு பாராட்டியுள்ளது.

இங்கே பல வண்ணக் கற்கள் கிடைக்கின்றன. இவற்றைப் பட்டை தீட்டி ஏற்றுமதி செய்யலாம். இப்படிப்பட்ட ஜெம் கட்டர் தொழிலை கரூர், திருச்சி போன்ற இடங்களில் அமைக்கக் கருதி இருக்கிறோம்.

ஸ்வீடன் நாட்டில் காற்றிலிருந்து காற்றாடி மூலம் மின்சாரம் தயாரிக்கிறார்கள். அவர்களிடம் இருந்து தொழில் நுட்ப உதவி கேட்டுக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது.

காட்பாடி அருகே வெடி மருந்துத் தொழிற்சாலை உருவாகி வருகிறது.

4 பக்கமும் மலை சூழ்ந்த அருமையான பள்ளத்தாக்கில் 21 கோடி ரூபாய் செலவில் அந்தத் தொழிற்சாலை உருவாகி வருகிறது. அதற்கு மேலும் ரூபாய் 3 கோடி செலவழித்து இப்படிப்பட்ட காற்றாடி மின்சாரத் தயாரிப்பைப் பொருத்தும்படிக் கேட்கப்பட்டிருக்கிறது.

அரசு சார்ந்த தொழில்களில் நட்டம் வருவது பற்றி ஆலோசனைக்குழு மூலம் ஆலோசனை பெற்று லாபகரமாக நடத்த முயற்சி எடுக்கப்படும். எல்லா வகையிலும் தமிழ்நாட்டில் தொழில்கள் வேகமாக உருவாகி வருகின்றன.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.







தமிழரசு
20 அம்சத்
திட்ட
மலர்

# குடியரசுத் தலைவர் தமிழக வருகை


விமான நிலையத்தில் வரவேற்பு (26-7-85)


அண்ணா நகரில் பஞ்சாப் சங்கம் உருவாக்கியுள்ள
அண்ணா ஆதர்ஷ் மெட்ரிகுலேஷன் பள்ளித் திறப்பு விழாவில்..
(27-7-85)


மயிலை அருள்மிகு கபாலீஸ்வரர் ஆலயத்தில்...
(27-7-85)


தென்னிந்திய முர்தாஜவியா கல்வி, மற்றும் கலாச்சார நிறுவன வெள்ளி விழாவில்
(27-7-85)


தமிழ் வர்த்தக சங்கச் சார்பில் நடைபெற்ற மறைந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தி படத்திறப்பு விழாவில் (28-7-85)


குருநானக் மெட்ரிகுலேஷன் பள்ளிக் கட்டடத் திறப்பு விழாவில் (28-7-85)

# வாழ்த்துச் செய்திகள்



இருபது அம்சப் பொருளாதாரத் திட்டம் இந்தியாவின் வேகமான பொருளாதார வளர்ச்சிக்குரிய வழிகாட்டும் ஒரு திட்ட வரைவாகும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தீட்டிய போது நாட்டின் முக்கியமான பொருளாதார வளர்ச்சிப் பிரிவுகளில், வளர்ச்சி உச்சகட்டத்தை அடைவதற்குரிய வகையில் தனியான கண்காணிப்பும், விரைவான நடவடிக்கையும் இருக்க வேண்டும் என திருமதி இந்திராகாந்தி விரும்பினார். அதற்கேற்ப, புதிய இருபது அம்சத் திட்டம் நலிந்த சமுதாயத்தினரை உயர்த்தவும், முதன்மையான தொழில்களின் வளர்ச்சியை விரைவுபடுத்தவும், நசுக்கப்பட்ட மக்களின் மேம்பாட்டுக்காக அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்தவும் தக்க செயல்முறைகளை உள்ளடக்கிய சிறந்த திட்டமாக அமைந்துள்ளது.

இ..பது அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு முன்னணியில் இருந்து வந்திருக்கிறது. 1982-83ல் முதல் இடம் வகித்தது. 1983-84ல் நான்காவது இடத்திற்குப் போய்விட்டது. 1984-85ல் அரசின் தீவிர கண்காணிப்பு—முயற்சிகளின் விளைவாக நாட்டிலேயே தமிழ்நாடு மீண்டும் முதல் இடத்தைப் பெற்றிருப்பது பற்றி நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இது பல்வேறு துறைகளிலும் ஏற்பட்டுள்ள மொத்த வளர்ச்சியின் முத்திரையாக அமைந்துள்ளது என்பதுடன், எல்லாத்துறையினரும் எடுத்துள்ள பெருமுயற்சியினையும் அவர்களது ஈடுபாட்டையும் காட்டுவதாக அமைந்துள்ளது.

சாதனைகளை விளக்கிக் காட்டிச் சிறப்பிதழ் வெளியிடத் 'தமிழரசு' ஏடு முன்வந்திருப்பது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

நமக்கு ஓர் அறைகூவலாக அமைந்துள்ள வலிமைமிக்க புதிய இந்தியாவை உருவாக்கும் பெரும் பணிக்கு நம்மை நாமே அர்ப்பணிக்க உறுதி எடுக்கும் தருணமாகவும் இது அமைந்திருக்கிறது.

மேதகு ஆளுநர்
**எஸ். எல். குரானா**

புதிய 20 அம்சத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு புரிந்துள்ள சாதனைகளை விளக்கி சிறப்பு மலர் வெளியிடும் "தமிழரசு" இதழ் பாராட்டுக்குரியது. குறிப்பாக இத்திட்டத்தினைச் செயற்படுத்துவதில் 1982-83-ல் முதலிடம் பெற்ற தமிழ்நாடு மீண்டும் 1984-85-லும் முதலிடம் பெற்றிருப்பது குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இந்தப் பெருமை தனித்தனியாகவும், இணைந்தும் எல்லோரும் மேற்கொண்ட கடுமையான உழைப்பின் விளைவேயாகும். அத்துடன் நிர்வாகததின் எல்லா மட்டங்களிலும் நிர்வாகப் பிரிவுகள் அனைத்தும் ஒரே அங்கமாக இயங்கிட இடைவிடாது எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சியும் கண்காணிப்பும் இவ்வெற்றிக்குக் காரணமாக அமைந்துள்ளது. நலிந்த பிரிவினருக்கு நன்மைகளாற்றிடும் இவ்வரிய திட்டத்தினை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு சிறப்பாகச் செயற்பட்டிருக்கிறது. வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு முதலிடம் பெற உழைத்த அரசு ஊழியர்கள் ஒவ்வொருக்கும் எனது தனிப்பட்ட பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டி. வி. அந்தோணி**
தலைமைச் செயலாளர்
தமிழ்நாடு அரசு





# அமெரிக்க நாட்டில் மாண்புமிகு முதல்வர்

கடந்த 26-7-85 அன்று ஜப்பானுக்குப் புறப்பட்டுச் சென்ற மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களும், அவரது துணைவியாரும், மாண்புமிகு மின்துறை அமைச்சர், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் உள்ளிட்ட மற்றவர்களும் ஜப்பான் நாட்டின் தலைநகரான டோக்கியோவில் தங்கினர். அதன் பின்னர் அங்கிருந்து நகோயா நகருக்குச் சென்று டாக்டர் கானூவைச் சந்தித்தார் மாண்புமிகு முதல்வர்.

பெயர் பெற்ற நரம்பியல் மருத்துவ நிபுணரான டாக்டர் கானூ, மாண்புமிகு முதல்வர் அவர்களின் உடல் நிலையைப் பரிசோதித்தார். பின்னர் அவர் ''எல்லாப் பரிசோதனைகளிலும் எந்தக் குறைபாடும் தெரியவில்லை. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் பூரண உடல்நலத்துடன் இருப்பது தெரிய வந்துள்ளது'' என்று தெரிவித்தார்.

மருத்துவப் பரிசோதனைகள் வெற்றிகரமாக முடிந்த பின், மாண்புமிகு முதல்வர் அவர்களும் மற்றவர்களும் நகோயா நகரிலிருந்து சியோடா நகருக்குப் புறப்பட்டுச் சென்றார்கள்.

நூறாண்டுக் காலத்திற்கு முன்பு வரை ஜப்பான் நாட்டின் தலைநகரமாக இருந்த சியோடா நகரின் புராதனக் கட்டடங்கள் சிற்ப நுணுக்கம் நிறைந்த அரண்மனைகள் போன்றவற்றை அவர்கள் கண்டுகளித்தனர்.

பிறகு, அவர்களனைவரும் அங்கிருந்து மாலை 5-30 மணியளவில், 'மின்னல்வேக' ரெயிலில் புறப்பட்டு மெய்சூரு நகர் வந்தடைந்தனர். அங்குள்ள, புகழ்பெற்ற கிராந்தி ஓட்டலில் அளிக்கப்பட்ட வரவேற்பிலும் விருந்திலும் மாண்புமிகு முதல்வர் அவர்களும் ஏனையோரும் மகிழ்வுடன் கலந்து கொண்டார்கள்.


தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2016
குரோதன - ஆடி 32
மலர் : 16
இதழ் :4
16-8-1985


நமது 'பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்'திற்குக் கப்பல் வழங்கும் 'ஹிடாச்சி' நிறுவனத்தின் உயர்மட்ட அதிகாரிகளும், ஜப்பான் நாட்டில் உள்ள இந்தியத் தூதரகத்தைச் சேர்ந்த திரு. ரவிலிங்கம் முதலான மேலதிகாரிகளும் இதில் பங்கேற்றனர்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெரு மகிழ்ச்சியோடும், பயணக் களைப்பின் சுவடே தெரியாத உற்சாகத்தோடும் கலந்துகொண்ட இந்த விழா இனிது முடிவுற்றது.

'ஹிடாச்சி' நிறுவனத்தார் நமக்கென உருவாக்கியுள்ள கப்பலின் விலை ரூ. 23 கோடியாகும். இது, 39 ஆயிரத்து 910 டன் பொருளை ஏற்றிச் செல்லுமளவிற்குச் செம்மையுறத் தயாரிக்கப்பட்டதாகும். தமிழ்நாட்டிலிருக்கின்ற அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரி ஏற்றி வருவதற்கென்றே இந்தக் கப்பல் தமிழ்நாடு அரசால் வாங்கப்படுகிறது. இந்தியாவிலுள்ள ஹால்டியா துறைமுகத்திற்கு வந்து, இம்மாதக் கடைசிக்குள் இக்கப்பல் நிறைந்த நிலக்கரியோடு தூத்துக்குடி துறைமுகத்தை அடையும்.

டோக்கியோவில் உள்ள புகழ் பெற்ற ஜின்சா கடைவீதியை மாண்புமிகு முதல்வர் அவர்களும் மற்றவர்களும் (3-8-85) சுற்றிப் பார்த்தனர். மறுநாள் (4-8-85) டோக்கியோவின் அருகே 100 எக்டேர் நிலப்பரப்பில் நடைபெற்று வரும் 'எக்ஸ்போ-85' என்ற பிரம்மாண்டமான ஜப்பான் பொருட்காட்சியைக் கண்டு மகிழ்ந்தார்கள்.

சூரிய வெளிச்ச சக்தியைப் பயன்படுத்துவதிலும் 'எலக்ட்ரானிக்' தொழில்களிலும் ஜப்பான் நாடு அடைந்துள்ள முன்னேற்றங்களைக் கண்டு வியந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், ''இவ்வாறான தொழில் நுட்பங்களைத் தமிழகத்திலும் செயல்படுத்துவது பற்றி ஆழ்ந்து ஆராய வேண்டும்'' என்று கருத்தறிவித்தார்.

ஜப்பான் நாட்டில் உள்ள நாரிட்டா விமான நிலையத்திலிருந்து மாண்புமிகு முதல்வர் அவர்களும் பிறரும் (8-8-85 மாலை) விமானம் மூலம் அமெரிக்காவில் உள்ள நியூயார்க் நகருக்குப் பயணமாயினர்.

10 மணிநேரப் பயணத்தின் பின், நியூயார்க் வந்தடைந்த மாண்புமிகு முதல்வர், அவர்களை அங்குள்ள இந்தியத் துணைத் தூதர் அருண்பட்டவர்த்தன் மற்றும் பிரமுகர்கள் இன்முகத்தோடு வரவேற்றார்கள். பிறகு, அவர்களனைவரும் மான்ஹாட்டன் என்னும் இடத்திலுள்ள வால்டார்ப் ஆஸ்டோரியா என்ற ஓட்டலில் சென்று தங்கினர்.

கடந்த ஆண்டு அக்டோபரில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடல் நலிவுற்று அமெரிக்க



நாட்டுக்குச் சென்றபோது, மாற்றுச் சிறுநீரகச் சிகிச்சையளித்த புகழ்பெற்ற டாக்டரான ஏலி பிரீட்மன் மாண்புமிகு முதல்வர் அவர்களை வரவேற்று அங்கே ஓர் விருந்தளித்தார்.

புரூக்ளின் நகரில் முன்பு சிகிச்சைபெற்ற டவுன்ஸ்டேட் மருத்துவமனையில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் உடல்நிலை பரிசோதிக்கப்பட்டது. டாக்டர் ஏலி பிரீட்மனே இரண்டு நாட்கள் இந்தப் பரிசோதனையைச் செய்தார்.

பரிசோதனை முடிவில் - மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் பூரண ஆரோக்கியத்துடன் இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

10-8-85 அன்று, டாக்டர் ஏலி பிரீட்மன் அளித்த விருந்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களும், மற்றும் அவர்தம் துணைவியார் திருமதி ஜானகி அம்மையார், மாண்புமிகு அமைச்சர்கள் திரு எஸ். இராமச்சந்திரன், திரு எஸ்.முத்துசாமி ஆகியோரும் டாக்டர் பி.ஆர். சுப்பிரமணியம், டாக்டர் நரேந்திரன் துணைச் செயலாளர் பிச்சாண்டி மற்றும், பாதுகாப்பு அதிகாரிகளும் கலந்து கொண்டார்கள்.

பின்னர், அவர்களனைவரும் நியூயார்க் வந்து சேர்ந்தனர். அங்கே, பத்திரிகையாளர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பேட்டி கண்டனர். இந்தச் சந்திப்பு 30 நிமிடத்திற்குமேல் நடந்தது.

''கோடானுகோடி தமிழ்மக்களின் மனங்கசிந்த பிரார்த்தனையாலும், எனது தெய்வ நம்பிக்கையாலும், மருத்துவர்கள் மற்றும் ஊழியங்களின் நல்லெண்ணம் - ஒத்துழைப்பு ஆகியவற்றாலும், திருமதி இந்திராகாந்தி அவர்கள் என் சிகிச்சைக்காக எடுத்த முயற்சிகளினாலும், இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியின் தொடர்ந்த உதவிகளாலுமே நான் பூரண நலம் பெற்றுள்ளேன்'' என்று அப்போது அவர் தெரிவித்தார்.

முதல்வர் உற்சாகமாகக் காணப்படுகிறார். அவரது பேச்சுத்திறன் அதிகரித்துள்ளது என்று பி.டி.ஐ. செய்தியாளர் கே. தர்மராஜன் நியூயார்க்கிலிருந்து செய்தி அனுப்பியுள்ளார்.

—[illegible]

# புதிய இருபது அம்சத் திட்டம்

1. பாசன வசதியை அதிகரித்தல், மழையை நம்பியிருக்கும் விவசாயத்திற்கான பொருட்கள் கிடைத்தலை அதிகரித்தல், இந்நிலங்களுக்கான தொழில் நுட்பத்தை வளர்த்துப் பரப்பல்.

2. பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரிக்க விசேட முயற்சி மேற்கொள்ளல்.

3. ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சி மற்றும் தேசிய கிராம வேலைவாய்ப்புத் திட்டங்களை வலுப்படுத்தல், விரிவாக்குதல்.

4. விளை நில உச்சவரம்பை அமலாக்கல், உபரி நில விநியோகத்தைப் பூர்த்தி செய்தல் மற்றும் நிர்வாக-சட்ட இடையூறுகளை அகற்றி நிலப் பட்டாக்களைத் தொகுக்கும் பணியைப் பூர்த்தி செய்தல்.

5. விவசாயத் தொழிலாளரின் குறைந்தபட்ச ஊதியத்தை மறுபரிசீலனை செய்து, பயன்தரும் வகையில் அமலாக்கல்.

6. பிணைத் தொழிலாளர்களுக்கு மறு வாழ்வு அளித்தல்.

7. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் வளர்ச்சிக்கான திட்டங்களைத் துரிதப் படுத்தல்.

8. பிரச்சனை கிராமங்கள் அனைத்துக்கும் குடிநீர் வழங்கல்.

9. வீடற்ற கிராமக் குடும்பங்களுக்கு வீட்டுக்கான மனை வழங்கி, வீடு கட்டுவதில் அவர்களுக்கு உதவுவதற்கான திட்டங்களை விரிவாக்குதல்.



மாண்புமிகு இந்தியப் பிரதமர்
திருமதி இந்திரா காந்தி அவர்கள்
14-1-1982-ல்
நாட்டுக்கு அறிவித்த
நல்வாழ்வுத்திட்டம்



10 சேரிகளின் சுற்றுப்புறச் சூழ்நிலையை மேம்படுத்தல், எளியோருக்கு வீடு கட்டும் திட்டங்களை அமலாக்கல் மற்றும் நில விலையேற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுத்தல்.

11. மின்சார உற்பத்தியை உயர்ந்தபட்சமாக்குதல், மின்சார அமைப்புக்களின் இயக்கத்தை மேம்படுத்தல் மற்றும் கிராமங்கள் அனைத்துக்கும் மின்சார வசதி அளித்தல்.

12. காடு வளர்ப்பு, சமுதாய-பண்ணை மர வளர்ப்பு ஆகிய சாண எரிவாயு போன்ற மாற்று எரிபொருள் மூலங்களை வளர்த்தல்.

13. குடும்ப நலத் திட்டத்தை, தொண்டு அடிப்படையில், ஒரு மக்கள் இயக்கமாகப் பரப்பல்.

14. அடிப்படைச் சுகாதார வசதிகளைக் கணிசமாக அதிகப்படுத்தல், தொழு நோய், காசம், பார்வை இழத்தல் போன்றவற்றைக் கட்டுப்படுத்தல்.

15. பெண்கள், குழந்தைகள், கருவுற்ற பெண்கள், தாய்ப் பாலூட்டும் பெண்கள், குழந்தைகள் முதலியோருக்கான சத்துணவு, மற்றும் நல்வாழ்வுத் திட்டங்களை விரைவுபடுத்தல், முக்கியமாக பழங்குடியினத்தவர், மலை மற்றும் பிற்பட்ட பகுதிகளில் இத்திட்டங்களை விரைவுபடுத்தல்.

16. 6லிருந்து 14 வயது வரையிலுள்ள குழந்தைகளுக்கிடையே முக்கியமாக பெண் குழந்தைகளுக்கு அடிப்படைக் கல்வியைப் பரப்பல்; அதே சமயத்தில் மாணவ மாணவியர்களையும் சேவா ஸ்தாபனங்களையும், வயது வந்தோரிடையே கல்வி அறிவின்மையை அகற்றும் திட்டங்களில் ஈடுபடுத்தல்.

17. அதிகப்படியான நியாயவிலைக் கடைகள் மூலமாக பொது விநியோக முறையை விரிவுபடுத்தல், தொலைதூரப் பகுதிகளில் நடமாடும் கடைகளை ஏற்படுத்தல், தொழிற்சாலைத் தொழிலாளர்கள் மற்றும் விடுதியில் உள்ள மாணவர்களுக்கு வசதியாக அப்பகுதிகளில் கடைகள் நிறுவுதல்; மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்களும் குறிப்பேடுகளும் கிடைக்கச் செய்ய முன்னுரிமை அடிப்படையில் ஏற்பாடு செய்தல், வலுவான தொரு நுகர்வோர் பாதுகாப்பு இயக்கத்தை வளர்த்தல்.

18. திட்டங்கள் உரிய நேரத்தில் பூர்த்தி அடைவதை உறுதி செய்வதற்காக முதலீட்டு நடவடிக்கைகளைத் தாராளப் படுத்தல், தொழில் துறை கொள்கைகளை எளிதாக்கல், கைவினைப் பொருட்கள், கைத்தறி சிறிய மற்றும் கிராமத் தொழில்கள் வளர்ந்து, தமது தொழில் நுட்பத்தை நவீனப்படுத்திக் கொள்வதற்கு, அவற்றுக்கு எல்லா வசதிகளையும் அளித்தல்.

19. கள்ளக்கடத்தல்காரர்கள், பதுக்கல் காரர்கள், வரி கொடாது ஏய்ப்பவர்கள் ஆகியோருக்கு எதிராக, தொடர்ந்து கடுத்தமானநடவடிக்கை மேற்கொள்ளல்; கறுப்புப்பணத்தை ஒழித்தல்.

20. திறன் உபயோகிப்பு, உள் வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளல் ஆகியவற்றின் மூலமாக, அரசு அமைப்புகளின் இயக்கத்தை மேம்படுத்தல்.





மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சுதந்திர நாளன்று கோட்டையில் தேசியக் கொடியேற்றினார்.



மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்களின் "புதிய சிந்தனைகள்" நூல் வெளியீட்டு விழா, மாண்புமிகு மேலவைத்தலைவர் டாக்டர் ம.பொ.சி. அவர்கள் தலைமையில் நடைபெற்றது (13-8-85). மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், "அருணோதயம் பதிப்பகம்" தயாரித்த அந்நூலை வெளியிட, முதல் படியை அண்ணாமலைப் பல்கலைக் கழக இணைவேந்தர் திரு எம்.ஏ.எம். இராமசாமி பெற்றுக்கொண்டார். விழாவில், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து, அழகப்பா பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ராதா தியாகராசன், திருக்குறள் நெறிபரப்பு மைய இயக்குநர் திருக்குறளார் முனுசாமி, திரு ஏ.வி.எம். சரவணன் முதலான பலர் வாழ்த்துரை வழங்கினர்.





# மாண்புமிகு முதலமைச்சரின் விடுதலை நாள் செய்தி



மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் நியூயார்க் நகரிலிருந்து விடுத்துள்ள விடுதலை நாள் செய்தி:

என்னை வாழவைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே! என் ரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்புக்களே!

நம் இந்தியத்திருநாட்டின் 39-வது விடுதலை நாள் விழாவையொட்டி உங்கள் அனைவருக்கும் என் வணக்கங்களையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜப்பான் நாட்டிலும், நியூயார்க் நகரிலும் மருத்துவப் பரிசோதனை முடிந்து என் உடல்நிலை எல்லா வகையிலும் சீராக உள்ளது என மருத்துவ நிபுணர்கள் அறிவித்துள்ளனர். உங்கள் நல்லாசிகளும், நல்வாழ்த்துக்களும் என்னை வாழவைத்துக்கொண்டிருக்கின்றன என நான் திடமாக நம்புகிறேன்.

நமக்குச் சுதந்திர இந்தியாவைப் பெற்றுத் தருவதற்காக தங்கள் இன்னுயிரைக் காணிக்கையாக்கிய தியாக தீபங்களுக்கு நாம் இன்று நன்றியுடன் அஞ்சலி செலுத்துவது நமது தலையாய கடமையாகும். இந்தியத் திருநாட்டின் ஒருமைப்பாட்டையும், அமைதியையும் சிதைப்பதையே நோக்கமாகக்கொண்ட தீய சக்திகளை எதிர்த்து நடத்திய போராட்டத்தில் அன்னை இந்திரா தன்னையே அர்ப்பணித்துக் கொண்டார். அந்தத் தியாகச் சுடரை இன்று நினைந்து நினைந்து போற்றுவோம். அவர் காட்டிய சீரிய கொள்கைகளைப் பின்பற்றுவதோடு நாட்டின் சுதந்திரத்தைக் காப்பாற்றுவதில் மேலும் விழிப்போடு செயலாற்றுவோம்.

மக்களின் மகத்தான ஆதரவுடன் பொறுப்பை ஏற்று நாட்டை மிகச் சரியான பாதையில் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் நடத்திச் செல்கிறார். தீர்வு காணப்படாத பல பிரச்சினைகளைத் தனது நிதானம் நிறைந்த செயலாற்றலாலும், முன்யோசனை மிக்க அறிவாற்றலாலும், அவர் தீர்த்துவருகிறார்.

தேசிய ஒருமைப்பாடும், ஒற்றுமை மனப்பான்மையும் இந் நேரத்தில் நம் அனைவருக்கும் மிகவும் இன்றியமையாதவையாகும். மத, இன, சாதி, மொழி முரண்பாடுகளுக்கு அப்பாற்பட்ட தேசிய கண்ணோட்டமும், ஒற்றுமை மனப்பான்மையும் தான் நம் நாட்டை வளமிக்கதாக உருவாக்க வழிவகுக்கும்.

மக்களாட்சி தத்துவம் நம் நாட்டில் வேரூன்றி நிலைத்து மிளிர்கிறது. நமக்குள் எந்தப் பிரச்சினை, கருத்து வேறுபாடு ஏற்பட்டாலும் பேச்சு வார்த்தை மூலமாகவே தீர்த்துக்கொள்ள முடியும்—வன்முறையால் எதையும் சாதிக்க முடியாது என்பதை நாம் உணர்ந்து செயல்படுகிறோம். பஞ்சாப் பிரச்சினையை நமது பிரதமர் அமைதியாகத் தீர்த்த விதம் இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

திம்புவில் துவங்கியுள்ள பேச்சு வார்த்தைகள் வெற்றிகரமாக முடிந்து ஒரு சுமுகமான உடன்பாடு ஏற்பட என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இலங்கைவாழ் தமிழர்களின் பிரச்சினை தீர்ந்து இந்தியத்துணைக் கண்டத்தில் அமைதி ஏற்படுமென நம்புகிறேன்.

இந்திய மக்கள் அனைவரின் நலன்களோடு தமிழக மக்களின் நலனும் இணைந்துள்ளது—எனவே மாநில அரசும், மைய அரசும் இணைந்து செயல்பட வேண்டுமேயொழிய, ஒன்றையொன்று எதிர்ப்பதில் பலன் இல்லை என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் அறிவித்த வழியில் தமிழக அரசு நின்று, நாட்டின் ஒற்றுமை, அமைதி, வளர்ச்சி ஆகிய குறிக்கோள்

களுக்காக மத்திய அரசுடன் இணக்கமான போக்கைக் கடைப் பிடித்து வருகிறது. அதே நேரத்தில் மாநில அரசுக்கு கூடுதல் அதிகாரங் களைப் பெறுவதற்கும் முறையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

மதம், மொழி, இனம், சாதி இவற்றின் பெயரால் நாட்டில் உலவும் வன்முறை, பயங்கரவாத சக்திகளை அடையாளம் கண்டு அடியோடு அகற்றவும், பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய வழியில் நின்று இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டை யும், இறையாண்மையையும் கட்டிக் காக்கவும் இன்று மீண்டும் உறுதி மேற்கொள்வோம்.

வாழிய செந்தமிழ் !

வாழ்க நற்றமிழர் !

வாழிய பாரத மணித்திருநாடு !

அண்ணா நாமம் வாழ்க !



## திட்டங்களின் பலன்...

ஏழ்மையைப் போக்கி, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை நீக்கி, அனைவருக்கும் நல்வாழ்வு அளிக்கும் நவீன இந்தியாவை உருவாக்க பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் மேற்கொண் டுள்ள முயற்சியில் நம்மை இணைத்துக் கொள்வோம்.

சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினருக்குப் பலன் அளிக்கும் பல சீரிய திட்டங்களைத் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. அவை களைத் தொடருவதோடு, பல புதிய திட்டங் களை, வெளிநாட்டில் கண்டறிந்தவற்றை அடிப்படையாகக் கொண்டு, தமிழ் நாட்டின் வளர்ச்சிக்காக மைய அரசின் ஒத்துழைப்போடு செயலாற்றுவோம்.

கடந்த காலங்களில் மக்கள் நலனுக்கெனத் தீட்டப்பட்ட திட்டங்களின் பலன் அனைவருக்கும் கிடைத்து விட்டது என்றோ, குறிப்பாக அடித் தளத்து மக்களுக்கு முழுமையாகக் கிடைத்து விட்டதுஎன்றோ, சொல்ல முடியாது எனவே, நாம் செயல்படுத்தும் திட்டங்களின் பலன் வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள மக்களுக்கு முழுமையாகக் கிடைக்கும் வகையில் செயல் படுத்துவோம்.

அமைதி, ஒற்றுமை, முன்னேற்றம் என்ற முப்பெரும் முழக்கங்களை உயிர்மூச்சாகக் கொண்டு உழைப்போம்! [illegible] கடமையாற்றுவோம்!

—மாண்புமிகு தமிழக முதல்வர்

(15 [illegible] பேச்சிலிருந்து)



# சாதனை படைக்கும் சத்துணவுத் திட்டம்

அம்சம் 15

**டாக்டர் திருமதி இராசம்மாள் பா. தேவதாஸ்**

சமுதாயத்தின் மாபெரும் புரட்சித் திட்டமாக 1982-ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் தேதியிலிருந்து, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், குழந்தை களுக்கான இலவச சத்துணவுத் திட்டத்தைத் தமிழகத்திலுள்ள ஊரகப் பகுதிகள் அனைத் திலும் ஆக்கமுடன் தொடங்கி வைத்தார். பின்னர் 1983-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நகரங்களிலுள்ள குழந்தைகளுக்கும், 1984-ல் 8-வது வகுப்பு படிக்கும் மாண வர்கள் வரையில் எல்லோருக்கும் வழங்கப்பட்டது. இன்று தமிழ கத்திலுள்ள 85 இலட்சம் குழந் தைகளுக்கு மேல் இந்தத் திட் டத்தினால் பயனடைகிறார்கள். இரண்டு வயதிலிருந்து 14 வயது வரை, அனைத்துக் குழந்தைக ளுக்கும் பயனுறும் வகையில், ஆண்டொன்றுக்கு 180 கோடி ரூபாய் செலவழிக்கப்படுகிறது. திட்டம் துவக்கப்பட்ட நாளி லிருந்தே திட்டத்தினால் விளை யும் பயன்களையும் அதை இன் னும் முன்னேற்றும் வழி வகை களையும் அறிந்து கொள்ளப் பல ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு, தேவையான நடவடிக்கைகள் அவ்வப்பொழுது எடுக்கப்பட்டு வருகின்றன.

இதனால் இத்திட்டம் ஒழுங்காக நடைபெறுவதோடு பல முன்னேற்றங்களையும் கண்டிருக்கிறது. கோவையி லுள்ள திரு அவினாசிலிங்கம் மனையியல் பெண்கள் கல்லூரி யிலிருந்து அதன் இயக்குநரான நானும், கல்லூரிப் பேராசிரியை களும், முதுகலை பட்டப்படிப்பு மாணவிகள் அனைவருமாக இந்தச் சத்துணவுத் திட்டத்தி னால் ஏழைமக்கள் பெறும் நன்மை களைப் பற்றி அறிவதற்காக அறி வியல் பூர்வமாகப் பல ஆராய்ச்சி களை மேற்கொண்டோம். 1984-ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் 1985-ஆம் ஆண்டு மே மாதம் வரை நடத்திய ஆராய்ச்சிகளின் முடிவில் பல வியக்கத்தக்கவை களைக் கண்டோம்.

சத்துணவுத் திட்டத்தில் பங் கெடுத்துக்கொள்ளும் அனைத்துக் குழந்தைகளும் தங்களுடைய உடல் எடையிலும் உயரத்திலும் அதிக முன்னேற்றம் பெற்று, திட் டத்தில் பங்கெடுத்துக் கொள் ளாத ஏனைய குழந்தைகளைக் காட்டிலும் ஆரோக்கியமான வளர்ச்சியுடனிருந்தார்கள். சத் துணவுத் திட்டத்தில் பங்கேற்ற அனைத்துக் குழந்தைகளுக்கும், போதுமான சத்துள்ள உணவுப் பொருட்கள் கிடைத்ததால் அவர்கள் உடல் நலமுடனும், எவ்வித நோய்ப் பாதிப்பு இல்லா மலும் இருந்தனர்.

கோவை மாநகரைச் சுற்றி யுள்ள 6 குழந்தைகள் நல மையங் களில் 1985-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடத்திய ஆராய்ச்சி களின் முடிவில், சத்துணவுத் திட்டம் தொடங்கப்பட்ட நாளி லிருந்து இந்த நாள் வரை, இந்தத் திட்டத்தின் விளைவாக குழந்தை களின் உடல் நலம் எவ்வாறு பேணப்பட்டு வருகிறது எனக் கண்டறியப்பட்டது. 6 முதல் 9 வயதுக் குழந்தைகளிடம் நடத் தப்பட்ட ஆய்வில், 1982-ஆம், ஆண்டு 16.4—20.4 கிலோ எடையுடன் காணப்பட்ட சிறு வர்கள், அதே வயதினர் 1985-ஆம் ஆண்டு 16.6-21.4 கிலோ எடைக்கு உயர்ந்திருந்தார்கள். அதே போல, 1982-ஆம் ஆண்டு 16.4—20.1 கிலோ எடையுடன் காணப்பட்ட சிறுமிகள் 16.5—20.6 எடையுடன் இருந்தார்கள். சத்துணவுத் திட்டத்தில் தொடர்ந்து பங்கெடுத்துக் கொண்டதனால், உடல்நலம் அதிகரித்துள்ளது என்பது இதன் மூலம் தெளிவாக விளங்குகிறது.

திரு அவினாசிலிங்கம் அடிப் படைக் கல்விப்பள்ளியில் பயிலும் குழந்தைகளிடம் அவர்களின் அன்றாட வளர்ச்சியைப் பற்றி ஆய்வு செய்த பொழுது, அவர் களுக்குச் சத்துணவுத் திட்டத்தி னால் போதிய அளவு உயிர்ச் சத்துக்களும் கலோரிச் சத்துக் களும் கிடைப்பது, கண்டறியப் பட்டது. சத்துணவுத் திட்டத்தி னால் பயனுறும் குழந்தைகளுக்குச் சீரண மூலமாக 78.8 விழுக்காடு சக்தியும், திட்டத்தில் பங்கெடுக் காத குழந்தைகளுக்கு 71.9 விழுக்காடு மட்டிலுமே கிடைக் கின்றன. அதோடு, ஏனைய




சமையல் கூடம்



குழந்தைகளைக் காட்டிலும், திட்டத்தில் பங்கெடுத்துக்கொள்ளும் குழந்தைகளின் உடலில் நைட்ரஜன், கால்சியம், பாஸ்பரஸ் மற்றும் இரும்புச் சத்துக்கள் பெரும் அளவில் தங்குகின்றன. இரத்தத்திலுள்ள ஹிமோகுளோபினின் அளவு, சத்துணவு உண்டதனால் 0.97 கிராம். 100 மி.லி. அளவு அதிகமாக இரத்தத்தில் காணப்பட்டது. இதற்குமாறாக ஏனைய குழந்தைகளிடமோ ஹிமோகுளோபின் 0.64 கிராம் 100 மி.லி. அளவே அதிகமாகக் காணப்பட்டது.

கோவை மாவட்டத்திலுள்ள காரமடை பஞ்சாயத்து ஒன்றியத்தைச் சேர்ந்ததேர்ந்தெடுக்கப்பட்ட 10 கிராமங்களில் சத்துணவுத் திட்டத்திற்குச் சமுதாயத்திலிருந்து எப்படி ஒத்துழைப்புக் கிடைக்கிறது என்பதுபற்றிய ஆய்வு மேற்கொள்ளப்படடது. தனிப்பட்ட சந்திப்புகள் குழுக் கலந்துரையாடல், பொதுமேடைப் பேச்சுக்கள் போன்ற பல வழிகளில் சத்துணவுத் திட்டத்தை சாதாரண மக்களுடன் ஐக்கியப்படுத்தி அவர்களும் இந்தத் திட்டத்தில் ஆக்க பூர்வமாகப் பங்கெடுத்துக் கொள்ளும்படி செய்யப்பட்டது.



வெகு விரைவிலேயே, அதற்கு வெற்றியும் கிட்டியது. பஞ்சாயத்து முன்னாள், அங்கத்தினர்கள் தலைவர்கள் பஞ்சாயத்து ஒன்றிய அலுவலர்கள், இளைஞர் நற்பணிமன்ற அங்கத்தினர்கள் மற்றும் கிராம மக்கள் அனைவரும் திட்டத்தில் பெரும் பங்கெடுத்துக் கொண்டனர். சாதாரண குடிமக்களும், விவசாயிகளும், பெற்றோர்களும் தங்கள் நிலத்தில் விளைவிக்கப்பட்ட சத்துள்ள காய்றிகள் மற்றும் பழங்களைக் குழந்தைகளின் மதிய உணவிற்காக இலவசமாகக் கொடுத்தனர். அதோடு, மக்களின் பேராதரவோடு 14 நல மையங்களில் சிறந்த மண் அடுப்புகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. இன்னும், பள்ளித் தோட்டத்தைச் சீர்படுத்துவது, சாக்கடைகளைச் சுத்தப்படுத்துவது, பள்ளி விழாக்களில் பங்கேற்பது போன்ற பல நல்ல காரியங்களில் சத்துணவுத் திட்டத்துடன் இணைந்து நின்று, பொதுமக்கள் ஈடுபட்டனர்.

இந்த ஆராய்ச்சிகளின் முடிவாக, சத்துணவுத் திட்டம் தொடர்ந்து நல்ல முறையிலே செயல்பட்டு வருகிறதெனத் தெள்ளத் தெளிவாக விளங்குகின்றது.

—நன்றி: 'விஞ்ஞானச் சுடர்'

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்:

# தலை சிறந்த தமிழ் நாடு



ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் தொடங்கப்பட்ட 1978-79-லிருந்து ஒரே சீராக முன்னேற்றம் அடைந்து வந்துள்ளது. வறுமையை மட்டுப்படுத்தும் இத்திட்டம் ஆரம்ப காலத்தில் 2,300 ஒன்றியங்களில் தொடங்கப்பட்டன. 1980 அக்டோபர் 2-ஆம் தேதி எல்லா ஒன்றியங்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. தற்போது புதிய 20 அம்சத் திட்டத்தில் ஒரு அம்சமாக விளங்குகிறது.

1984-85-ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் சென்ற ஆண்டைக் காட்டிலும் இத்திட்டம் கணிசமாக முன்னேற்றம் கண்டுள்ளது. 1985 மார்ச் 31-ஆம் தேதி முடிய 37.04 இலட்சம் பேர்கள் இத்திட்டத்தினால் பயனடைந்துள்ளனர். 1983-84-ஆம் ஆண்டில் இதே காலத்தில் 36.85 இலட்சம் பேர்கள் மட்டும் பயனடைந்திருந்தனர்.

1984-85-ஆம் ஆண்டிற்கு 407.36 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இருப்பினும் இத்திட்டத்திற்காக 432.96 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. 1984-85-ஆம் ஆண்டில் கடைசி மூன்று மாதங்களில் 811.89 கோடி ரூபாய் கடனாக வழங்கப்பட்டது. 1983-84-ஆம் ஆண்டில் இதே காலத்தில் 773.51 கோடி ரூபாய் கடனாக வழங்கப்பட்டிருந்தது. 1984-85-ல் மானியமாக ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்ட தொகை 995 ரூபாயாகும்.

1983-84-ல் மானியமாக ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டதொகை 697 ரூபாய் மட்டுமேயாகும். 1984-85ல் தனி நபருக்கு வழங்கப்பட்ட கடன் மற்றும் மானிய தொகை 3188 ரூபாயாகும். 1984-85-ல் 2795 ரூபாய் மட்டுமே அளிக்கப்பட்டிருந்தது.

திட்டக் குழு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதை அறிய புதியமுறை ஒன்றை வகுத்துள்ளது. இலக்கீட்டில் 90 சதவீதம் வரை சாதனைப் புரிந்த மாநிலங்கள் தலை சிறந்தவையாகவும், 80 சதவீதம் முதல் 90 சதவீதம் வரையில் சாதனை ஏற்படுத்திய மாநிலங்கள் சிறந்தவையாகவும், அவற்றிற்குக் கீழ் உள்ள மாநிலங்கள் பின்தங்கியவைகளாகவும் கருதப்பட்டன.

இந்த அடிப்படையில் இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் ஆந்திர பிரதேசம், அசாம், இமாசலப் பிரதேசம், கர்நாடகம், தமிழ் நாடு, தில்லி, குஜராத், கேரளா, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, பஞ்சாப், ராஜஸ்தான, உத்திரப் பிரதேசம், தாத்ரா மற்றும் நகர் ஹாவேலி, கோவா, டாமன் மற்றும் டையு ஆகியவை தலை சிறந்தவைகளாகக் கருதப்படுகின்றன.



## 'வெரிகுட்' தமிழ்நாடு!

இருபது அம்சத் திட்டத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், தேசிய ஊரக வேலைவாய்ப்பு, உபரி நிலங்களைப் பெற்று ஒதுக்கீடு செய்யும் திட்டம், மலைவாழ் மக்கள் நலத் திட்டம், பிரச்சனை கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம், வீட்டு மனை வழங்கும் திட்டம், குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், மரம் நடும் திட்டம், சாண எரிவாயு ஆலைத் திட்டம், குடும்ப நல அறுவைச் சிகிச்சைத் திட்டம், ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தும் திட்டம் ஆகியவற்றின்கீழ், தமிழ்நாடு செய்துள்ள சாதனையை, "மிக நன்று" (Very Good) என்று மத்திய திட்டக்குழு பாராட்டியுள்ளது.



## பாசன வளத்தை அதிகரிக்கும் திட்டம்

சீரிய பயிர் விளைச்சலுக்கு நீர்ப்பாசனம் அடிப்படைத் தேவையாக விளங்குகிறது. தமிழகத்தில் நீர்ப்பாசனத்தின் கீழ் உள்ள 2.71 மில்லியன் எக்டர் நிலப்பரப்பில் 1.047 மில்லியன் எக்டர் சிறுபாசனக் கிணறுகளால் பயன்பெறுகின்றன. நிலப் பரப்பு நீர் அனைத்தும் பாசனத்திற்குப் பயன்படுத்தப்பட்டு விடுவதால் நிலத்தடி நீர் வளத்தைப் பெருக்குவதே, கூடுதல் பாசன வசதிக்கு இன்றியமையாததாகும்.

தமிழகத்தின் பரப்பளவு 1,30,000 சதுர கிலோ மீட்டர். சராசரி மழை அளவு 942.8 மில்லிமீட்டர், தமிழகத்தில் நிலப் பரப்பு 73%. கடினப் பாறைகளாகவும், 27 சதவிகிதம் வண்டற்படிவங்களாகவும் அமைந்துள்ளது.

நிலத்தடி நீரை அடைய, புவியியல் படிவங்களுக்கேற்பப் பல்வேறு அமைப்பு முறைகள் கையாளப்பட வேண்டி உள்ளது. இக்கட்டமைப்புகள் முறையே துளைக் கிணறுகள், குழாய்க் கிணறுகள், ஆழ்துளைக்கிணறுகள் ஆகியவை சிறுபாசனத் திட்டத்தின் கீழ் அமைக்கப்படுகின்றன.

கடந்த ஆண்டுகளில், ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம், தமிழகத்தில் சிறு நீர்ப்பாசனத் (நிலத்தடி நீர்) திட்டங்களைச் செயல்படுத்துவதில் வேளாண் பொறியியல் துறை பெரும் பங்கு வகித்துள்ளது. 1981ஆம் ஆண்டு முழு வளர்ச்சியடைந்த வேளாண்மைப் பொறியியல் துறை உருவான பின் இந்நாட்டின் நீர்ப்பாசன மூல வளத்தைப் பெருக்கும் பணியில் தன்னை முழு மூச்சுடன் அர்ப்பணித்துக் கொண்டுள்ளது.

### அம்சம்:1

தமிழ்நாட்டில் வேளாண்மைப் பொறியியல் துறையினால் பின்வரும் திட்டங்கள் செயலாக்கப்படுகின்றன. ஒவ்வொரு திட்டத்திலும் 1961ஆம் ஆண்டு முதல் புரிந்துள்ள சாதனைகள் பின்வருமாறு :

தனியார் குழாய்க் கிணறு திட்டம் - 68433 கிணறுகள். வடிமுனைக் குழாய்க்கிணறு திட்டம் - 53530 கிணறுகள்; கிணற்றுள் துளை அமைக்கும் திட்டம் - 36617 கிணறுகள்; பாறையைத் தகர்த்துக் கிணற்றை ஆழப்படுத்தும் திட்டம் - 33607 கிணறுகள்.

**தனியார் குழாய்க் கிணறு திட்டம்**

விவசாயிகளின் நிலங்களில், குழாய்க்கிணறுகளையும், துளைக் கிணறுகளையும் அமைத்து, நிலத்தடி நீரைப் பயன்படுத்தி, பாசன மூல வாய்ப்பை அதிகரிக்க வேளாண்மைப் பொறியியல் துறை விசைத் துளைச் கருவிகளையும், கைத்துளைக் கருவிகளையும் வழங்குகிறது. வேளாண்மைப்பொறியியல் துறை, ஹாமர் டிரில் (12), சுழல் துளைக் கருவிகள் (63), விசைத் துளைக் கருவிகள் (55) மற்றும் கைத் துளைக் கருவிகள் (252) ஆகியவற்றை விவசாயிகளுக்கு துளைக் கிணறுகள் அமைக்க வாடகைக்கு வழங்குகிறது. ஒரு குழாய்க் கிணறு கொண்டு 4 எக்டர் நிலத்திற்குப் பாசனம் செய்ய இயலும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. 1984-85ஆம் ஆண்டில் 4,880 குழாய்க் கிணறுகள் இத்துறையினால் அமைக்கப்பட்டுள்ளன. இதனால், 19,520 எக்டர் நிலம் நீர்ப்பாசனம் பெறுகிறது.

**வடிமுனைக் குழாய்க் கிணறு திட்டம்**

வடிமுனைக் குழாய்க்கிணறுகள் வண்டல் நிலங்களில் அமைக்கப்படும் ஆழமற்ற குழாய்க்

கிணறுகள் ஆகும். இந்நிலங்களில் நீர்பிடிப்பு நிலப் பரப்பிற்கு அருகில் அமைந்துள்ளது. இக்கிணறுகளை அமைக்க 103 கைத்துளைக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. வடிமுனைக் கிணறுகள் நேரடியாக சென்ரிபூகல் பம்பு செட்டுகளுடன் இணைக்கப்படுகின்றன. தஞ்சை மாவட்டத்தில் மற்றும் திருச்சி, தென்ஆர்க்காடு மாவட்டத்தின் சில பகுதிகளிலும் வடிமுனைக் கிணறுகள் அமைக்க நல்ல மூல வாய்ப்பு அமைந்துள்ளது. ஒவ்வொரு வடிமுனைக் குழாய்க் கிணறும், 2 எக்டேர் நிலத்திற்குப் பாசனம் வழங்க இயலும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1984-85ஆம் ஆண்டு 3049 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றால் 6,098 எக்டேர் நிலத்திற்குப் பாசன மூல வாய்ப்பு உருவாக்கப்படும். என எதிர்பார்க்கப்படுகிறது.

பருவமழை தவறியதன் காரணமாக, நிலப்பரப்பு நீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டு, அதனால் தஞ்சை மாவட்டத்தில் 5,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைக்கும் திட்டம் 1983ல் தொடரப்பட்டது. இத்திட்டம், ஆற்று கழிமுகப் பகுதிகளில், நிலத்தடி நீரின் மூல வாய்ப்பு வளத்தை மேம்படுத்தி நீர்ப்பாசனம் அதிகரிக்க வழி வகுக்கிறது. இத்திட்டத்தின் கீழ் 3009 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் வெற்றிகரமாக அமைக்கப்பட்டுள்ளன.

**கிணற்றுள் துளைக் கிணறு அமைக்கும் திட்டம்**

சில மாவட்டங்களில், கிணற்று நீரின் அளவு நிலை, படிப்படியாகக் குறைவது காணப்படுகிறது. இதனால் கிணற்றிலிருந்து பெறப்படும் நீரின் அளவு குறைகிறது. இத்திட்டம் கிணற்றினுள் துளைகளை அமைத்து, ஆழத்தில் அமைந்துள்ள நீர்ப்பிடிப்புகளில் இருந்து நீரினைப் பெற வழி வகுக்கிறது. இத்துறை, விவசாயிகளை ஊக்குவிக்க, வாகன்/இன்வெல் டிரில்களையும் (23), ஆழ்துளைக் கருவிகளையும் (57), கைத்துளைக் கருவிகளையும் (55) வாடகைக்கு வழங்குகிறது. இவ்வாறு துளையிடப்பட்ட கிணறுகள் 0.4 எக்டேர் நிலப் பரப்புக்குப் பாசனம் அளிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1984-85 ஆம் ஆண்டு 3427 கிணறுகளில் துளைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் மேலும் 1371 எக்டர் நிலம் பாசனத்தின் கீழ் கொண்டு வரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



**பாறையைத் தகர்த்துக் கிணற்றை ஆழப்படுத்தும் திட்டம்**

இத்திட்டம், பாறை நிலங்களில் அமைந்துள்ள திறந்த கிணறுகளில் செயல்படுத்தப்படுகிறது. பாறைப் படிவங்களைத் தகர்த்து, அவற்றில் அமைந்துள்ள வெடிப்புகளையும், துளைகளையும் வெளிப்படுத்தி, நீர்வளத்தைப் பெருக்கச் செயல்படுகிறது. இத்திட்டத்தைத் துரிதப்படுத்த 103 பாறைவெடிக் கருவிகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. பாறையை வெடிக்கப் பயன்படும் வெடிமருந்துகள் (ஜல்லட்டின், டிட்டோனேடர்கள்) இத்துறையாலேயே கொள்முதல் செய்யப்பட்டு இத்துறையின் வெடிமருந்துக் கிடங்குகளில் சேமித்து வைக்கப்படுகின்றன. விவசாயிகளின் தேவைக்கு ஏற்ப மாவட்ட ஆட்சியாளரிடம் இருந்து பெறப்பட்ட 'லைசென்ஸ்களின் பேரில், கட்டுப்பாட்டு விலைக்கு வெடிமருந்துகள் வழங்கப்படுகின்றன. இவ்வாறு ஆழப்படுத்தப்பட்ட கிணறு 0.4 எக்டேர் நிலத்திற்குப் பாசனம் வழங்க முடியும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

1984-85ஆம் ஆண்டு, 2470 கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டன. இதனால், 989 எக்டேர் நிலம் பாசனத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இத்துறை பெரும் அளவில், கசிவு நீர்க் குட்டைகளை அமைக்கும் திட்டத்தை மேற்கொண்டு நிலத்தடி நீரின் அளவை அதிகரிக்கச் செய்கிறது. 1984-85 ஆம் ஆண்டு 1078 கசிவுநீர்க் குட்டைகள் அமைக்கப்பட்டன. இக்குட்டைகள், நிலத்தடி நீரின் அளவை அதிகரிக்க வழியாக அமைந்து அருகில் உள்ள கிணறுகளின் நீர்ப்பாசன மூலவாய்ப்பை அதிகரிக்கிறது.

இராமநாதபுரம், புதுக்கோட்டை மாவட்டங்களில் வறட்சி பாதித்த பகுதித் திட்டத்தின் கீழ் சமுதாயக் கிணறுகள் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் சென்ற ஐந்து ஆண்டுகளில் 350 சமுதாயக் கிணறுகள் அமைத்து முடிக்கப் பெற்று சுமார் 5,000 ஏக்கர் நிலப்பரப்பிற்கு நீர்ப்பாசன மூலவாய்ப்பு வளம் ஏற்பட்டுள்ளது. ஆண்டுதோறும் வறட்சியினால் பாதிக்கப்படும் மக்களின் நல மேம்பாட்டிற்காகச் செயற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டங்கள், குழாய்க் கிணறுகள் அமைப்பதாலும், கிணறுகள் வெட்டுவதாலும், நிலத்தடிநீரை வெளிக்கொணர்ந்து அதன் மூலம் நீர்ப்பாசன மூலவாய்ப்பு வளத்தினைப் பெருக்கும் நோக்கு கொண்டது. இச் சமுதாயக் கிணறுகள், தங்களால் தங்களுக்கு உரிமையுள்ள தனிப்பட்ட கிணறுகள் அமைக்க இயலாத விவசாயிகளின் நலனுக்காக உருவாக்கப்பட்டவையாகும்.

தமிழ்நாட்டில் கிடைக்கும் நில நீர் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டு விட்டது. ஐந்தாண்டுத் திட்டங்கள் தொடரப்படுவதற்கு முன்னர் 1101 ஆயிரம் எக்டேர் நிலம் பாசன வளம் பெற்றது. ஐந்தாண்டுத் திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டங்கள் மூலமாக 1979-80 வரை அதாவது 5வது ஐந்தாண்டுத் திட்டம் வரை 288.30 ஆயிரம் எக்டேருக்கு கூடுதல் பாசன வளம் ஏற்படுத்தப்பட்டது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 66,000 எக்டேருக்கு கூடுதல் பாசன வளத்தை அளிக்க, குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. மேற்படி திட்டத்தில் ஆண்டுதோறும்



கூடுதல் பாசன வளம் ஏற்படுத்தப்பட்டது. அதன் விவரம்:

| | எக்டேர் |
|---|---|
| 1980—81 | 11,560 |
| 1981—82 | 8,300 |
| 1982—83 | 10,600 |
| 1983—84 | 18,640 |
| 1984—85 | 23,621 |

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டான 1985-86ஆம் ஆண்டு 20,000 எக்டேர் நிலங்களுக்கு கூடுதல் பாசன வளத்தை ஏற்படுத்தக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

1984-85-ஆம் ஆண்டு பாசன வளத்தை மேம்படுத்த ரூபாய் 43.35 கோடி ஒதுக்கப்பட்ட தொகையில் தோராயமாக ரூ. 33.34 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**பஞ்சம் போக்கிடும் புஞ்செய்ப் பயிர்கள்:**

தமிழகத்தில் உள்ள 160 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பில் சுமார் 69 இலட்சம் எக்டேர் சாகுபடி நிலமாக உள்ளது. இதில் சுமார் 52 சதம் வானம் பார்த்த [illegible]களாகவே உள்ளது.

இப்படி மானாவாரியாக இருந்தும் நமக்குத் தேவையான சிறு தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், பருத்தி ஆகியவை புஞ்செய்யிலேயே பயிர் செய்யப்படுகின்றன.

மானாவாரி சாகுபடி முழுக்க முழுக்க மழையையே நம்பியுள்ளது. இடு பொருட்களையோ, கட்டுக்கோப்பு சாகுபடி முறைகளையோ ஓரளவே கையாள முடிகிறது. இதன் விளைவாக உற்பத்தித் திறனும் குறைந்தே காணப்படுகிறது. ஆனால் உழவர் பெருமக்கள் புதிய வேளாண்மை நுட்பங்களைக் கையாளுவதினாலும் தக்க பண்ணை மேலாண்மைகளினாலும் உற்பத்தியை அதிகரிக்க இயலும். இதைஈடேற்றத்தான் புதிய 20 அம்சத் திட்டத்தில் புஞ்செய்த் திட்டம் முதலிடம் பெறுகிறது.

புதியபுஞ்செய்ச்சாகுபடிமுறைகளைப் பெரும் அளவில் பரப்ப 1,000 ஏக்கர் பெருவிளக்கப் பண்ணைகள் தமிழகத்தில் தஞ்சை, நீலகிரி மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் சிறப்பாகச் செயல்படுகின்றன.

இங்கு செயல் விளக்கங்கள் மூலம் குறைந்த நீரில் அதிகப் பரப்பில் அதிக உற்பத்தி செய்யும் தொழில் நுட்பங்கள் செய்து காண்பிக்கப்படுகின்றன. மழை நீரையும், மண்ணின் ஈரத்தையும் பாதுகாத்தல், அதிகப் பலன் தரும்பயிர்த்திட்டத்தை ஏற்றல், பருவத்திற்கேற்ற ரகங்களைக் கண்டறிதல், கலப்புப் பயிர், தொடர் பயிர் சாகுபடி செய்தல் சிக்கனச் சாகுபடி முறைகளைப் பரப்புதல், காயத்தே இடு பொருட்களை இடுதல், நுண்ணூட்ட உரம், இரசாயன உரம் உபயோகித்தல், தேவையான பயிர்ப் பாதுகாப்பு, உழுபடைக் கருவிகள் உபயோகித்தல் போன்ற நல்ல பல திட்டங்கள், உழவர்களுக்கு உதவிடும் வகையில் செயல்படுத்தப்படுகின்றன.

**சாதனை:**

இவ்வாண்டு (1984-85) சுமார் 1 இலட்சம் எக்டேர் பரப்பளவில் 212 ஆயிரம் ஏக்கர் பெரு விளக்கப் பண்ணைகளில் சரிவிற்குக் குறுக்கே கோடை உழவு செய்தல், அகலப்பாத்தி ஆழ்கால் அமைத்தல், பல பயிர் சாகுபடி செய்தல், ஊடுபயிராக பயறு வகை சாகுபடி செய்தல்; ஊடுபயிராக எண்ணெய் வித்து பயிரிடுதல், கொரு கலப்பை கொண்டு விதைத்தல், இரசாயன உரங்களை உபயோகித்தல், நிலக்கடலைக்கு ஜிப்சம் இடுதல், விதையுடன் நுண்ணுயிர் கலத்தல், நிலத்திற்கு ஏரி வண்டல் இடுதல், கலவை உரம் தயாரித்தல், சிக்கன உழவுக் கருவிகளைப் பயன்படுத்துதல் போன்ற திட்டப்பணிகள் முறைப்படி செயல்படுத்தப்பட்டன.

**உழவர் ஈடுபாடு:**

சுமார் 54,273 சிறு விவசாயக் குடும்பங்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெற்றன. இவர்களில் 7,641 குடும்பங்கள் பிற்பட்ட மற்றும் மலைச்சாதி வகுப்புகளைச் சார்ந்தவை. திட்டப் பகுதியில் உள்ள உழவர்கட்கு உழவர் பயிற்சி நிலையங்கள் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது.

**இடு பொருள்:**

இச்செயல் விளக்கப் பண்ணைகளில் வறட்சியைத் தாங்கக் கூடிய தரமான விதை சுமார் 20,332 எக்டேர் பரப்பளவில் விதைக்கப்பட்டது. இரசாயன உரங்களும் பரிந்துரைப்படி உபயோகிக்கப்பட்டன.

இரசாயன உரம் மற்றும் விதை விதைக்கும் கருவிகள் சுமார் 1,214 மற்ற உழுபடைக்கருவிகள் சுமார் 26,823 விநியோகம் செய்யப்பட்டன.

**தரிசுநிலங்களில் வேளாண் காடுகள்:**

உழவர்களுக்கு நிரந்தர வருவாய் தர, சுமார் 13 இலட்சத்திற்கும் அதிகமான பழம் மற்றும் மரக் கன்றுகள் சுமார் 15,000 எக்டேர் பரப்பில் பயிரிட வழங்கப்பட்டன.



இந்தியத் திருநாட்டின் பொருளாதார மறுமலர்ச்சிப் பயணத்தின் முக்கிய மைல் கல்லாகப் புதிய 20 அம்சத் திட்டம் விளங்குகிறது.

1975ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 20 அம்சத் திட்டம், ஐந்தாண்டுத் திட்டங்களின் பயனாக முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருந்த இந்திய சமதர்மப் பொருளாதார வளர்ச்சியை மேலும் ஊக்குவித்தது. இதன் தொடர்ச்சியாகவே புதிய 20 அம்சத் திட்டத்தை, நாட்டு மக்களுக்கு மாண்புமிகு பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் 14.1.1982 அன்று அளித்தார்.





# மிகை நில ஒப்படை முன்னேற்றம்

## அம்சம் 4

தமிழ்நாடு 1961ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தச் (நில உச்ச வரம்பு நிர்ணயித்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 58/61) 6-4-60-ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது. 5 பேர்கொண்ட குடும்பம் ஒன்றிற்கு உச்சவரம்பு 30 ஸ்டாண்டர்டு ஏக்கராக நிர்ணயிக்கப்பட்டது. ஒவ்வொரு கூடுதல் நபருக்கும் 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் வைத்துக் கொள்ளலாம் என்றும் ஆனால் அதுவும் சேர்த்து மொத்த உச்சவரம்பு 60 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேற்படக்கூடாது என்றும் குறிப்பிடப்பட்டது.

இந்த உச்சவரம்பு குறைக்கப்பட்டு மூலச் சட்டத்தின் மூலம் அளிக்கப்பட்டிருந்த சில விதிவிலக்குகள் 17/70 ஆம் சட்டத்தினாலும், அடுத்து இயற்றப்பட்ட பிற சட்டங்களாலும் ரத்து செய்யப்பட்டன. 5 அல்லது அதற்குக் குறைவான பேர்கள் கொண்ட குடும்பத்திற்கு உச்சவரம்பு 15 ஸ்டாண்டர்டு ஏக்கராகும். 30-4-85ஆம் நாள் வரையில் நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் அடைந்த முன்னேற்றம் பின்வருமாறு:—

| | |
|---|---|
| உபரியாக அறிவிக்கப்பட்ட பரப்பு | 1,62,667 |
| நிலத்தை அரசு வசம் எடுத்துக் கொள்ளு முன்னரும் தடையாணையின் கீழ் உள்ள பகுதி: | 23,199 |
| (அ) தகுதி வாய்ந்தவர்களுக்குத் கொடுக்கப்பட்ட பரப்பு: | 1,19,079 |
| (ஆ) தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்திடம் ஒப்படைத்த பரப்பு: | 4,041 |
| (இ) உபரி நில விநியோக விதிகளின் 13ஆம் விதியின் கீழ் ஒதுக்கி வைக்கப் பட்டவை: | 9,976 |

| பயனடைந்தோர் எணணிக்கை: | நபர்கள் | பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|
| ஆதிதிராவிடர்: | 40,914 | 45,330 |
| பழங்குடியினர்: | 75 | 111 |
| ஏனையோர்: | 52,178 | 73,638 |
| மொத்தம்: | 93,167 | 1,19,079 |

வழங்க வேண்டி இருக்கும் பரப்பு: ... 6,373 ஏக்கர்

உபரி நிலங்கள் விநியோக விதிகளின் கீழ் உயரளவு 3ஏக்கர் புன்செய் நிலத்தையோ அல்லது $1\frac{1}{2}$ ஏக்கர் நன்செய் நிலத்தையோ தகுதி வாய்ந்தவர்களுக்கு ஒப்படை செய்யப்படுகிறது.

புதிய 20 அம்சத் திட்டத்தில் 4-வது பிரிவான உபரி விவசாய நிலங்களைப் பகிர்ந்தளித்தல் ஓர் அம்சமாகும். 31-3-85 தேதி வரை 28,517 ஏக்கர் உபரி நிலங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளது. 1-4-84 தேதி முதல் 31-3-85 தேதி வரையிலான ஓராண்டுக் காலத்தில் 5,067 ஏக்கர் உபரி நிலங்கள் கீழ்க் கண்ட மாவட்டங்களில் கீழ்க் கண்டவாறு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

| மாவட்டங்கள் | ஒப்படைக் கப்பட்ட பரப்பு (ஏக்கரில்) |
|---|---|
| செங்கல்பட்டு | 64 |
| தென் ஆர்க்காடு | 50 |
| தஞ்சாவூர் | 912 |
| திருச்சிராப்பள்ளி | 185 |
| பெரியார் | 60 |
| புதுக்கோட்டை | 120 |
| சேலம் | 187 |
| தருமபுரி | — |
| கோயம்புத்தூர் | 821 |
| மதுரை | 1,694 |
| இராமநாதபுரம் | 256 |
| திருநெல்வேலி | 700 |
| கன்னியாகுமரி | 18 |
| மொத்தம் | 5,067 |

அரசானது சில விதிமுறைகட்கு உட்பட்டு உபரியாக உள்ள விவசாய நிலங்களைக் கண்டறிந்து அறிவித்துள்ளது. அதனைத் தமிழ்நாடு உபரி விவசாய நிலங்களை விநியோகிக்கும் விதிமுறை 1965இன் கீழ் நிலமற்ற விவசாயிகட்குப்பகிர்ந்தளித்துள்ளது.

1984-85-ஆம் ஆண்டில் மைய அரசின் திட்டங்களில், உபரி நிலங்களை விநியோகம் செய்வதற்கான நிதி உதவி அளிப்பதில் ரூ. 40,000 இதுவரை செலவிடப்பட்டுள்ளது. அதற்கான நிதி ஒதுக்கீட்டுத் தொகையை ரூ.1,000-லிருந்து ரூ.2,500 ஆக ஒரு எக்டேர் நிலத்திற்கு மைய அரசு ஒதுக்கியுள்ளது. இத் திட்டத்தின் கீழ் 1984-85ஆம் நிதி ஆண்டில் 31-3-85 வரை 39.82 இலட்சம் ரூபாய் இது வரை செலவிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் தாவர எண்ணெய்களின் தேவைக்கேற்ப எண்ணெய்வித்துக்கள் உற்பத்தி ஆவதில்லை. எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியைப் பெருக்கும் செயல் திட்டங்கள் தீட்டப்பட்டு கடந்த 2 ஆண்டுகளாக எண்ணெய்வித்துத் துறையின் மூலம் தீவிரமாகச் செயலாற்றப்பட்டு வருகின்றன.

**உற்பத்தி:**

1984-85-ஆம் ஆண்டின் முன் பருவத்தில் கடுமையான வறட்சி இருந்தபோதிலும் சுமார் 15.37 இலட்சம் எக்டேரில் தென்னை மற்றும் இதர எண்ணெய் வித்துக்கள் பயிர் செய்யப்பட்டு, சுமார் 16.42 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

## அம்சம் 2

**சரியான பயிர் எண்ணிக்கை பராமரித்தல்:**

தகுந்த அளவு விதைப்பதன் மூலமும், விதைக்கும் கருவிகள் உபயோகிப்பதன் மூலமும் தக்க முறைகளைப் பயன்படுத்தி வழங்குவதை விளக்கத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இவை தவிர எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்காகப் பல புதிய உற்பத்தித் திட்டங்கள் தமிழகத்தில் புதிய 20 அம்சத் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் தமிழகத்தில்தான் தரமான எண்ணெய்வித்துக்கள் அரசுத் துறை மூலம் விநியோகிக்கப்படுகின்றன. உற்பத்தியை அதிகரிக்க உதவும் பல்வேறு இடுபொருட்களையும் தக்க பருவத்தில் விவசாயிகளுக்கு வழங்கிட எண்ணெய் வித்துத்துறை செயல்படுகிறது.

**எண்ணெய்வித்துத் துறையின் அபிவிருத்தித் திட்டங்கள்:**

எண்ணெய்வித்துச் சாகுபடிப் பரப்பினை அதிகரித்தல்

மானாவாரிச் சாகுபடியை அதிகரித்தல்.

இடுபொருட்கள் வழங்குதல்.

ஆயிரம் ஏக்கர் பெருவிளக்கப் பண்ணையில் மானாவாரிச் சாகுபடியைச் செயல்படுத்துதல்.



# எண்ணெய் வித்து உற்பத்தியில் முன்னேற்றம்

இது இந்த ஆண்டின் குறியீடான 15.37 இலட்சம் எக்டேரையும் 14.60 இலட்சம் டன் உற்பத்தியையும் விஞ்சி உள்ளது.

இந்த ஆண்டு கிணற்று நீரைக் கொண்டும், குளம், குட்டைகள் மற்றும் வாய்க்கால் நீரைக்கொண்டும் அதிக அளவில் மணிலா சாகுபடி செய்யப்பட்டது. சென்ற ராபி பருவத்தில் குறியீடான 3.65 இலட்சம் எக்டேர் சாகுபடி செய்து பெரும் சாதனை ஏற்படுத்தி உள்ளது. தக்க பருவச் சூழ்நிலையினாலும், காலத்தே விநியோகிக்கப்பட்ட இடுபொருளினாலும், ஜிப்சம் உரம் இட்டதினாலும் மணிலாவில் அதிகமான அளவு உற்பத்தி பெற முடிந்தது. இருக்கும் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி அதிக அளவு பயிர் செய்யும் வகையில் தெளிப்பு மற்றும் சொட்டு நீர்ப்பாசன முறைகளைப் பயன்படுத்தி பயிர்த் தொகையைப் பராமரிக்க முடிகிறது.

நல்ல தரமான விதைகளை உபயோகித்தல்.

விதை நேர்த்தி.

காலத்தில் பயிர்ப்பாதுகாப்பு

கோடை உழவு செய்து மண்ணின் ஈரத்தைக்காத்தல்.

சமச்சீர் உரமிடுதல்.

நுண்ணூட்டச் சத்துக் கலவை உபயோகித்தல்.

ஜிப்சம் மற்றும் நுண்ணூட்ட உரமிடுதல்.

நீர்ப்பராமரிப்பு

ஊடு பயிர் செய்தல்.

**இடு பொருள் விநியோகம்:**

நிலக்கடலையில் சூரியகாந்தியையும் ஆமணக்கையும் ஊடு பயிர் செய்தல், தென்னையிலும் ராகி, கம்புப் பயிருடனும் நிலக் கடலை சாகுபடி செய்தல்.

**எதிர் காலத் திட்டங்கள்**

தாவர எண்ணெய் உற்பத்தியைப் பெருக்கிடத் தமிழகம் முழுவதும் செயல் திட்டங்கள் முழு முயற்சியுடன் மேற்கொள்ளப்படும். சுமார் 1985-86ல் 15.14 இலட்சம் எக்டேர் பரப்பில் எண்ணெய்வித்துக்கள் சாகுபடி செய்யப்பட்டு 15.75 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்து 20 அம்ச திட்டத்தில் சாதனை படைக்கப்படும்.

**பயறு உற்பத்தி**

தமிழகத்தில், பெருகி வரும் மக்கள் தொகையின் தேவைக்



கேற்ப உணவளிக்கப் பருப்பு உற்பத்தியாகாத காரணத்தால் தமிழக அரசும் மத்திய அரசும் பயறு உற்பத்தியைப் பெருக்க பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன.

அண்டை மாநிலங்களிலிருந்து பருப்பு வகைகளை இறக்குமதி செய்வதைக் குறைத்து நம் சுய தேவை உற்பத்திக்கு புரதச் சத்துக்களை அளிக்கும் பருப்பு அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. மரக்கறி உண்பவர்களுக்குப் புரதம் அளிக்கும் பருப்பினை நாம் சுமார் 90 கிராம் அன்றாட உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஆனால் தமிழகத்தில் சுமார் 20 கிராம்கள் வரை மட்டுமே உட்கொள்ளுகிறோம். புரதச் சத்து அளிக்கும் மூளை வளர்ச்சிக்குக் காரணமான பருப்பினைச் சிக்கன முறையில் சாகுபடி செய்ய தமிழ்நாடு அரசு 20 அம்சத் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது.

**உற்பத்தியில் சாதனைகள்:**

1984-85 சுமார் 8 லட்சம் எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டு அதிகப்படியாக 2.55 இலட்சம் டன்களே உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால் 1984 85ல் சுமார் 10.9 இலட்சம் எக்டேரில் பயிர் சாகுபடி செய்யப்பட்டு 3.7 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்து, தமிழக வரலாற்றில் சாதனையைப் படைத்துள்ளது. உற்பத்தித் திறனும் எக்டேருக்கு 340 கிலோவாக உயர்ந்துள்ளது. இவையெல்லாம் 20 அம்சத் திட்டத்திற்குக் கிடைத்த மாபெரும் வெற்றி ஆகும்.

**தீவிரச் சாகுபடி முறைகள்:**

பருவத்திற்கேற்ற இரகங்களைப் பரிந்துரைப்படி விதைத்தல், விதை நேர்த்தி செய்தல், நுண்ணுயிர் கலந்து விதைத்தல் எக்டேருக்கு 25 கிலோ தழைச் சத்து 50 கிலோ மணிச்சத் என்ற விகிதத்தில் மானாவாரிக்கு இதில் பாதி அளவு உரமிடுதல், களைகளைக் களைதல் சீர்மிகு சாகுபடி முறைகளாகும்.

வேளாண்மைத் துறை இடுபொருட்களைக் காலத்தே வழங்கியும், நுண்ணுயிர்க் கலவை தயாரித்து வழங்கியும் உழவர்க்கு உதவுகிறது. நுண்ணுயிர் கலப்பதால் 15 சதம் கூடுதல் மகசூல் கிடைக்கிறது. எக்டேருக்கு 40 கிலோ தழைச்சத்து சேகரிப்படுகிறது. சென்ற ஆண்டு சுமார் 3 இலட்சம் நுண்ணுயிர்க் கலவைகள் தயாரித்து அளிக்கப்பட்டது. டை அமோனியம் பாஸ்பேட் உரக்கலவை தெளிப்பதால் 15 சதம் உற்பத்தி அதிகரிக்கிறது. இதற்காக அரசு மானியம் வழங்குகிறது. பயறு சாகுபடி நுணுக்கங்கள் விவசாயிகளுக்குப் பயிற்சிகள் மூலம் அளிக்கப்படுகின்றன. இதற்கு ஒவ்வொரு விவசாயிக்கும் ரூ. 40 ஊக்கத் தொகை கொடுக்கப்படுகிறது.

இவை தவிர, மூலப் பயறு விதை உற்பத்திக்கும், ஆதார பயறு விதை உற்பத்திக்கும், சான்றிதழ் பெற்ற பயறு உற்பத்திக்கும் அரசு மானியம் வழங்கப்படுகிறது. நுண்ணுயிர்க் கலவைப் பொட்டலங்கள், பூச்சி மருந்துகள் 50 சதம் மானிய விலையில் வழங்கப்படுகின்றன.

**மினிகிட்:**

உரிய காலத்தில் அதிக அளவில் புதிய ரகப் பயறு விதைகள் கிடைக்கவும், பயறு வகைகளை அதிக அளவில் பயிரிட ஊக்குவிக்கவும் நுண்ணுயிர்க் கலவை மற்றும் உரமிடும் பழக்கத்தை ஊக்குவிக்கவும், மைய அரசு உதவியுடன் இலவசமான மினிகிட்டுகள் சிறு விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. இம்மினிகிட்டுகளில் 4 கிலோ விதை, நுண்ணுயிர்க் கலவை, 20 கிலோ டி. ஏ. பி. உரம் அடங்கும்.





# ஏழைகளுக்கு வீட்டு மனை

சமுதாயத்தில் நலிந்த நிலையில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கோடு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நிறைவேற்ற வேண்டுமென்று இந்தியப் பிரதமர் அவர்கள் வலியுறுத்தி வருவதைக் கருத்தில் கொண்டு, தமிழக அரசு இருபது அம்சத் திட்டத்தின் 9-ஆம் அம்சமான நிலமற்ற ஏழைமக்களுக்கு வீட்டுமனைகள் வழங்கி அவர்கள் வீடுகள் கட்டுவதற்கான நிதி உதவியும் வழங்குவதற்கான திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறது.

**அம்சம் எண். 9 (அ)**

இந்த அம்சத்தின்கீழ் இம்மாநிலத்தில் இரு திட்டங்கள் செயல்படுத்தப்படவிருக்கின்றன. இம்மாநிலத்தில் புறம்போக்கு நிலங்கள் எங்கெல்லாம் உள்ளனவோ அங்கெல்லாம் அவை வீட்டுமனைகளாக்கப்பட்டு நிலமற்ற ஏழைமக்களுக்கு வருவாய்த் துறையினால் ஒப்படை செய்யப்படுகின்றன. இத்தகைய புறம்போக்கு நிலங்கள் இல்லாத இடங்களில், தனியார் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர் ஆகியோருக்கு, சமூக நலத்துறையால் வீட்டுமனைகளாக வழங்கப்படுகின்றன.

**அம்சம் 9**

1983-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் என்றுள்ளபடி இம்



மாநிலத்தில் வீட்டுமனையின்றி வாழும் குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை 7,43,474. 6-ஆம் திட்ட இலக்கில், 1980-81 முதல் 1983-84 வரை எய்திய சாதனை, அதாவது வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 5,83,383; எஞ்சியுள்ள இலக்கு 1984-85ஆம் ஆண்டில் 1,60,091 குடும்பங்களுக்கு வீட்டு மனைகள் வழங்கப்பட வேண்டியுள்ளது. இது 6ஆம் திட்ட இலக்காக எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளது. 1980-82ஆம் ஆண்டுகளில் 2,27,047 குடும்பங்களுக்கு வீட்டுமனைகள் வழங்கப்பட்டுள்ளன என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

1983-84-ஆம் ஆண்டில் கிராமப் பகுதியிலுள்ள 1,75,000 குடும்பங்களுக்கு வீட்டு மனை ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று இந்திய அரசு இலக்கு நிர்ணயித்திருக்க, 31-3-84ஆம் நாள்வரை 2,11,434 வீட்டு மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இது மேற்சொன்ன இலக்கில் 120.8 சதவீதமாகும். 1984-85-ஆம் ஆண்டிற்காக வரையறுக்கப்பட்டுள்ள இலக்கு 1,75,000 ஆகும் (திருத்தப்பட்ட

மதிப்பீடு). இதனைச் செயல்படுத்தினால் நிறைவேற்றப்படும் இலக்கு 6-ஆம் திட்ட இலக்கை விட 15,000 அதிகமாக இருக்கும். 1,75,000 என்று நிர்ணயிக்கப்பட்ட இலக்கில், 1985-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வரை வழங்கப்பட்டுள்ளவற்றின் எண்ணிக்கை 2,05,108 ஆகும்.

**அம்சம் எண்: 9 (ஆ)**

வீட்டுமனை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மொத்த மக்கள் தொகையில் 25 சதவீதத்தினருக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்பது இந்திய அரசின் இலக்காகும். இம்மாநில அரசு, இத்திட்டத்தை, வீடுகட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நிறைவேற்றி வருகிறது. 1980-81 முதல் 1984-85 வரையுள்ள ஐந்தாண்டுகளில் 2,00,000 வீடுகள் கட்டுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கிராமப் பகுதி வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் இச்சங்கத்தின் உறுப்பினர்களுக்கு, வீடுகள் கட்டுவதற்காக 20 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தத்தக்கவகையில் கடன் வழங்கப்படுகிறது. 200 சதுர அடி மனைப்பரப்பு கொண்ட வீடுகள் கட்டுவதற்கு உச்சவரம்பு தொகையாக ரூ. 6,000, 1983 ஏப்ரல் திங்களிலிருந்து வழங்கப்படுகிறது. இதில் 25 சதவீதத் தொகை வீடுகட்டுபவர் ரொக்கமாக அல்லது கட்டடப் பொருள்களாக அல்லது உடலுழைப்பாக ஏற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறு பயன்பெறும் ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஒவ்வொருவரும் மூலதன உதவித் தொகை 1,000 ரூபாய் பெறத் தகுதியுடையவர்களாவர். அவர்களுக்கு வழங்கப்படும் கடன்களுக்கு வட்டி கிடையாது.

கிராமப்பகுதி வீட்டுவசதித்திட்டத்தின்கீழ், 6-ஆம் திட்டக் காலத்தில் 1980-83-ஆம் ஆண்டுகளில், 1,18,500 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 1983-84-ஆம் ஆண்டில் 40,000 வீடுகள் கட்ட இலக்கிடப்பட்டுள்ளது. இதில், 31-3-84-ஆம் நாள்வரை 40,016 வீடுகள் கட்டப்பட்டன. இது இலக்கின் 100 சதவீதமாகும்.



6வது திட்டத்தில், 2,00,000 வீடுகள்கட்ட இலக்கிடப்பட்டது. இதில்1980-81 முதல் 1983-84 வரை 1,58,516 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 41,484 வீடுகள் 1984-85-ல் கட்டப்பட விருக்கின்றன. 1984-85 ஆம் ஆண்டில் 41,484 வீடுகள் கட்டி முடிக்க வேண்டுமென்று (திருத்த மதிப்பீடு) இலக்கிடப்பட்டுள்ளது இந்த வீடுகள் கட்டி முடிக்கப் படுமேயாயின் மேற்சொன்ன இலக்கை இத்துறை எய்திவிடும். மேற்சொன்ன இலக்கில்1985ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வரையில் 42,476 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இந்தியப் பிரதமரின் புதிய இருபது அம்சத் திட்டத்தில் 9-ஆ – கீழ் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்குக் குடியிருப்பு வீடுகள் கட்டுவதற்கு நிதி உதவி வழங்க வகை உள்ளது. அதனை நிறைவேற்ற தமிழ்நாடு அரசு கிராமக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள், மூலம் 201 சதுர அடியில் ஓட்டு வீடுகள் கட்டுவதற்கு, வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் டெல்லியின் நிதி உதவியுடன் 10 முதல் 20 ஆண்டுக்காலத் தவணையில் திருப்பிச் செலுத்தும் திட்டத்தில் ரூ. 6,000 மதிப்பீட்டில் ரூ. 4,500 கடனாகவும் வழங்கப்படுகிறது. மேலும் ஆதிதிராவிடர் மற்றும் மலை வாழ் சாதியினருக்கு ரூ. 1,000 மான்யமாகவும் வட்டியில்லாக் கடனாகவும் கடன் வழங்கப்படுகிறது.

காமராஜர் மாவட்டத்தில் அருப்புக்கோட்டை, சிவகாசி கோட்ட கிராமக் கூட்டுறவுவீட்டு வசதிச் சங்கங்களும், விருதுநகர் வட்ட கிராமக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கமும் மேற்படி திட்டத்தைச் செயல்படுத்துகிறது. 1984-85ஆம் ஆண்டில் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டதில் மூன்று சங்கங்களும்,776 வீடுகள் கட்டுவதற்கு 883 உறுப்பினர்களுக்கு ரூ. 33.83 இலட்சம் கடன் வழங்கி, 786 வீடுகள் கட்டி முடிக்கப் பெற்றுள்ளன.

சிவகாசி கோட்டக் கிராமக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம் விவகார எல்லையிலுள்ள வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியத்தில் 1984 மார்ச் திங்களில் ஏற்பட்ட கடும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 827 நபர்களுக்கு ஹட்கோ டெல்லி நிதி உதவித் திட்டம் தயார் செய்துள்ளது. அதில் 1984-85 நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் 250 நபர்களுக்கு ரூ. 4,500 வீதம் கடன் வழங்கி வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

# குடிசைப் பகுதிகளின் சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்துதல்

நகர்ப்பகுதிகள் மிகவும் விரைவாக வளர்ந்து வருகின்றன. இதனால் மாநகரில் சாதாரணமாக பராமரிக்கப்படும் சுகாதார வசதிகளைச் செய்து கொடுக்க இயலாமல் போய்விடுவதோடு நகர்ப்பகுதியில் விரும்பத்தகாத வகையிலான ஏழ்மை நிலையும், குடிசைப்பகுதிகளின் அதிகரிப்பும் ஏற்படுகின்றது. எனவே, 20 அம்சத் திட்டத்தில் ஒரு திட்டமான 10-வது அம்சத்தை அதாவது தற்போது குடிசைப் பகுதிகளில் எளிமையில் கிடைக்கஇயலாது என்று கருதக் கூடிய அடிப்படை வசதிகள் ஒவ்வொன்றையும்செய்துகொடுப்பதற்காகவும், குடிசைப்பகுதி மாக வெளியூர்களில் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை மேற்கொள்ளுதல்.

இந்த அம்சத்தின்கீழ் 1980-85ஆம் ஆண்டுகளில் 10,75,000 குடிசைப்பகுதி வாழும் மக்கள் பயன்பெறும் வகையில் மேம்பாட்டுப் பணிகள் செய்ய இலக்கிடப்பட்டது. இதில் 4,29,000 குடிசைப்பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் சாலை, பொது ஊரணிகள், பொதுக் கழிப்பிடங்கள் போன்றவற்றிற்கான மேம்பாட்டுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

1983-84-ஆம் ஆண்டில் 1.72.000 மக்கள் பயன்

1984-85ஆம் ஆண்டில் வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டியுள்ளவர்களின் எஞ்சிய தொகை 2,59,590 ஆகும். 1984-85ஆம் ஆண்டிற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கு 2,45,000 ஆகும் (திருத்த மதிப்பீடு). குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் மக்களின் எண்ணிக்கையில் 14,000 நபர்கள் குறையலாம். ஏனெனில், இத்திட்டத்திற்கென 1984-85ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்குவதில் உள்ள இடர்ப்பாடுகளாலும், இத்திட்டத்தைச் செயல்படுத்தும் முகவரையமைப்பின் சொல்திறன்



களின் சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்துவதற்கும் மாநில அரசு வெளியாரிடமிருந்து உதவி பெற்று நிறைவேற்றும் பல திட்டங்களைச் செயல்படுத்துவதற்காகத் தமிழ்நாடு அரசு தீவிரக் கவனம் செலுத்தி வருகிறது.

**அம்சம் எண்: 10 (அ)**

குடிசைப் பகுதிகளில் பின்வரும் மூன்று வகையான பணிகள் மூலம் மேம்பாட்டுப் பணி மேற்கொள்ளப்படுகிறது. (1)குடிசைப் பகுதி மேம்பாட்டு விரைவுத் திட்டம், (2) சென்னை நகர்ப் பகுதி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (உலக வங்கித் திட்டம்) குடிசைப் பகுதி மேம்பாட்டுப் பணியை மேற்கொள்ளுதல் (3) பல்வேறு உள்ளாட்சி மன்றங்கள் மூல

பெறும் வகையில் மேம்பாட்டுப் பணி செய்து கொடுக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதில் 31-8-84-ஆம் நாள்வரை 1,67,670 நபர்கள் பயன்பெறும் வகையில் மேம்பாட்டுப் பணிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இது 97.4 சதவீதமாகும். 6-ஆம் திட்டக் காலத்தில் 10,75,000 நபர்கள் பயன்பெறும் வகையில் மேம்பாட்டுப் பணிகள் செய்து கொடுக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதில், 1980-81 முதல் 1983-84 வரையுள்ள ஆண்டுகளில் 8,15,410 நபர்கள் பயன்பெறும் வகையில் மேம்பாட்டுப் பணிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

**அம்சம் 10**

காரணமாகவும் மேற்சொன்ன குறைபாடு ஏற்படலாம். 2,45,00 மக்கள் பயன்பெறும் வகையில் மேம்பாட்டுப் பணிகளை நிறைவேற்ற வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்ட இலக்கு1984-85 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், இப்பணிக்காகச் செய்யப்பட்ட நிதி ஒதுக்கத்தின் அடிப்படையிலேயேயாகும்.

**அம்சம் எண்: 10 (ஆ)**

வறிய நிலையிலுள்ள மக்களுக்கு வீட்டுவசதி செய்து கொடுத்தல் தொடர்பாக, அதாவது கட்டிய வீடுகளை ஒதுக்குதல், மேம்படுத்தப்பட்ட மனையிடங்களை வசதிகளுடன் வழங்குதல் ஆகிய திட்டங்கள் அடங்கிய வீட்டுவசதி தொடர்பான இரு



# குடும்பநலம் காப்போம்



**குடும்பநலத் திட்டத்தை மக்கள் இயக்கமாக விருப்ப அடிப்படையில் வளர்த்தல்:**

அறுவைச் சிகிச்சை பெறுவோர்க்கு அறுவைக்குப் பிறகு தொடர்ந்து தங்கி சிகிச்சை பெறத்தேவையான வசதிகளை அளிக்க அரசு முன் வந்துள்ளது. அதற்காக 10 தாலுக்கா மருத்துவ மனைகளில் மேலும் 10 படுக்கை வசதிகள் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்காகப் புதிதாகக் கட்டடம் கட்ட வேண்டும் என்று காத்திருக்காமல் ஏற்கெனவே இருக்கிற கட்டடத்திலேயே அவற்றை உடனடியாக அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

2. தாய்மார்கள் 'லாப்ராஸ்கோப்' அறுவைச் சிகிச்சை முறையைப் பெரிதும் வரவேற்கிறார்கள். எனவே, அதை அதிகரிப்பதற்காகத் தாலுக்கா மருத்துவமனைகளுக்குப் பயன்பட 90 லாப்ராஸ்கோப் கருவிகள் வாங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

3. குடும்பநல முகாம்களை நடத்த அரசு மருத்துவர்கள் மட்டுமல்லாமல், தனி மருத்துவர்களையும் ஈடுபடுத்த மாவட்ட ஆட்சியர்கள் முன்வந்துள்ளனர். அந்தமுகாம்களின் செலவுக்காக ஊராட்சிகள் நகராட்சிகள் மதுரை, கோவை போன்ற மாநகராட்சிகள் நிதிஉதவி அளித்து மாவட்ட ஆட்சியரின் குடும்பநல முகாம்களுக்கு உதவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

4. மருத்துவர்களுக்கும், மருத்துவத்துக்கு உதவும் பிற உதவியாளர்களுக்கும் வழங்கப்படும் ஊக்க ஊதியத்தை அதிகப்படுத்தவும், இதுவரை வழங்கப்படாதவர்களுக்கு வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

5. 1984-85ஆம் ஆண்டில் 35 ஆரம்ப சுகாதார மையங்களில் உள்ள ஆண்களுக்குரிய அறுவைச் சிகிச்சை அறைகள் புதிய வசதிகளுடன் சீரமைக்கப்பட்டு தாய்மாருக்குரிய அறுவை சிகிச்சை மையங்களாக மாற்றப்பட்டுள்ளன.

குடும்பநலத் திட்டத்தின் செயல் முறைகள் அடிக்கடி கண்காணிக்கப்பட்டு வருகின்றன. தடைகள் நீக்கப்படுகின்றன. மத்திய அரசு நிர்ணயித்த 4,75,000 குறியீட்டைத் தாண்டி 5,04,000 அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன.

திட்டங்களைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்கள் தன்னம்பிக்கை, சுய முயற்சி ஆகியவற்றை வலியுறுத்துகின்றன. வீட்டு மேம்பாட்டுக் கடன் வழங்கும் திட்டம் என்பது ஒரு திட்டமாகும். இதன் மூலம், குடிசைப் பகுதியில் வாழும் மக்கள் அவர்களுடைய வீடுகளை மேம்படுத்திக் கொள்வதற்காக அவர்களுக்கு ரூ. 600 லிருந்து ரூ. 3,000 வரையில் கடன் வழங்கப்படுகிறது. வீட்டு மனைகள், வசதிகள், சாலை அமைத்தல் ஆகியவற்றை மேம்படுத்துவது மற்றொரு திட்டமாகும். சிறிய அளவில் வாணிபம் தொழில் வளர்ச்சி அடைந்துள்ள பகுதியில் வாழும் வறிய நிலையிலுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்புக்கள் ஏற்படுத்தும் நோக்குடன் இதத்திட்டத்தின்படி, மேம்படுத்தப்பட்ட மனைப்பகுதிகள் கடனுதவி ஆகியவை வழங்கப்படுகின்றன.



கட்டப்பட்ட வீடுகளை ஒதுக்கீடு செய்யும் வழக்கமான முறையைத் தவிர இத்திட்டமும் செயல்படுத்தப்படுகிறது. 1983-84-ஆம் ஆண்டின் இலக்கு 39,450 ஆகும். ஆனால், 31-3-84ஆம் நாள் வரை 30,248 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன (இது இலக்கின், 76.6 சதவீதமாகும்). 6-ஆம் திட்டத்தில் 1,13,810 வீடுகள் கட்டி முடிக்க வேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதில் 1980-81 முதல் 1983-84 வரை 57,218 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. எஞ்சியுள்ள 56,592 வீடுகள் 1984-85-ல் கட்டி முடிக்கப்படும். 1984-85ஆம் ஆண்டில் 33,700 வீடுகள் கட்டப்பட வேண்டுமென்று இலக்கிடப்பட்டுள்ளது. (திருத்த மதிப்பீடு). 6-ஆம் திட்டத்தில் வறிய நிலையிலுள்ள மக்களுக்கு என்று கட்டத்திட்டமிடப்பட்ட இலக்கின் அளவில் 23,000 வீடுகள் குறையலாம். இது, 1984-85-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இப்பணிக்காக நிதி ஒதுக்குவதில் உள்ள இடர்ப்பாடுகளாலும், இத்திட்டத்தைச் செயல்படுத்தும் நிறுவனங்களின் செயல்திறன் காரணமாகவும் மேற்சொன்ன குறைவு ஏற்படலாம். மார்ச் திங்கள் முடிய 36,081 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.



# மக்கள் நல்வாழ்வு



**மக்களுக்குச் சுகாதார வசதிகளை மிகுவித்தல். தொழுநோய், காசம், பார்வையிழப்பு ஆகியவற்றைக் கட்டுப்படுத்தல்:**

இந்த நூற்றாண்டின் இறுதியில், அதாவது கி.பி.2000-ல், இருக்கக் கூடிய மக்கட் பெருக்கத் தொகையைக் கணக்கில் கொண்டு பார்க்கும் பொழுது, சுகாதாரப் பணிகளை ஆரம்பச் சுகாதார நிலையங்கள், துணை நிலையங்கள் ஆகியவற்றை அதிகப்படுத்தியும் இருக்கிற ஆரம்பச் சுகாதார மையங்களை மேம்படுத்துவதிலும் மக்கள் நல்வாழ்வுக்கு உதவ வேண்டியதிருக்கிறது.

50,000 மக்களுக்கு ஓர் ஆரம்பச் சுகாதார நிலையம் என்ற வகையில் மேலும் ஆரம்பச் சுகாதார நிலையங்களை நிறுவுவது அரசின் நோக்கமாகும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கூடுதலாக 80 ஆரம்பச் சுகாதார மையங்கள் நிறுவத் திட்டமிடப்பட்டது. இவற்றில் 20 பொதுவாகவும், 1981-82ல் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2-ம், 1982-83ல் புதுக்கோட்டை மாவட்டத்தில் 2-ம் அமைக்கப்பட்டுள்ளன.

1983-84-ல் 15 கூடுதல் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. 1984-85-ல் 10 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் என்ற குறியீட்டையும் மிஞ்சி 12 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

ஆரம்பச் சுகாதார நிலையங்களைப் பொறுத்தவரை கடந்த மூன்றாண்டு இலக்கு 37. இது நிறைவேற்றப்பட்டுள்ளது.

துணை நிலையங்களைப் பொறுத்தவரை 1981-82-ல் 442-ம் 1982-83-ல் 754-ம், 1983-84-ல் 479-ம், 1984-85-ல் 795-ம் நிறுவப்பட்டுள்ளன.

ஆரம்பச் சுகாதார நிலையங்களைப் பொறுத்தவரை, ஆறாவது திட்டக் காலத்தில் 2,343 என்ற இலக்கையும் மிஞ்சி 25,000 நிலையங்கள் நிறுவப்பட்டு 106.7 சதவிகிதச் சாதனையைப் புரிந்து சரித்திரம் படைத்துள்ளது தமிழ்நாடு.

1980 ஏப்ரல் வரை 3,360 துணை நிலையங்கள் இருந்தன. ஆறாவது திட்டக்காலத்தில் 2,500 துணை நிலையங்கள் நிறுவப்பட்டன. ஆறாவது திட்டக் கால முடிவில் 1-4-1985-ல் 5,860 ஆரம்பச் சுகாதாரத் துணை நிலையங்கள் செயற்பட்டு வருகின்றன.

ஆரம்பச் சுகாதார நிலையங்களும் மாநில நல்வாழ்வுக் கல்வி நிலையமும் இணைந்து தம் ஊழியர்கள் மூலம் நல்வாழ்வுக்குரிய தாய் நலம், சேய் நலம், நோய்த் தடுப்பு, நல்வாழ்வுக் கல்வி பரப்புதல் ஆகிய பல்வேறு பணிகளை ஆற்றி வருகின்றன. குடும்ப நலத் திட்டத்தின் கீழ் சிறுகுடும்பம் மட்டுமல்ல, சிறப்பான குடும்பத்தை எப்படி அமைத்து வாழ்வது என்பது குறித்தும் மக்களுக்குத் தெளிவூட்டப்படுகிறது; தெம்பூட்டவும்படுகிறது

**தொழுநோய்க் கட்டுப்பாடு:**

தேசிய தொழுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டப்படி, பொது மக்களை மொத்தமாகக் கணக்கெடுத்தும் பள்ளிகளில் மாணவர்களைத் தனியாகக் கணக்கெடுத்தும் தக்க முறையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. ஒரு மாதத்திற்கான மருந்து ஒவ்வொரு முறையும் வழங்கப்படுகிறது.

தற்போது நோயைக் கண்டுபிடிப்பதற்குரிய 63 மையங்கள் அமைக்கப்பட்டு நோயைக் கண்டுபிடித்துச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

**காசநோய்க் கட்டுப்பாடு:**

காசநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ் நோயைக் கண்டுபிடித்து தொடர்ந்து தக்க சிகிச்சை அளிக்கப்படுகிறது. ஆரம்பச் சுகாதார மையங்கள், மருத்துவ மனைகள், மாவட்ட காசநோய் மையங்கள் காசநோய் சிகிச்சை நிலையம் ஆகியவற்றின் மூலம் நோயைக் கண்டுபிடித்து இலவசமாகச் சிகிச்சையளிக்கின்றன.

**பார்வையிழப்பைத் தடுத்தல்:**

பார்வை இழப்பைத் தடுப்பதற்கான தேசியத் திட்டத்தின் கீழ் மதுரை, இராமநாதபுரம், புதுக்கோட்டை மாவட்டங்களிலுள்ள பின் தங்கிய பகுதிகளில் 45 ஆரம்பச் சுகாதார மையங்கள் கண் சிகிச்சை செய்வதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்டு, கண் மருத்துவத்திற்கான பயிற்சியும், வசதியும் அளிக்கப்பட்டுள்ளன. மத்திய அரசு அதற்குரிய மருந்துகளையும் கருவிகளையும் வழங்கியுள்ளது.

அங்குள்ள மருத்துவர்களும் இதற்கெனத் தனியாகப் பயிற்றுவிக்கப்படுகின்றனர். இம்மாவட்டங்களில் மேலும் 30 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் கண் சிகிச்சைக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

கப்பட்ட மொத்தத் தொகை ரூ.256.93 கோடியாகின்றது. இது மொத்தக் கல்வித் தொகை ஒதுக்கீட்டில் 63.91 சதவீதம் ஆகும்.

**தமிழகத்தின் சாதனை:**

வருவாய்க் கணக்குச் செலவில், கிட்டத்தட்ட 20 முதல் 25 சதவீதம் வரை தமிழக அரசு பல்வேறுபட்ட புதிய முன்னோடித் திட்டங்களை உருவாக்கி கல்விக்காகச் செலவிட்டு வருவதால், அனைத்திந்திய அளவில் பெருஞ்சாதனைகளை ஏற்படுத்த இயலுகின்றது.

ஆறாம் ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் 1984-85-க்குள் மாணாக்கர் சேர்க்கையில் எய்த வேண்டும் என்று இந்திய அரசு நிர்ணயித்த இலக்குகளைத் தமிழகம் 1979-80 ஆம் ஆண்டிலேயே அடைந்துவிட்ட சாதனையைப் பின்வரும் அட்டவணை விளக்குகின்றது.

| | 6-11 வயதினர் | 11-14 வயதினர் |
|---|---|---|
| 1984-85ல் இந்திய அரசு நிர்ணயித்த இலக்கு | 95.00·/. | 50.00·/. |
| தமிழ்நாட்டின் சாதனை | | |
| 1979-80 | 94.64·/. | 59.68·/. |
| 1984-85 | 98.66·/. | 72.18·/. |

நடுநிலைப் பள்ளி நிலையில் சேர்க்கைச் சாதனை மிகப் பெருமளவில் உள்ளது. இலக்கைவிட 22.18 சதவீதம் அதிகமாகச் சேர்த்துள்ளோம்.

ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள் கூடுதலாக 6-11 வயதினரில் 8.15 இலட்சம் மாணாக்கர்களையும் 11-14 வயதினரில் 5.52 இலட்சம் மாணாக்கர்களையும் சேர்த்துள்ளோம்.

1984-85இல் மட்டும் கூடுதலாக 1-8 வகுப்புகளில் 2.98 இலட்சம் மாணாக்கர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள். வயதுவாரியாக, கூடுதல் சேர்க்கை விவரத்தைப் பின்வரும் அட்டவனை விளக்குகின்றது:

1984-85 இல் கூடுதல் சேர்க்கை(இலட்சங்கள்)

| விவரம் | 6-11 வயது | 11-14 | மொத்தம் |
|---|---|---|---|
| சிறுவர் | 0.87 | 0.67 | 1.54 |
| சிறுமியர் | 0.83 | 0.61 | 1.44 |

6-11 வயதினரில் சிறுமியரின்கூடுதல் சேர்க்கை 48.82·/. 11-14 வயதினரில் சிறுமியரின் கூடுதல் சேர்க்கை 47.66·/. இது தற்போது (1983-84) சேர்ந்துள்ள பெண்களின் சதவிகிதங்களை விட அதிகம் (6-11 க்கு 45.82·/. 11-14க்கு 39.37·/. 16—ஆம் அம்சத்தின்படி பெண்களைக் கூடுதலாகச் சேர்க்க எடுத்துக் கொண்ட முயற்சியின் சாதனையை இது காட்டுகின்றது.

**20 அம்சத் திட்ட இலக்கும் சாதனையும்:**

20 அம்சத் திட்டத்தில் 16 ஆவது அம்சத்தில் 1984-85 ஆண்டிற்கு 6-11 வயதினரில் சேர்க்கப்பட வேண்டிய மாணாக்கரின் எண்ணிக்கை இலக்கு 2.25 இலட்சம் ஆகும். இந்த இலக்கை விஞ்சி 2.98 இலட்சம் மாணாக்கர் சேர்க்கப்பட்டுள்ளதற்கு முக்கியக் காரணம் மாண்புமிகு முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் ஆகும்.





கண்டோர் வியக்கும் வண்ணம் நடைபெற்றுவரும் சத்துணவுத் திட்டம், அனைவருக்கும் கல்வி அளிப்பதில் மாபெரும் சமூகப் பொருளாதாரத் தடங்கலாக இருக்கும் வறுமையின் கொடுமையை தீர்க்கும் வல்லமை படைத்ததாக உள்ளது. பள்ளியில் பயிலும் எல்லா ஏழைக் குழந்தைகளுக்கும் சத்துணவு கிடைப்பதால்,வறுமையின் காரணமாகப் பள்ளிக்கு அனுப்பாத நிலை மாறிவிட்டது. மேலும், வளர்ச்சிப் பருவத்தில் அளிக்கின்ற சத்துணவு மூளை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்றது. படிப்பைப் பாதியில் நிறுத்துவோரின் எண்ணிக்கையைக் குறைக்கவும் உதவுகின்றது.

1977-78இல், 6-11 வயதினரின் பள்ளியை இடையில் விட்டுப்போவோர் சதவீதம் 40ஆக இருந்தது. 1983-84 இல் 26 சதவீதமாகக் குறைந்துவிட்டது.சத்துணவால் இது மேலும் குறைய வாய்ப்பு இருக்கின்றது.

**அனைத்திந்திய விருதுகள்:**

6-14 வயதினரைப் பள்ளியில் சேர்ப்பதில் புரியும் சாதனைக்குப் பல நிலைகளில் மைய அரசு பல விருதுகளை வழங்கும் திட்டத்தை 1983-84 விருந்து செயல்படுத்துகின்றது. 1982-83 ஆம் ஆண்டின் சாதனைகளுக்காகப் பின்வரும் விருதுகளைத் தமிழகம் பெற்றுள்ளது.

| | |
|---|---|
| சிறந்த ஊராட்சிகளுக்கான 15 விருதுகள்: | ரூ.3.75 இலட்சம் |
| சிறந்த பிளாக்குகளுக்கு 11 விருதுகள் | ரூ.5.50 இலட்சம் |
| சிறந்த மாவட்டங்களுக்கு 2 விருதுகள் | ரூ.2.00 இலட்சம் |
| மொத்தம் | ரூ.11.25 இலட்சம் |

இவ்விருதுத் தொகைகள், தொடக்கப் பள்ளிகளில் குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, கைத்தொழில் கருவிகள், தொழிற் கூடங்கள் ஆகியவற்றுக்காகச் செலவிட அரசு ஏற்பளித்துள்ளது. தொடக்கக் கல்வி மேலும் மேம்பாடடைய இது வழிகோலும்.

**மழலையர் பள்ளியும் தொடக்கக் கல்வி வளர்ச்சியும்:**

வீடுகளில் குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதற்காகத் தொடக்கப் பள்ளி மாணாக்கரை நிறுத்தாமல் இருக்கவும், முன் பள்ளிப் பருவத்தில் கல்வி ஆயத்தத்தை ஏற்படுத்தவும் மழலையர் பள்ளிகள் உதவும். 4140 குழந்தைக் காப்பகங்கள் மழலையர் பள்ளிகளாக இயங்கி வருகின்றன. இவற்றுல் 1984-85ல் 5000 காப்பகங்களையும் 1985-86ல் 5000 காப்பகங்களையும் மழலையர் பள்ளிகளாக மாற்றப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இத்தகைய இளஞ்சிறார் பள்ளி வகுப்புகளை மேலும் 10,000 குழந்தைகள் காப்பகங்களில் தொடங்க ஏற்பு அளிக்கப்பட்டுள்ளது.

**இலவசப் புத்தகங்கள், கற்பலகைகள், சீருடைகள்**

1-3 வகுப்புகளில் சுமார் 13 இலட்சம் மாணாக்கர்களுக்கு இலவசப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. முதல் வகுப்பு ஏழை மாணாக்கருக்குக் கற்பலகையும், இலவசமாக அளிக்கப்படுகிறது. இத்துடன் 1985-86ல் இருந்து 1-8 வகுப்புகளில் படிக்கும் தகுதியுள்ள ஏழை மாணாக்கர் யாவருக்கும் இலவசப் பாடப் புத்தகங்களுடன் இலவசச் சீருடையும் வழங்கப்படவிருக்கின்றன. தொடக்கக் கல்வியை அனைவருக்கும் அளிப்பதில் இப்புதிய திட்டமும் ஒரு வரப்பிரசாதமாக அமையும்.

**தொழில் சார்ந்த கல்வி:**

அளிக்கின்ற கல்வி வெறும் ஏட்டுக் கல்வியாக இல்லாமல், வீட்டிற்கும் நாட்டிற்கும் பயன்படும் தொழில்சார்ந்த பட்டறிவையும் அளிக்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ''வாழ்க்கைத் கல்வித் திட்டத்தின்''மூலம் வரும் ஆண்டுகளில் தமிழகத்தில் செயல்படுத்தப்பட இருக்கிறது. இப்புதிய திட்டங்கள் யாவும், அனைவருக்கும் கல்வி அளிப்பதில் மேலும் புதிய சாதனைகளை ஏற்படுத்தும் என்பது உறுதி.

இப்புதிய திட்டங்களால் ''அறிவுடையார் எல்லாம் உடையார்'' என்ற குறளின் கூற்றுப்படி குடிமக்களை அறிவுடையவராக்கும் கல்வி மேன்மேலும் வளர்ச்சி பெற்று, தமிழகம் சமூகப் பொருளாதார முன்னேற்றத்தில் மேலோங்கி புதிய வரலாற்றைப் படைக்கும் நிலை விரைந்து உருவாகிக் கொண்டுள்ளது.

# வயதுவந்தோர் கல்வி

இதுவரை படிக்கும் வாய்ப்பை இழந்த, படிக்க முடியாமற்போன வயதுவந்தவர்களிடையே கல்வியொளியைப் பரப்புவது அவசியமாகின்றது. அவ்வடிப்படையில் தமிழ்நாட்டில் வயதுவந்தோர் கல்வி இயக்கம் பணியாற்றி வருகின்றது.

வயது வந்தோர் கல்வி பல்லாண்டுகளாக இங்கு நடைபெற்று வந்தாலும், ஓர் இயக்கமாக,நாடெங்கும் பரவியது, அண்மையில் தான்.

மத்திய மாநில அரசுகளின் நிதி உதவியுடன் வயதுவந்தோர் கல்வியானது தீவிரமாக மாநிலமெங்கும் மேற்கொள்ளப்பட்டது. மத்திய அரசின் நிதியுதவியின்கீழ் ஊரகச் செயல்முறை எழுத்தறிவுத் திட்டம் தமிழ்நாட்டிலுள்ள பன்னிரண்டு மாவட்டங்களில் 1979 முதல் நடைபெற்று வந்தது. 1983 முதல் பெரியார் மாவட்டத்திலும் 1984 மார்ச் முதல் சென்னை நீலகிரிகன்னியாகுமரி மாவட்டங்களிலும் என, தமிழகத்திலுள்ள 16 மாவட்டங்களிலும் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு, 800 மையங்கள் நடைபெற்றன. அதுமட்டுமன்று, 1985 மார்ச்சு முதல் புதிதாகப் பதினொரு இடங்களில் ஊரகச் செயல்முறை எழுத்தறிவுத் திட்டம் மேற்கொள்ளத் தமிழக அரசுக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. இவ்வாறாக இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம், இந்த அளவிற்கு மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது.

இந்தியாவிலேயே ஒரு சில மாநிலங்களில் தான், மாநில அரசின் நிதியுதவியுடன் வயது வந்தோர் கல்வித் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழ்நாடு, இதிலும் முன்னணியில் நிற்பதைக் கீழ்க்காணும் விவரங்கள் எடுத்துக்காட்டும். 1980 முதல் வயது வந்தோர் கல்வித் திட்டமானது 61 ஊராட்சி ஒன்றியங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது இதன் ஆறாம் கட்டம் மார்ச் 1985 முதல் தொடங்கப்பட்டுள்ளது. அக்டோபர் 1983 முதல் கூடுதலாக, 54 ஊராட்சி ஒன்றியங்களில் இத்திட்டம் முதல் கட்டமாகத் தொடங்கப்பட்டுள்ளது. இவ்விரு திட்டங்களின் மூலமும் நடைபெறும் மையங்களின் எண்ணிக்கை 11,500 ஆகும். ஊரகச் செயல்முறை எழுத்தறிவுத் திட்டம், மாநில வயது வந்தோர் கல்வித் திட்டம் என்ற இரு திட்டங்களின் கீழ் தற்போது 19,600 மையங்கள் தமிழகமெங்கும் நடைபெற்று வருகின்றன.

வயது வந்தோர் கல்வித் திட்டத்தின் மூலம் கற்போர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகிறது.

**ஊரகச் செயல்முறை எழுத்தறிவுத் திட்டம்:**

*1979-80-ல் 122234 பேர்; 1980-81-ல் 124582 பேர்; 1981-82-ல் 122721 பேர்; 1982-83-ல் 132723 பேர்; 1983-84-ல் 158050 பேர்; 1984-85-ல் 161232 பேர்; கல்வி கற்றிருக்கின்றனர்.*

*61 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் 1980-81-ல் 207924 பேர்; 1981-82-ல் 199520 பேர்; 1982-83-ல் 206841 பேர்; 1983-84-ல் 198021 பேர்; 1984-85-ல் 196368 பேர் கல்வி கற்றனர்*

*54 ஊராட்சி ஒன்றியப் பகுதிகள் : 1983-84ல் 172005 பேர்; 1984-85-ல் 167088 பேர் கல்வி கற்றனர்.*

**இவ்விரு திட்டங்களின் கீழும் 1980 முதல் இன்று வரை சுமார் 21 இலட்சம் பேருக்கு மேல் கல்வி கற்றிருக்கிறார்கள்.**

பெண்கள் : நம் தாய்த் திருநாட்டில் பெண்கள், கல்வி அறிவு இல்லாமல் இருக்கும் இழிநிலைமை இன்னமும் தொடர்ந்து வருகின்றது. சமூகக் கட்டுப்பாடுகளினாலும் வீட்டுப் பொறுப்புகளினாலும் பெண்களால் பள்ளிக் கல்வி பெற முடியாமல் போய் விடுகிறது. இந்நிலையில் வயது வந்தோர் கல்வியானது, அவர்களுக்குக் கைகொடுத்து உயர்த்த முன் நிற்கிறது. வெளிவேலைக்குச் செல்லும் பெண்களாக இருப்பினும், வீட்டுப் பொறுப்புகளையும் கவனித்த பின்னர், ஓய்வு நேரத்தில் வந்து படிக்கும் வாய்ப்பினை இத்திட்டம் அவர்களுக்கு நல்குகின்றது.

மேலும், இத்திட்டத்தின் கீழ், அதிக அளவில் பெண்களைச் சேர்த்து கல்வி கற்க வைக்க வேண்டும் என்பதில் பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம் முனைப்புடன் செயலாற்றுகின்றது. பெண்கள் மட்டுமே பயிலக் கூடிய பெண்கள் மையங்களை அதிக அளவில் திறந்து, பெண்கல்விக்கு ஊக்கமும், ஆக்கமும் அளிக்கின்றது.

*பெண் கல்வி: மாநில வயது வந்தோர் கல்வித் திட்டம் : 61 திட்டப் பகுதிகள் : 1980-81-ல், 104302 பேர்; 1981-82-ல் 122919 பேர்; 1982-83-ல் 129386 பேர்; 1983-84-ல் 132198 பேர்; 1984-85-ல் 165246 பேர் கல்வி கற்றுள்ளனர்.*

*ஊரக செயல்முறை எழுத்தறிவுத் திட்டம்: 1979-80, 27239 பேர்; 1980-81, 61636 பேர்; 1981-82, 81446 பேர்; 1982-83, 85477 பேர்; 1983-84, 121959 பேர்; 1984-85 121884 பேர் கல்வி கற்றுள்ளனர்.*

வயது வந்தோர் கல்வித் திட்டத்தின்கீழ் கல்வி பயில வரும் பெண்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருவதை நாம் இதன் மூலம் காண முடிகிறது. 1980 முதல் இன்று வரை 13 இலட்சம் பெண்களுக்கு மேல் இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்றிருக்கின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாம்.

**தாழ்த்தப்பட்டோரும் பழங்குடியினரும்**

சமுதாயத்தில் நலிந்த பிரிவினராக உள்ள தாழ்த்தப்பட்டோரும் பழங்குடியினரும் கல்வி கற்று உயர்வதில் பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம் தனிக் கவனம் செலுத்தி வருகின்றது. இவர்களுக்காகவே தனியாக மையங்களை நடத்துவதிலும், அதிக அளவில் இவர்களைக் கற்க வைப்பதிலும் முனைப்பாக இவ்வியக்ககம் செயல்பட்டு வருகிறது.

நமது பொருளாதாரம் முன்னேறுகிறது. நமது மக்களின் சுமையைக் குறைக்கக் கூடிய இம்முன்னேற்றத்தைத் தொடர்ந்து பராமரிப்பது நம் கையிலிருக்கிறது. இந்தத் திட்டம், உங்கள் ஒவ்வொருவருக்கும் மட்டுமன்றி நமது நாட்டுக்கும் ஆனது. இத்திட்டத்தை வெற்றியடையச் செய்ய, உங்கள் மனமார்ந்த ஒத்துழைப்பைக் கோருகிறேன்.''

**— திருமதி இந்திரா காந்தி**



கல்வி, சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் இன்றியமையாதது. ஏதாவது ஒரு காரணத்தினால் கல்வியில் பின்தங்கியிருப்பவர்கள் மற்றவர்களுக்கு இணையாக ஆனால்தான் சீரான வளர்ச்சி ஏற்பட முடியும். கல்விக் கோட்பாடே மாறி வருகிறது; அது பரந்து விரிந்த ஒன்று. அறிவைப் பெறுவதோடு, அதைப் பயன்படுத்தும் திறமையையும், கலாச்சாரப் பண்பாடுகளில் இருந்து விலகாமல் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப அறிவைப் பின்பற்றவும் கல்வி கற்றுத்தர வேண்டும். நமது நாகரிகம் குறித்தும், பண்பாடு மிக்க பாரம்பரியம் குறித்தும் நாம் பெருமிதம் கொள்ள வேண்டும். கல்வி மக்களைப் பிரிக்கக் கூடாது: மாறாக, ஒன்று சேர்க்க வேண்டும்.



*1980 முதல் இன்று வரை சுமார் 11 இலட்சம் தாழ்த்தப்பட்டோரும், 29648 பழங்குடி மக்களும் இத்திட்டத்தினால் பயன்பெற்றிருக்கின்றார்கள். தாழ்த்தப்பட்டவர்களுக்காகத் தனி மையங்கள் திறந்து அதன் மூலம் அதிக அளவில் அவர்களின் கல்விக் கண்ணைத் திறக்க வைப்பதை, இயக்ககம் தன் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.*

**பாட நூல்கள்**

இத்திட்டத்தின் கீழ் கற்பவர்களுக்கு, கரும்பலகை, குறிப்பேடுகள், எழுது கருவிகள், பாட நூல்கள் ஆகியன இலவசமாகவே வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு கற்போருக்கும் ஒரு முதல் நூலும், இரண்டு துணை நூல்களும் அளிக்கப்படுகின்றன. இந்நூல்கள் யாவும் வயது வந்தோர் கல்வித் திட்டத்தினைச் செயற்படுத்துவோர், தமிழறிஞர்கள் ஆகியோரின் கூட்டு முயற்சியால் எழுத்தாளர் செயலரங்கில் உருவாக்கப்படுகின்றன. இவை பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககத்தின் வெளியீட்டுப் பிரிவில் வெளியிடப்படுகின்றன. இதுவரை 12 முதல் நூல்களும், அறுபதுக்கும் மேற்பட்ட துணை நூல்களும், முன் முதல் நூல், கையெழுத்துப் பயிற்சி ஏடு போன்றனவும், 6-14 வயதுக்குட்பட்டவர்களுக்கான பள்ளிசாராக் கல்வி நூல்களும் தயாரிக்கப்பட்டுள்ளன.

வயதுவந்தோர் கல்வி மையம் பத்து மாதக் காலம் நடைபெறும் ஒன்றாகும். மூன்றாம் மாதம், ஏழாம் மாதத்திலும், பத்தாம் மாதம் முடிவிலும் மதிப்பீடு நடத்தப்படுகின்றது. கற்போரின் வாசிக்கும் திறன், எழுதும் திறன், கணக்கிடும் திறன் ஆகியன இம்மதிப்பீட்டில் மதிப்பிடப்படுகின்றன. இதற்காகவே தனியாக அட்டைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இறுதி மதிப்பீடு முடிந்ததும் சான்றிதழ்கள் கற்போருக்கு வழங்கப்படும். இம்மதிப்பீட்டு அட்டைகளும் செயலரங்கில் ஒவ்வொரு ஆண்டும் தொடர்புடைய அலுவலர்களைக் கொண்டு தயாரிக்கப்படுகின்றன.

மையங்களின் செயல்பாட்டில் குறிப்பிடத்தக்க ஒன்று, கூட்டுறவுச் சங்கம் தொடங்கப்படுவதாகும். புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆவுடையார்கோயில் ஒன்றியத்தில் 150 கற்போர்களை உறுப்பினர்களாகக் கொண்டு காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், செயல்படுகின்றது. இது முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்கு உறுதுணையாக விளங்குகிறது.

**கைத்தொழிற் கல்வி**

கற்போரின் வாழ்க்கைத் தரத்தைப் பொருளாதார ரீதியிலும் உயர்த்த வயது வந்தோர் கல்வி பயன்படுகிறது. வயது வந்தோர் கல்வி மையங்களில் சோப்பு செய்தல், தையல்வேலை, கூடை பின்னுதல், சோப்புத்தூள் தயாரித்தல் போன்ற எளிய கைத்தொழில்கள் கற்போருக்குக் கற்றுத் தரப்படுகின்றன. ஓய்வு நேரத்தில் இத்தொழில்களை மேற்கொள்ளுவதன் மூலம் பொருளீட்ட அவர்களுக்கு வழிகாட்டப்படுகின்றது.

**விருதுகள்**

வயதுவந்தோர் கல்வித் திட்டத்தில் தமிழகம் முன்னணியில் இருப்பது, உலகோரின் கவனத்தை ஈர்த்திருக்கிறது. வயது வந்தோரின் கல்வி வளர்ச்சியில் பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம் ஆற்றிய பணியைப் பாராட்டி யுனெஸ்கோ நிறுவனமானது 1981-க்கான புகழ் பெற்ற நடேஷ்டா குருப்ஸ்காயா விருதினை வழங்கிக் கௌரவித்தது.

1982-83 ஆம் ஆண்டுக்கான வயது வந்தோர் கல்வித் துறைக்குரிய தேசிய அளவிலான முதல் பரிசைப் பெறும்பேறு இவ்வியக்ககத்திற்குக் கிட்டியது. தேசிய அளவில், பெண்களை அதிக அளவில் வயதுவந்தோர் கல்வித் திட்டத்தில் சேர்த்துப் பயன்பெறச் செய்ததை பாராட்டும் முகத்தான், மைய அரசானது ரூ. 25 இலட்சம் வழங்கியது. 1983-84 ஆம் ஆண்டிற்கான பரிசும் தமிழ்நாட்டிற்கே வழங்கப்படுவதாகவும் மைய அரசு அறிவித்துள்ளது.

இல்லாமை நீக்குவது போல-கல்லாமையும் நீங்கப் பாடுபடுவது நமது கடமை.

# வன வளம் காப்போம்

நம் மாநிலம் போன்ற எல்லா வெப்ப மண்டல நாடுகளும் இயற்கைச் சூழலின் வளமையைக் கருதி தமது நிலப் பரப்பில் மூன்றில் ஒரு பகுதியை காடுகளாக அமைத்துக் கொள்ள வேண்டும் என்பது வல்லுநர்கள் முடிவு.

தமிழகத்தில் ஆறில் ஒரு பகுதி மட்டுமே காடுகளாக இருந்து வருகிறது. காடுகள் அரண் என்றுவள்ளுவரால்குறிப்பிடப் படுவதை நாம் இங்கே நினைவு கூர வேண்டும். மனித வரலாற்றில் பாதிப்பில் காடுகள் அரண் என்ற அமைப்பை மீறிக் கொண்டு பண்டங்களின் உற்பத்திக் களமாக மாற்றம் கொண்டு விட்டன. இந்த மாற்றம் மக்கள் தொகையின் பெருக்கத்தின் காரணமாகவும், அவர்களின் வாழ்க்கை முறைகளின் காரணமாகவும் நிகழ்ந்துள்ளது. காடுகளிலிருந்து வெகுவாகப் பெறப்படும் பண்டங்களில் விறகு, வெட்டுமரம், தீவனத் தழை, உரத் தழை போன்றவை குறிப்பிடத்தக்கவை. பொருளாதார மேம்பாட்டுக்குத் துணை நிற்கும் சில தொழிற்சாலைகளை, மரங்களைக் கச்சாப் பொருட்களாக்கிக் காடுகள் இயங்குகின்றன.

வனத்துறை வேளாண்மை என்னும் அறிவியல் முறைகளைக் கொண்டு நமது காடுகளிலிருந்து இப்பண்டங்களின் விளைச்சலைப் பல மடங்கு பெருக்கி வழங்குகிறது. இவை போதாமல் புதிய பல வளர்ச்சித் திட்டங்கள் வகுக்கப்பட்டு வனத்துறையால் செயல்படுத்தப்படுகின்றன. இருப்பினும் உற்பத்தியின் அளவும் தேவைகளின் அளவும் சமப்படுவதாக இல்லை. இரண்டுக்கும் நடுவிலான இடைவெளி பிரிந்து கொண்டே போகிறது. இந்த இடைவெளி விறகின் நிலைமையில் மிகவும் அதிகமாகவும், வேகமாகவும் விரிவு கடந்து கொண்டு வருவதைப் பலவித ஆய்வுகள் நமக்குத் தெரிவிக்கின்றன. குறிப்பாக பொருட்களின் பெருக்கத் திறனை ஆராய்ந்து வரும் தேசிய மன்றம் 1981-82இல் வெளியிட்டுள்ள ''இந்தியாவின் எரிபொருள்தேவை' என்னும் அறிக்கையில் தமிழகத்தில் விறகு, கரி, சாணம் ஆகிய எரிபொருள் தேவை 72.68 இலட்சம் டன்களாகும் எனவும் இது 1989-90இல் 83.99 இலட்சம் டன்களாக உயர்ந்துவிடுமென்றும் கணக்கிட்டுக் கூறியுள்ளது.

எரிபொருளின் அன்றாடத் தேவையை விளக்கத் தேவையில்லை. நகர்ப்புறத்தில் வாழும் வசதியுடையோர் மட்டும் தங்களுடைய எரிபொருள் தேவைக்கு விறகை நம்பி இராமல் மின்சாரம், எரிவாயு, மண்ணெண்ணெய் ஆகியவைகளைக் கொண்டு பூர்த்தி செய்து கொள்கின்றனர். இம்மக்களின் தொகை மிகவும் கணிசமே.

## அம்சம் 12

ஆனால், கிராமப்புறத்தில் வாழும் எல்லா வகையான மக்களும் நகர்ப்புறத்தில் வாழும் ஏழைகளும் அடுப்பு எரிக்க விறகை மட்டும் நம்பிக்கொண்டிருக்கின்றனர். ஆதலால் பெருகிவரும் விறகுப் பற்றாக்குறை இம்மக்களைப் பெரிதும் பாதிக்கச் செய்கிறது. இந்நிலையில் காடுகளில் மேம்பாட்டுத் திட்டங்கள் புதிய முனைப்புடனும் நோக்குடனும் வகுக்கப்படுகின்றன. வனங்களின் பரப்பில் பெருக்கத்தை ஏற்படுத்தவும் வனப்பண்டங்களின் விளைச்சலில் பெருக்கத்தை ஏற்படுத்தவுமான இப்பெரும் முனைப்புகளுடைய திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இந்த இருவகை முனைப்புகளையும் ஒரு சேர முடிக்கவல்ல ஒரு மாபெரும் திட்டம் சமூக வனத்திட்டமாகும். இத்திட்டத்தைத் தமிழக அரசு 1980 முதல் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்திற்கு சுவீடன் நாட்டின் (SIDA) என்னும் நிறுவனத்தின் உதவி பெறப்பட்டுள்ளது.

தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும் பரந்தும் விரிந்தும் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் கீழ் எல்லா வகையான புறம்போக்கு நிலங்களும், ஏரி, குளம், ஆறு, கால்வாய், சாலை ஆகியவைகளின் புறத்தே தரிசாக இருக்கின்ற எல்லா நிலப் பகுதிகளிலும் பொருளாதார மதிப்புமிக்க காடுகள் சுமார் 2 இலட்சத்து 50 ஆயிரம் எக்டேர்களுக்கு மேலாக உள்ளன. மேலும் தனிப்பட்டோர் தத்தம் தரிசு நிலங்களில் மரங்களைப் பயிராக வளர்ப்பதற்கும் வேளாண்மைப் பயிரோடு மரங்களைக் கலந்து வளர்ப்பதற்குத் துணை புரிய இலட்சக்கணக்கில் மரக்கன்றுகள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. 'மரப் பயிரும் பணப் பயிரே' என்பதை வேளாண் மக்களுக்கு உணர்த்த பெரிதாக ஊக்கப் பணிகளை இத்திட்டம் செய்து வருகிறது. சிறப்பாக இத்திட்டம் ஏழை எளியவர்களின் மேம்பாட்டுக்கு உறுதுணையாகச் செயல்படுவதால் ஒவ்வொரு ஏழை எளிய சிறு விவசாயிகளுக்கும், ஐந்நூறு மரக் கன்றுகள் வரை இலவசமாக வழங்குகிறது. வனப் பணிகள், குறிப்பாக காடுகளின் சாகுபடிக்கு உழைப்பே பெரிதாகப் பங்கு வகிப்பதாலும் ஆயிரக்கணக்கான பரப்பில் மேற்கூறப்பட்ட வளர்ப்புக் காடுகள் வளர்க்கப்படுவதாலும் இலட்சக் கணக்கான கிராமப்புற மக்கள் வேலை வாய்ப்புப் பெற்று பயனடைகிறார்கள்.

இம்மாபெரும் திட்டம் நமது 20 அம்சத் திட்டத்தின் 12வது அம்சத்தில் அரவணைப்பைப் பெற்று மிகவும் எழுச்சியோடும் விரிவோடும் தமிழகத்தில் செயல்பட்டுக்கொண்டு வருகிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் வளர்க்கப்பட்ட ஊர்ப்புறக் காடுகளின் பரப்பும் அதில் நடப்பட்ட மரக் கன்றுகளின் எண்ணிக்கையும் வருமாறு:—

| ஆண்டு | சமூகநலக் காடுகள் திட்டத்தின் கீழ் நடப்பட்ட பரப்பளவு (எக்டேர்) | வனப்பண்ணைத் திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட கன்றுகளின் மொத்த எண்ணிக்கை-இலட்சத்தில் |
|---|---|---|
| 1979—80 | 24.116 | 6.75 |
| 1980—81 | 36.789 | 11.60 |
| 1981—82 | 33.707 | 38.58 |
| 1982—83 | 38.218 | 169.49 |
| 1983—84 | 28.768 | 459.809 |

கடந்த ஆண்டுகளில் நடப்பட்டுள்ள மொத்தக் கன்றுகளின் எண்ணிக்கையை நோக்க 1983-84இல் சாதனை பல மடங்கு அதிகம் என்பது தமிழக வனத்துறையின் சாதனைகளில் ஒன்று.

சமூக வனத் திட்டம் மற்றும் ஊரக எரிமர உற்பத்தித் திட்டங்கள் தவிர, அரசுக் காட்டில் ஆங்காங்கே தரம் குறைந்தும், மதிப்புக் குறைந்தும் பாழ்பட்டுப் போன பகுதிகளிலும், பல்வேறு திட்டங்களின் கீழ்





மரங்கள் இலட்சக் கணக்கில் வளர்க்கப்பட்டு வருகின்றன. இவை காடுகளின் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் இயற்கைச் சூழலை மேம்படுத்துவதற்கும் செயல்படுத்தப்படுகின்றன.

20 அம்சத் திட்டத்தில் நடப்பாண்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்ற விவரங்கள் பின் வருமாறு :—

| வகை | 1984—85 இலக்கு | 31-3-85 வரை செய்யப் பட்டவை |
|---|---|---|
| தோட்டம் வளர்ப்பு ''சமூகக் காடுகள்'' கீழ் எக்டேரில் | 40,000 | 38,249 |
| பொதுமக்களுக்கு வனப் பண்ணைத் திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட கன்றுகள் இலட்சத்தில் | 270 | 441.460 |
| தோட்டம் வளர்ப்பு (நடப்பட்ட கன்றுகள் இலட்சத்தில்) | 1050 | 1106.860 |

இருபது அம்சத் திட்டத்தில் ஒரு பிரிவாக விளங்குவது சாண எரிவாயு அமைப்புத் திட்டம். ஏற்கெனவே குறிப்பிட்ட ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மற்றும் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தைப் போலவே சாண எரிவாயு அமைக்கும் திட்டமும் தமிழகத்தில் மகத்தான வெற்றியைப் பெற்றுள்ளது.

31-3-1985-க்குள் மொத்தம் 10,000 சாண எரிவாயு அமைப்புகளை நிறுவ வேண்டும் என்பது நிர்ணயிக்கப்பட்ட இலக்கு. ஆனால் 31-3-85 வரை இம்மாநிலத்தில் மொத்தம்

17,549 சாண எரிவாயு அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன. அதாவது நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விட 7549 சாண எரிவாயுக் கலன்கள் அதிகமாகவே நிறுவப்பட்டுள்ளன. 1983-84-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டவை 6750 கலன்களே. இதுவே 1984-85-ல் மூன்று மடங்காகி உள்ளது ஒரு மாபெரும் சாதனையே!

மேலும், சாண எரிவாயு அமைப்புகளைப் பொறுத்தவரையில், பத்தாயிரம் அமைப்புகளுக்கு அதிகமாக நிறுவும் மாநிலங்களுக்கு முதல் பரிசாக ரூ. 2 இலட்சமும், இரண்டாவது பரிசாக ரூ. 1.5 இலட்சமும் வழங்கும் திட்டத்தை மத்திய அரசு அறிவித்துள்ளது. இத்திட்டத்தில் நம் மாநிலத்திற்கு இரண்டாவது பரிசு கிடைத்துள்ளது.

மேலும், இருபது அம்சத் திட்டத்தில் ஆதிதிராவிடர் வகுப்பினர் மற்றும் பழங்குடியினரின் வளர்ச்சிக்கான திட்டங்களைத் துரிதப்படுத்துதல் என்ற ஏழாவது அம்சமும், எளியோருக்கு வீடு கட்டும் திட்டங்களை அமல்படுத்துதல் என்ற பத்தாவது அம்சமும் சமுதாய-பண்ணை மர வளர்ப்பு ஆகியவற்றிற்கான திட்டங்களைத் தீவிரமாக அமல்படுத்துதல் என்ற பன்னிரண்டாவது அம்சமும் இத்துறையோடு ஓரளவுக்குத் தொடர்புடையவை.

ஆதிதிராவிட வகுப்பினர் மற்றும் பழங்குடியினரின் வளர்ச்சிக்கான திட்டங்களைத் துரிதப்படுத்துவதைப் பொறுத்தவரையில், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இப்பிரிவினர் தனிச் சலுகைகள் வழங்கப்பட்டு, வறுமைக்கோட்டின் பிடியிலிருந்து, விடுபட்டு வளமைக் கோட்டை அடையப் பெரிதும் உதவப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்ற குடும்பங்களுள் 1980-81 ஆம் ஆண்டு 48511 குடும்பங்களும், 1981-82 ஆம் ஆண்டு 97417 குடும்பங்களும் 1982-83 ஆம் ஆண்டு 102026 குடும்பங்களும், 1983-84-ல் 108718 குடும்பங்களும், 1984-85 ஆம் ஆண்டில் 106156 குடும்பங்களும் ஆதிதிராவிட வகுப்பு மற்றும் மலைசாதிப் பிரிவுகளைச் சார்ந்தவை என்ற ஒரு சான்று பின்தங்கிய மக்களின் முன்னேற்றத்தில் இந்த அரசுகொண்டுள்ள நாட்டத்தை எடுத்துக்காட்டப் போதுமானதாகும். மேலும் சத்துணவுத் திட்ட நிறைவேற்றத்திற்காக நியமிக்கப்பட்டிருக்கும் ஏறத்தாழ இரண்டு இலட்சம் பணியாளர்களில் எண்ணற்றவர்கள் ஆதிதிராவிட மற்றும் மலைவாழ் பழங்குடியினரே!





எளியோருக்கு வீடு கட்டும் திட்டத்தின் கீழ், 10,000 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தில் கட்டி முடிக்கப்பட்ட இவைகளால் 225 மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. எண்ணற்ற தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பும் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் சமுதாயக் காடு வளர்ப்புத் திட்டம் பெருமளவில் நாடெங்கும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இத்தருணத்தில் 20 அம்சத் திட்டத்தில் தமிழகம் விளைவித்துள்ள சாதனைகளை மொத்தமாகச் சிறிது கூறுவது பொருத்தமுடையதாக இருக்கும். இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களோடும் ஒப்பிடும்போது, தமிழகம் இரண்டாவது இடத்தைப் பெற்றிருப்பதாக மத்திய அரசின் திட்டக்குழு அறிவித்துள்ளது.

ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் நிறைவேற்றத்தில் இந்தியாவிலேயே தமிழகம்தான் முதலிடம் வகிக்கிறது என்பது மத்திய அரசுத் திட்டக் குழுவின் முடிவு.

# ஊரக வளர்ச்சித் துறையின் உன்னதப் பணிகள்

'எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்' என்ற உன்னத நோக்கத்தை உள்ளடக்கிய இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தின் பல்வேறு அம்சங்களுள் 'ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி, தேசிய கிராம வேலைவாய்ப்புத் திட்டங்களை வலுப்படுத்தி விரிவுபடுத்துதல் மற்றும் சாண எரிவாயு போன்ற மாற்று எரிபொருள் மூலங்களை மக்களிடையே அறிமுகப்படுத்துதல் ஆகியவை, ஊரக வளர்ச்சித் துறையுடன் தொடர்புடையவை.

எந்தவொரு திட்டமானாலும் அதைச் சிறப்புற நிறைவேற்றி வரும் ஊரக வளர்ச்சித்துறை, இருபது அம்சத் திட்டத்தின் மேற்கூறிய அம்சங்களையும் திறம்பட நிறைவேற்றி வந்துள்ளது. சாண எரிவாயுவைப் பொறுத்தவரையில் சாதனை இலக்கையும் மிஞ்சி, அகில இந்திய அளவில் தமிழகம் இரண்டாவது இடத்தைப்பெற்றுள்ளது என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

'தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்றார் தேசியகவி பாரதி. அவர் குறிப்பிட்ட இந்தத் தனி ஒருவரின் மேம்பாட்டைக் குறிக்கோளாகக் கொண்டது தான் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்.

வறுமையில் வாடும் குடும்பங்களை, குறிப்பாக ரூ.3,500-க்குக் கீழே ஆண்டு வருவாய் பெறும் குடும்பங்களைத் தெரிந்தெடுத்து அவரவர் நிலைமை, திறமை, சூழ்நிலைகளுக்கு ஏற்ப உதவ வழி செய்கிறது இத்திட்டம்.

சிறு மற்றும் குறு உழவர்கள், கால்நடை வளர்ப்பில் நாட்டம் செலுத்தி, அதனைத் துணைத் தொழிலாகக் கொண்டு தங்களுடைய வருவாயைப் பெருக்கிக் கொள்ளவும், போதிய முதலீடின்றி, குன்றி இருக்கும் கைவினைஞர்களுக்கும் சிறுதொழில் செய்வோருக்கும் வங்கிகள் மூலம் கடனும், மான்யமும், வழங்கி அவரவர்களுடைய தொழில்களைப் பெருக்கிக் கொள்ளவும் வகை செய்யும் திட்டமே ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்.

## அம்சம் 3

வேளாண் மக்கள், கைத்தறி நெசவாளர், தச்சு, கொல்லுத் தொழிலாளர்களிடையே கூட்டுறவுச் சிந்தனையை வளர்த்து அவர்களுக்கு வேண்டிய ஆதரவை அளிக்கும் இத்திட்டம், குறிப்பாக நலிந்திருக்கும் தாழ்த்தப்பட்ட ஆதி இந்து ஆண்களும் பெண்களும் பொருளாதார அடிப்படையில் முன்னேற வேண்டும் என்ற உயரிய கொள்கையுடன் வகுக்கப்பட்டு அதில் எள்ளளவும் பிறழாமல் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

வங்கியிலிருந்து கடனுக்கு வகை செய்வது மட்டுமின்றி மானியமும் வழங்கப்படுவது இத்திட்டத்தின் தனிச்சிறப்பு. சிறு விவசாயிகளைப் பொறுத்த வரையில் மொத்த உ... தொகையில் 25 ச... மானியமாகவும், ஏழை... விவசாயிகள், வேளாண்மை... தொழிலாளர்கள், ஊரகக் கைவினைஞர்களுக்கு $33\frac{1}{3}$ சதவிகிதம் மானியமாகவும் வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்கப்படும் மானியத் தொகை அதிகபட்சம்ரூ.3,000 ஆகஇருக்கவும், மலைவாழ் மக்களைப் பொறுத்தவரையில் இந்த மான்யத் தொகை 50 சதவீதமாக இருக்கவும் வழி செய்யப்பட்டுள்ளது. ஒரு வட்டாரத்திற்கு ஓராண்டிற்கு 600 குடும்பங்கள் வீதம் உதவி வழங்கப்படும் இத்திட்டத்தின் கீழ், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் கால இறுதிக்குள், தமிழகம் முழுவதும் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் மொத்தம் 13,96,016 குடும்பங்களுக்கு உதவி வழங்கப்பட்டிருக்கிறது.

விளைவித்த பொருட்களுக்கு நல்ல விற்பனையைத் தேடிக் கொடுத்தது, இத்திட்டத்தின் மற்றொரு வெற்றியாகும். 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்ற உயர் நோக்கத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயன் பெறுவோரை உறுப்பினராகக் கொண்டு, பால் கூட்டுறவு மையங்களுக்குப் பால்கேன் மற்றும் வேன் வழங்கப்பட்டுள்ளது. எண்ணற்ற கைத்தறி, தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இத்திட்டத்தின் கீழ் வலுப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வா



றாக அடிப்படை வசதிகளை அமைத்துக் கொடுக்க மட்டும் கடந்த மூன்றாண்டுகளில் வழங்கப்பட்ட தொகை ரூ. 9 கோடி! மகத்தான முறையில் நிறைவேற்றப்பட்டு, தமிழகம் முழுமையும் நல்ல வரவேற்பையும் பெற்று வரும் 'தமிழக முதல்வர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்கு' ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் தன்னாலான உதவி செய்யும் நோக்கத்தோடு, சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக இதர மாவட்டங்களில் காய்கறி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் 72 ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இருபது அம்சத் திட்டத்தின் ஒரு கூறு 'ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்' என்றால், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் ஒரு கூறுதான் 'Trysem' என ஆங்கிலத்தில் குறிப்பிடப் பெறும் கிராமப்புற இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம். 18 முதல் 35 வயது வரையிலான கிராமப்புற இளைஞர்களுக்கு மட்டுமின்றி இளம் பெண்களுக்கும், பல கிராமப்புறத் தொழில்களில் தக்க பயிற்சி அளித்து, பயிற்சிக் காலத்தில் உதவித் தொகை வழங்கி, பயிற்சியின் முடிவில் அந்த இளைஞர்களும் இளம் பெண்களும் சொந்தத்தில் தொழில் தொடங்கத்தக்க உதவிகள் செய்வதும் இத்திட்டத்தின் இலட்சியமாகும். பிறரைச் சாராமல், தங்கள் வாழ்வைத் தாங்களே அமைத்துக்கொள்ள இளைஞர்களுக்கும் இளம் பெண்களுக்கும் உதவும் இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை வருமாறு:—

1981-82-ல், 61117 பேர், 1982-83-ல் 40468 பேர், 1983-84-ல் 30970 பேர், 1984-85-ல் இதுவரை 17250 பேர் பயிற்சி பெற்றனர். 1981-82ல் 36376 பேர், 1982-83ல் 28343 பேர், 1983-84ல் 15830 பேர், 1984-85ல் இது ரை 4817 பேர் சுயமாக வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டனர். ஊதிய அடிப்படையில் 1981-82ல் 11553 பேர், 1982-83ல் 13946 பேர், 1983-84-ல் 13673 பேர், 1984-85ல் இதுவரை 5299 பேர் வேலை தேடிக் கொண்டனர்.

இருபது அம்சத் திட்டத்தின் மூன்றாவது அம்சத்தில் ஒரு பிரிவு 'தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்'. நமது கிராமப்புறங்களில், வேலை இல்லாக் குறையைக் களைய 'உழைப்புக்கு உணவுத் திட்டம்' என்ற பெயரில் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டு, தற்போது தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் என்ற பெயரில் நிறைவேற்றப்பட்டு வரும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் மூன்று....

கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புகளை உருவாக்கி அதன் வழியாக மக்களின் வருவாயை அதிகரித்தல்.

கிராமப்புறமக்களின்வாழ்க்கை நிலையை உயர்த்துதல்.

அதிகமாக உள்ள உணவு தானியங்களை நாட்டில் நல்ல வேலைகள் செய்து முடிப்பதற்காக வழங்குதல். சத்தான உணவைப் பெற வழி செய்தல்.

இந்த முப்பெரும் நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு கிராமங்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதும், வேலைகளில் பங்கேற்கும் தொழிலாளர்களுக்கு ஊதியமாக அரிசியும் ஒரு பகுதி பணமாகவும் வழங்குவதும் இத்திட்டத்தின் தனிச்சிறப்பு.

1979-ஆம் ஆண்டு மே மாதம் முதல் நிறைவேற்றப்பட்டு வரும் இத்திட்டம், ஆண்டுக்கு ஆண்டு அதிக அளவில் முன்னேற்றத்தோடு நிறைவேற்றப்படுகிறது.

இத்திட்டம் பெற்ற வெற்றியை ஒரு பார்வையில் கூறும் பட்டியல் இதோ....

| விவரம் | 1980—81 | 1981—82 | 1982—83 | 1983—84 | 1984—85 |
|---|---|---|---|---|---|
| மொத்த ஒதுக்கீடு (ரூ. இலட்சங்களில்) | 1800 | 2256 | 3008 | 3022 | 3022 |
| மொத்தச் செலவு (ரூ. இலட்சங்களில்) | 1691 | 2810 | 3416 | 3369 | 3375 |
| மொத்தச் செலவில் மூதலீட்டுக்கான மான்யம் (ரூ. இலட்சங்களில்) | ... | 2332 | 2659 | 2739 | 2864 |
| வழங்கப்பட்ட கடன் தொகை (ரூ. இலட்சங்களில்) | 2967 | 4736 | 6287 | 5975 | 5763 |
| மொத்த முதலீட்டுத் தொகை (ரூ. இலட்சங்களில்) | 2967 | 7068 | 8946 | 8714 | 8627 |
| நிர்ணயிக்கப்பட்ட இலக்கு (குடும்பங்கள்) | 225600 | 225600 | 225600 | 226650 | 226650 |
| பயன்பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை | 255323 | 358225 | 271563 | 277641 | 233264 |
| பயன்பெற்ற ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் குடும்பங்களின் எண்ணிக்கை | 48511 | 97417 | 102026 | 108718 | 106156 |
| பயன்பெற்றோர் சதவிகிதம் | 133% | 159% | 120% | 123% | 103% |
| ஆதிதிராவிட வகுப்பு, பழங்குடியினர் பயன்பெற்ற சதவிகிதம் (100 × 8 ÷ 6) | 22% | 43% | 45% | 48% | 47% |





## விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச கூலி நிர்ணயம்

விவசாயம் மற்றும் விவசாயத் துணைத் தொழில்களில் குறைந்தபட்சக் கூலி விகிதங்கள் தமிழ் நாட்டில் ஆரம்பத்தில் 1959-ல் நிர்ணயிக்கப்பட்டன. 1948-ஆம் ஆண்டு குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தின் கீழ் இவை செய்யப்பட்டன.

இந்த விகிதங்கள் அவ்வப்போது திருத்தப்பட்டு வந்தன. நிலச் சீர்திருத்த ஆணையர் தலைமையிலான ஆலோசனைக் குழு பரிந்துரைகளின் அடிப்படையில் 5-4-83 முதல் அரசு மீண்டும் குறைந்தபட்சக் கூலி விகிதங்களைத் திருத்தியமைத்தது.

இந்தத் திருத்த விகிதங்களின்படி பல்வேறு வகையான விவசாய வேலைகளுக்குரிய குறைந்தபட்சக் கூலி விகிதங்கள்:

1. சொந்த ஏர்கலப்பை உழவு மாடு வைத்து உழும் தொழிலாளிக்கு நாளொன்றுக்கு ரூ. 18. இதற்கு முன்னால் இது ரூ. 12 ஆக இருந்தது.

2. சொந்த ஏர் கலப்பை உழவுமாடு இல்லாமல் உழும் தொழிலாளிக்கு நாளொன்றுக்கு ரூ. 11. இதற்கு முன்னால் இது ரூ. 7.

3. நெல் அறுவடை செய்பவருக்கு ரூ. 11. அல்லது மொத்த மகசூலில் 1/8 பாகத்தில் அந்தத் தொழிலாளிக்கு வரும் பங்குக்குரிய ரொக்கம் இந்த இரண்டில் எது அதிகமோ அது. இதற்கு முன்னால் இது ரூ. 7.

4. நெல் தவிர்த்த மற்ற பயிர் வகைகள் அறுவடை செய்பவருக்கு நாளொன்றுக்கு ரூ. 11. இதற்கு முன்னால் இது ரூ. 7.

5. நடவு நடுதல் அல்லது களையெடுத்தலுக்கு ரூ. 8. இதற்கு முன்னால் இது ரூ. 5.

6. வயல் வரப்பைச் சீரமைத்தல், தேனீ வளர்த்தல், போன்ற காரியங்களுக்கு ரூ. 10. இதற்கு முன்னால் இது ரூ. 7.

7. தங்கியிருந்து வேலைபார்க்கும் தொழிலாளிக்கு மாதத்திற்கு ரூ. 210. இதற்கு முன்னால் இது நிர்ணயம் செய்யப்படவில்லை.

ஒரே பணியை அல்லது ஒரே ஆண்-பெண்களிடையே குறைந்தபட்சக் கூலி நிர்ணயத்தைப் பொறுத்தவரை இப்பொழுது பாகுபாடு எதுவும் காட்டப்படுவதில்லை.

வேலை நேரத்தையும் அரசு நிர்ணயம் செய்திருக்கிறது. உழுபவர்களைத் தவிர்த்து, மற்ற வேலை பார்ப்பவர்களுக்கு நாளொன்றுக்கு 7 மணி நேரம். உழவு செய்கிறவர்களுக்கு 5 மணி நேரம்.

இந்தக் குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் நமது மாநிலத்தில் சுமுகமாகவும் உறுதியாகவும் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதனை நிறைவேற்றுகிற பொறுப்பு வருவாய்த்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனைச் சரியாக நிறைவேற்றுவதற்காக வருவாய் ஆய்வாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியர் இதனைக் கண்காணிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளனர்.

குறைந்தபட்சக் கூலி பற்றியும், கூலி ஏய்ப்புக்குரிய தண்டனை பற்றியும் அவ்வப்போது மக்களுக்கு எடுத்துச் சொல்லி பரவலாக எல்லோரும் விழிப்புடன் இருக்கத் துணை செய்யுமாறு வானொலியும், தொலைக்காட்சியும் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

## அம்சம் 5



# கொத்தடிமை ஒழிப்பு



நமது நாட்டில் பெரும்பான்மையான மக்கள் பின்தங்கிய நிலையிலும், ஏழைகளாகவும், இருக்கும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்தவர்களாவர். இப்பிரிவைச் சார்ந்த மக்களில் குடும்பத் தலைவரோ, தனி நபரோ முதலாளிகளிடம் முன் பணம் பெற்று பணம் திருப்பித் தர முடியாத நிலையில் குறைந்த கூலியில் அல்லது கூலியற்ற தொழிலாளிகளாக மாறிவிடுகின்றனர். இம்முறையேதான் மனிதத்தன்மையற்ற கொத்தடிமைத்தனத்திற்கு மூலகாரணமாகிறது. சட்டத்திற்குப் புறம்பான இந்தப் பழக்கங்கள் வளர்ச்சியடைய மிகுந்த வறுமையும், கிராமப்புறங்களில் காணப்படும்சிலசமூகக்கோட்பாடுகளும் காரணமாகின்றன. கண்டுபிடிக்கப்பட்டதில் 90 சதவிகிதம் அதிகமான கொத்தடிமைகள் தங்கள் அடிப்படை உரிமைகளையும், சுதந்தரவாழ்வையும் இழந்தவர்கள்.

1976-ஆம் ஆண்டிலிருந்து காந்திய நெறியான ''அந்தியோதயா' முறையானது கொத்தடிமைகளை விடுதலையாக்கவும், கொத்தடிமைத் தளையிலிருந்து விடுதலையாகி வாழ்க்கை மற்றும் சமூகத் தரத்தை மேம்படுத்தும் மறுவாழ்வுத் திட்டங்களை உருவாக்கவும், வழி வகுத்தது. இவ்வாறாகப் பெருந்தீங்கினை விளைவிக்கக்கூடிய கொத்தடிமை முறையானது இந்தியாவின் வட பாகங்களிலும், தமிழ்நாட்டின் அண்டைய மாநிலங்களாகிய ஆந்திரம், கர்நாடகம், ஒரிசா மற்றும் மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களிலும் செயல்முறையில் உள்ளது. தமிழ்நாட்டின் சில பிற்போக்கான மாவட்டங்களிலுள்ள பின் தங்கிய நிலையிலான மக்களும் கல்லுடைக்கும் குவாரிகள் அதிகமாகவுள்ள அண்டை மாநிலங்களுக்கு வயிற்றுப்பாட்டிற்காகக் குடிபெயர்ந்துள்ளனர். 1980-ஆம் ஆண்டிற்கு முன்னதாக இவ்வகையான மக்கள் நீலகிரி மாவட்டத்திலும் (பனியா தொழிலாளர்களும்) கல்ராயன் மலையிலும் (கவுண்டன் என்னும் பிரிவினரும்) ராமநாதபுரம் மாவட்டத்திலும் (பாலியார் குடியினரும்) பெருவாரியான அளவில் கண்டுபிடிக்கப்பட்டு நமது அரசின் முயற்சியினால் நிலப்பிரபுக்களின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். தற்பொழுது நம் மாநிலத்தில் கொத்தடிமைகள் முறை இல்லையென்று கூறுவதில் நாம் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

## அம்சம் 6

இந்தியப் பிரதமருடைய 20 அம்சத் திட்டத்தில் 'கொத்தடிமைகள் மறுவாழ்வு' ஆறாவது அம்சமாகும். மத்திய அரசு கொத்தடிமை முறையை நம் நாட்டிலிருந்து அறவே அகற்ற கடும் முயற்சிகளை மேற்கொள்கிறது. மேலும் விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள் மீண்டும் கொத்தடிமைத்தனத்திற்கு நழுவுவதைத் தடுப்பதற்கான உபயோகமான திட்டங்களை முறைப்படுத்துவதற்கான தேவைகளை வலியுறுத்தி வருகிறது. அம்மாதிரியான திட்டங்களில் மத்திய அரசு சம பங்காக மானியம் வழங்கி மாநில அரசுக்கு உதவுகிறது. மாநில அரசும், தமிழ்நாட்டைச் சார்ந்த கொத்தடிமைகளை அண்டை மாநிலங்களிலிருந்து உடனடியாகக் கண்டுபிடித்து, விடுவித்து, கவர்ச்சிகரமான நல்வாழ்வுத் திட்டங்கள் மூலம் மறுவாழ்வளிப்பதில் மத்திய அரசுக்கு இணையாகச் செயல்படுகின்றது. ரூபாய் 6,000 வரையிலான செலவில் குடியிருக்கும் வீடுகள் கட்டித் தருதல் (தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினருக்குச் செய்யப்படுவதைப் போன்று) பால்மாடுகளைவழங்குதல்,விவசாயக் கருவிகள் வழங்குதல், கல்லுடைக்கும் கருவிகள் வழங்குதல், விவசாயத்திற்காக மானியம் வழங்குதல், உழமாடுகள் வழங்குதல், கோழிகள் வழங்குதல் போன்றவை தனிநபருக்கு ரூ.4000-த்திற்கும் மிகைப்படாமல் அந்நபரின் தொழில் ஆர்வத்திற்கு ஏற்ப அனுமதித்தல் போன்ற மறுவாழ்வுத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. நிரந்தர வேலைவாய்ப்பளிக்க வேண்டி கல்லுடைக்கும் இயந்திரம் கொண்ட ஒரு கூட்டுறவுச் சங்கத்தினை சேலம் மாவட்டத்தில் ஓமலூர் தாலுக்காவில் ஆரம்பித்து நடத்தி வருகிறது. இது போன்று வைரம் பட்டை தீட்டும் ஒரு சங்கம் திருச்சி மாவட்டத்திலுள்ள 'திரும்பங்குழி' என்னுமிடத்தில் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. கொத்தடிமைகளுக்காக 'சி' மற்றும் 'டி' பிரிவுக்கான அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் வேலை வாய்ப்புக்கான வயது வரம்பு '40' ஆகத் தளர்த்தப்பட்டுள்ளது.

மறுவாழ்வுப் பணிகளைமேலும் துரிதப்படுத்த தலைமைச் செயலரைத் தலைவராகக் கொண்ட மாநில அளவிலான ஏற்புக் குழு ஒன்று 1984-ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. கொத்தடிமைகள் மறுவாழ்விற்காக மாவட்ட ஆட்சியாளர்களால் அனுப்பப்படும் கருத்துக்களை இக்குழு அடிக்கடி கூடி, ஆய்வு செய்தபின் ஏற்பளிக்கிறது. சுமார் 1,554 கொத்தடிமைகள் 1984-85ஆம்ஆண்டில் மறுவாழ்வளிக்கப் பட்டுளளனர். ரூ. 8.95 இலட்சம் வரையிலான பல்வேறு திட்டங்கள் இக்குழுவால் 'ஏற்பு' செய்யப்பட்டன. 1983-84ஆம் ஆண்டின் 1300 என்ற இலக்கினை மீறி 2,060 கொத்தடிமைகளுக்கு மறுவாழ்வளித்துச் சாதனை புரிந்துள்ளது இந்த அரசு.

இந்த நிதியாண்டிற்கு மறுவாழ்வளிக்கப்பட வேண்டிய கொத்தடிமைகளின் எண்ணிக்கை ஆயிரம் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் கொத்தடிமைகள் மறுவாழ்வுக்காக எடுத்துக் கொள்ளும் முயற்சிகள் மத்திய அரசின் பாராட்டுதலைப் பெற்றுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட மக்களாகிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற மைய அரசின் கருத்தினைத் தமிழ்நாடு அரசு உளமார அங்கீகரிக்கின்றது. இக்கருத்தினைச் செயல்படுத்தும் வகையில், இந்த அரசு இம்மக்களின் சமூக, பொருளாதார முன்னேற்றம் குறித்து நல்ல பல திட்டங்கள் தீட்டிப் பல ஆண்டுகளாகச் செயல்படுத்தி வருகின்றது, சிறப்பு உள்ளடக்கத் திட்டம், பழங்குடியினர் துணைத் திட்டம் மற்றும் 20 அம்சத் திட்டம் ஆகிய திட்டங்கள்செயல்முறைக்கு வந்த பின்னர், இம்மக்களின் வாழ்க்கைத் தரத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படுகிறது. தற்சமயம் ஒருங்கிணைந்த பலமுனைத் திட்டங்கள் வாயிலாக, தாழ்த்தப்பட்ட மக்கள் சமூக, பொருளாதார முன்னேற்றம் அடைந்து வருகின்றனர்.

**ஆதிதிராவிடர்:**

தமிழ்நாட்டில் சுமார் 18 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்கள் வசித்து வருகின்றன. இவர்களில் பெரும்பான்மையினர் வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த பணிகளில் ஈடுபட்டுள்ளனர். எனவே வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த தொழில்கள் மூலம் இவர்களின் பொருளாதார நிலையினை உயர்த்தத் திட்டமிடப்படுகிறது. சுமார் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட விவசாயிகளுக்கு, 25 சதம் மான்ய விலையில் விதைகள், உரம், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளது. வறுமைக் கோட்டினைத் தாண்ட இவர்களுக்குப் பால் மாடுகள் வளர்த்தல், ஆடு வளர்த்தல் போன்ற துணைத் தொழில்களை மேற்கொள்ள உதவியளிக்கப்படுகிறது. மண்வளப் பாதுகாப்பு முறைகள் 4014 ஆதிதிராவிடர்களுக்குச்சொந்தமானசுமார்6349 எக்டேர் நிலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்விவசாயிகளுக்கு 25 சதவீதம் மான்யத்தில் விதை உரம் முதலியன வழங்கப்பட்டுள்ளன. சுமார் ஆயிரம் ஆதிதிராவிடர் குடும்பங்கள் பட்டுப்பூச்சி வளர்க்கும் தொழிலால் பயனடைந்துள்ளனர். விவசாயத் தொழிலாளர்களின் நலன் அவர்

## அம்சம்—7

களுக்கு குறைந்த ஊதியம் நிர்ணயம் செய்தல், ஆடு, மாடு கோழி வளர்த்தல் போன்ற பல தொழில்களை மேற்கொள்ள உதவியளிப்பதன் மூலம் பாதுகாக்கப்படுகிறது. பால்மாடுகள் வளர்க்கும் தொழிலை அதிக லாபகரமாக்கும் நோக்குடன் கறவை மாடுகள் வாங்குவதற்கு அளிக்கும் மான்யம் 50 சதம் ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டில், சுமார், 10,000 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு கறவை மாடுகள்வழங்கி பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களாகி வறுமைக் கோட்டினைத் தாண்ட வகை செய்யப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம்1,02,409 ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயனடைந்துள்ளன. கிராமப்புறங்களில் உள்ள 1,100 முடிதிருத்துவோர், வண்ணார், கருமார் போன்ற தொழிலாளர்கள் இலவசமாகத் தொழிற்கருவிகள் வழங்கும் திட்டத்தின் மூலம் பயன் அடைந்துள்ளனர்.

ஆதிதிராவிடர் மக்கள் வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களையே நம்பி இருந்தால் அவர்கள் வாழ்வு வளம் பெற இயலாது. எனவே இவர்களை மற்ற தொழில்களில் ஈடுபடுத்துகிற நோக்கத்துடன் அவர்களுக்கு வேலை வாய்ப்பினை அதிகரிக்கும் பொருட்டு, சுயமாகத்தொழில்கள் ஆரம்பிக்கவும் உதவியளிக்கப்பட்டது.

இவ்வண்ணம் 84-85ஆம் ஆண்டில் 2,19,913 ஆதிதிராவிடர்களுக்குப் பொருளாதார மேம்பாட்டிற்கான உதவியளிக்கப்பட்டது.

**பழங்குடி மக்கள்:**

தமிழ்நாட்டில் சுமார் 5.20 இலட்சம் பழங்குடி மக்கள் வசிக்கின்றனர். இவர்களில் சுமார் 2.14 இலட்சம் பேர், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் வசித்து வருகின்றனர். இப்பகுதிகளில் செயலாக்கப்படும் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் இம்ம

## ஆதிதிராவிடர் பழங்குடியினர் மேம்பாடு







களின் சமூக, பொருளாதார நிலையினை மேம்படுத்தும் நோக்குடையதாகும். இத்திட்டங்கள் இப் பழங்குடி மக்களின் கலாச்சாரத்திற்கும் ஊறுசெய்யாதவாறு, திட்டிச் செயல்படுத்தப்படுகிறது. தோட்டக்கலை, ஆடு வளர்ப்பு, வனவளம், கிராமக் கைத்தொழில்கள் போன்ற தொழில்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் அதிகப்பயன் தரக்கூடிய விதைகள், செடிகள், கறவைமாடுகள் ஆடுகள் முதலியன 50 சதவீதம் மானியத்தில் வழங்கப்படுகின்றன. தென் ஆர்க்காடு மாவட்டம் கல்வராயன் மலைவாழ் மக்களுக்கு மட்டும் 75 சதவீதம் மானியத்தில் வழங்கப்படுகின்றன.

பட்டுப்பூச்சி வளர்ப்புத் திட்டம் பழங்குடி மக்களிடையே அறிமுகப்படுத்தப்பட்டு கடந்த ஆண்டு 405 பழங்குடிக் குடும்பங்கள் பயனடைந்துள்ளன. மண்வளப் பாதுகாப்புத் திட்டங்கள் பழங்குடியினர் நிலங்களில் இலவசமாகச் செயலாக்கப்படுகின்றன. காடுகளில் கிடைக்கும் சிறு வனவிளை பொருட்களைப் பழங்குடியினர் சேகரித்து விற்பனை செய்ய இலவச அனுமதி வழங்கப்படுகிறது. தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பெரிய அளவிலான கூட்டுறவுச் சங்கங்கள் இவர்களுக்கு, வனவிளை பொருட்கள் மூலம் சரியான விலை கிடைக்கச் செய்வதுடன் இவர்களுக்கு நியாய விலையில் அவசியப் பொருட்களையும் வழங்குகின்றன. இதைத் தவிர இப் பழங்குடியினருக்குக் குறுகிய மற்றும் மத்திய காலக் கடன்களும் வழங்குகின்றன. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் 84-85 ஆம் ஆண்டு 3747 பழங்குடிக் குடும்பங்களுக்கு உதவியளிக்கப்பட்டுள்ளது. எனவே பல்வேறு பொருளாதாரத் திட்டங்களின் மூலம் 84-85ஆம் ஆண்டில் 11235 பழங்குடிக் குடும்பங்கள் பயனடைந்துள்ளனர்.

இவர்கள் வாழும் பகுதிகளில் குடிநீர் வசதி, மின்விளக்கு, சாலை, சுகாதாரம் போன்ற பல திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன.


'தமிழரசு' பத்திரிகை மேன்மேலும் வளர

எங்களது

நல்வாழ்த்துக்கள்

இங்ஙனம்

உரம், பூச்சி மருந்து வியாபாரிகள்,

எழுமலை,

திருமங்கலம் வேளாண் கோட்டம்.


# கிராமக் குடிநீர்த் திட்டம்

எல்லாத் திட்டங்களையும் போலவே குடிநீர்த் திட்டத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையிலான இந்த அரசு சிறப்பாகத் தொடர்ந்து நிறைவேற்றி வந்துள்ளது. குறிப்பாகக் கிராமப் புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவும், மக்களுக்கு வேண்டிய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் பாரதப் பிரதமர் புதிய இருபது அம்சத் திட்டத்தை அறிவித்தார். அதில் கிராமப்புற மக்களுக்குக் குடிநீர் வழங்குவது 8-வது அம்சமாகும்.

தமிழ்நாடு அரசு மகத்தான தன்னிறைவுத் திட்டம் குறைந்த பட்சத் தேவைகளைத் தீர்க்கும் திட்டம், விரைவுபடுத்தப்பட்ட கிராமப்புறக் குடிநீர் வழங்கும் திட்டம் ஆகிய பல்வேறு திட்டங்கள் மூலம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்க ஒல்லும் வகையெல்லாம் உழைத்து வந்துள்ளது.

**ஆய்வுப் பணி**

பல்வேறு வகைகளைச் சார்ந்த 18,167 குடியிருப்புகளுக்கு உடனடியாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கியாக வேண்டுமென்ற உண்மையை 1976-77ல் நடத்தப் பெற்ற ஆய்வு தெளிவாக்கியது புதிய இருபது அம்சத் திட்டத்தின் கீழ் கிராம மக்களுக்குக் குடிநீர்த் திட்டம் அவர்கள் வசிக்கும் இடத்திலிருந்து 1.6 கி.மீ. தொலைவிற்குள் அமைத்துக் கொடுக்கப் பெற வேண்டும். தண்ணீர்ப் பற்றாக்குறையுள்ள 18,167 குடியிருப்புக்கள் 7,226 பிரச்சினைக் கிராமங்களில் அமைந்திருந்தன.

கிராமங்களுக்கு முன்னுரிமை அளித்து முதலில் தண்ணீர் வழங்க வேண்டுமென்ற தமிழ்நாடு அரசின் கோரிக்கையை மத்திய அரசு ஏற்றது. கிராம மக்களுக்கு குடிநீர் வழங்கும் பொறுப்பினைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம்:**

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கு முன்பு 577 பிரச்சினைக் கிராமங்களுக்கு ரூ.25.9761 கோடியில் குடிநீர்த் திட்டங்கள் அமைக்கப் பெற்றன. இதனால் 14.19 இலட்சம் மக்கள் பயனடைந்தனர். எஞ்சியுள்ள 6649 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நிறைவேற்றப்பட்டது.

**அம்சம் 8**

கிராமக் குடிநீர்த் திட்டங்களுக்காக ஆறாவது திட்ட காலத்தில் தமிழ்நாடு அரசு ரூ. 152.13கோடி செலவு செய்தது. மேலும் மத்திய அரசு விரைவு படுத்தப்பட்ட கிராமக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் 36.8353 கோடியும், ஊரகத் திட்டத்தின்கீழ் ரூ. 8.48 கோடியும் வழங்கியது.





வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் ரூ. 24.79 கோடி செலவு செய்து குடிநீர் வழங்கப்பெற்றது. ஆக மொத்தம் ரூ. 222.23 கோடி கிராமப்புறக் குடிநீர்த் திட்டங்களுக்குச் செலவு செய்யப் பெற்றது.

**குடிநீர் வழங்குதலில் அரசின் சாதனை.**

மத்திய அரசு நிர்ணயித்த குறியீட்டைப் பூர்த்தி செய்து தமிழ்நாடு அரசு சாதனை புரிந்துள்ளது. பிரச்சினைக்குரிய கிராமங்களான 7226லும் குறைந்தபட்சம் ஒரு நீர் ஆதாரமாவது அமைக்கப்பட்டுள்ளது. இவற்றுள் 5537 கிராமங்கள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியவற்றில் பகுதியாக முடிக்கப் பெற்றுள்ளன. தமிழ்நாடு அரசு, மத்திய அரசின் அளவுகோலின்படி 100 விழுக்காடு சாதனை புரிந்துள்ளது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம்:

ஏழாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் மொத்தம் ரூ. 250 கோடி கிராமக் குடிநீர்த் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனாலும் நடைமுறையில் இதனைவிடக் கூடுதலாகவே செலவு செய்யப் பெறும் ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 10900 குடியிருப்புகளுக்கு குடிநீர்வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1985-86 கிராமக் குடிநீர்த் திட்டங்களுக்கு ரூ. 42 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப் பெற்றுள்ளது. இதன் கீழ் 2000 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு முதலமைச்சர் மொழி:**

''நான் சென்ற இடங்களில் எல்லாம் மக்கள் மாட மாளிகைகள் கேட்கவில்லை. கூட கோபுரங்கள் கேட்கவில்லை. குடிக்கத் தண்ணீர்தான் கேட்டார்கள். மக்களின் ஆசியோடு அண்ணாவின் வழியில் நடக்கும் இந்த அரசு மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை முதலில் தீர்த்து வைக்கும் என்று கூறிக் கொள்ள விரும்புகின்றேன்'' என மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் முதலில்1977ல் பதவிஏற்றபோது நடந்த முதல் நாள் கூட்டத்தில் தெரிவித்தார்கள். அன்று அவர் செய்த அறிவிப்பு இன்று செயலாக்கப் பெற்றுவிட்டது.





# கிராமங்களில் மின் வசதி

| விவரம் | மாநிலத்தில் உள்ளவை | 1.4.51ல் மின்மயமாக்கப் பட்டவை | 31.3.85ல் மின்மய மாக்கப் பட்டவை | விழுக்காடு |
|---|---|---|---|---|
| கிராமங்கள் | 15,735 } | 1813 | 15,700 | 99,78 |
| குக்கிராமங்கள் | 47,938 } | | 47,511 | 99,32 |
| ஆதிதிராவிடர் குடியிருப்புகள் | — | — | 26,137 | 100.00 |
| குடிசைகள் | — | — | 6,35,771 | — |
| வேளாண்மை விசை ஏற்றிகள் | 12.00 இலட்சம் | 14,373 | 10.34 இலட்சம் | 86.16 |

**அம்சம் 11**

மின் சக்தியானது தொழில் மற்றும் வேளாண்மை வளர்ச்சிக்கு மட்டுமே தேவையான ஆதாரம் அன்று, பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை வசதியாக மின்சாரம் வளர்ந்துள்ளது. வசதியுள்ள ஒரு சிலர் மட்டுமே பயன்படுத்தும் ஆடம்பரப் பொருளாக மட்டும் இல்லாமல் இப்பொழுது நகரங்கள், கிராமங்கள் மற்றும் க்கிராமங்களில் உள்ள வீடுளை மின்சாரம் ஒளிமயமாக்கிள்ளது, குடிநீர் வழங்க உதவுறது. மின்சாரம் வழங்குவதில் ந சிறு தடங்கல் ஏற்பட்டாலும் ழை பணக்காரன் என்ற பாகுடு இன்றி எல்லா மக்களின் ழ்க்கையையும் பாதிக்கும் லை இன்று உருவாகியுள்ளது.

கிராமங்களுக்கும் குக்கிராமங்களுக்கும் மின்சக்தி வழங்குவதில் மிழ்நாடு நம் நாட்டின் முன்னாடியாகத் திகழ்கிறது. பொருதார வளர்ச்சிக்காகத் திட்டத் தொடங்கியபோது இருந்தலையும் தற்போது உள்ள நிலை கீழே தரப்பட்டுள்ளது.

மின்மயமாக்குவதனால் பெறப்படும் நன்மைகள் கீழே விளக்கப்பட்டுள்ளன.

**மின் விசையேற்றப் பாசனத்தினால் விவசாய உற்பத்தி அதிகரித்தல்**

மின் சக்தி உபயோகத்திற்கு வருவதற்கு முன், விவசாயத்திற்கு நீர் இறைக்க விவசாயிகள் எருதுகளைப் பயன்படுத்தினர். இதனால், காலம் விரையமாவது மட்டுமில்லாமல் அதிகச் செலவுள்ளதாகவும் இருந்தது. தற்பொழுது இவ்வேலையைச் செய்ய பத்து இலட்சத்திற்கும் மேலான மின்சார விசையேற்றிகள் நம் மாநிலத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்றன.

இந்திய நாட்டில் உள்ள மின் விசையேற்றிகளில் இது சுமார் 120 சதவிகிதம் ஆகும். நாட்டில் உள்ள மின் விசையேற்றிகளில், மிக அதிக எண்ணிக்கை தமிழகத்தில்தான் உள்ளது. விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் மின்சாரம் வழங்கத் தமிழக அரசு தக்க முடிவு எடுத்துள்ளது. குறைவழுத்த மின் நுகர்வோர்களுக்கு மின்சாரம் வழங்க ஒரு யூனிட்டிற்கு 80காசுகள் அடக்க விலையானாலும், சிறு விவசாயிகளுக்கு 12 காசுகள் வீதமும், மற்ற விவசாயிகளுக்கு 15 காசுகள் வீதம் மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. 15-9-84 முதல் சிறு விவசாயிகளுக்கு இலவசமாகவும், மற்ற விவசாயிகளுக்கு, எவ்வளவு மின்சாரம் உபயோகப்படுத்தினாலும் ஆண்டொன்றிற்கு, ஒரு குதிரைச் சக்திக்கு ரூ. 75 கட்டணமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.



1984-85-ல் 50950 புதிய விவசாய விசையேற்றிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது.

தெரு விளக்குகள் : சமுதாயத்திற்கு இது ஒரு அடிப்படைத் தேவை. மாநிலத்தில் உள்ள 47,511 குக்கிராமங்களும், 15,700 கிராமங்களும் இப்பலனை அனுபவிக்கின்றன. இது மாநிலத்தில் உள்ள மொத்த எண்ணிக்கையில் முறையே 99.32 சதவிகிதமும், 99.78 சதவீதம் ஆகும். மீதமுள்ள கிராமங்கள் மலைப் பகுதியில் உள்ளவை. தொலைத் தூரத்தில் உள்ள இக்கிராமங்களுக்கு மின் தொடர்க் கம்பிகள் அமைப்பது மிகவும் சிரமம். காடுகளைப் பாதுகாக்கும் சட்டம் இயற்றப்பட்டபின் இப்பணி மிகவும் சிரமமாகியுள்ளது. இந்நிலையில் சூரிய வெப்பத்தைக் கொண்டு தெரு விளக்குகள் அமைக்கும் முறை கைகொடுக்க உள்ளது.

இந்த வசதியைப் பயன்படுத்தி இந்தியாவிலேயே முதன் முறையாகத் தமிழகத்தில் உள்ள கல்ராயன் மலைப்பகுதியில் உள்ள 5 கிராமங்களுக்கு 1983-84-ல், தெருவிளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இம்முறையைப் பின்பற்றி 1984-85ல் மேலும் 15 கிராமங்களுக்கு மின்வசதி அளிக்கப்பட்டது.

**ஆதிதிராவிடர் குடியிருப்புகளை மின்மயமாக்குதல் :**

மாநிலத்தில் உள்ள ஆதிதிராவிடர் குடியிருப்புகள் அனைத்தையும் மின்மயமாக்கியுள்ள தனிப்பட்ட பெருமையைத் தமிழகம் அடைந்துள்ளது. இன்று 26,137 குடியிருப்புகள் இப்பலனை அடைந்துள்ளன. புதியதாக உருவாகும் ஆதிதிராவிடர் குடியிருப்புகளை அவ்வப்பொழுது மின்மயமாக்குதல் தற்போதைய கொள்கையாகும். 1984-85-ல் 25 குடியிருப்புகள் இவ்வாறு மின்மயமாக்கப்பட்டன.

**வீடுகளுக்கு மின்வசதி**

விளக்கு மற்றும் மற்ற வசதிகளை வீட்டில் ஏற்படுத்த மக்களுக்கு மின்சக்தி தேவைப்படுகிறது. வானொலி கேட்கவும், மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகளைப் பார்க்கவும் அதன் மூலம் மக்களுடைய அறிவை வளர்க்கவும் இது உதவுகிறது. வீட்டில் இருந்துகொண்டே வசதியாகப் படிப்பதற்கு இது உதவுவதால் குழந்தைகள் இதனால் மிகவும் பயனடைகிறார்கள். வீட்டு உபயோகத்திற்காக, கிராம



மக்களில் இன்று சுமார் 12 இலட்சம் மின் இணைப்பாளர்கள் மின்சக்தியைப் பயன்படுத்துகிறார்கள்.

**குடிசைகளை மின்மயமாக்குதல்**

கிராமப்புறங்களில் வாழும், வறுமைக்கோட்டிற்குக் கீழே இருப்போரும், மின்சக்தியினால் பலனடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு 'குடிசைக்கு ஒரு மின்விளக்கு' என்ற புதிய திட்டத்தைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ் மின் இணைப்பு மற்றும் உதிரிப் பாகங்களுக்காக ரூ. 10 (பத்து மட்டும்) செலுத்த வேண்டும். மற்றும் இணைப்பு ஒன்றிற்கு, மாதாந்திரக் கட்டணம் ரூ. 2.50 ஆக இருந்தது. 15-9-84 முதல் இக்குடிசைகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் கடந்த 5½ ஆண்டுகளில் 6,35,771 குடிசைவாசிகள் பயன்பெற்றனர். கடந்த 1984-85இல் 73,494 இணைப்பாளர்கள் இதனால் பலனடைந்தார்கள்.

**ஊரகத் தொழிற்சாலைகள்**

கிராமப்புறங்களைத் தொழில் மயமாக்குவதற்கு, மாநிலத்தின் மூலை முடுக்குகளையெல்லாம் மின்மயமாக்கியது பெரிதும் உதவியுள்ளது. இது கிராமப்புற பொருளாதாரத்தை உயர்த்தியதோடு மட்டுமல்லாமல், கிராமப்புற வேலைவாய்ப்பினையும் உயர்த்தியுள்ளது. இன்று சுமார் 7935 ஊரகத் தொழிற்சாலைகள் நம் மாநிலத்தில் உள்ளன.

**சமுதாய உதவிகள்**

குடிநீர் வழங்குதல் மாநில அரசின் ஒரு பெரிய பொறுப்பாகும். நீர்நிலைத்தொட்டிகள் கட்டவும், குழாய் மூலம் நீர் வழங்கவும் ஊரெல்லாம் மின்மயமாக்கிய திட்டம் உதவியுள்ளது. தினமும் அலைந்து திரியும் தாய்மார்களுக்கு இது பேருதவி செய்துள்ளது. 11,625 நீர் நிலைத் தொட்டிகளுக்கு மின் வசதி செய்யப்பட்டுள்ளது. மருத்துவ மனைகளுக்கும் மின்சக்தி உதவுகிறது. கிராமங்களில் மின் வசதி ஏற்படுத்தியதால் ஆரம்பச் சுகாதார நிலையங்களில் நவீன சோதனைக் கருவிகள் அமைக்க ஏதுவாக உள்ளது.

கிராமப்புற மின்வசதித் திட்டம் கிராமப் புறங்களிலிருந்து நகர்ப்புறத்திற்கு மக்கள் குடியேறுவதைப் பெருமளவில் தடுத்துள்ளது என்பது யாரும் மறுக்க முடியாத உண்மையாகும். ஊரக மின்மயமாக்குதலினால் ஏற்கெனவே விவரித்த சாதனைகளைவிட இது மிகப் பெரிய சாதனையாகும்.

# நியாய விலையில் நல்ல பொருள்கள் கிடைத்திட....



பொது விநியோகத் திட்டத்தை விரிவாக்கக் கூடுதலாக நியாய விலைக் கடைகளை-நடமாடும் கடைகள் உட்பட திறந்து எல்லாப் பகுதியிலும் செயல்படுத்துதல் மற்றும் தொழிலாளர்கள், மாணவ விடுதிகள், தேவையை நியாய விலைக் கடைகள் மூலம் பூர்த்தி செய்தல், மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள், குறிப்பேடுகள் முதன்மையாகக் கிடைக்கச் செய்தல் மற்றும் வலுவான நுகர்வோர் பாதுகாப்பு இயக்கத்தை ஏற்படுத்துதல் :— இது 17-வது அம்சமாகும்.

தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டம் ஒரு கிராமத்திற்கு ஒரு கடை என்ற திட்டத்தின் கீழ் 1978-ஆம் ஆண்டில் விரிவாக்கப்பட்டது. இவ்வாண்டில் ஒரு வருவாய் கிராமத்திற்கு ஒரு கடை திறந்து தமிழ்நாடு முழுவதிலும் பொது விநியோகத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு எடுத்த முடிவு காரணமாக ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் ஒரு நியாயவிலைக் கடை திறக்கப்பட்டது. இத்திட்டம் தொடங்குவதற்கு முன்பு கூட்டுறவு இயக்கத்தால் 4441 நியாய விலைக் கடைகள் நடத்தப்பட்டு வந்தன.

கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுக்காக ஒதுக்கப்பட்ட 12 மாவட்டத்தில் புதிதாக 6718 புதிய நியாய விலைக் கடைகள் திறந்தன. 500-க்கு அதிகமான மக்கட் தொகையுள்ள கிராமங்களில் ஒரு முழு நேரக் கடையும் மக்கட் தொகை 100-க்கும் 500க்கும் இடைப்பட்ட கிராமங்களில் பகுதி நேரம் செயல்படும் கடையும் திறக்கப்பட்டன. செப்டம்பர்'84 வரை கிராமப் புறங்களில் 11,159 நியாயவிலைக்கடைகள் மற்றும் நகர்ப்புறத்தில் 1492 நியாயவிலைக் கடைகள் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்பட்டு வந்தன. 15-8-84 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 1000 குடும்ப அட்டைகளுக்கு ஒரு நியாய

**அம்சம் 17**

விலைக் கடை இயங்க வேண்டும் என்று அறிவிக்க கூட்டுறவுச் சங்கங்கள் 1000-க்கு மேற்பட்ட குடும்ப அட்டைகள் கொண்ட கூட்டுறவு மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நியாய விலைக் கடைகளைப் பிரித்து புதிதாக 1437 நியாய விலைக் கடைகளைக் கிராமப் புறத்திலும் 1413 நியாயவிலைக் கடைகளை நகர்ப்புறத்திலும் திறந்தன. தற்போது 15501 நியாய விலைக் கடைகள் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டிலுள்ள 120 இலட்சம் குடும்ப அட்டைகளில், கூட்டுறவுச் சங்கங்கள் 91 இலட்சம் குடும்ப அட்டைகளுக்குஅத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்கின்றன.

650 மாணவ விடுதிகளுக்கு ஒவ்வொரு மாதமும் சுமார் ரூ. 20 இலட்சம் மதிப்புள்ள கட்டுப்பாடற்ற பொருட்கள் விநியோகம் செய்யப்படுகிறது. இதன் மூலம் சுமார் 50,000 மாணவர்கள் பயனடைகிறார்கள். கல்லூரிகள், மற்றும் பள்ளிக்கூடங்களில் 2986 மாணவர் கூட்டுறவுப் பண்டக சாலைகள் மூலம் மாணவ சமுதாயத்தின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன.

கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ்நாட்டில் சென்னை நகரத்தைத் தவிர 3032 சில்லறைக்கடைகள் மூலம் 36,775 பள்ளிக் கூடங்களுக்குப் பாடப் புத்தகங்கள் விநியோகம் செய்கின்றன. சென்னை நகரில் மட்டும் தமிழ்நாட்டுப் பாடப்புத்தக நிறுவனமே செய்து வருகிறது. கல்வி ஆண்டு 1980-81 முதல் 1984-85 வரை விநியோகிக்கப்பட்ட பாடப்புத்தகங்களின் மதிப்பு 1006.30 இலட்சம் ஆகும்.

1982-83 வரவு செலவுக்கூட்டத் தொடரில் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பை முன்னிட்டு, பொது விநியோகத் திட்டம் திறம்படச் செயல்படுத்த நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அறிவுரை மற்றும் உதவி புரிய அலுவல் சார்பற்ற குழு அமைக்கப் பெயர்ப் பட்டியல் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த ஆலோசனைக் குழுவில் இல்லத்தரசிகள் பெரும்பான்மையாகப் பங்கு வகிப்பார்கள்.

ஆலோசனைக் குழுக்கள் கீழ்க்கண்ட பணிகளைச் செய்யும் என்று கருத்து தெரிவிக்கப் பட்டுள்ளது.

(1) கூட்டுறவுச் சங்கங்களில் விநியோகம் செய்யப்படும் பொருட்களின் தரம் மற்றும் எடை சரி பார்த்து, தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தல்.

(2) நுகர்வோர்களின் எல்லா குறைகளையும் ஆராயும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் சார்பாக மாநிலத்தில் நுகர்வோர்களுக்குப் பாதுகாவலாக இருந்து, சரியான முடிவு எடுக்க செயல்பட்டு நுகர்வோர்களுக்குப் பயன்படத்தக்க வகையில் செயல்படும்.



பருவ மழைகள் தவறியதன் காரணமாக ஏற்கெனவே குறைக்கப்பட்டிருந்த அரிசியின் அளவை உணவு நிலைமை ஒரு சீராக அமையப் பெற்றவுடன் 1983-ஆம் ஆண்டு குறைப்பதற்கு முன் இருந்த அளவை மீண்டும் 15-9-84 முதல் அமல்படுத்தப்படுகின்றது. அதாவது பெரியவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 4 கிலோ சிறுவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 2 கிலோ அல்லது குடும்ப அட்டைக்கு மாதம் ஒன்றுக்கு 20 கிலோ - இதில் எது குறைவோ அந்த அளவு அரிசி வினியோகிக்கப்பட்டு வருகின்றது. அதுவுமின்றிப் பெரிய குடும்பங்களின் நலனைக் கருத்தில் கொண்டு, குடும்ப அட்டையில் 20 கிலோ வாங்கும் நபர்களுக்குக் கூடுதலாக ஒரு கிலோ அரிசி இலவசமாக அளிக்கப்பட்டு வருகின்றது. இந்த இலவச அரிசியின் வினியோகத்தால் ஒரு ஆண்டுக்கு அரசுக்கு ரூ. 9.8 கோடி செலவினம் ஏற்படுகின்றது.

அரிசியின் விற்பனை விலை 1981-ல் நிர்ணயிக்கப்பட்ட ஒன்றாகும். மத்திய அரசு அதன்பின் நெல் கொள்முதல் விலைகளை உயர்த்தியுள்ளது. 1981-ல் நெல் கொள்முதல் விலை சன்ன ரகத்திற்குக் குவிண்டால் 1-க்கு ரூ.99 ஆகும். தற்போது விலை ரூ. 141 ஆகும். எனினும் பொது வினியோகத் திட்ட விற்பனை விலையில் எந்தவித மாற்றமும் அரசால் செய்யப்படவில்லை. இதனால் ஏற்படும் பணஇழப்பை ஈடு செய்ய அரசு தோராயமாக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 80 கோடி அளவில் நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு மானியம் அளிக்கின்றது.

இவ்வாறு செய்யப்படும் பொது வினியோகத்தில் மக்கள் நலனே அரசின் முக்கியக் குறிக்கோளாகும். ஆகவே ஒரு கடையில் 1000-க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகளைப் பிரித்து புதிய கடைகள் திறக்க அரசு ஆணையிட்டது. 1-1-84-ல் 18,009 கடைகள் செயல்பட்டு வந்தன. கூடுதல் கடைகள் திறந்ததன் காரணமாகத் தற்போது இயங்கி வரும் கடைகள் எண்ணிக்கை 20723 ஆகும். மற்றும் ஒரு வருவாய்க் கிராமத்திற்கு ஒரு கடை இருத்தல் வேண்டும் என்ற அரசின் கொள்கையின் அடிப்படையில் ஏற்கெனவே கடைகள் திறக்கப்பட்டு மாநிலத்தில் உள்ள குடும்பங்கள் முழுவதும் பொது வினியோகத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் வகையில் கடைகளுடன் இணைக்கப்பட்டுச் செயல்படுத்தப்படுகின்றது. தமிழகத்தில் செயல்படுத்தப்படும் பொது வினியோகத் திட்டமுறை அனைத்து இந்தியாவுக்குமே ஒரு சிறந்த எடுத்துக்காட்டும் செயல் முறையாக விளங்குகின்றது.

தொழிலாளர்கள் அதிகம் உள்ள நிறுவனங்களில், அவர்களால் ஆரம்பித்த கூட்டுறவு நிறுவனங்களும் இந்தப் பொது வினியோகத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு இயங்கி வருகின்றன. அக்கடைகள் மூலம் தொழிலாளர்கள் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய பொருட்களை நிர்ணயிக்கப்பட்ட அளவில் சிரமமின்றிப் பெற்று வருகின்றனர். அதே போன்று பள்ளிக்கூடத்துடன் இணைந்த மாணவர் விடுதிகளுக்கும், அவர்களுக்கு அருகாமையில் உள்ள சில்லரை அங்காடிகள் மூலம் வினியோகம் செய்யப்படுகின்றது.

மாணவர்களின் முக்கியத் தேவையான நோட்டுப் புத்தகங்கள் மற்றும் பாடப் புத்தகங்கள் கட்டுப்படுத்தப்பட்ட விலையில் கூட்டுறவு அங்காடிகள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. 1984-85-ஆம் ஆண்டில் சுமார் 12 கோடி ரூபாய் மதிப்புள்ள பாட நூல்களும், குறிப்பேடுகளும் கட்டுப்படுத்தப்பட்ட விலையில் நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கப்பட்டது, குறிப்பிடத்தக்கது.

1984-ஆம் ஆண்டில் பொது வினியோகத் திட்டத்தின் மூலம் வினியோகம் செய்யப்பட்ட அளவுகள் வருமாறு:

அரிசி 9.18 இலட்சம் டன்கள். கோதுமை 1.00 இலட்சம் டன். சர்க்கரை 2.40 இலட்சம்டன்கள். பாம்ஆயில் எண்ணெய் 45,000 டன்கள். சோயாபீன் எண்ணெய் 10,000 டன்கள் ; சூரியகாந்தி எண்ணெய் 8,000 டன்கள்; மண்ணெண்ணெய் 6 இலட்சம் கிலோ லிட்டர்கள்.

பொது வினியோகத் திட்டத்தில் அத்தியாவசியப் பொருட்கள் வினியோகத்தோடு, பொது மக்கள் நலனைப் பாதுகாக்கும் இயக்கமும் செயல்படுத்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன்படி சில்லரை அங்காடிகள் குறைபாடுகள் இல்லாமல் செயல்படும் பொருட்டு கண்காணிப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்த, தக்க நிறுவனங்களை நியமிக்கப் பரிசீலிக்கப்படுகின்றன.

நியாய விலைக் கடைகளில் வினியோக முறையில் மக்களுக்கு ஏதாவது குறையிருப்பின் அவர்கள் சம்பந்தப்பட்ட உணவுப் பொருள் வழங்கல் அலுவலர்களுக்கோ, அல்லது ஆணையாளர் அலுவலகத்திற்கோ தொலைபேசிமூலம் புகார்களைத் தெரிவித்தால் அவைகளை உடனுக்குடன் விசாரணை செய்து அவைகளை நிவர்த்திக்க தக்க நடவடிக்கை எடுக்கச் செயல் முறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எடுத்த நடவடிக்கைகள் பற்றி புகார்தாரர்களுக்கும் தெரிவிக்கப்படுகின்றது.

மக்களின் பொருளாதாரத்தை ஒரு சீராக் அமையச் செய்யும் பணியில் அத்தியாவசியப் பண்டங்கள் அவை கட்டுக்கடங்கிய விலைகளில் மக்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் அத்தியாவசியப் பண்டங்கள் சட்டம் 1955-ல் கொண்டு வரப்பெற்றது. அந்தப் பணியில் அதிக விலைக்கு விற்றல் பதுக்கல் போன்றவைகள் சமூகக் குற்றங்களாகும். ஆகவே பண்டங்கள் சீராகக் கிடைக்கச் செய்யும் எண்ணத்துடன் பலவிதக் கட்டுப்பாடு ஆணைகள் ஏற்படுத்தப்பட்டன. அதில் வியாபாரிகளின் நிர்வாகப் பிரச்சினைகளைக் களையும் வகையில் பல பொருட்களுக்கு, பல ஆணைகள் இருந்ததை ஒரே ஆணையாக்கி 1-4-84 முதல் அமல்படுத்தப்படுகின்றது.

இந்த ஆணைகளினால், வியாபாரிகள் நியாயமான விலைகளில் பொருட்களை விற்பனை செய்கின்றார்களா, கலப்படமின்றி உள்ளதா என்பது கண்காணிக்கப்பட்டு வருகிறது.

1984-ஆம் ஆண்டில் 526 பதுக்கல் குற்றங்களும், 511 கள்ளக்கடத்தல் குற்றங்களும், 85 கள்ளவாணிபக் குற்றங்களும் 375 இருப்பு மற்றும் விலை விளம்பரப்படுத்தாத குற்றங்களும், 128 இதர குற்றங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இக் குற்றங்களுக்காகச் சுமார் 1.26 கோடி ரூபாய் மதிப்புள்ள உணவுப் பொருட்களும், சுமார் 1.76 கோடி ரூபாய் மதிப்புள்ள வாகனங்களும் கைப்பற்றப்பட்டன. இக்குற்றங்கள் சம்பந்தமாக 442 நபர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டன. இவ்வாறு எடுக்கப்படும் நடவடிக்கையின் காரணமாகக் கள்ளக்கடத்தல், கள்ள வியாபாரம் செய்தல், உணவுப் பொருட்கள் பதுக்கல் ஆகிய குற்றங்கள் பெருமளவிற்குத் தடுக்கப்படுவதால் இன்றியமையாப் பொருட்கள், தட்டுப்பாடின்றி நியாய விலையில் கிடைக்க வழிவகுக்கின்றது.



# கைத்தொழில் வளர்ச்சி

**அம்சம் 18**

கைத்தொழில் வளர்ச்சிக்கு தமிழ்நாடு அரசு 1973ல் தனியாகக் கழகம் ஒன்றினை அமைத்தது. கைவினைத் தொழிலாளர்களுக்கு அனைத்து உதவிகளையும் இக் கழகம் அளித்து வருகிறது.

பிற மாநிலங்களிலும், வெளிநாட்டவர்கள் மத்தியிலும் கைவினைப் பொருட்களின் விற்பனையை அதிகப்படுத்தும் நோக்குடன் முக்கியமான நகரங்களில் கைவினைப்பொருட்காட்சிகளை அரசு நடத்துகிறது. இப்படிப்பட்ட நடவடிக்கைகளால் கைவினைப் பொருட்களின் விற்பனை 1983-84-ல் ரூ. 224 லட்சம் என்றிருந்த நிலை மாறி 1984-85ல் ரூ. 232 லட்சமாக உயர்ந்துள்ளது. கைவினைப் பொருட்களை தொழில் புரிவோரிடமிருந்து கைவினைப் பொருள் கழகமே நேரடியாக ரூ. 150 லட்சத்திற்கு வாங்கியது. இதனால் 3000 கைவினைத் தொழிலாளர்கள் பயனடைந்தனர்.

1983-84ல் உற்பத்தித் திறன் ரூ.68 லட்சம்தான். அது 1984-85ல் ரூ.70 லட்சமாக உயர்ந்தது. கைவினைப் பொருள் உற்பத்தி நிலையங்களில் மேலும் 250 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

கைவினைத் தொழிலாளர்க்கு சேமிப்பு நிதி, ஊக்க ஊதியம் போன்றவையும் அளிக்கப்படுகின்றன.



**அம்சம் 20**

தமிழ்நாட்டில் 12 அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் செயற்பட்டு வருகின்றன. இந் நிறுவனங்கள் 9153 பேருந்துகளை இயக்குகின்றன. அதற்கு ரூ. 26.46 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் தேசிய உற்பத்திக் கழகத்தின் பரிசினை இந்தியாவிலேயே முதலிடம் வகித்ததற்காகப் பெற்றுள்ளது. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகமும், பாண்டியன் போக்குவரத்துக் கழகமும் சிறந்த பேருந்துகளை உற்பத்தி செய்ததற்கும், நகரங்களில் மக்களுக்கு நல்ல பணியாற்றியதற்கும் அனைத்திந்திய அளவில் பரிசுகளைப் பெற்றுள்ளன.

புதுமைகளைப் புகுத்தியதற்காக சேரன் போக்குவரத்துக் கழகம் இந்தியாவிலேயே இரண்டாவது இடத்தை வகிக்கின்றது என்று தேசிய திட்டக் குழு சான்றளித்துள்ளது. தமிழகத்தின் போக்குவரத்துக் கழகங்கள் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளையும், தொழிற் பயிற்சி நிலையங்களையும் நிறுவி செயற்படுத்தி வருகின்றன.


**'தமிழரசு'**

**சந்தா விவரம்**

'தமிழரசு' (தமிழ்)

ஆண்டுச் சந்தா: ரூ 18

அரையாண்டுச் சந்தா: ரூ 9.

'தமிழரசு' (ஆங்கிலம்)

ஆண்டுச் சந்தா: ரூ 9

விவரங்கட்கு:

உதவி இயக்குனர்,
தமிழரசு அலுவலகம்,
செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
அரசினர் தோட்டம்,
சென்னை-600 002.

# கடத்தலைத் தவிர்ப்போம்



கள்ளக் கடத்தல்காரர்கள் பதுக்கி வைப்போர், வரி ஏய்ப்போர் ஆகியோர் மீது நடவடிக்கை:

பொருளாதாரத்தைச் சீராக வைத்துக் கொள்ளவும் அவசியமான பண்டங்கள் மக்களுக்கு நியாயமான விலையில் கிடைப்பதற்கும் அத்தியாவசியப் பண்டங் டங்கள் சட்டம் 1955-ல் இயற்றப்பட்டது. அநியாய விலைக்குப் பொருட்களை விற்றல், அத்தியாவசியப் பண்டங்களைப் பதுக்கி வைத்தல் போன்றவை சமூகக் கேடுகளாகும். மக்களுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் தவறாமல் கிடைப்பதற்காகப் பல்வேறு பொருட்கள் அத்தியாவசியப் பண்டங்கள் சட்டத்தின் கீழுள்ள பட்டியலில் 1-4-1984 முதல் சேர்க்கப்பட்டன.

**அம்சம் 19**

1984-ஆம் ஆண்டில் 526 பதுக்கல் வழக்குகள், 511 கள்ளக் கடத்தல் வழக்குகள், 85 கள்ளச் சந்தை வழக்குகள் ஆகியவை பதிவு செய்யப்பட்டன. விலை விவரப்பட்டியல் வெளியிடாததற்காக 375 வழக்குகளும் வேறு பல குற்றங்களுக்காக 128 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டன. அத்தியாவசியப் பண்ட சட்டத்தை மீறியதற்காக ரூ. 1.26 கோடி மதிப்புள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன் ரூ. 1.76 கோடி மதிப்புள்ள கடத்தல் வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. இக் குற்றங்களுக்காக 442 பேர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இத்தகைய நடவடிக்கைகளால் கள்ளச் சந்தையும் பதுக்கலும், கடத்தலும் கட்டுப்படுத்தப்பட்டு மக்களுக்கு நியாய விலையில் பண்டங்கள் கிடைப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

# குழந்தைகள் நலன்

**அம்சம் 15**

மகளிர் குழந்தைகள் நலத் திட்டங்களைத் தீவிரப்படுத்துதல் முக்கியமாக மலைப் பகுதிகள், பின்தங்கிய பகுதிகளில் கருவுற்ற தாய்மார்கள், பால்கொடுக்கும் தாய்மார்கள், குழந்தைகள் நலனுக்கான சத்துணவுத் திட்டங்கள்:

ஆறாவது திட்டக் காலத்தில் துவக்கப்பட்ட 36 ஒருங்கிணைந்த குழந்தைகள் நல வட்டங்கள் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றன. ஒவ்வொரு வட்டத்திலும் 100 அங்கன்வாடிகள் உள்ளன. ஒவ்வொரு அங்கன்வாடியிலும் 70 குழந்தைகளுக்கும் 30 தாய்மார்களுக்கும் உணவும், பிற நல்வாழ்வுச் சாதனங்களும் அளிக்கப்படுகின்றன. முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் 68 இலட்சம் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கப்படுகிறது. இத் திட்டத்தின் மூலம் சத்துணவு மட்டுமல்ல; விதவைகளும் மற்றும் ஆதரவற்ற மகளிரும் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

குழந்தைகளுக்கு நோய்த் தடுப்புக்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.



# தொடரும் தொழில் வளம்:




பெறுவதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தேவையான ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளது. இத்தொழிற்பிரிவிற்குத் தேவைப்படக்கூடிய நிலம் முழுவதும் கையகப்படுத்தப்பட்டுள்ளது. கட்டடக் கட்டுமானப் பணி முடிக்கப்பெறும் நிலையிலுள்ளது. காகிதம் தயாரிக்கும் இயந்திரம், மின் கொதிகலன், நீர்த் தூய்மைபடுத்தும் சாதனம் ஆலையில் இருந்து வெளிப்படும் நீர், கழிவுகளைத் தூய்மைப் படுத்தும் சாதனம், துணை மின் நிலையங்கள் ஆகியவற்றை நிறுவும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது.

ஒரு சில இயந்திரங்கள் தவிர, இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்கள் அனைத்தும் வரப்பெற்று நிறுவப்பட்டுள்ளன. உள்நாட்டு இயந்திரங்களை வழங்குவதற்காகப் பெரிய அளவிலான ஒப்பந்தங்கள் ஏறத்தாழ அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளன.

ஆய்வு ஆண்டில்: இறக்குமதி செய்யப்பட்ட காகிதக் கூழைக்

## தமிழ்நாடு செய்தித்தாள் - காகித நிறுவனம்

அரசுக்குப் பெருமை சேர்க்கும் இப்புதிய திட்டத்தை நிறைவேற்ற தமிழக அரசால் தமிழ்நாடு செய்தித்தாள்—காகித நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது. செய்தித்தாள், அச்சுத்தாள், எழுது காகிதம் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கான தொழிற்சாலை, திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர் வட்டத்தில், தொழிலில் பின் தங்கிய பகுதியான புகளூரில் நிறுவப்பட்டு வருகிறது. இத்தொழிற் பிரிவு, ஆண்டிற்கு உயரளவாக 50,000 டன் செய்தித்தாள் காகிதமும், 40,000 டன் அச்சு எழுது காகிதமும் தயாரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்துடன், அங்காடி இயக்கத் தேவைகளை நிறைவு செய்துகொள்ள துணைப்பொருள்களை உற்பத்தி செய்யவும் கருதப்பட்டு உள்ளது.

செய்தித்தாள் காகிதம் மற்றும் அச்சு, எழுது காகிதங்கள் உற்பத்தியைப் பெருக்க வேண்டும், இதற்குக் கரும்புச் சக்கையை மூலப் பொருள் ஆகக் கொண்டு உற்பத்திசெய்யவேண்டுமென்கிற அரசின் இரு நோக்கங்களை நிறைவு செய்யும் நோக்கில் இத் தொழிற் பிரிவு, 85 சதவீத கரும்பச்சக்கைக்கூழ், 15 சதவீத கெட்டி மரம் (யூகலீப்டஸ்) இரசாயனக் காகிதக் கூழ் ஆகியவற்றைக் கொண்டு அச்சுக் காகிதத்தையும், 75 சதவீத கரும்புச் சக்கைக் கூழ், 25 சதவீத கெட்டி மர இரசாயனக் கூழையும் கொண்டு அச்சு, எழுது காகிதத்தையும் உற்பத்தி செய்யும்.

இக்காகித ஆலைக்குத்தேவைப் படக்கூடிய கரும்புச் சக்கை தமிழ்நாட்டிலுள்ள 5 சர்க்கரை ஆலைகளிலிருந்து கொள்முதல் செய்யக் கருதப்பட்டுள்ளது. இத் தொழிற்சாலைக்குத் தேவைப் படக்கூடிய கரும்புச் சக்கை முழுவதையும் வழங்கக்கூடிய நிலையில் போதுமான அளவிற்குக் கரும்பு பிழியும் திறனைப் பெற்றுள்ளன. இதற்காக, இத்தொழிற்சாலை மேற்சொன்ன சர்க்கரை ஆலைகள் ஒவ்வொன்றுடனும் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. சர்க்கரை ஆலைகளில் நிலக்கரியைக் கொண்டு எரிய வைக்கும் கொதிகலன்களைப் புதிதாக நிறுவி, செயல்படுத்துவதன் மூலம், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தால் வழங்கப்படவிருக்கும்நீராவிக்குப் பதிலாகக் கரும்புச் சக்கையைப் பெறும். தேவைப்படக்கூடிய தண்ணீர், மின்சக்தி, மரம், நிலக்கரி ஆகியவற்றை முழு அளவில் கொண்டு இந்நிறுவனம் செய்தித்தாள் காகிதத்தில் மாதிரி உற்பத்தியை 20-9-1984 அன்று தொடங்கியது. இத்தொழிற் பிரிவிற்காக இந்நிறுவனம், இதுவரை ரூ. 216.25 கோடி செலவிட்டுள்ளது. 31-5-1985 அன்றுள்ளபடி 25,3416 மெட்ரிக் டன் செய்தித்தாள் காகிதத்தை உற்பத்தி செய்து 21543.50 மெட்ரிக் டன் விற்பனை செய்துள்ளது. இதன் மூலம் ரூ. 18.23 கோடி பெற்றுள்ளது. இரண்டு சர்க்கரை ஆலைகளில் (புகளூரிலுள்ள டெக்கான் சுகர்ஸ், மோகனூரில் உள்ள சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை) இந்நிறுவனம்நீராவி உற்பத்திக்காக நிறுவிய நிலக்கரி கொண்டு எரிக்கும் கொதிகலன்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

31-5-1985 அன்றுள்ளபடி மேலாண்மை இயக்குநர், பொது மேலாளர் (செயல்பாடு) துணை பொது மேலாளர் (நிதி) செயலர் துறை மேலாளர்கள் ஆகியோர் உட்பட மொத்தம் 1290 அலுவலர்கள் பணியாற்றுகின்றனர். உட்புற கரும்புச் சக்கைக்கூழ் குழாய் அமைக்கப்பட்ட பின்னர் 1985 மே1 ஜூன் திங்களில் வணிக அளவில் உற்பத்தியைத் தொடங்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு சர்க்கரைக் கழகம்

தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் முக்கிய நோக்கங்கள்:

அ. சர்க்கரை ஆலைகளைப் பொதுத்துறையில் நிறுவி, அதன் மூலம் அதிக அளவு சர்க்கரை உற்பத்தியை நாட்டில் அதிகரித்து தொழில் வளர்ச்சியையும் புகழையும் நிலை படுத்துதல்.

ஆ. சர்க்கரை மற்றும் அதன் துணைப் பொருட்களையும் தயாரித்தல்.

இ. துணை நிறுவனங்கள் மற்றும் இதர சார்பு நிறுவனங்களையும் நிர்வகித்தல்.

ஈ. கரும்பு விளைச்சல், சர்க்கரைப் பொறியியல், சர்க்கரைத் தொழில் நுட்பங்கள் மற்றும் அடக்கவிலைக் கணக்குகள் இவ்வாறான நீண்டகாலத் தேவைகளைப் பூர்த்தி செய்ய அடிப்படையான தொழில்நுட்பத் திறனை ஏற்படுத்தி செவ்வனே பராமரித்தல்.

உ. வேளாண்மை, இயந்திரப் பொறியியல் இரசாயனம், கட்டடப் பொறியியல் மற்றும் நிதி இவை சம்பந்தப்பட்ட வல்லுநர்[illegible] அட[illegible] நிர்வாகத்தை நிறுவி அதன் மூலம் புதிய திட்டங்களை உருவாக்குதல்.

தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் நாள் ஒன்றுக்கு 1250 டன் சர்க்கரை உற்பத்தித் திறன் அடங்கிய 2 சர்க்கரை ஆலைகளை- ஒன்றை தஞ்சாவூர் மாவட்டத்தில், குருங்குளம் கிராமத்திலும், மற்றொன்றை திருச்சி மாவட்டத்தில் உள்ள பெரம்பலூர் தாலுக்காவில் உள்ள எறையூர் கிராமத்திலும் நிறுவியுள்ளது. இவ்விரண்டு சர்க்கரை ஆலைகளும் 1977ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், மற்றும் 1978ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலும் முறையே உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. இந்த இரண்டு ஆலைகளும் தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் உயர்ந்த ரக நுட்பங்கள் அடங்கியுள்ள வல்லுநர்களைக் கொண்டு முறையே திட்டங்களை வகுத்து தமிழ்நாட்டில் மிக விரைவில் நிறுவியுள்ளது.

தமிழ்நாடு அரசு, ஒரு அவசர காலச் சட்டத்தின் மூலம் 26.12.1983 தேதி அன்று மதுரை மாவட்டம் பாண்டியராஜபுரத்தில் உள்ள மதுரா சர்க்கரை ஆலையைத் தனியார் நிறுவனத்தில் இருந்து எடுத்துக்கொண்டது. மேற்படி சர்க்கரை ஆலையை நிர்வகிக்கும் பொறுப்பு தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி சர்க்கரை ஆலையின் அரவைத் திறனை நாள் ஒன்றுக்கு 800 டன்களிலிருந்து 1250 டன்கள் வரை அதிகரிப்பதற்காக ரூ. 485 இலட்சங்கள் செலவில் தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் தேவையான விரிவாக்கம் மற்றும் ஆலை புதுப்பிக்கும் பணிமுடிந்து மேற்படி சர்க்கரை ஆலையின் கரும்பு அரவையை 4-4-'85ஆம் தேதி தொடங்கியுள்ளது.

மேலும் தமிழ்நாடு சர்க்கரைக் கழகம், தமிழ்நாட்டில் உள்ள சர்க்கரை ஆலைகளுக்குத் தேவையான உபகருவிகளான கரும்பு வெட்டும் கத்திகள் தட்டுகள் போன்ற சிறிய நுட்பங்களைத் தயாரிப்பதற்கும், சர்க்கரை ஆலைகளுக்குத் தேவைப்பட்ட இயந்திரங்களைப் பழுது பார்ப்பதற்கும் ஒரு இயந்திரப் பட்டறை ஒன்றை நிறுவியுள்ளது. இப்பட்டறை இயங்குவதற்கு, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் செங்கல்பட்டு மாவட்டத்தில் சிங்கப்பெருமாள் கோவில் பக்கத்தில் உள்ள மறைமலைநகரில் 5.50 ஏக்கர்கள் அடங்கிய ஒரு இடத்தை அளித்துள்ளது. இவ்விடத்தில் கட்டட வேலை தற்போது துவக்கப்பட்டு நடந்து வருகிறது. பட்டறைக்குத் தேவைப்பட்ட இயந்திரங்கள் வாங்குவதற்கு எல்லாவித ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. 1985ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் மேற்படி பட்டறை செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

85355



ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சி[illegible]



Licence No. TN/MS(C)/PP-23
பதிவு எண். M. 8676



சென்னைக்கு 10-8-85 அன்று வருகை புரிந்த மேதகு குடியரசுத் துணைத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்களை மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வரவேற்றல்.





காஞ்சிபுரம் அரசினர் தலைமையிட மருத்துவ மனையில் 43 படுக்கைகள் கொண்ட புதிய கட்டடத்தை மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச்.வி.ஹண்டே அவர்கள் தலைமையில் மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் 10-8-85 அன்று திறந்து வைத்தார்.

அண்ணா சாலை கதர்-கைத்தொழில் அங்காடிக்கு 10-8-85 அன்று வருகை புரிந்த மத்திய கதர் ஆணைக்குழுத் தலைவர் திரு. தாமஸ் மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி அவர்கள் வரவேற்றார்.

